O-,IFKA,R:g
N03.2
76770

123-3-1904

ஸ்ரீமத் கம்பராமாயண வசனம்

In Three volumes.

Vol - II

Pages from 323 To 652

(2)

Contd

அவனை வயமஸ்தன் பார்த்துச்சிரித்து, நீ யென்னைக்கெவ்வளவு? வெகு சிறியவன், உன்னைச்செயிக்கிறதினாலே எனக்குப் பிரயோசனமென்ன? ஆனாலுங்களையெல்லா நான்தான்கொல்லப்போகிறேன். இப்போது பிரம்மாவே வந்து என்னுடனெதிர்த்தாலு நானெதிர்க்கமாட்டேன். எங்கள் சக்கரவர்த்தியாகிய பிரதாபலங்கேஸ்வரனுடைய குமாரனை அதிகாயனைக் கொன்றவனே வனோ? அவனைக்கொன்றுவிட்டு, பின்பு குரங்குகளின்மீது கோபிப்பேனென்றான். அதைக்கேட்ட விருஷபன் கொஞ்சமுமஞ்சாமல், அடா பைத்தியக்காரா! நீ உன்வாயாலெவ்வளவு உளறினையோ? அவ்வளவு வல்லமையும் உனக்கிருக்கவேண்டும். அப்படிக்கிருக்குமானாற் பலியுண்டு வாழும்படியான சொற்பபலமுள்ள பேய்களைத் துணைகூட்டிக்கொண்டு வரமாட்டாய். நீயவற்றைத்துணைகொண்டு வந்ததினாலேயே உன்பவுருஷ மெனக்கு நன்றாய்த்தெரியவருகிறது.

மேலும்—தகுந்த மருந்தைத்தேடிச் சாப்பிடாத நோயாளியைப்போல நீ உன்னுடையபெல்லாவல்லமையுடன் என்முன்பாக ஓய்ந்துபோய்விடப்போகின்றாய். ஓடிப்போகவேண்டுமானால் ஓடிப்போ. ஓடாமலென்னோடெதிர்த்தாயானால் உன்னோடுநான் அநாயாசமாக விளையாடிச் சண்டைசெய்கிறேன். என்று சொல்லியதைக்கேட்ட வயமஸ்தன் அதிககோபிஷ்டனாகி, தன்கையிற்பிடித்த பொன்னாற்செய்த குதையையுடைய வச்சிரவில்லைப்போலவே தன்புருவத்தையும்வளைத்து, விருஷபன்மார்பிற் பத்துப்பாணங்களைப் பிரயோகித்தான். அந்தப்பாணங்கள்பட்டு ஊற்றெடுத்து இரத்தவெள்ளம்பாயு மார்பையுடையவனான விருஷபனென்பவன்—அதிவேகத்துடனே பொற்கலசமமைத்து விருதுக்கொடிகட்டின வயமஸ்தனுடையதேரைத் தனது பெரியகையிற்பிடித்துத் தூக்கிவிட்டெறிந்தான். அப்போது பச்சைக்கமுகற்காய்போன்ற கண்களையுடைய பேய்களெல்லாம் பறந்துபோய் விட்டன.

அப்போது ஆகாசத்திலோடுகின்ற மேகமானது ஒரு மிக்கப்பொழியுமழைநீரைப்போலுதிரம்பெருகிடொழுகுகின்றதேகத்தையுடையவனாகியவயமஸ்தன் தானேறியதேருடனேகூடக்கடலில்வீழ்ந்து, தன் சிலையும்-கணையும்-மற்ற வாயுதங்களும்-ஆபரணாதிகளும்—அக்கடல் நீரிலமிழ்ந்துவிடத் தான் மாத்திரம் கட்டையைப்போல அம்மணமாய் மேலெழும்பி, அதிககோபத்துடனே பூமியிற்குதிக்க மேலெழும்பி வந்தான் அவனப்படி குதிக்கிறதற்கு முன்பாகவே மலையினும் வலியதோள்களையுடைய விருஷபனவனைப்பார்த்து, அடா சண்டாளா! நீ அப்படியேபோய்ச் சொர்க்கத்தையடைந்துவிடென்று தானுமாகாசத்திற் பாய்ந்து, இருளைக்கட்டிப் பிடிக்கின்ற சூரியனைப்போல அந்த ராக்ஷசனைத் தனது கையினால் மிகவுறுதியோடு கட்டிப்பிடித்திறுக்கினான். அப்போது இடைவெளிவிட்டுவளர்ந்த பற்களையுடையபிலம்போன்ற வாயின்வழியாக அவ்வயமஸ்தன் இரத்தத்தைக்குபுகுபென்றுகக்கி-

கொண்டு உயிர் போனபோதக்க, இந்திரதனுசோடுங் கூடிய கரியமேகத்தைப் போல அவன்தேகமாத்திரம் பிணமாய்க் கீழேவிழுந்துவிட்டது.

இந்தச்சண்டை யிப்படியிருக்க அவ்வானராதிபதியான சுக்கிரீவமகாராஜனும் - தேவர்களை வெற்றிபெற்றிருந்த கும்பனென்கிற ராக்ஷசவீரனுமெதிர்த்து, யுத்தகளத்திற்கு ஒரு அலங்காரமாக நல்லமல்யுத்தஞ்செய்து, இருவரும் ஆயிரக்கணம் இடசாரிவலசாரியாகச் சுற்றிச்சுற்றி, சுக்கிரீவமஹாராஜன் மராமரத்தையும், கும்பன் தண்டாயுதத்தையுங்கொண்டு இரண்டுமலைகள் போர்செய்வதுபோலச் சண்டைசெய்தார்கள். அதைத்தேவர்கள்கண்டு சிரமுங்கரமு மசைக்கவெடுத்தார்கள். இப்படியாக வானராதிபதியு மிராக்ஷசவீரனும் ஒருவரை யொருவர் எதிர்த்து, அவ்விருவர் தன்தன்மேனியி லொழுகுகின்ற ரத்தங்களை வழித்தெறிந்து, கண்களின்வழியாக அக்கினிப்பொறிகளைக் குபுகுபென்று சொரிந்து, அணிந்திருக்கிற வெற்றிமாலையும் - வீரகண்டாமணியும்- சப்திக்க உலாவி, போர்செய்கின்ற இரண்டு சிங்கங்களைப்போல ஒருவரையொருவர் கைகளினாலே அறைந்தார்கள்.

இப்படி ஒருவரையொருவ ரறைந்து சண்டைசெய்கையில் கும்பனானவன் தண்டாயுதத்தைச் சுழற்றி, அண்டங்களெல்லாம் வெடித்ததுபோலச் சப்தமுண்டாகும்படிச் சுக்கிரீவமகாராஜனை யோங்கியடித்தான். அடிக்கவே அவ்வானராதிபதி தன் கையிலுள்ள மராமரத்தால் அந்தத் தண்டியைத் தாக்கினார். அப்போதந்த மராமரமோ ? சின்னபின்னமா யுதிர்ந்துபோய் விட்டது. பின்பு சுக்கிரீவமஹாராஜன் உன்னைக் கொன்று விடுவேனென்று சொல்லி அதிகஉக்கிரமாய்ப் புறப்படுகிறசமயத்தில், தண்டாயுதம்வேண்டுமென்றுநினைக்குமுன்னமே நீலனென்கிற வானரவீரன் மலைக்குச்சமானமா ஒரு பெரிய தண்டாயுதத்தை யெடுத்துக்கொண்டுவந்து கொடுத்தான். அந்தத்தண்டைச் சூரியகுமாரன் கையிற்பற்றிக்கொண்டு, அண்டமும் பூமியும் இடிகிடென்று நடுக்குப்படியாகக் கர்ச்சித்து, அந்தராக்ஷசவீரனான கும்பனுடைய [illegible]லும் அடித்துப்பிளந்தார். அதைக்கண்ட ராக்ஷசர்களெல்லா நடுங்கிப்பயந்தார்கள்.

இப்பாற் சுக்கிரீவமஹாராஜனால் அடியுண்ட ராக்ஷசன் மிகுந்த அக்கினிமயமாய் மின்[illegible] இடியிடிப்பெற்ற பெரியமலையைப்போல அபர்த்தனின்றதைக் கண்ட[illegible]ரெல்லாம் இவன் முடிந்துபோனானென்று நினைக்கும் போது சோர்வுநீங்கி, இதோ உன்தோள் முறிந்துவிட்டதென்று சொல்லி ஒங்கிச் சுக்கிரீவராஜன்தோளில் அடித்தான். அவனுற்றுவலியடியுண்ட சூரியபுத்திரனை சுக்[illegible]மஹாராஜன் சோகமாஜன், உடனே சோகநீங்கி, இளையபெருமா[illegible]போல வேகமாய்ப்பாய்ந்து, அக்கும்பனைக்கிட்டி, மார்பிக் [illegible]ய அவன் அமார்பிற் கதையினாலே மோதினர். இப்படிச் சுக்கிரீவமகாராஜனும் கும்பனும் ஒருவரையொருவர் கதையால் ஆயிரங்கோடி படிகளுக்குமேலு மடித்துப் போர்செய்கிறதைத் தேவர்கள்கண்டு, இவர்களில் யார்ஜெயம்பெறுவார்களென்று பார்க்கும்படி நெருங்கிவந்து நின்றார்கள்.

76770
O.1FKA IR:9
N03.2

இப்படி இருவரும் கதைகளை இடிபடுமின்னை இடிதாக்கினதுபோல மோதவே, இரண்டுகதையும் பொடிப்பொடியா யுதிர்ந்துவிட்டன. பிறகவ்விருவரும் கைச்சண்டைசெய்யத் தொடங்கி, இரண்டு மதத்த பெரியயானைகளைப் போலப் போர்செய்து, பத்துத்திக்குகளும் செவிடுபடும்படி பலதரங்குதித்தொருவரையொருவர் கட்டிப்பிடித்தும், திரண்டதோள்களால் மோதித்தாக்கியும், கைகளினால் குத்தியும், ஒருவர்மார்புடன் ஒருவர்மார்பு முட்டியும், சண்டைசெய்கிறார்கள். அப்போது சுக்கிரீவமகாராஜன் தன்னுடையபலமுள்ள கையை நெருக்கி முஷ்டிபிடித்துக் கொல்லும்படியாகக் கொல்லன் சம்மட்டியாற் புடைக்கிறதுபோலத்திடமென்று அவன்மார்பிற்குத்தினார். அப்படியாகக்குத்தவே உலையிலுருகிக்காய்ந்த இரும்பு கசிந்துருகுவதுபோல உடல்கசங்கியும், மூளவுபட்டதுபோல மார்புபிளந்து மற்றொரு இன்னமுஞ்சண்டைசெய்யக்கிட்டவாவென்றந்தக் கும்பன் நின்றுசிரிக்கிறதைச் சுக்கிரீவன்கண்டு, ஐந்துதலை நாகம் வளையில் நுழைவதுபோலத் தமதுகையை அவன்வாயில் நுழைத்து, பையைப்போன்ற நீண்டநாவை அவனுயிருடனே கூடப் பறித்துவிட்டார்.

இப்படி கும்பனிறந்தவுடனே நிகும்பனென்கிற பெயருள்ள ராக்ஷசவீரன்கண்களில் தீப்பறக்கவந்து, இனிநீ யெங்கேதப்பிப் போகப்போகிறாயென்று குதித்துக்கொண்டிருந்தான். அங்ககுமாரன் அவனைவந் தெதிர்த்து, மிகுந்தகோபத்துடனே இருவரையிலும் பொருவருஞ் செய்யாத யுத்தங்களெல்லாஞ் செய்தான். அப்படிச்செய்கிறபோது விஷத்தினுங்கொடியவனான நிகும்பனென்பவன் கையிலொரு சூலாயுதத்தை யெடுத்துக்கொண்டு குத்தவந்தான். அதற்குள்ளங்கதன் ஓர்பனை விருக்ஷத்தைப் பறித்துக்கொண்டு, ஒருநீலமலையை மேருமலையான தெதிர்த்துவந்ததுபோல வந்து தடுத்தான். தடுக்கவே நிகும்பன் சூலாயுதத்தை யெடுத்தெறிய யத்தனிக்கையில், அதை இப்போதே முறித்துவிடுகிறேனென்று அங்கதன் பிரவேசிக்கிறதற்கு முன்னதாக அவ்விருவருடைய எண்ணங்களையுந்தெரிந்த மாருதியென்னும் வாயுபுத்திரர் ஆகாசத்திலிருந்து நெருப்புப்பொறி விழுந்ததுபோல வந்து குதித்து, ஒருவராலும் தடைபடாத சூலாயுதத்தை விருஷபத்துக்குச் சமமான அங்ககுமாரன்மீது அதிககோபத்துடனேவிட யத்தனித்த அந்த நிகும்பனைத் தம்முடைய இதழ்விரிந்த தாமரைமலரையொத்த திருக்கையினாலே கொன்றுவிட்டு, மறுபடியும் தமதிடத்திற்குப் போய்விட்டார்.

இப்படி நடந்த சண்டைகளில் இறந்தவர்கள்போக மிகுதியான ராக்ஷசர்களில் இனிவானரர்களைத் தடுத்துப் போர்செய்கிறவர்க ளில்லாமையை நினைத்து, ஒருநாளும் பிராணத்துடனே முதுகுகாட்டி யோடாத பலராக்ஷசர்களும் ஓட்டம்பிடிக்க வழிதேடினார்கள். வானரர்களோ? பெரியவிருக்ஷங்களைப் பிடுங்கியடித்து, ஓடவழிதேடுகின்ற இராக்ஷசர்களைத் தப்பிப்போகாதபடி கொலைசெய்தார்கள். அதிலும் தப்பிச்சில ஓடுகிறசமயத்தில் ஒருவரோடொருவர்முட்டின நெருக்கத்தால் அநேகராக்ஷசர்கள் கீழேவிழுந்து, தங்கள்

பின்னே ஓடிவருகிறவர்களுடைய கால்களினால் மிதியுண்டிறந்தார்கள். கோடி பேர்களுக் கதிகமாகவே வானரவீரர்களுடைய கைக்குத்தினால் வருந்திப்புண்பட்ட தேகத்துட னோடினார்கள். சண்டைசெய்யும்படியாகிய ரணக்களத்தில் நின்றவர்களில் கணக்கில்லாத ராக்ஷசர்கள் மடிந்துபோனார்கள். சிலராட்சசர்கள் தண்ணீர் தண்ணீரென்று கேட்டுக்கொண்டோடியோடினார்கள். சிலராட்சசர்கள் தங்களுக்குதவியாளரில்லாமற் பயந்தோடித் தடாகங்களிலுண்ணுதற்கும் நீரில்லாமல் தாகவெப்பத்தால் நாவுலர்ந்து உடல்சோர்ந்து விழுந்தார்கள். சிலராட்சசர்கள் கண்ணீர்சொரிந்து உயிர்கலங்கியழுது, தங்கள் கால்வழியே யோடுகிற அக்கண்ணீரால் பூமிநனையும்படி தங்களூரைப்போய்ச் சேர்ந்தார்கள்.

சிலராட்சசர்கள் ஆகாசத்தில் தாவிப்போகச் சிறிதும் சக்தியில்லாமற் பூமியில்விழுந்து மாய்ந்தார்கள். சிலராட்சசர்கள் பூமியிலேயே பெரியமலைகளைப் போலக் குற்றுயிராய் மாண்டுகிடந்தார்கள். சிலராட்சசர்கள் இருண்டமேனியி லதிகபுண்பட்டவர்களாய்த் திக்குவிதிக்குகளா யோட்டம்பிடித்தார்கள். சிலராட்சசர்கள் தங்களுக்கு அறிமுகமானவர்களைக்கண்டு இவ்வம்புகளைப் பிடுங்கிவிடுங்களென்று கிட்டிவர, பிடுங்கினமாத்திரத்தில் உயிர்நீங்கிக் கீழேவிழவும், உபகரிக்கவந்த ராட்சசர்கள் தேகமெல்லாம் புண்பட்டிருக்கிறபடியால் இப்போது விழுந்தவர்க ளிவர்களென்றும் முன்னேவிழுந்து கிடக்கிறவர்க ளிவர்களென்றும் அடையாளந் தெரியாமல் வியசனப்பட்டு, தாங்களுமனோதைரியம் குறைந்துபோனார்கள். சிலராட்சசர்கள் குதிரைகளின்காலாலுதைபட்டு விழுந்துடல்பதைத்தார்கள். சிலர் யானைகளின் காலிலகப்பட்டுருண்டுபோனார்கள். சிலர்தேர்களின்காலிலகப்பட்டு அப்படியே நசுக்குற்றார்கள். இப்படி நெருப்புப்பட்டுவேகும் வீட்டி லகப்பட்டவர்களைப்போல யுத்தகளத்தில்வந்த ராட்சசர்களெல்லா மாண்டுபோனார்கள்.

சிலராட்சசர் பயந்துவானரவேஷம்பூண்டு பூமியின்வழியாகவர, அப்படி வந்தவர்களைத் தேகத்திற் புண்பட்டுப்போகின்ற ராட்சசர் பலபேர்பார்த்து இங்கே குரங்குகள் வருவதென்னவென்று கோபத்தினாலே அவர்களோடு சண்டைசெய்ய, இப்படியும் சிலராட்சசர்க ளிறந்தார்கள். சிலராட்சசர் கீழேவிழுந்து பிராணன் போகும் சமயமாயிருக்கும்போது தங்களிரண்டு கண்களையுந்திறந்து பக்கத்தில் வியசனப்பட்டுக்கொண்டிருக்கின்ற தங்கள்சிநேகரைப்பார்த்துக் குடிக்கக்கொஞ்சம் தண்ணீர்கொடுங்களென்று கேட்கக்கொண்டுவந்து கொடுக்கிறதற்குள்ளாக வவர்கள் மாண்டுபோனார்கள். சிலர் கொண்டுவந்துகொடுத்த தண்ணீரைக்குடித்துக்கொண்டிருக்கும்போதே விக்கலெடுத்து பிராணனீங்கினார்கள். சிலர் குடித்தானவுடனே மாண்டுபோனார்கள். சிலராட்சசர்களை அவர்கள் தகப்பன்மார் தூக்கிக்கொண்டு வீட்டிற்குப்போகும்போதே நடுவழியில்பிராணனைவிட, அவர்களையவர்கள்விட்டெறிந்துபோட்டுத் தாங்கள்மாத்திரமே வீடுபோய்ச்சேர்ந்தார்கள். சிலராட்சசர்கள்தத்

தங்களைக்கக்கிக்கொண்டு கண்கள் வெளியிற்பிதுங்கித் தங்கள் ஊர் இன்னதிசையிலிருக்கிறதென்று தெரியாமற் சுற்றிச்சுற்றித்திரிந்து, அவ்விடத்திலேயே உயிர் நீங்கி மாண்டார்கள்.

இந்தப் பிரகாரமான அவஸ்தையை யடைந்து மாண்டவர்கள்போக மிகுதியாயுள்ள சில ராட்சசர்கள் சிதறியோடி இலங்காபட்டணத்தைச் சேர்ந்தார்கள். இந்தச் சண்டையைப் பார்த்துக்கொண்டிருந்தோடிவந்த தூதுவர்கள் மழையைப்போலக் கண்ணீர்சொரிந்துகொண்டு வீரகண்டாமணியைத் தரித்த இராட்சசவீரர்களுக்கெல்லா மிராஜாவான இராவணேஸ்வரனுடைய பாதத்தில் விழுந்தார்கள்.

இராவணன் அதிகாயன் முதலியவர்கள் மாண்டதைக்கேட்டு வருந்துதல்.

கலி.

நோக்கியவிலங்கைவேந்த னுற்றது நுவன்றியென்றான்
போக்கியசேனையிம்மிற் புகுந்தவெல்லையும்போதா
ஆக்கியபோரிளைய வதிகாயன்முதல்வராய
கோக்குலக்குமரரெல்லாங் கொடுத்தனராவியென்றார்.

ஏங்கியவிம்மன்மான மிரங்கியவிரக்கம்வீரம்
ஓங்கியவெகுளிதுன்ப மென்றிவையொன்றிற்சொன்று
தாங்கியதரங்கமாகக் கரையினைத்தள்ளித்தள்ளி
வாங்குபுகடல்போனின்று வருவிரீவழங்குகண்ணான்.

அப்படி விழுந்த தூதுவர்களை இராவணன்பார்த்து, ஓ ஒற்றர்களே! என்ன சமாச்சாரம்? நடந்தது சொல்லுங்களென்று கேட்டான். அதற்கவர்கள் - ஐயா இராவணேஸ்வரா! நீர் அனுப்பின சேனைகளில் திரும்பிவந்தது மேருவுக்கு அணுவளவும் போதாது. நடந்த யுத்தத்தில் அதிகாயன் முதலான ராஜகுமாரர்களெல்லாம் தங்களாவியை ஒப்பித்துவிட்டார்கள். இஃதிந்தினம் யுத்தகளத்தில் நடந்தசெய்தியென்று சொன்னதைக்கேட்ட விராவணன் அதிக துக்கத்துடனே அழுது, சமுத்திரத்தில் ஒன்றின்பின் ஒன்றாகவந்து கரையில் மோதும் அலைகளைப்போல் இரக்கம்-கோபம்-வீரமான வினைகள் மனதிற்றுக்கக் கண்களி லருவியாற்றைப்போல் நீர் சொரியும்படியாகத் திக்குகளைப் பார்ப்பான்.

அன்றியுமந்தத் திக்குகளைக் காத்துக்கொண்டிருக்கின்ற தேவர்களைப்பார்ப்பான். இராக்ஷசஸ்திரீகளும் புருஷர்களும் தங்கள் தங்கள் தந்தைமார்கள்-அண்ணன்மார்கள் - தம்பிமார்கள் - நாயகர்கள் - மைத்துனர்கள் - சிநேகிதர்களாகிய பலபேர் இறந்தனர்களென்று அழுகிற கூக்குரல் இலங்காபட்டணமெங்கும் எழும்பியதைக்கேட்டு, தனக்குச் சம்பவித்த பழையநாமத்தை அடிக்கடி நினைப்பான். தன்கையி லிருக்கின்ற வெற்றிபெற்ற வாளாயுதத்தைப் பார்ப்பான். அவ்வாளாயுதத்தைப் பிடித்திருக்கும் கையைப் பார்ப்பான். அந்தக் கையோடு மற்றொரு கையைச்சேர்த்துப் பிசைவான்.

புகைந்து தீயும்படியான மீசைகளிக்கன்றி பெருமூச்செறிவான். மறுபடியும் ஆசையில் மூழ்கினவனைப்போல் சிரிப்பான். மீட்டும் அழுவான். வெட்கமுற்றுத் தலைகளை இறக்கிக்கொண்டிருவான். பூமியைப் பேர்த்தெடுக்கலாமாவென்று நினைப்பான். ஆகாசத்திலிருப்பவையெல்லாம் சுருட்டிவிடலாமாவென்று எண்ணுவான். கணிதசாஸ்திரத்தில் கணிக்கப்படுதற்கரிய உலகத்திலுள்ள சகல ஜீவகோடிகளையும் இந்த க்ஷணத்திலேயே கொன்றுவிடலாமாவென்று கருதுவான். ஸ்திரீகளென்று சொல்லப்பட்டவர்களையெல்லாம் பிளந்துவிடலாமாவென்று ஆலோசிப்பான். ஆறாப்பண்ணிலே நெருப்புறைந்ததுபோல மானத்தினுல் மனம்புழுங்குவான். அப்போது அங்கிருந்தவர்களெல்லாம் ஒருவரும் வாய்பேசாமலும், மூச்சுவிடாமலும், மனஞ்சலியாமலும், நடுங்கின தேகத்தையுடையவர்களாகி அழுதுகொண்டிருந்தார்கள்.

இப்படியிருக்கும்போது காடுபோலிருக்கின்ற தோள்களையுடைய ராவணனுக்கு முன்பாக அக்கொடியோனுடைய பெண்சாதியும் அதிகாயனுடைய தாயுமான தானியமாலையென்கின்ற பெயருடையவள் அழுதுகொண்டு வந்து, ஐயோ மகனே! ஐயோ மகனே! என்று ஓயாமற் கூவி, இறந்து வீழ்ந்து கிடக்கின்ற அதிகாயன்மீது முட்டிமோதி, மலைச்சிகரங்களின்மீது இடிவிழுந்ததுபோல வளையல்களுமிரத்தினாங்களும் சப்திக்கும்படி ஸ்தனங்களின் மீதுகையாலோங்கியோங்கியறைந்துகொண்டு, மலைக்குகைதிறந்தாற்போல ஆவென்ற வாயைத்திறந்துகூவி, தலையென்கிற மலையின் சிகரம்போற் கட்டிமுடித்திருந்த செம்பட்டைமயிராகிய கூந்தலவிழச் சோர்ந்து, உலையிலுருக்கின செம்புருகிக்கொப்பாய் நீரொழுகுகின்ற சேவந்த கண்களையுடையவளாய் இராவணன் கால்மேல் விழுந்து, மெருகிடப்பட்டக்குள்ள தளவரிசைகளெல்லாம் பொறுக்குப்பொறுக்கா யெழும்பும்படிப்பெரிய மலைப்பாம்பைப் போலப்புரண்டுபுரண்டு, அடக்கக்கூடாத துக்கத்தையடைந்து, அழுதவர்களையுந் தானிதுவரையிற்கண்ணுற் பார்த்தறியாதவளாகையால் இவ்விதமாகச் சொல்லியழவேண்டுமென்பதுந் தெரியாமல், அவ்விராவணனிடத்திற் சற்றுமரியாதையில்லாமல், ஐயோ துஷ்டாவென்றும் சொல்லத்துணிந்து, துக்கசாகரத்தின் கரையைக் காணுதவளாய்ப் புலம்பத் தொடங்கினாள்.

அதிகாயன் தாயாகிய தானியமாலை புலம்பல்.

கலி.

மாட்டாயோவிக்காலம் வல்லார்வலிதீர்க்க
மீட்டாயோவீர மெலிந்தாயோதோளாற்றல்
கேட்டாயுணர்ந்திலையோ வென்னுரையுங்கேளாயோ
காட்டாயோவென்னுயிரைக் கண்மணியைக்காட்டாயோ.

இந்திரற்குந்தோலாத நன்மகனைப்பெற்றுயென்
றந்தரத்துவாழ்வாரு மேத்துமரியத்தேன்
மந்தரத்தோளென்மகனை மாட்டாமனிதனன்றன்
உந்துசிலைப்பகழிக் குண்ணக்கொடுத்தேனே.

அக்கனுலந்தா னதிகாயன்றானுலந்தான்
மிக்கதிறத்தன்னார்களெல்லாருமிடிந்தார்
மக்களினின்றன்னான் மண்டோதரிமகனே
இக்குவிசய மினிப்பொருந்தச்செய்யாயோ

வதையாமிருந்திருக்கின்றாயோ யானிறந்த
சோதையார்வேலரக்கர் பட்டாரக்கவாயோ.
பேதையர்க்கராமம் பிடிப்பாய்பிழைப்பாயோ
ஏதையாவின்னம் வருவசிலவேயோ.

உம்பியுணர்வுடையான் சொன்னவுரைகேளாய்
நம்பிகுலத்திழவன் கூறுநலமோராய்
கும்பகருணனையுங் கொல்வித்தென் சோமகனை
அம்புக்கிரையாக்கி யாண்டாயரசைய.

ஓ இலங்கேஸ்வரா! இப்போதே அவ்விராமலட்சுமணருடைய வல்லமையை நீக்குகிறதற்கு உன்னுல்முடியாதோ? என்பிள்ளையை மீட்டுக்கொண்டு வரமாட்டாயோ? உனது புஜவல்லமை குறைந்துபோனுயோ? அந்த மனிதர்களுடைய தோள் வல்லமையைக் கேட்டும் அறியாமற்போனுயோ? நான்புலம்பி அழுது சொல்லுகின்ற என்சொல்லையும் கேளாயோ? என்னுயிரெந்தேயிருக்கிறதென்று காட்டமாட்டாயோ? என்கண்மணி யெங்கேயென்றும் காட்டமாட்டாயோ? இந்திரனையும் ஜெயிக்கும்படியான நல்ல பலமுள்ள புத்திரனைத் தானியமாலை பெற்றிருக்கின்றுளென்று தேவர்களெல்லாம் புகழும்படியாயிருந்த என்களிப்பு இன்றைக்குப் போய்விட்டதே; மந்தரகிரி போன்ற தோள்களையுடைய என்மகனைச் சக்தியற்ற மனிதன் வில்லிலவனைத்தேவின அம்புக்கு ஆகாரமாக்கி விட்டேனே;

ஐயையோ! அக்ஷகுமாரன் மாண்டான். அதிகாயனுமாண்டுபோனுன். அதிகபலமுள்ள பிள்ளைகளெல்லா மாண்டுபோனுர்கள். உன்பிள்ளைகளில் இப்போதிருக்கிறவன் மண்டோதரியின் பிள்ளையான இந்திரஜித்து மாத்திரந்தானே; இன்னொருதரமுமுன்போலத் திக்குவிஜயம் செய்யமாட்டுவையோ? ஐயா! என்ன நினைத்துக்கொண்டிருக்கின்றுய்? வெற்றிமாலையைத்தரித்த வேலையேந்திய ராக்ஷசப் பிள்ளைகளில் இறந்து போனவர்களைக் கூப்பிடமாட்டாயோ? ஓ புத்தியற்றவனுகி மோகத்தாற் பீடிக்கப்பட்டவனே; நீயும் பிழைக்கும்வழி யறியப்போகிருயோ? சீதையாலே இன்னமுனக்கு நேரிடப்போகிற தீங்குகள் கொஞ்சமோ? உன்னிளைய தம்பி வெகுபுத்திமானுச்சே; அவன்சொன்னபுத்தியை அப்போதே நீ கேட்டாயா? எல்லாந்தெரிந்த குலவிருத்தரான உன்பாட்டனுர் சொல்லியும் அதைவிரும்பியாலோசித்தாயில்லையே? அதிக பலசாட்டியமுள்ளவனும் உன்றமைந்த தம்பியான கும்பகர்ணனையும் கொல்லுகிறதற்குக் காரணமாயிருந்தனையே; எனது தலைமைமைந்தனுகிய அதிகாயனையும் அம்புக்கு இரையாக்கி விட்டாயே? இனி நீ யரசாட்சி

செய்வதும் அப்படியப்படி தான். என்றிப்படிப் பலபலவிதமாகச் சொல்லி, ஓ காயா ! ஓ அதிகாயா ! என்றரற்றுக்கூவி யழுகிறான்.

இவ்வண்ணம் பலபலவார்த்தைகளைச் சொல்லி ஓ அதிகாயா அதிகாயா வென்றழைத்து, கன்றிறக்கக்கண்ட தாய்ப்பசுவைப்போல் கதறிக்கதறியழுது வருந்துபவனை ஊர்வசியும் மேனகையுங்கண்டு அகத்திற் சந்தோஷமும் புறத்திற்றுக்கமுங் கொண்டவர்களாகி கைகளாற்றூக்கி யெடுத்து உபசாரஞ் சொல்லிப்புகமேருகிரியை யொத்துயர்ந்த அரண்மனையில் கொண்டுபோனார்கள். அவ்விலங்காபுரத்திலிருக்கின்ற இராட்சசர்களும், இராட்சச ஸ்திரீகளுமொருவர்க்கொருவர் இழவுகொண்டாடவந்து, தங்கள் தங்கள் பிள்ளைகளே யிறந்ததுபோல அழுது புலம்பினார்கள். மற்ற ஸ்திரீகளினுடைய நிலையைச் சொல்லவேண்டியதென்ன ? தேவஸ்திரீகளும் தங்கள் வாயைத்திறந்து ஓவென்று அழுதார்கள். மாலையணிந்த மார்பையுடைய தசரதியாகிய ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியானவர் தனது அரண்மனையினின்றும் புறப்பட்டு வனத்திற் கெழுந்தருளுங் காலையில் எவ்வண்ணம் அயோத்தியாபுரி வருந்திற்றோ அதைப்போல் இலங்கைநகரம் வருந்திற்று. அழுதகுரலோசை பூரணச் சந்திரோதய காலத்திற் சமுத்திர மிரைந்ததுபோல விருந்தது.

அதிகாயன்வதைப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பதினெட்டாவது,

நாகபாசப் படலம்.

இப்படலத்தில் அதிகாயனுடைய இறந்ததை இராவணனால் இந்திரஜித்து கேட்டுச்சினந்து, நானே யப்பகைவரையெல்லாம் வேரறக்களைவேனென்றுபிரதிக்கினைசெய்து; தூமாக்ஷனும், மகாபாரிசனும் சக்கரரக்ஷகராய் வரும்படிப்போர்க்கோலங்கொண்டு யுத்தகளத்திற்குவர, அதுகண்டு லட்சுமணர் விபீஷணரா லவனுற்றறிந்து அவர் வேண்டுகோளின்படி அனுமாராதிய படைவீரர்களோடு யுத்தசன்னத்தராய் நிற்கவும், இருதிறச் சேனைகட்கும் போர்மூண்டு வானரசேனைகள் வலிபெற்றுநிற்க; அப்போது இந்திரஜித்தானவன் தனியே பராக்கிரமித் திருக்கக்கண்ட சுக்கிரீவன் - அனுமான் - நீலன் - அங்கதனுகிய நால்வரு மவனுடுபோராடி. மெலிய, அப்போ திளையபெருமான் அஞ்சனேயர் தோளின்மே லாரோகணித்து இந்திரஜித்தையும் அவனுக்குச் சக்கரரக்ஷகராய்வந்த அவ்விருவரையும் வெற்றிகொள்ள, தனியனுய்நின்ற இந்திரஜித்து ஆகாயத்தில் மறைந்து நாகாஸ்திரப் பிரயோகத்தால் இலட்சுமணர் முதலாயினேரை மூர்ச்சிக்கச்செய்து சூரியனஸ்தமித்ததால் மகாஜயப்பிரதாபத்தோடுபோய்த் தனது வெற்றியை இராவணனுக்க



நெ. 54. இந்திரஜித்து நாகாஸ்திரப்பிரயோகஞ்செய்து இலட்சுமணமுதலியோரை மூர்ச்சிக்கச்செய்தல்.

யுத்தகாண்டம். நாகபாசப்படலம்.

ர்வித்துத் தன்மாளிகைசென்றடைய, அக்கால் விபீஷணனும்மார் பல வாறுசொல்லித் தங்கியிருப்பதை யறிந்த அனலனென்னு மவர் மந்திரியானவனவரைத்தேற்றி ஸ்ரீராமரிடம்போ யறிவிக்கவும் அவரவ்வி வில் அக்கினியாஸ்திரத்தினு லிருளைநீக்கிச் சென்று தமது தம்பியாதியரைக்கண்டு இவேசித்து, விபீஷணனும்வாரால் நாகபாசத்தின் வரலாறு கேட்டறிந்து பிரலாபிக்க, அதை யாகாயத்தினின்றுங்கண்ட கருடபக வானங்கிறங்கிநின்று ஸ்ரீராமபிரானை வெகுவாகத் துதிக்க, அக்கால் நாகபாசத்தாற் கட்டுண்ட இலட்சுமணனதியர் அக்கட்டினின்றும் விடுபட்டெழுந்துவந்து ஸ்வாமியைக்கண்டு சேவிக்கவும் அவரவர்களைக்கண்டு மனமகிழ்ந்து ஆதரிக்க, அதுகண்ட கருடபகவான் ஸ்ரீராமனைத்தோத்திரித்து விடை பெற்றுத் தமதிருக்கை நோக்கிச் செல்ல, அநுமாருடைய பிரேரபணையால் பாசறைக்கண் சந்தோஷகர்ச்சனையுண்டாக, வதுகேட்ட விராவணன் இந்திரசித்துவின் மாளிகைக்குப்போக, இந்திரசித்து இராவணனோடு இலட்சுமணனுடையபாணத்தால் நேர்ந்த தன்சரீரமெலிவைக்கூறிக்கொண்டிருக்கும்போது தூதர்கள்வந்து யுத்தகளத்தில் நேர்ந்த சங்கதியை விண்ணப்பஞ்செய்ததைக்கேட்ட விராவணன் தன்மகன் கருத்தையறிந்து தனதிருக்கைவந்து சேர்தல் கூறப்படுகின்றது.

இராவணனால் அதிகாயனிறந்ததைக் கூறக்கேட்ட இந்திரஜித்து பகைவரைப் பற்றறக்களைவேனென்று சபதஞ்செய்து வெளிப்படல்.

கவி.

குழுமித்தொலைவாட்க ணரக்கியர் கூந்தலுழத்
தழுவித்தலைப்பெய்துதம் கைகொடுமார்பினெற்றி
அழுவித்தொழிவியாதுகொ லென்றெரியிற்புழுற்றான்
எழிலித்தனிப்பேரறை யிந்திரசித்தெழுந்தான்.

இப்படி வாள்போன்ற கண்களையுடைய இராக்ஷசஸ்திரீகள் முதலாயினோர் பெருங்கூட்டமாய்க்கூடி, தலைமயிரவிழ்ந்து சோரவொருவரையொருவர் தழுவி மாரடித்துக் கொண்டழுவே இந்திரஜித்தானவன் கேட்டு, இவர்களிவ்வாறழவேண்டிய தென்னவென்று சந்தேகித்து, மேகத்தினிடிபோலக்கர்ஜித்துடனே புறப்பட்டு, அஷ்டதிக்கினு முள்ளவர்களை வெற்றிபெற்ற நமது தந்தையானவர் மறுபடியும் அவர்களுடனே போர்செய்து அவர்களுக்குத் தோற்றுப்போனாரோ? அல்லாவிட்டா லிறந்தேபோனாரோ? முன்பில் விலங்கையைச் சுட்டுவிட்டுப்போன அனுமான் மறுபடியு மிவ்விலங்கையை ஆழ்ந்த சமுத்திரத்துடனே பேர்த்துவிட்டானோ? இப்படி யழுகிறதற்குக் காரணமென்னவென்றுநினைத்து, தான் கண்டகண்ட ராக்ஷதர்களையெல்லா மிலங்கைக்கு வந்த வருத்தமென்னவென்று கேட்டான். அதற்கொருவரும் சொல்லுகிறதற்குக் கூடாமல் மெய்நடுங்கி வாய்குழறிப் பேசுதற்கேலாமல் நின்றார்கள். அப்போதவ் விந்திரஜித்தானவன் தன்சாரதியைநோக்கித் தேரைச்சீக்கிரமாக இராவணனுடைய மாளிகைக்கு ஓட்டென்று சொல்லி, ஓர்நாழிகைப்பொழுதுக்குள்ளாகவந்து சேர்ந்து, இராவண னுயிருடனிருக்கக்கண்டான்.

கவி.

கண்டோனிறையாகிய நெஞ்சினன்மைந்தன்கூப்பி
உண்டாயதெனிவ்வழி யென்றலுமும்பியாரைக்
கொண்டாருயிர்காலனுங் கும்பனிகும்பனோடும்
விண்டானடைந்தா னதிகாயனும்வீரவென்றான்.

இவ்வண்ணம் பற்பலவாகிய சந்தேகத்தைக்கொண்டு வந்தவனாகிய இந்திரசித்தானவன் தன்தந்தையின் திருமுகத்தைப்பார்த்து சந்தேகநீங்கிய மனதினனாகித்தனது இருகரங்களையுஞ் சிரசின்மேற்குவித்து ஐயா! என்தந்தையாகிய இலங்காபுரிநாயகா! இப்போது நமது நகரத்தில் இருக்கின்றவர்களெல்லாம் சித்தங்கலங்கிக் கோவென்று நாலிலவழும் வீதிகளிலும் ஸ்திரீகளும் புருஷர்களும் அழுகின்றார்களேயாதுகாரணம்? உமக்குத்தெரியுமோவென்று கேட்டனன். இப்படியாகக் கேட்டகாலையில் இராவணன் இந்திரசித்தை மார்புடன்சேர்த்துக்கட்டி, அப்பாமகனே! இந்திரசித்தே! உனக்கு என்னசமாசாரம் சொல்லப்போகிறேன். உன்னுடைய தம்பிமாரை யமனும் பயமில்லாமற் கொண்டுபோய்விட்டானே: கும்பன் — நிகும்பன் — அதிகாயன் — இந்தமூன்றுபேரும் சுவர்க்கலோகமடைந்தார்களே: என்று சொல்லிப் பலபலவென்று இருபது கண்களினு மிரத்தநீரையுகுத்தான். இப்படியவன் சொல்லியும் சொல்லாததற்கு முன்னே இந்திரஜித்தானவன் அக்கினியையுமெரிக்கும்படியான கோபக்கண்களையுடையவனாகி, பல்லாலுதட்டைக்கடித்து ஆகாசத்தைப் பார்த்து, எல்லாரும் இறந்துபோனார்களாவென்று மிகுந்த ஏக்கம்பிடித்து நின்று, வில்லாளரை விரல்தொட்டு எண்ணுமிடத்து முதலிலெண்ணநிற்கும்படியான வீரனான அவ்விந்திரஜித்து இராவணனைப்பார்த்து, ஐயனே! அவர்களைக்கொன்றவர்கள்யாரென்று கேட்டான். அதற்கிராவணன்-அப்பா மகனே! நமது அதிகாயனை இலட்சுமணன்கொன்றானாம். மற்றவர்களை நம்முடைய ஊரில்நெருப்புவைத்துக்கொளுத்திய ஆஞ்சநேயனுடன் மற்றவானரவீரர்களும் கொன்றார்களாம். என்று கொன்றைப் பூமாலையைத்தரித்த உருத்திரமூர்த்தியினுடைய கைலாசகிரியை வேரோடு பேர்த்துச் சாய்த்த மகா பலவானான இராவணன் சொன்னான்.

அதைக்கேட்ட இந்திரஜித்தானவன் மனங்கொதித்து,ஐயா இலங்கைவேந்தே! மகாவலியுற்ற வானரசேனையையுடைய அம்மனிதர்களுடைய வல்லமை உமக்குத்தெரிந்திருந்தும் அதிகாயன்முதலானோரை அவர்கள்மேற் போருக்கு நீர் அனுப்பினபடியால் நீரே அவர்களைக்கொன்றீர், அவர்களல்ல கொன்றவர்கள். என்னையாவது போகச்சொல்ல உமக்கெண்ணம் வராமற் போச்சு. ஐயோ! இனியிதற் கென்னசெய்வதாமென்று சொல்லி வெகுநேரமாலோசித்து, அதிக கோபத்துடன் பெருமூச்சுவிட்டு, ஐயா! இப்படிச் செய்கிறதற்குத்தானே முன்னே நமது அக்ஷகுமாரனைப் பூமியிற் போட்டுத் தேய்த்துவிட்ட அநுமானை, சத்துருக்கள் சொன்னசொல்லைச் சொல்லவந்த தூதுவனென்று கொல்லாமல் விட்டுவிட்டீர். நம்முடைய ஊரளவு சத்துருக்-

களிடத்திற்குப் போகுமேயென்றும் பின்னாலோசனை செய்யாமற் போனீரே: ஓ ஆலோசனையில்லாதவரே! இனி நீர் பிள்ளையுமில்லாமற்போய்விட்டீர். உமது வாழ்க்கையும் அழிந்துபோய்விட்டது.

கவி.

என்னின்றுநினைத்து மியம்பியுமென்னையுந்தான்
கொன்னின்றபடைக்கலத் தெம்பியைக்கொன்றுளானை
அந்நின்றநிலத்தவனாக்கையைநீக்கிலல்லால்
மன்னின்னகர்க்கினி வாரலென்வாழ்வும்வேண்டேன்.

நான் சும்மா நினைத்தும் பேசியும் ஆலோசித்துமென்ன? கொல்லுந்தொழிலையே மேற்கொண்டு கூர்மைபெற்றுநின்ற ஆயுதங்களால் என்தம்பியைக்கொன்றவனை அந்தரணக்களத்திலேயே அவனுயிர்வேறு உடல்வேறாக நீக்கினாலல்லாமல், வெகுகாவலாக நம்முடைய வசத்திலிருந்த இலங்கா பட்டணத்திற்குத் திரும்பிவரமாட்டேன். இந்த வாழ்வுமெனக்கு வேண்டாம். அந்த வானரப் பெருஞ்சேனையைப் பிளவுபிளவாகப் பிளந்து நிணச்சேறுபட அரைத்துவிட்டு அந்த லட்சுமணனையும் கொல்லாமற் போவேனானால், என்னெதிரே வருகிறதற்கும் பயந்து என்னுடைய செந்தாமரை மலர்போன்ற கண்களையுடையவனான விஷ்ணுமுதலான தேவர்களெல்லாரும் என்னைப்பார்த்துச் சிரிக்கக் கடவார்கள். ஒருவராலும் எக்காலத்திலும் ஜெயிக்கமுடியாத ஸ்திரமான உயிரையுடைய என் தம்பியாகிய அதிகாயனைக் கொன்ற அந்த மனிதனுடைய தேகத்தினின்றூற்றெடுக்கும்படியான ரத்தவெள்ளத்தைப் பூமிதேவி குடிக்கும்படிச் செய்யாமற் போனேனேயானால், என்னோடெதிர்த்த இந்திரனிரண்டுதரமல்லவோ எனக்குத் தோற்றுப் போனான்? அப்படியல்ல: அவனுக்கே தோற்றவனாகக்கடவேன்.

மேலும் - நாகபாசத்தையும் பாசுபதாஸ்திரத்தையுங்கொண்டு மூன்றாம் பிறைச் சந்திரனையணிந்த சடாமகுடத்தையுடைய நமது குலதெய்வமாகிய அந்தச் சங்கரதேவன் எனக்குக்கற்பித்த தேவயாகத்தைச் செய்து, அந்தமுறையைப் பாதுகாத்துத் திரிலோக ஜெயப்பிரதாபசாலியாகச் சஞ்சரிக்கின்ற நான் இப்போது அவர்களுயிரை உமக்குக் கொடாமற் போவேனேயானால், என்னுயிரை நானே விட்டுவிடுவேன். அதுவரையிலு நான் உணவு முண்ணுகிறதில்லை. எனக்குத் தேவாமிர்தம்போலிருந்த என் தம்பியினுடைய அருமையான உயிரைப்பறித்த அந்தக் கொடியவனை இக்கிடைப்போய் யமனுக்கு விருந்தாகக்கொடாமற் பிறகு கையில் வில்லைப்பிடித்துத் தேவர்கூட்டமெல்லாம் சிரிக்கத் திரும்பிவந்து இந்தப் பூமியிலிருந்தேனானால், நானிராவணனுக்குப் பிறந்தவனேயல்ல. அதனாலெனக்குண்டான இராவணியென்கிற பெயரும் இன்றோடில்லாமற்போகக்கடவதென்று இவ்வண்ணம்பலசபதங்கள் செய்துகொண்டான்.

இப்படி இந்திரஜித்துச் சொல்லக்கேட்ட இராவணன் சந்தோஷமடைந்து அவனைப்பார்த்து, என்னப்பா இந்திரஜித்தே! நீ இந்த லோகாசாரியத்தைச் செய்து என் விசனத்தை நீக்குகிறதற்காரும். உனக்கு முடியாத காரியங்களுமுண்டோ? பெருங்குதையையுடைய ஒளிவீரனே! உன்னை இந்த அற்பசத்துருக்கள் எதிர்க்கும்படி அனுப்புவேனேயானால் எனக்கே காணிந்து கோபமுண்டாகுமேயென்று கருதி, உன்னேடொன்றுமே யோசியாமல் நானிப்படிப்பட்ட யுத்தத்துக் குட்பட்டேனென்று சொன்னான். தேவர்களையெல்லாம் ஜெயித்துச் சொர்க்கலோகத்தை வெற்றிபெற்றவனான இந்திரஜித்தென்பவன் அவ்விராவணன் சொன்ன ராயனை வணங்கி மின்னலைப்போலப் பிரகாசிக்கின்ற கூர்மையுள்ள வாளாயுதத்தைக் கையிற்பிடித்துக்கொண்டும், ஒன்றினாலும் அறுபடாததும் ஊடுருவப்படாததுமான கவசத்தைத்தரித்தும், சத்துருக்களுடைய முதுகைப்புகுளிப் போகும்படியான அம்பறாத்தூணியை முதுகில் வலித்துக் கட்டியும், வலியகுதைகளையுடைய வயிரமான வில்லை இடதுகையிற் பிடித்தும் ஆக்கிரமித்து நின்றான்.

அவன் பிடித்தவில் ஆதியிற் பிரமதேவன் வச்சிரமலையை யெடுத்துப் பகைவர்களால் ஒருநாளும் சேரிடாதபடிக்கு இந்திரனுக்காகச் செய்து கொடுத்த வில்லாகும். அப்படிப்பட்ட வில்லை இவனந்த இந்திரனை அடித்துக்கட்டிச் சிறையில் வைத்தகாலையில் அவன் கையிலிருந்து பிடுங்கிக்கொண்டான். தோளிற் கட்டிய அம்பறாத்தூணியோ வென்றால்? அந்தக் காலத்தில் சிவனைப் போன்ற பலமுள்ளவனான இவன் அக்கினிதேவனிடத்திலிருந்து பறித்துக்கொண்டதே; அது சப்தசாகர ஜலம்வற்றினாலும் அம்புகள் குறைவுபடாததும், கொடியகண்களையுடைய பேயும்யமனும் முன்னுரப்படியான ஆகாரமுள்ள தொம்பைக்கூடுபோன்றது மானது. அந்தத் தூணியிலுள்ள அஸ்திரங்களோ? அவன்முன்பு தேவர்களுடன் சண்டைசெய்தபோது மெய்ச்சி அவர்கள் கொடுத்தவைகளும், மேருவை வில்லாயுடையவரான உருத்திரமூர்த்தி கொடுத்தவைகளும், பிரமதேவர் கொடுத்தவைகளும், இதுவரையில் வெற்றியல்லாமல் தோல்வியைக் கொடாதவைகளுமானவைகள்.

இவையல்லாமல் இன்னும் பலகோடியாயிரங்கோடி ஆயுதங்களை ஆராய்ந்து பார்த்தெடுத்துக் கொண்டு இரதமேறினான். அந்த ரதமெப்படிப்பட்டதென்றால், அதிகபலமுள்ள இலக்ஷம் யாளிகளும் இலக்ஷமகாசிங்கங்களும் பூட்டினதும் — இலங்கைக்குச் சமமாக அவ்வளவு விசாலமானதாகச் செய்யப்பட்டதும்-தேவர்களுக்கு மந்திரவல்லமை இவ்வளவென்று அறியக்கூடாததும், பொன்னையுஞ் சூரியனையுஞ் சொல்ல அரியதான நிறத்தையுடைய சிரேஷ்டமானகுடையும் மின்னலைத் தோற்கடிக்கும்படியான பிரகாசமுள்ள மழுவாயுதத்தையுடைய சிவமூர்த்தியின் விருஷபக்கொடியும் — முன்பு யுத்தசமயத்திற் பின்றொடர்ந்துபோனதும், அந்தத் திரிமூர்த்திகள் முதலானவர்களையெல்லாம் ஜெயித்து மேன்மையடைந்தபோது இந்த மூன்று லோகங்களிலும் அவர்

கள் வாகனங்களனைத்தும் தன்னைப் பின்றொடர்ந்து வரும்படியாகத் தான்தோல்வியடைந்து முன்செல்லாததும், வயிரம்பற்றிய கைகளைவகித்த தானவர்களுடைய தேஹமாமிசங்களையெல்லாம் தேய்த்துவிட்ட சக்கரங்களையுடையதுமானது.

அன்றியும் அந்தத் தேரானது திக்கையையுடைய அஷ்டதிக் கஜங்களைத் துரத்தினதென்று சொல்வதோ பெருமை? அதிக வீரத்தன்மையைக் காட்டி எதிர்த்து நின்று இந்திரனைத் தாக்கிவிட்டெறிந்த காலத்தில் அவன் மல்லார்ந்து விழும்போது அவனுடைய முதுகைத்தேய்த்துத் தழும்புண்டாக்கின சிகரத்தையுடையதும் ஆடிக்கொண்டிருக்கின்ற நீண்ட விருதுக்கொடி கட்டியிருக்கின்றதுமான இப்படிப்பட்ட மகாகெம்பீரமுள்ள தேரில், சமானமற்ற வல்லமையைக் காட்டின தேவேந்திரனுடைய அழியாத பெரும்புகழானது நீங்கும்படி அவனுடைய பெரியதோள்களைப் பாசக்கயிற்றால் கட்டிய ஜெயப்பிரதாபசாலியான இந்திரஜித்து வந்தான்: இந்திரஜித்து வந்தான்: என்று சொல்லிக்கொண்டு பேய்கள் சப்திக்கும்படியாகத் தானேறி, அந்தத் தேருக்கொப்பான ஆயிரம் சேமத்தேர் பின்னேவர மனதில் யுத்தப்பித்தேறினவனாகி, எந்நாளும் தேவர்களை முதுகிடச் செய்ததன்றி ஒருநாளும் அவர்கள் முகத்தைப்பார்த்து யுத்தஞ் செய்தறியாத வீராதிவீரனான இந்திரஜித்து வந்தான்.

அவ்விந்திரஜித்துவிற்குத் துணையாக அவனது தேரைச்சூழ்ந்தெழுந்த சேனைகள் இவ்வளவினதென்றறிந்து கூறுவதற்கு என்னால் முடியாது. ஆயினும், நன்மைமிகுந்த நான்குவேதங்களிலும் பாண்டித்தியமுடையவராகிய வான்மீகரென்று சொல்லப்பட்ட மகாரிஷியானவர் தமது ஞானதிருஷ்டியால் நாற்பது வெள்ளஞ்சேனைகளென்று கூறினார். அவர் மகாதவச்சிரேஷ்டரானதினால்தான் அச்சேனையைக் கணக்கிட்டுக் கூறினாரன்றி, மற்றவர்களியார் தாம் சொல்லவல்லவர்கள். நெடுங்காலமாய்ச் செய்துவருகின்ற எந்த யுத்தத்திலும் தோற்காமல் வெற்றிபெற்றவர்களாகிய தூமாக்ஷனென்பவனும் — மகாபாரிசனென்பவனும் — சாக்கிரதையோடு தன்தேர்வண்டியைத் தொடர்ந்து காவலாய்வர, சந்திரவட்டக்குடை மேலே நிழலிட்டுக்கொண்டுவர, பெரிய சங்கத்தொனிமுழங்க, கேட்கப் பயங்கரமான அஷ்டாதச வாத்தியங்கள் நாலுகடலும் சேர்ந்து சப்திக்கிறதுபோலச் சப்தித்தன.

கவி.

தோராயிரமாயிர கோடிதன்மாடுசெல்லப்
போரானைபுறத்தி னவற்றினிரட்டிபோதத்
தாரார்புரவிக்கடல் பின்செலத்தானைவீரப்
போராழிமுகஞ்செலச் சென்றனன்போர்ச்சியில்லான்.

ஆயிர மாயிரகோடித் தேர்வீரர்கள் உள்ளணிசூழ்ந்துவர, இரண்டாயிர மாயிரகோடி யானைவீரர்கள் புறவணிசூழ்ந்துவர, இவைகட்குமுன் அநேக

மாயிரம் குதிரைவீரர்கள்கூட, நாற்புறத்தும் சேனாவீரர்கள் யுத்தக்கடலைப்போலச்சேர, இந்தப் பிரகாரமாக இந்திரஜித்தானவன் யுத்தகளத்தை நோக்கி ஆக்கிரமித்துவந்தான். அப்போது இளையபெருமாள் இராவணன் புத்திரனான அதிகாய னிறந்தபடியால் அவ்விராவணனாவது—அவன் வாராவிட்டால் தேவேந்திரனை வெற்றிகொண்ட இந்திரஜித்தாவது—இனி யுத்தத்திற்கு வருவார்களென்று கருதி, இரணகளத்தைவிட்டு நீங்காமல் அங்கேயே நின்றிருந்தார்.

இலட்சுமணர் விபீஷணரால் இந்திரஜித்துவி னாற்ற லறிதல்.

கவி.

யாரிவன்வருபவ னியம்புவாயென
வீரவெந்தொழிலினன் வினவவீடணன்
ஆரியவிவனிக லமரர்வேந்தனைப்
போர்கடந்தவனின்று வலிதுபோமென்றான்.

அப்படி நின்றிருந்த இலட்சுமணர் இவன் வருவதைக்கண்டு, ஐயா இலங்கைக்கரசனாகிய ஓ விபீஷணமகாராஜனே! இவன்யார் சொல்லக்கடவீரென்றுகேட்டார். அதற்கவர்-ஸ்வாமி! இவன் மகாபலவந்தனும், தேவேந்திரனை யுத்தத்தில் ஜெயம்பெற்றவனுமான இந்திரஜித்தென்பவன். இன்றைக்குக் கடினமானசண்டை நடக்கும். ஓ எங்களாண்டவனே! அடியேன் ஒரு விண்ணப்பம் செய்துகொள்ளுகிறேன் அதனைக்கேட்டருளும். இவனோடுகூட மகாவீரவான்களெல்லாம் துணையாய்வருகின்றார்கள். நம்மோடுகூடவும் தகுந்த துணைவர்களை வைத்துக்கொண்டு சண்டைசெய்வது நல்லது. தேவரீர் எல்லாந்தெரிந்த மகானுபாவர். நிக்காலோசனை செய்யவேண்டும். ஆஞ்சநேயர் — சாம்புவர் - சுக்கிரீவமகாராசர் - அங்கதர் - நீலர் - என்று சொல்லப்படுகின்ற இவ்வீரர்கள் நம்முடன் நிற்கும்படியாக, பாபரிதரும் வீரப்பிரதாபமே திருவாபரணமாக வுடையவருமான தேவரீர் இவனோடு சண்டைசெய்வதே தகுதி.

அனேகமாயிரம் தேவர்களெல்லா முதவியாயிருக்க அளவில்லாத தேவசேனைகளுடன் கூடிக்கொண்டு தேவேந்திரன் இவனோடு யுத்தஞ்செய்த போது, அவர்களையெல்லாம் இவன் நிமிஷநேரத்தில் தோற்கடித்துத் துரத்திவிட்டான். தேவேந்திரன் அமிர்தபானம் பண்ணினவனாகையால் அந்தப் பலத்தைக்கொண்டு தனதுயிர்தப்பிப் பிழைத்தோடிப் போயினான். அவ்விந்திரனுடைய மலைபோன்ற தோள்களை இவன் நாகபாசத்தாற் கட்டினான். ஆஞ்சநேயரையும் அந்தப் பாசத்தால்தான் கட்டினான். இவ்விரண்டு காரியமும் லோகப்பிரசித்தமான காரியம். இதுவுமல்லாமல் — இவனுடைய தனுர்வித்தியா சாமர்த்தியத்தை எப்படிப்பட்டவர்களாலும் தடுக்கமுடியாதென்றனர்.

365

அங்கங்கிருந்த வானரசேனைத் தலைவர் இலக்ஷ்மணனிடம் சேர்ந்து இராக்ஷசவீரர்களுடன் போர்புரிதல்.

கவி.

என்றவனிறைஞ்சலு மிளையவள்ளலும்
நன்றெனமொழிதலு நணுகினனரோ
குன்றிறல்மாருதி யிலங்கைக்கோமகன்
சென்றனனிளவன்மே லென்னுஞ்சிந்தையான்.

இப்படியென்று விபீஷணாழ்வான் வணங்கிச்சொல்லியதை இளையபெருமாள் கேட்டு, ஐயா விபீஷணரே! நல்லது; உம்முடைய மனம்போலச் செய்யக்கடவீரென்றமாத்திரத்தில் ஆஞ்சநேயர் இளையபெருமாள்மீது இந்திரசித்து எதிர்த்துவந்தானென் றறிந்து, கூற்றுவனும் *கண்புதைப்பக் காற்றினும் கடிதுவந்து சேர்ந்தான் அங்கதகுமாரன் முன்னமே இளையபெருமாளுடனே இருந்தானன்றோ? மற்ற வானரவீரர்களெல்லாரும் தாம் தாமாகவே வந்து சேர்ந்தார்கள்.

சங்குகள்முழங்குஞ் சமுத்திரத்துக்கொப்பான வானரசேனைகளுடன் சுக்கிரீவமஹாராஜன் முன்னதாக நடந்தார். வானரசேனையும் — இராட்சசசேனையும் - வடசமுத்திரம் தென்சமுத்திர மென்னு மிரண்டு பெரிய சமுத்திரங்களும் சண்டைசெய்ய விரும்பிப் பொங்கிச் சப்தித்துக்கொண்டு வருவதுபோல, மிகுந்த கோபத்துடன் ஒன்றை யொன்றெதிர்த்து நின்றது. தேவர்கள் தேவலோகத்தில் இல்லையென்று சொல்லும்படியாக தேவர்களெல்லாரும் தம்பதி சமேதர்களாய் இன்றைக்கு நம்முடைய கண்ணினாலும் - மனத்தினாலும் — ஆலோசனையினாலும் —கண்டுயப் பார்த்திருந்தோமானாற் சந்தோஷ மடையலாமென்று வந்து ஆகாசமார்க்கத்தில் நிறைந்தார்கள். அப்போது இரண்டுபட்சத்துச் சேனைகளும் போர்செய்யத்தொடங்கின. அக்காலத்து வீரர்கள் கர்ச்சித்த வீரகர்ச்சனையும், சமுத்திரம்போன்ற சங்கத்தொனியும், இரணபேரிகை முழக்கமும் ஒன்றுசேர்ந்து ஒலித்தபடியால்; தேவேந்திராதி தேவர்களெல்லாம் தங்கள் செவிகளைக் கைகளாற் பொத்திக்கொண்டார்கள். உயுத்தவீரர்கள் ஒருவரையொருவர் அடியுங்கள் — பிடியுங்கள் - வதியுங்கள் எய்யுங்களென்று சொல்லுகின்ற சப்தமும், வில்லிற் பூட்டிய நாணின் டங்கார ஓசையும், பிரளயகால இடியைப்பார்க்கிலும் மூன்மடங்கு கோஷமாகப் பிறந்தன.

அப்போது வானரவீரர்களெறிந்த மலைகள்பட்டும், மரங்கள்பட்டும்; இராக்ஷதவீரர்கள்விடுத்த யமனுக்கொப்பான வேலாயுதம் கதைத்தும், வில்லிலிருந்து புறப்படுகிற அம்புகள்தைத்தும்; இவ்விராக்ஷதர்களும் வானரருமாகிய வீரவான்களுடைய இரத்தினையொத்தவையும் பவளத்தையொத்தவையுமான தேகங்களெல்லாம் அழிந்தன. இந்தப்பிரகாரமாக இரண்டு சேனையும் தன்

றையொன்று தோற்கடிப்பதினாலே பூமியும் இரண்டாய்ப்பிளக்க யத்தனித்தது. முசலாயுதங்களாலும், விருட்சங்களாலும், ஒருவரையொருவர் அடிக்கத் தலைகள் சிதறுண்டுபோன வானரங்கள் இளையபெருமாளுக்கு ஜெயமுண்டாகக் கடவதென்று வாழ்த்திக்கொண்டே விழுந்தன. இராக்ஷசர்களுடைய கொடிய தேகங்கள் கழுத்துடனே தலைகளில்லாமல் ரணகளத்திற் கூத்தாடின. தலைவெட்டுண்டு நரம்புகள் வலிக்க ரத்தத்தைக் கொப்புளித்துக்கொண்டிருக்கின்ற வானரவீரர்களுடைய பலத்த தேகங்களெல்லாம், காடெல்லாம்வெந்து மடிந்தபிறகு நிற்கின்ற அடிக்கட்டைகள்மாத்திர மெரிகிறதுபோல விருந்தன.

சிலவானரங்கள் ராக்ஷசர்களைப்பிடித்து அவர்களுடைய பெரியதோள்களை முறித்தன. சிலவானரங்கள் அரக்கர்களைக் காலாலெட்டி யுதைத்தன. சிலவானரங்கள் நிசாசரர்களை நெட்டித் தள்ளின. சிலவானரங்கள் வந்தத் துஷ்டர்களைப்பிடித்துத் துண்டுதுண்டாய்க் கடித்துக் கொன்றுவிட்டன. சிலவானரங்கள் அந்தப் பாவிகளைக் கழுத்தறுந்து போகும்படி கைகளால்வாரி யடித்தன. சிலவானரங்கள் ராக்ஷசர்களைப் பூமியிற்போட்டுத் தேய்த்துவிட்டன. சில வானரங்கள் சிம்ஹநாதம் செய்தன. இராக்ஷசர்களிற் சிலர் வாளாயுதங்களினால் வானரங்களினுடைய விரகண்டாபணிதரித்த கால்களைத் துணித்துவிட்டார்கள். சிலர் தலைகளை வெட்டித்தள்ளினார்கள். சிலர் தோள்களைவெட்டி யெறிந்தார்கள். சிலர் உடலை இரண்டுதுண்டாகத் தறித்துப்புழுதியிற் புரட்டினார்கள். இயமனைப்போலத் திரியும் வானரங்கள் விருட்சங்களினால் இராட்சசர்களுடைய மலைபோலுயர்ந்த தலைகளைச் சிதறடித்தார்கள். சிலருடையஉயிரைப்பருவதப்பிரயோகத்தாற் போக்கிவிட்டார்கள். சிலருடையகைகளும் கால்களும் அதனால் முறிந்துவிழுந்துமடிந்தார்கள்.

அக்கினிப்பொறிகளைக் கக்குகின்ற கண்களை யுடையனவாகிய சிலகரடிகள் பலம்பொருந்திய தலையும் கைகளும் அற்றவைகளாகித் தேகத்தில் வச்சிரவேலூருவும்படி விசித்தெதிர்ந்த ராக்ஷசர்களுடைய கழுத்தைத் தாவிக்கடித்துக்கொண்டு அவர்களுடனேகூட மாண்டுபோயின. சிலகரடிகள் மலைகளைப் பேர்த்து இடியோடுகூடின மேகத்தையொத்த தந்தங்களையுடைய கரியயானைகளின் மஸ்தகங்களைப் பிளந்து, அவற்றிலுள்ள மூளைகளைத் தின்று தங்களுடைய பசியாறின. மலைகளினும் பெரிய தேகங்களை யுடையனவகளான வானரங்களிற் சிலமதத்தயானைகளின் மீதும், சில குதிரைகளின்மீதும், சில மணிகள் கட்டியிருக்கிற தேர்களின் மீதும், சில எதிரிகள் கைகளிற்பிடித்திருக்கிற வாள்களின் மீதும், சில வில்லுகளின் மீதும், சில ராக்ஷசர்களுடைய செம்பட்டைமயிர்த் தலைகளின் மீதும் தாவிக் குதித்தன. இராக்ஷசர்கள் தண்டாயுதங்களைக்கொண் டடித்துக்கொல்ல வுடைந்த தலையை விசியெறிந்தும், வாள்களினாலே துண்டு துண்டாய்ப்போன தேஹங்களை வாரிக்கொண்டும், அங்குள்ளமலைகளைப் புரட்டிக்கொண்டும் போகின்ற ரத்த

வெள்ளமானது குரங்குப் பிணங்களையெல்லாம் சமுத்திரத்திற் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டது.

கவி.

பணிவென்றபதாகையென்றும் புல்லுளைப்பரிமாவென்றும்
தனுவென்றும்வாளியென்றுந் தண்டென்றுந்தனிவேலென்றும்
சினவென்றிமதமாவென்றும் தேரென்றுந்தெரிந்ததில்லை
அனுமன்றன்வயிரக்குன்றா லரைப்புண்டவரக்கர்தானை.

சகல லோகங்கட்கும் இராட்சசர்களுடைய உபத்திரவத்தை யொழிக்கும்படியாகத் திருவவதாரஞ் செய்த ஸ்ரீயப்பதியாகிய இரகுநந்தனருடைய தூதுவராகிய ஆஞ்சனேயர் தமது கையிற்பிடித்த மலையையொத்த வச்சிரதண்டத்தால் மோதிமோதி யிராட்சசச்சேனைகளை அடித்த காலையில், யாவர்களுக்கும் குளிர்ச்சியைக் கொடுக்கின்றதில் மிகவும் வலம்பெற்ற கொடியென்றும், இவை பிடரிமயிர்களையுடைய பலவகையான குதிரைகளென்றும், இவை வில்லுகளென்றும், இவை அம்புகளென்றும், இவை வாளென்றும், இவை தண்டாயுதமென்றும், இவை கோபத்தையுடைய மதயானையென்றும், இவை தேரென்றும் வேறுபிரித்தறியக் கூடாமற் போய்விட்டன. அங்கதன் ஒரு பெரிய விருட்சத்தைப் பிடுங்கிச் சாடினபோது, அநேகந்தேர்கள் — குதிரைகள் — யானைகள் — இராட்சசர்களென்று சொல்லப்பட்ட அளவிறந்தசேனைகளை யியமனும் சுற்றித்திரிந்து உயிர்களெங்கேனும் தப்பி யிருக்கின்றவைகளோவென்று இரண்டுகைகளினாலும் பிரேதங்களைக் கிளறித்தேடிப் பார்க்கும்படியாக அழிந்துபோய் விட்டன. அக்கா லஷ்டதிக்கிலுள்ளவர்கள் அந்த நாற்றிசைகள்தோறும் நின்று, யானைகள் — தேர்கள் — குதிரைகள் — முதலிய எல்லாவற்றையும் வானரவீரர்கள் சம்ஹரிக்கிற இரணகளத்தைப் பார்த்துத் தேவர்கள் சொல்லிக்கொண்டதாவது: முன்னே அசுரர்கள் நம்முடன் சண்டைசெய்கிறதைப் பார்த்து இன்னார் ஜெயமடைவார்கள்: இன்னார் தோற்பார்களென்று மஹாரிஷிகள் நிச்சயித்துச் சொன்னதுபோல வானரங்களுக்கு ராட்சசர்கள் தோல்வியடைவார்களென்று சொன்னார்கள்.

இப்படியவர்கள் சொல்லிக்கொண் டிருக்கும்போதே இராட்சசர்கள் படையெடுத்துவர, அதைக்கண்டு வானரங்களெல்லா மோட்டமெடுத்தார்கள். வானரவீரர்கள் அதைக்கண்டு அவர்களை யோடவொட்டாமல் தடுத்தார்கள். இராட்சசர்கள் வானரங்களைச் சமுத்திரம்போலச் சூழ்ந்து மடித்தார்கள். அதைப்பார்த்த வானரர்கள் மீட்டும் பயந்து ஓட்டம் பிடித்தார்கள். அப்போதும் வானரவீரர்கள் அவர்களை யோடவொட்டாமல் தடுத்து நிறுத்தினார்கள். பிறகு நீலனென்கிற வானரவீரன் சூலாயுதமும் — மழுவாயுதமும் — கையிலே தாங்கிக்கொண்டு, அஷ்டபுஜங்களுடனே பிரளயகாலத்தில் உலகங்களையெல்லாம் சம்மரிக்கும் உருத்திர மூர்த்தியைப்போல நின்றவிடத்திலேயே நின்று வந்தராட்சசர்களை யெல்லாங் கொன்றுகொண்டே

யிருந்தான். இப்படி யமேகர் உயிர்மாய்வதினால் யமன் தன்கிங்கரர்களுடனே பாசத்தைக் கையிற்பிடித்தபடியே அந்த விடத்தைவிட்டு அப்பாற் போகாமல் நின்று உயிர்களைப் பிடித்துக்கொண் டிருந்தான்.

வேறொருபக்கத்திற் குமுதனென்பவன் வாயுதேவனைப் பார்க்கிலும் — வருணதேவனைக் காட்டிலும் — அதிகமாகவும், அக்கினிதேவனும் சமானமாகானென்று சொல்லும்படியாகவும், ஆயுதமொன்று மில்லாமல், இரண்டு கைகளின் வல்லமையாலேயே செய்கிற யுத்தத்தின் பெருமையை விரித்துச்சொல்ல வேண்டியதென்ன? இயமனும் தன்பதவியை இவன் பிடுங்கிக்கொள்ளுவானென்று நடுங்கிப் பயப்படும்படி தன்கையிலகப்பட்ட ராட்சசர்களையெல்லாங் கொன்றான். மற்றொருபக்கத்தில் இடபனென்கிற வானரவீரனால் வீசியெறிந்த சமுத்திரஞ்சூழ்ந்த பூமியிலுள்ள மரங்களுக்குள்ளும், மலைகளுக்குள்ளும், ஸ்ரீசக்கரவர்த்தித் திருமகனெய்தபாணமூடுருவிப்போன நெருங்கிய கிளைகளையுடைய ஏழுமராமரங்கள் மாத்திரம் பாவர்களுக்கும் அடையாளந் தோன்றுவதற்காக நின்றன. மலைகளில் மேருமலையும் அஷ்ட குலாசலங்களுமே சான்றுநிச்சயத்திற்காக நின்றன. மற்றமரங்களிலும் மலைகளிலும் ஒன்றாவது அவன்கைக்குத் தப்பினவைகளில்லை.

இந்தப்பிரகாரம் எல்லாமரங்களாலும், எல்லாமலைகளாலும், அநேக ராட்சசர்க ளிறந்துபோனார்கள். மதிலிருந் தோடுவதுபோல இரத்தம் குபுகுபென்றொழுகும்படிச் சாம்பவன்பெரிய விருட்சங்களை வீசிக் குற்றுயிராக்கிக் கொல்ல எல்லாராட்சசர்களு மாண்டுபோகின்றதைப்பார்த்து தேவர்களெல்லாம் குதிரைகளையும், மதயானைகளையும், தேர்களையு முடையவராய் வக்கிரதந்தம் வாய்ந்தவாயையுடைய பாம்பினும் கொடியவர்களுமானராட்சசர்கள் ஐயமற்பல்கிப்பெருகுவதனால் உண்டாகிய பயம் இன்றைவரையிலுந்தீரவில்லையென்று பேசிக் கொண்டார்கள். போர்செய்கின்ற குதிரைகளாகிய அலைகளும், தேர்களாகிய கப்பல்களும், மதங்கொண்ட யானைகளாகிய சுறா மீன்களும் பொடிப்போகவும்; நெருங்கிய ஆயுதங்களாகிய மீன்கூட்டங்களெல்லாம் சிந்திச் சிதறிப்போகவும்; கருங்கடலைக் கலக்குகின்ற மத்தைப்போல இராட்சச சேனாசமுத்திரத்தைப் பனசனென்கின்ற வானரவீரன் சின்னபின்னப்படக் கலக்கிவிட்டான்.

மயிந்தனென்கிற வானரவீரனும், அவனுக்கிளையவனாகிய துமிந்தனென்கிற வானரவீரனும், முன்மேகங்களைக் கிழித்துச் சின்னபின்னப் படுத்தி ஆகாசத்திற் பறந்துபோன ஜடாயுராஜனையு மவர்சகோதரனான சம்பாதிராஜனையும்போல விராட்சசர்களை யெல்லாம் சின்னபின்னப்படுத்திவிட்டார்கள். கவயனென்னும் வானரவீரன் இராட்சசக்கூட்டத்தைக் கலக்குகின்ற மதயானையைப்போலானான். கேசரியென்னும் வானரவீரன் நின்றபடியே நின்று, வரிசையாய் வந்த இராட்சசர்களையும் அவர்கள் சேனைகளையும் கொன்றுவிட்

டான். இந்தப் பிரகாரமாக வானரவீரர்கள் முன்வைத்தகாலைப் பின்வையாமல் இராட்சசப்பிணங்களை மலைமலையாகக்குவித்து அட்டகாசஞ்செய்து போர்நடத்துகிறபோது, நடுப்போன வானரக்கூட்டங்க ளெல்லாம்வந்து ஒன்றாய்க்கூடிப் போர்க்குப்புறப்பட்டன. அதைக்கண்டு இராட்சசச்சேனைமுழுமையும் தங்குதல் தரிக்குதலில்லாம லோட்டமெடுத்தன.

இராட்சசச்சேனைகள் மாளக்கண்ட இந்திரசித்து போருக்கெழுதல்.

கவி.

பூணெறிந்தகுடைகளைத்தொளைசெறி புடை…ந்துயாகடல்விந்
தூணெறிந்தவயிரக்கங்கோதையொடு சவெடறிந்தவொருசொழில்படக்,
சேணெறிந்துயிர்இசைசகோரமேல செவ்வெடறிந்தனை யயிடவ்வலோன்
காணெறிந்துமுறைமுன்றதொடக்குகட புலகம்யாவையுநடுக்கினான்.

இந்தப்பிரகாரமாக இராட்சசச்சேனைகள்யாவும் இறந்தவைகளாகவும், ஓட்டமெடுத்தவைகளாகவும், வானரசேனைகள் ஆக்கிரமித்திருந்தவைகளாகவுங்கண்ட இந்திரசித்தானவன் தானொருவனாய் நின்று போர்செய்ய யத்தனித்தான். அபாணத்தூணிகளைத் தரித்த மலையைப்போலத் தோன்ற விரண்டுபக்கத்திலும் பூரித்துயரவும்; பிருந்தபணமுள்ள ஆண்கள்போல நெரித்தவிரல்களிற் றோல்பூட்டி, அந்தவீரனால் ஆகாசமெல்லாம் வெடிபடவும், திக்குகளெல்லாம் செவிடுபடவும், அஷ்டகுலாசலங்களு நெக்குவிடவும், மகாவீரத்தோடு வரிசைவரிசையாக வில்லின் நாணைத்தெறித்தான்; சமுத்திரஞ்சூழ்ந்த லோகங்களையெல்லா …நடுங்கும்படிச் செய்தான். அன்றியும் — சத்தசாகரங்களைப்போல யாவருமதிர்க்கும்படி கர்ச்சனைசெய்து, தன்னுயர்ந்ததேரை வேகமாய்ச் செலுத்தும்படிச் சாரதிக்குத் திட்டஞ்செய்து, அங்கதன் முதலானவர்களெல்லாம் பயப்படவும் — தேவர்களெல்லாந் திக்குக்கொள்ளவும் — அநேகபுத்தியுடையவனுகி, சங்கபாலன் — குளிகன் — பதுமன் — மகாபதுமன் — வாசுகி — அனந்தன் — தட்சகன் — கார்க்கோடகன் — என்று சொல்லப்பட்ட அஷ்டமாநாகங்களும் தங்கள் படங்களிலிருந்து அக்கினியுமிழ்கின்ற விஷங்களைக் கக்கிறது போலதிகவேகமாய் இடியையுந் தோற்கடிக்கும்படியான கொடியபாணங்களை நான்குபக்கங்களிலுந் தூவினான். அதனால் வானரவீரர்கள் சுற்றிலுங் கவிந்துகொண்டு வீசின மலைகளு மரங்களும் அவ்விந்திரசித்துவிடுகிற பாணங்கள்பட்டுப் பொடியாயுதிர்ந்தும் துண்டு துண்டாய் முறிந்தும்போயின.

அப்போது வானரர்களுடைய தலைகள் அநேகமாயறுபட்டு ஆகாசத்திற்போய் சின்னபின்னமாய்ச் சிதறிப் பூமியில்விழுந்து மண்ணிற் புதைந்துபோயின. சில வானரவீரர்கள் இந்திரசித்தனின் வில்லிலிருந்து புறப்படுகின்ற பாணங்கள் போவதைக் கண்டு நடுங்கி, தாங்கள் கோபத்தால் போர்த்தெறியும்படித் தூக்கினமலைகள் தங்களுக்கே பாரமாகும்படி பொடுங்கி நின்றுவிட்டார்கள். சிலவானரவீரர்கள் முந்திப்போய் நெருங்கினபோது, அவர்கள் கொண்டுபோன மலைகளும் அவர்களுடையமார்பு முறிந்துவும்படியாக இந்திர

சித்துவின் பாணங்கள் நுழைந்தன. ஒரு முகூர்த்தகாலத்துக்குள் ஒருவெள்ள வானரர் நாசமாண்டனர். சிலவானரவீரர்கள் வானரர்களின்கழுத்துகளும், கைகளும், கால்களும், வால்களும், அநேகந்துண்டங்களானதைக் கண்டு, உருக்குஸ்தம்பம்போன்ற தோள்களினாலே முட்டியும், கைகளாற் குத்தியும், உயர்ந்த மூங்கில்கள் வளர்ந்திருக்கின்ற பெரியமலைகளைப் பேர்த்தெறிந்தும், தாமுமந்தமலைகளுடனே பூமியில் விழுந்துபோய் விட்டார்கள். வானரர்களுடைய தலைகளை அரிந்துகொண்டுபோன இந்திரசித்துவினது உஷ்ணமிகுந்த பாணங்கள் புற்றில் நுழைந்த நீண்ட பாம்பைப்போல நாகலோக மடைந்துவிட்டன. இரணங்கள முழுவது மேபள்ளமில்லாமல் வெற்றுவெளியா யிருந்தபடியால், அதிற் பாய்ந்த வானரரத்தமானது ஒரு சமுத்திரத்துக்கொப்பா யிருந்தது.

இந்திரசித்துவினு லெய்தபாணங்கள் வானரர்கள் விழித்துப்பார்த்தால் அந்தவிழியிற் பாய்கின்றன. எதிர்பார்த்தாலும் அவர்களுடையமார்பிற் பாய்கின்றன. திரும்பி யோடுவார்களேயானால் முதுகிற் பாய்கின்றன, ஆகாசத்திற் பாய்ந்தார்களானால் அவர்கள் மேனியைக்கிழிக்கின்றன. இப்படி யவர்கள் கைகால்களை அசைத்தாலும், வாயாற்பேசினாலும், மனதால் நினைத்தாலும், அந்தந்த அவயவங்களிற் பாய்கின்றன. இந்தப்பிரகாரமாக மலைகளையொத்த தேகங்களையுடையவர்களான வானரர்களினுடல் முழுவதும் இந்திரஜித்துவின்பாணங்கள் நுழைந்தன. நெருங்கிவருகின்ற பாணவருஷத்தால் மூடப்பட்ட இடத்தைக் கண்டார்களேயல்லாமல், வெறுமையா யிருக்கிறவிடத்தை ஒருவரும் அறியார்கள். அஸ்திரப்பிரயோகம் செய்யும்போது தெறிக்கின்ற வில்லினோசையே யல்லாமல், வேறொன்றையும் கேட்கவில்லை. வானரர்களென்று பேரெடுத்த சேனைகளெல்லா மாண்டுபோய் விழுகின்றனவென்று துக்கிக்கின்ற அவ்வானரசேனையின் வீரர்களைப் பார்க்கினும், தேவர்களதிகமாய்க் கலக்கமடைந்தார்கள்.

இந்திரசித்துடன் சுக்கிரீவன் போர்புரிந்துமெலிதல்.

கவி.

கண்டவானர மனந்தகோடிமுறை கண்டமானபடி கண்டவக்
கண்டன்மாவொருவ ரின்மைகண்டுபிணை மாறினுன்விடே லின்மையாக்
கண்டகாலையில் விலங்கினுனிரவி காதல்காதலதொர் காதலால்
கண்டகாரிதைய மீதுயர்ந்தெழிர் மராமரந்தலவு கையினுன்.

இந்தப்பிரகாரமாக வானரர்களெல்லாம் அநேக கண்டதுண்டங்களானமையைக்கண்ட அந்தத்துஷ்டனான இந்திரசித்தானவன், தன்னோடெதிர்த்துவரத்தக்கவர்கள் வேறொருவரு மில்லாமையாற் பாணப்பிரயோகஞ்செய்யாமலிருந்தான். அப்போது சூரியகுமாரனான சுக்கிரீவமகாராஜன் இந்திரஜித்துவோடு சண்டைசெய்ய வேண்டுமென்கிற ஆசையால் ஆகாசத்திற் பரவியிருக்கின்ற மேகங்களெல்லாம் சின்னபின்னப் படும்படி உயர்ந்திருந்த ஒரு மரா

மரத்தைப்பிடுங்கி, அவன் தன் சேனைகளெல்லா மாண்டு உயிரழியும்படிப் போர்செய்ததனால், திருப்பாற்கடலைக் கடைந்து தேவாமிர்தங்கொண்ட வாலியைப்போல் மிகவும் கோபித்தவனா யவ்விந்திரஜித்துவைக்கிட்டி, அவனுக்கு உபபலமாகவந்து சூழ்ந்துகொண் டிருக்கின்ற சேனாசமுத்திரமெல்லாம் கால்தளர்ந்து பின்னிட்டோடும்படி அம்மராமரத்தைக் கிறுகிறுவென்று சுற்றியடித்தார். அதைக்கண்ட இராக்ஷசவீரர்களெல்லாம் பயந்து நடுங்கினார்கள். இப்படிச் சுக்கிரீவமகாராஜன் ஒரு மராமரத்தைக்கொண்டு தன்னைச் சூழ்ந்துநின்ற இராக்ஷசப்படைகள் சின்னபின்னப்பட்டோடத் துவம்சம்பண்ணுகின்ற வீரத்தை இந்திரஜித்தானவன் கண்டு, சபாஷ்! நல்லவீரன்; நல்லவீரனென்று ஆச்சரியப்பட்டு, அதிவேகமாய்ச் சுக்கிரீவமகாராஜனுடைய நெற்றியிலிரண்டு பாணமும் — மார்பில் அஞ்சுபாணமும் — விஷத்தைப்போல வெய்து, அவர்கையிற் பிடித்திருந்த மராமரத்தையும் துண்டுதுண்டாய்நொறுக்கிப் பொடியாக்கிவிட்டான்.

இந்திரசித்துடன் ஆஞ்சநேயர் போராடி மெலிதல்.

கவி.

அக்கணத்தனும னாலகாலமென லாயதோர்வெகுளி யாயினுன்
புக்கனைத்துலக முங்குலுங்கநிமிர் தோள்புடைத்துருமு போலுரு
இக்கணத்தவ னிறக்குமென்பதொரு குன்றெடுத்துமிசை யேவினுன்
உக்கசக்கிரி சொரிந்தவாளிகளி னூழிலாதசிறு பூழியாய்.

இவ்வண்ணம் இந்திரசித்தென்னும் இராட்சசப்பாதகனாகிய சண்டாளன் இராமசுவாமியின் துணைவனாகிய சுக்கிரீவமகாராஜனைத் தோற்கடித்ததைக்கண்ட ஆஞ்சனேயர் அதைச்சகியாது அந்தக்ஷணத்திலேயே ஆலகாலவிஷம்போலக் கோபங்கொண்டு புகுந்து, உலகங்களெல்லா நடுங்கும்படித் தமது தோளைத்தட்டி யிடிபோலக்கர்ச்சித்து, இந்தக்ஷணமே இந்திரஜித்து இறந்துபோவானென்று யாவரு நினைக்கும்படியாக ஒருபெரியமலையைப் பேர்த்து அவன்மீது எறிந்தார். அஃதவன் பிரயோகித்தபாணங்களினால் தூள்தூளாய்ப் பறந்துபோய்விட்டது. அப்போது இந்திரசித்து ஆஞ்சநேயரைப் பார்த்து, அடா வானரமே! சற்றே நில்லு: சற்றே நில்லு: உன்னை நினைத்துக்கொண்டுதான் நான் சண்டைக்குவந்தேன். கையில் வில்லெடுக்காமல் உன்வீரத்தை வாயினாற்சொல்லி விளையாடிக்கொண் டிருக்கின்றாய். இந்த மலைகளைக்கொண்டு மரங்களைக்கொண்டுமா என்னை ஜெயிக்கப்போகிறாய். என்றுசொல்லி அட்டகாசஞ்செய்தான். அதைமேருமலையல்லாமல் வேறொன்றுடனும் சமானப்படாத திருத்தோள்களையுடைய ஆஞ்சநேயர்கேட்டு, அடா அற்பனே! வில்லெடுத்துச் சண்டைசெய்ய உரியவர்கள் வேறே இரண்டு வீரசிகாமணிக ளிருக்கின்றார்கள். அதை இன்றைக்கோ நாளைக்கோ பார்க்கப்போகிறாய். நாங்கள் மலையு மரங்களுமெடுக்கத்தக்கவர்களா யிருக்கின்றோம்.

அடா எனதெரியுண்டவாலுக் கிடியுண்டுபோன ஈனனே! பிரகாசிக்கின்ற பலவாயுதங்களையெடுத்துக்கொண்டு வந்த இந்திரன் முதலானபேர்கள் தம்முயிரைப் பெரிதாகக்கொண்டு உனக்குத் தோற்றுப்போவார்கள். நாங்களவ்வுயிரை லகுவியஞ்செய்து கையிலே புல்லெடுத்துக்கொண்டு வந்தவர்களல்ல. நாங்களுமுன்னோடு சிலயுத்தம் செய்யத்தான் வந்திருக்கின்றோம். உனக்குஎன்னோடுசண்டைசெய்ய விருப்பமா? அல்ல இலட்சுமணனென்கிற திருநாமமுள்ள எங்களாண்டவருடனே சண்டைசெய்ய விருப்பமா? இவ்விரண்டுமில்லாவிட்டால் உங்களப்பனான இராவணனுடைய தலைகளைவெட்டித்தள்ளவெழுந்தருளியிருக்கின்ற மகாவீரராகிய சக்கரவர்த்திப் பிரானுடனே போர்செய்ய விருப்பமா? நீயெப்படிக் கேட்டாலு நாங்கள் தடைசொல்லமாட்டோம். அப்படியேசெய்வோம், என்று சொல்லவும் அதுகேட்ட இந்திரஜித்தானவன் குலுங்கநகைத்து, அப்படியானால் நீசொன்ன அந்தலட்சுமணனெங்கேயிருக்கின்றான்? அந்தவற்ப பலவான் என்தம்பியாகிய அதிகாயனென்கிற சிங்கக்குட்டி வந்தால் அவனைக்கொன்று, தன்னுயிரை என்வில்லிற் கிரையாகவைத்திருக்கின்ற கீர்த்திமானனாகியவனோடு சண்டைசெய்து அவனைக் கொன்று என்கோபந்தணிய வந்தேன்.

அடாநராதமனே! என்சேனைகளையெல்லாம் அப்பாற்போகச் செய்துவிட்டு, இவ்வுலகங்களையெல்லாம் ஒடுக்கிவிடும்படியானநான் என் வில்லை வளைத்து இவ்வாறே தேரிலிருந்து உங்களையெல்லாம் தலையறுத்துவிடப் போகிறேன். இதுசத்தியம். எல்லாரும் வாருங்கள். உங்களுடனே தேவர்களையும், இந்தப் பூலோகத்திலுள்ளவர்களையும், உங்களுக்கு உபபலமாய் அழைத்துக்கொண்டுவரலாம். இன்றைப்பகற்பொழுதுக்குள்ளே ஜெயம்பெற்றுவிடுகிறேனென்று சொல்லித் தொளாயிரம் பாணங்களை வில்லிற்பூட்டி அநுமான்மீது பிரயோகம் செய்தான். அவைகள் மேருபருவதம்போல நின்றிருக்கின்ற அவ்வாஞ்சநேயர் மேனிமுழுவதும் கும்பற் கும்பலாகப்போய்த் தைத்த மாத்திரத்திற் பல்லைநெறநெறவென்று கடித்து, அதிக கோபத்துடனே பக்கத்தில் நிற்கின்ற ஒரு பிரம்மாண்டமான மலையைத் தூக்கிக்கொண்டுபோய் இந்திரசித்துவுக்கு முன்பாக நின்று கொண்டு சொல்லுகின்றார்.

அடா துஷ்டராவணனுடையசிசுவே! உலகத்தில் யானைகளெவ்வளவுண்டோ அவ்வளவுமொன்றாய்க்கூடினாலும், தன்னிலோடுங்கால்களையுடையசிங்கமொன்றுக்கு முன்னின்று அதைவெல்லுமா? எங்களாண்டவராகிய ஸ்ரீராமச்சந்திரருடையதிருத்தம்பியார் வருமளவும் நீ நிற்கமாட்டாய். நீ அஸ்திரப்பிரயோகம் செய்வதற்குள்ளாக முந்தி இஃதுன்னுடைய பிராணனையுண்டுவிடும். நீயுன் வில்வல்லமையாற் காக்கக்கூடுமானாற் காத்துக்கொள்ளடா பார்க்கலாமென்றுசொல்லி அஞ்சநேயர்விட்ட மலையானது அஷ்டதிக் கஜங்களினுடைய தந்தங்கள்பதிந்த திரண்டதோள்களையுடைய இராவணன்மகனான இந்திரஜித்

துவின் மார்பில் தரித்திருக்கின்ற வச்சிரகவசத்தில், ஒரு மலைமீதுமற்றொரு மலை தாக்குண்டதுபோலவும், நெருப்பில்வைத்த இரும்பு சம்மட்டியாலடித்தபோது பொறிப்பொறியாய்ச் சிதறிப்போவதுபோலவும், உடைந்து படிந்து மாவாகி நான்குபக்கங்களிலும் சிதறிவிழுந்தன.

இப்படி அநுமாராலே எறிந்தமலை மேலேவிழுந்து சிதறிப்போனதைக் கண்டு கோபங்கொண்ட சிம்மத்தைப்போன்ற வஞ்சகனாகிய இந்திரசித்தானவன் அதி உக்கிரமான செருக்குடனே ஆக்கிரமித்து, உலகத்தை மேருமலையுடனே பேர்க்கத்தக்கவரான வாயுபுத்திரராகிய அவ்வநுமானுடைய வெற்றிமாலையைத் தரித்திருக்கின்ற மார்பிலும் தோளிலும் உருவத்தக்கதாக ஆயிரம்பாணங்களைக் கொண்டு அழுத்தினான்.

இந்திரசித்துடன் நீலன் போராடி மெலிதல்.

கவி.

ஒன்றுபோல்வனவொராயிரம்பகழி யூடுபோயுருவவாடகக்
குன்றுசால்குடையமேலுயர்ந்திடை குலுங்குகின்றனைகொள்கையான்
மன்றறைந்ததடமேனிமேலுதிர வாரிசோரவருமாருதி
நின்றதேறுமளவின்கண்வெங்கண்விழி நீலன்வந்திடைநெருக்கினான்.

இந்தப்பிரகாரமாக இந்திரசித்தென்னும்பாதகன் பிரயோகித்த ஒவ்வொன்றும் ஒன்றைப்போற்கூர்மையும், வேகமும், வருத்தஞ்செய்பவையும், கொடுமையும்பெற்று விளங்குவனவாகிய ஆயிரம்பாணங்களும் சல்லடைக்கண்களாகத் துளைத்துருவ, பொன்னிறம்பெற்ற மகமேருகிரியானது சண்டமாருதமசைக்க அசைந்து குலுங்குவதைப்போலநடுங்கி, வாசனைவீசிப் பருத்ததேகத்தில் இரத்தப்பிரவாகம் பெருக ஆஞ்சநேயர் சற்றுத்தளர்ந்தனர். அப்படி தளர்ந்தவராகிய அநுமார் அச்சிரமபரிகாரம் பண்ணிக்கொள்வதற்குள்ளாக கோபக்கண்களையுடைய அதிபலாட்டியனான நீலனென்கிற வானரவீரன் வந்து இந்திரஜித்துவை நெருங்கி, ஒரு நீலமலையைத் தனது பெரியகையினாற் பேர்த்து அவ்விந்திரசித்துவின்மீது ஆகாசத்தில் அக்கினிசெல்வதுபோல அதிவேகமாய்ப்போய் விழும்படி எறிந்தான். உடனே யமனைநிகர்த்த சூலத்துக் கொப்பான அந்தமலை க்ஷணகாலத்துக்குள் வந்தது தெரியாமற் சிந்திச்சிதறிப்போகும்படி, வலியவில்லையுடைய அவ்விந்திரஜித்தானவன் அனேகவம்புகளைக்கொண்டு உடைத்து, வானரங்களின்மீதும் சிலபாணங்களை விட்டான்.

இப்படி அக்கினியும்பயங்கொள்ளும்படியான வாயையுடைய சர்ப்பசாலங்களுக் கொப்பான இந்திரசித்தினுடைய பாணம் பாயும்போதெல்லாம் உயிரோடுநின்ற வானரங்கள் திக்குத்திசை தெரியாமல் ஓட்டம்பிடிக்கவும், தேவர்களுடையமனமும் பீதியடையவும், மேருமலையினுமுன்னுயர்ந்தபலமுள்ள நீலனுடைய தேகமெல்லாம் சல்லடைக்கண்கள்போலத் திறந்துபோகவும், அவற்றிலிருந்து ரத்தப்பிரவாக மொழுகவும் மயங்கிப்போய் நீலன் கிடுகிடென்று தேகநடுங்கினான்.

இந்திரசித்துடன் அங்கதன் போராடி மெலிதல்.

கலி.

மேருமேருவெனவல்லதல்லதென வேரினோடுமெடுவெற்பெலா
மாரின்மேலுமுயர்தோளின்மேலுமவ வாலிகாதலன்வழங்கினான்
சேருமேயவைதனுக்கைகிற்கவெதிர் செல்லுமோ படுமெசெல்லினும்
பேருமேபொடியவாளியான்முறி பெறுச்சலாவவைநுறுக்கினான்.

அப்போது வாலி புத்திரனான அங்கதகுமாரன் தன்னைப்பார்த்த பேர்களிற் சிலர் மேருதான்; மேருதான்; என்று சொல்லவும், சிலர் யூகித்து அதுவல்ல: அதுவல்ல: என்று சொல்லவும், அங்கேயுள்ள மலைகளையெல்லாம் வேரோடுபிடுங்கி இந்திரஜித்துவின் மார்பின்மேலும் தோளின்மேலுமாகக் குறிப்பிட்டு எறிந்தான். "அவைகளெல்லாம் இந்திரசித்துவின்கையில் வில்லிருக்கிற பரியந்தம் கிட்டிச்சேருமோ? அல்லது நடுவேதான் வருமோ? அப்படிவந்தபோதிலும் தப்பிப்போய் விடுமல்லவா? உடனே யவ்விந்திரசித்தானவன் தனது கொடிய பாணங்களினால் அவ்வங்கதன்விட்ட மலைகளையெல்லாம் பொடிப்பொடியாய் நொறுக்கிவிட்டான்.

இப்படி யவ்வங்கதன்விட்ட மலைகளெல்லா நொறுங்கிவிட்டது மாத்திரமா? அவனுடைய நெற்றியின்மீதும், உயர்ந்த தோளின்மீதும், நீண்டமார்பின்மீதும், மற்றக்கால்கள் முதலிய உறுப்புகளின்மீதும், புற்றில் நுழைகின்ற சர்ப்பத்துக்கொப்பாக அவ்விந்திரசித்துவினது புகைகின்ற பாணங்கள் நுழைய நுழைய; அவ்வங்கதகுமாரனும் அலைந்தலைந்து பல்லைக்கடித்துக் கைகளைப்பிசைந்து, கண்களில் நெருப்புப்பறக்க வாட்டமுற்று, இரத்தம் வழியமயங்கிப் பூமியிற் சோர்ந்துவிட்டான். அப்படியே மற்றவீரர்களுடைய மார்பின்மேலும், தோள்களின்மேலும், மழைத்துளிகளைப் போலக் கொடிய பாணவருஷங்களைத் தைத்தபடியால்; அவர்களெல்லாரும் உடல்நடுங்கி, வேர்த்து வாட்டமுற்றவரானார்கள். அப்போது வானரசேனைகளும் வெருவாய் மாண்டன. மற்ற உயிருள்ளவைகளாயிருந்த வானரங்கள் நாலுதிக்குகளிலும் ஓடிவிட்டன.

அப்போது இளையபெருமாள் அவ்விந்திரசித்தினுடைய வீரத்தன்மையைக்கண்டு மனங்கொதித்து, கண்களில் அக்கினி ஜொலிக்கும்படியாக விபீஷணாழ்வாரைப்பார்த்து, ஓ விபீஷணரே! இந்தத் துஷ்டனை நான் மாத்திரமாய் நின்று கொல்லாமல் நம்முடைய வானரவீரர்களையெல்லா மழைத்து ஓடிப்போனவர்கள்போக நின்ற வானரவீரர்களெல்லா மிவ்வளவு பெருஞ்சேனைகளுடனே இரத்தவெள்ளத்திலழுந்து மாண்டு போகும்படியாகச் செய்தது பெருந்தப்பிதமாய் முடிந்ததே: என்று சொல்லவும் அதுகேட்ட விபீஷணாழ்வார்-ஸ்வாமி! அது மெய்தான்: இந்தச் சண்டாளனுக்கு முன்பாக அநேககோடிதேவர்கள் யுத்தத்திற்குவந்து சேர்ந்து இவனம்பிலகப்பட்டுப் போனார்களே யல்லாமல், இவனை அவர்கள் ஒன்றும் செய்யவேயில்லை. தேவ

ரீர் இவனைக் கொன்றாலல்லாமல், அடியேங்களும் இந்த உலகமும் பிழைக்க மாட்டோம். ஆதலாலடியேங்களுக்குத் தேவரீரே பிராணபிக்ஷை கொடுக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார்.

இலட்சுமணர் இந்திரஜித்துவின் முன்னணிப்படையிலிருந்த சேனைகளை மடித்தல்.

கலி.

என்பதுசொல்லக்கேட்ட விந்திரவில்லினோடும்
பொன்பொருமேகமொன்று வருவதுபோல்சென்றானை
முன்பனைமுன்புநோக்கி யென்கொலாம்பரதன்முன்னோன்
தன்பெருந்தம்பியென்று ஞெமனச்சாரன்சொன்னான்.

அதைக்கேட்ட இளையபெருமாள் இந்திர தனுசுடனே வருகிற ஸ்வர்ணமய மேகத்தைப்போல இந்திரஜித்துவுக்கு முன்பாகவந்து நின்றார். அவரைப்பார்த்த ராவணகுமாரன் சாரனைநோக்கி, இவன்தானு பரதனுக்குத் தமயனான ஸ்ரீராமனுடைய தம்பியென்று கேட்க; அதற்கவன் இவன்தான் நீர் கேட்ட இலட்சுமணனென்றுசொல்ல, அதைக்கேட்ட அந்தத்துஷ்டன் இளையபெருமாள்மீது யுத்தத்திற் காரம்பிக்கு முன்னமே அவன் பின்வந்த சில ராக்ஷசவீரர்கள் இளையபெருமாளைப்பார்த்து, ஓ பிள்ளாய்! நீ எங்கள் ராஜகுமாரனான அதிகாயன் ஒன்றியாய்வா அவனைக் கொன்றுபோட்டாயல்லவா? இப்போது எங்கள்கூட்டத்தில் அகப்பட்டுக்கொண்டாய். எங்கள் கண்முன்னகப்பட்டு இனியெங்கே தப்பிப்பிழைக்கப்போகிறாயென்று சொல்லி, அந்தநூறுகோடி ராக்ஷசர்களும் கண்களில் அக்கினிசொரிய அடர்ந்து, தங்கள் ரதங்களையும் – நடனம்பண்ணுகின்ற குதிரைகளையும் – யானைகளையும் – அதிவேகமாகச் செலுத்திக்கொண்டுவந்து நெருங்கி, இலக்ஷுமணரைச் சூழ்ந்து மூடிக்கொண்டார்கள்.

அப்படிச் சூழ்ந்துகொண்டவர்களையெல்லாம் ஸ்ரீராமருடைய திருப்பாதுகைகளைத் தமது திருமுடியில் தரித்துக்கொண்டிருக்கின்ற பரதாழ்வாருடைய திருத்தம்பியான இளையபெருமாள் கிரமக்கிரமமாகத்தொடர்ந்து, அவர்கள் தேர்களையும் – குதிரைகளையும் – யானைகளையும் – பதாதிகளையும் – முடிவில்லாராக்ஷசர்களையும் – துண்டுதுண்டாக்கி வெற்றிமாலையைத் தரித்தார். அப்போது சப்தலோகங்களும் கிடுகிடாய்த்து நடுங்கின. இளையபெருமானுடைய அஸ்திர வர்ஷத்தியால் இடிவிழுந்து மணல்களா யுதிர்வதுபோல மலைகளுதிர்ந்தன பூமியும் பாளம்பாளமாய் வெடித்தது. அதுவுமன்றி கிடக்கின்ற இராக்ஷசப் பிரேதங்களின்மீது ஆகாசத்திலெழும்பிப்போன தலைகள் பலபலவென்று சிந்தின. இரத்தப் பிரவாகங்கள் நாலுபக்கங்களிலும் ஓடின. தேவர்கள் கைகளை விரித்தார்கள். இப்படியாகக் கொடிய சண்டையை விளைக்கும் அவ்விலட்சுமணர் பிரயோகித்த பாணங்கள் வேகமாறாமல், தூரத்

தில் யுத்தசன்னத்தர்களா யிருந்த இராக்ஷசவீரர்களுடைய மார்பிலும் பட்டுருவின.

சிலபாணங்கள் உலகமுழுமையும் பரவின. சிலபாணங்க ளிராக்ஷசர்களுடைய விருதுக்கொடிக் கம்புகளைக் கட்டெறிந்தன. சிலபாணங்கள் குதிரைகளையெல்லாம் துணித்தன. சிலபாணங்கள் யானைகளையெல்லாம் கண்டம்கண்டமாயறுத் தெறிந்தன. சிலபாணங்கள் யமனைப்போலக் கண்டகண்ட ராக்ஷசர்களையெல்லாம் கொன்றன. இந்த யுத்தத்திற் சாகின்ற ராக்ஷசர்களையெல்லாம் கணக்கிடவேண்டுமென்று வந்த தேவர்கள் பொறிகலங்கிமுடிவுகாணமாட்டாமல், ஒருவராலும் தடுக்கமுடியாத அஸ்திரவருஷங்கள் செய்கின்ற செய்கையை நினைத்து, இலட்சுமணருடைய வில்லினிடத்தில்தானோ சப்தமேகங்களு மழைவருஷிக்கக் குடிகொண்டனவென்று ஆச்சரியப்பட்டார்கள். இலட்சுமணர்விட்ட பாணங்களில் ஒவ்வொருபாணம் யானைக் கூட்டங்களின் பந்திகளில் நுழைந்து, அந்தந்தவரிசை யானையின் தலைகளையெல்லாம் அறுத்துக் குப்பற்குப்பலாய்க் குவித்து விட்டது.

மேலும் — மலைக்குச் சமமாகவந்து சுற்றிக்கொண்டிருக்கின்ற கர்ச்சனையையுடைய அந்தந்த யானைவீரர்களோடு சேர்ந்து வந்திருக்கின்ற சேனைபாராக மெவ்வளவுண்டோ? அவ்வளவு இளையபெருமாளுடைய பாணத்தொகைகள். அப்பாணங்கள் கணக்காகத்தானே வில்லின்கண்ணினின் றெழுந்த தோற்றத்திற் பருத்தஆகாரமுள்ளவைகளும், மாட்டுக்களையேயுண்டு திரிகின்றவைகளும், பக்ஷிகளைப்போலச் சிறகுகளை விரித்துப் பறக்கின்றவைகளுமாயின. இப்படிப்பட்டபாணங்கள் தேவர்களும் திகைத்துப்போகும்படி காணப்பட்டு, ஆகாசமுழுவதும் வெளியில்லாமல் மறைத்து கழுகுப்பக்ஷியைப்போலச் செத்தராக்ஷசப் பிணத்தின்மீது பற்றிப் படிந்துகொண்டிருந்தன. இந்திரஜித்துவினால் மாண்ட வானரசேனைகள் முப்பத்தைந்து வெள்ளத்திற்கு மேலாக இரணகளத்தில் விழுந்துகிடக்க, அவைகளை மலைபோன்ற தலைகளெல்லாம் அறுக்குண்ட வஞ்சகர்களான இராக்ஷசர்களுடைய தேகங்கள்மூடி மறைத்துக்கொண்டன. இரத்தவெள்ளங்கள் அவைகளை அடித்துக்கொண்டோடிச் சமுத்திரத்திற்போய் விழுந்தன.

இராக்ஷசர்களில் அனேகர் கையற்றார்கள். அனேகர் காலற்றார்கள். அனேகர் கழுத்தற்றார்கள். அனேகர் சுவாசமற்றார்கள். அனேகர் கவசம்பூண்ட மார்புமற்றார்கள். அனேகர் வயிறுகிழிந்து குடல்களற்றார்கள். அனேகர் ஓடிவந்த வேகமற்றார்கள். அனேகர் ஒருவரையொருவர் கூப்பிடவும் சக்தியற்றார்கள். அனேகர் கொண்டுவந்த மதத்தயானைகளும் — தேர்களும் - குதிரைகளும் - மற்றவைகளுமிழந்து, தாங்கள் மாத்திரம் தப்பிப்பிழைத்துப் புகலிடந்தேடி யோடிப்போனார்கள்

இந்திரஜித்து ரதாரூடனாயும் இலக்ஷ்மணர் ஆஞ்சனேயரின் புஜாரூடராயும் யுத்தஞ்செய்தல்.

கவி.

வற்றியகட லனின்ற மலையெனமருங்கின்யாரும்
சுற்றினரின்றித்தோன்றுந் தசமுகன்றோன்றறன்னைத்
தெற்றினபுருவத்தோன்றன் மனமெனச்செல்லுந்தேரான்
உற்றனனிளையகோவை யனுமனுமுடன்வந்துற்றான்.

இப்படி வற்றினகடலிலிருந்த மலையைப்போலத் தன்னைச் சூழ்ந்திருந்த எல்லாருமாளத் தான்மாத்திரமாயிருந்த இராவணன் புத்திரனான இந்திரஜித்து அதிகோபத்தால் அடிக்கடி புருவத்தை நெரித்து, தன்மனம்போல அதிவேகமாய் போகும்படியான தேருடனேவந்து இளையபெருமாளை எதிர்த்தான். இதற்குள் ஆஞ்சநேயரும் மூர்ச்சைதெளிந்து இளையபெருமாளை வந்து சேர்ந்து, ஸ்வாமி! அடியேன் தோளின்மீது தேவரீர் எழுந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார். அம்மாத்திரத்திற் சிம்மம்போன்ற பலவந்தரான இளையபெருமாளும் அப்படியே யேறியருளினர். அதைக்கண்ட தேவர்களெல்லாம் பல்லாண்டுகூறினார்கள். உடனேயவ் விருவரும் காளியைப்போலொத்தவைகளும், யமனைப்போற் கொல்லுகின்றவைகளும், அக்கினிக்குச் சமானமாகிய அதிவுக்ரமுள்ளவைகளுமான பாணங்களை ஒருவர்மே லொருவர் மேகத்தின்மீது மேகமெதிர்த்து மழையை வருஷித்தாற்போலப் பொழிந்தார்கள்.

இருவரும் தங்களுடைய வில்லில் இடியிடித்தாற்போலக் குணத்தொனிபண்ணினார்கள். அவைகளின் சத்தத்தினால் திக்குகளையும் செவிடுபடுத்திவிட்டன. அஷ்டகுலாசலங்களும் பக்ஷபத்தனாய் வெடித்துப் பிளந்துவிடுவதுபோலாயின. ஆகாசமெல்லாம் பொதிபெழும்பின. உலகமுழுவதும் அக்கினியைக் கக்கிக்கொண்டு ஒருவர்பாணங்களை ஒருவர்பாணங்கள் கூர்மையான வாயாற் கவ்விக்கடித்துக்கொண்டது. ஒருவர்விட்ட அம்பை ஒருவர்விட்ட அம்பு அறுக்கமாட்டாமல், அக்கினிப் பொறிகளைச்சிதறி ஆகாயமார்க்கத்தில் வெந்துகரிந்துவிழுந்தன. அதைக்கண்ட தேவர்களும் முனிவர்களும் பயந்து ஏங்கிப்போனார்கள். உலகமெல்லாம் அதிர்ச்சியுற்றன. கடல்பொங்கி மேலெழும்பியது. அண்டமெல்லாம் கடல்கலங்கினது போலக் கலங்கின.

அப்போது சிம்மங்கள் பூட்டின இந்திரஜித்துவின்தேரும், இளையபெருமாளைத் தாங்கும் வாயுபுத்திரனாகிய அனுமானும், அனேகவிதமாகச் சாரிகைகளே இலங்காபட்டணம் முழுவதும் நிறைந்தன வென்று சுற்றின. அக்கினிமுகாஸ்திரங்களாகிய ராக்ஷசர்களை யெல்லா மறைத்துக்கொண்டிருந்தமையால், இளையபெருமாளும் - இந்திரஜித்துவும் - இருக்கின்றார்களோ? இல்லையோ? என்று தேவர்களு மதிமயங்கிப்போய்விட்டார்கள். பாணப்பிரயோகங்களைக்கண்டு தனுர்வேதசாஸ்திரம் ஒருமுறைமயிர்க்கூச் செறிந்திருக்கும். இவர்களிற்

றெடுக்கு மதிலுணங்கள் அச்சாஸ்திரத்தி லடங்கினதன்று. அவர்களின் கைவசிக் கிளவிசாமர்செய்த யுத்தசாமர்த்தியத்தை எவ்வண்ண மன்றுகூறுவது. இவ்விரண்டுவீரர்களுடைய பலத்தைக்கண்ட தேவர்களாதியோர் முடிவில் ஆகாயத்திலும் பெரியதாகுமென்றுசொல்லி, இவர்கள் வல்லமையான செய்கையைப் பார்க்கமுடியாதென்று காட்சிப்பிரமாணத்திற்கும் சந்தேகம் புகட்டினார்கள்.

இவ்விரண்டு பேர்களுடைய செய்கைகளையும் பார்த்த கற்பகப்பூமாலையுள்ள கிரீடங்களைத் தரித்த இந்திராதி தேவர்களெல்லாம் ஒன்றுகக்கூடி, இவர்களிப்போது என்னசெய்தார்கள்? முன்னென்ன செய்தார்கள்? என்றொருவரையொருவர் வினவுவார்கள். அன்றியும் தங்களிலிப்படி முன்யுத்தஞ்செய்தவர்கள் யாரென்று கேட்பார்கள். முன்னே இப்படி யுத்தஞ்செய்தவர்களுமுண்டோ? இனிமேலுமிப்படி யுத்தஞ்செய்யப்போகிறவர்களுமிருக்கின்றனரோ? இப்படி யுத்தத்திற் பயங்கரத்தை யுண்டாக்குகின்ற இன்னவீரர் இன்னதிசையி லிருக்கின்றாரென்று தெரியவில்லையே; என்று மயங் கினைத்தார்கள். இப்படியவர்கள் செய்கிற ஒரு செய்கையையாவது அந்தத் தேவர்களும் உணர்ந்தவர்களல்லர்.

இப்பால்-வக்கிரதந்தங்களையுடைய இந்திரஜித்து ஆயிரகோடி பாணங்களைப் பிரயோகித்தான். இளையபெருமாளும் ஆயிரகோடி பாணங்களைத் தொடுத்து அவைகளை யறுத்துத் தள்ளினார். இந்திரஜித்து ஆயிரகோடி காகபாணத்தை யெய்தான். இலட்சுமணர் ஆயிரகோடி கருடபாணங்களால் அவைகளையும் அறுத்தெறிந்தார். இந்திரஜித்து கூட்டங்கூட்டமாகக் கோடிகோடி அம்புகளைத் தொடுத்தான். ஸ்ரீமுகுந்தனதம்பியும் கூட்டங்கூட்டமாகக் கோடிகோடி அம்புகளைவிட்டு அவைகளைக் கொய்துவிட்டார். இராவணபுத்திரன் மறுபடியும் ஒருகோடிகோடி வாளிகளை அதிகவேகத்துடனே எவினான். வீரகோமளியாகிய இளையபெருமாளு மறுபடியும் ஒரு கோடிகோடி வாளிகளைக்கொண்டு அவைகளைத் தடுத்துவிட்டார். இந்திரஜித்து கோடி கங்கபத்திரக் கணைகளைப் பிரயோகித்துவிட்டான். இளையபெருமாளும் கோடி கங்கபத்திரக் கணைகளைக்கொண்டு அவைகளைத் துண்டாக்கிவிட்டார்.

இலட்சுமணர் கோடி அர்த்தசந்திர பாணங்களைப் பொறுக்கிப் பிரயோகித்தார். இந்திரஜித்துவும் கோடி அர்த்தசந்திர பாணங்களினால் அவைகளை நீக்கிவிட்டு, மீட்டும் கோரைத்தலையம்புகளைக் கோடிகோடியாகத் தொடுத்தான். தசரதகுமாரரும் அவ்வித கோரைத்தலை யம்புகள் கோடிகோடியெய்து அவைகளைத் துண்டாக்கி வெட்டிவிட்டு, மீட்டும் கோடி மொட்டம்புகளை அனேகம் தடவைகளாகப் பிரயோகித்து நிறைத்துவிட்டார். இந்திரஜித்தும் கோடி மொட்டம்புகளை யாவருங்கண்டுபயப்படும்படி எய்து, கமலமுகப்பாணங்களை அரைக்ஷணத்துக்குள்ளாக அடுக்கடுக்காய்ப் பிரயோகித்துச் சிம்மநாதம் பண்ணினான். அரவிந்த லோசனராகிய ஸ்ரீராமமூர்த்தியின் திருத்தம்

பியாரும் கமலமுகப்பாணங்களை அரைக்ஷணத்திற்குள்ளாக அனேகமாகப் பிரயோகித்து, அவன்விட்டவைகளையெல்லாம் அடித்துநொறுக்கி உதிர்த்துவிட்டார்.

இப்பால் வளைந்தபல்லுடையவனான இந்திரசித்து கோடி வச்சிரமுகாஸ்திரத்தை யெவினான். பரிசுத்தராகிய இளையபெருமாளும் கோடிவச்சிரமுகாஸ்திரத்தை யெவி அவைகளையெல்லாநொறுக்கிவிட்டு, கோடி திரிமுகாஸ்திரங்களை வேகமாய்ப் பிரயோகித்துவிட்டார். அதிக பலாட்டியனான இந்திரசித்தும் கோடி திரிமுகாஸ்திரத்தைவிட்டு அவைகளையெல்லாம் தடுத்துவிட்டு, ஐந்துகோடி அஞ்சலி யாஸ்திரங்களைப் பிரயோகித்து வீரகர்ச்சனை செய்தான். இளையபெருமாளும் ஐந்துகோடி அஞ்சலியாஸ்திரத்தைப் பிரயோகித்துவிட்டு, கோடிகஜகர்ணாஸ்திரத்தை வில்லிற்பூட்டிப் பிரயோகித்தார். இந்திரசித்துவும் கோடிகஜ கர்ணாஸ்திரத்தைத் தொடுத்து அவைகளையெல்லாம் தும்சஞ்செய்துவிட்டான்.

இந்தப் பிரகாரமாக இந்திரசித்துவும் இளையபெருமாளுமாக ஒருவரெய்யவும், அந்தப் பாணங்களை யொருவர்கொய்யவும், உலகமெல்லாம் அம்புக்காடாய் விட்டன. கொதிக்கின்ற சமுத்திரமும் அவர்கள்விட்ட அம்புகள் சொரிகின்ற நெருப்புப் பொறிகளாலே நீர் வற்றிப் போய்விட்டது. இரண்டு வீரர்களுக்குமுண்ட கோபமானது தங்கள் தங்கள் கைத்தொழிலை ஒருவருக்கொருவர் காண்பிக்குந்தோறு மேலு மேலும் அதிகரித்ததேயல்லாமல், கொஞ்சமாவது தணியவில்லை. இப்படிப் போர்செய்யும்போது இந்திரசித்தானவன் அனுமான் விழுந்தபோலத் தேகங்கிழிந்து மூர்ச்சையடையும்படியாக அவருடைய உருண்ட உருக்குத்தடிபோன்ற தோளின்மீது ஆயிரம் பாணங்களைத்தூவி, உகாந்தகால மேகமானது இடிகளைக் கக்கினதுபோல ஆயிரத்தநூறு பாணங்களாலே இலக்ஷுமணருடைய மார்பின்கவசத்தை யுப்பிளந்தான்.

அதைக்கண்ட தேவர்களெல்லாம் இந்திரசித்து கைமுந்திவிட்டானென்று தங்கள் முகம்வாடி, கல்மலையிலிருந்து அருவியாறு ஒழுகுவதுபோல இளையபெருமாளுடைய அழகிய திருத்தோளினின்று இரத்தவெள்ளம் பெருகுவதைக் கண்டு துக்கித்தார்கள். வைதிகமார்க்கமான சாரிகளாகிய முனிவர்களும், பெரியோர்களும், இந்தராட்சசனே வில்வீரர்களிற் சிரேஷ்டமானவனென்றுபயந்து நடுங்கினார்கள்.

இந்திரசித்துவின் வெற்றிக்கொடியையும் மெய்க்கவசத்தையும் இலட்சுமணர் துணித்தல்.

கலி.

சீறுநெறிக்கரிந்தை யிலக்குவ ஞ்சிலைக்கைவாளி
ஆறுநூறெவியொர்தி றுடங்குனெமடக்கன்மாவம்

வெறுங்கூறி பற்றிவீரக் கொடியையுமறுத்துவீழ்த்தி
ஆறுநூறம்புசெய்பொற் கவசம்புக்கழுத்தவெய்தான்.

இவ்வாப்பிரகாரமாக இருவரும் போர்புரியுங்காலையில், யுத்தசாத்திரத்தின் நுட்பங்களையெல்லாம் கண்டறிந்து தெளிந்த சிந்தையையுடைய இலக்ஷுமணப் பெருமானானவர் தமது கரத்திலுள்ள தனுவிலிருந்து, பதினாறுபாணங்களைப் பிரயோகித்து, க்ஷணப்பொழுதில் அவன்தேரிற் பூட்டியிருந்த பிடரிமயிரையுடைய சிங்கங்களையெல்லாம் வேறுவேறாய்க் கூறிட்டு, அதில் கட்டியிருந்த விருதுக்கொடியையும் சாரதியையும் அறுத்துத்தள்ளி, பின்னும் அதிக கோரமான அறுநூறம்புகளையேவி அந்த இந்திரசித்து அணிந்திருந்த கவசத்தைச் சின்னபின்னமாக்கிவிட்டார்.

இவ்வா றிளையபெருமாளுடைய பாணங்கள் கவசத்திற் குளிப்ப அவைகள் பிரகாசிக்கிறதுபோல விளங்கும் கவசத்திற்பட்ட மாத்திரத்தில் அவ்விந்திரசித்தினின் தோளின்மீதும் மார்பின்மீதும் பொருந்தியிருக்கின்ற அந்தக் கவசத்தைச்சுற்றிலும் நீளநீளமாகப் பவளக்கொடிகள் ஏறிப்படர்ந்ததுபோல, அம்புகள் தைத்த வாய்களிலெல்லாம் இரத்தம் தாரைதாரையாய் ஒழுகி வடிந்தது. அப்போ திந்திரசித்தானவன் பொன்மயமான பெரியதேரிற் பூட்டிய சிங்கங்கள் மாண்டபோதும், பிரகாசிக்கின்ற வெற்றிக்கொடியுடனே சாரதியுமறுந்து வீழ்ந்தகாலத்திலும், தன்னுடையமார்பிற் பாணங்கள் தைத்து தடையில்லாம லுருவினபோதிலும், இன்னகாரியம் நடக்கிறதென்று அறியாதவனாகி ஒரு வார்த்தை சொல்லுகிறான்.

இந்தலக்ஷுமணனே நாராயணனாகவேண்டும். ஸ்ரீராமனே நாராயணனாகவேண்டும். இவன் நாராயணனல்லாவிட்டால், அந்த ஸ்ரீராமன் நாராயணனல்லனென்று சொல்லலாம். இப்படி யிவர்களல்லாவிட்டால் இவனைச் சிவனென்றும் அந்த ஸ்ரீராமனைப் பிரம்மாவென்றுமாவது சொல்லலாம். இவர்களு மல்லவாவிட்டால் இவ்வுலகத்தில் இராஜவமிசத்திற் பிறந்து வாழ்கிறவர்களுக்குள், தனுர் வித்தியா சாமர்த்தியத்தில் இந்தமனிதர்களுக் கொப்பாக வேறே அரசர்களு மிருக்கின்றார்களா வென்று சொல்லுவான்.

இந்திரசித்து மாறிமாறியேறிய தேர்களை இலட்சுமணர் அழித்தல்.

கவி.

வாயிடைநெருப்புக்கால வுடனெடுக்குருதிவாரத்
தீயிடைநெய்வார்த்தன்ன வெகுளியானுயிர்த்தானும்
ஓய்விடையில்லானவ்வில் போரினையொடுக்காமுன்னம்
ஆயிரம்பரிபூண்ட வாழியந்தேரினேறினான்.

இவ்வண்ணம் சொல்லிச்சொல்லி வாயில்நெருப்பைக் கக்கிக்கொண்டு, தேகமுழுவதும் இரத்தம்வடிய எரிகிறநெருப்பில் நெய்வார்த்ததுபோலக் கோபமதிகரித்து உயிர்போனாலும் உடலோயாதவனாகி, அதிசீக்கிரமாய் ஒரிமைப்

பொழுதுக்குள்ளே ஆயிரம் குதிரைகள்கட்டிய வேறொருதேரிலேறி, திக்குகள்தோறும் பாணத்தொனிகள் நிறையவும், உருத்திரமூர்த்தியும் உடல் நடுங்கவும், ஆயிரங்கோடி திவ்விய பாணங்களைப்பிரயோகித்து ஆகாசமெல்லாம் வெளியில்லாமல் மறைத்துவிட்டான்.

உடனே இளையபெருமாளும் ஆயிரம்பாணங்களைப்பத்திபத்தியாய்ச் சித்திரவிசித்திரமாகப் பிரயோகித்து, அந்தப்பாணங்களைச் சின்னபின்னஞ்செய்து, இராவணபுத்திரனாகிய இந்திரசித்துவின் மேலும் ஆயிரம்பாணங்களைப் பிரயோகித்தார். அவ்வாயிர பாணங்களும்வந்து தைத்தவுடனே அதிதுஷ்டனான இந்திரசித்துவுக்கு அக்கினியில் நெய்சொரிந்ததுக் கொப்பாகப் பொறுக்கமுடியாத கோபமுண்டாகி, அதிவிசிஷ்டரான இளையபெருமாள் சென்னியின்மீது நூறுபாணங்களைப் பிரயோகித்தான். இளையபெருமாள் தமதுநெற்றிமேல் அந்த நூறுபாணங்கள்வந்து தைத்தகாலத்தில் கொஞ்சமுமாயாசப்படாமல், அத்ததுஷ்டன் மார்பினிடத்தில அதிகுரூரமான நூறுபாணங்களைச்செலுத்தினார். அப்பாணங்கள்பட்டு உதிரமொழுகுவதற்குள்ளாக இரத்தினங்களிழைத்த பொற்சக்கரம் அச்சோடு முறிந்துபோகவும், ஆயிரங்குதிரைகளும் சின்னபின்னப்பட்டுப் போகவும், கொல்லுகின்ற வேறொருயமனைப்போல வாயுபுத்திரனான ஆஞ்சநேயர் ஒருதையுதைத்து அவன் தேரை நொறுக்கிவிட்டார்.

இந்திரசித்து மறுபடியும் ஆயிரம் பேய்களைப்பூட்டியது மிரத்தினங்களிழைத்ததுமான வேறொருதேரின்மேல் ஒரு க்ஷணப்பொழுதுக்குள்ளே ஏறினான். அதையும் இளையபெருமாள் தமதுகையிலுள்ள ஐம்பதுபாணங்களாற் சிதைத்துத்தள்ளினார். இப்படி இந்திரசித்துதேரேறுகிறதும், இளையபெருமாள் அதைச் சிதைக்கிறதுமே யல்லாமல், அவன் வேறேயுத்தம் செய்யவேயில்லை. இளையபெருமாள் இந்தப்பிரகாரமாக அறுநூறு பாணங்களால் அவனுடைய ஆயிரந்தேரையும் ஒரு நாழிகைக்குள் சின்னபின்னம் பண்ணித் தகர்த்துப்போட்டார். இதைக்கண்ட தேவர்களெல்லாம் பல்லாண்டுபாடி, ஆனந்தகர்ச்சனை செய்து, கற்பகப்புஷ்பங்களை வாரிவாரி யிறைத்து, சுமித்திரை இளஞ்சிங்கமாகிய ராமாநுஜனை வணங்கி; இதற்குமுன் ஊசலாடிக்கொண்டிருந்த மனமுங்களித்து, மேலுத்தரீயத்தையும் விசிறியெறிந்து ஆனந்தத்தாண்டவம் செய்தார்கள்.

இந்திரசித்துவுக்கு மறுபடியும் படைத்துணையாகவந்த சேனைகளை இலட்சுமணர் மடித்தல்.

கவி.

அக்கணத்தினொ ராயிரமாயிரர், மிக்கவெங்கணரக்கர்வீரரே
தொக்கவின்ப மொருவழியுணினர், புக்குழுந்தினர் போரிடைப்பொன்றுவார்.

அந்தச்சமயத்தில் பத்துலக்ஷம் ராக்ஷசர்கள் இந்திரசித்துவுக்குத் துணையாகவந்து, இலட்சுமணருடனே போர்செய்யும்படியாக எக்களிப்புடனெ

ருய்க்கூடி முந்தியெதிர்த்து, செவந்தமுகத்தையும் கறுத்தமேனியையு முடைய தேர்வீரரும், குதிரைவீரரும், யானைவீரருமாகிய இவர்களோடு மேகம் போலக் கர்ச்சிக்கின்ற வீரகண்டாமணியைத்தரித்த பதாதிவீரர்களும் பூமியாகாசமெல்லாம் அளாவும்படியாக ஒருவரை ஒருவர்பேரிட்டழைத்து, சாக்கிரதை சாக்கிரதையென்று எச்சரிக்கைபண்ணிப் பேரிகைமுழக்கத்துக்கொப்பாகப் பேசிக்கொண்டு வந்தார்கள். பார்த்தபார்த்த திக்குகளிலெல்லாம் சப்தமேகங்களுங்கவிந்த வாகாசமாய்த் தோன்றும்படி நிறைந்த அவர்கள் கூட்டத்தின் ஓசையும், அஸ்திரசஸ்திரங்கள் ஒன்றுடனொன்றுபட்டு சப்திக்கின்ற சப்தமும் ஒன்றாகக்கூடி; சுவர்க்கலோகத்தையும் செவிடுபடுத்தி விட்டன. அவர்களது சேனைகளில் யாளிகள் சீறித்தன. சிம்ஹங்கள்கர்ச்சித்தன. பேய்கள் கூவின. யானைகள்வீறிட்டன.

அதிரதர் - மகாரதர் - சமரதர் - அர்த்தரதர்-என்று நால்வகைரதிகர்களும் தங்கள் தங்கள் சேனைகளோடு நெருங்கி எய்தபடியால், பாணங்கள் எங்கு நிறைந்தன. இவ்வளவுசேனைகள் வந்தும் ரணக்களமெல்லாம் பிணமயமாயிருப்பதினால் சேறுபாக மெழும்பவேயில்லை. அவர்கள் கொண்டுவந்ததும், சிம்ஹங்கள்பூட்டித் தாவுகின்றதுமான தேரின்மீது இந்திரனைச் செயம்பெற்றவனான மேகநாதனேறிச் சரமாரி வருஷித்துத் திக்குகள்தோறும் நிறைத்துவிட்டான். அந்திவானம்போலச் சிவந்த சொர்ணமயமான திருமேனியையுடைய இளையபெருமாள் அவைகளையெல்லாம் தூம்சமாக்கிப் போட்டார். பின்னுமவருடைய பாணங்கள்பட்டு, முன்னமவ் விந்திரசித்துவுக்குத் துணையாய்ச் சூழ்ந்துவந்த ராக்ஷசர்கள் வீசுகின்றவைகளும், எய்கின்றவைகளும், எறிகின்றவைகளும், உதிர்ந்து பொடிப்பொடியாய்ப் போய்விட்டன. ஆயிரந்தலைகள் ஒவ்வொரு பாணத்தினாலே உருண்டன. குடல்கள் பாம்பைப் போற் பிறண்டன. பலம்பொருந்திய மதயானைகள் குன்றுகள்போற் குவிந்தன. தேர்களெல்லாம் சின்னபின்னப்பட்டுச் சிதறிப்போய் விட்டன. பலவகையான ஆயுதங்கள் மெடிட்டன.

அவ்வாயுதங்களையுடைய வீரர்கள் கருங்கடல்போல் ரணக்களத்திற் கிடந்தார்கள். குண்டலங்களும், முத்தாரங்களும், பூமாலைகளும், கண்டசரங்களும், வீரக்கழல்களும், மெய்க்கவசங்களும், சண்டமாருதக் காற்றடித்தபோது மேகங்களினின்று மின்னல்கள் வீழ்ந்ததுபோல விலட்சுமணருடைய பாணங்கள்பட்டு வீழ்ந்தன. இந்திரசித்தெய்த பாணங்களை இளையபெருமான்றமது அம்புகளாலே நாசமாக்கிவிட்டு, தம்மோடெதிர்த்துப் போர்செய்கின்ற கண்டகர்களாகிய இராக்ஷசர்களுடைய தலைக்குப்பல்களென்று மலைகளை யமனுக்கும் இரக்கம் தோன்றும்படியாகக் குவித்தார். அப்போதிந்த வில்வீரராகிய இளையபெருமான் ஆரோகணித்திருந்த ஆஞ்சநேயர் யமனுக்கொப்பாகிய தம்முடையவாலால் சிலராக்ஷதர்களைச் சுற்றிக்கட்டி வாரி வீசுவார். சிலரைக் கால்களால் மிதிப்பார். சிலரைவெட்டித் தள்ளுவார்.

சிலரை ஆகாசத்திலெடுத்து எறிவார். சிலரை எதிரேபோய் அறைவார். சிலரைக் காலாலெட்டியுதைப்பார்.

இப்படியெல்லாம் செய்து மிளையபெருமானேறியருளிய மத்தகஜம் போன்ற அவ்வநுமானானவர் கோபமடங்காமற் பின்னும் விசர்ஜனைசெய்து, சிலர் பிராணபீதியடையும்படி உறுமிப்பார்ப்பார். சிலர் கைகால் விதிர்த்துப் பிராணனீங்கும்படிக் கோபிப்பார். சமுத்திரத்தை யானைகளால் தூர்த்துவிடுவார். இரண்டுதோளையும் கொட்டிநின்று அட்டகாசஞ்செய்வார். ஆயிரந்தேர்களைத்தமது உள்ளங்கையாற் பற்றியிழுப்பார். பின்னும் வீரசிகாமணியாகிய இளையபெருமாள் விருப்பங்கொண்டேறின ஆண் சிம்ஹத்துக் கொப்பாகிய அந்த வாயுபுத்திரர் குதிரைகளையும், யானைகளையும், ஆயுதங்களைப் பிடித்திருக்கிற ராக்ஷசவீரர்களையும்; புஷ்பத்தைப் போலவும், ஜலத்தைப்போலவும், அலங்காரமான தளிரைப்போலவும் வாரிவாரித்தூவுவார். சிலசேனைகளை அள்ளி உள்ளங்கையில்வைத்து நசுக்கி வருத்தப்படுத்துவார்.

இந்திரசித்துவினால் மூர்ச்சித்த வானரவீரர்கள்தெளிந்து யுத்தத்திற்குவருதல்.

கலி.

அவ்விடத்தினி லாய்மருந்தாலழல், வெவ்விடத்தினை யுண்டவர்மின்னொடை
எவ்விடத்திலும் வீழ்ந்தவிறைத்தலைத், தெவ்வடக்கும் வலியவர்தேறினார்.

அந்தச்சமயத்தில் தேவாமிர்த முண்டாகும்படிப்பாற்சமுத்திரத்தைக்கடைந்தகாலத்திற் பிறந்தவிஷத்தைப் பானம்பண்ணின கைலாசபதியானவர் திருப்பிவந்ததுபோல அந்தந்த இடங்களில் மூர்ச்சையாய் விழுந்துகிடந்த சுக்கிரீவமகாராஜன்-அங்கதன்-நீலன்-இவான்முதலிய சத்துருசம்ஹாரர்களான பலாட்டியர்கள் மூர்ச்சை தெளிந்து சுற்றுமுற்றும்பார்த்து, இளையபெருமான் யுத்தத்திலிருக்கிறதைக் கண்டு, நாமிருந்து மிவரைச் சண்டைக்குவிடத்தகுமோவென்று நெருப்புப்பறக்கக்கோபித்து, அதிசீக்கிரமாகப் புறப்பட்டுவந்து இலக்ஷ்மணரைச் சேர்ந்துகொண்டு, மாமிமாதி மலைகளையும், மரங்களையும், தாமுமாயிரமுமாகப் பறித்தெறிந்து இராக்ஷசசேனைகளை அழித்துக்கொல்லத் தலைப்பட்டார்கள். இப்படி யவர்கள் அநேகஜாதிகளான மரங்களையும், மலைகளையும், பகைவர்மேற் செலுத்தும்படிப் பறித்துச் சுமந்துபோய் வீசியெறிந்தபோது, அதுபட்ட ராக்ஷசர்களுடைய தேர்களெல்லாம் கடைசற்றொழிலைச் செய்கின்ற கம்மாளர்களுடைய பட்டைச்சக்கரம்போற் சுழன்றன.

அப்போது வாலிபுத்திரனாகிய அங்கதப்பெருமான் ஒருமலையைப் பிடுங்கித் தேர்மேல்வந்த இந்திரசித்தனைப்பார்த்து, அடாதுஷ்டா ! தப்பித்துக்கொள். இதுதான் உன்னுடைய உயிரைவாங்கு குடிக்கப்போகின்றதென்று சொல்லி ஆகாசபரியந்தம் அளாவும்படி நெருப்புப்பறக்க வீசியெறிந்தான். அப்படியெறிந்த அம்மலையானது அநியாயஞ்செய்த ராவணனுடைய சிரசை யறுத்துவிட்டதுபோல, தேவர்களுடைய சுவர்க்கலோகத்தை நாசப்படுத்திய வயிக்கத்தோள்வல்லமையுடைய இந்திரசித்தனின் தேரை ஒழிக்கப்போ

முழுதுக்குள்ளாகச் சிதைந்தழிந்துவிட்டுப் போயினது. அப்போது தேவர்களெல்லாம் அதைக்கண்டு பெருமையுடன் வந்து, எங்கள்கண்மணியாகிய அங்கதன் தன்பாட்டனாகியஇந்திரன் இந்தத்துராத்துமாவினது கையினாற்பட்டபழியைநீக்கிவிட்டானென்கிற சந்தோஷத்தால் ஆர்ப்பரித்துக்கூத்தாடினார்கள்.

அக்கால் இந்திரசித்து அழிந்ததேரைவிட்டு ஆகாசத்திலெழும்பி, க்ஷணநேரத்திற்குள் வேறொருரதமேறி, ஓ அங்கதா! போய்விடாதே. நில்லு: நில்லு: என்றுசொல்லிக் கையிலுள்ளபாணங்களை மழைபோல்வருஷித்து, அதிககோபத்துடனே எதிரேநின்று, உன்னுயிரை யென்பாணங்கட்கு ஆகாரமாகக் கொடுத்துவிட்டுப் போடாவென்று சொன்னான். அப்படிச்சொன்ன இந்திரசித்துவென்பவனை மற்ற வானரவீரர்களெல்லாம் வந்து சூழ்ந்து வரிசைவரிசையாகப் போர்செய்யத்தொடங்கி; விருக்ஷங்களையும், கற்களையும், இறந்த ராக்ஷசர்களுடைய தலைகளையும், தேர்களையும், குதிரைகளையும், பலப்பொருந்திய யானைத்துதிக்கைகளையும், அம்புகளையும்; வாரிவாரி அவ்விந்திரசித்துவின் பாணவேகமும் பின்னிடும்படி வீசியெதிர்த்தார்கள்.

அந்தச்சமயத்தில் ஸ்ரீசர்வேஸ்வரனாகிய ஸ்ரீராமபிரானுடைய கைங்கரியவிஷயத்திலீடுபட்டுத் தமது இராச்சியத்தையும், வாழ்வையும், நித்திரையையும் நீக்கின மகானுபாவராகிய இலக்ஷ்மணப்பெருமாள், ஆயிரமாயிரங்களைக்காக வஞ்சனையுள்ள ராக்ஷசர்களுடைய உயிர்களைத்தேவர்கள் நினைவிற்கு மெட்டாததற்கு முன்னே போக்கிவிட்டார். இப்படித்தன்னெதிரேவந்ததும், பின்னர் தனக்குத் துணையாகவந்ததுமாகிய சேனைகளில்; அளவற்ற மதத்த யானைகளும், பெரியதேர்களும், தன்னுயிர்க்குச் சமானமாகிய இராக்ஷசக் காலாட்படைகளும், வாயுவேகத்தினு மிஞ்சிப்பாய்கின்ற பலசாதிக் குதிரைகளும் மாண்டுபோனவிதத்தை இந்திரசித்து நினைந்து; வெற்றியிழந்து, அக்கினியைப்போலக் கொதித்து, தன்தேரினுடைய சக்கரத்தினதுபக்கத்தினின்று அந்தத்தேரைக்காத்துக்கொண்டிருந்த மகாபாரிசன்-துமாட்சன்-என்கிற இரண்டுபேரோடும் பெருஞ்சேனைசூழ விரணக்களத்துக்கு வந்து, அந்தரத்தவெள்ளத்தினின்றும் தன்தேரைச் செலுத்தமாட்டாதவனாகி, வாய்பேசாமல் மரம்போல் நின்றான்.

அந்தவாகாசத்திற் பரவியிருக்கின்ற கருமேகங்களையொத்த இருளையோட்ட வல்லதும், அவ்வாகாசத்திற்றானே பறக்கவல்லதுமான; தனதுதேர் தனக்குத்தானே செல்லமாட்டாமலும் மந்தப்பிணமலைகளைத் தாண்ட மாட்டாமலும் போய்விட்டது. அப்போது இந்திரசித்து தன்பக்கத்திலிருக்கின்ற அவ்விரண்டுபேர்களுடைய முகங்களை யுற்றுப்பார்த்து, ஓசக்கரரக்ஷகர்களே பார்த்தீர்களா? ஒருவில்லையுடையவன் மகாவீரர்களான நம்முடைய எழுபதுவெள்ளம் சைனியங்களையன்றி, பின்னர் துணையாகவந்தபத்துலக்ஷம் சேனைகளையும் கொன்றுவிட்டு, இன்னும்பூசின சாந்தழியாமல் நிற்கின்றவிதமென்னவென்றுகேட்டான். அதைக்கேட்ட அவ்விரண்டு வீரர்களவனைப்பார்த்து,

ஐயா இந்திரசித்துவே! அதைரியப்படாதேயும்; நீருமப்படியே வானரர்களினுமத்தனைத்தொகைச் சேனைகளழியும்படியாகக் கொடிய பாணவருஷங்களைப் பிரயோகஞ்செய்துதானிருக்கிறீராதலால், உமதுசண்டையும் அதற்கொப்பாகுமென்று தைரியஞ் சொன்னார்கள்.

அப்போது ஆஞ்சநேயர்மீது ஆரோகணித்தருளிய அக்கினிபோன்ற சுவர்ணச் சாயையையுடைய இளையபெருமாள், இந்திரசித்துவுக்கெதிரேவந்து பத்துலக்ஷபாணங்களைப் பிரயோகித்தார். அவைகளையெல்லாம் அவனவ்வளவு பாணங்களைப் பிரயோகித்து வரிசையாயெல்லாவற்றையும் பொடிபடுத்திப் பின்பு நூறும் ஆயிரமுமாகப் பாணங்களைச்செலுத்தி, எதிர்த்த வானரவீரர்களையெல்லாம் மூர்ச்சையாக்கிச் சிலரைப் பூமியில்விழச்செய்தான். அப்போது சூரியகுமாரன் முதலான வானரவீரர்களெல்லாம் ரத்தப்பிரவாகத்தில் மூர்ச்சித்துவிழுந்தொதுங்கினதை ஸ்ரீகோதண்டதீக்ஷா குருவின் திருத்தம்பியாகிய இளையபெருமாள்கண்டு, எதிரிலிருந்த ராவணியென்கிற இந்திரசித்துவை லக்ஷியப்படுத்தி, மூங்கிற்காடெரிகிறதுபோல அவன் மேனியெல்லாம் ரத்தமயமாகும்படியாகக் கொடுமையான பாணங்களையேவினார். அந்தப்பாணங்கள் பட்டமாத்திரத்தில் இந்திரசித்து அதிக வருத்தமடைந்தான். அவனுடனிருந்த மகாபாரிசனும் துமாக்ஷனும் நடுக்கங்கொண்டார்கள். அளவில்லாத ராக்ஷசச்சேனைகளெல்லா மடிந்தன.

இந்தப் பிரகாரமாக இலக்ஷ்மணருடைய சரவருஷங்களால் அளவற்றதேர்களும், யானைகளும், குதிரைகளும், பதாதிகளுமாண் டிரணக்களத்திற் கிடப்ப; அவைகளை அந்த மகாபாரிசனும், துமாட்சனும், பார்த்துக் கொண்டிருந்தார்கள். மற்றுள்ள ராக்ஷசர்களில் ஒருவனாவது அந்த ரணக்களத்தில் நில்லாமல் உயிர்தப்பி ஓடிப்போய்விட்டார்கள். அப்படியோடிப்போன ராக்ஷசர்களிற் சிலர்தாவுலர்ந்து தண்ணீரையுண்ணு மாசையாலதைத்தேடினவர்களாய்த் தங்களுக்கெதிர்ப்பட்ட மேகங்களைப் பிழிந்து குடித்து, உடலிலுள்ளபுண்களில்இரத்தம்பெருவாரியாயொழுகி ரணவலிகொண்டுகீழே விழுந்து மாண்டார்கள். சிலர்மாத்திரம் தோற்றோடினார்கள். சிலர் தேகமெல்லாம் பாணங்களாற் சல்லடைக் கண்களாய்த் தொளைக்கப்பட்டு வழியிற்றம் பெண்சாதிமார்களைக் கூவிக்கொண்டுபோக, அவர்களு மவர்களைக்கண்டு தங்கள் செம்பட்டைமயி ரவிழ்ந்துசோரக் கதறிக்கொண்டுவந்து, இருவரும் கற்பகப் புஷ்பங்கள் பரப்பிய படுக்கையைச் சேர்ந்து, ஒருவரை யொருவர் கட்டிக்கொண்டபடியே இருவரும் பிராணன் நீங்கினார்கள்.

சிலர் அம்புகள்தைத்த மார்புடனே தங்கள்சொந்தக் கிரகங்களைச்சேர்ந்து, தங்களைவந்துகாலைக்கட்டியழுதுகொண்டுநின்ற பிள்ளைகளையெடுத்தணைத்து, இவர்களை நீங்கள் காப்பாற்றுங்களென்று அண்ணன்-தம்பி-மாமன்-மைத்துனன் முதலாகிய சுற்றத்தாருக்குச்சொல்லி, அந்தப்பிள்ளைகளின்கனிவாயை

ப்பார்த்ததன்றிப் பக்கத்திலிருக்கிற யமனையும்பார்த்துத் தங்களுயிரை நீக்கினார்கள். சிலர் பெண்சாதி-பிள்ளை-தாய்-தந்தை முதலிய தங்கள் பந்துக்களைப்பார்த்து, எங்கள் உடலின் புண்களைப் பார்த்தீர்களா? செந்தாமரை மலர்போன்ற திருக்கண்களையுடைய ஸ்ரீதசரதநந்தனராகிய திருத்தம்பியாருடையசாமர்த்திய மிப்படிப்பட்டதா யிருக்கின்றபடியினாலே, இந்த லங்காபட்டணம் அரைக்ஷணத்துக்குள்ளாக வெந்துபோய்விடும். இந்திரசித்து மரணமடைகிறதற்குள்ளே நீங்களெல்லாரும் பிராணன்பிழைக்கும்படிச் சீக்கிரமாய்ப் பெருவிருட்சங்களுள்ள காடுகளின், மலைகள்முதலான விடங்கட்குப் புறப்பட்டுப்போ யொளித்துக்கொள்ளுங்களென்று புத்திசொல்லிவிட்டுப் பிராணனைவிட்டார்கள்.

அன்றியும், மலையையொத்த வடிவிமானதேகத்தின் மருமஸ்தானத்தில் ஸ்வாமியின்பாண மிரத்தபானம் பண்ணிப் பெருத்துக்கொண் டிருக்கும்படிப் போன சில ராக்ஷசர்கள் இந்தப் பாணத்தைப் பிடுங்கினால் பிராணன்போய் விடுமென்று புரைகலந்த பாலைப்போல மனம்பேதுற்று, மந்த்ரிகளாகிய மற்றவர்களுக்குச் சொல்லத்தகாத திருமந்திரோபதேசத்தைப் பெற்ற பிரபன்னர்களைப்போலத் தங்களுக்குள்ளேயே பெருமூச்சுவிட்டு வருத்தப்பட்டுக் கொண்டு மௌனமா யிருந்துவிட்டார்கள். சிலசில ராக்ஷசர்கள் தேர்மீதும் போகார், குதிரைமீதும் போகார், செவந்த கண்களையுடைய மேகம்போன்ற யானைமீதும் போகார். காற்றைப்போற் கடுவேகங்கொண்ட தங்கள்காலாலு மோடமாட்டார்கள். தங்களை ஊருக்குள் நுழையவொட்டாமற் காவலிட்டிருக்கிறபடியால் வெட்கமுற்று இலங்கைக்குள்ளும் போகார்கள். உயிரின்மேலிருக்கிற வாசையால் சத்துருக்களத்திலுந் திரியமாட்டார்கள். இப்படி நடுநடுங்கித் திக்குமயங்கி அவ்வவர்களுங் கண்டவிடங்களி லோடிப் போய்விட்டார்கள்.

அப்போது இந்திரசித்து தனக்குநேரிட்ட வருத்தத்தை நினைத்து, இந்த லட்சுமணனை இப்போதே கொன்றுவிடுகிறேனென்று அதிககோபத்துடனே அநேக பாணங்களை வருஷித்தான். அதைக்கண்டு பாணவருஷங்களைப் பொழிகின்ற பொன்னிற மேகத்துக்கொப்பான இளையபெருமாள் பகைவனுக்குச் சஹாயமாகிய சில பாணங்களினாலே அவன் மார்பிலணிந்திருந்த பத்திரமான கவசத்தையும் சின்னபின்னப்படுத்திக் கிழித்துத்தள்ளிவிட்டார். அப்போது மஹாபாரிசனுந் தூமாட்சனுமாகிய இரண்டு தேர்வீரர்கள் அநுமான்மீதும், இளையபெருமாளுடைய மார்பின்மேலும், அவருடைய தோளின்மேலும், வைதியம்வைத் தநேக பாணங்களைத் தூவினார்கள். அவர்க ளப்பாணங்களை யெய்தவுடனே இலட்சுமண ரந்தவிரண்டு பேர்களுடைய வாகைமாலை சூடினவில்லுகளையும், அச்சுப்பூட்டின தேர்களையும், அந்தத் தேரைச்செலுத்துகிற சாரதிகளுயிரையும், குதிரையின் பிராணனையும் நாசப்படுத்திவிட்டார்.

ஆஞ்சநேயர் இந்திரசித்துவிற்குத் துணையாகவந்த சக்கராக்ஷகரிருவரையும் தோற்கடித் தோட்டுதல்.

கவி.

இருவருமிழந்தவில்லா ரெழுவனையவயிரத்தண்டர்
உருமெனக்கடிதினோடி யநுமனையிமைப்பினுற்றார்
பொருகனற்பொறிகள்சிந்தப் புடைத்தனர்புடைத்தலோடும்
பெருவலிக்கரத்தினாற்றண் டிரண்டையும்பறித்துக்கொண்டான்.

அக்கால் வில்லிழந்த அவ்விரண்டுவீரர்களும் இரண்டு வச்சிரதண்டங்களைக் கையிற்பிடித்துக்கொண்டு, இடியேறு வருவதுபோல ஓடிவந்து, ஆஞ்சநேயனைக் கிட்டிக் கண்களில் அக்கினிப்பொறிபறக்க மோதி யடித்தார்கள். அப்படி யடித்தவுடனே ஆஞ்சநேயராவவர் தம்முடைய மிகுந்த பலம்பொருந்திய கைகளால் அவ்விரண்டு முசலங்களையும் பறித்துக்கொண்டார். அந்தத் தண்டங்கள் அவர் கையிற் சிக்கிக்கொண்டதை அந்தத்துஷ்டர்கள் பார்த்து, இனிநாம் செய்வதொன்று மில்லை. இனியிவன் நம்மையடித்துக் கொன்றுவிடுவானென்று பயந்து தாங்களிதுவரையினு மிராவணனிடத்திலுண்ட செஞ்சோற்றுக்கடனையும் பாராமல், தங்களுயிரையே பெரிதென்றுகருதி, அந்தக்ஷணமே யோடிப்போனார்கள்.

அந்தச்சமயத்தில் அங்கதகுமாரன் - குமுதன் - நீலன் - சாம்பவான் - சுக்கிரீவமகாராஜன் - மயிந்தன் - துமிந்தன் - சதவலி-பனசன் - இவர்முதலான இராஜ சிம்ஹங்களுக்கொப்பான வீரர்களெல்லாங் குளிர்ந்த தென்றற் காற்றடிக்கிறதினாலும், ஆயுளுக்கு முடிவில்லாமையாலும், இயமன்வந்து அவர்களுயிரைக் கிரகிக்கத்தக்க குறிகளில்லாமையாலும், முன்னடைந்த மூர்ச்சைதெளிந் தாயாசமும் வருத்தமுமாறி; அதிக ஊக்கமும் பலமும் பெற்றெழுந்துவந்து, மலைகளைப்பேர்த் தெடுத்து, தேவர்களெல்லாம் வாழ்த்திப் பல்லாண்டுசொல்ல வீரகர்ச்சனை செய்து, அத்தனைபேர்களும் ஏககாலத்தில் இடிகளைப்போலவு மின்னலைப்போலவு மலைகளை இந்திரசித்துவின்மேற் பிரயோகித்தார்கள். அப்போது சித்திரவில் வீரனாகிய இந்திரசித்தானவன்பார்த்து, இந்த மலைகளெல்லையா நம்முடன் யுத்தஞ்செய்யத் தக்கவையென்று சிரித்து, அவைகளையெல்லாம் சின்னபின்னமாகத் தனது அம்புகளாற் சிதற வடித்தான்.

சூரியனஸ்தமித்தற் சிறப்பு.

கவி.

மரங்களுமலையுங்கல்லு மழையெனவழங்கிவந்து
நெருங்கினார்நெருங்கக்கண்டு மொருதனிநெஞ்சம்வில்லும்
சரங்களுந்துணையாய்நின்ற நிசாசரன்றனிமைநோக்கி
இரங்கினனென்னமேல்பாற் குன்றுபுக்கருக்கனின்றான்.

மறுபடியு மவ்வானராதிபதிகள் மரங்களையும், மலைகளையும், கல்லுகளையும், மழையைப்போல வருஷித்து; அவனை நாற்புறத்து நெருக்கினார்கள். அப்படி நெருங்கியதைப் பார்த்தும் தனதுதீரமானமனமும், கைவில்லும், அம்புகளுமே தனக்குத் துணையாகத் தானொருவனே அச்சமின்றி நிற்கின்ற நிசாசரனாகிய விந்திரசித்துவென்பவன் விரக்கமுற்றவனைப் போற் சூரியன் அஸ்தகிரியின்மீதிறங்கினான். அப்போது இருக்கு—எஜுர் - சாமம் — அதர்வணம் என்கின்ற வேதங்களும், மநுமுதலான தருமசாஸ்திரங்களும், பஞ்சமகா யஜ்ஞங்களும், இயாகங்களும், அந்தச் சீராமனே என்றும்; தெய்வத் தன்மையுள்ள மஹாரிஷிகளடையும் பிரயோசனமும் அந்நாரணனே என்றும்; நித்திய நிர்விகார அப்பிராகிருத திவ்யதேஜோமயமாயும், ஆயுதராஜமாயும், சாக்ஷாத்தம்முடைய திவ்யாஜ்ஞையின்படி சகலலோகங்களிலும் பிரவேசித்து அங்குள்ள துஷ்டர்களை யெல்லாம் சம்ஹரிக்கின்றவராய் யெழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீசுதரிசனாழ்வாரைத் திருக்கரத்தில் தரித்தருளிய ஸ்ரீயப்பதியே சகலலோககாரணமான வஸ்துவென்றும்; நினையாத அறிவினர்களுடைய மனம்போல வஷ்டதிசையு மந்தகாரமாய் விட்டது.

அப்போது விபீஷணாழ்வான் இளையபெருமாளைப் பார்த்து, ஸ்வாமீ! இந்தச் சர்ப்பத்துக் கொப்பானவனை இன்னுங் கால்நாழிகையிற் கொன்றால்தான் அவனிறப்பான். இல்லாவிட்டால் விராக்ஷசர்களுடைய மாயகாலம் வந்துவிடும். அப்பாலிவன் ஆகாசத்திற் பாய்ந்து நம்மைமோசம்பண்ணி வெல்லுவானென்று சொன்னார். அதுகேட்ட இலக்ஷுமணர் எல்லாவானர வீரர்மேலும் அநுமான்மீதும் அநேககோடி பாணங்களைப் பிரயோகித்துக் கலம் பார்த்துக்கொண்டிருக்கின்ற வில்வீரனை இந்திரசித்துவை இனிக்கொன்றுவிட வேண்டுமென்று கருதி, அவனுடைய சித்திரத்தேரைச் சிலதிவ்வியபாணங்களால் நொறுக்கிவிட்டார்.

இந்திரசித்து இலட்சுமணர்மீது நாகாஸ்திரம் பிரயோகித்தற்பொருட்டு ஆகாசத்தில் மாயமாயிருளில் மறைதல்.

கவி.

அழித்ததேரொழிந்தமுன்ன மம்பொடுகிடந்தவெம்பி
உழைத்துயிர்விடுவதல்லா லுறுசெருவென்றேமென்று
பிழைத்திவர்போவரல்லர் பாசத்தாற்பிணிப்பனென்று
விழித்திமையாதமுன்னம் வில்லொடும்விசும்பிற்சென்றான்.

இந்திரசித்தென்னுங் கொடிய இராக்ஷசப் பாவியானவன் இலட்சுமணராற் பிரயோகித்த பாணவருஷங்களால் தானேறிய தேரழிந்து பூமியிற் சுக்கு சுக்கலாய் முறிந்து விழாததற்கு முன்பாகத்தானே யாதுயோசனை செய்தானெனில்? நமக்கு வரப்பிரசாதமாகக் கிடைத்திருக்கும்படியான நாகபாசத்தை யெய்தோமாகில்; இவர்கள் நாம் செயித்தோமென்று யுத்தகளத்தினின்று மீண்டுபோகாமல் வருத்தமடைந் துயிர்விடுவார்களென்று கண்ணிமை

கொட்டுவதற்கு முன்னம் யாருந்தெரியாமல் தனதுவில்லோடு மறைந்து ஆகாயத்திற் புகுந்தான்.

அதுகண்டதேவர்கள் பொன்மயமாகிய திருமேனியையுடைய இளைய பெருமாள் இவனுடனே யாவரும் புகழும்படியான சாமர்த்தியவித்தையைச் செய்துகொண்டிருக்கவும், இவன்வேறே யென்ன மோசக்கருத்தை நினைந்து கொண்டு ஆகாசத்தில் மறைந்தான்? இனியென்ன விளையப்போகிறதோ வென்று பயங்கொண்டுபோனார்கள். அக்கால் கையில் வில்லைப்பிடித்தவனும், முதுகில் அம்பறாத்தூணியை இறுக்கிக் கட்டினவனும், கண்ணுங்கனல்பொங்கக் கொதிக்கின்ற கோபத்தையுடையவனும், அக்கினிமயமாய்ச் சுவாசம் விடுகின்றவனும், பொல்லாங்குகள் செய்பவர்களுக் கெல்லாம் குருபீடமானவனும், மாயங்களை தன்க்கு ஐஸ்வரியமாகக் கொண்டவனு மாயிருக்கின்றவனுமான இந்திரசித்தானவனவ் விருட்டில் ஆகாசத்தில் நக்ஷத்திரமண்டலத்துக்கு மேலேபோய் மறைந்தனன். குறைவில்லாத தவங்களைச் செய்ததினாலும், அநேகதானங்களைச் செய்ததினாலும், அந்தணப் பிரப்புகளை யதுப்பவர்களான பிரமருத்திரேந்திராதியர்களிடத்தில் தான் பெற்றவரத்தினாலும், தன்னுடைய ராட்சசப் பிறப்பினாலும், மந்திர உருவினாலும், அணுவைப்போலச் சிறியதான ஒரு சூக்ஷ்மதேகத்தையுடையவனாகி; அந்தப் பிரமருத்திரேந்திராதியர்களெதிர்த்தாலுமவர்களுடைய உயர்ந்த தோள்களையு மிறுக்கிக்கட்டித் தன்னினுவல்லாமல்மீளாத நாகபாசப் படையை அபிமந்திரித்தெடுத்தான். இங்கே இந்திரசித்து மறைந்துபோனதைக் கண்ட வானரவீரர்கள் இராவணன்புத்திரன் சண்டைக்குப்பயந்து ஓடிப்போய் விட்டானென்று நினைத்து ஆர்ப்பரித்தார்கள். இளையபெருமாளும் அப்படியே நினைத்துக்கொண்டு சிரித்தார். இவர்களெல்லாம் இந்திரசித்து மாயையைச் செய்வானென்பதை அறியாதவர்களாய்ப் போர்த்தொழிலை நீங்கிநின்றார்கள்.

இலட்சுமணர் மேல்விளைவை யோசியாது ஆயாசந்தீர்ந் திருத்தல்.

கவி.

அதுகணத்தநுமன்றோளி னிறையனுமிழிந்துவெய்ய
கதுவலிச்சிலையைவென்றி யங்கதன்கைக்கொடுத்து
முதுகுறச்சென்றுநின்ற கணையொடுமுலைகழித்தவாங்கி
விதுவிதுப்பாற்றலுற்றான் விளைகின்றதுணர்கொதாதான்.

இளையபெருமாளும் அங்கதனுடைய திருத்தோளைவிட்டிறங்கி, தமதுகையிலிருந்த பலம்பொருந்திய வில்லை அங்கதகுமாரனுடைய கையிற்கொடுத்து, முதுகிலிறுக்கியிருந்த அம்பறாத்தூணியை இறக்கிவைத்து, தமது திருமேனியில் வரிசையாய்ப் பாய்ந்திருந்த அம்புகளை யெல்லாம் பிடுங்கிவிட்டு, கைத்தோற்கட்டுகளை யவிழ்த்து இளைப்பாறிக் கொண்டு, அதிமானுஷிய சேஷ்டிதராகியதாம் பேதப்படுவதை நிதானமாகவா யிருந்துவிட்டார்.

இந்திரசித்து இலட்சுமணர்மீதும் வானரப்படைகளின்மீதும் நாகாஸ்திரப் பிரயோகம் செய்ய அவர்கள் பிரமித்துத் திகைத்தல்.

கவி.

விட்டனனரக்கன் தெய்வப் படையினை விசித்தலோடும்
வெட்டினொடரவந் திக்கு மிருடிசித்திரிய லோடிக்
கட்டினதென்ப மன்றே காகுத்தத்கிளையகனே
வட்டவான்கப்பி ... ன்டேசன் மலைகளைப் புனைபுவாகி.

இம்மாதிரியாக இலக்ஷ்மணப்பெருமான் மேல்விளைவறியாது ஆயாசந் தீர்ந்து வானரசேனைகளியக்கிக்கொண்டிருந்த காலையில், யாவருக்குந் தெரியாது அவ்விருளில் ஆகாயத்தில் மறைந்த மகாபாதகனாகிய இந்திரசித்தானவன் தான் அபிமந்திரித் தெடுத்த நாகாஸ்திரத்தைத் திடமென்று பிரயோகித்து விட்டான். அப்படி அப்பாணத்துக்கு ... அஸ்திரமானது—இந்திரன் — அக்கினி இயமன்—நிருதி—வருணன்—வாயு—குபேரன்—ஈசானியன்—ஆகாசம்—பூமி என்று சொல்லப்பட்ட தசதிசைகளிலேயும் பரந்த இருளை யோட்டும்படி அக்கினிப் பொறிகளைக் கக்கி சுவாலைவீசிக்கொண்டு அதிவேகமாகவந்து, தன்னையடைந்த ஆன்மாகோடிகளினது வினைக்கட்டுகளை யெல்லாம் அறுக்கவல்ல ஸ்ரீமந்நாராயண மூர்த்தியினவதாரமாகிய காகுத்த குலோத்தமனது திருத்தம்பியாகிய இலக்ஷ்மணருடைய வச்சிரமலைபோலும் திரண்டுயர்ந்த வலம்பெற்ற தோள்கள் வருந்தும்படியாகச் சுற்றிக்கட்டியது. இப்படி யப்பாசமிறுக்கிக் கட்டினபோதும், அதிலுள்ள பாணங்கள்தைத்து பொல்லாங்குகள் விளைந்தபோதும், மனந்திகைத்து நின்றுபோயல்லாமல்; இஃதிந்திரசித்தின் மாயமென்று உணராமலும், மனதிற்கொஞ்சமாவது வியசனப்பட்டு அதைரியமடையாமலும், அதற்கொடுங்கி யாதொன்றுந் தோற்றாமற் சுற்றிச்சுற்றி ரணகளத்தைப் பார்ப்பார். மறுபடியும் ஆகாசத்தைப் பார்ப்பார். பின்னும் மற்றுக் கோரதந்தங்களையுடைய நாகபாசம்வந்து, வச்சிர ஸ்தம்பம்போலவும் - மலைகளைப்போலவும்—பெரியனவாயிருக்கின்ற வானரவீரர்களுடைய தோள்கள் முறிந்துபோயின வென்று சொல்லும்படி இறுக்கிக் கட்டினமாத்திரத்தில்; அவ்வானர வீரர்களெல்லாம் தங்கள் தெளிவுள்ள தைரியமான மனமிழந்து செய்வதின்னதென்று தெரியாமல் உழைந்துக்கொண்டிருந்தார்கள்.

அப்போது வாயுபுத்திரராகிய ஆஞ்சநேயர் அரவங்கண்டு, வஞ்சனையுள்ள அற்பப்பயலாகிய இவ்விந்திரசித்தனை ஒருக்ஷணநேரத்துக் குள்ளாக ஆகாசத்திற்பாய்ந்து தேடிப் பிடித்துக்கொண்டு வருவேனென்று உக்கிரங்கொண்டார். அக்கால் வாலியினுடைய வாலால் இராவணன் தோள்கள் கட்டப்பட்டதைப்போல நாகபாசமானது அனுமானுடைய வச்சிரப்பருவதம் போன்ற தோள்களையும் இறுக்கிப்பிணித்தது. இந்தப் பிரகாரமாகக்கட்டுண்ட வானரவீரர்களெல்லாம் வருத்தம்பொறுமல் மலைகளைப்போலக் கீழேவிழுவார்கள். பூமியிற் புரளுவார்கள். தலைகளை மேலெடுத்துக் கண்களில் அக்கினிபறக்

கப்பார்ப்பார்கள். வால்களைச் சுழற்றிப் பூமியிலடிப்பார்கள். வாய்மடித்துப் பல்லைக்கடித்து, ஆண்சிம்மத்துக் கொப்பான கோதண்டபாணியின் திருத்தம்பியாரைப்பார்த்து உள்ளங் கொதிப்பார்கள். பக்கத்தில் நிற்கின்ற விபீஷணாழ்வாருடைய முகத்தைப்பார்த்து, ஐயா! இதை நீக்கிக்கொள்ளும் படியான உபாய மேதேனுமுண்டாவென்று கேட்பார்கள். உலோகமெல்லா மூடிக்கொண் டிருக்கின்ற இராத்திரி காலத்தைப் பார்த்துக் கோபிப்பார்கள்.

இளையபெருமாளுடைய மலைபோன்ற திருத்தோள்களைப் பார்த்து, ஐயோ! நம்முடைய கண்முன்பாக ஸ்வாமி இப்படி வருத்தப்படலாமோ வென்று கோபச்சிரிப்புச் சிரித்து நிர்ப்பயர்களாய் அழுவார்கள். இதை யார் நீக்க வல்லவர்கள்? ஆஞ்சநேயராகிய உயிர்கொடுத்தார் நீக்கவல்லவர். அவராவது தப்பிப்பிழைத்தாரோ வென்று பார்ப்பார்கள். இளையபெருமாள் வருத்தப்படுகின்றதைப் பார்த்து, இதுதானோ நமக்கு வந்த பிரயோசனமென்று துக்கித்து, ஸ்ரீராமபிரானுளவ ரிவருடைய இக்கட்டைப் பார்ப்பாரோ வென்று துக்கித்தார்கள். இந்தச்சமயத்தில் நடந்த பொல்லாங்கை யென்னென்று சொல்லப்போகிறேன்? அந்த மகா துராத்துமாவான இந்திரசித்து மின்னல்கள் ஓடிவருகிறதுபோலவும், ஆகாசத்திலிருந்து இடிகள் விழுகிறதுபோலவும், அநேகமான பொற்பூண்கட்டிய பாணங்களைப் பிரயோகித்தான். அவைகளெல்லாம் புகைபாய்ந்து அக்கினிகளைக் கக்கிக்கொண்டுவந்து, யாவருங் குப்புற்றுக் கிடக்கிறபடியால் முதுகிற்பாய்ந்து மார்பினருவிப் போய்விட்டன.

அப்போது மலைகளின்மீது பொழியவந்த வருஷகாலமேகத்தைத் தடுத்து ப்பிரசண்டவாடைக்காற்று மோதினபோது அந்தமலைகள்பேர்ந்து அங்கங்கே தடுமாறிவீழ்ந்துவிடுவதுபோல, அம்புகள்பாய்ந்த மாத்திரத்தில் மலைபோன்ற தோள்களையுடைய வீரர்களெல்லாம் பூமியில் அலைகுலைந்து சாய்ந்துவிட்டார்கள். எங்கும் இரத்தவெள்ளமோடியது. ஆஞ்சநேயர் தமது தேகத்தில் ஆயிரகோடிக்கும் அதிகமாக அம்புகள் பாய்ந்தும் கொஞ்சமும் அசையஞ்செய்யாமற் கண்களில் நெருப்புப்பொறிப் பறக்கப் பார்த்து, தமதாண்டவருடைய திருத்தம்பியாருக்குச் சம்பவித்த துக்கமானது தம்மைச்சுட அதைப்பொறுக்கமாட்டாமற் பயந்து நடுங்கினார். மற்றவீரர்களெல்லாம் இடிபோன்ற பாணங்கள் நூறு ஆயிரமுமாகத் தங்கள் தேகத்தில் நுழைந்தவுடனே இரத்தம்பெருகி ஆறுபோலோட மூர்ச்சையாய் விழுந்துபோனார்கள். அங்கதப்பெருமான் மாத்திரம் அநேகபாணங்கள் தேகமுழுவதுந் தைத்திருந்தபோதிலும் சோர்வடையாமற் சும்மாவிருந்தான். சூரியகுமாரனாகிய சுக்கிரீவமகாராஜன், குழற்கடைப் மேலுள்ள முட்களைப்போல உடலெல்லாம் அம்புகள் தைத்துக்கொண்டு, கண்களில் நெருப்புப்பொறி பறக்கவும், மூங்கிற்காடு பற்றியெரிவதுபோலத் தேகத்தில்

யிர்களெல்லா மெரியவும், இரத்தக்கடலுக்குள்ளே உதிக்கின்ற தன் பிதாவாகிய சூரியனைப்போலவுமிருந்தார்.

இலக்ஷ்மணர் மூர்ச்சையாதல்.

கவி.

வெப்பாரும் பாசம்வீக்கி வெங்கணை யுடலைக்கொத்த
ஒப்பாருமில்லான்றம்பி யுணர்த்திருந்தின்னலுற்றான்
இப்பாசமாய்க்குமாயம் யானுகல்லலென்பதோர்ந்தும்
அப்பாசம்விசைசுற்று தழுந்தலுமிவுபோன்றான்.

அக்கால் ஒருவருக்கு மேற்ற ஸ்ரீராமருடைய திருத்தம்பியாகிய இளையபெருமான் கொடிய நாகபாசத்தாற் கட்டுண்டு, வெப்பமான பாணங்கள் தொளைக்கின்ற திருமேனியை யுடையவராய் உணர்வுடனே யிருந்து வருத்தப்பட்டு, உலோகபாரமபக்த மூலப்பிரகிருதியையென்று அறிந்தடக்குவர் இந்த நாகபாசத்தைச் சகிக்கமாட்டாதவராய் அறிவுசோர்ந்து மூர்ச்சையானார். அப்போதவ்விளையபெருமான் எப்படித் தோன்றினாரென்றால்? தமது திருமேனியில் தைத்திருக்கின்ற அக்கினிமுகப்பாணங்களெல்லாம் மேகங்களைப்போலவும், அத்திருமேனியினின்றும் வடிகின்ற இரத்தம் வெயிலைப்போலவுமாக; இருட்டைத் தாக்கும்படியான மிகுந்த பிரகாசத்தையுடைய சூரியனானவன் கேதுவென்கிற சர்ப்பத்தினாற் பற்றப்பட்டு ஆகாசத்திலிருந்து பூமியில் விழுந்ததற் கொப்பாகத் தோன்றினார். இந்தப்பிரகாரமாக இளையபெருமானே மூர்ச்சையடைந்தா ரென்றால், மற்றவர்களெல்லா மூர்ச்சையாய்ப் பூமியில்விழுந்து கிடந்தார்களென்பது ஓரதிசயமோ? இப்படித் தன்னம்புகளால் அவர்கள் தேகத்தையெல்லா மூடிவிட்ட இந்திரசித்தானவன் முன்னமிளையபெருமான்விட்ட பாணங்களாற் சரீரமெல்லாஞ் சல்லடைக்கண்களாய்த் தொளைக்கப்பட்டு வருத்தமுற்று, வாயினிரத்தங்களைக் கக்கிக்கொண்டு வருந்தினான்.

இந்திரசித்து மகாசந்தோஷத்துடன் இராவணனைக்கண்டுதனதரண்மனைசேர்தல்.

கவி.

சொற்றனமுடித்தேனினி யென்னுடற்சோர்வைநீக்கி
மற்றதுமுடிப்பெனென்று வென்னிருண்மாசினவாழ்க்கை
இற்றனராக்கின்றே பிறந்ததென்றிரவும்போலும்
கொற்றமங்கலங்களார்ப்ப விராவணன்கோயில்புக்கான்.

எல்லாரையுங் கொன்றுவிட்டு வருகிறேனென்று நாம் சொன்னசபதத்தை முடித்துவிட்டோம். நம்முடற் புண்ணையும் வருத்தத்தையும் நாளைக்கே யாற்றிக்கொண்டு வந்து மற்றக்காரியங்களையு முடிக்கவேண்டுமென்று நினைத்துடனே தன்னிரண்டுபக்கங்களிலும் இராக்கதர்கள்நின்று இன்றோடு மனிதருடையவுயிர் வாழ்க்கைபோய்விட்டதென்றும் குரங்குச்சேனையெல்லா மாண்டுவிட்டதென்றும், மங்கலவாத்தியமுழங்க ஜெயங்கூறிக்கொண்டுபோகத்

தன்பிதாவான இராவணனுடையமாளிகையைப்போய்ச்சேரும்படிப்புறப்பட்டு; தன்மேனுகாந்தகால மேகத்தைப்போல அஸ்திரவருஷங்களைப்பொழிந்து கொண்டிருந்த இளையபெருமானைவிட்டு நீங்கியும், கச்சிறுக்கிய பருத்த ஸ்தனங்களோடு முத்தையொத்த தந்த பந்திகளையுமுடைய இராக்ஷசஸ்திரீகளினது கருங்கண்களாகிய பாணங்கள் தனதுதோள்களில் தைத்துப் பாயும்படியான மன்மதயுத்த நீங்காதவனாகி, பத்துக்கோடி ரத்நதீபங்களை யேந்திக்கொண்டு குற்றமற்ற தேவலோக ஸ்திரீகளும், நாகலோக ஸ்திரீகளும், பூலோக ஸ்திரீகளும், பல்லாண்டு பாடிக்கொண்டுவரவும், இராக்ஷச ஸ்திரீகளெல்லாம் ஆலாத்தி எற்றி வாழ்த்திக்கொண்டு புடைசூழவும் வந்தனன்.

கவி.

தந்தையையெய்தியன்னாற் சூழ்ந்தனதன்மையெல்லாம்
சிந்தையினுரைக்கூறித் திருதியிடாக்கியெந்தாய்
நொந்தனன்யாக்கைநோய்தீ ருற்றிமேனுவல்லினென்றுப்
புந்தியிலனுக்கந்தீர்ப்பான் றன்னுடைக்கோயில்புக்கான்

இவ்வண்ணம் சகலாடம்பரத்துடன் அநேகவைபவங்களோடு ஜெயபேரிகை முழக்கிக்கொண்டு வந்தவனாகிய இந்திரசித்தென்னும் படுபாவியானவன் இராவணனைக்கண்டு, இரணகளத்தில் நடந்த காரியங்களையெல்லாம் அவனுக்குத் தெரியச்சொல்லி, ஐயா! வெற்றிபெற்றேன். நீர் இனிமேல் துக்கிக்கவேண்டாம். இன்றைக்கு நான் வெகுவருத்தப்பட்டேன். என் தேகப்புண்களையெல்லாம் சீக்கிரத்தில் ஆற்றிக்கொண்டு மற்றக்காரியமெல்லாம் பின்னாற் சொல்லுகிறேன். என்றவனைத் தேற்றிவிட்டு, தன்தேகத்தில் அறிவிலாது தேடிக்கொண்ட வருத்தத்தை நீக்கிக்கொள்ளும்படியாகத் தன்னுடைய மாளிகைக்குப்போய்ச் சேர்ந்தான்.

இலட்சுமணர் நாகாஸ்திரத்தாற் கட்டுப்பட்டு மூர்ச்சித்த காலையில் அண்டையிலிருந்த விபீஷணர் திகைத்து எண்ணுதனவெண்ணிவருந்திப் பிரலாபித்தல்.

கவி.

இத்தலையின்னவுற்ற வீடணனிழைப்பதோரான்
மத்துறுதயிரினுள்ள மறுகினன்மயங்குகின்றான்
அத்தலைக்கொடியனென்னை யட்டிலனளியத்தேனான்
செத்திலன்கவியெனின்றே னென்றுபோய்வையஞ்சேர்ந்தான்.

இவ்விடத்தில் விபீஷணாழ்வான் அதிகதுக்கத்துடனே தானின்னது செய்யவேண்டுமென்று அறியாதவராகி, மத்தினாற்கடைந்த தயிரைப்போலமனம் பேதித்து மயங்கி, ஐயோ! அவ்விடத்திலேயே துஷ்டனான இராவணனுடையமகன் என்னையுங் கொல்லாமற்போனானே; தயவில்லாத நானேயாகிலுநான்று கொண்டிறவாமற் போனேனே; ஆகிலுநான் மகாதைரியவான், என்றுநிலை யொத்துவந்து பூமியில்விழுந்து புரண்டு,நாகபாசத்தினாலே என்னுசாரியருடைய

திருத்தம்பியார் கட்டுண்டார். அதுபோலவே என்னட்பினர்களான வானரவீரர்களெல்லாருங் கட்டுண்டு போனார்கள். நானொருவன் மாத்திரம் இறவாமலிருக்கின்றேன். சக்கரவர்த்தித் திருக்குமாரர் என்னை யென்ன நினைப்பார்? என்று சிந்தித்து மனோஉஷ்ணத்தால்தீய்ந்த மலர்மாலையையுடையமார்பராய் வாயைத்திறந்து கதறி, என்னை ஸ்வாமியானவர் இவன்கூடவேயிருந்து மோசம்பண்ணிக் கொல்லச்செய்தானென்பாரோ? கூட வழைத்துக்கொண்டு போய்த் தன்மகனுக்கு வெற்றியுண்டாகும்படிச் செய்தானென்று சொல்வாரோ? இப்படிப்பட்ட பொல்லாங்குக்கெல்லாம் இவனே தருந்தமூலமாய் நமக்குவிசுவாசம்வர நடந்து காட்டினானென்று நினைப்பாரோ, வென்று தமது கண்ணீரைப்போல உயிரையுங் கரையச்செய்து பின்னுஞ் சொல்கின்றார்.

ஆ தெய்வமே! அந்தச் சண்டாளனாகிய இந்திரசித்து போர்செய்த போது சமானமில்லாத இந்தத் தண்டாயுதத்தினாலே அவனைத் தேரோடு நசுங்கும்படி கொன்று, என்மனதின் சுத்தத்தை இவருக்காவது தெரிவிக்காமற் போனேனே: அல்லதவன்கையிற் சாகாமலும்போனேனே: ஒருவிதத்தாலு மேலிவடையாமற் போனேனே: இனியாருக்கு நானுறவானவனாவேன்? கொஞ்சமுந் தயையில்லாமற் சும்மா அழுதுகொண் டிருக்கின்றேனே: ஐயோ! நானிவர்களோடு சேர்ந்து அவர்களுடன் சண்டைசெய்து கூடவேமாண்டு போகவேண்டும். அல்லதுபிழைத்தாற் கூடப்பிழைத்து உள்ளங்கை நெல்லிக்கனிபோல என் விசுவாசத்தைக் காட்டவேண்டும். இவ்விரண்டிலொன்றேனுஞ் செய்யாமற்போனேன். அல்லதுபிறகாவது மாண்டுபோகவில்லை. நான் துஷ்டகாரியத்தைச் செய்யாததினாலே அவனுக்கும் நல்லவனாகாமற் போனேன். இப்போ தபயங்கொடுத்தாண்ட இவருக்கும் ஆகாமல், குத்தினவனையும் குத்துண்டவனையுங் கொன்ற இருமுனையிலுங் கூர்மையுள்ள சூலத்தைப்போல இருவரையுங் கெடுத்துவிட்டவனானேன். என்று பலவிதமாய்ப் புலம்பிக்கொண்டழுது துக்கித்தனர்.

அனலனென்னும் விபீஷணர்மந்திரி அவ்விபீஷணரைத்தேற்றி இராமமூர்த்திபால்வந்து இலட்சுமணருக்குநேர்ந்த இடுக்கணுரைத்தல்.

கவி.

அனையனபலவும்பன்னி யாகுலித்தழுவானை
வினையுளபலவுஞ்செய்யத் தக்கனவீரீயும்
நினைவிலார்போலநெஞ்ச நெகிழ்இயோநித்தியென்று
இனையனசொல்லித்தேற்றி யனலன்மற்றிதுவுஞ்சொன்னான்.

நீயினிதிருத்தியான்போய் நெடியவற்குரைப்பனென்னாப்
போயினனனலன்போயப் புன்னியன்பொலன்கொள்பாதம்
மேயினன்வணங்கியுற்ற வினைபெலாமியம்பிநின்றான்
ஆயிரம்பெயரினானு மருந்துயர்க்கடலுளாழ்ந்தான்.

இவ்வண்ணம் பலவற்றையெண்ணி யெண்ணி வாய்விட்டரற்றித்துக்கிக்கின்ற விபீஷணாழ்வானை அனலனென்கிற ராக்ஷசமந்திரிபார்த்து, ஐயா! இனிநடக்கவேண்டிய காரியங்களையெல்லாஞ் செய்யவேண்டியவர் நீர். நினைவில்லாதவர்களைப்போல நீரும்புலம்பலாமோ ஐயா விபீஷணாழ்வானே! நீரிவ்விடத்திலிவர்களைக் காத்துக்கொண்டிரும். அடியேன்போய் பெரிய பெருமானுக்குச் சொல்லுகிறேன். என்று புறப்பட்டுப்போய்த் தர்மமே ஸ்வரூபமாயுள்ள ஸ்ரீராமருடைய திருவடித்தாமரைகளில் விழுந்து, இரணகளத்தில் நடந்த சமாசாரங்களை யெல்லாம் விவரமாக விண்ணப்பம்பண்ணினான். அதைக்கேட்ட சகஸ்திரநாமங்களையுடைய ஸ்ரீராகவனார் துக்கசாகரத்தில் மூழ்கி, ஒன்றும்பேசாமலும், தமது நிலைமையை யறியாமலும், உயிருஞ்சோராமலும், கண்ணீர் விடாமலும், உலோகத்திலுள்ள ஒன்றையும் பாராமலும், உலோகத்தைப் படுசூரனைப்படுத்தி விடாமலும், கோபங்கொண்டு; தமது திருக்கையா லிவ்வுலகத்திலுள்ள எல்லாவற்றையும் வாரி இறைத்துவிடாமலும் மழுங்கி, பிராணனுண்டோவில்லையோவென யாவருக்குங் காணப்பட்டு, மனம்புழுங்கிப் பெருமூச்சுவிட்டுத் துக்கித்து, இவ்விடத்திருந்து செய்யத்தக்க தொன்றுமில்லையென்று திடீரென்றெழுந்து, வேகமாய் மடமடவென்றோடி, தமது தம்பியார் சத்துருக்களைத் தாக்கியடித்த ரணக்களத்தை நெருங்கினார். அப்போது விஷமும் — மேகமும் — கருங்கடலும் — ஆகிய விவைமுதலான மற்ற நீலநிறமுள்ளவைகளை யெல்லாம் ஒருமிக்கச்சேர்த்துப்பிழிந்ததைப் போலவும், கருநிறமேகமானது சூல்முதிர்ந்து உலகமெல்லா மைவருஷம் வருஷித்ததுபோலவும், எங்குமிருட்படலமூடிக்கொண்டு அர்த்தராத்திரிகாலமா யிருந்தது.

அக்கால் ஆயிரந் திருநாமங்களையுடைய ஸ்வாமியானவர் அதிக சிரேஷ்டமான அக்கினியாஸ்திரத்தைத் தம்முடைய கோதண்டத்திற் பூட்டிவிட்டார். அம்மாத்திரத்தி லப்பகையாகிய விருள்நீங்கி யோடும்படிச் சூரியனுச்சியி லுதித்தாற்போல உலோகமெல்லாம் வெளிச்சமாயிருந்தது. பிரம்மகபாலத்தைக் கையிலுடைய உருத்திர மூர்த்தியானவர் உலோகத்துள்ள உயிர்களையெல்லாமழித் துண்ணுகின்ற யுகாந்தகாலத்திற் பொங்கிய சமுத்திரம்போல இரத்தம்பிரவகிக்க எங்கும் பிணமயமாயிருக்கின்ற அந்தரணக்களத்தை ஸ்ரீராமர்பார்த்தனர்.

ஸ்ரீராமர் யுத்தகளம்புகுந்து இலட்சுமணரைத் தேடிக்கண்டு மனந்தியங்கி வருந்தலும் விபீஷணர் தேற்றுதலும்.

கவி.

பிணப்பெருங்குன்றினூடுங் குருதிநீர்ப்பெயரப்பேரும்
கணைப்பெருஞ்சேற்றினூடும் படைக்கலநெருக்கினூடும்
மணைப்பெருங்களத்தின்மோடி மங்கலவாழ்க்கைவைப்பில்
கணத்திலுமாதிப்போதிற் றம்பியைச்சென்றுகண்டான்.

அய்யவனுக்கைதன்மேல் விழுந்துமார்பழுந்தப்புல்லி
உய்யலனென்னவாவி யுயிர்த்துயிர்த்துருகுகின்றான்
பெய்யிருதாரைக்கண்ணான் பெருந்துளிபிறக்கவானின்
வெய்யவன்றன்னைச்சேர்ந்த நீனிறமேகமொத்தான்.

அந்தப் பிணமலைகளுக்கு ப்ரேதப்பிரவாகத்திற்கு நடுவிலும்-நிணமுள்ள சேற்றிலும் – ஆயுதநெருக்கிலும் – அரைகுறைகளுக்குள்ளாக யாவரையுமாராய்ந்து, ஒரு மங்கலகரமான விடத்தில் இளையபெருமாளிருக்கக்கண்டு, உடனேயவர்மீது விழுந்து தம்முடைய திருமார்பிலுறும்படித் தழுவி, அப்பாதம்பி! இனிநா னுன்னைவிட்டுப் பிழைக்கமாட்டுவேனோ? என்றுவிசோர்ந்துருகித் தாரைதாரையாகக் கண்ணீர்பெருக்கி, ஆகாசத்தில் மழையைப் பெய்துகொண்டு சூரியனைச்சூழ்ந்துநின்ற நீலநிறமான மேகத்துக்கொப்பாக விருந்தார்.

அந்தச்சமயமவர்பட்டபாட்டை என்னென்று சொல்லுவேன்? கையுங்காலுமுதைத்து உழைத்துக்கொள்ளுவார். பெருமூச்செறிவார். உருகிப்போவார். புத்திமயங்கிப்போவார். செய்யவேண்டியகாரிய மின்னதென்றறியார். ஓ இலக்ஷ்மணா! ஓ இலக்ஷ்மணா! என்றழைப்பார். தமது திருக்கையால் வாயையு மூக்கையு மூடிக்கொண்டு சும்மாவிருப்பார். ஐயா இலக்ஷ்மணா! நாமினி பிழைப்போமோவென்று சொல்லுவார். இயாவர்க்கும் பிறந்தவர்போற் காணப்பட்டும் பிறவாதவரான சர்வலோகசரண்யர் தமது தாமரை மலர்போன்ற திருக்கைகளால் அவ்விலட்சுமணருடைய பாதங்களைத் தடவிப்பிடிப்பார். தொடையை மெல்லெனத்தட்டுவார். பரிசுத்தமான தாமரைமலர்போன்ற அவருடைய கண்கள் சிமிட்டுகிறதோ இல்லையோவென்று பார்ப்பார். மார்பைத் தொட்டுப்பார்த்து நெஞ்சந்துடிக்கிறதென்று சொல்லுவார். ஆகாசத்தைப் பார்ப்பார். இலக்ஷ்மணனைத் தூக்கித்தமது திருத்தொடைமேல்வளர்த்திக் கொள்ளுவார். மறுபடியும் பூமியில் வளர்த்துவார். அந்தத் திருடன் போய்விட்டானோ வென்பார். வானரவீரர்களையெல்லாம் பார்ப்பார். ஆதிசங்கற்பத்தை நினைப்பார். தமது திருத்தோளிலுள்ள பெரியவில்லைப் பார்ப்பார். அம்புகளையெடுத்துப் பார்ப்பார். இந்தலோகத்தில் என்னைப்போல் இந்தத்துன்பத்தை யடைந்தவர்கள் வேறே யாராவதுண்டோவென்பார். எனக்குநேரிட்ட இந்தஎளிமைத்தனம் பெரியதென்பார்.

எல்லா வளவைப்பிரமாணங்களையுந் தாண்டிநின்றவர் மீட்டுமீட்டுந் தமதுவில்லை நோக்குவார். இந்திரசித்துவினுடைய நாகபாசக்கட்டைப் பார்ப்பார். விடியாத விரவைப்பார்ப்பார். ஆகாசத்திலுள்ள தேவர்களைப்பார்ப்பார். பூமியைவேருடனே பேர்த்துவிடுகிறேனென்பார். தமது திருப்பவளம்போன்ற இதழைக்கடிப்பார். பெரியோர்களுடைய சாஸ்திரசம்மதியைப் பார்ப்பார். இப்படிக்கெல்லாம் தம்மைப்போலத் தமதுபுகழை விரும்பும் திருத்தோளையுடைய ஸ்ரீராமமூர்த்தியானவர் படாதபாடுபட்டு, அப்பாதம்பி விபீ

ஷணா! இந்திரசித்துக்கு இளையபெருமாளுக்கு மிவ்விதசண்டை நேரிட்டதென்று என்னைச்சீக்கிரமாக அழையாமற்போனாயே. இந்தத் தேவாஸ்திரத்தைத்தொடுத்த அவ்விந்திரசித்துவின் தலையுடலினைத் துணித்து உயிரைவாங்கி விடுவேனே; என்னை பனியாபமாய்க் கெடுத்துவிட்டாயே என்று எக்காலத்துங்கெடாதவரான ஸ்ரீராமர் அருளிச்செய்தனர். அவ்வார்த்தையை இருதயரோடழுதுகொண்டிருந்த விபீஷணாழ்வான் கேட்டு, ஸ்வாமி! அந்தச் சண்டாளன் யுத்தத்திற்குவந்து சண்டைசெய்வானென்பதை அடியேனறியமாட்டேன். அவன்வந்த யுத்தத்தில் நின்ற காலத்திலும் அவனே தோற்றுப்போவானென்றே யுணர்ந்திருந்தேன். இந்தமாய மித்தெய்வத்தன்மையுள்ள அஸ்திரத்தால் வந்ததேயல்லாமல் வேறொன்றுமல்ல.

சுவாமி! அதிகாயனுடைய தேகத்தை முண்டமாக்கி வெற்றிபெற்ற நம்முடைய இளையபெருமாள் உடனேயிருப்பாமல், இலங்காதிபத்தியத்தைப்பெற்றவனான இராவணன் யுத்தத்திற்கு வருவானென்று எண்ணிக்கொண்டிருக்கும்போது அவனுடைய பிள்ளையாகிய இந்தப்பயல் நாற்பதுவெள்ளஞ் சேனையுடனேவந்து, நம்முடைய நாற்பதுவெள்ளம் வானரசேனைகளின்மீது பாணங்களைப்பிரயோகித்து அநேகங்களைக்கொன்று, மற்றவானரவீரர்களைத் தூரத்திப் பெருஞ்சண்டைசெய்து, அவர்களைமூன்றுதரம் பூமியில் மூர்ச்சையாய்விழும்படிச்செய்தான். பிறகாயிரஞ் சிங்கங்கள்பூட்டிய தேரின்மேலேறி ஆண்மைமிகுந்துக் கொப்பான இளையபெருமாளை யெதிர்த்தான். இளையபெருமாள் அனுமான்மீது ஆரோகணித்தருளி, அவனுடைய ஆயிரந்தேரும் பொடிப்பொடியாகும்படித் தம்முடைய வில்வல்லமையைக்காட்டி; பிறகவனுடனே வந்த நாற்பதுவெள்ளஞ் சேனைகளையும், உதவியாய்வந்த பத்துலக்ஷஞ்சேனைகளையும், சூரியனைக்கண்ட பனிபோற்கொன்று; அவனுக்குச் சக்கரரக்ஷகராய்வந்த மஹாபார்சுவனென்பவனையும், மஹோதரனென்பவனையும், பராரியாய்த் தூரத்திவிட்டு; இனியென்ன இருக்கிறது அவனு மிறந்தானென்பதாக அநேகதிவ்வியபாணங்களை அந்தச்சண்டாளனுடைய மார்பிலெய்தார்.

அப்படியெய்த பாணங்கள்பட்டும் பின்பு விடமெல்லா மிரத்தமொழுகும்படிநின்றவனை நான்பார்த்து, இவன்சேனையெல்லாம் முடிந்து ஒருவனுஞ் சோர்ந்துநிற்கின்றானே; தப்பிப்போவானேயானால் ஏதேனும்வஞ்சனைசெய்வானென்று லோகமெல்லாங்கீர்த்திபரவச் செய்திருக்கின்ற ஸ்வாமிக்குச் சொன்னேன். சூரியனும் அஸ்தமனமானான். உலகமெல்லா மாயமாயிருண்டுவிட்டது. பின்னர் வஞ்சகனான இந்திரசித்து தன்னுடையமாயவரத்தினாலே ஆகாசத்திற்போ யொளித்துக்கொண்டு நாகபாசத்தையேவி, நம்முடையகூட்டத்தையெல்லாம் சோரும்படிப் பண்ணினானென்று, அப்பிறகு தொளைபட்ட புண்ணுடையவரைப்போல அழுதகண்ணும் தொழுதகையுமாய்நின்று விண்ணப்பம்பண்ணிய விபீஷணாழ்வாரானவர் பின்னுஞ்சொல்லுகின்றார். ஓ எங்களாண்டவனே! இவர்களெல்லாரும்பிரானைப்போனவர்களல்லர். கட்டின

பாசமாத்திரமலுந்தால் அவ்வெய்திருக்கின்ற புல்லினுனிபோன்ற பாணங்களுக்கு வருத்தப்படமாட்டார்கள். தேவரீர்புலம்பி மனஞ்சலித்துத் துக்கிக்கவேண்டாம். தருமத்தை யொருநாளும்பாவம் வெல்லமாட்டாதென்றார்.

ஸ்ரீராமபிரான் இந்நாகாஸ்திரத்தின் மகிமையென்னவென்றுகேட்க விபீஷணர் அவ்வஸ்திரத்தினது மகிமையைச்சொல்லுதலும் சுவாமிபலபலவெண்ணிச் சொல்லித் துக்கித்தலும்.

கவி.

யாரிதுகொடுத்ததேவ னென்னையீதிதனைத்திரும்
காரணம்யாதின்று ணர்த்ததுகழறிக்கவென்
றாரியன்வினவவன்னனல் வீடணனமலசாலச்
சீரிதென்றதனையுள்ள பரிசெலாந்தெரியச்சொன்னான்.

அதைக்கேட்ட ஸ்வாமி விபீஷணாழ்வாரைப்பார்த்து, இவ்வஸ்திரங்கொடுத்த தேவர்களார்? இதன்பெயரென்ன? இதுதிரும்படியான உபாயமெது? இதைப்பற்றி உனக்குத்தெரிந்ததையெல்லாம் விவரமாய்ச்சொல்லென்றுகேட்க விபீஷணாழ்வார் சொல்லுகின்றார்.

ஸ்வாமி! இதுமுன்னே லோகத்தைச்சிருஷ்டித்த பிரமதேவர்செய்த யாகத்திலுண்டானது. இதைக் கயிலாசபதியாகிய காமதகனர் அவரிடத்தினின்றும்வாங்கினார். அவரைநோக்கி இந்தச்சண்டாளன் அதிககொடுமையான தவசைச்செய்து பெற்றுக்கொண்டான். இஃதூழிக்காலத் திடியைக்காட்டிலுமிகுந்த வல்லமையுடையது. இது நாகபாசமென்று பேருள்ளது. இதனுடைய வல்லமைதான் ஆயிரங்கண்களைப்பெற்ற தேவேந்திரனுடைய வச்சிரத்தோள்களை யிறுக்கிக்கட்டினது. வேறேயொன்றை யாலோசிப்பானேன்? முன்னே அனுமானவ ரிலங்கைக்கு வந்தபோதும் இதுதான் அவருடைய தோள்களையு மிறுக்கினது. மேலும்தேவர்கள் சொர்க்கலோக ஐஸ்வரியத்தை யிழந்ததுமிதனால்தான். இந்நாகபாசம் தானேவிட்டால்தான் விடும். அல்லாவிட்டாற் பிரமலோகமுதலான லோகங்களெல்லாம் அழிந்தாலும் இதுநீங்கமாட்டாது. அப்படியிருக்க இந்தப்பூலோகத்தைப்பற்றிப் பேசியென்ன? மாமிசங்களெல்லாங் கழன்று உயிர்நீங்கினால் தானேவிட்டுவிடும். வேறேயிதற்குஉபாயமில்லை. ஓ தேனொழுகுகின்ற திருத்துழாய் மாலையைத்தரித்த ஸ்ரீரகுநந்தனா! இதன்வரலாறு இப்படிப்பட்டதாகுமென்றார்.

அப்போது தேவர்களுடைய துன்பங்களையெல்லாம் தீர்க்கும்படி அவதரித்தவரான பெரியபெருமாள் விபீஷணரைப்பார்த்து, தம்பி! அப்படியானால் இந்தஅஸ்திரத்தை இப்படிப்பட்ட துஷ்டர்களுக்குக்கொடுத்த தேவர்கள் மேலெதிர்த்துப் போகட்டுமா? இந்தலோகத்தையெல்லாஞ் சாம்பலாகச்சுட்டுவிட்டு காணுமுடிந்துபோகட்டுமா? இலங்காபுரி சின்னபின்னப் படும்படியாகச் செய்து அந்தராக்ஷசர்களுடைய வமிசங்களைக் கருவறுத்துப் போடட்டுமா? நான் செய்யவேண்டியதைத் தகுந்த வாலோசனையுடனே சொல்லக்கடவாய்.

இந்த நாகபாசத்தைக் கொடுத்தவர்கள் தாமே யென்னெதிர்வந்து இரங்கி வேண்டிக் கொள்ளும்படியான மார்க்கமுண்டானால் கோபம் தணிகின்றேன். இல்லாவிட்டால் முப்புரங்களையு மெரித்தகட்ட ருத்திரமூர்த்தியைப்போல இந்த மூன்றுலோகங்களையும் சுட்டு, ஒருநொடியிற் சாம்பலாக்கி அழித்துவிடுகிறேன்.

அப்பா விபீஷணா! என்னருமைத் தம்பியாகிய இலக்ஷ்மணனிறப்பானானால், பின்புஒருவேளை ராவணனை யென்னைப் புகழ்ந்தாலுமென்ன? பழித்தாலுந்தானென்ன? அப்பால் தருமந்தானென்ன? என்னை நம்பிவந்த வன்கிநேகர்களைக் காட்டிலும் தேவர்களானாலும் இந்த லோகத்திலுள்ள ஜீவர்களானாலும் எனக்கு நல்லவர்களாவார்களோ? ஐயோ! ஒருதுஷ்டன் இப்படிப்பட்ட துன்பத்தைச் செய்ததற்கு லோகத்தையெல்லாம் ஜெயித்து நாசம்பண்ணுகிறது நியாயமல்லவே; என்றிவ்வாறுசொல்லித் தமக்குத்தாமே துக்கித்து, இருந்திருந்து ஆலோசித்துப் பெருமூச்சுவிட்டு, தமது திருத்தம்பியாரைப் பார்க்கிறது மற்ற வானரவீரர்களிடத்தில் தமக்குண்டான அபாரதயவால் பெருஞ்சோகமுற்று, வேதமாகிய அங்குசத்தினெல்லையில் நிற்கின்ற பெரிய யானைபோன்ற இராமஸ்வாமியானவர் மறுபடியும் இளையபெருமாளுக்குச் சமீபமாய்வந்து, அவருடைய மலைபோன்றனவும் வெற்றிபெற்றனவுமான இருதோள்களைப் பிணித்திருக்கிற நாகபாசத்தைப் பலதரம் சற்றுப்பார்த்து, இஃது என்தம்பியைக் கொன்று விட்டதானால் நானுமுடனே மாய்ந்துவிடுவேனென்று நினைத்தார்.

இராமஸ்வாமியினிடத்தில் கருடபகவான் வருதல்.

கவி.

இத்தன்மையெய்து மளவின்கண்வந்த விமையோர்களஞ்சி விதுபோய்
எத்தன்மையெய்தி முடியுங்கொலென்று குலைகின்றவெல்லை யிதன்வாய்
அத்தன்மைகண்டு புடைநின்றவன்னனல் கலுழன்றனஞ்சின் மிசையால்
சித்தங்கலங்கி யிதுதீருமென்ன விருளுகுவச்சு தெரிவான்.

இந்தப்பிரகாரமாக ஸ்ரீராமமூர்த்தி துக்கிக்கிறதைக்கண்ட தேவர்களெல்லாம் ஸ்வாமியைவந்து பார்த்துப்பயந்து, இனியிதற்கென்னமாய் முடியப்போகிறதோவென்று பரிதபித்தார்கள். அச்சமயத்தில் ஸ்வாமி துக்கிக்கின்றதைப் பார்த்துக்கொண்டு தேவர்களுடனே நின்ற பெரிய திருவடியாகிய கருடாழ்வான் அதிவேகத்துடனே அன்பின் மிகுதியால் மனதுருகிவிட்டு, தமது பாரதந்திரிய ஞானமும் மறந்து ஸ்வாதந்திரியம் பாவித்து, ஸ்வாமியினுடைய இத்துக்கத்தை நீக்கிவிடுகிறேனென்று அதியிருள்நிறைந்த மத்தியராத்திரியில் ஸ்வாமிக்கெதிரில் தோன்றும்படியாக வருகின்றார். அஃதெவ்வாறெனில், ஒருகாலத்திலும் சலனப்படாத திருவுள்ளஞ்சேர்ந்து நிற்கின்றவரும், தமோகுணத்தைத்தரிய மிகுந்தவருமாகிய ஸ்வாமியானவர் சத்துவகுணத்தையுடையவரானபடியால் இதுவரையிலும் இலங்கைராவணனுடனே அழிக்

யாமற் கிருபையுடனேயிருக்கின்ற தன்மையைக்கண்டு ஆச்சரியப்பட்டுத் தம அவேகத்தால் மேருமலையும் பூமியும் கிடுகிடென்று நடுக்கங்கொள்ளவும், உலோகமெல்லாம்தேஜோமயமாய்ப்பிரகாசிக்கவும், கண்சிமிட்டாத திக்கஜங்களும் அதிகபிரகாசத்தைப் பார்க்கமாட்டாமற் கண்ணைமூடிக்கொண்டு பயங்குலங்கவுமாயின.

மேலும் — சண்டமாருதக்காற்றை வீசுகின்ற சிறகையுடையவரான அக்கருடபகவானனவர் அநேககோடிகாத தூரம் கடைநீண்டு தோற்றுகின்ற செந்தாமரை மலர்போன்ற திருக்கண்களினின்றும் தாரைதாரையாகக் கண்ணீர்சொரிந்து அநேகவிதமாக துக்கப்படுகின்ற ஸ்வாமியினுடைய திருமேனியைக்கண்டு அதிக சந்தோஷித்தராகி, குளிர்ந்த கடலானது தத்தளித்து அலைகளெறியவும், உலோகத்தை மூடிக்கொண்டிருக்கின்ற இருளானது இருந்தவிடந் தெரியாமலோடிவிடவும், வேதபுருஷன் பல்லாண்டுபாடவும், உலகத்தி லுள்ளவர்களெல்லாம் தம்மைச்சேவித்துப் பாபநிவாரணராகவும், பிணித்துக்கொண்டிருக்கின்ற நாகபாசமெல்லாம் சின்னபின்னமாய் பலஹீனப்பட்டு பிரமைக்களத்தி லெழுந்தருளி; இருளையடக்கிப் பிரகாசத்தைவிடுத்துத் திக்குகளிலெல்லாங் கிரணங்களைச்செலுத்திச் சந்திரனுக்கு ஒளியைக் கொடுத்துச் சொலிக்கின்ற கண்டத்தோடே ஒளிவிடுகின்ற கிரீடமானது பூமியின்மத்தியி லிருக்கின்ற மேருமலையின்மீது விளங்குகின்ற சூரியனைக்காட்டிலு மூன்றுமடங்கத்தன பிரகாசித்தன.

அன்றியும் — பலநாகராஜாக்களுடைய சிரோரத்தினங்களைக் கோடானுகோடியாகக் கொண்டு செய்திருக்கும் வகையில் மின்னலைக் கொண்டு அமைத்ததைப்போலும் பிரகாசிக்கின்ற ஆபரணங்களும் சாம்பூநதப் பொன்னாற்செய்தநெற்றிப்பட்டமும் பிரகாசிக்க, துளசிமணிமாலை மார்பினிடத்தசைய, தாம் பெருமானை வெகுநாள் பிரிந்த துக்கநீங்கும்படியாக அப்பகவானுடைய திருமேனியைக்கண்டு சிரசின்மீது இரண்டு கையையுங்கூப்பித் தொழுதுகொண்டு, ஸ்வாமியானவர் யுத்தகளத்தில் யாவருடனுங்கலந்து நிற்கிறபடியால் அவர் திருவடிகளில்மாத்திரம் தனியாகச்சேவிக்கக் கிடையாமல், அவர் துக்கித்துக்கொண்டிருக்கிற நிலைமையை நினைத்து நினைத்து நெஞ்சழிந்து, இந்தப் பதினாலுலோகமுந்தொழும்படியான திருவடிகள் பூமியில்தோயாமல் இறங்கி வரும்போதே அடிக்கடி ஸ்வாமியை வணங்கிக்கொண்டு வருகிறார்.

இப்படி வருகின்ற கருடபகவான் ஸ்ரீசக்கரவர்த்தித் திருக்குமாரரைப் பார்த்து, ஸ்வாமி! தேவரீர் உமது யதார்த்த ஸ்வரூபத்தை மறைத்துக்கொண்டு அவதரித்தீர். இப்போது உமது திருத்தம்பியாரைப் பிரிந்ததாக வருந்

தப்படுகின்றதுபோல மாயைகாட்டுதலை நீக்கியருளல்வேண்டும். தேவப்பிறவி முதலானஎழுவகைப்பிறவியுயிர்கட்கும்பிதாவானபிரம்ஹாவைப்பெற்ற தேவரீர் உமது திருவுளப்படி பிறவாமற்பிறந்து விளையாடுகின்றீர். ஓ சமானரகிதனே! அடியேங்களுடைய துக்கங்களையெல்லா நீக்கிரக்ஷிக்கின்ற தேவரீர் துக்கப்படுவதாய் நாடகமடிக்கிற விதமென்னோ? ஓ எங்கள் காரணவஸ்துவே! வருத்தப்படாதேயும்; வருத்தப்படாதேயும், என்று அநேகவிதமாய் ஸ்தோத்திரம்பண்ணத் தொடங்கினர்.

கருடபகவான் ஸ்தோத்திரம்.

கவி.

தேவாதிதேவர் பலராலுமுக்தன் திருநாமமோது செயலாய்
மூவாதவாறு முலகேழொடேழு மரசாளுமேன்மை முதல்வா
மேவாதவின்ப மனைமேவிமேல் கெடுவீகெண்டு முடியாய்
ஆவாய்வருந்தி யழுவாய்கொலாரிவ் வதிரேகமாயை யறிவார்.

எழுவாயெவர்க்கு முதலாகியோ ரிடையாகியெங்கு முடிவாய்
வழுவாதெவர்க்கும் வரமீயவல்லை யவரால்வரங்கள் பெறுவாய்
தொழுவாய்தொடர்ச்சி தொடராததன்மை யுருவாய்மறைந்த துயரால்
அழுவாயொருத்த ரிதுபோலுமாரிவ் வதிரேகமாயை யறிவார்.

உன்னெஞ்சில்வைத்த விருவர்க்குமொத்தி யொருவர்க்குமுண்மை யுரையாய்
முன்னெஞ்சகந்தி யுலகொக்கவொத்தி முடிவொக்கியொன்று முடியாய்
என்னெஞ்சுமின்ன செய்நேரவெண்ணி யிருவொர்க்குமொன்று விடியா
தன்னெஞ்சிபயந்தோகால் பிறிதகொலாரிவ் வதிரேகமாயை யறிவார்.

வானுனளித்தி முடிபாமணித்தி வருகாளிதந்தி மறையாய்
பேணுயுனக்கொர் பொருள்வேண்டுமென்று பெறுவனருத்தி பிடியாய்
ஊனுயுயிர்க்கு முயிராகிநிற்கு முனைவாயபெண்ணி லுருவாய்
ஆனுமிமற்றை யலியாவொரிவ் வதிரேகமாயை யறிவார்.

தான்றுயில்லை பலவென்னுமொன்று தனியென்னுமொன்று தவிரா
ஞானந்தொடர்ந்த சடமென்னுமொன்று நயனந்தொடர்ந்த வொளியால்
மானந்துறந்த பதமென்னுமூன்று மறையாலுயர்ந்த மறியா
ஆனந்தமென்னு மயமென்னுமாரிவ் வதிரேகமாயை யறிவார்.

வினைவர்க்குமுற்று முடனேயடைந்து யமைசெய்திடொன்று விழையா
நினைவர்க்குநெஞ்ச முறுகாமமுற்றி யறியாமணித்தி நிமிர்வாய்
முனைவர்க்குமொத்தி யமர்க்குமொத்தி முழுமுடனென்றும் முதல்வோர்
அனைவர்க்குமொத்தி தெரியாமையாரிவ் வதிரேகமாயை யறிவார்.

சீராதவேத முடிவின்சனன்னை விளைவேயுமெய்யிலீ யவிழ்யும்
கேளார்களின்று பிறவேறுபேசி கெடுவார்களன்றொன்ன தொடர்பாய்
மனனாதநிதி திழுமைந்த னாமொனமில்லை யறிவோர்
ஆளீயும்மாற்றி யசாதியாரிவ் வதிரேகமாயை யறிவார்.

எறிந்தாருமெறுபவொருமின்ன பொருள்கண்டிரங்கு பவரும்
செறிந்தாயதுன்மை யெனலாயதன்மை தெரிகின்றதன்றவிடையே
பிறிந்தார்பிரிந்த பொருளோடுபோதி பிரியாதுநிற்றி பிரியா
தறிந்தாரறிந்த நெறியாதியாரில் வதிரேசமாயை யறிவார்.

பேராயிரங்க ளுடையாய்தொடர்ந்த பொருடோறுநின்ற பிரியாய்
நேரய்பிறந்து திரிவாய்திறந்தோ றவைதேயுமென்று நிறையால்
கூராழிசங்க முடையாய்இரண்டோ ருருவாயகோட லுரிபோல்
ஆராயினேது மிலையாதியாரில் வதிரேசமாயை யறிவார்.

நறந்தாயுமொத்தி மறவாயுமொத்தி யயாதிமற்றிறவ் வினையும்
துறந்தாயுமொத்தி துறவாயுமொத்தி யொருதன்மைசொல்ல வலவாய்
பிறந்தாயிந்தை பிறழாதவன்பர் பிறவாமைநல்கு பெரியோய்
அறந்தானிறுத்த லிதாகவாரில் வதிரேசமாயை யறிவார்.

சொல்லென்றுநிற்றி பொருளாதியாய மறைதேடி யேதுமறியாய்
வில்லொன்றெடுத்து மிசையின்றிநிற்றி விளிசக்கயங்கை யுடையாய்
கொல்லென்றுநிற்றி கொலையுண்டுநிற்றி கொடியாயுன்மாயை யறியேன்
அல்லென்றுநிற்றி பகலாதியாரில் வதிரேசமாயை யறிவார்.

ஓ ஸ்ரீராமமூர்த்தி! சேனையர்கோனைமுதலாகவுடைய நித்தியசூரிகள் அநேகராலும் ஆரம்பத்திலே ஹரி: என்கிற திருநாமத்தைக்கொண்டு துதிக்கத்தக்க செய்கையையுடையோரே! தேவர்மானிடர் திரியக்குத்தாவரயாம் யாவுங்கெடாமல் பதினாலுலகங்களையும் செங்கோல்நடாத்துகின்ற மேன்பாட்டையுடைய காரணபூதரே! மானிடராக வரலிதாகிய ஆனந்தமடைந்து மென்பனையத்தக்க பேரின்பமான சுகத்தைக்காட்டுதற்கிடமான பதினாலுலகுக்குந் தலைமையான பரமபதமென்னுந் திருநாட்டையுடையவரே! இப்படிப்பட்ட தன்மையையுடையவராகிய தேவரீர் அதிக துக்கமுற்றவரைப்போல அழக்கடவீரோ? உம்முடைய மகாமாயையை அறியவல்லவர்கள் யாவர்?

ஓ ரகுநந்தனே! பிரமேந்திராதியர்களுக்கும் சிருஷ்டிகர்த்தாவும், இரக்ஷகக்கர்த்தாவும், சம்மாரகர்த்தாவுமாகி, எங்கும் அகண்டமாய் நிறைந்திருக்கின்றீர். அந்தப் பிரமேந்திராதியர்களுக்கும் புத்திமுத்திகளைக்கொடுக்கவல்ல தேவரீர் இந்த அவதார விசேஷத்தால் அவர்களிடத்தில் வரமாகிய பிரயோசனங்களைப்பெறுகிறீர். அவர்களை வணங்குகிறீர். சர்வகாரணத்துவ சர்வரக்ஷகத்துவ சம்பந்தங்களால் அவர்களுக்கும் தேவரீருக்குமுள்ள உடைமை உடையவனென்கிற சம்பந்தங்களைத் தோற்றுவியாமல், சாமானியமனிஷ்யரூபத்தைக்கொண்டு மறைந்துத் துக்கமுற்றவராயழுகின்றீர். இப்படியு மொருவனைப்போலேயிருக்கின்ற உம்முடைய மகாமாயையை அறியவல்லவர்கள் யாவர்?

ஓ தாசரதி! தேவரீருக்கொப்பாகச் சிருஷ்டிக்கருளின பிரமேந்திராதிகளுடனே தேவரும் உபேந்திரனென்னுந் திருநாமங்கொண்டு அவர்களோடு சமமுற்றிருக்கின்றீர். அவ்வாறிருந்தும் அந்தப் பிரமேந்திரர்களுக்குத் தேவ

ரீருடையவிலைமை இப்படிப்பட்டதென்று சொல்லுகிறீரில்லை. பிரஹ்மாமுதல் பிபீலிகைமுடிவாகிய சமஸ்தசேதன சேதனங்களையுங் கிரமமாய்நிறுத்தி, எல்லாவற்றிற்கும் நீரே காரணபூதரென்கிறதற் கடையாளமாக முந்தி எழுந்தருளியிருக்கின்றீர். பின்னும் பஞ்சபூத மயமான லோகத்தோடு அந்தர்யாமித்துவமாய்க் கலந்து, அந்தந்தப் பூதஸ்வரூபத்தை யொத்திருக்கின்றீர். அந்தந்தப் பூதங்களின் யதார்த்ததன்மையை யூகித்துப்பார்க்குமிடத்தில் ஒவ்வொரு பூதங்களுமாகாமற் பிரத்தியேகமா யெழுந்தருளுவீர். அடியேனைப்போன்றவர்கள் தேவரீருடைய இவ்விதமான செய்கையை அறியவேண்டுமென்று நினைப்பார்களேயானால், தங்களறிவெல்லாம் அந்தகாரமூடி ஒருநாளும் விடிவடையமாட்டார்கள். இந்த மாயையானது உமக்குச் சமானமானதோ? அல்லது உமக்குவேறானதோ? இவ்விதமான உம்முடையமகாமாயையை அறியவல்லவர்கள் யாவர்?

ஓ சக்கரவர்த்தித் திருக்குமாரரே! உலோகத்திலுள்ள யாவர்களுக்கும் அவரவர்களுக்குத் தக்கபடியே வாழ்நாளைக் கொடுக்கின்றீர். அவர்களுக்கு அந்தரியாமியாய் நின்றிருக்கின்றீர். எல்லாக்காலங்களையுங் கடந்து நிற்கின்றீர். உமக்கின்னபொருள் வேண்டுமென்று ஒரு பொருளையும் இச்சிக்கமாட்டீர். பஞ்சபூத பஞ்சீகரணமான தேகமெல்லாம் தேவரீரேயாய் அந்தத்தேகத்துக்குள்ளிருக்கின்ற உயிராகி! அவ்வுயிர்க்கு அந்தராத்துமாவாகி நிலைபெற்ற உணர்வுமாகின்றீர். பெண்ணாகின்றீர். ஆணாகின்றீர். இவ்விரண்டுமல்லாத அலியாகின்றீர். இவ்விதமாகிய உமதுமகாமாயையை அறியவல்லவர்கள் யாவர்?

ஓ கௌசலைதனயரே! நான்குவேதங்களும் தேவரீரை எண்ணிலடங்காத பலவாகிய ஸ்வரூபமென்று சொல்லுகின்றன. ஏகமாகிய ஸ்வரூபமென்று ஒரு நூல்சொல்லுகின்றது. நீங்காத ஞானப்பேரொளியாகிய ஸ்வரூபமென்று ஒருநூல் சொல்லுகின்றது. கண்ணுக்குப் புலப்படுவதான வெளியினளவைக் கடந்த பரமபதஸ்வரூபமான தேவரீரை முடிவில்லாத ஆநந்தஸ்வரூபரென்றுஞ் சொல்லுகின்றது. அவ்வானந்தத்தை விளைப்பதான வஸ்துவென்றுஞ் சொல்லுகின்றது. இவ்விதமாகிய உம்முடைய மகாமாயையை அறியவல்லவர்கள் யாவர்?

ஓ சீதாபதி! செய்யத்தக்க தொழிலின் கூட்டங்களையெல்லாஞ்செய்ய சேதனர்களுக்குக் காசாணுதி யவயவங்களைச் சிருஷ்டித்தபோதே அவற்றோடு நிமிலேயேயுண்டாக்கினீர்: ஒன்றிலும் விருப்பமின்றி அத்தொழில்களையெல்லாம் அந்தராத்துமாவாயிருந்து செய்கின்றீர். நினைவால் பிராப்தியாகின்ற மனதிலுள்ள ஆசைகளையெல்லா முடிப்பித்து, அந்தமனதுக் ககோசரமாகியேயிருக்கின்றீர். நாரதாதிகளாகிய மகாரிஷிகளுடனிருந்தே அவர்களால் தியானிக்கத் தியத்தக்கவராகின்றீர். அவ்வாறே உபேந்திராதியராய்த் தேவர்களுடனிருந்தே அவர்களுடைய இமைப்புறுகளிற் புறம்பேயிருக்கிற வல்லுனைப்போலத்

நியமித்தனையும்படி யெழுந்தருளி யிருக்கின்றீர். இந்த மகாரிஷிகளையும் தேவர்களையும் பெருமூடர்களாகச்செய்து அவர்களோடொருவராய்த் தேவரீருந் தெரியாதவரைப்போலவே யெழுந்தருளி யிருக்கின்றீர். உம்முடைய மகாமாயையை யாரறிவார்கள்?

ஓ கிருபாநிதி! மாறுபடாதவேதமான ஆகமதந்த்ரத்தில் நாராயணனுகிய உண்மை ஞானானந்தமயஸ்வரூபமாக நமதறிவிற்கண்ணே என்றும். இவற்றைக் கேட்டறியாமலும், கண்டறியாமலும், அறிவுகெட்டவர்கள் அவ்வழியாதலே தம் அவாங்மனோகோசர மென்றவற்றைத் தானே சொல்லிய மறுமொழியினாலே அழியாத்வேதங்களது சொல்லுகையைத்தப்பாமல் உன்னுடைய கடாக்ஷவீக்ஷணியமில்லாமல் ஞானியவாதிகளாறுர்கள். தேவர்களுக்கு நேர்ந்த பகைவர்களாகிய ராக்ஷசர்களைச் சம்ஹரிக்க புருஷாகாரியானும் அரசனுகவும் வந்திருக்கின்றாய். ஞானாசிரியர்களுக்குக் கையாளாயுமிருக்கின்றீர். உம்முடைய மகாமாயையை அறியவல்லவர் யாரிருக்கின்றார்கள்.

ஓ குணநிதி! யுத்தத்தில் ஆயுதங்களைப் பிரயோகிக்கின்றவர்களும், அந்த ஆயுதங்களாற் காயம்படுகின்றவர்களும், இவ்விரண்டுகாரியங்களையும் பார்த்து இரக்கப்படுகின்றவர்களும், தேவரீரேயா யிருக்கின்றீர். அதிஆச்சரியமான இதென்கின்ற நிலைமை தேவரீருடைய சர்வகாரணத்துவ சர்வஜ்ஞத்துவங்களால் பரிஷ்காரமாய் வெளியாகிறது. உம்மைவிட்டு நீங்கினவர்களால் நீக்கப்பட்ட அஞ்ஞானப்பொருளுடனே தேவரீரும் அவர்களைவிட்டு நீங்கிநிற்கின்றீர். அப்படி நீங்கியிருந்தும் அவ்வஞ்ஞானிகளுடனே அவர்களைப் பிரியாமல் அவர்கள் கடைத்தேறும்வழியைப் பார்த்துக்கொண்டு அவர்களைப் பிரியாமல் அவர்களுடனே அந்தர்யாமித்துவத்தால் வசிக்கின்றீர். அநந்ய பிரயோஜனரும் சரமோபாய நிஷ்டரும், பிரபந்நர்களுக்கும் தேவரீராகவே நிற்கின்றீர். ஆதலால் தேவரீருடைய இவ்வித நிலைமையாகிய ஆச்சரிய மகாமாயையை யாவரறிவார்கள்?

ஓ தயாநிதி! ஆயிரந் திருநாமங்களை யுடைத்தாயிருக்கின்றீர். காரண காரியமாய்ச் சம்பந்தித்திருக்கின்ற சராசரங்களிலெல்லாம் நிலைகொண்டு நித்தியமாயிருக்கின்றீர். இவற்றிற்குவேறாயும் அவதரித்திருக்கின்றீர். இந்தாவஸ்தைகள் ஒருவருக்குந் தோற்றுவிக்கின்றீரில்லை. பரமபாகவதர்களால் வெளியிட்ட உமது ரகஸ்ய நிலைமைகளை அவர்கள் வாக்கியத்தினாலு மெரிட்டவொட்டாமல் அவற்றிலடங்கி நிற்கின்றீர். உம்முடைய ஸ்வரூபத்தைத் தியானிப்பவர்களுக்குச் சக்ரவர்த்தியாய்ச் சேவைசாதிக்கின்றீர். உலகமே யுமக்குத் திருமேனியென்று உணர்விக்கும்படி விராட்ரூபமா யெழுந்தருளி யிருக்கின்றீர். அத உண்மையை ஆராய்ந்தால் அநந்தவையங்களாகிய சராசரங்களெல்லாமும் அவயவியாகிய தேவரீர் அல்லவா? இவையன்றி அப்

பிரமேய பரவாசுதேவனுகவும் எழுந்தருளி யிருக்கின்றீர். தேவரீருடைய மகா கபடநாடக மாயையை அறியவல்லவர் யாவர்?

ஓ ஸ்வாமி! தேவரீருடைய ஸ்வரூபநிலையையெல்லா மறந்தவரைப் போலவும் காணப்படுகின்றீர். தேவரீருடைய முயற்சிகளிலெல்லாம் உம்முடைய ஸ்வரூபத்தை மறவாதவரைப்போலவே யெழுந்தருள்கின்றீர். அம்முயற்சியிலும் ஒவ்வொருகாலங்களில் கொஞ்ச மறந்தவரைப் போலவுங் காணப்படுகின்றீர். லோகவியாபாரங்களை மறந்து நாட்டைவிட்டுக் காட்டையடைந்து துறந்தவரைப்போலவுங் காணப்படுகின்றீர். பந்துசம்பந்த துக்கத்தைக் காட்டி அந்தவியாபாரத்தை நீங்காதவரைப்போலவும் காணப்படுகின்றீர். தேவரீர் இன்னநிலைமையில் நிற்கின்றவரென்று நிர்மாணிப்பதற்கு அகப்படமாட்டீர். கரசரணுதி யவயவங்களைப் பெற்றுப்பிறந்து தேவர்திருவடிகளில் பற்றுடைய மனமானது தடுமாற்றமடையாத உமதடியார்களைக் கருமவுலகத்திற் பிறவாமலிருக்கக் கிருபைசெய்கின்ற ஓ பரமாத்மனே! தேவரீருடைய அரியதர்மங்களை நிலைபெறச் செய்வதாகிய உமது மகா மாயா லீலையை ஆரறியவல்லவர்கள்?

ஓ கிருபாநிதியே! சகல சப்தஸ்வரூபமாக எழுந்தருளி யிருக்கின்றீர். அந்தச்சப்தார்த்தமுந் தேவரீரேயா யிருக்கின்றீர். தேவரீருடைய குணப்பிரகாச ஸ்வதப்பிரமாணமான வேதபுருஷனால் ஒருகுணமுங் கடைகாண நிச்சயித்தறியப்படாமல் நிற்கின்றீர். அப்படிப்பட்ட தேவரீர் திருக்கரத்தில் ஒருவில்லைப் பிடித்துக்கொண்டு யாதொரு வருத்தமும் சத்துருக்களுக்குத் தோற்றவொட்டாமல் எழுந்தருளி யிருக்கின்றீர். பகைவர்களையெல்லாம் யுத்தத்திற்கு அழைக்கின்ற பாஞ்சசன்னியாழ்வானைத் திருக்கரத்தி லுடைத்தா யிருக்கின்றீர். இராக்ஷசர்களையெல்லாம் கொல்லத் திருவுளங்கொண் டிருக்கின்றீர். அவர்களுக் கந்தர்யாமியாய் அவர்களுடனேயு மிருக்கின்றீர். ஓ பாபப் பகைவரே! உமது மாயையை அடியேன் இவ்விதமென்று அறியமாட்டேன். தேவரீர் இராத்திரியுமா யிருக்கின்றீர். பகலுமா யிருக்கின்றீர். இந்த அபாரமான அற்புதத்தை யறியத்தக்கவர்கள் யாவர்? என்று பலவாறாக ஸ்தோத்திரம்பண்ணி பணிந்துரைத்து, அவ்விராத்திரி கெடும்படிப் பொன்மயமான மேருமலையைப்போல் ஒளிவீசிக்கொண்டு எதிரே நின்றார்.

இப்படிநிற்கின்ற பெரிய திருவடியாகிய கருடபகவானை நிலைபெற்ற புகழையுடையவராகிய சக்கரவர்த்தித் திருக்குமாரர் கடாக்ஷித்து, இவர்யார்? தேவபுருஷராயிருக்கின்றாரென்று நினைத்துக்கொண் டிருக்கும்போது, இந்தச்சப்தலோகங்களையு மூடிமறைக்கும்படியான சிறகையுடையவராகிய கருடபகவான் உயரப்பறந்து வட்டமிட்டு ஸ்வாமியை வலமாகச் சுற்றிவந்து நின்று, பலகோடியாயிர நாகவனையிலும் தமது சிறகின்காற்றை வீசினார்.

இலக்ஷ்மணாதியரைப் பிணிப்புண்டிருந்த நாகபாசம் கழலுதல்.

கவி.

வாசங்கலந்த மரைநாளநூலின் வகையென்பதென்னை மழையின்
ஆசங்கைகொண்ட கொடைமீளியண்ணல் சராமன்வெண்ணெய்நலூரும்
தேசங்கலந்த மறைவாணர்செஞ்சொலறிவாளரென்றும் முதலோர்
பாசங்கலந்த பசிபோலகன்ற பதகன்றுரந்த வுரகம்.

அம்மாத்திரத்திலே அந்தச் சிறகிலிருந்து புறப்பட்ட காற்றானது தன்னைச் சகிக்கிறதற்குச் சக்தியில்லாத நிலத்தினிடத்தில் யாவர்க்கு முணர்வுண்டாகும்படி குளிர்ந்து வீசிக்கொண்டு கிருபையுடனே போக, எல்லாருடையுங் கட்டியிறுக்கியிருந்த நாகபாசமானது சின்னபின்னப்பட்டுச் சிதறிப்போயது. ஓர் மதத்தயானையைக் கட்டிய பரிமளத்தோடு கூடப்பிறந்த தாமரையினது தண்டிலுண்டாகிய மெல்லிய இழையைப் போல் அந்நாகபாசம் அறுந்ததென்று சொல்வதுதானு ஒழுகு; பிரதியுபகாரத்தை நினையாது மழையைப் பொழிகின்ற மேகமென மயங்குதலைப் பார்க்கின்றவர்களுக்குச் செய்கின்ற கொடுத்தற் றொழிலிலே வலம்பெற்ற தலைவராகிய, சராமுதலியார் வாழும் திருவெண்ணெய் நல்லூரையடைந்த ஞானமாகியவழகையுடைய வடமொழிப்புலவரும், தென்மொழிப்புலவருமாகிய இவர்கள் முதலாயினரை வினைப்பந்தத்தால் தொடர்ந்தவறுமையில் மேலிட்டபசியானது எப்படி நீங்குமோ அதைப்போல் கருடபகவானது சிறகுகளினுடைய மிக்க காற்றினாலதாக்கினவுடன் பாதகனாகிய இந்திரசித்து பிரயோகித்துப் பிணித்த நாகபாசம் கட்டவிழ்ந்தது. அவ்வவர்கள் தேகத்திலுள்ள புண்களும், வடுக்களும், ஒருவன் பஞ்சேந்திரியங்களையும் அவித்து நல்ல ஸ்வரூப ஞானத்துடனிருப்பதுமன்றிச் சாஸ்திர தர்மத்தின்படியே நடந்துவருகின்ற சிரேஷ்டனும் தனதாமுயற்சியுள்ளவனுமான ஒருவனை, கலியின் அபுத்திபூர்வமாயடைந்த குறைவானது எப்படியவனைப் பற்றாமல் நசித்துப்போய்விடுமோ? அதுபோலக் கண்ணுக்குத் தோற்றாமல் மறைந்துபோயின.

அக்கால் தருமமார்க்கத்தை ஒருவிதத்திலுந் தழுவாத தன்மையர்களாயிருக்கின்றபடியால் இடியையொத்த கொடுஞ்செய்கையுடைய துஷ்டர்களான இராக்ஷசர்கள் மாத்திரம் பிழைக்கவில்லை. ஸ்ரீராமலக்ஷ்மணர்களாகிய பெரியோர்களுடைய கைங்கரியத்தில் நிலைபெற்றிருக்கின்ற வானரசேனா சமுத்திரமெல்லாம் கருடபகவானுடைய இறகுகளினின்றுமெழுந்தவாயு பரிசித்தபடியினாலே, மூலதாமரைபுஷ்பத்திலெழுந்தருளியிருக்கின்ற பிரமதேவர் மறுபடி சிருஷ்டித்ததைப்போல ஸ்ரீயப்பதியின் கிருபையால் மரணமூர்ச்சைதெளிந்தும், உயிர்பெற்றும், எழுந்திருந்துநிலைத்து நின்றார்கள். அக்கால் இளையபெருமாளெழுந்து, ஸ்ரீராமமூர்த்தியினுடைய திருவடிகளில்வந்து வணங்கி நின்றார். அப்படிநின்ற லக்ஷ்மணரை அதிககிருபையுடனே ஸ்வாமி தமது திருவாபரணங்களுடன்கூடிய திருமார்பிலேயகத்தழுவி, நமக்கு அதிக வருத்தத்தை விளைவித்த விதியானது மறுபடியும் கிருபைசெய்ததென்று சந்தோஷித்தார்.

பின்பு தமது பிராணபந்துக்களுக்குச் சமானமாகிய சுக்கிரீவமகாராஜர்— ஆஞ்சநேயர் — சாம்பவர் — இவர்கள்முதலான துணைவர்களு மூர்ச்சைதெளிந்து, ஸ்வாமி திருவடிகளில் தண்டன் சமர்ப்பித்தார்கள். அவர்களை ஸ்ரீராமர் பிரேமபூர்வமாகக் கடாக்ஷித்துத் தமது திருக்கையால் அணைத்துக்கொண்டு; மூன்றாம்பிறைச் சந்திரனைப்போன்ற நகங்களையுடையவரான கருடபகவானுக்கு முன்பாகவந்து, அவதாரவடிவத்திற் கேற்றபடி மரியாதையுடன் அவரைப்பார்த்து, பிரமேந்திராதி சமஸ்ததேவர்களுடைய அறிவுக்கு மெட்டாத அந்தஸ்வாமியானவர் சொல்லுகின்றார். ஐயா! நீர்யார்? நாங்கள் பூர்வத்திற்செய்த தவப்பயனால்வந்து எங்கள் பிராணனையும் வாழ்வையுங் கொடுத்தீர். எங்களால் நீரொருகைம்மாறும் பெற்றீரில்லை. இப்படிப்பட்ட உபகாரியாகிய உமக்கு நாங்களென்ன உபகாரஞ் செய்யப்போகின்றோம்? புத்திமான்களாலோசிக்குமிடத்தில் நீர்செய்த உபகாரத்திற் கீடான பொருள் வேறேயொன்றுண்டோ? நீர் இப்படிப்பட்ட இருட்காலத்தில் கிருபைகொண்டு வந்து தயவுசெய்யத்தக்க மஹைசுவரிய முள்ளவரானால், உமக்கில்லாத வஸ்துவு முண்டென்று மனத்தாலேனு நினைக்கலாகுமோ?

ஐயா! எங்களை நீரெப்போதும் பார்த்தவருமல்லர். இன்றைசென்று சொல்லவுங் கேட்டிருக்கவுமாட்டீர். நீர் எங்களால் ஒரு நன்மையும் பெற்றவருமல்லர். நீரெப்போதும் பிறர்க்கருளுந் தன்மையுள்ளவராக இருக்கின்றீரே யல்லாமல், ஒருவரிடத்திலொன்று பெறும்படியானகுறை யுமக்கில்லை. உண்டில்லையென்னும்படியாயிருந்த எங்களுயிரைக்கொடுத்த ஓ மஹாநுபாவரே! எங்களுடனே உமக்கெப்போதும் ஒருசிநேகமுமில்லையே; அப்படிப்பட்ட உமக்கு நாங்கள் செய்யத்தகுந்த காரியமென்ன இருக்கின்றது? அதனை நீரேயாலோசித்துச் சொல்லுமென்று கூறினார்.

கருடபகவான் மீண்டு வைகுந்த மடைதல்.

கவி.

பறவையின்குலங்கள்காக்கும் பாவகன்பழையநின்றே
றெவனதன்மையெல்லா முணர்த்துவெனாக்ஞேடம்
மறவினைமுடித்தபின்னர் வருவெனின்றுழையன்யாயப்
பிறவியின்பகைஞர்க்கு விடையெனப்பெயர்ந்துபோனான்.

இப்படி ஸ்ரீராமபிரான் பிரார்த்தித்தவைகளைக்கேட்ட பக்ஷிராஜனாகிய ஸ்ரீகருடபகவான் ஸ்ரீராமரைப் பார்த்து, ஸ்வாமி! தேவரீருக்கும் அடியேனுக்கு நித்தியமான பழையவுற விருக்கின்றது. தேவரீரிந்த ராக்ஷசசிரசனஞ்செய்து முடித்தபிறகு அதையடியேன்வந்து விண்ணப்பம்பண்ணிக் கொள்ளுகின்றேன். ஓ வஞ்சமாயப்பிறவியை அறுக்கின்ற புருஷோத்தமரே! அடியேனுக்கு விடைகொடுத் தருளவேண்டுமென்று அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டார்.

இப்படி கருடபகவான் போய்விட்டபிறகு கோதண்டதீக்ஷா குருவாகிய ஸ்ரீராமமூர்த்தியானவர், இவர் நம்முடைய பிராணனை யுபகரித்துத் தமக்கு ஒருபிரயோசனமும் விரும்பாமற் போய்விட்டாரே: கிருபாவான்களுடைய செய்கை இப்படித்தானிருக்கும். பெருந்தன்மையாளர்களுடைய உபகாரமெல்லாம் பிரதிபயனை விரும்பமாட்டாது. ஏனென்றால், மேகமானது மழைபெய்து உபகரிக்கிறதைப் பெற்றும், உலோகமானது அதற்குப் பிரதியுபகாரஞ்செய்கிற துண்டாயிருக்கின்றதோ? என்று உபகாரலக்ஷணத்தைப் பற்றியாவர்க்கு முணர்த்தினர்.

ஆஞ்சனேயராதி வானரவீரர்கள் பாசறையில் சந்தோஷ கர்ச்சனை யிடுதல்.

கவி.

இறந்தனனிளவலென்று விறைவியுமிடுக்கணெய்தும்
மறந்தனருறங்குகின்ற வஞ்சருமறகிமீளப்
பிறந்தனரென்றுகொண்டோர் பெரும்பயம்பிடிப்பரன்றே
அறந்தருசிந்தையன்ப வார்த்துமென்றனுமன்சொன்னான்.

அழகிதென்றண்ணல்கூற வார்த்தனர்கடல்கலங்கக்
குழைவுறவனந்தனுச்சிக் குன்றதின்றண்டகோளம்
எழுமிசையுலகமென்மே லேங்கிடவிரிந்தசிந்தி
மழைவிழமலைக்கிற மாதிரப்பிளக்கமாதோ.

அப்போதாஞ்சநேயர் ஸ்வாமி திருவடிகளில் தெண்டன் சமர்ப்பித்து, ஸ்வாமி! இந்தத் துஷ்டராக்ஷசர்கள் இலங்கையிற்போய் இளையபெருமாள் இறந்து போய்விட்டாரென்று சொல்வார்களேயானால், அந்த வார்த்தையைச் சர்வலோகமாதாவான சீதாபிராட்டியார்கேட்டுத் துக்கப்படுவார். ஆகையால் நாங்களி யாதொருதுக்கமும் அடையவில்லையென்பதற் கடையாளமாக வெல்லாருஞ்சேர்ந்து சந்தோஷகர்ச்சனை செய்கிறோம். இதைக்கேட்டால் சந்தோஷத்தினாலே மெய்மறந்து நித்திரைசெய்கின்ற இராக்ஷசவஞ்சகர்களும், இறந்தவானரர்களெல்லாம் பிழைத்துக்கொண்டார்களென்று திடுக்கிட்டுப் பெரும்பயம் அடைவார்களென்று விண்ணப்பம் பண்ணிக்கொண்டார். அதைக்கேட்ட சக்கரவர்த்தித் திருக்குமாரர் சந்தோஷித்து, அப்பா அனுமானே! நல்லது: அப்படியே செய்யுங்கள். என்று விடைகொடுத்தார். அப்போது சுக்கிரீவமகாராஜா - சாம்பவர் - ஆஞ்சனேயர் - அங்கதன் - இவர்கள் முதலாகிய வானரவீரர்களெல்லாம் சமுத்திரமனைத்து நடுங்கித் ததும்பவும், ஆதிசேஷனுடைய முடியும் கூச்சமடையவும், அண்டகோளமானது வெடிபடவும், உலகத்தவர்களெல்லாம் அதிக ஏக்கமடையவும், மேகங்களெல்லாம் கருவழிந்து சிதறுண்டு பூமியில்விழவும், மலைகள் கிழியவும், அஷ்டதிக்குகளும் சிதிபடவும், பெருங்கோஷமாகச் சப்தித்தார்கள்.

அப்போது சாமுத்திரிகாசாஸ்திரத்திற் சொல்லப்பட்ட எல்லாலக்ஷணங்களினுங் குறைவற்ற திருமேனியையுடைய சீதாபிராட்டியாரிடத்தில் தனது மனஞ்செல்லவும், கண்ணுறக்கமில்லாமல் மோகதாபத்தால் நெஞ்சுவேகவும், சிவனுடைய சூலாயுதமும் தைக்கமாட்டாத மார்பை மன்மதபாணங்கள் சின்னபின்னமாய்க் கிழிக்கவும் பெருமூச்சுவிட்டுக்கொண்டு படுக்கையிற்கிடந்த இராவணன் அந்தச்சப்தத்தைக் கேட்டான். அக்கால பிதாவின் வாக்கியத்தைச் சிரசாவகித்துக்கொண்டு தவவுருவம்பூண்டவராயும், தர்மமூர்த்தியாயும், பாபங்களையெல்லாம் போக்கி ரக்ஷிக்கின்ற திருநாமமாகிய ஸ்ரீராமநாமாங்கிதராயு மிருக்கின்ற சக்கரவர்த்தித் திருக்குமாரரும், அவரைச் சதாதியானம் பண்ணிக்கொண் டிருக்கின்ற சீதாபிராட்டியாரும், அச்சீதாபிராட்டியாரை நினைத்து நினைத்துப் புத்திகெட்ட பேதையாயிருக்கின்ற இராவணனுமல்லாமல்; அந்தராத்திரியில் இலங்காபட்டணத்திலுள்ளவர்களில் நித்திரையில்லாதவர்களொருவருமில்லை.

இராவணன் வானரவீரர்களினது சந்தோஷகர்ஜ்ஜனையைக் கேட்டு ஆச்சரியப்பட்டு இந்திரசித்துவின் மாளிகையையடைதல்.

கவி.

சிங்கவேறசனியேறு கேட்டலுஞ்சீற்றச்சேனை
பொங்கியதென்னமன்னன் பொருக்கெனவெழுந்துபோரில்
மங்கினர்பகைஞரென்ற வார்த்தையேவலியதென்னா
அங்கையோடங்கைகொட்டி யலங்கற்றோள்குலுங்கநக்கான்.

அந்தச்சமயத்தில் விந்தவோசையைக்கேட்ட ராவணன் ஆண்சிம்ஹமானது இடியோசையைக்கேட்ட காலையில் எவ்வண்ணந் தனக்குள் அபரிமிதமாகக் கோபங்கொள்ளுமோ அதைப்போல் யாவராலேயும் அளவிடுதற்கரிய கோபத்தைக்கொண்டவனாகிப் படுக்கையைவிட் டெழுந்திருந்து, உயுத்தகளத்தில் எல்லா மிறந்துபோனார்களென்று சொன்னவார்த்தை வெகு வுறுதியாயிருப்பது போலவே யிருக்கின்றதென்று கையோடு கையறைந்து, கற்பகப் பூமாலையணிந்த இருபது தோள்களும் குலுங்கும்படியாய்ச் சிரித்து, ஸ்ரீராமனுடைய வில்லினோசை யுகாந்தகால இடியைப்போல இடிக்கின்றது, அண்டகோளம் வெடிபடும்படி இலக்ஷ்மணனுடைய வில்லின் குணத்தொனி அதிர்கின்றது. அனுமானுடைய வீராஷ்டகாசமானது என்னிருபது செவியும் கிழிய அடிக்கின்றது. சுக்கிரீவனுடைய சிங்கநாதம் இந்த லோகங்களையெல்லாம் மூடுகின்றது.

இவ்வளவுதானோவென்றால்? அங்கதன் அதோசப்திக்கின்றான். ஆகாசத்திலுள்ள தேவர்களெல்லாம் ஆர்ப்பரிக்கின்றார்கள். அக்கினியாம்சனான நீலன் முதலான மற்ற வீரர்களெல்லாம் தனித்தனியே சீறிக்கொண்டு கர்ச்சிக்கின்ற ஓசையானது அண்டத்துக் கப்புறம்போய் முட்டுமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆகையால், எல்லாரும் தர்மதேவதையின் உதவியால் நாகபாசக் கட்டுகளினின்றும் விடுபட்டார்களென்று சொல்லி யெழுந்தனன்.

கவி.

என்பதுசொல்லிப்பள்ளிச் சேக்கைநின்றிழிந்துவேந்தன்
ஒன்பதுகோடிவாட்கை யரக்கர்வந்துழையர்சுற்றப்
பொன்பொதிவிளக்கங்கோடி பூங்குழைமகளிரேந்தத்
தன்பெருங்கோயிலின்று மகன்றனிக்கோயில்சார்ந்தான்.

இவ்வண்ணம் சொல்லிக்கொண்டு தான் சயனித்திருந்த அம்சதூளிகாமஞ்சத்தினின்றுமெழுந்து கீழிறங்கி ஒன்பதுகோடி ராக்ஷசர்கள் தன்னைச் சூழ்ந்துவரும்படியாகவும், கோடி ஸ்திரீசனங்கள் சுவர்ணவிளக்குகள் பிடித்துக்கொண்டு வரும்படியாகவும், இராவணன் தன் பெரிய அரண்மனையைவிட்டுப் புறப்பட்டு இந்திரஜித்துவின் அரண்மனையைச் சேர்ந்தான்.

அப்போது தங்கள் புடவைகளை வாரிச்சுருட்டிக் கொண்டவர்களும், அவிழ்ந்துவிழ்ந்த கூந்தலையுடையவர்களும், மேல்முச்சுவாங்கி விடுகின்றவர்களும், ஆகாசத்தைமுட்டிய ஸ்தனங்களையுடையவர்களும், உறக்கம் நீங்காத கண்ணையுடையவர்களும், தள்ளாடின நடையை யுடையவர்களும், கொடிபோல் வளைந்த இடையையுடையவர்களுமான ராக்ஷசஸ்திரீகள் தூக்கத்தாற் சோர்ந்து விழ்ந்துகொண்டு; இராவணனுக்குத் துற்சகுனமாக எதிர்கொண்டு வந்தார்கள். குடித்தமதுபானமும், உறக்கமும், தங்கள் நாயகன்மார்வந்து புணர்வதாகக்கண்ட கனவும், பண்விளைந்த கானப்பாட்டுகளும், தம்மைத் தள்ளத் தடுமாறி; மதர்த்துக் கள்ளங்களைக்கற்று மீனைப்போலப் பிறழுகின்ற பெரியகண்களை மூடுவதும் திறப்பதுமாகத் தேவஸ்திரீகளெல்லாம் கால்களிற் சதங்கை சப்திக்கும்படியாக இராவணன் முகத்தில் விழிக்காமல் மறைந்துபோய்விட்டார்கள்.

மேகத்திற்கு நீலச்சாயங்கூட்டிநல்ல பரிமளப்புகையையூட்டி அங்கங்கே சுருட்டி மெல்லிய புஷ்பங்களை யணிந்த இடையினுக்கிடையூறாகப் பிர்ம்மதேவர்சிருஷ்டித்த பெருங்கூந்தலையும், பெருங்கண்களையும், செவந்தவாயையும், உடையவர்களான அநேகவாபரணங்களைத்தரித்த மானிட ஸ்திரீகளெல்லாம் நித்திரை மயக்கத்தால் அந்தந்தவிடங்களிற் பதுங்கிவிட்டார்கள். தேனையும், கரும்பையும், வெல்லப்பாகையும், அமுதையுமொத்த சொல்லைத்தேடி அமைத்து; மானையும், கயல்மச்சியங்களையும், வாளாயுதத்தையும், நீலோற்பலபுஷ்பங்களையு மொத்திருக்கின்ற கண்களைச் சம்பாதித்துவைத்து; உயர்ந்த நடக்கைகளையும் அதற்கொப்பான நல்லமார்க்கங்களையும் கொடுக்கத்தக்க சிறந்தநகரத்தை ஆராய்ந்து, அதிற் பிரம்மதேவராற் சிருஷ்டித்த ஸ்திரீகள் அநேகம்பேர்கள் இராவணனுடனே போனார்கள்.

அப்போது வானரவீரர்கள் சப்திக்கின்றவோசையானது செவிகளில் நுழைந்தமாத்திரத்தில் தன்னிடத்திலகப்பட்ட ஜீவன்களைத் தப்பவிடாத ஆண்

முதலைக்கொப்பான பலமுள்ள இராக்ஷசர்களெல்லாம், சிம்ஹகர்ச்சனையைக் கேட்ட யானைகளைப்போல இருந்தவிடத்திலேயே உழைத்துக் கொண்டார்கள். இராக்ஷச ஸ்திரீகளெல்லாரும் இடிமுழக்கங்கேட்ட புற்றிலுள்ள பாம்பைப்போலக் கர்ப்பங்கலங்கி நடுங்கிவிட்டார்கள். இப்பால் இந்திரஜித்துவின் மனைக்குப்போன இராவணனானவன் அவன் படுத்திருக்கின்ற ஸ்வர்ண உப்பரிகையிற் சரேலென்று சென்று, சிம்ஹத்தினால் சங்கடப்பட்டுச் சோர்ந்துவிழ்ந்துகிடக்கின்ற கருக்கொண்டமேகம்போன்ற யானைக்கொப்பாக இலக்ஷ்மணருடைய பாணவருஷங்களால் தேகமெல்லாம் சல்லடைக்கண்களாய்த் தொளைக்கப்பட்டுள்ள புண்களி லிரத்தந் தாரைதாரையாக வழிந்துகொண்டு கிடக்கின்ற இந்திரஜித்துவைப் பார்த்தான்.

இராவணனைக்கண்ட இந்திரசித்து எழுந்திருக்க முடியாமல் இலக்ஷ்மணனால் தனக்குநேர்ந்த மெலிவைக்கூறல்.

கவி.

எழுந்தடிவணங்கலாற்றா னிருகையுமரிதினேற்றித்
தொழுந்தொழிலானைநோக்கித் துனுக்குற்றமனத்தன்றேன்றல்
அழுங்கினைவந்ததென்னை யடித்ததென்றடுத்துச்சொன்னான்
புழுங்கியபுண்ணினானு மினையனபுகறலுற்றான்.

இப்படி ராவணன்வந்து பார்த்தபோது இந்திரசித்து எழுந்திருந்து, தகப்பன்காலில்விழ்ந்து கும்பிடமாட்டாமற் படுத்தபடுக்கையிலேயே இரண்டு கைகளையும் வருத்தப்பட்டுத்தூக்கிக் கும்பிட்டான். அதைக்கண்ட ராவணன் மனங்கலங்கி, அப்பாகுமாரனே! நீவெகு வருத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றாயே! உனக்குச்சம்பவித்த சங்கடமென்ன? உன்னையார் என்னசெய்தார்களென்று கேட்டான். அப்போது சிப்பற்றிக் குத்தலெடுத்துக்கொண்டிருந்த புண்களையுடைய இந்திரஜித்து இராவணனைப்பார்த்து, ஓ வெற்றிமாலையைத்தரித்த மார்பினையுடைய ஐயா! அந்தலக்ஷ்மணனுடைய பாணங்களில் அநேகபாணங்கள் என்முதுகைத் தடாசித்துப்போயின. அநேகபாணங்கள் என் தேகத்திலுள்ள இரத்தத்தையெல்லாம் குடித்துவிட்டன. அனேகபாணங்கள் என்மார்பிலணிந்திருந்த கவசத்தையும் துண்டுதுண்டாய்ச் சிதறவடித்துவிட்டன. அநேகபாணங்கள் என்தேகத்தைச் சக்கைச்சக்கையாய்ப் பேர்த்தெறிந்து விட்டன. சிலபாணங்கள் என்கண்களிலும் வந்து நுழைந்துவிட்டன. உடனே என்மாயையால் தப்பித்துக்கொண்டு ஓடிவந்துவிட்டேன்.

மேலும் — நான் சொர்க்கலோகாதிபதியான இந்திரன் - விருஷபவாகனாரூடரான உருத்திரமூர்த்தி — கருடவாகனாரூடரான ஸ்ரீமகாவிஷ்ணுவாகியவிவர்களோடு சூரியன் முதலான தேவர்களெல்லாங்கூடி என்னோடெதிர்த்து யுத்தஞ்செய்த போதும், இவ்வளவுதுன்பப்படவில்லை. இப்படியொருநாளும் இளைத்துவந்து உம்மோடு நான் குறைசொன்னதுமில்லை. ஓ மந்தரகிரிக்குச்சமமான தோள்களையுடைய ஐயா! அந்தமனிதனுடைய வல்லமைக்கு ஒருவரப்பு

சொல்ல என்னலாகாது. நான்சொன்ன இவ்வளவுவல்லமையும் அந்த லக்ஷ்மணனுடைய வல்லமையாக்கும். வெற்றிமாலையைத்தரித்த மார்பையுடைய ஐயா! இராமனுடைய பராக்கிரமத்தை நினைப்போமேயானால் நம்முடைய பிராணன்களோடு மாத்திர முடிந்துபோகாது. சம்பவித்த காரியங்களைப்பார்த்துணரவேண்டுமேயல்லாமல், நமக்குவெற்றியே உண்டாகுமென்று நினைப்பதுதகாது. என்றுசொல்லி இப்போது நிறைவேறியிருக்கிற தன்மையையுணராதவனான இந்திரஜித்துப் பின்னுஞ் சொல்லுகின்றான்.

ஐயா! இயானிப்போ தந்த வெற்றியாளனான இலக்ஷ்மணனையும் குரங்குவீரர்களையுங்கொன்றது நாகபாசத்தினாலா, என்மாயா வல்லமையினாலுமேயன்றி, என்சொந்த பலத்தினாலே யல்லவென்று நினையும். இன்னும் ஸ்ரீராமன்மாத்திரம் தப்பிநிற்கின்றான். ஆதலால் மேல்நடக்கிறபடி நடக்கட்டும். என்று சொல்லக்கேட்ட இராவணன் இந்திரஜித்துவைப் பார்த்து, அப்பா வீரகண்டாமணியைத்தரித்த காலையுடைய குமாரனே! இப்போதவ்விலட்சுமணனுடைய வச்சிரவில்லின் குணத்தொனி ஆகாசத்தைப் பிளக்கின்றதே; சப்தமேகங்களின் கர்ச்சனையடங்கவும், சமுத்திரந் ததளிக்கவும், அனுமான் — சுக்கிரீவன் — அங்கதன் — சாம்பவன் — இவர்கள் முதலான வானரவீரர்கள் போர்க்களத்திற் சப்திக்கின்றார்களே: அந்தச்சப்தத்தைக்கொஞ்சமும் நீ அறியவில்லைபோ லிருக்கின்றதே யென்றான். அதை இந்திரஜித்துக்கேட்டு, ஐயா! எனது நாகபாசத்தால் அந்த லக்ஷ்மணன் முதலானவர்களெல்லாம் கட்டுண்டார்கள். பிறகு இடிக்குச்சமானமாகிய என்கைப்பாணங்களால் தேகமெல்லாம் சக்கைச்சக்கையாய்ப் பிளந்துபோனார்கள். என் கண்முன்னேயே அறிவுஞ் சோர்ந்துபோனார்கள். அப்படிப்பட்டவர்கள் பிழைத்தார்களென்று சொல்லுவது உண்மையோ? அல்லதுவேறோ: அப்படியுண்மையானால் அப்பாசத்தைக்கொடுத்த ஐம்முகக்கடவுள் அவ்வாவுசிறியரோ? என்றுசொல்லி ஆச்சரியமாயினான்.

இராவணனும் இந்திரஜித்தும் வார்த்தையாடும்சமயத்தில் தூதர்கள்வந்து யுத்தகளத்தின் தன்மைகூறல்.

கவி.

ஈதுரைகிழும்வேலை யெய்துவதறியப்போய
தூதுவர்விரைவின்வந்தார் புகுந்தடிதொழுதலோடும்
யாதவணிகழ்ந்ததென்ன விராவணனியம்பவீறின்
றோதியகல்வியாளர் புகுந்ததுரைக்கலுற்றார்.

இப்படி ராவணனு மிந்திரசித்துவும் பேசிக்கொண்டிருக்கும்போதே அங்கே நடந்த காரியத்தைத் தெரிந்துகொண்டு வரும்படியாய்ப்போன தூதர்கள் வேகமாய்த் திரும்பிவந்து இராவணனுடைய பாதங்களில் விழுந்தார்கள். அவர்களைப்பார்த்த ராவணன்நடந்தகாரிய மென்னவென்று கேட்க, அந்தக்கல்விமான்களான தூதுவர்கள் சம்பவித்ததைத் தெரிவிக்கத்தொடங்கினார்கள்

ஐயா திரிலோகநாயகா! நாகபாசத்தாற் கட்டுப்பட்டுப் பாணங்களாற் பிளப்புண்டவர்களை அயோத்திநாட்டுக் கரசனான தசரதபுத்திரனாகிய ஸ்ரீராமன் அர்த்தராத்திரியில் வந்துபார்த்துச் சிறிதுகிலேசித்து, பிறகிவ்வுலகத்தையெல்லா மெரித்துவிடுகிறேனென்று அட்டகாசஞ்செய்தான். அப்போது ஆகாசத்திலிருந்து கருடன் பறந்துவந்தான். அவன்வந்தவுடனே கூரியபற்களையுடைய சர்ப்பங்களெல்லாம் சின்னபின்னப்பட்டுப் போய்விட்டன. அவர்கள் தேகத்துப் புண்களும் ஆறிப்போயின. அவர்கள் மூர்ச்சையுநீங்கிவிட்டது. அவர்களெல்லாரு முன்னினுமதிகபலமுள்ளவர்களாகி இரணகளத்திற்சூழ்ந்து மொய்த்துக்கொண்டார்கள். இது நடந்த சமாச்சாரமென்றார்கள்.

அப்போது ராவணன் அருகிலிருந்தவர்களைப்பார்த்து ஓ மித்திரர்களே! ஒருவராலும் புகழ்ந்து முடியாத தோள்வல்லமையை யுடைய என்குமாரனான இந்திரசித்து எய்த நாகபாசத்தைக் கருடன் தன்சிறகின்காற்றினாலே கழன்றுபோகும்படிச்செய்தானாம். கேட்டீர்களா? என்முன் இப்படிப்பட்டவார்த்தையுண்டாகுமானால் இராவணனிந்த மூன்றுலோகங்களையும் ஆளும்வல்லமையுடையவனாயிருக்கின்றானென்று யாவருஞ்சொல்லிக்கொண்டு வந்த என்வாழ்வு மிகநன்றாயிருக்கின்றது. ஆ! ஆ! என்வெற்றிப் பிரதாபமெல்லா முடிந்துபோய் விட்டதுபோ லிருக்கின்றதே: அப்படியா? இந்தப் பதினாலு லோகங்களையும் உண்டுமிழ்ந்தவனென்கிற கீர்த்திபெற்றவனான அந்த விஷ்ணுவானவன் என்னோடெதிர்த்து யுத்தஞ்செய்தபோது புத்திமயங்கித் திகைத்துப்போனான். அப்போதிவன் அவனுக்கு வாகனமாகத்தானே யிருந்தான். நானிந்தப் பூமண்டலமெல்லாம் ஜெயித்து வெற்றிபெற்று வந்தேன். இந்தச் சப்தசமுத்திரங்களும் என்வல்லமைக்குத் ததளித்துப் போய்விட்டன. அப்போதெல்லாம் இந்தக்கருடன் என்வல்லமையைத் தன்கண்ணாற் பார்க்கவில்லைபோ லிருக்கின்றது.

கைகளில் சக்கரமும் சங்கமும் ஏந்தியிருக்கின்ற விஷ்ணுவினாலே காக்கப்பட்டிருந்த அந்தவைகுந்த லோகத்தின்மீது நான் சண்டைக்குப்போய் என்வில்லில் அம்பைக்கோத்துப் பிரயோகித்தபோது, சூரியசாரதியாகிய அருணனுடைய தம்பியான இந்தக்கருடனுடைய மார்பிலும், முதுகிலும், தோள்களிலும், அந்தத் தோள்களிலுள்ள சிறகிலும், அவ்வம்புகள் தைத்து வருந்தினதை மறந்துபோய்விட்டோ இப்போதுவந்தான். இஃதிருக்கட்டும். இன்றெப்படி முடிந்தாலு முடியட்டும். இனிப்பயந்து பீதியாய் நிற்கின்றவர்களைக் கொல்லவேண்டிய விருப்பத்தை முடிக்கவேண்டு மல்லவா?

அப்பா ஆண்பிள்ளைச் சிங்கமே! நீயே அந்தச்சண்டையைச் செய்யவேண்டும். உன்னுடைய அருமையான சண்டைகளை அவர்கள் பார்த்தமாத்திரத்தில் வெட்கப்பட்டோடிவிடுவார்கள். என்று தனதுபராக்கிரமத்தினுஞ் சிறந்த பிள்ளையாகிய இந்திரசித்துவைப்பார்த்துச் சொல்லினான். அதைக்கேட்ட இந்திரசித்து அவ்விராவணனைப் பார்த்துத் தன்கருத்தைச் சொல்லத் தொடங்கினான்.

இராவணன் இந்திரசித்துவின் கருத்துணர்ந்து தனதரண்மனையடைதல்.

கலி.

இன்றொருபொழுது தாழ்த்தென் னிகற்பெருஞ்சிரமங்கீக்கிச்
சென்றொருகணத்திற்றானே நான்முகன்படைத்தெய்வ
வென்றிவெம்படையிறைவன் மனத்துயர்மீட்பனென்றான்
என்றனனரக்கன்போய்த்தன் னாலயமடைந்தான்.

ஐயா எனதருமைப் பிதாவே! இன்றைக்கு ஒருநாள் தங்கியுத்தத்திற்பட்ட சிரமங்களெல்லாம் ஆற்றிக்கொண்டு நாளைக்கு யுத்தகளத்திற்குப்போய், ஒரு க்ஷணநேரத்திற்குள்ளே பிரமாஸ்திரத்தை விட்டு அவர்களையெல்லாங்கொன்று உம்முடைய மனத்திலுள்ள துக்கத்தை நீக்கிவிடுகிறேனென்றான். அதைக்கேட்ட ராவணன், அப்பா! நல்லது; அப்படியே செய்யக்கடவாய், என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டுப்போய்த் தன்னுடைய அரமனையைச் சேர்ந்தான்.

நாகபாசப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பத்தொன்பதாவது,

படைத்தலைவர் வதைப் படலம்.

இப்படலத்தில் யுத்தத்திற்குச்சென்ற படைத்தலைவர்களில் இந்திரசித்துவுக்குச் சக்கரவர்த்தியாய்ச்சென்ற அமாக்ஷமகாபார்சுவன் ஆஞ்சநேயருக்குத் தோற்றோடிவந்ததைச் சொல்லிய இராவணன் அவர்களுக்குக் கடுந்தண்டனை விதித்ததும், அத்தண்டனையை மாலியவான் என்பவன் சில உபாயங்கூறி மன்னிப்பித்ததும், உடனே அமாக்ஷனாதிய படைவீரர்கள் யுத்தசன்னத்தராகக்கொண்டு வரக்கண்ட ஸ்ரீராமர் விபீஷணரால் அவர்களை இன்னாரென்றறிந்ததும், அப்படைவீரரோடு வந்த இராக்ஷதச் சேனைகளை வானரச்சேனைகள் வளைத்துப் போர்விளைத்ததும், அக்கால் அமாக்ஷனாதியரை ஆஞ்சநேயராதியர் எதிர்த்துமாய்க்க அவர்களோடு வந்த பத்துவெள்ளஞ் சேனைகளையும் ஸ்ரீராமலக்ஷ்மணர்கள் சூரியோதயத்திற்குமுன் வதைத்ததும் சொல்லப்படுகின்றது.

இந்திரசித்துவினோடுஞ்சென்று ஆஞ்சநேயருக்குத் தோற்றோடிய சக்கரவர்த்திகளை இராவணன் தண்டிக்கச்சொல்லுதல்.

கலி.

ஆர்த்தெழுமோசையோட்ட வாக்குருஞ்சமார்ப்பப்
போர்த்தொழில்வேட்கைபூண்டு பொங்கினர்புகுந்துமொய்த்தார்
தார்த்தடமார்பன் றன்னைத் தாவிடைவெள்ளைச்சார்த்தார்
பார்த்தனன்றுளக்கிற்றுமன்னன் வீரியம்பகர்வதானான்.

No. 55. இலட்சுமணனாதியர் கருடபகவானால் மூர்ச்சைதெளிந்தெழுந்து ஸ்ரீராமரை மகிழ்வித்தல்.

பின்பு வானரவீரர்களுடைய ஆரவாரத்தைக்கேட்ட இராக்ஷசர்களெல்லாம் யுத்தபேரிகையை முழக்கிச் சண்டைசெய்ய வேண்டுமென்று இச்சைகொண்டு, அதிக வக்ரோதத்துட னெல்லாரும் ஒருமிக்கக்கூடி, வெற்றிமாலையணிந்த விசாலமான மார்பையுடையவனான இராவணனைச்சேர்ந்து எங்களுக்கு யுத்தத்திற்குப்போகும்படி உத்தரவு கொடுமென்று கேட்டார்கள். அப்போது மகாபாரிசனும், தூமராக்ஷனும், எங்களுக்கும் உத்திரவுகொடுத்தால் நாங்களும் போகிறோமென்றார்கள். அவர்களை ராவணன் சந்தோஷமாகப்பார்த்து, நல்லது நீங்களும் போங்களென்று சொன்னான். அதைக்கேட்ட தூதர்கள் மனம்பொறுக்காதவர்களாகி, ஐயா இராவணேஸ்வரா! இவர்களுடைய நடக்கையைச் சொல்லுகின்றோம் கேளும். தேவரீருடைய குமாரராகிய இந்திரசித்துவானவர் யானைகளும், குதிரைகளும், தேர்களும், பதாதிகளுமாகிய சதுரங்கச்சேனைகளுமிழந்து தான்மாத்திரம் தனியாய் நின்றார். அப்போதிவர்களதைச்சற்றுநினையாமல், அவருக்குச் சக்கரரக்ஷகராய்வந்த தன்மையையும் யோசிக்காமல், மனிதனுடைய வாளிவர்ளியென்று வாய்குளறிக்கொண்டு யுத்தகளத்தில் நின்றும் ஓடிவந்துவிட்டார்கள். ஆதலால், இவர்களை யுமொரு வீரரென்றெண்ணி யெங்களோடனுப்புதல் கூடாதென்று சொன்னார்கள்.

கவி.

அற்றவர்கூறலு மாற்பூலிற்றாய், முற்றியகோப முருங்கமுனிந்தான்
இற்றிதுவோவிவர்சேவகமென்றாப், பற்றுமினென்றனன் வெம்மையினின்றான்.

அதைக்கேட்ட மாத்திரத்தில் இராவணனுக்கு அக்கினி பொங்கினது போலக்கோபமுதிர்ந்து, இவர்களுடைய வீரத்தன்மை இப்படிப்பட்டதா? நல்லது: இவர்களைப் பிடியுங்களென்று நியமித்தான். அப்படியே கிங்கரர்கள் போய் அவர்களைப் பின்கட்டாகக் கட்டிக்கொண்டுவந்து அவனுக்கு முன்பாக நிறுத்தினார்கள். அப்போது கருநிறத்தை யுடையவனான ராவணன் இவர்களைக்கொல்லாமல் நன்றாய்ப் புடையுங்களென்று சொன்னான். அப்படியே யவர்கள் நன்றாய்க் குமுக்கினபிறகு மறுபடியு மிராவணன் அந்தத் தூதுவர்களைப்பார்த்து, இவர்களுக்கு வேறே தண்டனையில்லை. இவர்களுடைய மலைச்சிகரம்போலிருக்கின்ற மூக்கையரிந்து, இவர்களை ஊரைச்சுற்றுவித்து யுத்தத்திற்பயந்தோடினவர்களென்று யாவருக்குந் தெரியப்படுத்துங்களென்பதாகக் கட்டளையிட்டான். அந்தக்ஷணமே அந்தத்தூதுவர்கள் நெய்பூசிய வாளாயுதத்தைக் கையிற்பிடித்து, அவர்களுடைய உயர்ந்த மலையைப்போன்ற நாசியை அறுக்கிறதற்காக ஓடினார்கள். அப்போது மாலியென்பவன் அவர்களைத் தடுத்துச்சென்று இராவணனைக்கண்டு சில சொல்லுவனாயினான்.

தூமாக்ஷமகாபாரிசானை தண்டிக்காவண்ணம் மாலியென்பவன் மன்னிப்பித்தல்.

கவி.

அஞ்சமமஞ்சி யழிந்தனராஜோர், வெஞ்சமம்வே றலும் வென்றியதன்றாய்த்
துஞ்சலுமென்றிவை சொல்லையவன்றே, தஞ்செனவாருள ராண்மைதகைந்தார்.

ஐயா கீர்த்திமானாகிய இராவணேஸ்வரா! நீர் அவர்களை இப்படிச்செய்கிறது தகுதியல்ல. உயுத்தத்திற்குப் பயந்தவர்கள் ஜெயம்பெறுதலும், முன் ஜெயம்பெற்றவர்கள் மாண்டுவிழுதலும் வழக்கந்தான். ஆண்பிள்ளைத் தன்மையுடையவர்களுக்குள் உயர்வுபடாதவர்களும், தாழ்வுபடாதவர்களும், இயாரிருக்கின்றார்கள்? நீர் தாரதம்மியமொன்றுந் தெரிகின்றீரில்லை. இப்போது தங்களிச்சைப்படிச் சண்டைக்குப் போகிறோமென்று வந்தவர்களைக் கோபித்ததெப்படி? தேவர்களும், தானவர்களும், சேனையாயிருந்தும்; இந்திரனானவன் உம்மைக்கண்டு நடுங்கினதை நீர் மறந்துபோய்விட்டீரா? அந்த ஸ்ரீராமனென்ன லகுவானவனோ? வருணதேவனே வந்து வணங்கி அவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்ளுகிற வரைக்கும் நடுங்கினின்றானே; அப்படியிருக்க, இந்தக் கருதிறச்சூதர்கள் அவனெதிர் நிற்பார்களா? இதை யாலோசிக்கும்போது இவர்களென்ன சாஸ்திரங்க ளறிந்தவர்களா? இஃதுமக்குத் தெரியாதோ? இவர்கள் போகட்டும்.

இந்திரசித்துவினுடனே நாற்பது வெள்ளஞ்சேனைகள்போயினவே; அவ்வளவுபேர்களு மாண்டு, இவர்களு மிந்திரஜித்துவுமாகிய இந்தமூன்றுபேர்கள்தானே தப்பிப் பிழைத்துவந்தார்கள். நீர் நல்ல புத்திமானுச்சே; இவர்களைப்பார்க்கிலும் வீரர்களாயிருந்தவர்கள் யார்? தான்விட்ட நாகபாசமும் சிந்திச்சிதறிப்போய்விட்டது. தன்னுடன்வந்த நாற்பதுவெள்ளஞ் சேனையும் படுகொலைப் பட்டுப் போய்விட்டது. தன்தம்பியாகிய அதிகாயனும் பட்டுப்போனான். இப்போது யுத்தமுகத்தில் உமதுகுமாரன் போகிறதற்குப் பயந்து சாக்குச் சொல்லுகின்றான். இப்படியிருக்க, அவனை யொன்றுஞ் சொல்லாமல் வயிற்றுச் சோற்றுக்கு உம்மிடத்தி லுழைக்கிற இந்த அற்பர்களையா நீர் மூக்கை யரியப் புறப்பட்டீர்? இலக்ஷுமணனென்று சொன்னமாத்திரத்தில் இராக்ஷசரெல்லாரும் தங்கள் வீட்டுக்கதவுகளையெல்லா மூடிக்கொள்ளுவார்கள். இந்த ஏழுசமுத்திரமும் அவர்கள்போய் மறைந்துகொள்ளுகிறதற்குத் துணையாகுமோ?

ஐயா! இராவணேஸ்வரா! நாசியறுக்க வேண்டுமானால் உலகத்திலுள்ளவர்களை யெல்லாமே யறுக்கவேண்டும். அப்படிச் செய்வதற்கு ஊழிநாள்வரையிலும் செய்தாலு முடியாது. ஆதலால் வந்த அநுமானுக்குப் பயந்து அன்றைக்கவனோடு சண்டைசெய்யமாட்டாமல் ஓடிப்போனவர்கள், ஒரு தண்டனைக்கு முட்படாமல் உமதுசேனையிற் பாதிக்கதிகமாக நாசியுடனே யிருக்கின்றார்கள். நீர் சீதையை விட்டுவிடாதபடியினாலே அந்த ராமலக்ஷுமணர்கள் நம்மீதுசண்டைக்கு வந்தார்கள். அப்போது எல்லாச்சேனைகளும் அவர்கள்மேற் சண்டைக்குப்போய் அந்த ராமலக்ஷுமணர்களைக் கொல்லாமற் போனார்களேயென்று நீர் எல்லாருடைய மூக்கையும் ஒரேநாளில் அறுமென்று சொல்லாமற் போனீரே; அப்படியேன் சொல்லவில்லை, ஆதையால், ஈதெல்லாம் ஓர் குற்றமல்லவென்று சொன்னான்.

தூமாக்ஷனும் மகாபாரிசனும் தங்கள் வீரவல்லமையால் பகைவர்களை அதஞ்செய்வேனென இராவணனோடு சொல்லுதல்.

கவி.

ஆறினபின்னரழிந்தனரன்னார், தேறினரன்னது சிந்தையுணர்ந்தார்
சீறியசெஞ்சினர் செங்கணரொன்றோ கூறினர்தங்கிலை செய்கைகுறித்தார்.

இவ்வண்ணம் மாலியென்பவன் சொல்லிய வார்த்தைகளால் இராவணன் கோபமாறினான் அவ்வண்ணம் மாறினவுடனே நாம் இனிப்பிழையோமென்றெண்ணியிருந்த தூமாக்ஷனு மகாபாரிசனும் தங்கள்மீதுகொண்ட கோபமாறின விலங்கேசனென்று தெரிந்தவர்களாகிப் பயந்தீர்ந்து, மனம் தைரியப்பட்டு, அதிக கோபத்துடனே கண்கள் சிவந்து நின்று தங்களுடைய செய்கையையும் நிலைமையையுஞ் சொல்லத் தொடங்கினார்கள். ஐயா இராவணேஸ்வரா! உம்முடைய குமாரன் இந்திரஜித்து அந்த லக்ஷுமணனுடைய யுத்தத்தில், வருத்தப்பட்டு ஒருபக்கத்தில் ஒதுங்கிவிட்டது மாத்திரமா? ஆகாசத்திற் போகத் துரிதப்பட்டு ஒருமாயையைச் செய்துவிட்டுப்போய்ப் பிழைத்து இலங்கைக்குள்வந்து நுழைந்துகொண்டார். நாங்களப்படி வந்துவிடமாட்டோம். இன்றைக்குள் அல்லது நாளைக்குள்ளாக அதிக உஷ்ணமான பெருநெருப்பில் வெந்துசெப்புவட்டிலில்விட்ட எண்ணெயில்வீழ்ந்தவர்கள் துடிப்பதைப்போல் எல்லாருடைய பிராணன்களுந் துடிக்கும்படி முடித்துவிடுவோம். மூன்றுநாள்வரையிலும் வைக்கிறதில்லை.

வீரலக்ஷணமெல்லாம் நன்றாய்த்தெரிந்த ஓ இராவணேஸ்வரா! நீரே பாரும். நீர் எங்களை இப்போது போர்க்கு அனுப்பினீரேயானால், தூமாக்ஷ மகாபாரிசன் கொடிய யுத்தத்திலே பிரவேசித்து எல்லாரையுங் கொன்றுவிட்டார்களென்று கேள்விப்படுவீரே யல்லாமல், கெட்டுப்போய் விட்டார்களென்று கேள்விப்படமாட்டீர். என்று தங்களாவியை முடிக்க விருப்பங்கொண்டவர்களான அவ்விருவருஞ் சொன்னார்கள்.

தூமாக்ஷன் மகாபாரிசனாகிய இவர்களுக்குத் துணையாக இராவணன் படைகளைக் கூட்டியனுப்புதல்.

கவி,

அன்னவர்தம்மொடு மையிருவெள்ளம், மின்னுபடைக்கை யரக்கரைவிட்டான்
சொன்னதொகைக்கமை யானைசுடர்த்தேர், துன்னுவயப்பரி யோடுதொகுத்தான்.

அந்தச் சொல்லைக்கேட்ட ராவணன் அவர்களுடனே பத்துவெள்ளம் ராக்ஷசக் காலாட்சேனைகளையும், அவர்களுக்குத்தக்க யானைகளையும், தேர்களையும் குதிரைகளையும், கூடச்சேர்த் தனுப்பினான். இந்தச் சேனைகளுடனே நெய்சொரிந்து யாகஞ்செய்யக்கண்டால் அவ்வியாகங்களையெல்லாம் நாசஞ்செய்கிறவனான யாககேதுவென்றும், சூரியனுக்குப் பகைவனான சூரியகேதுவென்றும், மாலியென்றும், பிசாசனென்றும், வச்சிரதந்தனென்றும் சொல்

னுகின்ற படைத்தலைவர்களெல்லாம்; இராவணனுடைய கட்டளையினால் யானைகளும், தேர்களும், குதிரைகளும், துணைடாகவா மலைக்கூட்டங்களைப்போலக் கர்வித்துப் புறப்பட்டுப் போனார்கள்.

அப்போது ஆகாசத்தை மறைத்துக்கொண்ட தூளியினால் தேவர்களுடைய கண்களும் தெரியாமற்போய்விட்டபடியினால், எண்ணுதலைக் கடந்து விளங்கும் அந்தச் சேனையின் தொகையை ஒருவரும் நிச்சயிக்கமாட்டாமற் போனார்கள். சக்கரங்கள்பூட்டிய தேர்களிற்கட்டிய கொடிகளும், கருமலைபோன்ற யானைகளின்மீது பிடித்துக்கொண்டு வருகின்ற கொடிகளும், வெள்ளையலைகளைப்போல வீசுகின்றபடியினாலும், மேகங்கள்பரவிய ஆகாச நக்ஷத்திரங்களாகிய மீன்களில் அசைகின்றபடியாலும், அந்தச் சேனைகள் பெரிய கடல்போலிருந்தது. உலகத்தைச்சூழ்ந்த பெரிய சமுத்திரம்போல முரசங்கள் சப்தித்தன. யானைகள் மேககர்ச்சனையைத் தோற்கடித்துக் கடலுடன் பகைகொண்டு முழங்கின. குதிரைகள் மேகங்களைப்போலக் கனைத்தன. முகபடாமணிந்த குன்றுகள் நடந்தாற்போலப் பெண்யானையின் சுவட்டை மிதித்து ஆண்யானைகள் தொடர்ந்துபோக, கலவியினிமித்தமாகப் பெண்யானைகள் நின்றுபிணங்க, அவைகளைத் துதிக்கையாற் றழுவிக்கொண்டு ஆண்யானைகள் நில்லாமற் சென்றன.

சிலயானைகள் நீண்ட துதிக்கைகளை ஆகாசத்தில்நீட்டி மேகசலத்தைவாரி வீசிக்கொண்டு போகின்றபடியால், அந்தமேகங்கள் விலகிப்போய்விட்டன. அவையெப்படியிருந்தனவெனில்? அவ்வியானைகளால் உண்டுவிடப்பட்டனபோலிருந்தன. அக்கினிகளைக்கக்குகின்ற ஆயுதங்களின் பிரகாசமும், வீரர்கள் தரித்திருக்கின்ற ஆபரணங்களின் பிரகாசமும், தேர்களையும் குதிரைகளையும் யானைகளையும் சிங்காரித்த சிங்காரப்பொருள்களின் பிரகாசமும், கிண்கிணிமாலையின்பிரகாசமும், எங்கும் நிறைந்திருக்கின்றபடியினாலே, அவ்விராத்திரியினிருளெல்லாம் திக்குத்திக்குகளா யோடிவிடப் பகலைப்போலிருந்தது.

தூம்ராக்ஷன் மகாபாரிசன் இவர்களோடு வந்த படைத்தலைவர்களை ஸ்ரீராமர்யாரெனவினவ விபீஷணர் இன்னாரின்னாரெனச் சொல்லுதல்.

கவி.

எய்தியசேனையை யீசனெதிர்ந்தான், வெய்திவண்வந்தவன் மாயையின்வெற்றி
செய்தவனேகொ லெரித்தியதென்றான், அய்யமில்வீடண னன்னதுரைத்தான்.

இப்படியாகவந்த படைகளையும் படைத்தலைவர்களையும் சர்வலோக சரண்யரான ஸ்ரீராமமூர்த்தி பார்த்து, விபீஷணரைநோக்கி, அப்பா சற்குணசீலனே! முன்பிங்கேவந்து மாயையால் வெற்றி பெற்றுக்கொண்டுபோன ஒருவனே மீட்டுமித்தப் படைகளும் படைத்தலைவர்களும் கூடவருகின்றனனோ? அல்லது வேறேயாரேனுமா சொல்லுகவென்று நியமித்தனர். உடனே யவர் ஸ்வாமிக்குத்தெண்டன் சமர்ப்பித்துச் சொல்லுகின்றார்.

ஐயா தசரதநந்தனே! இப்போது முன்பு மாயையால்மயக்கிவிட்டுப் போனவன் இந்திரஜித்து வானில்லை, மற்றியாரென்றால், மலைக்குகையிலிருந்த சிங்கமானது யுத்தத்தைவிரும்பி, அதிக கோபங்கொண்டது போலவும், சந்திரப்பிறையையொத்த தந்தங்களையும் பிளந்த வாயையுமுடைய யானையைப்போலவும் சப்தித்து, அக்கினிப்பொறிகளைச் சிந்துகின்ற அம்பறாத்தூணியை முதுகிற் கட்டி, வில்லைக்கையிற்பிடித்துத் தேரின்மீது வருகின்றவன் மகாபாரிசனென்னும் பெயரினையுடைய இராக்ஷதன். அக்கினிச்சுவாலை வீசுகின்ற கோபக்கண்களை யுடையவனும் சத்துருக்களுடைய ஆவியை யுண்கிற ஸ்வபாவமுள்ளவனும், பெரிய சமுத்திரத்தை வாயினால்தக்கி யுண்டவிட்டிறவனுமான மற்றொருவன், தூம்ராக்ஷனென்கிற பேருடையவன். பித்தர்களைப்போலத் தமொழிக்கொண்டு இப்போது சம்பவித்திருக்கின்ற யுத்தத்திற்காக முனையிலைச் சூலாயுதத்தைப் பலம்பொருந்திய தோளிற்கொண்டு தன்பிரயாசமெல்லாம் யுத்தமேயென்று நினைத்து இதோவருகின்றானே, இவன் வச்சிரதந்தனென்கிற பெயருடைய ராக்ஷசன்.

இதோ வாயுவேகத்தையும் மனோவேகத்தையும் பின்னிடச்செய்கின்ற குதிரையின்மீது பிடித்த வாயுடையவனும், சமுத்திரஞ் சப்தித்தாற்போலச் சப்திக்கிறவனும், ஆகாசபரியந்தம் வளர்கிற ஒருசூலாயுதத்தையுடையவனுமாக வருகின்றானே; இவன் பிசாசனென்கிற பெயருள்ள இராக்ஷதன். வெள்ளத்தைப்போல முழங்குகின்றவனும், நெருப்பைப்பார்க்கிலும் கொடியவனுமாய்த்தேரில்வருகின்ற இவன்; சூரியகேதுவென்கிற பெயருள்ளவன். இரத்தத்தையும் அக்கினியையும் சொரிந்துகொண்டு வருகின்றவன் யூபகேதுவென்னும்பெயருடைய இராக்ஷசன். செந்நெற்கதிர் பழுத்து வளைந்ததுபோல உயர்ந்து வளைந்த கழுத்தையுடைய குதிரைப்படையுடனே வருகின்றவனும், முலமோசையைக்காட்டிலும் அதிக கொடுமையுள்ளவனும், அதிக தவத்தைச் செய்தவனும், சூலாயுதத்தையுடைய உருத்திரமூர்த்தியும் கண்டு பயந்துபோகும்படித்தேரிற் காணப்படுகின்றவனுமானவன் மாலியென்கிற பேருடையவனென்று சொன்னார்.

இராக்ஷதச்சேனைகளை வானரசேனைக ளெதிர்த்துப் போர்விளைத்தல்.

கவி.

ஆர்த்தெதிர்நடந்தன வரிவின்றனையும்
நீர்த்தனைவாழ்த்தியுந் திசைதொறுசேனையும்
போர்த்தொழில்புரிந்தனர் புலவர்போர்க்கிலார்
வேர்த்துயிர்பதைத்தனர் நடுங்கினிம்பியே.

அதைக்கேட்ட வானரச்சேனைகள் ஸ்ரீராமமூர்த்தியை ஸ்தோத்திரம்பண்ணி ஆர்ப்பரித்துக் கொண்டுபோய் இராக்ஷசசேனையுடனே கலந்து போர்செய்தார்கள். தேவர்களெல்லா மிதைக்கண்டு சற்றும் போக்கிடந்தோன்றாமல் வெயர்த்து, உயிர்பதைத்து நடுநடுங்கி நின்றுவிட்டார்கள். வானரர்கள் யுகாந்தகால இடியோடுகூடிய சண்டமாருதக் காற்றைப்போல மலைகளைப் பி

டுங்கி யெறிந்தார்கள். ஸ்ரீராமருடைய கோதண்டத்தில் நின்றும் புறப்பட்ட பாணங்கள் மேகதாரைகளைப்போலச் சென்றன. மலையிலுள்ள மேகங்கள் சிதறினதுபோல இராக்ஷசர்களுடைய வாய்களிலிருந்து பற்களெல்லாம் பலபலவென்றுதிர்ந்தன. மதஜலங்களைப் பொழிகின்ற யானைகள் மாளும்படியாகவும், சேணங்களிட்ட குதிரைகளழியவும், பெரிய சக்கரங்கள் பூட்டிய தேர்கள் பொடிப்பொடியாய் முறியவும், போர்க்கு உடன்பட்டுவந்த இராக்ஷசர்களெல்லாம் ஆதிசேஷனுடைய உச்சிப்படம்பட்டு விழுவதுபோலச் சுருண்டு விழும்படியாகவும் வானரச்சேனை யெறிந்த மலைகள்போய்ப் பட்டன.

இராக்ஷசர்கள் வேகமாயெறிந்த சக்கராயுதங்கள் வானரங்களுடைய மலைக்குச்சமானமாகிய நீண்டதோள்களையும், நிற்கின்ற கால்களையும், உயர்ந்திருக்கின்ற வால்களையும், தங்களைக்கொல்லும்படிப் பேர்த்தெடுத்த மலைகளையும், மரங்களையும், அவர்களுடைய தலைகளையுமறுத்துக்கொண்டு போய்விட்டன. பூமியைத்தந்தங்களினாற் பிளந்துகொண்டு வருகின்ற யானைகளோடு மனோவேகத்துடன் தாண்டிப்போகத்தக்க குதிரைகளையும் செலுத்திக்கொண்டு வருகின்ற இராக்ஷசவீரர்களெறிந்த தோமராயுதங்கள், வானரவீரச் சிரேஷ்டர்களுடைய தேகங்களைப் பாளம்பாளமாய்ப் பிளந்துவிட்டன. வானரவீரர்கள் கலிரென்று ஆர்ப்பரித்துக்கொண்டெறிகின்ற கற்பாறைகள் சக்கரங்கள்பூட்டிய தேர்க்கொடிகளைச் சிதைத்தும், சாரதியினுடைய வக்கிரதந்தங்களோடு கூடிய பெரிய தலைகளை நொறுக்கியும், அந்தச்சண்டாளர்கள் பிடித்திருக்கின்ற விற்களுடனே அவர்களேறிவந்த யானைகளையுங் கொன்றன.

இராக்ஷசர்கள் வானரங்களினுடைய தேகத்திற் பாயும்படியாயெறிந்த சூலாயுதங்கள் உயர்ந்த மலைக்குகையிற் பெரும்பாம்புகள்போய்ச் சேர்ந்தாற்போல, அவ்வானரவீரர்களுடைய தேகங்களிற்போய் நுழைந்தன. யானைகள் வானரவீரர்களின் வாலைப்பிடித்துப் பூமியில்வாரி யறையவும், அதைத் தப்பித்துக்கொண்டு அந்த யானைகளினுடைய பின்னங்காலைப் பிடித்துத் தூக்கி அவ்வானரவீரர்கள் மோதுவார்கள். அன்றியும், வானரவீரர்கள் யானைகளைக்கொண்டு இராக்ஷசர்களைத் தாக்கவும், வெங்கண்ணராகிய இராக்ஷசர்கள் வேலாயுதத்தைக் கையிற்கொண்டு எதிர்வார்கள். வானரவீரர்கள் வேகங்கொண்டு வீசியெறிந்த மலைகள்பட்டு, இராக்ஷசச்சேனைகள் ரணகளத்தில்மாண்டன.

மகா பாதகர்களாகிய ராக்ஷசர்களுடைய வில்லிலிருந்து பிரயோகிக்கப்பட்ட அம்புகளால்: வானரச்சேனை சமுத்திரங்கள் பற்களுடன்கூடத் தலைகள் நொறுங்கி மாண்டன. வானரவீரர்களெறிந்த மலையினா லறைப்புண்டு அந்த மலையுடனேகூடத் தங்கள்வீட்டில்வந்து வீழ்ந்த தங்கணவர்களாகிய இராக்ஷசர்களுடைய வக்கிரதந்தங்களையுடைய தலைகளை அவர்கள் பெண்சாதிமார்கள் அருகிற்போய்ப்பார்த்து, அவர்களோடு நெடுநாள் பழகியிருந்தும்

No 56. இராவணன் இராமனுதியர் சந்தோஷகர்ஜனையால் மயங்கி இந்திரஜித்துவினிடம்போய் பேசுகையில் தூதர்கள் யாகசாலைச்செய்தியறிவித்தல்.



தூமாட்சனுதியபடைத்தலைவர்களை ஆஞ்சனேயராதியரெதிர்க்க அவர்கள் பத்துவெள்ளச்சேனைகளை இராமலட்சுமணர்கள் மடித்தல்.



உயுத்தகாண்டம். தூமாட்சனுதியர்படையெடுத்து வந்தது.

தங்களவர்தா னென்று தெரிந்துகொள்ளமாட்டாமல் இது யாருடைய தலையோவென்று சந்தேகித்து நிற்பார்கள். தரித்திரத்தில் வருந்துகின்றபேர்களுக்குக் கொடுத்துண்ணுமை யழிந்த செல்வத்தை யுடையவர்களைப்போல யானைகள் மாண்டுபோய்விட்டன.

பொன்மயமாய்ப் பிரகாசிக்கின்ற தேர்களினுடைய அச்சுகளெல்லா முறிந்தழிந்தன. குதிரைகளெல்லா நடக்கமாட்டாமற் கால்முறிந்து விழுந்தன. நீகாமனு மற்ற ஆள்களு மாண்டுவிடக் கப்பலானது தன்மீதுவிரித்தபாயோடு கடலில் நானுவிதமாக ஓடித்திரிவதுபோல, யானைகள் தங்கள் பாகர்கள் மாண்டு செலுத்துகிறவர்க ளில்லாமல் இரணக்கள முழுவதும் பரவியிருக்கின்ற ரத்தப்பிரவாகத்திற் கரைகாணமாட்டாமல் உழன்றுகொண் டிருந்தன. தங்களாயுதங்களுடனே மேலேறி நடத்திவந்த இராவுத்தர்கள் மடிந்துவிட வாயி லிரத்தங் கக்கிக்கொண்டு அங்கங்கே இரத்தப்பிரவாகத்தில் விழுகின்ற குதிரைகள் சமுத்திரத்தில் அக்கினியைக் கக்கிக்கொண்டு நிற்கின்ற வடவாமுகாக்கினியையொத் திருந்தன.

தூமாட்சனுதியர் பத்துவெள்ளஞ்சேனைகளோடும் ஆஞ்சனேயாதியரை யெதிர்க்க, அப்பத்துவெள்ளஞ்சேனைகளும் இராமலட்சுமணர்களால் சூரியோதயத்திற்குமுன் மடிதல்.

கவி.

தூமக்கண்ணனு மநுமனுமெதிரெதிர் தொடர்ந்தார்
தாமத்தங்கதன் மாபெரும்பக்கனைத் தடுத்தான்
சேமத்திண்சிலை மாலியுநீலனுஞ் செறுத்தார்
வாமப்போர்வயப் பிசாசனும்பனசனு மலைந்தார்.

இப்படிப் போர்விளைகின்ற காலத்தில் தூமாட்சனும், ஆஞ்சனேயரும், ஒருவரையொருவ ரெதிர்த்து யுத்தஞ்செய்தார்கள். மஹாபாரிசனை வெற்றிமாலையைத்தரித்த அங்கதகுமாரன் தடுத்து யுத்தஞ்செய்தான். பலம்பொருந்திய வில்லையுடைய மாலியென்பவனும், நீலனென்கிற வானரவீரனும், சண்டைசெய்தார்கள். உயுத்தத்தில் ஜெயம்பெற்ற பிசாசனென்பவனும், பனசனென்பவனும், ஒன் றுகலந்து போர்செய்தார்கள். சூரியனுக்குப் பகைவனுன சூரியசேது என்பவனும், சூரியபுத்திரனாகிய சுக்கிரீவமகாராசனும், ஒருவரையொருவ ரெதிர்த்துச் சண்டைசெய்தார்கள். யாகசேதுவும், இளையபெருமானும், யுத்தஞ்செய்தார்கள். வீரனாகிய வச்சிரதந்தனென்பவனும், விருஷபனும், ஒருவரோ டொருவர் எதிர்த்தார்கள். கொடுங்கண்களையும் வெண்மையாகிய பற்களையு முடையவர்களான இராட்சசர்களுக்குள்ளும், வீரசிம்ஹத்துக்குச் சமானமாகிய வானரர்களுக்குள்ளும், போர்த்தலைவர்களின்னுரின்னாரென்றறிந்து ஒருவர்க்கொருவர் யுத்தஞ்செய்யப் புறப்பட்டு, தேவர்களுங்கண்டு நடுங்கும்படியாக யாவருஞ் சண்டைசெய்தார்கள்.

இப்படி இருவகைப்படையும் கலந்து போர்செய்கிறகாலத்தில் பிரகாசிக்கின்ற வக்கிரதந்தங்களை யுடையவர்களான இராட்சசர்களில்வந்த பத்து

வெள்ளஞ் சேனைக்குள், ஆறுவெள்ளஞ் சேனைகளை யுத்தகளத்தில் ஸ்ரீராமர் கொன்றுவிட்டார். மற்ற நாலுவெள்ளஞ் சேனைகளை இலட்சுமணர் தம்முடைய பாணங்களால் முடித்துவிட்டார். அவர்களுடைய ரத்தப் பிரவாகமானது உப்புக்கடலைச் சேர்ந்து அக்கடல்நீரின் நிறத்தை உருக்கிய செம்பைப்போல மாற்றிவிட்டது. அதிலுள்ள மீன்குலங்களெல்லா மதர்த்துப் பவளத்துண்டம்போ லாய்விட்டன, வெண்மையாகிய முத்துகளெல்லாம் குன்றிமணியைப்போலத் தோன்றின. அலைமெறிகின்ற கடல்நீரெல்லா மிரத்தமயமாகி நானாவிதநிறமுள்ள இரத்தினங்களெல்லாஞ் செவந்துபோய்விட்டன. மதஜலம்பொழிந்து மலைபோ லுயர்ந்திருக்கின்ற யானைகளின் மஸ்தகத்திலிருந்து உதிர்கின்ற முத்துகளும், கடற்சங்கங்களிற் பிறந்த முத்துகளும், மற்ற ரத்தினங்களுடனே வேறுருவந் தெரியாமற் செவந்துபோய் விட்டன.

இப்படி வெகு ஆரவாரத்துடன் யுத்தநடக்கின்றசமயத்திற் பொழுதுவிடிந்து, சூரியனானவன் தன்னுடைய கிரணக்கற்றையாகியகைகளினாலே இதிற்காணப்படுகின்ற இருளாகிய யானைகளையெல்லாங் கொன்று, உதிரக்கடலில் ஸ்நானஞ்செய்து புறப்படுகிறவனைப்போல உதயமானான். போர்க்களத்தி லிராக்ஷசர்களென்கிற காடாந்தகாரமானவிருட்டை ஸ்ரீராமர் துரத்திவிடவும், புறத்திலுள்ள விருட்டையெல்லாம் சூரியன் துரத்திவிடவும், உலகமானது இரண்டு சூரியர்களையுடையதா யிருந்தாற்போல எங்கும் பிரகாசமுண்டாயிற்று. இராத்திரிமுழுவதும் நிலைத்திருந்த பெரிய விருட்டானது நீங்கினபடியினாலே அலைமெறிந்துகொண்டிருக்கின்ற இரத்தசமுத்திரமும் பிணமலைகளும் எங்கும்பரவி நிறைந்து, பூமியின்மீதும் பிரவகித்துக்கொண்டுவந்த சமுத்திரத்தையும் அதற்கிடையி லங்கங்கே கண்ணுக்கெட்டினவரைக்குந் தோன்றுகின்ற மலைகளையும்போ லிருந்தன. இரணக்களமுழுவதும் மூடியிருக்கின்ற இரத்தவெள்ளத்தி லிருக்கின்ற நிணச்சேற்றில் அம்புகள்தைத்து வீழ்ந்துகிடக்கின்ற இராக்ஷசர்களுடைய முகங்கள் சூரியோதயத்தில் தடாகங்களிலே மலர்ந்து வண்டுகள் மொய்த்துக்கொண் டிருக்கின்ற தாமரைப்புஷ்பத்தைப்போற் காணப்பட்டுக்கொண் டிருந்தன.

இரணக்களத்தில் தேர்களும், யானைகளும், குதிரைகளும், சின்னபின்னப்பட்டிருக்கின்ற தன்மை உலகமுழுவதும் பெயர்ந்துபோகின்ற யுகாந்தகாலத்திற் சண்டமாருதக் காற்றடித்தபோது தேவர்களேறிக்கொண்டு திரிகின்ற விமானங்களும், சூரியசந்திராதி நக்ஷத்திரங்களும், தாறுமாறுபட்டுப் பூமியில்வந்து வீழ்ந்துகிடக்கிறதைப்போ லிருந்தன. இராத்திரியிற்றோன்றிய சந்திரனுக்குச் சமானமாகிய முகத்தையுடைய இராக்ஷசஸ்திரீகள் அக்கினியைப்போன்ற அல்லிப்பூமாலையைச்சுற்றின கூந்தலுடனே வந்து இரணக்களத்தைச் சேர்ந்து மாண்டுபோன தங்கள் நாயகன்மார்களைக் கட்டித்தழுவிக்கொண்டு கிடக்கும்போது, அந்தராக்ஷசப் புருஷப்பிரேதங்கள் பூங்கொடிகள் சுற்றிக்கொண்டு கிடக்கின்ற மராமரத்தையொத் திருந்தன. அசைகின்ற

நுண்ணிய இடையையும், மலைபோன்ற ஸ்தனங்களையும், செவ்வானத்தையொத்த கூந்தலையும், பயங்கரமான பற்களையுமுடைய இராக்ஷசஸ்திரீகள் இரணக்களத்துக்குவந்து; தங்களுக்குப்பிரியமான நாயகருடைய தலைகளைக் கொடுக்காமல் மல்லாடியோடுகின்ற பேய்களைத்தொடர்ந்து பிடித்து இரண்டு கால்களையும் பற்றிப்பிளந்தார்கள்.

பிரகாசிக்கின்ற சங்குவளைகளையணிந்த கைகளையுடைய ஒரு ராக்ஷசஸ்திரீயானவள் தன்னாயகனைத் தேடிக்கொண்டுவந்து, இரணக்களத்தில் உடலையும் அவயவங்களையும் பார்த்துச் சகிக்கமாட்டாதவளாகி, குடலையும், காலையும், கண்ணையும், சிறுகப்பற்றிப் பிடுங்கப் பொறுக்கமாட்டாமற் பெருமூச்சுவிட்டுத் தன் கணவனுடனே தன்பிராணனையுந் துறந்துவிட்டாள். வாளைப்போன்ற கண்களையுடைய சில ராக்ஷசஸ்திரீகள் தங்கள் நாயகர்களுடைய பெரியதோள்களைப் பெண்ணரியும் கிழநரியும் அதட்டவு மஞ்சாமற் கொண்டுபோகிறதைக் கண்டு தொடர்ந்தோடும்போது, கீழிருக்கின்ற ஆயுதங்கள் செம்பஞ்சூட்டிய கால்களைப் பாளம்பாளமாய்ப் பிளந்தும் அவர்களுக்கு நோய் தெரியவேயில்லை. தங்கள் நாயகன்மார்களிடத்திற் சிநேகித்திருந்த மனதையுடைய சிலஸ்திரீகள் தங்கள் புருஷர்களை மலையைப்போ லிருக்கின்ற பிணங்களின்மே லேறித்தேடிக்கொண்டு, ஆண்மயிலைப்பிரிந்து மலையின்மேல் திரிந்தலைகின்ற பெண்மயிலையொத் திருந்தார்கள்.

சில ராக்ஷசஸ்திரீகள் தங்கள் நாயகன்மார்கள் போர்த்தொழிலிற் கொண்ட கோபத்தால் வாயை மடித்துக்கொண்டு உயிர்துறந்துவிட்டதைப் பார்த்து, வெண்மையாகிய பற்களினாலே இதழைக்கடித்துத் தமது சக்களத்திக்குத் தங்கள் கணவன் கலவிக்குறிப்பைக் காட்டுகின்றானென்று பிணங்கினார்கள். சில ஸ்திரீகள் தலையிழந்து களத்திற்கிடக்கின்ற தங்கள் நாயகன்மார்களை நெருங்கிப்பார்த்து மூர்ச்சையடைந்து, அவர்களுடைய உருத்தெரியாமல் வெள்ளைத் துகிற்கொடியையொத்த தங்கள் பருத்த நகங்களினாலே முன்னம் தோளிற் கீறியிருந்த குறியை அவர்கள் மார்பிலணிந்திருந்த கவசத்தை நீக்கிவிட்டுப்பார்த்துத் தங்களுயிரை மாய்த்துக்கொண்டார்கள். சிலஸ்திரீகள் கண்களில் மழையைப்போலக் கண்ணீர்விட்டுக்கொண்டு தங்கள் கணவர்களுடைய வஜ்ஜிரத்துக்கொப்பாகிய தேகத்தைத் தேடிக்கொண்டு ரணக்களத்தில் வந்து, இராக்ஷசர்களுடைய பிணமலைகளிலிருந்தொழுகுகின்ற இரத்தப்பிரவாகத்திலழுந்தித் தங்கள் பிராணனைவிழந்தார்கள்.

தூமிராக்ஷன் ஆஞ்சனேயரோடு போராடிமாய்தல்.

கவி.

வசைசின்றுயர்நா ணெடுமாருதியும்
புகைபின்பொருகண் ணவனும்பொருவார்
மிசைசென்றிலர்பின் றிலர்வென்றிலரால்
திசைசென்றனராம் பெயதியுமிழ்வார்.

உருவத்திற்கேற்றபடி நீண்டுயர்ந்த பாதங்களையுடைய ஆஞ்சநேயரும், புகையெழும்புகின்ற கண்களையுடையவனுனதால் தூமராக்ஷனென்னும் காரணப்பெயருடைய இராக்ஷசவீரனும், ஒருவர்க்கொருவர் போர்புரியுங்காலையில் இருவரிலொருவரேனும் வருத்தப்பட்டவர்களில்லை, தோற்றவர்களுமில்லை, செயித்தோர்களுமில்லை. அவாலேயிருந்து எங்கும் நிரம்பும்படியாகத் தமது கண்களினின்றும் அக்கினிப்பொறிகளைக் கக்குவார்கள். அப்போது மிகவுங் கறுத்த காளமேகமானது கோபித்தாற்போலச் சீறுகின்ற தூமராக்ஷன், அக்கினிக்கொடியையொத்த இருபத்தைந்து பாணங்களை அஞ்சனதேவியின் புத்திரரான அநுமாருடைய தேகத்தின்மீது பிரயோகித்தான். அந்தப்பாணங்களவருடைய தோளிற்பட்டுருவினமாத்திரத்தில் இரத்தவெள்ளமானது குபுகுபுவென்று புறப்பட்டது. உடனே யவ்வாஞ்சநேயர் ஊழிக்காலமேகம்போலக் கர்ச்சித்து அதிக கோபங்கொண்டு, தூமராக்ஷனுடையதேரை அழித்துவிட்டார். அப்படித் தேர்சிதைந்தமாத்திரத்தில் தூமராக்ஷன் கையில்வாளுடனே சூரியன் பிரகாசிக்கின்ற ஆகாசத்தில் வேகங்கொண்டெழும்பினான். அப்போது லக்ஷ்மணர் தம்முடைய பாணங்களால் அவனுடையவில்லை முறித்தெறிந்தார். உடனே வாயுபுத்திரராகிய ஆஞ்சநேயர் அவனைப் பூமியில்தள்ளி, மலையினும்பெரிய அவனுடைய உடலத்தை மண்ணில்விழத்தள்ளி, கடலைத்தாண்டிய பாதங்களைக்கொண்டு கதறும்படி உதைத்து, அவனதுபிளந்த வாயினையுடைய தலையைக் கையாற்பற்றித் திருகிக்கிள்ளிக் கடலில்தெறித்து தமது கோபமாறினர்.

மகாபாரிசன் அங்கதனோடு போராடி மாய்தல்

கலி.

மாபக்கனுமங் கதனும்மலைவார், தீபத்தினெரிச் செழுசெங்கணினர்
கோபத்தினர் கொல்லவினைக்கடர்வார், தூபத்திணுயிர்ப்பர் தொடர்ந்தனரால்.

மகாபாரிசனும் அங்கதகுமாரனுமெதிர்த்துத் தீபத்தைப்போலக் கண்கள் ஒளிவீசும்படியாகக் கோபங்கொண்டு, ஒருவரையொருவர் கொல்லவினைத்துப் புகையெழும்பும்படிச் சுவாசம் விட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அந்தச்சமயத்தில் மகாபாரிசன் அதிககோபத்துடனே கர்ச்சித்துக்கொண்டு வருகின்ற பலத்தயானையானது உண்மையை விட்டெறிந்ததுபோல அங்கதகுமாரன்மீது ஐம்பத்தொரு பாணங்களைப்பிரயோகித்தான். அஃதெப்படியிருந்ததெனில் பரிவேடத்தோடு கூடிய சூரியனைக் கவ்வ வருகின்ற கேதுவென்னும் பாம்பையொத்திருந்தது. உடனே அவ்வங்கதகுமாரன் தனதுபலத்த கையினால் அவன்கையில்வில்லைமுறித்து, பூமியுடனே யெடுத்தெறிகிறதுபோல அவனையுந் தேரோடுதூக்கி ஆகாசத்தில்விட்டெறிந்தான்.

இப்படி யெறிந்தவுடனே மகாபாரிசன் சூரியனைப்போலப் பிரகாசிக்கின்ற தனதுஅலங்காரப்பட்டதேரை விட்டுக்குதித்து, தவறாத சாமார்த்தியத்தையொத்த ஒரு சூலாயுதத்தையெடுத்து அங்கதனுடைய மார்பிலெறிந்தான். அதைக்கண்ட சர்வலோகநாயகராகிய ஸ்ரீராமமூர்த்தியானவர் இதுவுமல்லயுகாந்த

காலஇடிபோலிருக்கிறதென்று திருவுளங்கொண்டு, ஒருவரும் பயப்படாதபடி விஷம்பொழிகின்றதமது அம்பினாலே அறுத்துக் கீழேதள்ளினர். அப்போது அங்கதன் தினைவிளைவுக்குள்ளாக அந்த மகாபாரிசனைக் கிட்டிப்பிடித்து, இந்தப் பதினாலுலோகத்தையும் இரண்டடியாலளந்த திரிவிக்கிரமரும் புகழத்தக்க வல்லமையுடனே அவனை இரண்டு சரிபிளவாய்ப்பிளந்து எறிந்துவிட்டான்.

மாலியென்பவன் நீலனோடு போராடி இலக்ஷ்மணரால் மாய்தல்.

கலி.

மாமாலியுநீ லனும்வானவர்தம், கோமானொடுதா னவர்கோனிகலே
ஆமாறுமலைந் தனரென் றிமையோர், பூமாரிபொழிந் துபுகழ்ந்தனரால்.

மாலியென்கிற ராக்ஷசவீரனும், நீலனென்கிற வானரவீரனும், தானவராஜனான இரணியனும்,தேவதேவனான நரசிம்மமூர்த்தியும்போல யுத்தஞ்செய்கிறார்களென்று சொல்லி; தேவர்கள் புஷ்பமாரிபொழிந்தார்கள். அப்போதுநீலன் ஒருமலையையெறிந்து மாலியினுடையவில்லை இரண்டு துண்டாக்கிவிட்டான். அம்மாத்திரத்தில் அவன் பிரகாசமுள்ள வாளாயுதத்தைக்கையிற்பற்றிக்கொண்டுதேரேறி, கில்கில்லென்று கர்ச்சித்துக்கொண்டு நீலனை நெருங்கிவந்தான். இப்படியவன் வந்தமாத்திரத்தில் வேறொருபுறத்தில் நின்ற வெற்றியாளனான குமுதனென்கிற வானரவீரன் ஒருமலையை யெறிந்து அந்த மாலியினுடைய தேரைப் பொடிப்பொடியாகச் சிதைத்துவிட்டான். நீலனொரு மராமரத்தை வேரோடுபிடுங்கி மாலிமேல் விட்டெறிந்தான். அதையவன் தன்கையிலுள்ள வாளினாலே சிதைத்துவிட்டு நீலன்மீது பாய்ந்துவரும்போது, கொடாதபாவங்களையெல்லாம் நாசம்பண்ணுகிறவரான ஸ்ரீராமமூர்த்தியினிளையவராகிய இலக்ஷ்மணப் பெருமான் அவனுடைய வாள்பிடித்த தோளறும்படி வாளியைப் பிரயோகித்தார். அப்படிப் பிரயோகித்தமாத்திரத்தில் மின்னலைப்போலப் பிரகாசிக்கின்ற வாளாயுதத்துடனே தோள்விழுந்தும் பாவியானவன் தான் போர்செய்வதில் கொஞ்சமும் விலகாமலிருக்க, அதுகண்ட இளையபெருமாளானவர் இவன்முன்பு போர்செய்தல் என்னைப்போலொத்தவர்க்கட்டாது. இது இலகுவானபோராய்விட்டது. என்று அப்பாற்போய்விட்டார்.

இதைக்கண்ட போர்வீரர்களெல்லாம் கடலைப்போலக் கறுத்ததிருமேனியையுடைய ஸ்ரீராமமூர்த்தியினிடத்திற்கு வந்து, மகாவீரரும் அம்புக்கையுமாயிருக்கின்ற வருமான இலக்ஷ்மணரைக்குறித்து வெகுவாய்க்கொண்டாடி, உலகத்தில் வீரத்தன்மையால் இந்தத் தர்மகடத்தையைச் செய்து யுத்தம்பண்ணினவர்கள் யாவரென்று புகழ்ந்தார்கள். அப்போது யாகசேதுவுடன் அதிககோபங்கொண்டு யுத்தஞ்செய்கின்ற புஜபல பராக்கிரமசாலியான இலக்ஷ்மணர் அவனைநோக்கி, அடா யாகசேதுவே! உன்னுடைய ஆயுளிவ்வளவுதான். என்றுகூறி ஒரு பாணத்தைப்பிரயோகித்து அவனுடைய மார்பைப்பிளந்தார். உடனேயாகசேது இலட்சுமணரால்விடுத்த ஒருபாணத்தினாலே

வில்முறிந்து, தோளறுந்து, உயர்ந்த மலைபோன்ற அவனுடைய மேனியிலங்கு; கழுத்தும், கால்களும், துண்டுபட்டு மாண்டுபோனான். வானராதிபதியான சுக்கிரீவமகாராஜன் தனதுபிதாவாகிய சூரியனை முன்னமொருநாளெதிர்த்து ஜெயம்பெற்றவனும், மலையைப்போன்ற தேகத்தை யுடையவனும், பின்னிடாத உயர்ந்த பலத்தையுடையவனுமான சூரியசேதுவைக் கொன்றுவிட்டார்.

இடபனென்பவன் தன்னோடு கொடியசண்டை செய்கின்ற விஷம்போன்ற கண்ணையுடையவனுன வஜ்ஜிரதந்தனுற்சுவர்க்கமுமதிரும்படிச் செலுத்தப்பட்டதேரும், பிரகாசிக்கின்ற வாளாயுதமும் அழியும்படி ஒருமலையைப்பிடுங்கி எறிந்தான். அப்படித் தேரழிந்தமாத்திரத்தில் அவ்வச்சிரதந்தன் வில்லை வைத்துவிட்டு ஒருபெரிய தண்டாயுதத்துடனே பூமியில் வீழ்ந்து, இடியும் எட்டுத்தோள்களையுடைய உருத்திரமூர்த்தியுமஞ்சும்படி உன்னுயிரை யினிவைப்பேனுவென்றுவந்து விருஷபனை அடித்தான். அப்படியடியுண்ட விருஷபன் உயிர்தமொழிச்சோர்ந்து இடியுண்ட மலையைப்போல முடிந்து போனானென்று யாவருஞ் சந்தேகப்படுகிற தருணத்தில், விக்கிரமஸ்வரூபத்தையும் குறியஸ்வரூபத்தையு முடையவரான ஆஞ்சநேயர்வந்து குதித்தார். அப்படிவந்து ஆகாசத்தையுமறைக்கும்படியாய் உயர்ந்த தேகத்தையுடையவரான அனுமானை நீண்ட கண்டாமணியைத்தரித்தவனுன வச்சிரதந்தன் ஓங்கி, மார்பிலக்கினிபறக்கும்படியாகக் குத்திவிட்டுப்போயினுன்.

அப்படி போகும்போது அவனை அனுமான் இடதுகையினுற் பிடித்து, அவன்கையிலுள்ள தண்டாயுதத்தைப் பறித்து எறிந்துவிட்டு, தமதுவெற்றிப்பிரதாபமுள்ள கையைக்கொண்டு ஓங்கிக்குத்தினர். உடனே வஜ்ஜிரதந்தன் தேகவல்லமையெல்லாமுடிந்து இறந்துபோனான். ஓர் பெரியவிருக்ஷத்தைக் கையிற்பிடித்துச் சுழற்றிக்கொண் டிருக்கின்ற அதிவேகமுள்ள ஒரு அம்புவிபோன்ற பனசனுடையமார்பி லிரத்தம்புரண்டு வழிந்தோடும் படியாகப் பசாசன் ஒரு தோமரத்தைவிட் டெறிந்துவிட்டு, அவன்மேகத்தின்மீ திருக்கின்றானே ? கடலின்மீ திருக்கின்றானே ? பூமியில் நிற்கின்றானே ? சூரியன்மீதாவா விருக்கின்றானே ? மற்றெதின்மே லிருக்கின்றானே தெரியவில்லையென்று யாவரும் சந்தேகிக்கும்படியாக ஒரு குதிரைமீதேறிக்கொண்டு யுத்தத்திற்கு வந்தான். அவ்வொருகுதிரையானது நூறுயிரகோடி குதிரைகளோ? அல்லது ஒரு குதிரையோ? அதனைப் பல்லாயிரந் தேவர்களு நின்று தங்களிமையாத கண்ணுலே நிச்சயித்தறியக்கூடாதபடி, அஃது பருந்துகளுலாவுகின்ற இரணகளத்தில் நின்று திரிந்தது.

பின்னுமந்தத் தேவர்கள் ஒன்றுகூடி, இந்தவெற்றிக்குதிரை கண்ணிற்குமெட்டாமலோடும். மனோவேகத்திலும் அதிவேகமாகப்போகும். ஆகாசத்திற் செல்லுகின்ற காற்றைப்பார்க்கிலும் வேகமாகச்செல்லும். உயுத்த களத்திற்குள்ளேயிருக்கின்றதென்று நினைக்கும்போது புறத்தேபோயிருக்கும்.

№ 57. மகரக்கண்ணனை ஸ்ரீராமரும், அவனைச்சக்கராட்சகர்களாகியகுருதிக்கண்ணனையும் சங்கனையும் நளனும் பனசனுமாய்த்தல்.

உயுத்தகாண்டம்.

பூமியிற் கால்தாவமாட்டாது. இப்படிப்பட்ட குதிரையின்வட்டாகாரச்சுற்றிறைற் பெரும்புண்ணடைந்தும், இந்தக் குதிரையுடன் பந்திக்கப்பட்டவனாய்க் காணப்படுகின்ற பசாசனுடைய கையாயுதத்தால் ஆயுதவடுக்கள் பட்டும், குரங்குப்படைகள் குதித்துக்குதித்துப் புறம்பிலோடிப் போய்விட்டன. மேலுமிக் குதிரையோ ஒரு நொடிக்குள்ளாக இருநூறு வானரங்கள் சிதையுமபடிக்குப்பாயும். அந்தப்பசாசனுடைய கூர்மையான வேலோ? சற்றுநேரத்திற்குள்ளாகத் தனது நுனியினாலே அநேககுரங்குகளைமாய்க்குமென்று மிகுந்தபலமுள்ள அந்தத் தேவர்களெல்லாம்பயந்து விட்டார்கள்.

இப்படி இடியைப்போலவும், அதிககோபமுள்ள யமனைப்போலவும், வானரர்களை வருத்தப்படுத்திக்கொண்டு உழலுகின்ற கொடுஞ்செய்கையையுடையவனாகிய அந்தப்பசாசனை, வில்விரசிகாமணியாகிய இலக்ஷுமணப்பெருமாள் வாயுவாஸ்திரத்தைப் பிரயோகித்து அவன்தலையை அறுத்துவிட்டார். அப்படி தலையறுந்தும் அந்தப்பசாசன் குதிரையின்மேலிருந்தபடியால் பூமியில்விழவில்லை. அவன்கைச் சூலத்தால் குத்துகிறதும் ஓயவில்லை, அந்தக்குதிரையும் கெர்லிசெய்யாமல் நிற்கவில்லை. ஈக்களெல்லாம் நமக்கு இன்றைக்கு லாபமுண்டென்று ராக்ஷசர்களுடைய பற்களினிடத்திலுள்ள மாமிசங்களின்மீதுவந்து மொய்த்துக்கொண்டன. தென்றிசைக்கதிபனான யமனுடைய தூதர்கள் இரணக்களத்திற்கு உயிர்களைப் பிடிக்கும்படி வந்தார்கள். இராவணனுடைய தூதுவர்கள் படைத்தலைவர்களெல்லா மாண்டார்களென்பதைச் சொல்லுகிறதற்கு இலங்கைக்கு ஓடினார்கள்.

படைத்தலைவர் வதைப் படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

இருபதாவது,

மகரக்கண்ணன் வதைப் படலம்.

இப்படலத்தில் படைத்தலைவரனைவரும் தங்கள் படையோடு மாண்டதைத் தூதர்களாலறிந்து கிலேசிக்கும் இராவணனை வேண்டி மகரக்கண்ணனென்பவன் ஸ்ரீராமராற் றன் தந்தையாகிய கரன்மாய்ந்தானென்னும் வஞ்சினங்கொண்டு படையெடுத்துவர, ஸ்ரீராம ரவனுடைய வலியை விபீஷணராலறிந்து அவன்செய்த மாயைகளேயும் அவனுயிரையும் ஒருமிக்கமாய்த்ததும், அதுகண்டுவெந் தெதிர்த்த அம்மகரக்கண்ணனுக்குச் சக்கரரக்ஷகராயிருந்த குருதிக்கண்ணனையும் சங்கனையும் வானரத்தச்சனாகிய நளனும் பனசனும் நாசமாக்கியதும் சொல்லப்படுகின்றது.

இராவண னேவலால் மகரக்கண்ணன் கரனென்னுந் தன்தந்தையை மாய்த்த ஸ்ரீராமர்மேல் வஞ்சினங்கொண்டு படையெடுத்துவரல்.

கவி.

சொன்னாவரிசொற் செவிபாற்றொடர்வோன்
இன்னாதமனத்த னிலங்கையர்கோன்
வெந்நாகவுயிர்ப்பினன் விம்மினனால்
அன்னானிலைகண் டயனின்றறைவான்.

இப்படிப்போன தூதுவர் இராவணனை வணங்கி, நம்முடைய சேனையெல்லா முடிந்துபோய் விட்டதென்று சொன்னார்கள். அப்படிச்சொன்ன சொல்லானது செவியில் நுழையும்போதெல்லா மிலங்காதிபதியான ராவணன் மனவெறுப்புடன் கொடியநாகத்தைப்போலச் சீறிக்கொண்டு துக்கிக்கின்றான். அச்சமயத்தில் கரனுடைய புத்திரனான மகரக்கண்ணன் இராவணனுடைய நிலைமையைக்கண்டு, ஐயா இராவணேஸ்வரா! முன்னம் என்னுடைய தகப்பனான கரனை நெருங்கின யுத்தத்திற் கொன்றுவிட்ட அந்த ராமனைவெல்லும்படி யென்னை யனுப்பாமலும், வேறெது நினையாமலு நீரிப்படி வியசனப்படலாமா? நான்போவேனேயானால், அந்த ஸ்ரீராமனென்னெதிரேவந்தாற் கெடுதியுண்டாமென்று பயந்து ஓடிப்போய் விடுவான். ஐயா திரிபுவனேஸ்வரா! ஆகாசத்திலுள்ளவர்களாவது, பூமியிலுள்ளவர்களாவது, என்னை ஜெயிக்கும்படியான கொள்கையை யுடையவர்களோ? அஃதுமக்குத் தெரியாதோ? மேலும், என்றாயார் துக்கசாகரத்தில் மூழ்கினவளாகி எப்போதுங் கண்ணுங்கண்ணீருமாய் அழுதுகொண்டு, தன்மாங்கலியம்வாங்கச் சகிக்கமாட்டாமல் தன் கணவனைக்கொன்றவனுடைய தலைமண்டையில் தன்கடனைக் கழிக்கவேண்டுமென்கிறாள். ஆகையால் நீரெனக்குத் தயைசெய்து உத்தரவு கொடுக்க வேண்டுமென்று கேட்டான்.

கவி.

அவ்வுரைமகரக்கண்ண னறைதலுமரக்கனைய
செவ்விதுசேறிசென்றுன் பழம்பகைதீர்த்தியென்றான்
வெவ்வழியவனும்பெற்ற விடையினன்றேர்மேற்கொண்டான்
வவ்வியவில்லான்போரென் வரம்பெற்றுவளர்ந்ததோளான்.

அந்தவார்த்தையை இராவணன்கேட்டு, அப்பா மகரக்கண்ணா! நல்ல காரியஞ் சொன்னாய். அப்படியே போய் உன்பழைய பகையைத் தீர்த்துக் கொள்ளக்கடவாயென்று உத்தரவு கொடுத்தான். அந்தத் துராத்துமாவான மகரக்கண்ணனு மிராவணனிடத்தில் உத்தரவுபெற்றுக்கொண்டுதேரேறி, வரப்பெற்றுவளர்ந்த தோள்களில் வில்லைத் தாங்கினவனாகி, தன்சொந்தமான ஐந்துகோடி சைநியங்கள் தன்னைச்சூழ்ந்துவரவும், இராவணனாற் கொடுக்கப்பட்ட ஐந்துவெள்ளஞ் சேனைகளும் தனக்குப் பின்னாக மேகத்தைப்போல ஆர்ப்பரித்துவரவும், பேரிகையானது கடலைப்போலச் சப்திக்கவும், சேனா

தூளியால் மேருமலையினுடைய சிகரமுமறைபடும்படிப் புறப்பட்டான். அவனோடுகூட இரத்தக்கண்ணனென்பவனையும் சிங்கனையும் இராவணன் பார்த்து, நீங்களிம் மகரக்கண்ணனுடைய குதிரைபூட்டிய தேர்ச்சக்கரத்தைக் காத்துக்கொண்டு போகக்கடவீர்களென்று நியமித்தனன். நல்லதப்படியே யாகட்டுமென்று இருவரும் ரதாரூடராகச்சென்று அவன்றேரைக்குறுகினார்கள். இப்பால் பதாதிமுதலிய சேனைகளுடனே அனைவருந் தொடர்ந்துவர, நக்ஷத்திரங்களை நட்புடன் தழுவின சந்திரனைப்போல மகரக்கண்ணன் போயினான்.

அப்போது ஆகாசத்திலிட்ட பந்தலைப்போன்ற கொடிகள் சூரியகிரணக் கற்றைகள் முழுவதையு மறைத்து லோகத்துக்கு நிழலிடவும், கொலைத்தக்க கோபத்தை யுடையவைகளாகிய யானைகள் தங்கள் துதிக்கையாற் சமுத்திர நீரையெல்லாம் வாரித்தூவவும், இதைப்பார்த்துச் செயசாலிகளான வானரவீரர்கள் தங்கள் யுத்தமுயற்சியைவிட்டுப் பிரமித்து நின்றார்கள். யானைகள் முழங்கின. குதிரைகள் கனைத்தன. பேரிகைக்கூட்டங்கள் சப்தித்தன. வீரர்கள் கர்ச்சித்தார்கள். இவைகளெல்லாம் அடங்கும்படியாகச் சிறுமொத்தை யோசையானது அண்டப்பித்திகை வரையிற்போய் முட்டியது. காற்று நுழைகிறதற்குச் சந்தில்லாமையால் எல்லா ஜீவன்களும் வெந்து புழுங்கின. மகரக்கண்ணனோடு வேகமாய்வந்த சேனைகள்முந்தி போர் செய்தன. அக்கால் வானரத்தலைவர்களும், இராக்ஷசத்தலைவர்களும், அடுத்துக்கர்வித்து நெருங்கி, ஒருவரோடொருவர் கைகலந்து மலையும் வில்லும் கொண்டு யுத்தம்பண்ணினார்கள்.

இப்படியுத்த நடக்கிறபோது வண்டுகள் மொய்த்திருக்கின்ற மாலையை யணிந்த மார்பையுடையவனான மகரக்கண்ணனென்னும் பெயருடைய இடியைப்போன்றபலமுள்ள இராக்ஷசனானவன், பெரியசக்கரங்கள் பூட்டியதேரை, சோலைகளும், கஞ்சாஜலம் பெருக்கெடுக்கின்ற வயல்களும் சூழ்ந்த அயோத்தியா நாட்டை யாளும்படியான மேகம்போன்ற ஸ்ரீராமருக்கெதிராகக் குரங்குச்சேனைகளெல்லா மஞ்சும்படி செலுத்திக்கொண்டு வந்தான். அதைக்கண்டு வானரப்படையெல்லாம் இவனிந்திரஜித்துதானோ வென்கின்ற சந்தேகமும் பயமுங்கொண்டு சிந்திச் சிதறிப்போக, வானரத் தலைவர்களெல்லா மயங்கிச் சூத்திரப்பிரதிமைபோல அம்புகள்பட்டு மூர்ச்சையடைவதானார்கள்.

மகரக்கண்ணன் தன்மனதிற்கொண்ட குறைகளைச் சொல்லி ஸ்ரீராமரோடு போர்புரிதல்.

கவி.

என்னுடைத்தாதைதன்னை யின்னுயிருண்டாயென்று
முன்னுடைத்தாயதீமை முழுப்பகை முடிக்கின்றி
பின்னுடைத்தாயதன்றே யின்றுநின்னுயிரென்றான்
பொன்னுடைத்தாலைகண்டு குடைத்தன்னுயிர்ப்பொருளான்.

இப்படியாக வந்துநின்ற ஸ்வர்ணமயமான மகரந்தங்களை வண்டுகளுடைத் துன்னுகின்ற பொன்னரிமாலையணிந்த மகரக்கண்ணன் சுந்தரபாதுகையுடையவரான ஸ்ரீராமரைப்பார்த்து, நீ என்னுடைய தகப்பனுகிய கரனுடைய உயிரைப் போக்கினுயென்கின்ற பழைய பெரும்பகையானது உன்தம்பிமார் மூன்றுபேரிடத்திலும் சேராமல், உன்னொருவனிடத்தில் மாத்திரமிருக்கின்றது. அதையின்றைக்குத் தீர்த்துவிடுகிறேனென்று சொன்னான்.

அப்படி மகரக்கண்ணனுகிய துஷ்டன் சொன்ன வார்த்தையை கீர்த்திக்கு வாசஸ்தானமான திருத்தோளையுடைய ஆண்பிள்ளைச் சிங்கமாகிய ஸ்ரீ ராமபிரான் கன்றும் உத்துக்கேட்டு, அப்பா நீ தானு கரனுடையபிள்ளை? உன் பிதாவைக்கொன்ற பழையபழியை நீக்குதற்காகவா வந்தாய்? ஆண்பிள்ளையாகப்பிறந்த உனக்கு அதுதகுந்ததுதான். இது வீரர்களுக்குத்தகுந்த வார்த்தையே என்றுசொன்னார். அப்படிச்சொல்லியே மகரக்கண்ணன் இடியிடித்ததுபோல வில்நாணைத்தெறித்துச் சப்தமுண்டாக்கி, உன்னோடு என்தந்தை செய்யவேண்டிய சண்டையைச்செய்து முடித்து என்கோபத்தை ஆற்றிக் கொள்ளுகிறேனென்று சொல்லி, குமுறுகின்ற மேகமானது சண்டமாருதத்தால் தூண்டப்பட்டு யுகாந்தகாலத்தில் மேருமலையின்மீது வருஷதாரைகளைப் பெய்வதுபோல் அஸ்திரவருஷங்களைப் பொழிந்தான். எப்படியெனில் தாமரைக்கண்ணனுகிய இரகுகுலோத்தமனது திருக்கழுத்திற்குச் சரியாய் ஆயிரம்பாணங்களைப் பிரயோகித்து, இளையபெருமாளினுடைய கவசத்தின்மீது இரண்டாயிரம் பாணங்களைத் தொடுத்து, கோபமும் பகைமையுங் கொண்டிருக்கின்ற அருக்கனையர்மீது கோடிபாணங்களை வருஷங்களைப்போல் பொழிந்து, இன்னவிடத்தி லிருக்கிறதென்று தெரியாமற்படிக்குத் தேவலோகத்தையும் பாணங்களைப் பிரயோகித்து மூடிவிட்டான். அவனெய்த பாணங்களையெல்லாம் ஸ்வாமியானவர் சில அக்கினிமுகாஸ்திரங்களை யேவித் துண்டுதுண்டாய் அறுத்துத்தள்ளி, அந்த ஆண்மைக்குண வீரனுடைய மாலையணிந்தமார்பில் ஒரு அக்கினிபாணத்தைப் பிரயோகித்தார். அந்தக்கோபத் துடனே புருவத்தை நெரித்துக்கொண்டிருக்கின்ற அந்த ராக்ஷசவீரனுடைய மார்பிற்போய்ப் பாய்ந்து நின்றது.

அப்படி அக்கினிமயமான பாணம்பாய்ந்தும் நடுங்காமற் செவந்த சூரிய காந்திப் பூவைப்போன்ற கண்களையுடையவனுன மகரக்கண்ணன் வாயிற் புகையைக்கக்கிக்கொண்டு, தேவகீர்த்தியையுடைய ஸ்ரீராமருடைய கவசத்தில் ஆயிரம் வச்சிரபாணங்களைப்பிரயோகித்துக் கர்ச்சித்தான். அதைப்பார்த்துத் தேவர்களெல்லாம் ஆச்சரியப்பட்டார்கள். அப்போது சமுத்திரஞ்சூழ்ந்த பூமண்டலாதிபதியான ஸ்ரீராமமூர்த்தியானவர் நகைத்து கூர்மையான ஆறு பாணங்களைப் பிரயோகித்து, மகரக்கண்ணனுடைய பொன்மயமான பெரியதேரிற் கட்டியிருந்த குதிரையின் கால்களைத் துணித்து, அவன்கையிற்பற்றியிருந்த வில்லை இரண்டுதுண்டாக்கி, பாகன் தலையையு நிலத்தில்விழத் தள்ளினர். உடனே

மகரக்கண்ணன் தைத்தபாண மார்பில்தீக்கவும், வாயில்ரத்தம் வடியவும், தான்வரமாகப்பெற்ற மந்திரத்தினுலே ஒருக்ஷணத்திற் குள்ளாக ஆகாசத்தில்மறைந்து; இடிகளையும், காற்றையும், அக்கினியையும், மேகமானது ஊழிக்காலத்தில் உலோகமெல்லா மழியும்போது சொரிகிறதுபோல வருஷித்தான். அப்போது அங்கிருந்து இடிகள் விழுந்தன. ஊழிக்காலத்தைக்காட்டிலு மிரண்டுபங்காய்ச் சண்டமாருதம் சீறிக்கொண்டு புறப்பட்டது. எங்கேபார்த்தாலும் உகாந்தமேகங்கள் அக்கினிமயமான கல்மழை பெய்தன. வானரங்களெல்லாம் அதைச் சகிக்கமாட்டாமல் தாம்செய்கின்ற யுத்தத்தைவிட்டு நாலாபக்கங்களிலும் ஓட்டம்பிடித்தன.

இப்படி அஷ்டதிக்குகளிலும் புகைமண்டி நெருப்பைக் கக்கிக்கொண்டு சிலாவருஷம்பொழிவதினுல் ஆயிரங்கோடி வானரங்கள் மாண்டுபோனர்கள். அதைக்கண்ட ஸ்ரீராமமூர்த்தியானவர் பிரமித்து, இதென்ன மாயமோ மகரக்கண்ணன்பெற்ற வரத்தின்பலமா? என்று விபீஷணுழ்வாரைக் கேட்டார். அதற்கவர், ஸ்வாமி! இந்தமகரக்கண்ணன் செய்த தபோவல்லமைக்குமெச்சி, வாயுதேவனும், வருணதேவனும், அவன்கேட்டதைத் தடுக்காமல் அவனிஷ்டப்படி கொடுத்த தெய்வாஸ்திரத்தினு லிப்படி நேரிட்டதென்று சொன்னுர். அதுகேட்ட ஸ்ரீராமர் அப்படியா? இதோ ஒருநொடியில் இவைகளையெல்லா மாற்றிவிடுகிறேன். என்றுசொல்லி வாயுவாஸ்திரத்தையும், வருணஸ்திரத்தையும், இயமஸ்வரூபமான கோதண்டத்திற் பூட்டி இராமபாணத்தோடு சேர்த்துப் பிரயோகித்தார். அம்மாத்திரத்தில் மகரக்கண்ணனுலே யேவப்பட்ட சிலாவருஷமும், காற்றும், ஆகாசத்திலின்றும் வெந்து பெரியகடலில் விழுந்து மாண்டுபோய்விட்டன. அத்தன்மையை அந்த மகரக்கண்ணன்பார்த்து, ஆகாசமுழுவதுந் தனதுருவம்போன்ற உருவத்தையுடையவனுகித் தான்மாத்திரமறைந்து, கோடிகோடியாகச் சூலங்களை வரிசை வரிசையாக வெங்கும் பரப்பிவிட்டான்.

அதை ஸ்ரீராமர்பார்த்து, இஃதந்த மகரக்கண்ணனுடைய மாயைக்குமென்று விபீஷணுழ்வாரை நோக்கிக்கூறி, இப்படியாகத்தன்னுடைய மாயத்தாற்செய்தவன் எங்கேபார்த்தாலும் அளவிட்டறியக்கூடாத உருவத்தையுடையவனு யிருக்கின்றான். இதிலெந்தத்தேகம் அந்தமகரக்கண்ணனுடைய யதார்த்தமானதேகமோ தெரியவில்லை. இந்தத்துஷ்டன் விஷயத்தில் என்ன செய்யலாம்? என்று தமக்குத்தாமே மனம்வருந்தினர்.

ஸ்ரீராமர் மகரக்கண்ணன்செய்த மாயைகளைத்தெரிந்து அவன்சிரத்தைத் தமதுபாணத்தால் அறுத்து வீழ்த்தல்.

கவி.

அம்பின்வாயாறுகோடி யரக்கன்றனுருவியாக்கை
உம்பரிற்பரப்பித்தாங்கே யொளித்தனனென்னவோர்வான்

செம்புனற்சுவடுநோக்கி யீதுநெறியென்றுதேவர்
நம்பிரான்பகழிதுண்டத் தலையற்றுத் தலத்தனுற்றான்.

அம்புபட்டவழியே இரத்தவாறு ஒழுகும்படி நின்ற அந்த மகரக்கண்ணன் தன்னைப்போல அளவில்லாத உருவங்களை மாயையால், ஆகாசமெல்லா நிறைத்துவிட்டுத் தான்மாத்திரம் எங்கேயோ ஒளித்துக்கொண்டிருக்கின்றுனென் றுணர்ந்த தேவ தேவராகிய ஸ்ரீராமமூர்த்தியானவர் அவ்விரத்த பொழுகிவருகின்ற அடையாளத்தைக் கண்டு, இதற்குநேராகத்தான் அந்த மகரக்கண்ணன் ஒளித்து நிற்கிறுனென்று அந்தவழியாகவே இராமபாணத்தைப் பிரயோகித்தார். அப்போது அந்த மகரக்கண்ணன் தலையறுந்து பூமியில்வந்து விழுந்தான். அப்படி இடியைப்போற்போன கூரிய பாணத்துடன் அந்தராக்ஷசனுடைய தேகமானது மேகத்தைப்போல இரத்தவெள்ளத்தைப் பொழிந்துகொண்டு பூமியில்விழுந்தமாத்திரத்தில், அவனாற் செய்யப்பட்ட மாயையானது சூரியனுதயமாயிருளையெல்லா நீக்கின காலத்தில் நித்திரைகெட்டு அதனுடனே கனவு நீங்கினதுபோல மாய்ந்துவிட்டது.

மகரக்கண்ணனுக்குச் சக்கரரட்சகர்களாகிய குருதிக்கண்ணனையுஞ் சிங்கனையு, நளனும் பனசனுமெதிர்த்து மாய்த்தல்.

கவி.

குருதியின்கண்ணனவ்வண்ணக் கொடிநெடுந்தேர்க்கொடைப்
பரிதியினைவெட்டோன்றும் பகருசுடர்மேகப்பண்பன்
எரிகணைமிக்கத்திக்கால் னெய்திருன் றன்னேடேற்றுன்
விரிகடற்றப் [illegible] னெருகினர்தச்சன்வெய்யோன்.

இப்படி மகரக்கண்ணன் மாண்ட [illegible] பின்னை குருதிக்கண்ணன் என்பவன் அழகிய கொடிகள்கட்டிய தேருடனே கோடைகாலத்துச் சூரியனுக்குநிகரே தோற்றுகின்ற மேகத்திற்கொப்பான தேககாந்தியை யுடையவனுகி, அக்கினிமுகாஸ்திரங்களைப் பொழிந்துகொண்டு சண்டமாருதக் காற்றைப்போல இரணகளத்தில்வந் தெதிர்த்தான். அவனுடனே விரிந்த சமுத்திரத்தை மலையால் அணையிட்டுத் தடுத்தவனும் நளனென்கிற வானரத்தச்சன்வந் தெதிர்த்தான். அப்படி இருவருமெதிர்த்து நிற்கும்போது அந்தக்குருதிக் கண்ணன் வில்லைவளைத்துக் குணத்தொனிசெய்து அநேக பாணங்களை மழைத்தாரைக்கொப்பாக நளன்மீது பிரயோகித்தான். அப்போது சிற்பத்துக்கொப்பாக இரணரங்கத்தில் நின்றிருந்த அந்நளன் ஒருநீண்ட மாமரத்தைப் பிடுங்கி, அவன்விட்ட பாணங்களையெல்லாம் பொடிப்பொடியாக்கினுன்.

மறுபடியு மந்தக் குருதிக்கண்ணன் நளன்கையிலிருந்த மராமரத்தைத் துண்டுதுண்டாகப் பாணங்களினுல் தழித்துவிட்டான். அப்படித் தழித்துவிழுந்தின அந்தக் கொடியவனைப்பார்த்து நளனென்கிற வானரவீரன் தன் மார்பைவளைத்துக் குறுகினவனைப்போலக் காணப்பட்டு, அந்தக் குருதிக்கண்ணனுடைய சிரசின்மேற் பாய்ந்துகுதித்தான். அதைக்கண்டு தேவர்களெல்லாம்

திக்குகளுஞ் செவிடுபடும்படி பார்த்தார்கள். எரிகின்ற அக்கினிமலையின் மேல் இந்திரதனுசை நாட்டினதுபோல மிகவும் பெரிய தேகத்தையுடைய குருதிக்கண்ணன் சிரமீதுநின்ற அழகுள்ள நளனானவன் அவன்தேகமுழுவதும் இரத்தம்ஒழுகவும், அவன் வலியகண்களிலும், மூக்கிலும், செவியிலும், மூளைவடியவும், அவன்தலை சுக்கலாய்நெரியவும், கால்களால் உதைத்துப் பூமியிலுருட்டிக் கொன்றுன்.

கவி.

அங்கவனுலத்தலோடு மழந்தோமுந்தொழுகுகண்ணுன்
சிங்கன்வெங்கணையன்வில்லன் ஞாணிதேரின்மேலான்
எங்கடாபோதியென்று வெய்தினனெதிரிலாத
பங்கயின்மேருவாற்றற் பனசன்வந்திடையிற்பாய்ந்தான்.

அவனிறந்த மாத்திரமே அக்கினிக்கொழுந் தொழுகும்படியான கண்களையுடையவனுன சிங்கனென்னும் ராக்ஷசவீரன் கையில் வில்லும் அம்பும் பிடித்துக்கொண்டு, வெற்றிமாலைபூண்ட தேருடனேவந்து, அடா வானரமே! எங்கே தப்பிப்போகின்று யென்று கூறி எதிர்த்தான். அப்போது மேருபருவதத்துக்குச் சமமான வல்லமையுள்ள பனசனென்னும் வானரவீரன் அந்தச் சிங்கனுக்கெதிரிற் பாய்ந்தான். அப்படிப்பாய்ந்த மாத்திரத்தில் அந்தச் சிங்கனானவன் அதிதீக்ஷணமான பாணங்களைப்பொறுக்கி யெடுத்து, பனசனுடைய தோளிலும், மார்பிலும், இடிக்கொப்பாகப் பத்தம்புகளைப் பதியும்படி அழுத்தினுன். அப்படியழுத்தின மாத்திரத்திற் பனசனானவன் அக்கினியில் நெய்சொரிந்ததுபோலக் கோபங்கொண்டு, ஒருக்ஷணத்துக்குள்ளாக அந்தச் சிங்கனென்பவனைத் தேரோடு தூக்கினுன்.

அப்படி தூக்கினவுடனே அந்தச்சிங்கன் தேரைவிட்டுக் கீழேகுதித்தான். அப்படிகுதித்த அவனுடைய மேருமலைக்கொப்பான தோற்றத்தையுடைய சிரசின்மீது பனசனானவன் அந்தத்தேரைக்கொண்டு மோதினுன். அது பட்டுக் கீழேவிழுந்த அந்தச்சிங்கன் ஆகாசத்திற்பாய யத்தனித்தான். அப்போது வயிரத்தோளையுடைய பனசன் அந்தச்சிங்கனுடைய ரத்தத்துடனே உயிருஞ் சோரும்படித் தள்ளிக் காலால் துவைத்துக்கொன்றுன். இப்படி பூலோக சக்கரவர்த்தியாகிய தசரதமகாராஜன் புத்திரரான ஸ்ரீராமலக்ஷ்மணர்களுடைய பாணங்களினுலும், வானரச்சேனைகள் பிரயோகித்த மாமரம் - மலைகள் -- இவைகளினுலும், இராவணனுல் ஏவப்பட்ட பத்துவெள்ளஞ் சேனையு மாண்டுபோயின. அவர்களோடுகூட மாளாதவர்களான இராவண தூதர்கள் நிராயுதர்களாய் இந்தச் செய்தியைச் சொல்ல அவனிடத்திற்கு ஓடினுர்கள்.

மகரக்கண்ணன் வதைப் படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

இருபத்தோராவது,

பிரமாஸ்திரப் படலம்.

இப்படலத்தில் மகரக்கண்ணன் மாண்டதைச் சாரணராலறிந்து இராவணனழைப்பிக்கவந்த இந்திரஜித்து மீட்டும் படையெடுத்துவரக்கண்ட வானரசேனைகளோட்டம்பிடிக்க, ஸ்ரீராமலக்ஷ்மணருள் இந்திரஜித்தோடுவந்த அறுபதுவெள்ளஞ் சேனைகளையு மவன்கண்டு பிரமிக்கும்படி அதமாக்க, இலக்ஷ்மணர் தனியே இந்திரஜித்துவைச் சூழ்ந்துநின்ற ஆயிரங்கோடி தேர்வீரர்களையு மதஞ்செய்து அவனைத்தனியனாக்க, உடனே இந்திரஜித்துவும் இலக்ஷ்மணரும் ஒருவரோடொருவர் சபதஞ்செய்துகொண்டு போர்விளைக்க, சூரியனஸ்தமிக்கும்வேளையில் இந்திரஜித்து பிரமாஸ்திரம் பிரயோகஞ்செய்ய வெண்ணி மறைந்துபோய் இலங்கையி லிராவணனோடு டாலோசித்திருந்தனனாக: இப்பால் ஸ்ரீராமர் வானரசேனைகட்கு ஆகாரஞ்சேகரித்து வரும்படி விபீஷணரை யேவ, அக்காலிராவணன் அறுபதுவெள்ளஞ்சேனைகளோடு மகோதரனை யனுப்ப, ஆஞ்சனேயர் அச்சேனைகளையு மவற்றின்தலைவர்களை யனைவரையு நாசமாக்கி இலக்ஷ்மணரைத் தேடிச்சென்று கண்டு இருட்டடைக்கும்படிவேண்ட, அவர்பாசுபதாஸ்திரத்தாற் பலகோடி ராக்ஷசர்களையு மிருளையும் பாறச்செய்ய, அதுகண்டமகோதரன் மாயச்செய்கைவிட்டு ஆகாயத்தில் மறைய, அக்கால் முன்னையிலங்கைக்குச்சென்ற இந்திரஜித்து அத்திரயாகவிதிகளை முடித்து மேகஜாலத்தினுள் மறைந்துதிரிய, அதுகண்ட மகோதரன் இந்திரனுருக்கொண்டு தெய்வாட்சசேனைகளைத் தே[illegible]னைகளாக்கிக்கொண்டுபோய் இலக்ஷ்மணரையெதிர்க்க, அச்சமயத்தில[illegible]ன் பிரமாஸ்திரப் பிரயோகஞ்செய்ய, அதனால் இலக்ஷ்மணர்-சுக்கிரீவமகாராஜன்-அங்கதன்-அனுமான்-இவர்கள்முதலாயினோர் தங்கள் சைனியங்களோடு மூர்ச்சித்துமடிய, அதைக்கண்ட இந்திரஜித்து மகோதரனோடு இலங்கைக்குப்போய் இராவணனுக் கறிவித்திருந்தனனாக: அப்பால் ஸ்ரீராமர் இந்திரஜித்துவின் பிரமாஸ்திரத்தால் மாண்டுகிடக்கிற சுக்கிரீவனுதியனைவரும் இளையபெருமாளையுங்கண்டு பிரலாபித்து மூர்ச்சையடைந்ததும், அதுகண்ட தேவர்களவரைத்துதிசெய்ததும், இதைச் சிலசாரணரோடி இராவணனுக்கறிவித்ததுஞ் சொல்லப்படுகின்றது.

மகரக்கண்ணன் முதலியோர் இறந்தமையைச் சாரணர்களாலறிந்த இராவணன் இந்திரசித்தை வரவழைத்தல்.

கவி.

கரன்மகன்பட்ட வாறுங் குருதியின்கண்ணன் காவற்
றிறனெரிந்தாக்கவாறுஞ் சிங்கனிற்சிறுஞ்சேனைப்
பரவினியுலகுக்காகா தென்பதும் பகரக்கேட்டான்
வரன்முறைதவிர்த்தான் வல்லைத் தருதியென் மகனை யென்றான்.



இப்படியோடிய அந்தத்தூதுவர்களாற் கரன்மகனான மகரக்கண்ணன் இராமபத்திரரால் மடிந்ததையும், குருதிக்கண்ணன் நளனால் தலைநெரிந்திறந்ததையும், சிங்கனென்பவன் பனசனால் மாண்டதையும், மற்றப் பத்துவெள்ளச்சேனையும் பூமிக்குப்பாரமாக நில்லாமல் மாண்டுபோனதையும் சொல்லக்கேட்ட சாஸ்திரநெறி தவறினவனான இராவணன் சீக்கிரமாக எழுந்து, நீங்களென் குமாரனான இந்திரஜித்துவை விரைவிலழைத்துக்கொண்டு வாருங்களென்று அனுப்பினான். அவர்கள்போய் உம்முடைய தகப்பன் அழைக்கின்றானென்றதைக்கேட்ட இராவணகுமாரன் அவர்களைப் பார்த்து, ஓதூதர்களே! திரண்ட தோள்களையுடைய ராக்ஷசவீரர்களிற் போனவர்களெல்லா மீண்டு போனார்களோ வென்றான். அதற்கவர்களவனைப் பணிந்து, ஐயா! உம்மையல்லாமல் அனுப்பினபின் திரும்பிவரத்தக்கவர்கள் யாரிருக்கின்றார்கள்? ஐயோ! அவர்களெல்லா மாண்டுபோய் விட்டார்களென்றுசொன்னார்கள்?

இந்திரசித்து இராவணனிடத்தில்வந்து சிலவார்த்தைகூறி யுத்தகளத்திற்குச் சேல்லல்.

கவி.

வணங்கிலையயில் காய்தின் மாண்டனர்மக்களென்ன
உணங்கலையின்றுகாண்டி யுலப்புறுஞரங்கைநீக்கிப்
பிணங்களின்குப்பைமற்றை யாருயிர்பிரிந்தயாக்கை
கணங்குழைச்சீதைதானு மமருக்காண்பனென்றான்.

அதைக் கேட்டமாத்திரத்தில் இந்திரஜித்தானவன் அதிவேகமாகத் தன் பிதாவினிடத்திற்கு வந்து வணங்கி, ஐயா! பிரதாபலங்கேஸ்வரா! உமது பிள்ளைகளிவ்வளவு சிறுவயதில் மாண்டுபோனார்களேயென்று உமக்குக் கொஞ்சமாவது மனவருத்தமுண்டாக வில்லை. ஐயோ! குரங்குகள்தவிர இராக்ஷசர்கள் மாண்டுகிடக்கிறதை நீர்போய் இன்றுவது ரணக்களத்திற்பாரும். இனிக் கனத்தகுண்டலங்களையணிந்த சீதையும் தேவர்களும் காணப்போகின்றார்கள். என்றுசொல்லி வலஞ்சுற்றிவந்து வணங்கி, ஆயிரஞ்சிங்கங்கள் பூண்டு ஆகாசத்தையளாவிய பொன்மயமான கொடித்தேரிலேறி, போர்ப்பறைமுழங்க ரணக்களத்தை நோக்கிப் புறப்பட்டான். அவனுக்குதவியாக அறுபதுவெள்ள ராக்ஷசப்படைகளும், யானைக்கூட்டங்களும், தேர்களும், குதிரைகளும், பெருங்கூட்டமாகக் கூடின.

அப்போது கும்பிகை - பம்பைமேளம் - மணி-பலகை - பம்பை - தாளம் - தாரை - டக்கை - உடுக்கை - புள்ளாங்குழல் - யானைமணி - ஊமைச்சகடை-இவைமுதலிய வாத்தியங்களோடு, பெரும்பேரிகை ஜெயபேரிகை முதலியவும் ஒலித்தன. யானைமேற்பறையும், பக்கமணிகளும், சமுத்திரம்போலக் கோஷித்தன. குதிரைக்கிண்கிணி மாலையும் - தேர் மணிகளும் - விருதுக்கொடிக் கெச்சையும் - சேனைகளுடைய வீரகண்டைகளும்-வெற்றிமாலைகளும் - ஆயுதவிசைகளின் முழக்கத்தோடு, கேடகங்கள் ஒன்றுடனொன்று

படு மோசையும் ஆகாசத்தை யெல்லாம் கடல்வளைந்து இரைத்தாற்போல மூடிக்கொண்டன. சங்கோசையும், குழலொலியும், எக்காளத்தொனியும், சிறுசின்னநாதமும், ஊதுகுழலின் ஆரவாரமும், சிம்ஹங்களின் கர்ச்சனையும், குதிரைகளின் அநுமானிப்பும், தேர்களின் அதிர்ச்சியும், யானைகளின் இரைச்சலும், மேகமுழக்கத்தோடு மாறுபட்டிருந்தன.

அல்லாமலும், இராக்ஷச வீரர்களுடைய வில்லினுண்டாகும் குணடங்கார ஒலியும், அவர்கள் சப்தித்தழைக்கும் வீரவோசையும், அவர்களதட்டும் ஆரவாரிப்பும், அவர்கள்பேசும் வார்த்தையி னதிர்ச்சியும், அவர்கள் சுவாசம்விடும்போது பேசும் சத்தமும், அவர்கள் திரண்ட தோள்களைக் கொட்டுகின்ற பேரோசையும், அவர்கள் காலாற் பூமியைத்தட்டுகின்ற அரவமும், சமுத்திரவிரைச்சலையு மறைத்துவிட்டன. நான்குபக்கங்களிலுமுள்ள பெரிய சமுத்திரத்துக்கொப்பான இராக்ஷசசேனைகள் நடப்பதினாற் பூமியிலிருந்து பேயெழுந்த தூளியானது ஆகாசத்தின்மேற் பறந்தபடியால், அதைப் பார்த்துப் போகானந்தக்கடலின் மூழ்கிக் களித்திருக்கின்ற தேவஸ்திரீகளுடைய பாற்கடலுக்கொப்பாகிய கண்களிற்பட அக்கண்களில்நீரானது பெருக்கெடுத்தது. ஆயிரங்கோடிவீரர்களது தேர்கள் கிரகமண்டலங்களுக் கொப்பாகச் சுற்றிவரத் தேவர்களை நடுங்கச்செய்த இந்திரசித்து ஒரு பொன்மயமாகிய தேரின்மே லேறிக்கொண்டு, எல்லாக்கிரஹங்களும் சுற்றிநிற்க நடுவே பிரகாசிக்கின்ற நாயகச்சூரியனைப் போலக் காணப்பட்டான்.

இப்படி காணப்பட்ட இந்திரஜித்தானவன் ரணக்களத்தில்வந்து சேர்ந்து, தன் சேனையை அன்றிற் பக்ஷியைப்போல் இரண்டிறகு ஸ்தானத்திலும், முகஸ்தானத்திலும், நேத்திரஸ்தானத்திலும், கண்டஸ்தானத்திலும், தேகஸ்தானத்திலும், பாதஸ்தானத்திலும், நகஸ்தானத்திலும், வால்ஸ்தானத்திலும், கிரமமாகநிறுத்தி யூகம் வகுத்து; தான்கருப்பஸ்தானத்தில் நின்று, முன்தேவேந்திரன் தோற்றுக் காணிக்கையாகக்கொடுத்து விட்டுப்போனதும், சப்த சமுத்திரங்களினுடைய பலத்தையொடுக்கி உகாந்தகாலத்திற் சப்திக்கின்ற பெருங்கோஷ்டத்தைத் தன்வயிற்றிலடக்கிக் கொண்டிருக்கின்றதுமான வலம்புரிச்சங்கைக் கையிலெடுத்து, தேவர்களெல்லாந் தலைவெடித்துப் பயங்கொள்ளும்படியாகவும், அஷ்டதிக்குஞ் செவிடுபடும்படியாகவுமூதினான். அந்தச்சங்கத்தொனியைக்கேட்டு வானரக் கூட்டமெல்லாம் பின்னிடைந்து, சிம்ஹநாதங்கேட்ட மிருகங்களெல்லாம் இருந்தவிடந்தெரியாம லோடிப்போய் விடுவதுபோல ஓடி விட்டன.

அத்தருணத்தில் இந்திரஜித்து பார்வதியை அர்த்தபாகத்தில் வைத்திருக்கின்ற உருத்திரமூர்த்தியினது மேருவில்லுக்குச் சமமான தன் வில்லைவளைத்துக் குணடங்காரம் பண்ணினான். அந்த முழக்கத்தைக்கேட்ட வானரங்களுடைய செவிகள் கிழிந்தன. நெஞ்சம்பிளந்தன. ஓடிவிடும்படியாகக் கால்கள் தத்தளித்தன. கையிற்பற்றியிருந்த மரங்களும், மலைகளும், நழுவிவிழுந்தன.

சரீரமெல்லாநடுக்கமடைந்தன வாயெல்லா முலர்ந்துபோயின. தேகமெல்லாம வியர்க்குச் செறிந்தன. இவனேயெல்லவோ நாமன் திறந்து போனேனென்று சொல்லிவிட்டுச் சூரியபுத்திரனாகிய சுக்கிரீவமகாராஜனும், வாயுபுத்திரனாகிய ஆஞ்சநேயரும், அங்கதகுமாரனும், ஸ்ரீராமச்சந்திரரும், இளையபெருமாளும், சூரியசமானமாகிய திருவடிச்சுவடணிந்த கிரீடதாரியாகிய விபீஷணாழ்வானுமாகிய இவர்கள்முதலியவீரர் தவிர மற்றவானரங்களெல்லாம் ஓட்டம்பிடித்தார்கள். இப்படிவானரத்தலைவர் சிங்கலாகவானரசேனைசமுத்திரமானதுகரையுடைத்தோடும்வெள்ளம்போலோட்டமெடுக்க, ஊழிகாலசமுத்திர ஓசையைப் போல ராக்ஷசச் சேனைவீரர்கள் வீரகர்ச்சனைசெய்து நான்குதிசைகளையு மூடிக்கொண்டு இரணக்களத்தில்நின்றார்கள். அப்போது ஸ்ரீராமமூர்த்தியும், இலக்ஷுமணப்பெருமாளும், மேருபர்வதத்தைத்தோற்கடிக்கத்தக்கவராகவெற்றிமாலையைத்தரித்த ஆஞ்சநேயர் திருத்தோள்களின்மீதும், அங்கதகுமாரனுடைய புஜங்களின்மேலுமாக ஆரோஹணித்து, கருடவாஹனருடைய மகாவிஷ்ணுவும், விருஷபவாகனருடைய உருத்திரமூர்த்தியும், கையில்வில்லையுடையவர்களாய்ஊழிக்காலத்தில் நிற்கின்ற தோற்றத்தைப்போல அதி உக்கிர கோபதீபிதர்களாய் நின்றார்கள். நீலன்முதலான வானரப் பெருவீரர்கள் ராக்ஷசர்களை எதிர்த்து, விருக்ஷங்களையு மலைகளையுங் கையிற்கொண்டு போர்செய்யத்தவித்தார்கள்.

அப்போதிந்தப் பூலோகத்தையும் தேவலோகத்தையுங்காத்து ரக்ஷித்த தசரதமகாராஜ புத்திரரான ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியானவர் இனிமேல் நடக்கப்போகிற காரியங்களை யாலோசித்து அந்த வீரர்களைத் தடுத்து, உங்கள்மீது தேவதாஸ்திரங்களை அந்தத் துஷ்டன் பிரயோகிப்பானேயானால் நீங்கள் அவைகளைத்தடுக்க வல்லவர்களல்ல. அதைத்தடுக்கும் தொழிலை எங்களிடத்தில் விட்டுவிட்டு, நீங்கள் பின்னிற் பக்கேநின்று அந்தப்படைகளை நாங்கள் செய்கிற வில்வல்லமையைப் பார்த்துக்கொண்டிருங்களென்று நியமித்தார்.

ஸ்ரீராமலட்சுமணர்கள் இந்திரசித்துவினேடும் வந்த அம்புவெள்ளஞ் சேனைகளையுமதமாக்க, அதையவன்கண்டு பிரமித்தல்.

கவி,

அருண்முறையவருநின்ற ராண்டகைவீராழி
உருண்முறைத்தேரின்யாவி னுடையால்வரையினாழி
இருண்முறைநிருதர்தம்மே லேவினர்சைப்பிலோரும்
மருண்முறையெய்திற்றென்பர் சிலைவழுக்கசனியாரி.

அவர்களும் அவராருநப் பாட்டின்படி நின்றார்கள். பிறகு ஆண்தன்மையிற் சிறந்த ஸ்ரீராமலக்ஷுமணர்களிருவரும் இராக்ஷசர்களுடைய தேரின்மீதும், பலகதியினவாயிருந்திரைகளின்மீதும், முகபடாமணிந்தயானைகளின்மீதும், ஊழிகாலத்திற்றோன்றுமிருளையொத்த பதாதிகளின்மீதும், அநேகபாணங்க

ளைப்பிரயோகித்தார்கள். இவர்கள் வில்லிலிருந்து புறப்படுகின்ற இடிக்குச்சமமான பாணவருஷங்களைக் கண்டு தேவர்களும் திப்பிரமையடைந்துபோனார்கள். தமக்குமுன்பாக வந்த இராட்சசவெள்ளங்களை இமைகொட்டுவதற்கு முன்னர் ஸ்ரீராமலட்சுமணராகிய அந்தவீரர்கள் வில்லேவளைத்துயுத்தசாதுரியங்களைக்காட்டி இறக்கும்படியாகச்செய்தவைபவத்தைக்குறித்துநம்மால்சொல்வதற்கு அரிதரிது மிகவுமரிது. ஆயினும் அவ்விராட்சசவெள்ளங்கள் மாண்டதுதா னெப்படியிருந்ததெனில், உமாதேவியை யோர்பாகத்திருத்தியவராகிய மகா சங்காரக்கடவுளென்னும் பரசிவப்பிரபுவானவர் மகமேருகிரியை வில்லாகவளைத் தெய்தகாலத்து எவ்வண்ணம் திரிபுரமெரிந்ததோ அவ்வண்ணமாக வெரிந்துமாண்டன.

அப்போது வீரர்களுக்குள்சிறந்த வீரனை இந்திரஜித்து தேரின்மேல் வில்லைப்பிடித்தபடியே நின்று, சேனைகள் மடிந்துவிழுகிறதையும் அப்படி மடிந்துவிழுந்த பிணங்கள் மலைபோற்கிடக்கிற பூமியையும்பார்த்தான். மறுபடியும் அந்த ராமலட்சுமணர்களுடைய வில்வித்தையின் வல்லமையால் சேனைகள்மடிந்து மடிந்து விழுகின்றதென்னும் யுத்தலக்ஷணத்தையும் பார்த்தான். ஆ! ஆ! யானைகள் பட்டுப்போனவைகளோ வென்றான். இரதங்கள் முறிந்துபோனவைகளோ வென்றான். அணிவகுத்து அளவுசெய்து வந்த சேனைகளெல்லா மாண்டுபோனவைகளோ வென்றான். ஐயோ! இப்படி இறந்துபோனவர்களைத் தூக்கிக்கொண்டு போகிறதற்கும் இராக்ஷசர்கள் வேறேயில்லையோ வென்றான். இப்படி ஆகாசபரியந்தம் பிணமலைகள் குவிந்துபோனதைக் கண்டு மதிமயங்கி, இங்கே சண்டைசெய்கிறபோர்க ளிருவர்தானே: அழிந்திறந்துபோகின்ற சேனைகளைப் பார்க்கும்போது யதார்த்தமான நம்முடைய அறுபதுவெள்ளஞ் சேனையையும் சமித்துக் கொல்லுகின்றார்களோ? மற்றென்ன மோசமோ தெரியவில்லையே யென்றான்.

அல்லாவிட்டால் தங்கள் கோதண்டவில்வல்லமையால் மாளும்படி பெய்து கொல்லுகின்றார்களோ? எந்த விந்திரஜாலஞ் செய்கின்றார்களோ? என்று வாய்பிதற்றிக்கொண்டு பாணவருஷங்களைப் பார்ப்பான். அதனுலொழுகுகின்ற இரத்தவாறுகளைப் பார்ப்பான், ஆகாசத்தை முட்டிக்கிடக்கிற பிணமலைகளின் உயர்வைப்பார்ப்பான். யானைத்தந்தங்க ளறுபட்டு அவைகளினின்று முதிர்ந்த முத்துக்குவியல்களைப் பார்ப்பான். மாண்டுகிடக்கின்ற யானைக் கூட்டங்களைப் பார்ப்பான். அந்த ஸ்ரீராம லக்ஷ்மணர்களுடைய அழகிய திருத்தோள்களைப் பார்ப்பான். பக்கங்களிலிருக்கின்ற மலைகளைப் பார்ப்பான். அவைகளைப்போல ஆகாசவரையிலுங் குவிந்துகிடக்கின்ற இராக்ஷசர்களுடைய தலைகளைப்பார்ப்பான் அந்த இரண்டு வீரசிம்ஹங்களுடைய பாணவேகங்களைப் பார்ப்பான். அந்தப் பாணங்கள்பட்டு அக்கினிப்பொறிகளைச் சிந்தி முறிந்துகிடக்கின்ற இராக்ஷசர்களுடைய ஆயுதப்பறிகளைப்பார்ப்பான், அவர்

கள் வில்லுகளைப்பார்ப்பான். அந்தவிற்களின் நாணிலிருந்து புறப்படுகின்ற இடிபோன்றோசையைச் செவியினலே கேட்பான்.

ஆயிரந்தேர்களையும், போர்செய்கின்ற யானைக்கூட்டங்களையும், வெற்றிமாலையைத் தரித்திருக்கின்ற குதிரைத் தொகைகளையும், இராக்ஷசர்களுடைய பல்லாயிரந்தலைகளையும், சமுத்திரத்தைப்போன்ற ஆயுதக்கூட்டங்களையும்; துண்டுதுண்டாகத் துண்டிபட்டு, தமது வேகங் குறையாமல் அண்டத்திற் கப்பாலும்போகின்ற பாணங்களினுடைய சக்தியை ஆச்சரியப்பட்டுப் பார்ப்பான். அப்படிப்பட்ட பாணங்களுக்கு இவ்வளவென்னுங் கணக்கில்லாத விசாலத்தொகையைப்பார்ப்பான். அறுபதுவெள்ளமான ராக்ஷசவீரர்களுடைய வல்லமைக்கிசைந்தபடி எறிகின்றவைகளும், எய்கின்றவைகளும், சொரிகின்றவைகளும், எற்றுகின்றவைகளுமான ஆயுதங்களெல்லாம்பெருங்காட்டிலெரிந்ததுபோலச் சாம்பலாய்ப் போனவைகளே யல்லாமல், அந்த வீரர்களுக்குச் சமீபத்திலும்போகாத லக்ஷணத்தைத் தன் மனப்பூர்வமாய் ஆராய்ந்து பார்ப்பான். வயிற்றைப் பிசைந்துகொண்டோடிவந்து தங்கள் தங்கள் நாயகர்கள்மீது அவரவர்களுடைய மனையாட்டிகள் ஆகாசத்திற் செல்லுகின்ற மேகங்கள் பூமியில் வீழ்வதுபோல விழுந்து அழுதுருகுகின்ற கூட்டங்களைப் பார்ப்பான்.

இவையல்லாமல் பறைகளைக் கடித்து இடியைப்போலச் சப்தத்தை யுண்டாக்குகின்ற பிளந்தவாய்களோடுகூடிய தலைகளில்லாத முண்டங்கள் கூத்தாடுபவைகளையும், பருந்துமுதலிய பக்ஷிக்கூட்டங்கள் பூமியிலிறங்காமல் ஆகாசத்திற் பறந்துகொண்டிருக்கின்ற விதத்தையும் பார்ப்பான். அந்த குமாரர்கள் அநேகம்பேர் இருக்கின்றார்களோ என்பான். அந்தவீரர்கள் இந்த லோகமெல்லா மிடமில்லாமல் நிறைந்திருக்கின்றார்களோ என்பான். இந்த மனிதர்க ளெங்கே பார்த்தாலும் அங்கங்கே யிருக்கின்றார்களே இருவர்தானோ? அல்ல தநேகம்பேர்களுண்டோ வென்பான். ஆண்சிங்கங்களுக்குச் சமமான அந்த ராமலட்சுமணர்களுடைய போர்வேகத்தை இன்னதென்று தெரியாதவனாகி, ஆகாயத்தி லாரவாரிக்கின்ற தேவர்களைப் பார்ப்பான். அந்தத்தேவர்கள் வருஷிக்கின்ற புஷ்பவருஷங்களைப் பார்ப்பான். இடந்துடிக்கின்ற தனது தோளைப்பார்ப்பான். பார்த்தபக்கத்திலெல்லாம் பிணக்காடுகள் பரவியிருக்கின்றதைப் பார்ப்பான். இரத்தவாற்றில் யானைப்பிணங்கள் மிதந்துபோகின்றதைப் பார்ப்பான்.

இப்படி இந்திரஜித்து தனக்குத் துணையாகவந்த அறுபதுவெள்ளஞ் சேனையும் அழிந்துபோனதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு நிற்பதையும், ஆயிரங்கோடித் தேர்வீரர்கள்தவிர மற்றவர்களெல்லா மாண்டுபோனதையுங் கண்டு; முன்னமவ் விந்திரஜித்து நாகபாசத்தாற் கட்டின பயத்தினுல் ஓடிப்போன வானரர்கள் மனங்கலங்கி மறுபடியும் வந்து ரணக்களத்தைச் சேராமல் அங்கங்கே நிற்கின்றார்கள்.

ஆஞ்சநேயர் திருத்தோள்கொட்டி அட்டகாசஞ்செய் தாரவாரித்தல்.

கலி.

தளப்பருஞ்சேனைவெள்ளந் தரையதுந்தலத்ததாக
வளப்பருந்தேரினுள்ள தாயிரகோடியாகத்
துளக்கமில்லாற்றல்வீரர் பொருதபோர்த்தொழிலைநோக்கி
யளப்பருந்தோளைக்கொட்டி யஞ்சனைச்சிங்கமார்த்தான்.

இராக்ஷசசைந்யத்தின் அறுபதுவெள்ளஞ்சேனையுமிறந்து பூமியில்விழுந்து விட, ஆயிரங்கோடித் தேர்வீரர்கள் மாத்திரம் மிகுந்தவல்லமையோடும் செய்த போர்க்கோலத்தை அநுமானவர்கண்டு, அளவிடமுடியாமற் பூரித்த தம் து திருத்தோளைத் தட்டிக்கொண்டு வீராஷ்டகாசஞ்செய்தார். இடிக்கொப் பாகிய அந்தச் சப்தத்தைக்கேட்டுச் சிலதேர்வீரர்கள் தேரில் நின்று மூர்ச்சையாய்ப் பூமியில்வீழ்ந்தார்கள். சில ராக்ஷசர்கள் கையிலுள்ள ஆயுதங்களைக் கீழே எறிந்துவிட்டுப் பாதசாரியாக ஓட்டம்பிடிக்க யத்தனித்தார்கள். மதில்களாற் சூழப்பட்ட லங்காபட்டணத்திலுள்ள ராக்ஷசர்களும் இந்தக் கர்ச்சனையைக்கேட்டு ரத்தங்கக்கிக்கொண்டு உயிர்சோர்ந்தார்கள்.

இதைக்கண்ட மேகத்திலும் கரியமேனியை யுடையவனான இந்திரஜித்து அவர்களைப்பார்த்து, ஓ ஓ!! நீங்கள் பயந்துபோனீர்கள். இப்போதே போய்விடுங்கள். இந்த கர்ச்சனைக்குப் பயந்தவர்களாகிய தக்கவர்கள் இனி யெப்படி கொடியயுத்தஞ் செய்யப்போகிறீர்கள்? நீங்களு முன்னிறந்துபோ ய் அந்த வீரர்களுடனே இப்போதே மாண்டுபோனீர்கள்போ லானீர் கள். என்று கோபித்துக்கொண்டு தனித்தேரை யுடையவனாக ஸ்ரீராமலக்ஷு மணர்கள்மே லெதிர்த்து வந்தான். அதைக்கண்ட ஆயிரங்கோடித் தேர்வீர ரும் கர்ச்சித்துக்கொண்டு நெருங்கி, பூமியுங் கிழிந்துபோய்விட்டதென்று பயப்படியாகவும், திக்கஜங்கள் தத்தளித்து மயங்கிப்போய்விடவும், ஆகாசநட் சத்திரங்கள் உதிர்ந்து விடவும், தேவர்கள் மனத்திகைக்கவும், இரணகளத்தில் வந்துநின்றார்கள். அப்போது மகாசாதுரிய வாசகராகிய இளையபெருமாள் மேகத்திற்குச் சமமான உதாரத்துவமுள்ள திருக்கைகளையுடைய வீர சிம்ஹமான ஸ்ரீராமச்சந்திரப் பிரபுவை நமஸ்கரித்து நின்றுகொண்டு விண்ணப்பம் பண்ணிக்கொள்ளுகின்றார்.

சுவாமி! உலகத்தாரெல்லாரும் இவன் வெற்றிபெற்றதாகவும், இவனுடைய நாகபாசத்தாற் கட்டுண்டு அடியேன் தோற்றுப்போனதாகவுஞ் சொல்லிக் கொள்ளுகிறார்கள். இது யதார்த்தமே; அடியேனும் இஷ்டபந்துக்களான இவ்வானரவீரர்களைக் காக்கவில்லை. இந்தச் சண்டாளன்கட்டின பெருங்கட் டை நீக்காமலும் போனேன். இவனைச்செயித்து வெற்றிகொள்ளாமலும் நின் றுவிட்டேன். இவனுயிரையும் போக்காமலிருக்கிறேன். இப்பொழுதும் தீரா த வசையா யிருக்கின்றது. ஆதலால், இந்திரனுக்குப் பகையாளியான இவ னுடையதலையை எனது பாணத்தினால் அந்தரத்திலறுத்துத் தள்ளாமற்

போவேனேயானால், அடியேனை யெல்லாத் துஷ்டர்களுக்குள்ளு முதன் மைப்பட்டவனும், மனிதரெல்லாரிலும் கடைப்பட்டவனுமாகக்கடவேன். சுவாமி! ஸ்வர்ணவீர கண்டாமணியை யணிந்த திருவடிகளையும், அழகிய திருத் தோள்களையுமுடைய தேவரீர் சந்நிதிமுன்பாகவே இந்தத் துன்மார்க்கனு டைய தலையை அடியேனுடையபாணத்தா லறுப்பேனானால்,நான்செய்த அடி மைத்தொழிலும் கீர்த்திபெற்றதாகும்.

அப்படி யாகாவண்ணம் இந்தப் பெரியலோகத்தாரெல்லாம் பார்த்து நிற்கவும் அடியேனுடைய பாணமானது இவனுடைய தலையை அறுக்காமற் போகுமானால், தேவரீருக்கு அடியேன் செய்கிற நிஷ்காமிய கைங்கரிய பிர யோசனமெல்லாம் லோகத்திற் குதவாமற்போகக்கடவது, என்று சபதஞ் செய்தார். அப்படி மஹாவீரரான இளையபெருமாள் சபதஞ்செய்யவே தேவ ர்களெல்லாம் எங்கள் மனவருத்தம் நீங்கிற்றென்று ஆனந்தகோஷமிட்டா ர்கள். சமஸ்தமான லோகங்களும் லோகத்துப்பதார்த்தங்களும் ஆரவாரித் தன. தருமதேவதையும் பல்லாண்டுகூறி யொலித்தது. இயமதருமராஜனும் தெக்கலிகொட்டிக் கர்ச்சித்தான். அப்போது செந்தாமரை மலர்போன்ற திருக்கண்களையுடைய ஸ்ரீராமபிரான் புன்சிரிப்புள்ள திருமுகத்துடன் அவ ரைப்பார்த்து, தம்பி! நீ இவ்வளவு ஞானத்துடனே இந்தச் செய்கையைச் செய்ய ஏற்றுக்கொள்வாயேயானால், நலமே: சம்ஹாரகர்த்தாவாகிய உருத்திர மூர்த்தியும், இரக்ஷக கர்த்தாவாகிய உபேந்திர நாதனும், தங்கள் தொழிலில் வியர்த்தர்களாய்ப்போய்விட்டார்கள். அவர்களால் இனியென்ன நடக்கப்போ கின்றதென் றாசிர்வதித்தார்.

இலட்சுமணர் யுத்தகளம்புகுந்து இந்திரசித்துவைச் சூழ்ந்துநின்ற ஆயிரங்கோடி தேர்வீரர்களை அழித்தல்.

கலி.

சொல்லிதுகேட்டடிதொழுதுசுற்றிய
பல்பெருந்தேரொடு மாக்கள்பண்ணையைக்
கொல்கலிங்கன்னது காண்டிகொல்லெனு
ஒல்லையிலெழுந்தன னுவகையுள்ளத்தான்.

இப்படி யாசீர்வதித்த ஸ்ரீசக்கரவர்த்தித் திருக்குமாரரை இளையபெரு மாள் சாஷ்டாங்கமாகத் தெண்டன் சமர்ப்பித்து, ஸ்வாமி! அநேகங் கோடித் தேர்வீரர்களால் சூழப்பட்ட இந்த ராக்ஷசக்கூட்டத்தை இதோ கொன்றுவிடுகின்றேன். சற்றே தேவரீர் கடாக்ஷித்தருளுமென்று விண்ண ப்பஞ்செய்துவிட்டு அதிக சந்தோஷத்துடனே புறப்பட்டார். அப்போது அந்தக்குமாரன் இடியைப்போலக் கர்ச்சித்தான். அதைக்கேட்டு மேகங்க ளெல்லாம் சிதறி உதிர்ந்துபோய்விட்டன. இந்திரஜித்தினின் தேரிற்பூட்டி யிருந்த சிம்ஹங்களு நடுக்கமடைந்தன. ஸ்ரீயப்பதியினுடைய பாஞ்சசன்னியத் தொனியைப்போலச் சமுத்திரமும் ஆரவாரித்தது. இப்படி இளையபெருமாள்

யுத்தவரங்கத்தில் வந்து எதிர்த்து நின்ற மாத்திரத்தில் வளைதடி—மழு - சக்கரம் — ஈட்டி — தோமரம் — தண்டாயுதம் - வேலாயுதம் - முசண்டி — சூலாயுதம் — கைவேல் — அம்புகள் — கன்னக்கோல் — இவைமுதலிய ஆயுதங்களையெல்லா மேகவருஷத்தினு மிகுமடங்காக இராக்ஷசர்கள் வீசியெறிந்தார்கள்.

அப்போது வசந்தகாலத்துக்குரிய மன்மதனுக் கொப்பான சுந்தரமுள்ள ஸ்ரீராமானுஜர் பிரயோகித்த பாணவேகத்தால் ஆகாசமட்சத்திரங்களெல்லாம் ஒருமிக்க உதிர்ந்தன. மேலுலகமுங் கீழுலகமும் மறையும்படிப் பிரயோகித்த ஆயுதங்களெல்லாம் துண்டுதுண்டாய்முறிந்து வீழ்ந்தன. ஒருபாணப் பிரயோகத்திற்கு ஆயிரந்தேர்கள் அச்சுமுறிந்து விழ்ந்தன. அதிற்பூட்டிய குதிரைகளெல்லா மாண்டன. சாரதிகளுமிறந்தார்கள். இரதிகர்களுந் தலையறுபட்டார்கள். உலோகமெல்லாந்தீப்படி நெருப்பும், புகையும், மேன்மேலும் பொங்கின. தேர்த்தட்டுகளின் அடிமுறிந்து விழுந்தன. தேர் வண்டில்களெல்லாம் அச்சுமுறிந்து போயின. அம்புகள் பூட்டிய வில்லுகள் ஒடிந்தன. தேர்க் குத்துக்கால்களும், இரதிகர்களுடைய மார்புகளும், பிளப்புண்டன. விருதுக்கொடிகள் அற்றன. குடைகள் கிழிந்தன. வெற்றி வீரர்களுடைய முடிகளுடைந்தன. பேரிகைகள் பிளவுண்டன. மேகங்களெல்லாம் கரிந் ததிர்ந்தன.

இப்படி எவரும் - எவையும் - சின்னபின்னப்பட்டுத் தலைகால் தெரியாமற் போனபடியால், இவைகள் தேருருளைகள் - இவைகள் தேர்க்குதிரைகள் - இவர்கள் ரதிகர்கள் — இவர்கள்காலாட்கள் —இவர்கள் சாரதிகள் என்று வேறுபாடறிதற்கு எளிமையற்றுப்போய்விட்டது. தகப்பன்மார் தேரிற் பிள்ளைகளுடைய தலைகள் கிடந்தன. பிள்ளைகள் தேரிற் பிதாக்களுடைய நரைத்த தலைகள் விழுந்தன. சிலதலைகள் சூரியனுக்குறிந்து அம்புடனே அந்தர மார்க்கத்திற் பறந்துபோயின. சில தலைகள் சொரிந்த ரத்தவாற்றில் அம்புபாய்ந்தபடியே சுறுமீன்கள் சமுத்திரத்தில் திரிவதுபோல ஓடின. அம்பையா லையை யணிந்த வலதுகைகள் அம்பறாத்தூணியில் நின்று மெலிகின்ற அம்புகளுடனே அறுந்தன. வில்லைப் பிடித்தபடியே இடதுகைகளும் ஒடிந்தன. கூர்மையான பாணங்களினால் அறுபட்டவைகளும் அடிபட்டவைகளுமான கொடிகளும், குடைகளும், மற்றவைகளும், விசாலமான கடலுக்கொப்பான இரத்தவெள்ளத்திற் பக்ஷிக்கூட்டங்கள் படிவதுபோலு மிருந்தன.

அன்றியும் யானைகளின் மேற்றவிசுகளும், அம்புகளும், தேர்களும், வளைகின்ற பெரியவில்லுகள் முதலான ஆயுதங்களும், கொடிகளும், விறகுகளாகி; இறந்தராக்ஷசர்களுடைய கண்களினின்றெழு மக்கினிக்குப்பாகமான பிணங்களைப் பேய்க்கூட்டங்கள் சந்தோஷத்துடனெடுத்தெடுத்துவிழுங்கின. இலக்குமணனுடைய பாணங்கள்பட்டுச் சிலதேர்களின் வண்டிகள் சில்லுமில்லாமற் பேர்ந்து சிதறிப்போயின. சிலதேர்கள் கயிற்றிற்கட்டிய குதிரைகள்மாண்டு

பூமியில் தலைகீழாய்ப்புரண்டு விழுந்தன. சிலதேர்கள் ரதிகனும் சாரதியுமில்லாமல் வெறுமையாய் இரணக்களத்தி லோடித்திரிந்தன. சில ரத்தினத்தேர்கள் பிரகாசிக்கின்ற ரத்தவெள்ளத்துடன்சேர்ந்து சொலிந்த கிரணங்களை வீசுகின்றதனால், அளவில்லாத பந்துக்களுடனே ராக்ஷச அஷ்டர்களெல்லாம் அகப்பட்டு மயங்கும்படி அக்கினியில் வெந்த லங்காபட்டணத்தின் மாளிகையைப் போலிருந்தன.

இப்படியிருக்கின்ற காலத்தில் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியும் ஆஞ்சநேயரைச் செலுத்திக்கொண்டு வந்து தம்முடைய கோதண்டத்தை வளைத்து மழைமாரியைப்போல அஸ்திரப்பிரயோகஞ் செய்தார். அப்போது தேவலோக விமானங்கள் பூமியில் விழுந்து முறிந்ததுபோல அங்கங்கே தப்பியிருந்த சில தேர்களும் சின்னபின்னப்பட்டு அத்தேர்வீரர்களு மாண்டு போனபின்பு, இராவணகுமாரனை இந்திரசித்து மாத்திரம் ஒற்றை ரதத்துடனே நின்றான். இப்படி பலயானைகளோடு குதிரைகள்பூட்டிய தேர்களும், சிங்கங்கள்போன்ற ராக்ஷசவீரர்களும், கூட்டமாய்மடிந்து போனபிறகு, வில்லோடுங்கூடின ஸ்ரீராமலக்ஷ்மணர்களான இரண்டு வீரர்களையும் இந்திரசித்தானவன்பார்த்து, வெகுகோபத்துடனே கொஞ்சமு மஞ்சாமல் சொல்லுகின்றான்.

ஸ்ரீராமலக்ஷ்மணரை இந்திரசித்து நோக்கிச் சிலவார்த்தைகூற, அதற்குப் பிரதியுத்தரம் இலக்ஷ்மணர்கூறல்.

கலி.

இருவிரென்னொடுபொருதிரோ வன்றெனின்வெற்ற
ஒருவிர்வந்துயிர்தருதிரோ வம்பலையோடும்
பொருதம்பொன்றுதல் புரிதிரோ வுருவுடையுகளிர்
தருவின்றுமக்கேற்றன சொல்லுமென்றுசெவித்தான்

ஓ வீரர்களே! நீங்களிரண்டு பேர்களும் என்னோடு சண்டை செய்கின்றீர்களோ? அல்லாவிட்டால் உங்களிருவரில் தகுதியான ஒருவர் வந்து உயிரைக்கொடுக்கின்றீர்களோ? உங்கள் சேனைகளையெல்லாம் சேர்த்துக்கொண்டுபோர் செய்து மாண்டுபோகின்றீர்களோ? உங்கள் மனதிலுள்ள அபிப்பிராயத்தைச் சொல்லுங்கள். அந்தப்படியே உங்களுக்கேற்ற ஒரு உத்தரவு கொடுக்கின்றே னென்றான். இப்படிச் சொன்னதைக்கேட்ட இளையபெருமான் இந்திரசித்துவைப்பார்த்து, அடா இராவணகுமாரனே! நீ வாளாயுதத்தாலாவது, பலம்பொருந்திய வில்வித்தையினாலாவது, மல்யுத்தத்தினாலாவது, இன்னும் உனக்குப் பழக்கமாயிருக்கின்ற எல்லாவித ஆயுதங்களினாலாவது பலங்கொண்டு நீ செய்கின்றபோரில் அபிப்பிராயப்படுகின்ற யுத்தம் ஒன்றல்ல பலவற்றையுஞ்செய்து உன்னுயிரை வாங்கும்படிச் சபதஞ்செய்திருக்கின்றேன். இது சத்தியமாகுமென்று சொன்னார். அதைக்கேட்ட இந்திரசித்து, ஓ லட்சுமணா! உனக்கு முன் பிறந்தவனான அந்த ஸ்ரீராமனை முறை

மாற்றி உனக்குத்தம்பியாக்கி உனக்குப்பின்னாலே சொல்லுகின்றேன். அவனுக்குப் பின்பிறந்தவனான உன்னை முன்னேகொன்று அவனுக்குத் தமையனாகச் செய்து விடுகிறேன். இப்படிச் செய்யாவிட்டால் நான் ராவணனுக்குப் பிள்ளையாகப்பிறந்ததினாற் பயனென்ன விருக்கின்றது? உனக்கிலக்குவனென்கிற பெயர் தகுதியானதென்னும்படிப் பிரகாசிக்கின்ற என்னுடைய பலமுள்ளபாணத்துக்கு உன்னை லக்ஷியமாக்கி விடுகிறேன்.

அன்றியும், என்பாணத்தை நடுவேநுழைந்து விலக்கிவிடுகிறேனென்று விருஷபவாகனருடான சாக்ஷாது உருத்திரமூர்த்தியே விலக்கினபோதிலும், அவரையுங்கூட என்வில்லினின்று [illegible] கலக்கிவிடுகிறேன். இவைகளையெல்லாம் உனதண்ணனாகிய அந்த ஸ்ரீராமனும் கண்ணாரப்பார்க்கப்போகிறான். என்னுடன் வந்த அறுபதுவெள்ள ராக்ஷசசேனைகளைக் கொன்றுபோக்கின நீங்களிரண்டு வீரர்களு மனமிரங்கி வருந்தும்படி, தோஷிக்குரங்குகளாகி எழுபது வெள்ளஞ்சேனையு மாண்டு இரணக்களம் வெறுங்களமாகும்படி. ஒரு க்ஷணத்துக்குள்ளாக என்னொருவில்லாலேயே முடித்துவிடுகிறேன். உன் தமையனுடைய பாணத்தாற் கொல்லப்பட்ட கும்பகருணனென்கிற பெயருடையவனான இராவணன் தம்பியல்ல நான். அந்தராவணனுடைய புத்திரனென்றறி. மேலும், நானொருவீரனுக்கும். என்தம்பிமார்களுக்கும், என்சிறியதகப்பனான கும்பகர்ணனுக்கும், உன்னையும் உன்னண்ணனையுங்கொன்று உங்களிருவர்களுடைய ரத்தத்தினால் திலதர்ப்பணஞ்செய்வதாக நிச்சயித்து வந்திருக்கின்றேன். என்றுசொல்லக்கேட்ட இளையபெருமாள் அவனைப்பார்த்துச் சொல்லுகின்றார்.

கவி.

அரக்கரென்பதோர்பெயர்படைத் தவர்க்கெலாமடுத்த
புரக்குநன்கடன்செய்வுளன் வீடணன்போந்தான்
கரக்குநந்தைக்குநீசெயக் கடவனகடன்கள்
இரக்கமுற்றுனக்கவன்செயு மென்றனனிளையோன்.

அடா இந்திரஜித்துவே! இராக்ஷசரென்கிற பெயருடையவர்கள் யார்யாரோ? அவர்களுக் கெல்லாம் அபரகிர்த்தியங்களைச் செய்து ரக்ஷிக்கிறதற்குத் தகுந்த விபீஷணாழ்வான் எங்களிடத்தில் முன்னமே வந்துவிட்டான். ஒளித்துக்கொண் டிருக்கின்ற உன்தகப்பனாகிய ராவணனுக்கு நீசெய்யவேண்டிய உத்தரகிரியைகளையெல்லாம், அதிக துக்கத்துடனே அவனேவந்து நாளைசெய்யப்போகிறானென்றார்.

இந்திரசித்துவும் இலக்ஷ்மணரும் போர்செய்தல்.

கவி.

ஆனகாலையி லயிலெயிற்றரக்கனெஞ் சழன்றான்
வானம்வையமுந் திசைகளும்யாவையு மறையப்
பானல்வேலையைப் பருகுவசுடர்முகப் பகழி
சோனைமாரியி னிருமடிமும்மடி தூர்த்தான்.

இவ்வண்ணம் இளையபெருமாள் சொல்லுங்காலத்து கூர்மைபெற்ற வக்கிரதந்தங்களையுடைய இராட்சச நீசனாகிய இந்திரசித்தானவன் மனங்கோபித்து, மிகவும் கூர்மைவாய்ந்த பாலசமுத்திரத்தையும் உண்ணும்படியாகிய அக்கினிமுகாஸ்திரங்களைத் தனது விலிற்பூட்டி, தேவலோகமும் பூலோகமும் மறையும்படியாக சோனைமழையைக் காட்டினும் இரண்டுபங்கு மூன்றுபங்கதிகமாகப் பிரயோகித்தான். அங்கத குமாரன்மேல் ஆயிரம்பாணமும், வாயுபுத்திரராகிய ஆஞ்சநேயர்மீது அதற்கிரட்டிப்பான பாணங்களும், மற்ற வீரசிம்ஹங்களுக்குச் சமமான வானரவீரர்கள் தேகத்தின்மேல் அநேகபாணங்களுமாகப் பிரயோகித்து, எல்லாவிடமும் பாணமயமாகும்படி நிறைத்துவிட்டான். இப்படி ராவணியான இந்திரஜித்து இராமானுஜர்மீதும், ஸ்ரீராமபிரான் மேலும், மகா சமர்த்தர்களான வானரவீரர்கள் பேரிலும், தேகத்தை உருவச்செய்வதான கொடியபாணங்களைப் பிரயோகித்தான். அவனுடையவில் ஒருநாழிகைபரியந்த மண்டலாகாரமான பிறையைப்போல வளைந்து நின்றது. பின்புறத்திலும், முன்புறத்திலும், இரண்டு பாரிசத்திலுமாகிய நாற்புறத்தும், அம்புகளை மத்தியானகாலத்திற்சூரியன் கிரணங்களைப் பொழிவதுபோற் பாணங்களைப் பொழியத்தொடங்கின அந்த இந்திரஜித்தின் கைவல்லமையைக் கண்ட தேவர்களெல்லாம் பயந்து கண்களைமூடிக்கொண்டார்கள். இப்படி ராட்சசன்விட்ட பாணங்களில் தேகத்திற்பட்டவைகளையும் படாதவைகளையும் ஸ்ரீராமசகோதரராகிய இளஞ்சிம்ஹமானவர் விலக்கிவிட்டு, அவன்விடப்பட்ட தேவாஸ்திரத்திற்கு அந்தந்தத் தேவாஸ்திரங்களைப் பிரயோகித்து, அவைகளையெல்லாம் அந்த அறிவீனன்செய்த பொய்ச்சபத வார்த்தைகளைப்போல நாசமாகும்படிச்செய்து அதிவேகமாய் அவனையெதிர்த்தாகின்றார்.

ஸ்ரீராமமூர்த்தியானவர் இந்திரஜித்துவின்மேற் பாணப்பிரயோகஞ்செய்கிறது தர்மமல்லவென்று வெறுமையாய் இளையபெருமாளைப் பிரியமாய்ப் பின்றுநின்றருளினார். இளையபெருமாளும் இந்திரசித்துவும் ஒருவரையொருவர் ஜெயிக்கவொட்டாமல், அவர்கள் பாணங்களெல்லாம் கொள்ளிக்கட்டைகளைப்போல வெந்து ஆகாசத்திற்போய்ச் சேர்ந்துவிட்டன. இருவரும் அதிக உக்கிரத்தோடு பாணப்பிரயோகஞ்செய்ததினாலே காடுகளெல்லாம் பற்றியெரிந்தன. பெரியமலைகளெல்லாம் சேர்ந்தெரிந்தன. பொன்னுலகமாகிய தேவலோகமும் எரிந்தது. சப்தசமுத்திரங்களுங் கொதித்தெரிந்தன. அவைகளிலுள்ள மலைகளும் திகுதிகென் றெரிந்தன. உலோகமெல்லாம் ஊழிகாலத்தைப்போலச் சாம்பராயெரிந்தன.

அப்போது ஆதிசேஷசயனத்தைத் துறந்து அயோத்தியாபுரியி லவதரித்த ஸ்ரீரகுநந்தனருக் கிளையவராகிய இலக்ஷ்மணப்பெருமாள் தம்முடைய பாணங்களால் இந்திரசித்தேவிய பாணசமுத்திரங்களையெல்லாம் விலக்கிவிட்டு, அஞ்ஞானிகளைப்போன்ற அந்த ராவணபுத்திரனுடைய தேரை யழுத்துக்

கொண்டு வருகின்ற ஆயிரஞ்சிம்ஹங்களையும் யமனுக்குத் தத்தஞ்செய்து விட்டார். அந்நேரமிந்த மாத்திரத்தில் சேமத்தேர் துணையில்லாமல் தேவர்களையெல்லா நாசப்படுத்தித் துரத்திவிட்டவனான இந்திரஜித்து பரிவேடமழிந்து போகத் தனித்துநின்ற சூரியனுக்கொப்பாகநின்று அவ்வழிந்த தேர்மீதிருந்தபடியே அங்கதகுமாரனுடைய வெற்றித்தோள்களின்மீதும், இலக்ஷ்மணருடையதிருத்தோள்களின்பேரிலும், அழுந்தும்படியாக அளவில்லா நபாணங்களைக்கொட்டி, தனது பலம்பொருந்திய தனிச்சங்கத்தை யெடுத்துவாயில்வைத்து எல்லாலோகங்களு நிலைதளர்ந்து நடுங்கும்படிப் பயம்மென்றூதினன்.

கவி.

சங்கூதிய தசமுகன்றனிமகன் தரித்த
கங்கமார்பெருங் கவசமுமீத்துடன் கழல
வெங்கொடுங்கணை யையிரண்டுமென வீசிச்
சிங்கவேறன்ன விலக்குவனிளையவ னெறிந்தான்.

இப்படிச் சங்காநஞ்செய்த தசமுகனுடைய தனிக்குமாரனான இந்திரசித்து தரித்திருந்த வஜ்ஜிரகவசமானது பொடிப்பொடியாய் உதிர்ந்துபோகும்படி, ஆண்சிம்ஹம்போன்ற லட்சுமணப் பெருமாள் பத்துத்திவ்வியபாணங்களைப்பிரயோகித்து தமது வில்லைக் குணத்தொனி செய்தார். இதைப்பார்த்த நீலமேக ஸ்யாமள மேனியரான ஸ்ரீராமர் செந்தாமரை மலர்போன்ற தமது திருக்கண்மலரில் ஆநந்தபாஷ்பமொழுக இளஞ்சந்திரிகையைப்போலப் புன்சிரிப்புச் சிரித்து, உலோகங்களையெல்லாம் விழுங்கிய தம்முடைய திருவாயைத்திறந்து ஓ வானரவீரர்களே! நீங்கள் யாவரும் அட்டகாசஞ் செய்யுங்களென்று நியமித்தார். உடனே யெல்லா வீரர்களும் லோகங்களெல்லாம் வெடித்துப்போய்விட்டனவென்னும்படி ஒருமிக்க வீராதஞ்செய்தார்கள். அப்போது சூரியனஸ்தமிக்கும்வேளை யாயிற்று.

அஸ்தமிக்கும் வேளையில் இந்திரசித்து ஆகாசத்தில் மறைய இலக்ஷ்மணர் இவன்மீது பிரம்மாஸ்திரம்பிரயோகிப்பனென்ன ஸ்ரீராமபிரானுடன் சொல்ல அவரதைத்தடுக்க இஃதறிந்த இந்திரசித்து தான் அப்பிரம்மாஸ்திரம் தொடுக்கும்படி இலங்கையிற் புகுந்து இராவணனிடம் யோசிக்கவருதல்.

கவி.

கண்ணிமைப்பதன் முன்புபோய் விசும்பிடைக்கரந்தான்.
அண்ணன்மற்றவனுக்கைகண் டறிகிலனிப்
பண்ணவற்கிவன்பிழைக்குமேற் படக்குகம்பலவை
எண்ணமற்றிலையயன்படை தொடுப்பலென் றிசைத்தான்.

இப்படியிருக்கிற தருணத்திற் கண்ணிமைத்துத் திறப்பதற்கு முன்பாக இந்திரசித்து ஆகாசத்திற்போய் மறைந்துவிட்டான். இளையபெருமாள் அவனுடைய உருவத்தைக் காணுதவராகி ஸ்ரீராமனைப்பார்த்து, சுவாமி! இ

வன் தேவர்களுக்குந் துன்பஞ்செய்கிறவனானபடியால் நம்முடைய சேனையையும் அழிப்பான். இப்போது ஆலோசிக்கவேண்டுவதில்லை. பிரம்மாஸ்திரப் பிரயோகம் செய்துவிடுவேனென்றார். இப்படி இளையபெருமாள் சொல்வதைக்கேட்ட ஸ்ரீசக்கரவர்த்தித் திருக்குமாரர் அவரைப்பார்த்து, ஆ! தம்பி! உனக்குக்கோபம் பிறந்தபோதும் அவ்வஸ்திரத்தைத் தொடுத்துவிடாதே. அஃதிந்த மூன்றுலோகத்தையுஞ்சுட் டெரித்துவிடும். அதை யொருவருந் தடுக்க முடியாது. என்றருளிச்செய்யக் கேட்ட மகாபுத்திமானான இளையபெருமாள் அதைப் பிரயோகிக்காமல் நிறுத்திவிட்டார்.

அப்போது மறைந்துபோய்நின்ற வஞ்சகனான இந்திரசித்து இவர்களுடைய மனோபாவத்தைத் தெரிந்துகொண்டு, தானந்தப் பிரம்மாஸ்திரப் பிரயோகஞ்செய்ய எண்ணங்கொண்டவனாகி, இப்போது நாமிவர்களைவிட்டுப் பிரிந்துபோவது நல்லதாகுமென்று தீர்மானித்துக்கொண்டு போய்விட்டான். இவன்போகிறதைப் பார்த்துக்கொண்டிருந்தவர்களான தேவர்களெல்லாம் கெக்கலிகொட்டிச் சிரித்தார்கள். வானரர்களெல்லாம் இவ்விந்திரசித்துவினுடைய தேகத்தில் இளையபெருமாளுடைய தீட்சணியமான பாணங்கள்பட்டு ஒழுகிவருகின்ற இரத்த வெள்ளமானது மேகவருஷங்களைத் தோற்கச் செய்தனவென்றும், அவனு மெதிர்த்துநிற்கப் பயந்து ஆகாசத்தில் ஓடிப்போய்விட்டானென்றும் நினைத்தவர்களாய் அதியுக்கிரத்தாற் பிறந்த சந்தோஷத்துடனே ஆர்ப்பரித்தார்கள்.

கவி.

உடைந்தவானரச் சேனையுமோதநீருவரி
அடைந்ததாமெனவந்திரைத் தார்த்தெழுந்தாடித்
தொடர்ந்துசென்றது தோற்றவன்யாவர்க்குந்தோன்றாக்
கடைந்தவேலைபோற் கலங்குறுமிலங்கையைக்கலந்தான்.

அன்றியும், ஓடிப்போன வானரசேனையெல்லாம் சமுத்திரமானது இரணக்களத்தில்வந்து சேர்ந்ததென்று சொல்லும்படி வந்துசேர்ந்து கர்ச்சித்துக்கொண்டு, இந்திரசித்துவைப் பின்றொடர்ந்து துரத்தின. தோல்வியடைந்துபோன இந்திரசித்து ஒருவருக்குந் தெரியாமல் மந்தரகிரியால் மத்திக்கப்பட்ட சமுத்திரம்போலக் கலக்கமடைந்திருக்கின்ற இலங்காபட்டணம் வந்து அடைந்தான். இப்பாலவ்விந்திரசித்து பிரகாசமான பிரம்மாஸ்திரத்தை இந்த வீரர்கள் நம்மேல் விடுவதற்குமுன்பாக நாமே முந்திக்கொள்ளுவோமென்று உத்தேசித்து, அதர்வணவேத மந்திரங்களால் அஸ்திரயாகஞ்செய்யும்படி தீர்மானித்தான். அந்தத் தீர்மானத்தை யுத்தஞ்செய்யத்தக்க தோள்களையுடையவர்களான ஸ்ரீராமலட்சுமணர்களறியாமல், அவன்வஞ்சனைத்தொழிலையு மறந்து விட்டார்கள். சப்தித்த சேனாவீரர்களுடைய ஆர்ப்பரிப்பானது தேவலோகத்தைப்போய் அலைக்கவும், அதுகண்ட சூரியபகவான் இளையபெருமான்மீது இந்திரசித்து பிரம்மாஸ்திரப் பிரயோகம்

செய்வதைப் பார்க்கமாட்டேன். முன்னாக நானேமாண்டுபோகின்றேன். என்று போவது போலச் சப்தமாவென்னும் குதிரையா லிழுக்கப்படுகின்ற தன் இரதத்துடனே மேலைக்கடலைப்போய்ச் சேர்ந்து விட்டான்.

சூரியனஸ்தமித்தபிறகு வானரசைநியங்கட்கு ஆகாரங்கொண்டுவரும்படி விபீஷணனை ஸ்ரீராமபிரா னனுப்புதல்.

கலி.

இரவுநன் பகலும்பெரு நெடுஞ்செருவியற்றி
உரவுநம்படைமெலிந்தன தருந்துதற்குணவு
வரவுதாழ்த்தது வீடணவல்லையினிக்
தரவுவேண்டுமென்றனன் றாமரைக்கண்ணன்.

அப்போது புண்டரீகாக்ஷராகிய ஸ்ரீராமர் விபீஷணாழ்வானைப்பார்த்து, அப்பாதம்பி! வல்லமைபெற்ற நம்முடையசேனைகள் இராத்திரியும்பகலுமாகப் பெரும்போர்செய்து இளைப்படைந்து போய்விட்டார்கள். இவைகளுக்கு ஆகாரம் வருகிறதற்குத் தாமஸமாய்விட்டபடியால், நீயே இவர்களுக்கு வேண்டிய உணவுப்பொருள்களைச் சேகரித்துக்கொண்டு வரவேண்டுமென்று நியமித்தார். அதற்கு விபீஷணாழ்வான் ஸ்வாமி! அப்படியே இதோ அதிசீக்கிரத்திற் கொண்டு வருகின்றேனென்று நமஸ்கரித்துப்புறப்பட்டு, தம்முடைய மந்திரிமார்களோடுங் கூடப்போய் ஒருநாழிகைக்குள்ளாகச் சமுத்திரத்தைத் தாண்டினர்.

ஸ்ரீராமபிரான் இளையபெருமாளுடன் சிலவார்த்தைகூறி பாடி கூடாரமடைதல்.

கலி.

தெய்வவான்பெரும்படைகட்கு வான்முறைதிருந்து
மெய்கொள்பூசனையியற்றினம் விடுதிறவிதியால்
அய்யகாலினையாற்றிலன் வருவதோராளவும்
கய்கொள்சேனையைக் காவெனப்போர்க்களங்கடந்தான்.

அத்தருணத்தில் இளையபெருமாளை ஸ்வாமிபார்த்து, தம்பிலக்ஷ்மணா! தெய்விகமாகிய அஸ்திரங்களுக்குக் கிரமமான யதார்த்த பூஜைகளைச்செய்து விட்டுப் பிறகுதான் வந்து பிரயோகிக்கவேண்டும். ஆகையால், நான்போய் அஸ்திரபூஜைகளைச் செய்துவிட்டு வருகின்றேன். நான்வருகிறவரையிலும் நம்முடைய சேனைகளையெல்லாம் பத்திரமாகக் காத்துக்கொண்டிரு. என்றுகூறி ரணக்களத்தைவிட்டுப் பாடிக்கூடாரத்தைப்போய்ச் சேர்ந்தார்.

இலங்கையில் இராவணனும் இந்திரசித்துவும் வஞ்சகமான செயல்களை யோசித்தல்.

கலி.

அந்தையைக்கண்டுபுகுந்தன தன்மையுந்தன்மேல்
முந்தைநான்முகன்படைக்கலந் தொடுத்ததுமுறையும்

சிந்தையுட்புகச்செப்பின னிளையவன்றிகைத்தான்
எந்தையென்னினிச் செயத்தக்க திசையெனவிசைத்தான்.

இலங்கைக்குப்போன இந்திரஜித்து இராவணனைக்கண்டு, அவ்விடத்தில் நடந்தகாரியங்களையும், தன்மேலவர்கள் முந்திப் பிரம்மாஸ்திரப் பிரயோகம்பண்ண யத்தனித்திருக்கிற விதத்தையும், அவனெஞ்சிலுறுத்தும்படியாகச் சொல்லினன். அதைக்கேட்ட இராவணன் மனந்திகைத்து, என்னப்பனே! அப்படியா? ஆனால் நாமென்னசெய்யலாமென்று கேட்டான். அதற்கவ்விந்திரசித்து இராவணனைப்பார்த்து, ஐயா! தன்னைக் கொல்லுதற்கு ஒருவர் துணிந்தார்களேயானால் தானுமப்படியே அவர்களை முந்திக் கொல்லும்படி யத்தனிக்கலாமென்று சாஸ்திரஜ்ஞர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட யுத்தத்தை நான் செய்யப்போகிறேனென்பதை அவர்களறியாதபடி மறைவாயிருந்து அந்தப் பிரம்மாஸ்திரத்தை விடுகிறதே நன்மை. இது சாஸ்திரவிகிதமாகும்.

அன்றியும், நான் பிரம்மாஸ்திரம் பிரயோகிக்கப் போகின்றேனென்பதை அவர்களறிவார்களே யானால், அந்தப் பிரம்மாஸ்திரத்தைக்கொண்டே தடுத்துவிடுவார்கள். என்னை யெதிரேவரப் பார்ப்பார்களேயானால் கொன்றுபோடவும் வல்லவர்களாவர். அந்தத் தபோவான்களான அவர்களுக்கு வருத்தமென்பது கொஞ்சமாவது உண்டாகவில்லை. ஆகையால், அஸ்திரயாகஞ்செய்து அவர்கள் வானரரை ஒரு க்ஷணநேரத்திற்குள்ளே முடித்துவிடுகிறேன். ஐயா இராவணேஸ்வரா! என்னையவர்கள் மறந்துபோய்விட்டார்களானதால் அவர்களோடெதிர்த்து யுத்தஞ்செய்ய அவர்கள்மீது அளவில்லாத சைநியங்களை ஏறவிட்டு, அந்தச் சேனைகளுக்குப் பின்னாக நானின்றுகொண்டு தான் இந்த அஸ்திரம் பிரயோகிக்கப்போகிறேனென்றான்.

இராவணன் ஸ்ரீராமலக்ஷ்மணரோடு போர்புரிய நூறுவெள்ளஞ் சேனைகளோடு மகோதரனை யனுப்புதல்.

கலி.

வெள்ளநூறுடை வெஞ்சினச்சேனையைவீர
அள்ளிலைப்படை யகம்பனைமுதலியவரக்கர்
எள்ளிலெண்ணிலர் தம்மொடுவிரைந்தனையேகிக்
கொள்ளைவெஞ்செரு வியற்றுதிமனிசரைக்குறுகி.

இப்படி யவ்விந்திரஜித்து சொல்லியதைக்கேட்ட இராவணன் தனக்கெதிரில் நிற்கின்ற மகோதரனைப்பார்த்து ஓமகாவீரவானே! நீ யென்மீது தயைவைத்து அதிககோபங்கொண்டவராகிய நூறுவெள்ளஞ் சேனையையும், அதற்குத் தலைவனான கூர்மையும் இலையைப்போலும் அச்சவடிவும்பெற்ற ஆயுதங்களையுடைய அகம்பன் முதலாக அளவில்லாத ராக்ஷசர்களையுங்கூட்டிக்கொண்டு, சீக்கிரமாகப்போய் அந்தமனிதர்களை நெருங்கிப்பெருஞ்சண்டையைச்செய்து, உன்மாயைகளெவ்வளவுண்டோ அவ்வளவுமாயைகளையும் ஏவி, மகாகொ

மையாகிய அந்தகாரவிருளை எங்கே பார்த்தாலும் அகிரப்புக. நீயொருத்தன்மாத்திரமே இந்தமூன்றுலோகங்களையும் ஜெயம்பெறத்தக்கவன். ஆதலால், நீயேபோய் அவர்களைக்கோபித்து அவர்களுயிரைவாங்கி எனக்குபகாரம்பண்ணவேண்டுமென்று சொன்னான். இப்படிராவணன்சொல்லக்கேட்ட வாள்போன்றகோரதந்தங்களையுடையவனான மகோதரன் அதிக சந்தோஷசித்தனாகி, ஐயா பிரதாபலங்கேஸ்வரா! எப்போது நீர் உத்தரவுகொடுப்பீரோவென்று எதிர்பார்த்திருந்தேன். உத்தரவுகிடைத்தும் இனித்தாமசஞ்செய்யத் தக்கவனோ? இதோபுறப்பட்டேன். என்று அதிக உச்சாகத்துடன் அவனுடைய மலைபோன்ற தோள்களைத்தட்டி ஆக்ரமித்துத் தேர்மேல்வந்தேறினான். மலையைச்சூழ்ந்த மதத்தயானைகளைப்போல ராக்ஷசவீரர்கள் மகோதரனுக்கு உபபலமாக வந்து அவனது தேரைச் சூழ்ந்துகொண்டார்கள்.

அல்லாமலும், கோடிகோடி நூறு நூறாயிரம் என்னுங் கணக்குகளையுடையனவாகிய வெற்றிமிகுந்தயானைகள் அணியணியாகவந்துநின்றன. அந்தந்த அணிகள்தோறும் வாயுவேகத்தினும் மதிவேகமாயோடுகின்ற தேர்க்கூட்டங்கள் அளவில்லாதவைகள் வந்து சேர்ந்தன. மகாபலமுள்ளவைகளான அஸ்வப்படைகளும் கணக்கற்றவைகளாய் வந்து சேர்ந்தன. ஆயுதவரிசைகளும், உயர்ந்தபருத்த இரத்நங்கள்வைத்திழைத்த ஆபரணங்களும், பெருத்த வாயிலுள்ள வக்கிரதந்தங்களும், ஆகிய இவைகளெல்லாம் அதிகப்பிரகாசமுள்ள சூரியர்களையும் சந்திரர்களையும் போலச் சோபிக்க, இவைகளுக்கு மத்தியிலுள்ள இருளைப்போல இராக்ஷசச்சேனைகளு நெருங்கிவந்தன. இராட்சசர்கள் பிடித்துக்கொண்டு வந்த விருதுக்கொடிகள் கூட்டமிட்டுக் கொழுந்துவிட்டு வளர்ந்ததுபோல ஆகாசத்தைப்போய் முட்டி, இடிகளின் சமூகங்களோடுகூடின மேகஜாலங்களையெல்லாம் துரத்திவிட்டன. அந்த ராக்ஷசர்கள் பூமி குழியும்படி காலடிகள்வைக்கு மிடங்களிலெல்லா முன்னேறிய ரத்தம் கொப்பளித்துப் புறப்பட்டு நிறைந்தது. உலோகங்களை மூடிக்கொண்டு பிரமாண்ட வரையினும் தூளிசென்று அண்டங்களைச் சிருஷ்டித்தவனான பிரம்மதேவனுடைய கண்களையு மறைத்துவிட்டது.

ஆனைகளாகிய பெரியமலைகளில் நின்று மொழுகிவருகின்ற மதஜலமென்னும் பெரியநதிகள் குதிரைகளின் வாய்நுரைநீரோடு கலந்து மரங்களையும், மலைகளையு மடித்துக்கொண்டு வேகமாய்ப்போய் பெருஞ்சமுத்திரத்திற் சங்கமமாயின. மிகுந்த கோபத்தால் மடித்தவாயையும், ஒளிபொருந்திய கோரதந்தங்களையுமுடைய இராட்சசவீரர்கள் தமது வலக்கரத்திற் பிடித்த ஆயுதங்களை இடசாரி வலசாரியாகச் சுழற்றிக் கொக்கரிக்கும்போது அவ்வாயுதங்களினின்றும் எழுகின்ற அக்கினிப்பொறிகளும் ஓசையும் ஆகாயத்திற்சென்று பிரகாசித்தொலிப்ப தெந்தன்மைத்தெனில், மின்னி இடியிடித்தலையொத்திருந்தன. இராவணனால் யுத்தத்திற்கு அனுப்புவிக்கப்பட்ட நாலு வெள்ளஞ்சேனைகளும் இலங்கைக்கோட்டை வாசலிலிருந்துபுறப்படுகிறதைப்

பார்க்கும்போது, அகஸ்தியமகாமுனிவர் ஆதியிற் சமுத்திர முழுவதையும் பானம்பண்ணியிருந்ததைப் பானம்பண்ணின கிரமப்படியே மறுபடியும் உமிழ்வதைப்போ லிருந்தது. சங்கு - பேரிகை — எக்காளம் - தாளம் — ஆகியவிவைகளின் தொனியும், வீரர்களுடைய சிங்கநாதமும், ஹுங்கார ஓசையும், யானைகளுடைய முழக்கமும், குதிரைகளின்கனைப்பும், பொன்மயமாகிய தேர்களினுடைய அதிர்ச்சியும், உலோகங்களையெல்லாம் விழுங்குவதைப்போல விழுங்கிவிட்டன.

இந்தப்பிரகாரமாக ராட்சசப் பெருஞ்சேனைகள் ரணக்களத்திற் சேர்ந்தன. அவர்களை வானரவீரர்களெதிர்த்து, அவர்களால் ஏவப்பட்ட இடிக்குச்சமமான ஆயுதங்களையும் பாணவருஷங்களையும் தடுத்து, அவர்களோடு ஒருமிக்க ஆர்ப்பரித்தார்கள். கோபித்தார்கள். அதட்டினார்கள். அலக்கழித்தார்கள். மலைகளைக் கோடானுகோடிக்குமேற் கோடியுமாக எறிய, மலையொன்றுக்குநால்வருமைவருமாக இராக்ஷசர்கள் மாண்டார்கள். போர்செய்துகொண்டிருந்த யானைகளும், பாய்கின்ற குதிரைகளும், பொன்மயமாகிய தேர்களும், அழிந்துவிழுந்தன. இராட்சசர்கள் பிரயோகித்த மழு - சூலம் - சக்கரம் — கலப்பை — வாள் - வளைதடி - சட்டி - அங்குசம் - கோடரி — தண்டாயுதம் — நாராசம் - வேல் — எறிதடி - அம்பு — இவைமுதலிய ஆயுதங்கள்பட்டு வானரக்கூட்டங்கள் மடிந்துபோயின. தோமரம் — இருப்புலக்கை — முசுண்டி - ஆப்புகள் — பிண்டிபாலம் — [illegible] — இருப்புமுள் — குறுந்தடி — கவண்கல் - இவைகளெல்லாம் வானரங்களேவின மலைகளொறுக்கி, அவர்களையுங்கொன்று ரணக்களத்தில் வீழ்த்தின. பிரகாசிக்கின்ற கூர்மையான ஆயுதங்களை இராட்சசர்கள் முறைமுறையாகவெய்வதாலும், பிணப்பெருமலைகள் அங்கங்கே தடைபட்டுக் கிடக்கிறபடியாலும், அழிந்த ரத்தவெள்ளங்கள் நான்கு பக்கங்களிலும் மோதுகிறபடியாலும், இராட்சசர்கள் மீது வானரங்கள் எதிர்த்துப்போகமாட்டவில்லை. இராட்சசர்களும் வானரங்களின்பேரில் எதிர்கொண்டுவரக்கூடவில்லை.

அங்கு யுத்தஞ்செய்துகொண்டிருந்த வானரர்களெல்லாம் பூர்வஜென்மம் தேவர்களானபடியால், தேவலோகமடைந்தபிறகு தேவர்களுடனே சேர்ந்து திரிந்தார்கள். அவர்களை ஆலிங்கனம் செய்யவேண்டுமென்றுமோகங்கொண்டு வருத்தமுற்றிருந்த அரம்பாஸ்திரீகளெல்லாம் அவர்களைக்கண்டு ஆசைகொண்டு, தங்களாவியொன்றும்படித்தழுவி சிலநாள் பிரிந்திருந்த துக்கந்தீர்ந்து இன்பமடைந்தார்கள். ஒளிப்பானமாயமும், வஞ்சனையும், களவும், தங்களுக்கெப்போதுங் கடமையுள்ளவைகளாகக் கொண்டு; அன்புமுதலான தருமமார்க்கத்தை மேற்கொள்ளாமலிருந்த இராட்சசர்களை ஞானஸ்வரூபராகிய இலட்சுமணப் பெருமானுடைய பாணங்கள் தேவர்களாகச்செய்ததெனில், அப்பாணங்களைக்காட்டினும் பவித்திரமானவைகள் வேறுஞ்சிலவுண்டென்றுசொல்வது தகுதியாமோ? இயமன் தன்றூதுவர்களுடனே

அந்தரமார்க்கத்தில்வந்து நின்றான். மூன்றாம்பிறைபோன்றவளைந்தபற்களையுடைய இராட்சசர்களும், யானைகளும், தேர்களும், ஆகிய விவற்றின்மீது ஆகாசமுமிடமில்லை யென்றுசொல்லும்படி இலட்சுமணர் தம்முடைய பாணங்களைப் பிரயோகித்து, நான்குதிசைகளிலும் அந்தந்தத்திசைகளிலிருக்கிறதுபோலவே திரிந்துகொண்டிருந்தார்.

ஆஞ்சநேயர் தண்டாயுதத்தால் அகம்பனையும் அவன் சேனைகளையு நாசமாக்குதல்.

கவி.

கும்பகன்னனுண்டிட்டது வயிரவான்குன்றின்
வெம்புவெஞ்சுடர்விரிப்பது தேவரையேருள்
தும்பையின்றலைதுரந்தது சுடர்மணித்தண்டோன்
நிம்பர்ஞாலத்தைநெளிப்பது மாருதியெடுத்தான்

இப்படிப்பட்ட சமயத்தில் வாயுபுத்திரராகிய ஆஞ்சநேயர் கும்பகர்ணனாலே அவ்விடத்திற் போட்டு விடப்பட்டதும், ஆகாசத்தை அளாவிய வச்சிரமலையைப்போலப் பிரகாசிக்கின்றதும், தேவர்கள் தலையிலணிந்திருந்த தும்பைமாலையையறுத்து அவர்களைத் தோற்கடித்துத் துரத்தினதும், பூமியைப் பாரத்தால்நெளியச்செய்வதும், இரத்தினமயமாய்ப் பிரகாசிக்கின்றதுமான ஒரு தண்டாயுதத்தைக் கையிலெடுத்து; தேவர்களெல்லாருங்காற்றோ? அதுவல்ல: நெருப்போ? அதுவுமல்ல: என்று நினைக்கும்படி. அதிவேகமாய் மிருந்த கொலைத்தொழிலைச் செய்யும்படியான ஸ்வபாவத்துடனே, கோபமே ஒருருவு கொண்டதுபோல ஒருவருமெதிர்க்கக்கூடாத பெரிய ஆகாரத்துடன் இயமனே இந்தரணக்களத்திற் போர்செய்யவந்தானென்னும்படி இராட்சசர்களைக்கொன்றார். சகலசாஸ்திரங்களுக்குந் தலைவரான அவ்வாஞ்சநேயர் கொடுங்கண்ணையுடையவைகளான மதயானைகளின்மேலும், வேகமாயோடுகின்ற குதிரைகளின்மேலும், வீரர்கள் செலுத்தும் தேர்களின்மேலும், கூட்டமாகிய ராட்சசர்களுடைய தேகங்களின்மேலும், அவர்களுடைய தலைகளின் மேலும் நான்குவேதங்களாலும் பிரதிபாதிக்கப்படுகின்ற செந்தாமரைக்கண்ணையுடையசர்வாந்தரியாமியாகிய திரிவிக்கிரமனிவனேயென்று சொல்லும்படியாக இரணக்களமெல்லாஞ் சுற்றித்திரிந்தார்.

தம்மேலெதிர்த்துவந்தவர்களையும், தமதுகையிற் கிடைத்தவர்களையும், கண்களில் அக்கினிப்பொறி பறக்கும்படி விழித்தெதிர்த்து; அந்தப்போர்க்களமெல்லாஞ் சேறாகும்படி நசுக்கி அவர்களுருவங்களையும் அழித்துவிட்டார். இவருடைய விக்கிரமவடிவத்தைக்கண்ட தேவர்களெல்லாம் திரிலோகங்களையுமுன்மூன்றடியாலளந்த அந்த சாக்ஷாத்காரஸ்வரூபம் இவர்தானேயென்று சந்தேகித்தார்கள். மதத்தயானைகளினுடைய மஸ்தகங்களைப்பிளந்து அவைகளி லுண்டாகிய முத்துக்கள் தமது திருமேனியிற்படியவும், மேகங்கள் சஞ்சரிக்கின்ற ஆகாசத்தைப்போய்த்திருமேனிமுட்டவும் விளங்கியஆஞ்சநேயர்

யுகாந்தகாலஞ் சம்பவித்தபோது சண்டமாருத மடிக்க அதனால் நக்ஷத்திரங்களெல்லாம் உதிர்ந்து தொத்திக்கொண்டு பிரகாசிக்கின்ற மேருமலையானது சூரியர்களால் சூழப்பட்டிருக்கின்றதை யொத்திருந்தார். பூமியையும் ஆகாசத்தையும் இடித்துவிட்டாரென்று யாவரு நினைக்கும்படியாகத் தமது பாதங்களாற் பூமியை ஒருதை புதைத்துக்கிளம்பி, கடல்போன்றிருக்கின்ற ராக்ஷசப்பெருஞ்சேனையைத் தூளாய்ப்போகும்படிச்செய்து, முன்பெடுத்த கும்பகர்ணனுடைய பெருந்தண்டாயுதத்தைத் தமது வல்லமையுடன் கையிற்பிடித்து, யானைகள் – தேர்கள் – குதிரைகள் - முதலாகிய யாவையும் குழம்பிப்போகும்படி யடித்து, அவற்றிலேறிவந்தவர்களுயிரைப்போக்கி வீரகர்ச்சனைசெய்து தமது மனக்கோபத்தை மாற்றிக்கொண்டார்.

ஆறாயிரம் யானைகளை ஒருநாழிகைப்பொழுதுக்குள்ளாக இரத்தவெள்ளமா யோடும்படி அரைத்து, அநேகமாயிரஞ்சிங்கங்களைப்போலெதிர்த்துவந்த வெற்றிபெற்ற ராக்ஷசவீரர்களையெல்லாம் காலினாலெற்றி, ஒருவருமிவ்வளவுபலமுள்ளவரிவரென்று தம்மையறியவொட்டாமல் கொல்லுகிறதற்குப் புறப்பட்ட திக்கஜம்போல அந்தரணக்களமெங்குந் திரிந்துகொண்டிருந்தார், விருஷபத்தைப்போல வருகின்ற தேர்வீரர்களையும், சிம்மத்தைப்போலவருகின்ற குதிரைவீரர்களையும், மேகம்போலக் கரியநிறத்தை யுடையவர்களையும், மழையைப்போலக் குமுறுகின்ற கர்ஜிதத்தையுடையவர்களையும், அநேகவிதமான யுத்தசாஸ்திரசமர்த்தர்களையும், எங்குஞ்செயம்பெற்றகீர்த்தியுடையவர்களை யுத்தஞ்செய்யவந்து தம்மைச் சூழ்ந்தவர்களையும், தம்மோடெதிர்த்துவந்த ராட்சசவீரர்களையும், வீரசுவர்க்கம் அடையும்படியாகக் கதையைச் சுழற்றி அடித்து நசுக்கிவிட்டார். சுக்கிரீவமகாராஜன் – நீலன் – அங்கதப்பெருமான் – சாம்பவன் – பனசன் – இவர்முதலாகச் சொல்லப்பட்ட வானரவீரர்களெல்லா மிகுந்த கோபங்கொண்டவர்களாகிப் போர்க்களத்திற் புகுந்து, ஒருவரையொருவர் காணாதவர்களாகி இராட்சசப்பெருங்கடலில் மறைந்துநின்றார்கள்.

இப்படி பெருந்தொகுப்பாகக்கூடியிருக்கின்ற இராக்ஷசப்பெருவெள்ளத்தை அப்படியப்படியே வாரிவாரி யெறிந்து நகாயுதத்தினாலே இரணியாசுரனுடைய மார்பைப் பிளந்துகொல்ல நரசிம்ஹமூர்த்தியானவர் நடந்ததுபோல மிகுந்த ராக்ஷசசேனைக்கடலில் நுழைந்து தமது தண்டாயுதத்தினாலே அவர்களையெல்லாம் கொன்று திரிகின்ற வாயுபுத்திரனானவர், வீரசம்பத்தை யுடையவனான அகம்பனென்னுமிராக்ஷசவீரனை யெதிர்கொண்டார். முன்னால் தாருகாசுரனென்னும் பெயரையுடையவனாகி, வில்வீரனான சுப்பிரமணியரோடெதிர்த்து அவருடையவெற்றிவேலால் மாண்டுபோய் இப்போது அகம்பனென்னும் பெயரையுடையவனாகப் பிறந்த அந்த ராக்ஷசன் இவரைப்பார்த்து, மலையையொத்த ஆயிரங்குதிரைகள்பூண்டு மனோவேகத்தினுமதி வேகமாய்ப் போகத்தக்க பெரியதேரையும் வில்லையு முடையவனாய்வந்து,

முப்பத்துமுக்கோடிதேவர்களுக்கும் தலைவனாகிய தேவேந்திரனும், சத்துருக்களைச் சம்ஹரிக்கின்ற சக்கராயுததாரியாகிய ஸ்ரீவிஷ்ணுமூர்த்தியும், முப்புரங்களை எரித்தருளிய உருத்திரமூர்த்தியுந்தவிர மற்றவர்களிந்தக் குரங்குடனே யுத்தஞ்செய்யக் கற்றார்களேயானால் யாவனுக்கிலையாவார்கள். ஆகையால் இந்தக்குரங்கை நான் தப்பிக்காமற்போவேனேயானால் இந்தச் சப்தசமுத்திரங்கள்சூழ்ந்த பூலோகத்திலுள்ள இராக்ஷசர்களென்னும் பெயரையுடையவர்களையெல்லாம் இக்குரங்கே மாய்த்துவிடும். என்று மாமிசமுள்ளதேகங்களில் தடையிலாது ஊடுருவிச்செல்லும்படியாகிய அஸ்திரவருஷங்களைப் பொழிந்துகொண்டு அதிகோபத்துடனேயெதிர்த்தான்.

அப்போது நட்சத்திர மண்டலமளவும்உயர்ந்திருக்கின்ற பலம்பொருந்தியதோள்களையுடைய ஆஞ்சநேயரும் வேகமாக எதிர்த்துவந்தனர். இரதகஜதுரகபதாதிகளு நெருங்கிப் பகைத்துரித்த யுகாந்தகாலமேகமும், ஊழித்தீயும், சண்டமாருதமும்பொங்கிவந்த பிரளயகாலம்போல வாரிட்டிருக்கிய வீரக்கழலையுடையஅகம்பனுநெருங்கிவந்தனன். உடனேவச்சிரமலையைப்போன்ற திருத்தோள்களையுடைய தாம் அத்தண்டாயுதத்தைக் கிறுகிறென்று சுழற்றி; அவனாலெறியப்பட்டவைகளும், வீசப்பட்டவைகளும், பிரயோகிக்கப்பட்டவைகளும், எய்யப்பட்டவைகளும், சொரியப்பட்டவைகளுமாகிய வெல்லாவாயுதங்களும் க்ரமக்கிரமமாக முறிபட்டுச் சிதறிப்போகும்படித்தூள் தூளாக்கி; தேவர்கள் சந்தோஷிக்கவும்,இராட்சசர்கள் வதைபுண்ணவும், சுற்றிருக்கிற தண்டாயுத வித்தையைக்காட்டினார். உகாந்தகாலச் சண்டமாருதத்தினும் அசையமாட்டாத மேருமலையையொத்த ஆஞ்சநேயர் அகம்பன் பார்த்துக்கொண்டிருக்கும்போதே பத்துக்கோடி யானைகளையும், பத்துக்கோடி குதிரைகளையும், எண்ணற்றதேர்களையும், மூன்றாம்பிறையையொத்த வக்கிரதந்தங்களையுடைய அளவற்ற ராட்சசக்கூட்டங்களையும்,பொடிப்பொடியாய்நொறுக்கிக் கொன்றுவிட்டார். அப்போது அகம்பன் இராட்சசர்கள் மாண்டுகிடக்கின்ற படுகளத்தைப்பார்த்து, வாயிலும் கண்ணிலும் அக்கினியுடன் புகையைக்கக்கிக்கொண்டும், விருதுக்கொடி கட்டியிருக்கின்ற தேரைச் செலுத்திக்கொண்டும், பாணவருஷங்களை மழையினுமுன்னுபன்மடங்காய்ப் பிரயோகித்துக்கொண்டும், அதிவேகமாய்வந்து மலையைப்போலமோதி மேகத்தைப்போலக் கர்ச்சித்தான்.

இப்படி வந்த அகம்பனானவன் இடியைப்போன்றவைகளும், நெருப்புப்பொறிகளைக்கக்குகின்றவைகளும், இரண்டுபக்கத்திலும் கழுகைப்போலச்சிறகுகளையுடையவைகளும், தேவர்களுடையமார்பைப் பிளந்தவைகளும், பொன்வடிம்பு கட்டினவைகளும், நீண்டகணுக்களை யுடையவைகளுமான பாணங்களை அநுமானுடைய தோளின்மேலும், மார்பின்மேலும், அபரிமிதமாகச் சொரிந்தனன். அம்மார்பிலும், தோளிலும் தைத்த பாணவாய்களின்வழியாக இரத்ததாரைகள் வடியத் தேகமெல்லா நடுக்கங்கொண்டு

நிற்கின்ற வாயுபுத்திரனானவர் — அந்தவருத்தம் நீங்குவதற்கு முன்பாக அகம்பனுடைய தேரிற்பூட்டி யிழுக்கப்பட்ட கழுதைகளையும், அந்தத் தேரின் தட்டையும், சின்னபின்னப்படுத்தி; சாரதியையு மாண்டுவிழும்படித்தமது கைத்தண்டத்தினால் மோதிப்பறைந்தார். அதன்பின்னரும்மேல் செய்தவைத்தது போலுந் தேகத்தை யுடையவனான அந்த அகம்பன்பார்த்து, வில்லினாலிவனை ஜெயிக்கிறது அருமையென்று தனது மல்லுயுத்தப் பழக்கங்கொண்ட தோள்வல்லமையினாலே தெய்வத்தச்சனுடைய சிற்பவேலையால் செய்ததான ஒரு பெருந் தண்டத்தைக் கையிலெடுத்துக்கொண்டு கடலைப்போலக் கர்ச்சித்து, இன்றைக்கிவனை வென்றொட்டிலேற்றி இலங்காதிபதியான ராவணேஸ்வரனை வெற்றியாளனாக்கி அந்த இரண்டுமனிதர்களையும் வெறியவர்களாக்கித் தேவர்களுக்குப் பெருந்துக்கத்தை யுண்டாக்கிவிடுவேனென்று மாருதியைக்கிட்டிநெருங்கினான்.

அவ்விருவரும் கல்லுருவாவென்று கர்ச்சித்தவராய் ஒருவரையொருவர் முட்டித்தாக்கினார்கள். இடசாரி வலசாரியாகத் திரிந்தார்கள். ஒவ்வொருவரும் வீரகர்ச்சனைசெய்தார்கள். அவரவர் தங்கள்தங்கள் புஜங்களைத்தட்டினார்கள். ஒருவரையொருவர் இடித்தார்கள். ஒருவரையொருவர் முட்டினார்கள். ஒருவரையொருவர் [illegible]தள்ளினார்கள். ஒருவரையொருவர் மேலேதூக்கிக் கிறுகிறென்றுசுற்றினார்கள். மறுபடியுங்கிட்டி நெருங்கினார்கள். பின்னுநீங்கிச் சற்றே ஆயாசமுற்றார்கள். ஒருவரையொருவர்முட்டி விலக்கினார்கள். ஒருவரையொருவர்கட்டித் தழுவினார்கள். ஒருவர்மேலொருவர்பாய்ந்தார்கள். பிடித்துத் தரையிற்குதித்து ஒருவரையொருவர் [illegible]னார்கள். மறுபடியும் ஒருவரையொருவரோங்கி அறைந்தார்கள். அ[illegible]றையை ஒருவருக்கொருவர் தங்கள்மேல்படாதபடி காத்துக்கொண்டார்கள். ஒருவரையொருவர் கொல்லமுடியாமல் ஓட்டினின்றார்கள். ஒருவரையொருவர் தூக்கி வட்டமாகச்சுற்றி முட்டினார்கள். இப்படியிருவரும் மல்யுத்தஞ்செய்யும்போது கருதிறத்துடனேபகைகொண்ட திறத்தையுடையவனான அகம்பனுடைய வச்சிரத்தையொத்த மார்பில் பொய்யுடன் பகைகொண்டுநின்ற[illegible]தர்மகுணவானான ஆஞ்சநேயர் பாய்ந்து,தண்டத்தினால் மோதியடித்த[illegible] அப்போதுதுஷ்டனான அகம்பன் அவ்வடியைத்தன் தண்டத்தினா[illegible]டி விலக்கினான். அப்படி விலக்கினமாத்திரத்தில் அவனுடைய கைநழுவி தண்டாயுதமும் பொடிப்பொடியாய்ப் போர்க்களத்தில் விழுந்துவிட்டது.

இப்படி வஜ்ஜிரைபோல் தண்டாயுதமுமிற்று வீழ்ந்தவுடனே கடலைப்போலக் கலங்கிமிஞ்சின தேகத்துடனே நின்ற அந்த அகம்பன் பலம்பொருந்திய தன் இடதுகையாலோங்கி அநுமானுடைய வெற்றிமாலையணிந்த திருமார்பில் அடித்தான். அந்த அடியானது வச்சிரமலைமேல் விழுந்த இடியைப்போலிருந்தது. அப்போது ஆஞ்சநேயர் தமதுகையில் இடிக்குச்சமமான தண்டத்தைப்பிடித்திருந்தும்,அதனாலே யவனையடித்தால் அதர்மமாகுமே;

வெறுங்கையாய் நிற்கின்றானே: என்று உதட்டைமடித்துத் தாமும் அவனைப் போலவே இடதுகையால் அகம்பனுடையமார்பிலே குத்தினார். குத்தினமாத்திரமே முன்குடித்திருந்ததைக்கக்குகிறதுபோல இரத்தத்தைக் குபுகுபென்று பெருவெள்ளமாய்க்கக்கினான்.

கவி.

மீட்டுமக்கையால்வீசிச் செவித்தலத்தெற்றிவீழ்த்தான்
கூட்டினனுயிரைவிண்ணோர் குழாத்திடையார்க்கக்கூட்டம்
காட்டில்வாழ்விலங்குமாக்கள் கோளரிகண்டவென்ன
ஈட்டுமுற்றெதிர்ந்தவெல்லா மிரிந்தனதிசைகளெங்கும்.

அம்மாத்திரத்தில் சமதாஞ்சனேயர் அவ்விடதுகையாலேயேஅகம்பன் கன்னத்திலேயறைந்துகீழேதள்ளி, அவனுயிரை வீரசுவர்க்கத்தில்வசிக்கும் தேவர்களுடனே சேர்த்துவிட்டார். மற்றக்கூட்டமாய்வந்த ராக்ஷசர்கள் காட்டில்வாழ்கின்ற மிருகங்களும், யானைகளும், சிங்கத்தைக் கண்ட தன்மையைப்போலச் சின்னபின்னப்பட்டு, திக்குத்திக்குகளாக ஓட்டம் பிடித்தார்கள். இப்படி யொருபக்கத்தில் அநுமானகையால் அகம்பனுமடிந்து மண்மேல் விழுந்து விட்டான். அவனுடன் வந்த ராக்ஷசசேனைகளு மாண்டுபோனார்கள். வானரவீரர்களெல்லாம் திரும்பிவிட்டார்கள். மற்றொருபக்கத்தில் இளையபெருமாள் வருஷிக்கின்ற அம்புகளால் சிங்கமுதலியவைகள் கட்டியிழுக்கின்ற கொடிகள்கட்டின தேர்களும், துதிக்கைகளை யுடையயானைகளும், குதிரைகளு மாண்டுபோயின.

ஆஞ்சனேயர் அவ்வர்த்தராத்திரியில் ஒருவரையுங்காணாது வருந்தி இலக்ஷ்மணரைத் தேடிக்கொண்டு வழியிலுள்ள காட்சிகளைக்கண் டவிடஞ் செல்லுதல்.

கவி.

ஆர்க்கின்றதூஉங்கேளா னிலக்குவனைசனிபெற்றதைப்
பேர்க்கின்றதிலைமினிணின் பேயொலிகேளான்வீரர்
யார்க்கின்னலுற்றதென்று உணர்ந்திலன்சிலைப்போரில்லைப்
போர்க்குன்றமனையதோள் மிளையதோர்பொருமலுற்றான்.

மகாமேருகிரிமலைக்குச் சமானமாய் யுத்தத்தில் வல்லமைபெற்ற திருத்தோள்களையுடைய ஆஞ்சனேயர் - யுத்தரங்கத்தில் வானரவீரர்கள் ஆரவாரிக்கின்ற சப்தத்தையுங் கேட்டாரில்லை, இடிபோற்றையும் பழிக்கும்படிப் பேரொலியைப்போலு முழக்குகின்ற இலக்ஷ்மணரது வில்லின்றொனியுங்கேட்டாரில்லை. எந்தவெந்த வீரர்கட்கு என்னவென்ன துன்பம்வந்ததோ அதையுமறிந்தாரில்லை. இவ்வண்ணம் நடந்ததென்று தமக்கு யாதொருவரும்வந்து சொல்வாருமில்லை. ஆனபடியால், மாருதிசெய்வார் தனக்குள்ளடங்காத பெருங்கவலைகொண்டு துக்கமுற்றனர். விசாலித்திருக்கின்ற ராக்ஷசசேனைகள் தெற்குமேற்காகக் கடலைப்போலிருக்க, ஏழுயோசனைக்கப்பால் அங்கதகுமாரன் போனான். அவனுக்கப்பால் பதினொருயோசனையில்

சுக்கிரீவமகாராஜன் போயிருந்தார். அதற்கப்பால் இருபத்தெட்டுயோசனை தூரத்தில் ஸ்ரீராமாநுஜர் எழுந்தருளியிருந்தார். வானரவீரர்க ளெல்லா நான்குயோசனை தூரமும் ஐந்துயோசனை தூரமுமாக யுத்தஞ்செய்துகொண்டு போயிருந்தார்கள். மற்றவானரசேனைகள் இரண்டுமூன்று காதத்திற்கப்பால் நீர்மேற்பாசிபோல இராட்சசசேனைகளுக் கிடையிடையே கூடிநின்றார்கள்.

இப்படியிருக்க வாயுபுத்திரர் இளையபெருமாள் எங்கேயெழுந்தருளியிருக்கின்றாரோ அவ்விடத்திற்கு வேகமாய்ப் போகவேண்டுமென்னும் ஒருவருத்தமானது மனதையெழுப்ப, அதனாலவர் ஊழிக்காற்றைப்போற் போகும்போது தேகங் களைத்துவிடவும் அந்தக்களையை யாற்றிக்கொண்டுபோகின்றவர் தமது கண்ணில் அநேகவிதமான குறிகள்படக்கண்டார். அவை யாவையெனில்—அறுந்ததலைகளையும், பீலிப்பிச்சங்களையும், பூமாலைகளையும், இரத்தங்களையும், முத்துமாலைகளையும், வாரிவீசிக்கொண்டு, மின்களைப்போல அங்குமிங்கும் ஆயுதங்கள் பிரகாசிக்க வெளுத்தருண்டனவாகிய நுரைகளையுடைய இரத்தவாறுகளைக் கண்டார். திக்குத்திக்குகளாகப் போய்ப் போரிடுகின்ற இராக்ஷசர்கள்மீது பிரயோகித்த அம்புகள் அவர்கள் தலைகளையறுத்து ஆகாசத்தில்வீச, அவைகள் அண்டப்பித்திகையில்முட்டிப் பெருங்கோஷமிட்டுக்கொண்டு லோகமெல்லா மதிரும்படியாக ஊழிக்காலத்திற் பொழிகின்ற சிலாவருஷம்போல விழுகின்றவைகளைக் கண்டார்.

இன்னும்பெரிய வெல்லயுத்தைக் கையிற் பிடித்திருக்கின்ற இராக்ஷசர்களேவின ஆயுதங்கள் இலக்ஷ்மணர்விட்ட அம்புகளால் துண்டுதுண்டாகி அக்கினிப்பொறியுடன் நக்ஷத்திரங்கள் ஆகாசத்திலிருந்து இருள்கெடும்படி விழுவதுபோலவும், காசுகத்திற்பற்றின நெருப்பைப்போலவும், நாலுபக்கங்களிலும் சுடுகின்றதைக் கண்டார். தயாளுவான இலக்ஷ்மணப்பெருமானுடைய பாணங்கள் ஆகாசமுழுவதும் ஜொலித்துக்கொண்டு, அக்கினிகளைக் கக்கித் தேவர்களெல்லாம் பார்க்கும்படியாக இருளைத்துரத்தி மயானத்தில் நிர்த்தம்பண்ணுகின்ற எட்டுத்தோள்களையுடைய சாம்பசிவமூர்த்தியினது சிவந்த சடைக்கற்றையைப்போலப் பிரகாசிக்கின்றதைக் கண்டார். கொள்ளியிட்டுக்கொளுத்தப்பட்ட நெருப்பைப்போல இராக்ஷசர்களுடைய மலைபோன்ற தேகத்திலின்றும் இரத்தம்பாய, கவந்தங்கள் கூட்டங்கூட்டமாக இராத்திரிகாலத்திற்குக் கைவிளக்கேற்றினாற்போற் கூத்தாடுகின்றதைக் கண்டார்.

இதன்றி பிரம்மகற்ப பரியந்தமெண்ணித்தொகை செய்தாலும் முடியமாட்டாத வெண்ணிக்கையுள்ள வீரர்களில்லாமல் திரிகின்ற யானைகளும், குதிரைகளும், தலைவர்கள்மாண்ட தேர்களும், இரக்கின்ற ராஜனில்லாத நாட்டிலுள்ள குடிகளைப்போலத் திரிகின்றசெயலைக் கண்டார். இதுமன்றித பூமாலையணிந்த திருமார்பையுடைய இளையபெருமாள் பலப்பொருந்திய அஸ்திரவருஷத்தை மேகத்தைக் காட்டிலும் மூன்றுபங்கு அதிகமாகப்

பிரயோகித்து யுத்தஞ்செய்ய, அழிந்துமாண்ட ராக்ஷசர்களுடைய தேகமலைகளையும், இரத்தக்கடல்களையும், முறிந்துகிடக்கின்ற ஆயுதக்காட்டையும் கண்டார். ஊழிகாலச் சண்டமாருதம்போல அதிவேகமாய் இலக்ஷுமணரைத் தேடிக்கொண்டு போகின்ற அஞ்சநேயர் அவ்விரத்தக் கடலையெல்லாந் தாண்டினபோது, பிரம்ஹாண்டத்தையும் கிழித்துவிட்ட தென்னத்தக்க நூர் வில்லின் நாணோசையைக்கேட்டு இலக்ஷுமண ரிருக்கின்ற இடத்தைக்கண்டுபிடித்தோமென்னுஞ் சந்தோஷத்தினாலே யுகாந்தகாலத்துப் பெரும்புறக்கடலின் கோஷத்தினுமிரண்டுபங் கதிகமாகக் கர்ச்சித்தார்.

இளையபெருமாள் தம்மைக்கண்டாரவாரித்த ஆஞ்சனேயரைக் கட்டித்தழுவி வானரவீரர்களெங்கேயென வினவல்.

கவி.

ஆர்த்தபேரமலைகோளா வனுமனைஞமனெல்லார்
வார்த்தையுங்கேட்கலாகு மென்றகமகிழ்ந்தவன்னல்
பார்ப்பதன்முன்னம்வந்து வணங்கினன்விசயப்பாவை
யார்த்தனையிளையவீரன் றழுவினனினையசொன்னான்.

இவ்வண்ணம் ஆர்ப்பரித்துக்கொண்டு அநுமானனவர் சமீபத்தில் வந்தமாத்திரத்தில் இலக்ஷுமணரானவர் சரிசரி அநுமார்வந்துவிட்டார். இனி வானரவீரர்களினது க்ஷேமசமாச்சாரங்களை யெல்லாங்கேட்டுத் தெரிந்துகொள்ளலாமென்று சந்தோஷித்து அவர் வருந்திசையைத் திரும்பிப்பார்ப்பதற்குமுன்னமே அதிசீக்கிரமாகவந்து தமது திருவடிக்குத்தீர்க்க தெண்டன்சமர்ப்பித்தார். அப்படிதெண்டன் சமர்ப்பித்த விசயலக்ஷுமியின் காமுகராகிய அநுமாரை இளையபெருமாள் கட்டித்தழுவி, ஐயா அநுமானே! நம்முடைய வானரசேனையெல்லாமெங்கே? சூரியகுமாரனுசுக்கிரீவமகாராஜன்நம்மைப்பிரிந்த விதமென்ன? அங்கதகுமார னெங்கேயிருக்கிறான்? மிகுந்த விருளாயிருக்கிறபடியால் இந்த ராக்ஷசச்சேனைக்கடலில் நடந்ததொன்றும் எனக்குத்தெரியவில்லை. அதனைச் சொல்லக்கடவீரென்றுவினவ அஞ்சனைகுமாரர்தமது சிரசிற் கையைக்குவித்துக்கொண்டு நின்று, ஸ்வாமி இராமாநுஜரே! அங்கங்கேபோன வீரர்கள்போய்ச்சேர்ந்த விதமும், அவர்கள் யுத்தஞ்செய்து பெற்றஜெயாபஜெயமும் அடியேனுக்குத் தெரியாது. நடந்தகாரியங்கள் போனவீரர்கள் வந்தால்தான்தெரியும். என்று சமுத்திரத்தையும் ஐந்திர வியாகரணக்கடலையுந் தாண்டின ஆஞ்சநேயர் விண்ணப்பம்பண்ணிப் பின்னுமிலட்சுமணரைப்பார்த்துச் சொல்லுகின்றார்.

இலட்சுமணரை ஆஞ்சனேயர் பாசுபதாஸ்திரம் பிரயோகித்து இருளைத் தூரத்தும்படிவேண்ட அப்படியே பாசுபதாஸ்திரம் பிரயோகித் திருளைவிலக்கினகாலையில் சிதறிய வானரவீரர்களெல்லாம் இலக்ஷுமணரை யடைதல்.

கவி.

மந்திரமுனதாலைய வுணர்வுறுமாலைத்தசிந்துன்
சிந்தையினுணர்ந்துசெய்யற் பாற்றெனிற்செய்திதெவ்வர்

தந்திரமிதனைத்தெய்வப் படையினாற்சமைப்பினல்லால்
எந்தைநின்னடியர்யாரு மெய்தலர்நின்னையென்றான்.

முக்கணன்படையைமூட்டி விடுதலுமூங்கிற்காட்டில்
புக்கதோருழித்தீயிற் புறத்திறேறொருவும்போகா
தக்கணத்தெரிந்துவீழ்ந்த தரக்கர்தஞ்சேனையாழித்
திக்கெலாமிருளுந்தீர்ந்த தேவருமயக்கந்தீர்ந்தார்.

ஸ்வாமி! ஒரு உபாயமிருக்கின்றது. இது மனமயக்கத்தைத் தரத்தக்க இராத்திரிகாலமானதால் நம்முடைய சேனைகளைப் பலவாறாகப் பிரிந்துபோகச்செய்தது. இது சத்துருக்களான இராக்ஷசர்களுடைய தந்திரமாக்கும். இதைத்தேவரீர் திருவுளங்கொண்டு தேவதாஸ்திரங்களை விடுத்திருட்டைப்போக்கினாலல்லாமல், தேவரீருடைய அடியார்களான வானரர்கள் தேவர்திருவடியை அடையமாட்டார்களென்று வினயமாகச்சொன்னார். அதைக்கேட்ட இளையபெருமாள் சற்றுயோசித்து, அப்படியா? நல்லது: இதோ நீர்சொன்னபிரகாரஞ் செய்கின்றேனென்று ஆயிரம்பேருடையவரான ஸ்ரீராமமூர்த்தியை நமஸ்கரித்து ஸ்தோத்திரஞ்செய்து, தகுந்தபாணங்களைப் பொறுக்கியெடுத்து அவைகளையும், மேருவில்லியான சாம்பவமூர்த்தியினுடைய பாசுபதாஸ்திரத்தையும், அபிமந்திரித்து மின்னல்போலப் பிரகாசிக்கின்ற கோரதந்தங்களையுடைய இராக்ஷசர்கள்மீது பிரயோகித்தார்.

இப்படி மூன்றுகண்களையுடைய சங்கரன் ஆயுதத்தைப் பிரயோகித்துவிட்டமாத்திரத்தில் அது மூங்கிற்காட்டிற் பற்றிய வடவாமுகாக்கினியைப்போல இராட்சசர்களி லொருவராவது தவறிப்போகாதபடி ஒருக்ஷணத்துக்குள்ளாக அவர்களைத்தேடித்தேடிக் கொன்றுவிட்டது. சமுத்திரஞ்சூழ்ந்த அஷ்டதிக்கிலுள்ள இருளையெல்லா நாசமாக்கிவிட்டது. தேவர்களும்பிரமைநீங்கினார்கள். அப்போது மகோதரனானவன் இந்தலட்சுமணன் தேவாஸ்திரம்பிரயோகஞ் செய்தபடியினாலே நம்மாற்செய்யப்பட்ட பெருமாயைத்தொழிலெல்லா நீங்கிவிட்டதென்று மறைந்துபோய்விட்டான். வானரவீரர்களெல்லாம் வீராட்டகாசஞ் செய்துகொண்டுவந்து இளையபெருமாளுடைய திருவடியைச்சேர்ந்து நிர்த்தம்பண்ணினார்கள். அப்போது தேவதேவரான ஸ்ரீராமபிரானுடைய திருத்தம்பியார் வானரவீரர்களில் ஒருவருக்குமொருதுன்பமில்லாமல்வந்து சேர்ந்ததைக்கண்டு சந்தோஷங்கொண்டு, தமது திருவுளத்திலிருந்த சந்தேகநீக்கினர். காவலாகவந்த வானரசேனைகளெல்லாம் கலிர்கலிரென்று ஆரவாரித்துக்கொண்டுவந்து இளையபெருமாளைச் சேர்ந்ததைக்கண்ட தேவர்கள் புஷ்பமாரியைப் பெய்தார்கள்.

இப்படி ராட்சசசேனைகள் நூறுவெள்ளமு மாண்டு, அகம்பனுமடிந்து, மகோதரனும் ஓடிமறைந்துபோனபடியால்; சிலதூதர்களோடி இலங்காதிபதியான ராவணனையடைந்து நடந்தகாரியங்களைச் சொன்னார்கள். அதைக்கேட்டதசக்கிரீவன் ஒன்றுந்தோன்றாதவனாகி, அப்படியா? நீங்கள்மாத்திரந்தப்பி

வந்திர்களைக்கும். ஆ! ஆ! அனுமனென்னுஞ்சேனையையும், அதைச்சேர்ந்த ரதகஜதுரகபதாதிகளையும், ஒருவில்லையுடையவ னிவ்வளவுசீக்கிரத்தி லெப்படி கொன்றுவிடுவான்? முடியமாட்டாதே: என்றுராவணன் கேட்க, அவர்கள் கொன்றைப்பூமாலையையணிந்த உருத்திரமூர்த்தியினுடைய அஸ்திரத்தினால் முடிந்ததென்றார்கள். அதைக்கேட்டராவணன் ஆச்சரியப்பட்டு, அப்படியா? ஆனால் முடியத்தகும். என்றுசொல்லி மனமெலிந்திருக்கும்போது. மகோதரன் அவனைநோக்கி, ஓ எங்களாண்டவனே! ஸ்ரீராமன் யுத்தத்திற்குவரவில்லை. ஒருமலைமேற்போயிருக்கின்றான். தேவரீர்தம்பியாகிய விபிஷணன் அவ்விராமனுமவன்சேனைகளும்சாப்பிட கந்தமூலபலாதிகள்கொண்டு வரப்போனான். நடந்தகாரியமிதுவாக்குமென்றார்கள். அப்போ திராவணன் மகோதரன் எவ்விடத்திலிருக்கின்றானென்றான், அவன் ஆகாசத்தில் மறைந்துநிற்கின்றானென்றார்கள். அதுகேட்ட தசக்கிரீவன் சற்றுயோசித்து, அடடா! அப்படியாமுடிந்தது? இதுமிகவழகாயிருக்கின்றதென்று சொல்லிச் சிரித்தான்.

இந்திரசித்து மூலயாகஞ்செய்து பிரம்மாஸ்திரந்தொடுக்க வெண்ணி ஆகாயத்தில் மறைதல்.

கவி.

காலமீதெனக் கருதியவிராவணன் காதல்
ஆலமாமர னென்றினையினி னடைந்தான்
மூலவேள்விக்கு வேண்டுவசைலப்படை முறையால்
கூலமெய்திய விராக்கதப்புகார் கொணர்ந்தார்.

அப்போ திராவணபுத்திரனாகிய இந்திரஜித்து இதுதான் தருந்தகாலமென்று ஒரு ஆலமரத்தினிடத்திற்குப்போனான். மூலயாகத்திற்கு வேண்டிய கலப்பைகளைக்கொண்டு அக்கிரமிகளான இராக்ஷசமறையவர்கள் வந்தார்கள். பிறகு யாகஞ்செய்ய யத்தனித்து, தும்பினால் சமித்துகள் சேர்த்து, அக்கினியில் தும்பைப்பூவும் கானெருக்கும் சேர்த்தார்கள். கறுத்தவெள்ளாட்டின் கொம்பும், பல்லும், இரத்தமும், மாமிசமும், விரையாகப்பெய்து, என்னையால் ஓமம்வார்த்தார்கள். அப்போது தூமாக்கினியானது வலஞ்சுழித்துக்கொண்டு மேலெழும்பி நல்ல சூசனையைவிளைத்தது. அநேக நல்லகுறிகளை யுண்டாக்கியது.

கவி.

விசும்புபோயினன் மாயையின்பெருமையான் மேலைப்
பசும்பொனாட்டவர் நாட்டமுமுள்ளமும் படரா
அசும்புவின்னிடை யடங்கினன்முனிவரு மறியார்
தசும்புதன்னொடு கோளொடுகோலமுஞ் சார.

அதுகண்ட இந்திரஜித்தானவன் நம்கள் ஜாதிஸ்வபாவமாய்த் தோன்றுகின்ற கொடுமையையுடையவனும் நமக்கு நன்மைவிளையப்போகிறதென்று

மேலெழும்பி, வானரர்களின் கிரகசாரமும் முடிவுகாலமும் ஒருங்குசேர மாயையின் வல்லமையால் ஆகாசத்திற்போய் சுவர்க்கத்திலுள்ள தேவர்களுடைய பார்வையும் அவர்களுடையமனதும் அறியாதபடி மேகஜாலத்துக்குள் மறைந்தான். இவன்வந்தது முனீஸ்வரர்களும் அறியார்கள். பொன்மயமான கிரகங்களும் நட்சத்திரங்களும் அறியா.

மகோதரனிந்திரனுருக்கொண்டு இலக்ஷுமணாதியரை யெதிர்க்க அவர்கள் இஃதென்னவென ஆலோசித்தல்.

கவி.

அனையனின்றனை வெவ்வழிமகோதர னறிந்தோர்
வினையமென்னினை னிந்திரவேடத்தை மேவித்
துனைவலத்தவை ராவதத்தேருத்தின்மேற் றோன்றி
முனைவர்வானவ ரீவரொடும்போர்செய மூண்டான்.

இந்தப்பிரகாரம் இந்திரஜித்து வந்ததை மகோதரன் தெரிந்துகொண்டு ஒரு சூதுசெய்ய நினைத்து, இந்திரனைப்போல வேஷங்கொண்டு போய் மிகுந்தபலமுள்ள ஐராவதத்தின்மேலேறிக்கொண்டு, முனிவர்களையும் தேவர்களையும் சேர்த்துக்கொண்டு இலக்ஷுமணருடன் சண்டைக்குவந்தான். இவர்களைப் பார்த்தவுடனே வானரர்களிற் சிலர் இவர்களிராக்ஷசர்களுமல்லர். மனிதருமல்லர். [illegible]ருமல்லர். இந்தலோகத்தில் வாழ்கின்ற உயிர்கள் என்னென்னவுருவுகள்கொண்டிருக்கின்றனவோ அவைகளெல்லாம் யுத்தத்திற்குவந்ததோவென்றெண்ணும்படி மாயைகளைச்செய்தான். அக்குரங்கினத்தவர் பயந்து யுத்தகளத்தினின்றும் சிதறியோடினார்கள். சிலர் நான்கு தந்தங்களையும் பால்போலவெள்ளிய நிறமுமுள்ளதான ஐராவதமென்னும்யானையின்மேலேறி வந்தபடியால் அவனிந்திரனேயாகவேண்டும். மற்றவர்களெல்லாம் தேவர்களும் ரிஷிகளுமாகவேண்டும். இவர்களெல்லாம் சண்டைசெய்யவேண்டுமென்று கோபித்து வருவதற்கு நாமென்ன பொல்லாங்குசெய்தோமென்று பயந்தார்கள்.

அப்போது சக்கரத்தையுஞ் சங்கையுநீக்கிக் கைகளில் வில்லையும் அம்பையுங்கொண்ட செந்தாமரைமலர்போன்ற திருக்கண்களுள்ளவரான ஸ்ரீராமமூர்த்திக்குத் திருத்தம்பியாராகிய இளையபெருமாள் அநுமானுடைய முகத்தைப்பார்த்து, ஓ ஆஞ்சநேயனே! இருஷீஸ்வரர்களும், தேவர்களும், நம்மீது எதிர்த்துவரும்படி நாமென்ன பொல்லாங்கு செய்தோம்? அதைச் சீக்கிரமாகயோசித்துச் சொல்லக்கடவையென்று சொல்லினர்.

ஆகாயத்தில் மறைந்துநின்ற இந்திரசித்து இலக்ஷுமணாதியர்மீது பிரம்மாஸ்திரப்பிரயோகஞ்செய்து யாவரையும் மூர்ச்சிப்பித்தல்.

கவி.

இன்னகாலையினிலக்குவன் மேனிமேலெய்தான்
முன்னைநான்முகன்படைக்கல மிடைப்படமுன்னம்

பொன்னின்மால்வரைக் குரீஇயினமொய்த்ததுபோலப்
பன்னலாக்குமல்லன கடர்க்கணைபாய்ந்த,

இப்படி கோடிகோடி ஆருயிர பாணக்கூட்டங்கள் இலக்குமணர் மேனியையெல்லாமூடிச் சுற்றிக்கொள்ளவே வேறொருசெய்கையுஞ்செய்யத் தோற்றாமல் பொறிகலங்கி அறிவடங்க, அவ்வண்ணம் ஆஞ்சநேயருடன் யோசனைசெய்துகொண்டிருக்குஞ்சமயத்தில், ஆகாசத்தில் மேகத்துடன் மறைந்து சமயம் பார்த்துக்கொண்டிருக்கின்ற மாயாரூபனாகிய இந்திரஜித்தானவன் இதுதான்சமயமென்று, தனதுவில்லை வளைத்துப்பிரமதேவனைச்சிந்தித்துப் பிரமாஸ்திரத்தை யெடுத்துப் பாத்தியாசமனாதியும் நைவேத்திய முதலியவற்றை மனசாபக்தியிலே செய்து இமைகொட்டுவதற்குமுன் சந்தித்து விட்டுவிட்டனன். அவ்வஸ்திரமானது மகமேருகிரியின்மேல் குருவிக்கூட்டங்கள் மொய்த்ததைப்போல் அநேக அஸ்திரங்களோடு புறப்பட்டுச் சொல்லொணாத்தக்கதல்ல வென்னும்படி இலக்குமணருடைய திருமேனியின் மீது அழுந்தின. வெற்றிபெற்ற பெரியயானையானது அவ்விடத்தில் வந்து அடங்கினதைப்போல் மூர்ச்சித்துவிட்டார்.

அத்தருணத்தில் ஆஞ்சநேயர் பார்த்துப் பிரமித்து, ஆ! என்ன இந்திரன் வந்து இப்படிப்பட்ட செய்கையைச் செய்தான்? இந்திரஜாலமென்ன? இவனேறிவந்த யானையுடன் இவனையும்வாரிப் புடைக்கின்றேன், என்று எழுந்தமாத்திரமே அநுமானுடைய தேகத்திலும் அநேககோடிபாணங்கள் பாய்ந்தமாத்திரத்தில் வினையுஞ் செய்கையு மறந்து பூமியில்விழுந்தார். மகமேருகிரியின்மேல் முருக்கங்காடானது பூத்ததுபோல இரத்தவெள்ளப்படிய அநேகாநேகமாய்க் கொட்டிய, பாணைதன்னைத்தைக்க உருக்கின செம்பைப்போலச் சிவந்த கண்ணையுடைய சூரியகுமாரனாகிய சுக்கிரீவமகாராஜனும் பூமியில் விழுந்தார். அங்கதகுமாரனும் பதினாயிரம் பாணங்கள் தைக்க இடியுண்ட ஆனைச்சிங்கத்தைப்போலப் பூமியில் விழுந்தான். அதிரபுகழ்பெற்ற சாம்பவானும் அநேக பாணங்கள் வந்து பாய்ந்ததினாலுஞ் சல்லடைக்கண்களாய்த்தொளைக்கப் பூமியிற் சாய்ந்தார். மேலும் ஆயிரங்கூரிய பாணங்கள் தேகத்திற்பாய்ந்து வருத்தப்படுத்தக் காலனை அசனஞ்செய்பவனும் போய்விட்டான்.

இவர்களைப்போலவே விஷம்போன்ற கொடியபாணங்களால் விருஷபனும் பனசனும் சுவர்க்கமடைந்தார்கள். அம்புவடிவாய் வந்த பமனும் குமுதனும் மாண்டு போனான். சமுத்திரத்தை அணைகட்டின நளனும் ஆயிரம்பாணத்தினால் சோர்ந்து விழுந்தான். வாலிக்குச்சமமான பலவந்தர்களான மயிந்தனும், அவன் தம்பி துவிதனும் இறந்துபோனார்கள். இயமனுக்குச் சமமான கவயனும் ஆகாசம்போய்ச் சேர்ந்து விட்டான். கேசரியென்பவனும் வரிசைவரிசையாய்த் தைத்த பாணங்களினாற் பூமியிற்சாய்ந்தான். மற்றவானரவீரர்களெல்லாரும் வடித்தகூரியபாணவருஷங்களால்முழுதுமடிந்தார்கள். குபுகுபென்றிரைச்சல்

விட்டுக்கொண்டு புறப்பட்ட இரத்தப்பிரவாகம் சமுத்திரத்துடனே பகைத்துக்கொண்டு எதிரேற, ஒருபாணத்துக்கு ஆயிரங்குரங்குகளாகப் பிரம்மாஸ்திரம் அவரவர்களுடைய தேகத்திற் கொட்டிமறைக்கவும்; அவைகளை நீக்குவதற்கு ஓரடைக்கலமும் கிடையாமல் மாண்டனர். இடியைப்பொத்த அந்தப் பாணங்கள் பூமியில் வலியமுளைகளையடித்ததுபோற்றைக்க அநேகவானரங்கள் மடிந்துபோயின. தேவஸ்திரீகளெல்லா மிதைக்கண்டு தங்கள் நீலோற்பலம் போன்ற கண்களை மூடிக்கொண்டு தலையைவளைத்து வியசனப்பட, பூமியிற்கிடக்கின்ற லக்ஷுமணர் முதலானவர்களை இரத்தவெள்ளங்கள் நான்குபக்கத்திலுஞ் சூழ்ந்த தெத்தன்மைத்தெனில் பவளக்காடுபடர்ந்த பாற்கடலைப்போலிருந்தது.

அந்தச் சேனைக்கடலிருந்த விருப்பு இப்படியிருக்க, இறந்தவானரங்களுடைய உயிர்களெல்லாம் ஆகாசத்திற்போய்ச் சேர்ந்தன. தேவர்கள் புதுவிருந்தினரைக் காண்பதுபோலக்கண்டு மிகுந்த களிப்புடனே அவர்களையுபசரித்து, நீங்களிக்கண மறுபடியும் பூலோகத்திற்குப் போங்களென்று உத்தரவுகொடுத்து, உங்களை லோகசிருஷ்டி கர்த்தாவினுடைய அஸ்திரம் உபசாரஞ்செய்ததேயல்லது அது உங்களைக் கொல்லவந்ததல்ல. கோதண்டபாணியாகிய ஸ்ரீராமமூர்த்தியினுடைய அடியவர்களுக் கடியவர்கள் பிறவிக்கடலிற் சிக்குப்படுத்தாத பரமபதப்பிராப்தியை அடைவார்கள். நீங்கள் நம்முடைய காரியத்தைச் செய்கிறதற்காகப் பூலோகத்திற்குப் போனீர்கள். உங்கள் பிராணனைச்செல்லாம் எங்களுடைய ஆயிசுதான். தேகமாத்திரம் அவதாரானுகுணமாக விளையாடினீர்கள். செந்தாமரைக் கண்ணனான எம்பெருமானுக்காக ரணக்களத்தில் மாண்டீர்கள். நீங்கள் எங்கள் நாயகர்களாகுமென்றுசொல்லி அதிகவியப்பாய்க் கொண்டாடினார்கள்.

இப்படியிருக்க இந்திரஜித்து வானரசேனையனைத்தையு மிருந்தபடியிருக்கக்கண்டு, வீரர்களுடனே இலக்குமணன் மாண்டுபோனான். இராமனிப்பொழுது வாராமற்போனானென்றுசொல்லித் தன்னுடைய வெற்றிச்சங்கத்தை வாயில்வைத்து ஊதிவிட்டு, சீக்கிரமாகப்போய்ப் பிதாவாகிய இராவணனைச்சேர்ந்து யுத்தகளத்தில்நடந்த சமாச்சாரத்தையெல்லாம் விபரமாகச் சொன்னான். அவைகளையெல்லாங் கேட்ட இராவணன் - அப்படியா? இராமன் இறக்கவில்லையாவென்றான். அதைக்கேட்ட இந்திரஜித்து ஐயா இராவணேசுவரா! அவனெங்கேயோ போயிருக்கின்றான். இல்லாவிட்டால் தம்பியாகியலட்சுமணனை நான்கொல்லவும், அவனுடைய சிறந்த நண்பர்களை வதைக்கவும், சேனைகளையெல்லாம் அழிக்கவு மறைந்துவிடுவானோ? அவன் மகாவீரனாச்சேயென்றான். அதைக்கேட்ட இராவணன், அப்பா என்னுடையப் புத்திரனே! நீ சொன்னது யதார்த்தமே; அதற்குச் சந்தேகமில்லையென்று சம்மதித்தான். பிறகு இந்திரஜித்து தன் மாளிகைக்குப்போய்ச் சேர்ந்தான். இராவணனுத்தரவினால் மகோதரனும் தன்னிருப்பிடம் போய்விட்டான்.

ஸ்ரீராமர் இந்திரசித்துவின் பிரம்மாஸ்திரத்தால் மூர்ச்சித்து மாண்டு கிடக்கின்ற சுக்கிரீவனாதியரைக்கண்டு வருந்தல்.

கவி.

கொள்ளியிற்சுட ரனவிதன்பகழிகைக் கொண்டான்
அள்ளிநுங்கலா வாரிருட் பிழம்பினை யழித்தான்
வெள்ளிவெங்களப் பரப்பினிற்பொருக்கென விழித்தான்
தன்னிருமலைச் சேவடிநடக்குறச் சார்ந்தான்.

இப்படியிருக்க சர்வலோகேஸ்வரனான ஸ்ரீராமசந்திரமூர்த்தியு மிரணக்களத்திற்கு வந்து ஓரிடத்தில்நின்று, இருளாயிருந்தபடியினாலே மின்வீழ்கொள்ளிபோலப் பிரகாசிக்கின்ற அக்கினியாஸ்திரத்தைப் பிரயோகித்து இருட்பிழம்பையெல்லாம் கவளீகரிக்கும்படி நாசப்படுத்தி, வெறுவெளியாயிருக்கின்ற ரணக்களவிசாலத்தைத் திக்கென்று பார்த்து, தமது திருவடித்தாமரைகள் வருந்தமுறும்படி வேகமாயோடி நான்குதிக்கினு முறைமுறையாகச்சென்று, தமதிரண்டு திருக்கரத்தாலும் திருமுகத்தினைமறைந்து இரத்தக்கண்ணீர் பொழிந்து களத்தில் நுழைந்து வானரவீரர்கள் தனித்தனிகிடக்கிறதைக் கண்டார்.

அப்போது முதலிற்சுக்கிரீவ மகாராஜனைக்கண்டு செந்தாமரை மலர்போன்ற கண்களில் தாரைதாரையாகக் கண்ணீர்சொரியும்படியாக வெகுநேரநின்று பெருமூச்சுவிட்டு, அப்பா சுக்கிரீவா! நீயுமிப்படி ரணக்களத்தில் மாண்டுகிடக்கத்தகுமோ வென்று மனந்தளர்ந்து பக்கத்திலிருந்த அநுமானைப்பார்த்துவிட்டார். என்னசெய்வார்? தன்னைத்தானறியாதவராய்ப் பெருமூச்சுவிட்டு, அப்பா என்னுயிரையளித்த அஞ்சனைச்செல்வனே! கடலைத்தாண்டிப்போய் அரக்கரையும், அசோகவனத்தையும், கலங்கச்செய்து என் துக்கத்தைமாற்றி, நானிருக்கும்படி எனக்குபகாரஞ் செய்தது இதற்குத்தானோ? இராக்ஷசனுடைய அஸ்திரத்தினின்றும் புறப்பட்ட பாணங்கள் உன்னுடைய தேகத்தின்பலத்தைக் கடந்து விட்டதா? அப்பா வாயுகுமாரா! உன்விஷயமாகத் தேவர்கள் கொடுத்த வரங்களும், இருஷிகள் கொடுத்த ஆசீர்வாதங்களும், பிறகு ஜானகி கொடுத்த சிரஞ்சீவிப்பட்டமும் பொய்த்துப்போய்விட்டனவோ?

ஓ மகாவீரப்பிரதாபசாலியே! உனக்கிந்த அற்பச்செய்கை வந்தது என்னுடையபாவவினையா? ஐயோ! இப்படிப்பட்ட கொடும்பாவியான என்னைப்போல யாரிருக்கின்றார்கள்? அற்பகிருத்தியத்தையுடைய ஈனராச்சியத்தை யபேக்ஷித்து என்னபிரயோசனத்தை யடைந்தேன்? முதலில் பெற்றதாப்பனைக்கொன்று அழித்தேன். பிறகு ஜடாயுவையுங் கொன்றுவிட்டேன். அப்படியும்விடாமல் இன்றைக்கு இத்தனை போர்வீரர்களையுங் கொன்றுவிட்டேன். நான்செய்யுங் கொடுந்தொழிலுக்கு இவ்வளவுதானென்று சொல்லத்தக்க ஒருவரம்பும் உண்டாகுமோ? ஆ! ஆ! வினைப்பகையாளைக் கொன்று,

தம்பியாகிய சுக்கிரீவனுக்குவானராதி பத்தியத்தைக் கொடுத்தது, எல்லாரையும் ஒருமிக்கச்சேர்த்துக் கொல்லுவதற்குத்தானோ? நான் பொறுமையுடையவனாகி உங்களையிப்படிப்பட்ட துன்பத்துக்குள்ளாக்கினேன். உடற்சுமையைச் சுமக்கத்தானோ பிறந்தே னென்று துயரப்பட்டழுதார்.

பின்பு விருஷபக்கூட்டங்களுக்கு நடுவாக மற்றொரு விருஷபத்தைப்போலக் கடைக்கண்ணில் நெருப்பைக் கக்கிக்கொண்டு கிடக்கின்ற அங்கதனென்கிற யானையைக்கண்டு, ஐயோ! ஆயுதங்களை வினைச்சுமக்கின்ற பாவியான நான் அடைக்கலம் புகுந்தவர்களை இரக்ஷிக்கின்றவழகு நன்றாயிருக்கின்றது: நன்றாயிருக்கின்றது: என்று கண்ணீர்விட்டார்.

பிரம்மாஸ்திரத்தாற்கட்டுண்டு மூர்ச்சித்துக்கிடக்கின்ற இலக்ஷ்மணனை ஸ்ரீராமர் காணல்.

கவி.

உடலிடைத்தொடர் பகழியினொளிர்கதிர்க் கற்றைச்
சுடருடைப்பெருங் குருதியிற்பாய்பெனக் சுமந்த
மிடலுடைப்பணி மிசைத்தான்பண்டை வெள்ளக்
கடலிடைத்துயில் வானன்னதம்பியைக் கண்டான்.

அப்பாற் சற்றுதூரஞ்சென்ற தருமசொரூபியான ஸ்ரீராமர், தேகத்திற் பதிந்துகிடக்கின்ற அம்புகளாகிய கிரணக்கற்றைகளைப் பரப்பிப்பிரகாசிக்கின்ற இரத்தவெள்ளத்திற் பூமியைப் பாம்பாகச்சுமக்கின்ற பலம்பொருந்திய ஆதிசேஷன்மீது பழமையாகிய பாற்சமுத்திரத்தின்கண் தான்சயனிக்குந்தன்மையைப்போல் வானரக்கடலின்மத்தியில் மூர்ச்சித்திருக்குந் தம்பியாகிய இலக்ஷ்மணப் பெருமானைக்கண்டார். கண்டவரென்செய்வார். மனங்கொதித்து உயிர்சோர்ந்து முழுதும் புகைந்தார். நீலத்தினைப்போன்ற திருமேனியும் மனதைப்போல வருந்தி, தமது திருக்கண்களைக்கையால் மூடிக்கொண்டு மயங்கிப் பூமியில்வீழ்ந்து, இடியுண்டுசாய்ந்த மாமரத்திற்குச் சமானமானார்.

ஒருநாழிகைவரையில் மூச்சுவிடாமலும், உணர்வடையாமலும், தேகத்தில் வியர்வுகாணாமலும், கண்விழியாமலும், தேவர்களுங்கண்டு தெளிவடைந்தாரோ இல்லையோவென் றஞ்சும்படி. திருக்கைகளும், திருவடிகளும் அசையாமல், கருணையாற் பிறந்தவராகையால் உயிர்மாத்திரம் பிரியாமலிருந்தார். இப்படி வியசனப்படுகின்ற ஸ்ரீராமமூர்த்தியைத் தாங்குவாரொருவருமில்லை. இளையபெருமாளைத் தழுவியணைத்துக் கொண்டிருக்கின்ற கைகளைப்பிணிப்பவிழ்த்து வாங்குவாரொருவருமில்லை. சொல்லால்தேறுதலை சொல்லுவாருமில்லை. சேனைகளையுள்ளவர்களெல்லாம் மாண்டுபோய் விட்டார்கள். ஆகையால் தனியான ஸ்ரீராமரை யார் ஆயாசந்தீர்க்கவல்லவர்கள்? சுவந்தங்களிற் கழுத்தில்லாமையால் தங்கள்நாயகரைக் காணாமல் தேடித்தேடித்திரிகின்ற செவ்வக்கண்களையுடைய இராக்ஷசிகளும், பிணங்களைக்கண்டு சந்தோ

ஷங்கொண்டு திரிகின்ற பேய்க்கூட்டங்களும், நரிகளுடைய பந்திகளுமல்லாமல்; வேறொருவரும் யுத்தகளத்திலே யில்லாமல் தாமாத்திரமே தனியாய்நின்றார்.

தேவலோக ஸ்திரீகளெல்லாம் தங்கள்வயிற்றைப் பிசைந்துகொண்டழுது, கண்ணீரைச் சோனைமாரியைப்போலச் சொரிந்தார்கள். தேவர்களெல்லாஞ் சோர்ந்தார்கள். மற்ற அசராசரங்களும் இரக்கமுற்றன. இவைகளெல்லாம் ஞானநாயகரான ஸ்ரீராமருடைய திருமேனியோயாதலா லிப்படித் துக்கப்பட்டன. மூலதாமரைப் புஷ்பத்தி லெழுந்தருளியிருக்கின்ற சிருஷ்டிகர்த்தாவாகிய பிரம்மதேவருக்கும், மூன்று கண்களையுடைய சங்கரமூர்த்திக்கும், ஸ்ரீராமரிடத்துள்ள அன்பால்தமது மகிழ்ச்சிகுன்றி, திருமுகக்களையு மாறிப் போகுமேயானால்; மற்றத்தேவர்களுக்குச் சம்பவித்த துக்கத்தைச் சொல்லவேண்டிய தென்ன? ஸ்வாமிக்குப் பகையானவர்களும் அழுதார்கள். பாவங்களும் அவரிடத்திலுள்ளபரிவால் அழுதன. அப்போது ஸ்ரீராமமூர்த்தி சற்றுணர்வடைந்து சுவாசம்விட்டு, திருக்கண்களை விழித்துத்தமது திருத்தம்பியாரை யுற்றுப்பார்த்து, நம்முடைய தம்பி பரமபதம் அடைந்தான், இனித் திரும்பமாட்டானென்று மனம்புழுங்கிப் புண்ணிலே நெருப்பைக் கொளுத்தினாற்போலத் துன்பமுற்றுப் புலம்பத்தொடங்கினார்.

ஸ்ரீராமர் இலக்ஷ்மணரை யிறந்ததாகவெண்ணிப் புலம்பி மூர்ச்சையாதல்.

கவி.

எந்தையிறந்தான் யானுமிறந்தே னுலகெல்லாந்
தந்தைதனென்னுந் தொன்மைதவிர்த்தேன் றமியக்கேன்
உய்ந்துமிருந்தா யென்னவின்றே யுரைகாணேன்
வந்தனையையா வந்தனையையா வுயிர்வாழேன்.

தாயோநீயே தந்தையுநீயே தவநீயே
சேயோநீயே தம்பியுநீயே திருநீயே
போயோநின்றா யென்னைமறந்தாய் புகழ்பாராய்
நீயோயாது நின்றிதுநெஞ்சம் வலியேனே.

ஊறுகின்ற புண்ணுடையாய்யா னுயிர்காவேனன்
ஆறுகின்றே னவிசமக்கே யழிகின்றேன்
வேறயின்று முய்யினுமுய்வே னிருகூறாய்க்
கீறுநெஞ்சம் பெற்றனெனன்றோ கெடுவேனே.

பயிலுங்காலம் பத்தொடொன்று படர்கானத்
துயில்கின்றேனைக் காவனல்கி யயிலாதாய்
வெயிலென்றுன்னாய் நின்றுதளர்ந்தே மெலிவெய்தித்
துயில்கின்றாயோ வின்றிவ்வுறக்கந் துறவாயோ.

அயிராநெஞ்ச மாவியுமொன்றே யெனுமச்சொல்
பயிராகேவலைப் [illegible]தனேற்கும் பரிவுண்டோ
செயிரோவில்லா வுன்னையிழந்துந் திரிகின்றேன்
உயிரோகாணே வானினியுன்னோ டுரையையா.

வேழ்விக்கேகி வில்லுமிறந்தோர் விடமம்மா
வாழ்விக்கும்மென் றெண்ணினென்முன்னே வருவித்தேன்
சூழ்வித்தென்னைச் சுற்றினரோடுஞ் சுவித்தேன்
தாழ்வித்தேனே வித்தனைகேடுந் தருவித்தேன்.

மண்மேல்வைத்த காதலின்மாதா முதலோர்க்கும்
புண்மேல்வைத்த தீகர்துன்பம் புகுவித்தேன்
பெண்மேல்வைத்த காதலினிப்பே றுகள்பெற்றேன்
எண்மேல்வைத்தே னெம்புகழ்யான்று னெனரியேனே.

மாண்டாய்நீயோ யானொருபோது முயிர்வாழேன்
ஆண்டானல்ல னாளிலமர்ந்தோ பரதன்றான்
பூண்டாரெல்லாம் பொன்றுவர்துன்பம் பொறையாற்றார்
வேண்டாவோநா னல்லறமன்றி மெலிவுற்றால்.

அறந்தாய்தந்தை சுற்றமுமற்றும் மெனையல்லால்
மறந்தாயென்று மெய்மறவாதா யுடன்வந்து
[illegible]ந்தாயென்னைப் பின்புதொடர்ந்தாய் பிரிவாற்றாய்
இறந்தாயுன்னைக் கண்டிருந்தே னெளியேனே.

சான்றோர்மாதைத் தக்கவர்க்கன் சிறைகட்ட
ஆன்றோர்சொல்லு நல்லறமன்றேன் வசமானால்
ஊன்றுய்கின்ற பேருலகொன்றாய் முடியாவேல்
தோன்றாயோவென் வில்வலிவீரத் தொழிலம்மா.

வேலைப்பள்ளக் குண்டகழிக்கும் விராதற்கும்
காலிற்செல்லுங் காகமணிக்குங் கரனுக்கும்
மூலப்போத்தற் செற்றமரத்தேழ் முதலுக்கும்
வாலிக்கும்மே யாயினவோவென் வலியம்மா.

இருந்தேனுனை யிந்திரசித்தே முதலாய
பெருந்தோளரைக் கொன்றழிக்கப் பெறுவேனோ
மருந்தேநீயே கொல்லுதியென்றும் வலிகொண்டேன்
பொருந்தேனுனிப் பொய்ப்பிறவிக்கும் பொறையல்லேன்.

மாதாவர்க்குஞ் சுற்றமுநாடு மறையோரும்
ஏதானோவென் றுதளர்ந்தே யிருவோரைத்
தாதாய்காணச் சாலநினைந்தேன் றரையாள்வேம்
போதாயையா பொன்முடியென்னைப் புனைவிக்க.

பாசமுமுற்றச் சுற்றியபோதும் பகையாலே
நாசமுமுற்ற போதுநடந்தே னுடனல்லேன்
நேசமுமற்றார் செய்வனசெய்தே நிலைகின்றேன்
தேசமுமற்றேன் கொற்றநலத்தைத் தெரியாதோ.

கொடுத்தேனன்றே வீடணனுக்குங் குலமாளும்
முடித்தேர்செல்வம் யான்முடியாதே முடிகின்றேன்
படித்தோனன்றே பொய்ம்மைகுடிக்கும் பழிபெற்றே
ஒடித்தேனன்றே யென்புகழ்நானே புணர்வற்றேன்.

அப்பா இலக்ஷ்மணா! என்பொருட்டு என்பிதாவாகிய தசரதமஹாராஜா இறந்தார். அப்போதோ நானிறவாமலிருந்தேன். உலகமெல்லா வற்றையும் பரதனுக்குக் கொடுத்துவிட்டேன். இனிக்கொள்ளவேண்டியதையுந் தவிர்த்துபோனேன். யான் தனிமையாயிருக்க மாட்டேன். நீ பிழைத்திருக்கின்றாயேயென்றிருந்தேன். இப்போதெனக்குத்துணையாக வார்த்தைசொல்லுவாரொருவருமில்லை. தம்பி இலட்சுமணா! இதோநானுமுன்னோடு வந்துவிட்டேன்; வந்துவிட்டேன்: இனிநானுயிருடன்வாழமாட்டேன். எனக்குத்தாயு நீயே; தகப்பனுநீயே; நான்செய்யும் தவமுநீயே; என்பிள்ளையுநீயே; எனக்குத் தம்பியுநீயே; என் ஐஸ்வரியமுநீயே; அப்படியாயிருந்த நீ என்னை நீக்கிவிட்டுப்போய்விட்டாயே; புகழையும் நினைத்தாயில்லையே; நீமாத்திரம் என்னைவிட்டு நீங்குகின்றவனானாய். உன்னைவிட்டு நீங்கியிருக்க உன்னைக்காட்டிலும் என்னெஞ்சு வலிமையுள்ளதோ? அப்பா தம்பி! இரத்தமுழுகின்ற புண்ணுடைய உன் தேகத்தினிடத்தில் உயிரைக்காணேன். இவ்வளவு சகிப்புடனேஉயிரைப்பொறுத்துக்கொண்டு அழுகின்றேனாதலால், நானின்னுமிருந்தாலும் பிழைத்திருப்பேன். ஆ! ஆ! இந்தத்தீயேன் இருபாதியாய்ப் பிளப்புறுதநெஞ்சையுடையவனாக இருக்கின்றேனல்லவா?

அப்பா புருஷசிம்ஹமே! இந்தப்பதினாலுவருஷமாக விசாலித்திருக்கின்ற காட்டில் எனக்குண்ணத்தக்க கந்தமூலபலாதிகளைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, ஒன்றுமுண்ணாமல் என்காரியார்த்தமாக விரதநிஷ்டாபரனாயிருப்பவனே! எப்படிப்பட்ட காலத்திலும் வெளிலென்று சயனம்பண்ணாமலிருந்த நீ இப்போது மனந்தளர்ந்து தேகங்களைத்து நித்திரைசெய்கின்றாயே; இன்றைக்கிந்த நித்திரையைவிட்டெழுந்திருக்கமாட்டாயோ? நிர்ச்சத்தேகமான மனதும், உயிரும், ஒன்றுமென்கிற சாஸ்திரங்கள் என்னிடத்தில் விருத்தியாகாதகாலத்தில், பரதனுடைய வென்னிடத்திலும் அன்புண்டாகுமோ? வழுவிலாவடிமை செய்வேனென்ற பாரதந்திரிஞானத்தில் கொஞ்சமும்பிசகாத உன்னையிழந்தும் உயிருடனேயிருக்கின்றேனே; இப்போது சாஸ்திரசித்சயமான உயிரோ உனக்குறவாயிருக்கின்றது? அல்லது நானோ உனக்கு உறவாயிருக்கின்றேன்? தம்பி இலட்சுமணா! ஜனகமகாராஜாவின் யாகத்திற்குப் போய், உருத்திரனுடைய வில்லையொடித்து அங்குகிடைத்த சீதையென்கிற விஷமானது நமக்கு நல்வாழ்வையுண்டாக்குமென்று முன்னேநினைத்தேன். பிறகுகாட்டிற்கு என்பின்னுஞ்வரச்செய்தேன். இப்போதந்த விஷத்தால் என்பந்துவர்க்கங்களையும் சுடப்பண்ணினேன். அது என்னைவிட்டு நீங்கினபிறகாவது போய்விட்டதென்று சும்மாவிருந்தேனோ? இவ்வளவு பொல்லாங்கையுஞ் சம்பாதித்துக்கொண்டேன்.

அப்பா என்னருமைத்துணைவனே! பூமியின்மேல்வைத்த ஆசையினாலே என்மாதாமுதலானவர்களுக்கும் புண்மேல்தீயை வைத்ததுபோன்ற துன்பத்தையுண்டாக்கினேன். பெண்மேல்வைத்த ஆசையினாலே இந்தப் பெரியவ

பங்களையும் பெற்றுக்கொண்டேன். என்புகழை யாவரு மதிக்கும்படியாய்ச் செய்துவிட்டேனல்லவா? நானென்ன சாமானியனோ? நீயோமாண்டுபோனாய். இனியானோ ஒருபோதும் உயிருடனேவாழமாட்டேன். ஐயா! பரதனும் இந்தப்பூமியை ஆளாமற் போனானே: அவனை யாசிரயித்திருக்கின்றபேர்களெல்லாம் இந்தத் துன்பத்தைக்கேட்டு மாண்டுபோவார்கள். நான் தர்மத்துக்குப்பயந்து தாழ்ந்திருந்ததற்கு இவ்வளவு உண்டாகவேண்டாமா? தர்மமும், தாயும், தந்தையும், பந்துக்களும், மற்ற ஐஸ்வரிய சுகசந்தோஷாதிகளும், உனக்கு நானேயென்று கருதிக்கொண்டு; அவைகளை வேரோடு மறந்துவிட்டவனே! சத்தியத்திற் கொஞ்சமேனும் பிறழாதவனே! எனக்குத்தம்பியாகப்பிறந்து என்னையே பின்தொடர்ந்து ஒருநிமிடமும் என்னைப்பிரியச் சகியாதவனே! இப்படிப்பட்ட நீ இறந்துபோகப்பார்த்து மென்பிராணனோடின்னுமிருக்கின்றேனே: ஆ! ஆ! நானென்ன இலேசானவனா?

அப்பா இலக்ஷ்மணா! நிகரில்லாமையுள்ள ஒப்பற்றஸ்திரீயை இந்தராக்ஷசன் சிறையிட்டுத்தடுக்கவும், பெரியோர்களுடைய நீதிவாக்கியங்களும், தர்மதேவதையும், அவனுக்கு வசப்பட்டுப் போகுமானால் இந்த மூன்று லோகங்களும் ஒருமிக்க அழியவேண்டும். அப்படியழியாவிட்டால் என்கோதண்டத்தின் வீரப்பிரதாபம் வெளிப்படாமற் போய் விடுமோ? இந்தச்சமுத்திரமாகிய பள்ளத்திற்கும், விராதனுக்கும், காற்றைப்போலோடின காகாசுரனுடைய கண்மணிக்கும், கரனுக்கும், பாதாளதுவாரத்தை வேரோடர்த்திய ஏழுமராமரத்திற்கும், வாலிக்கு மாத்திரமா என்வில்வல்லமை சென்றது? ஐயோ! இங்குநானப்போதே யிருந்தேனானால் இந்திரஜித்துமுதலான பெருந்தேர்வீரர்களை யெல்லாம் பிழைக்கவிடுவேனோ? கொல்லுகிறேனென்று நீசொல்லக் கேட்டபடியினாலே, நீயே கொல்லக்கடவாயென்று மனத்திடங்கொண்டேன். அப்பா என்பிராணசாமருந்தே! நானுன்னோடு பொய்யாகப்பிறந்தேனேயன்றி, மெய்யாகப்பிறந்தாயுடன்படவுமாட்டேன். நான் உடற்பாரத்துக்கும் தகுந்தவனல்ல. என்னப்பனே இலக்ஷ்மணா! நம்முடையதாய்மார்களும், பந்துக்களும், அயோத்தியா நகரமும், நம்மை ஆஸ்ரயித்திருந்த பிராமணர்களும், நம்மை யென்னவானார்களோ வென் றதுக்கமுற்று அழிந்துபோவார்கள். அப்படிப்போக வொட்டாமல் அவர்களைப்போய்க்காணவேண்டுமென்று நினைத்துக்கொண்டிருக்கிறேன். நாம்போய் அவ்வயோத்தியா நாட்டை ஆளலாமா? என்னைப் பொன்முடிசூட்டப் புறப்பட்டு வரக்கடவாய்.

அப்பா என்கண்மணியே! உன்னைநாகபாசஞ் சூழ்ந்துகட்டினபோதும், சத்துருக்களாலே நாசமுற்றபோதும், நானுன்னுடனேகூட இல்லாமல் அப்புறம்போய்விட்டேனே. அந்தப் பகையாளிகள்செய்தது போலவே நானுஞ் செய்து நிலைத்து நிற்கின்றேனே: இந்தத் தேசத்திலுள்ளவர்களெல்லாம் என்வெற்றிப்பிரதாபத்தை ஆசிர்விக்கமாட்டார்களா? விபீஷ

ஷணுக்கு லங்காபட்டணத்தையாளும்படியாக முடிசூட்டி அங்குள்ள வாழ்வெல்லாம் அவனடையும்படியாக அன்று வரங்கொடுத்தேனே: அந்தவரத்தின்படி முடியாமல் இதோ நானே முடிந்து போகப்போகிறேன். நான் பொய்யையல்லவோ சொன்னேன்? ஆ! ஆ! வாக்குப்பொய்யாத சூரியமரபிற்கும் ஒருபழியைச் சம்பாதித்துக்கொண்டே னல்லவா? உணர்வில்லாத நான் என்புகழை நானேகெடுத்துக்கொண்டேன். என்றிவ்விதமாகச் சொல்லிக்கொண்டு ஏக்கமுற்றழுது பெருமூச்சுவிட்டு, நடுவிற்போய் அறிவுடனே இந்திரியங்களெல்லாஞ் சிறைபடும்படி இறந்து விடுவேனென்று சொல்லித் தம்பியை ஆசையுடனே கட்டித் தழுவிக்கொண்டு, ஒன்று மாலோசியாமல் தன்னைமறந்து மூர்ச்சையாய் விட்டார்.

இப்படி மானுஷிய சேஷ்டிதராகிய ஸ்ரீராமமூர்த்தியானவர் மூர்ச்சையடைந்ததைத் தேவர்கள் பார்த்து, தங்கள் கண்களில் அறைந்துகொண்டழுது அதிகதுன்பமுற்று, இனியெவ்வாறு முடியப்போகிறதோ வென்று குலைகுலைந்து, ஓ ஒருவராலு நிச்சயித்தறிகிறதற் கெட்டாத [illegible]யானே! எங்கள் பொருட்டல்லவோ இப்படி வருத்தப்படுகிறீர். உமக்குந்துன்பமுண்டோ? என்று அதிகபரிவுடனே சொல்லிப் போற்றத் தொடங்கினார்கள்.

ஸ்ரீராமர் மூர்ச்சையாயினமைகண்ட தேவர்கள் அவரைத்துதிசெய்தல்.

கவி.

உன்னையுள்ள படியறியே மூலங்கையுள்ள திறனறியேம்
பின்னையறியே முன்னறியே மிடையுமறியேம் பிறவாமல்
நின்னைவணங்கி நீவகுத்த நெறியினிற்கு மதுவல்லால்
என்னையடியேஞ் செயற்பால தின்பதுன்ப மில்லோனே.

அரக்கர்குலத்தை யொறுத்தெம்மை யடிமையாக்கி யருளாயென்
றிரக்கவெம்மேற் கருணையினு லிசையாவுருவ மிவையெய்திப்
புரக்குமன்னர் குடிப்பிறந்து போந்தாயறத்தைப் புரைதீர்ப்பான்
காக்கின்றே நெடுமாய மெமக்குங்காட்டக் கடவாயோ.

ஈன்றெம்மிடுக்கண் டைத்தளிப்பா னிரங்கியாச ரிற்பிறந்தாய்
மூன்றுமுலகத் துயர்தீர்த்தி யென்னுமாசை முயல்கின்றேம்
வென்றுமறந்தே மவனல்லன் மனிசனென்றே யிதுமாயம்
போன்றதில்லை யாருடையாய் பொய்யும்புகலப் புக்காயோ.

அண்டம்பலவு மனைத்துயிரு மகத்தும்புறத்து முளவாக்கி
உண்டுமுமிழ்ந்து மளந்திடந்து முள்ளும்புறத்து முளையாகிக்
கொண்டுசெலம்பி தன்வாயி னூலாலமையக் கூடியற்றிப்
பண்டுமின்று மமைக்கின்ற படியையொருவாப் பரமேட்டி.

துன்பவிளையாட் டிதுவேயு முன்னைத்துன்பந் தொடர்வின்மை
இன்பவிளையாட் டாமெனினு மறியாதோருக் கிடருற்றால்
அன்புவினையு மருள்வினையு மறிவுவினையு மவையெல்லாம்
முன்புபின்பு நடுவில்லாய் முடித்தாலன்றி முடியாவால்.

வருவாய்போல வாராதாய் வந்தாயென்று மனங்களிப்ப
வெருவாதிருந்தோ நீயிடையே துன்பம்விளைக்க மெலிகின்றேம்
கருவாயளிக்குங் களைகண்ணே நீயேயிதனைக் களையாயேல்
திருவாழ்மார்ப நின்மாயை யெம்மாற்றீர்க்கத் தீருமோ.

அம்பரீடற் கருளியது மயனார்மகனார்க் களித்ததுவும்
எம்பிரானே யெமக்கின்று பயந்தாயென்றே யேமுறுவேம்
வெம்புதுயர நீயுழக்க வெளிகாணுதும் மெலிகின்றேம்
தம்பிதுணைவ நீயிதனைத் தவிர்த்தெம் முணர்வைத் தாராயோ.

இன்பமும் துன்பமுமில்லாத ஸ்வாமி! ஸ்ரீராமபிரானே! உம்முடைய யதார்த்த ஸ்வரூபலக்ஷணங்களை நாங்களின்னபடியென் றறியமாட்டோம். இந்தலோக ஸ்வபாவத்தையும் இன்னவாறுயிருக்கிறதென்று அறியமாட்டோம். உமக்கந்தம் இதுவென்றுமறியோம். உமக்குமுதல் இதுவென்றுமறியோம். உமக்கு நடுவு மின்னதில்லைமையென் றறிவோம். இவையாதும் தோன்றுமல் உம்[illegible]நீர் நியமித்தவழியில் நிற்பதேயல்லாமல், அடியேங்கள் தேவர் விஷயத்திற் செய்யத்தக்கவைகளும் உண்டோ? இராக்ஷசவம்சத்தை வேரறுத்து தேவரீர்திருவடிகளுக்கு எங்களை அடிமையாக்கிக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் யாசிக்க, எங்கள்மீது கருணைகொண்டு தேவர்பெருமைக்குப்போதாத இந்தமனிதத்திருமேனியைத் திருவுளங்கொண்டு உலோகரக்ஷணார்த்தஞ்செய்கின்ற ராஜவம்சத்தில் திருவவதரித்து வந்தது தர்மத்தைக்குற்றமற நிலைநிறுத்தவல்லவோ? அதையொளித்துவிட்டு உம்முடைய நெடுமாயத்தை அடியேங்களுக்குக் காட்டலாகுமோ?

ஓ தயாளுதேவ! எங்களையெல்லாஞ் சிருஷ்டித்து எங்கள் துன்பங்களையெல்லா நீக்கி ரக்ஷிக்கும்படி இரக்கமுற்று இராஜக்கிருஹத்தி லவதரித்தபடியால், ஸ்வர்க்கமத்திய பாதாளமென்கிறமூன்று லோகத்தார்களுடைய துன்பங்களையு நீக்குவீரென்னும் ஆசையுற்றிருக்கின்றோம். உம்மைநாங்கள்தெரிந்தும் பூர்வத்தில் மகமேரு சிகரத்தில்வாசத்தைத்தைசெய்த அந்தச் சாட்சுணியபரப்பிரம்மமிவரல்ல. இவன்மனிதன். என்றுமறந்து நினைக்கும்படி செய்கின்ற இந்தமாயத்தைப் போன்றது ஒன்றுமில்லை. இப்படிப்பட்ட பொய்சொல்லவும் எழுந்தருளினீரோ? ஓ பரமேட்டீ! நீர் பல்லாயிரங்கோடி அண்டங்களையும், அவைகளுக்குள் வசிக்கின்ற எல்லா ஜீவகோடிகளையும், உள்ளும்புறத்தும் உண்டாக்கி; அவைகளையெல்லா முண்டும், உமிழ்ந்தும், அளந்தும், பிளந்து மவைகளுக்குள்ளும்புறத்திலு நிறைந்தவரா யிருந்துகொண்டு; சிலம்பியானது தன் வாயிலுண்டாகு நூலினாற் கூடுகட்டினாற்போல முன்னுமும், பின்னும், சிருஷ்டிக்கின்ற தொழிலை நீங்காதவரா யிருக்கின்றீரன்றோ?

ஓ அதிமத்தியாந்தரகிதரே! தேவரீர் விளையாட்டாகத் துன்பத்தை அங்கீகரித்தபோதிலும், தேவரீரை அந்தத்துன்பந் தொடருமோ? தேவரீர்

சந்தோஷவிளையாட்டாக அங்கீகரித்திரேயாயினும், எங்களுக்கு அந்தத் துன்பம் வரும். அப்போ தெங்கள் கர்வமடங்கிப் பக்தியுண்டாகும். அன்னியர்களிடத்தில் தயவுண்டாகும். ஞானம்வளரும். அவையெல்லாம் தேவரீரால் நீங்கினாலல்லாமல் தாமேமுடிவடைய மாட்டா. இந்தலோகத்தில் வந்துவிட்டீரென்று எங்களை நினைக்கும்படிச்செய்து பரமபதத்தி லெழுந்தருளி யிருக்கின்றவரே! தேவரீர் எங்களுக்கு ரக்ஷகராகவந்தீரென்று மனது சந்தோஷிக்கும்படி நிர்ப்பயர்களா யிருந்தோம். அப்படியிருக்க நீர் மத்தியில்துன்பத்தைக் காட்ட எங்கள்மனது நிலையாமல் வருத்தப்படுகின்றோம். எங்கள்காரணமாக பிரகாசிக்கவந்த ஓ ஆதாரமே! தேவரீரே இப்படிப்பட்ட துக்கத்தை நீக்காவிட்டால், பெரியபிராட்டியா ரெழுந்தருளியிருக்கின்ற மார்பையுடைய சர்வகாரண ஸ்ரீயப்பதியே! தேவரீரால் பூட்டப்பட்ட மாயையானது அடியேங்களால் நீக்க நீங்கக்கூடியதாகுமோ?

ஓ சக்கரவர்த்தித் திருக்குமாரரே! துருவாசமுனிவரால் அம்பரீஷ ராஜரிஷிக்கு நேரிட்ட துன்பத்தை நிக்கிரகித்ததும், பிரமதே[illegible]ராகிய பிரஜாபதிகளுக்கு நேர்ந்த துன்பத்தை நிக்கிரகித்தது மாகியவிப்படிப்பட்ட ரக்ஷகத்தைப்போல எங்களுக்கின்று அருளிச்செய்திரென்று சந்தோஷித்திருந்தோம். ஓ எங்கள்பெருமானே! தேவரீரிவ்வளவு கொடுந்துயரத்தில் வருந்துகிறபடியால் எங்களுக்குண்டாகிய துன்பம் ஒழியாமல் வருத்தப்படுகிறோம். ஓ ராமாநுஜருக்குத் துணையா யெழுந்தருளின ஸ்வாமி! தேவரீர் இந்தமாயத்தை நீக்கி எங்களுக்கு அநிவைக்கிருபைசெய்ய மாட்டீரோ! என்றிப்படிப் பலவாறாகச்சொல்லிப் பிரஹ்மேந்திராதி இமையா நாட்டமுடைய தேவர்களெல்லாம் துக்கப்பட்டார்கள்.

அப்போது பூர்வநிர்மாணத் திருவுள்ளத்தின்படி துன்பத்தை யடையத்தக்க மனுஷாவதாரத்திற் கிசைவாக அன்பின்பெருக்கத்தின் பொருட்டு ஸ்வாமியு மரணமூர்ச்சையாய் விட்டார். அற்பர்களான ராக்ஷசத்தூதர்கள் இராவணனிடத்திற்கு ஓட்டமாயோடி னின்றார்கள்.

யுத்தகளத்தில் நடந்தவிஷயங்களைத் தூதுவர்கள் ராவணனிடஞ் சொல்லுதல்.

கலி.

என்வந்ததுநீரென் றரக்கர்க் கிறைவனியம்பவெதிர்செருவில்
நின்மைந்தனைதுநெடுஞ்சரத்தாற் றுணைவரொல்லாநிலத்தேசாய்ப்
பின்வந்தவனுமுயிரிழந்த பிழையைநோக்கிப்பெருந்துயரால்
முன்வந்தவனுமுடிந்தானுன் பகைபோய்முடிந்ததெனமொழிந்தார்.

இராவணனவர்களைப்பார்த்து, ஓ தூதர்களே! நீங்களெங்கேவந்தீர்கள்? ஏதேனும் சமாசாரமுண்டானால் சொல்லுங்களென்று கேட்டான். அப்போது ராக்ஷசதூதர்கள் ஐயா பிரதாபலங்கேஸ்வரா! பகைத்துச் செய்கின்ற போர்க்களத்தில் உம்முடையகுமாரனுடைய இந்திரஜித்தினுடையபெரும்பாணங்

No. 59. இராவணனேவலால் இராக்கதிகள் சீதையைவிமானத்திலேற்றி வந்து ஸ்ரீராமனுதியர்க்குநேர்ந்த விபந்தைக்காட்டுதல்.

சாம்புவந்தருமவிபீஷணரும் ஸ்ரீராமரைத்தேற்றுகையில் ஆஞ்சனேயர் சஞ்சீவிமலையைக்கொணர்ந்து இலட்சுமணாதியரையெழுப்புதல்.

உயுத்தகாண்டம். ஜானகிகளங்காண்படலம்.

களால் வானரர்களும் வானரவீரர்களும் பூமியில்விழுந்து மடிய, ஸ்ரீராமனுக்குத்தம்பியாக வந்தவனுமிறக்க, அந்தத் துக்கத்தைக்கண்டு அதிகவியசனமடைந்து அந்த ஸ்ரீராமனு மடிந்துபோய்விட்டான், உமதுபகை இன்றோடு முடிந்துவிட்டதென்று சொன்னார்கள்.

பிரமாஸ்திரப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

இருபத்திரண்டாவது,

பிராட்டிகளங்காண் படலம்.

இப்படலத்தில் இந்திரஜித்தவினுடைய பிரமாஸ்திரத்தினால் ஸ்ரீராமனும் முடிந்தாரென்று சாரணர் சொல்லக்கேட்ட இராவணன் சீதையைப் புஷ்பக விமானத்தி லேற்றிக்கொண்டுபோய் இராமனுதியர்க்கு நேர்ந்த விபந்தைக் காட்டுங்களென்று சிலராக்ஷசஸ்திரீகளுக் காக்கியாபிக்க, அவர்களவ்வாறே கொண்டுபோய்க் காட்டவும் சீதாதேவியார் மடிந்து மண்மேல்வீழ்ந்து கிடக்கின்ற ஸ்ரீராமனுதியரைக்கண்டு பிரலாபித்து நானுமென்னுயிரை மாய்த்துக்கொள்ளுகிறேனென் றெழுந்து சுவாமியின் திருமேனிமேல்விழ வெத்தனிக்க, அக்கால் திரிசடையானவள் சேர்த்துப்பிடித்து இவ்ராக்ஷசர்களுடைய மாயையேயன்றி வேறல்லவென்று சொல்லித்தேற்ற, அதுகேட்டுத்தேறிய சானகியாரை மற்றராக்ஷசஸ்திரீகள் புஷ்பகவிமானத்தோடுங் கொண்டுபோய் அசோகவனத்திற் சேர்த்தல் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமலக்ஷுமணர்களினது நிலையித்தன்மையதாயிற்றென்று தூதுவர்களாற் கேட்ட இராவணன் சந்தோஷித்துச் சீதாபிராட்டியைப்புஷ்பகவிமானத்தின்மீதேற்றிச்சென்று யுத்தகளத்தைக் காட்டுங்களென்று இராக்ஷசஸ்திரீகளுக் குத்தரவுசெய்தபடி பிராட்டியாரை யுத்தகளத்திற் கழைத்தேகல்.

கவி.

பொய்யார்தூதரென்பதனாற் பொங்கியெழுந்தவுவகையனாய்
மெய்யார்திருவின்பெருவெறுச்சை வெறுக்கவிலங்கைத்தப்பாடு
கொய்யார்வரைமேன் முரசேற்றிச் சாற்றிகரங்களிசிறப்ப
செய்யாடலாவென்று விகழ்ந்துவென்றுனெறியில்லான்.

இவ்வண்ணம் ஸ்ரீராமலக்ஷுமணாதியர்கள் உமது புத்திரனாகிய இந்திரஜித்தவால் மாண்டார்களென்கின்ற வார்த்தையைக்கேட்ட தருமமார்க்கத்தில் நடவாத விராவணப்பதகனவன் தூதர்கள் பொய்சொல்லமாட்டார்களென்கிற நம்பிக்கையால் பொங்கமாய் மிகுந்த சந்தோஷித்தனாகி, அவர்களுக்கு அநேகவிதிதங்கள் ஆசைதீரும்படியாகக்கொடுத்து, நமக்கு ஜெயமுண்

டாயிற்றென்று நகரமுழுதுக்குந் தெரியும்படியாகவும், இராவணுமென்னையிட்டு சூழ்கும்படியாகவும், யானைமேல் முரசறையச் செய்யுங்களென்று நியமித்தான். அந்தப் பிரகாரமாகவே அவர்கள் நடப்பிக்க, மறுபடியு மிராவணன் மருத்தனென்கின்ற ராக்ஷசனையழைத்து, அடா மருத்தனே! நீ சிக்கிரமாயோடி ரணக்களத்தில் மடிந்துகிடக்கின்ற ராக்ஷசப்பிரேதங்களெல்லாவற்றையும் பொறுக்கி யெடுத்துக் கடலிலெறிந்துவிடு. இந்தக்காரியம் உன் மனதறிந்ததேயல்லாமல் வேறொருவரறிந்தால் உன்தலையை வெட்டிவிடுவேன். முதலிலென் காரியத்தைச் செய்யக்கடவாய். என்றுக்கியாபிக்கவும் உடனே யவன்போய் இராக்ஷசர்களுடைய உடல்களையெல்லாமெடுத்துக் கடலிலெறிந்துவிட்டான்.

கவி.

தெய்வமானத்திடையேற்றி மனிசர்க்குற்றவையெல்லாம்
தையல்காணக்காட்டுமின்கள் கண்டாலன்றித்தனதுள்ளத்
தய்யநீக்காளென்றுரைப்ப வரக்கர்மகளிரிரைத்தஞ்ப
உய்யுமுணர்வுநீத்தாளை செம்போர்க்களத்தினிடையுய்த்தார்.

பிறகவ் விராவணனுனவன் சிலராக்ஷசஸ்திரீகளை நோக்கி, நீங்கள் சீதையைப் புஷ்பகவிமானத்தி லேற்றிக்கொண்டுபோய் மனிதருக்கும் வானரகளுக்கும் சம்பவித்த செய்கைகளெல்லாம் காட்டுங்கள். தான் நேரே பார்த்தாலல்லாமல் தன் மனதிற் சந்தேகநீங்கமாட்டாள். விரைவிற் கொண்டுபோங்கள். என்று நியமிக்கவும் இராக்ஷசஸ்திரீகளெல்லாம் ஆரவாரித்துக்கொண்டு சீதாபிராட்டியாரைப் பெரும்போர்க்களத்திற் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். அப்போது ஸ்ரீராமமூர்த்தியின் திருமேனியையே யல்லாமல் வேறொருவரையும் பாராத சீதாபிராட்டியார் இரணக்களத்தைத் தமது திருக்கண்களாற் கண்டார். உடனே விஷபானம் பண்ணினவர்களைப்போலத் தேகமும், அறிவும், சுவாசமும்சோர்ந்து; தாமரைப் புஷ்பமானது அக்கினியில் விழ்ந்தபோது எப்படிப்போய்விடுமோ? அப்படியே துன்பமடைந்து சகிக்கமாட்டாதவளாயழுதுமூர்ச்சித்தாள். ஐயோ! ஸ்ரீகளடைந்தபெருந்துக்கமானது லோகத்திலெல்லாவருத்தங்களைக் காட்டிலும்அதிகமாகுமல்லவோ?

சீதாபிராட்டியார் யுத்தகளத்தைக்கண்டு விசனித்தல்.

கவி.

மங்கையழுதும்வானாட்டு மயில்களழுதார்மழவிடையோன்
பங்கினுறையுங்குயிலழுதாள் பதுமமலர்மேன்மாதழுதாள்
கங்கையழுதாளும்நீங்கை யழுதாள்கமலத்தடங்கண்ணான்
தங்கையழுதாளிரங்காத வரக்கிமாருந்தானழுதார்.

இப்படி. சீதாபிராட்டியாரழுதபோது தேவலோகத்திலுள்ள மயில்கள் போன்ற ஸ்திரீகளெல்லாம் அழுதார்கள். விருஷபவாகனரூடரான சாம்பசிவமூர்த்தியின் இடதுபாகத்திலிருக்கின்ற குயில்போலு மொழியையுடைய

பார்வதிதேவியும்அழுதாள். தாமரைபுஷ்பத்தின்மீது வசிப்பவளாகிய லக்ஷுமிதேவியும் அழுதாள். கங்காதேவியும் அழுதாள். சரஸ்வதிதேவியும் அழுதாள் செந்தாமரை மலர்போன்ற திருக்கண்களையுடைய விஷ்ணுவின் தங்கையென்னும் துர்க்காதேவியும் அழுதாள். கொஞ்சமு மிரக்கமடையாத இராக்ஷசஸ்திரீகளும் அழுதார்கள். அறிவுமுயிருநீங்கி மூர்ச்சையான சீதாபிராட்டியைக் கூட்டமாய்க் காவலாகவந்த இராக்ஷசஸ்திரீகளெல்லாம் தண்ணீர்தெளித்து, வெகுநேரம்வரையினும் சைத்தியோபசாரஞ்செய்து களையாற்றி மூர்ச்சைதெளிவித்து வாரியெடுத்தார்கள். அப்போது சீதாபிராட்டி மூர்ச்சைநீங்கி, மேகம்போன்ற திருமேனியையுடைய ஸ்ரீராமபிரானை மறுபடியும் பார்த்து, சேற்கண்டையைக் கோபங்கொண்டு தாமரையால் மோதியதைக் கண்டதுபோலத் தனதுதிருக்கைகளைத் திருக்கரங்களால் அறைந்துகொண்டும், ஸ்தனங்களின்மீது அடித்துக்கொண்டும், வயிற்றைப்பிசைந்துகொண்டும் கேவிஇருந்தாள்.

மேலும், அக்கினியில் விழ்ந்த பூங்கொடியைப்போல உடல்குழைந்து, மனம்புழுங்கிப் பதைத்து, குலைவுற்றுநடுங்கி, மீனைப்போல மயங்கிச்சோர்ந்து சுழன்றுதுள்ளி, அதிக வருத்தமுற்றுயிர்வாடிக் கைகால்களை உதைத்துதறினள். அந்தப் புஷ்பகவிமானத்தின்மீது திடீரென்று விழுந்தாள். கடகடவென்று புரண்டாள். தேகமெல்லாம் வெயர்த்தாள். மெய்மறந்தாள். வெதும்பினள். மறுபடியுமெழுந்தாள். உட்கார்ந்தாள். தாமரைமலர்போன்ற கைகளைநெரித்துக்கொண்டாள். சிரித்தாள். அழுதாள். ஓகோமூநரே! என்றுள். ஓ அயோத்திநகரத் துள்ளவர்களுடைய கோமானே! என்றுள். ஓ சுவர்க்கமத்திய பாதாளவாசிகளெல்லாம் வணங்குந் திருவடித்தாமரைகளையுடைய ஆண்டவனே! என்றுள். மூர்ச்சையானுள். மீட்டுந்தெளிந்து பிரலாபிக்கத்தொடங்கினுள்.

சீதாதேவிப்பிரலாபித்தல்.

கவி.

உறமேவுமகாத நுனக்குடையார், புறமேதயிலா ரொடுபூண்முலையார்
மறமேபுரிவார் வசமாயினையோ, அறமேகொடியா யிதுவோவருடான்.

முறியாருணர்வேத மொழிந்தவலால், சுதியேதுமிலார் துயர்காணுதியோ
மதியேன்மதியே றுனைவாய்மையிலாய், விதியேகொடியாய் விளையாடுதியோ.

கொடியேனிவைகாண் கிலெனென்னுயிர்கொள், முடியாநமனே முறையோமுறையோ
விடியாவிருள்வா யெனைவீசினையோ, அடியேனுயிரே யருளுடையனே.

எண்ணமயலோடு மிருந்தநுனின், புண்ணுறியமேனி பொருந்திடவோ
மண்ணேருயிரே யிமையோர்வலியே, கண்ணேயமுதே கருணாகரனே.

மேவிக்கனன்முன் மிதிலைத்தலையென், பாவிக்கைபிடித் ததுபண்ணவனின்
ஆவிக்கொருகோன் வரவோவலர்வாழ், தேவிக்கமுதே மறையின்பொருளே.

உய்யானுயர்கோ சலைதன்னுயிரோ, ஐயாவிளையோ ருயிர்வாழலராஸ்
மெய்யேவிளையென்னி விடுத்தகொடும், கைகேசிகருத் திறவோகளிரே.

தகைவானவர்நீ தவிர்வாயெனவும், வகையாதுதொடர்ந் தொருமான்முதலாய்ப்
புகையாடியகாடு புகுந்தடனே, பகையாடியவா பரிவேதுமிலேன்.

இன்றீகலையே பிறரில்லிடைமான், அன்றீயெனவும் பரிவோடடியேன்
நின்றீவது நின்னைகெடுஞ்செருவில்; சென்றீவதொர் நிமைகுறித்தலிரோ.

மேதாவிளையோய் விதியார்விளைவால், போதாநெறியெம் மொடுபோதருநாள்
மூதானவன் முன்னர்முடிந்திடினும், மாதாவுரையின் வழிநின்றனையோ.

பூவுந்தளிருந் தகைபொங்கணைமேல், கோவுந்துயிலத் தருவாய்கொடியார்
வலின்றலைவந்த விருங்கணையின், மேவுங்குளிர்மெல் லணைமேவினையோ.

செய்யார்பெருவேள்வி நிரப்பநெடுஞ், செய்யார்புன லுமிழ்ந்துநியமம்
மெய்யாயவா சகமும்விதியும், பொய்யானவென்மேனி தொருத்தலால்.

ஐயோ! தருமதேவதையே! என் காதலராகிய ஸ்ரீராமச்சந்திரப்பிரபு உன்னிடத்திலே உறுதியானகாதல்கொண்டிருந்தாரே? உன்னைவிட்டு வேறேரிடத்தில் சயனிக்கவு மாட்டாரே: இப்படியவரோடு அநந்யமாயிருந்த நீ இப்போது பாபகிருத்தியங்களை இயல்பாய்த்தொடுத்துக்கொண்டிருக்கின்றவர்களாகிய இராக்ஷசர்கள் வசத்திலே சேர்ந்துவிட்டாய்? ஆ! ஆ! நீயுங் கொடுமைசெய்ய ஏற்பட்டையே: இதுதானோ உன்னை நான் நம்பியிருந்ததற்கு நீ எனக்குச்செய்தகிருபை? ஐயோ! விதியே! பெரியோர்களுடைய வாக்கியத்தையும் வேதநியமத்தையுமே யல்லாமல் வேறுகதியையுடையவர்களல்லாத எங்களையோ துன்பப்படுத்தவந்தாய்? சத்தியமாய் இனியுன்னை நான் நம்பமாட்டேன்: நம்பமாட்டேன்: நீ கொடுமையைக்கொண்டிருக்கின்றாய். அப்படிக்கில்லாமல் எங்கள் மனதைச்சோதிக்க விளையாடுகின்றாயோ?

ஐயோ! இயமதர்ம்மராஜனே! அதிகபாபிஷ்டியானநான் இந்தப்படத்துன்பத்தைப்பார்த்துச் சகிக்கமாட்டேன். என்னுயிரைக்கொண்டுபோ. உனக்கு இதுமுறையாகுமோ? முறையாகுமோ? ஓ அடியேனுடைய பிராணநாதரே! ஓ கிருபாமூர்த்தியே! விடியாதவிருளில் என்னையுட்படுத்திவிட்டீரோ? அடியேன் மிகுந்த ஆசையுடனே இதுவரையிலு மென்பிராணனைவிடாமல் காத்திருந்தது, இப்போது தேவரீருடைத்தாயிருக்கின்ற புண்ணுளதிருமேனியை இரணகளத்தில் வந்து சேவிக்கும்படியாகத்தானோ? ஓ பூலோகத்தவர்களுடைய பிராணஸ்தானமாயிருக்கின்றவரே! ஓ சுவர்க்கலோக வாசிகளுக்குச் சக்தியாயிருக்கின்றவரே! ஓ அடியேனுடைய நேத்திரஸ்தானமானவரே! ஓ தேவாமுர்த்தத்துக்கொப்பானவரே! ஓ கருணாகரமூர்த்தியே! மிதிலாபுரியையடைந்து அக்கினிசாக்ஷியாகப் பாணிபற்றிய அடியேனுடையகையைத்தேவரீர் பற்றின்று தம்முடைய பிராணனுக்கு இப்படிப்பட்ட பொல்லாங்கு வரத்தானோ? ஓ தாமரைபுஷ்பத்தில் வசிக்கின்ற ஜனகையாகிய நாயகரே! ஓ வேதப்பிரதிபாத்திய வஸ்துவே! தேவரீருடைய மாதாவாகிய கௌசல்யாதேவி

யானவர் இனி பிழைக்கப்போகிறதில்லை அதுபோலவே இளையவர்களு முயிர்வாழமாட்டார்கள். உள்ளபடி இப்படிப்பட்டசெய்கைகளை யனுபவிக்கவேண்டுமென்று கொடுமையை யுடையவளாகிய கைகேசியினுடைய எண்ணமிருந்ததோ?

ஓ மகத்தயானைக் கொப்பாகிய ஸ்வாமி! அந்தக்கைகேசி உம்மை நகரத்தைவிட்டுவிடென்ற மாத்திரமே பிரதி உத்தரஞ்சொல்லாமல் மான்கள் முதலான மிருகங்களெல்லாம் பற்றியெரியும்படியான காட்டிலேவந்து, உம்மோடு எதிர்த்துவந்த கவந்தனுதியர்களைக்கொன்று ஜெயம் பெற்றீரே: இப்படிப்பட்ட உம்மிடத்தில் அடியேனுக்கு எள்ளளவும் அன்பில்லாமற் போய்விட்டதே: ஓ என்பிராணபதமான நாயகரே! காட்டினிடத்தில் வந்த வஞ்சமுள்ள மானைப்பார்த்து, இன்றையதினம் இந்தமானைப்பிடித்து எனக்குத்தாரும். இது மற்றவர்கள் வஸ்க்கிறமானை யொத்ததன்று. ஆதலால் அழகாகிய இந்தமானை எனக்குத் தாருமென்று வருத்தத்தோடு தேவருடைய அடியாளாகிய நான் பிடிவாதஞ்செய்து நின்றது, இந்த யுத்தக்களத்திலே உம்மைக் கொல்லும் புண்ணைச் செய்வதாகிய தீமையைக்குறித்துத்தானோ?

ஐயா அதிகபுத்திமானான இளையபெருமாளே! நடக்கிறதற்குக் கஷ்டமாகிய காட்டுவழியில் ஊழ்வினையாலே நீர் எங்களுடனேவந்த நாளையில் உமது தாயார் சுமித்திராதேவியார் உம்மைப்பார்த்து, அப்பா குமாரனே! உன் தமயனுக்கு ஏதேனுமிக்கட்டு நேரிடுமேயானால் அவனுக்குமுன்னாக உன்பிராணனை விட்டுவிடென்று ஆஜ்ஞாபித்தாளே! மாதுருவாக்கியப்படி அந்தக்கிரமத்தில்நின்று முன்னே மாண்டுபோனீரோ? உம்முடைய பிராதாவாகிய பெருமாள் நித்திரைசெய்வதின் பொருட்டுப் புஷ்பங்களும், தளிர்களுங்கொண்டுவந்து கொடுப்பீரே: அப்படிப்பட்ட நீர் சத்துருக்களுடைய கூர்மையான பாணங்களினாலேயுண்டாகிய படுக்கையின்மீது சயனித்துக்கொண்டீரோ? ஓ சக்கரவர்த்தித் திருக்குமாரரே! நெய்சொரிந்து வளர்க்கத்தக்க யாகங்களை அநேகமாகச் செய்து நீண்டவயல்கள்சூழ்ந்து நிறைந்திருக்கின்ற அயோத்தியாநாட்டை ரக்ஷிக்கும்படியான நீர், அடியேனுடைய மேனியைத் தொட்டபடியினாலே வேதமார்க்கமும் ஊழினிலைமையும் பொய்யாய் விட்டன. ஆ! ஆ! என்கற்புடைமைவெகுநேர்த்தி: வெகுநேர்த்தி: உமது மாணவத்தையைக் கண்டபோதே நானுமிறக்கவேண்டும். எனதுமனமோ? மழு—வாள் என்னுமிரண்டும் ஒருங்கு சேர்ந்து பிளக்கினும் பிளவாத கல்மனதையுடையவளாயிருக்கின்றேன். இனி உமது திருமேனியின்மீது விழுந்தாவது இறப்பேனென்றெழுந்தாள். இவ்வண்ணம் சொல்லியெழுந்த சானகியைத் திரிசடை தடுத்து சிலசமாதானமான வார்த்தைகளைச் சொல்லலுற்றாள்.

சீதாபிராட்டியாரின் துயரத்தைத் திரிசடையாற்றுதல்.

கவி.

மாடுறவினைத்துநின்ற வினையெயிற்றரக்கிமாரைப்
பாடுறவுற்றநோக்கிப் பாவையைத்தழுவிப்பற்றித்

கூடினனென்னநின்று செவியிடைக்குறுகிச்சொன்னாள்
தேடியதுகமேயென்னத் திரிசடைமறுக்கத்தீர்ப்பாள்.

இப்படிநானாவிதமாகவருந்தி எழுந்த சீதாபிராட்டியாரைத் திரிசடையென்னு னாவள் தடுத்து, பக்கத்திற்சூழ்ந்துநிற்கின்ற வக்கிரதந்தங்களையுடையவர் களான இராக்ஷசஸ்திரீகள் அயர்த்திருக்கின்ற சமயம்பார்த்து, சித்திரப் பிரதிமைபோன்ற சீதாபிராட்டியாரை வாரியெடுத்துக் கட்டிச்சேர்த்துப் பி டித்துத் திருச்செவியைக் கிட்டி, அம்மாஜானகி உலகம்செய்த தவவுருவே! இராவணன் முன்புமோசமாக மாயமானையனுப்பின விதத்தையும், மாயாஜனகனை யுண்டாக்கினதையும், இந்திரஜித்து மறைந்துநின்று நாகபாசத்தைவிட்டுக் கட்டினதையும், பின்பு கட்டவிழ்ந்துபோன தன்மை யையு நிராலோசனைசெய்து நினையாமலும், அசன்மார்க்கர்களான இந்த ராக்ஷ சர்கள் செய்துவருகின்ற பெருமாயங்களை யெல்லாம் தெரியாமலும், வீணி லே பிராணத்தியாகம் பண்ணிக்கொள்ளும்படி நினைக்கலாகுமா?

அம்மா! அடியேன் தேவரீரிடத்தில் விண்ணப்பஞ்செய்து பண்ணிக்கொண்ட கனவுகளையும், தேவரீர்கண்ட சகுனங்களையும், எம்முடைய கற்பையும், தண்டமுடன் வாளுமுடையவர்களா யிருக்கின்ற இராக்ஷசர்களுடைய பாப கிருத்தியங்களையும், தர்மஸ்தாபன தேவதேவோத்தமரான ஸ்ரீர குநந்தனருடைய சௌரியப் பிரதாபத்தையும், நீர்மறந்துவிட்டீரோ? நம்முடைய ஸ்வாமிக்கு இந்தச் சண்டாளர்கள் கையாலே மரணமும் உண்டோ? சக்கரதாரான இந்தஸ்வாமியினுடைய திருமேனியில் ஒரு பாணமாவதுபட்டுப் புண்ணுண்டாகா திருப்பதைத் தேவரீர் காணவில்லை யோ? இளையபெருமானுடைய திருமுகமண்டலமானது இன்னமும் பிராத காலச்சூரிய பிம்பத்தைப்போலப் பிரகாசிக்கின்றபடியால், அவருடைய பிரா ணனுக் கிளம்பவந்ததென்று திருவுள்ளமயங்கவேண்டாம்.

ஓ பிரஜாநிதையான சீதா பிராட்டியாரே! ஸ்ரீராமமூர்த்தியானவர் மர ணமாயிருப்பாரேயானால், இந்தப் பதினாலுலோகமுந்தியங்கிப்போயிருக்கும். அதுவுமல்லாமல் சூரியனுந்திசைமாறித் தெற்குவடக்காய் நடப்பான். தெய் வம் பொய்த்துவிடும். பிரம்மாவோடே அவன் சிருஷ்டித்த உயிர்களெல்லா மாண்டுபோய்விடும். இப்போ துரைத்தவைகளெல்லாம் இன்னுமில்லாதபடியி ருக்கின்றபடியால் ஸ்ரீராம லட்சுமணர்களும் ஜீவந்தர்களாகவே யிருக்கின் றார்கள். தர்மதேவதையும் இருக்கின்றதம்மா! தேவரீர் வயமாகவருளிய சிரஞ்சீவிப்பட்டத்தைக்கொண்ட வாயுபுத்திரனாகிய ஆஞ்சநேயருக்கு மரண மில்லையல்லவா? அவருடைய பிராணனுக்கேதேனும் சலனமுண்டானால்தேவ ரீருடையகற்பு நிலைக்கு மாறுபாடுண்டாகு மல்லவா? எவ்வெவ்வாறாயினுந் நன் மையென்பது சிறப்புற்றிருக்குமோ? இப்போதிவர்கள் மூர்ச்சையாகி யிருக் கின்றார்கள். அது பிரம்மாஸ்திரத்தின் செய்கையாகும். அதுவுமிதோ நீங்கிவி டப்போகின்றது. தேவர்களுடைய எண்ணமும் தவறிப்போகுமா?

ஓ சீதாதேவியாரே! தேவர்களெல்லாம் தங்கள் சொர்ணமய கரகமலங் களைச் சிரசின்மேற் கூப்பிக்கொண்டு திரிமூர்த்திகளைக்கண்டா லெப்படிப் ப யபக்திசிரத்தையுடனே நிற்பார்களோ? அப்படியே இளையபெருமாளையும் ஸ்வாமியையுங்கண்டு தோத்திரஞ் செய்தார்கள். ஸ்வாமியிறந்ததாக தாங்கள் எண்ணப்படவில்லை. அதையடியேன்கண்ணாரக்கண்டேன். நீர் பயப்படவேண் டாம். ஒருசிறுகிணற்றில்கடல்நீரெல்லாம் அடங்கிவிடுமோ? அதுபோலிந்த அற்பர்களிடத்தில் இந்தத்திவ்யபுருஷர்கள் அடங்கிவிடுவார்களோ? அம்மா! இன்னுமொருதிருஷ்டாந்தஞ்சொல்லுகின்றேன் கேளும். மங்கலியமில்லாத வர்களையும், உயிரில்லாதவர்களையும், இந்தத்தேவவிமானம் பொறுக்கமாட் டாது. இந்தத் திருஷ்டாந்தத்தினாலே தேவரீர் துக்கப்படாம லிருக்கவேண்டு மென்று திரிசடைசொன்னவார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் முன் சந்தே ஹித்தவளைப்போல அவதாரவியல்பாயிருந்த சீதாபிராட்டியார் கொஞ்சஞ் சோகநீங்கி உயிர்கொண்டு திரிசடையைப்பார்த்து, அம்மா விபீஷணனுடைய புத்திரியே! நீ இதுவரையினுஞ் சொன்னவைகளெல்லாம் ஒன்றுந்த வறாமற் சித்தித்த[illegible]அனுபவமா யறிந்தபடியினாலே, உன்னையே யெனக்கு ஆதாரதெய்வமாகக்கொண்டு இத்தனைகாலம் பிழைத்திருந்தேன். அப்படியே இன்னும் இன்றைய ராத்திரிவரையிலு மிருக்கின்றேன்.

அம்மா திரிசடையே! நானெப்போது பெருமானைப் பிரிந்தேனோ? அன்றைக்கே மரணமுண்டாய்விட்டது. என்னுடைய வெட்கமெல்லாம் நீங்கிவிட்டது. ஸ்திரீகளணிந்திருக்கத்தக்க ஆபரணங்களையும், அன்றை க்கே நீக்கிவிட்டேன். ஸ்ரீகோதண்டபாணியு நீலமேகவண்ணருமான என் னுடைய பிராணநாயகரைமறுபடியும் பார்க்கலாமென்கிற ஆசையானது தடுத்தபடியினாலே, என்னுயிரை இத்தனைநாள் வைத்திருந்தேன். துர்ப்பல மான இந்தத்தேஹத்தை நீக்கிவிடுகிறது எனக்கொரு லக்ஷியமா? என்று தாமரசபுஷ்பத்தைநீங்கி மிதிலையில்வந் தவதரித்த மகாலக்ஷ்மியாகிய சீ தாபிராட்டியார் சொன்னாள்.

இராக்ஷசஸ்திரீகள் பிராட்டியைப் புஷ்பகவிமானத்தின்மீது முன்பிருந்த அசோகவனத்திற் கழைத்தேகல்.

கவி.

தையலையிராமன்மேனி தைத்தவேற்றடங்கணாளைக்
கைகளிற்பற்றிக்கொண்டார் விமானத்தைக்கடாவுகின்றார்
மெய்யுயிருலகத்தாக விதியையும்வலித்தாவின்மேல்
பொய்யுடல்கொண்டுசெல்லு நமனுடைத்தூதர்போன்றார்.

இப்பால் ஸ்ரீராமருடைய திருமேனியை நோக்கிக்கொண் டிருக்கின்ற திருக்கண்களை யுடைய ஜானகிப்பிராட்டியை இராக்ஷசஸ்திரீகளெல்லா மிரண் டுபக்கத்திலு நின்று இரண்டுகைகளையும் பிடித்துக்கொண்டு புஷ்பகவிமானத்

னைச்செலுத்தி, எதார்த்தமான பிராணனை இந்தலோகத்தில்விட்டுவிட்டுப் பலாத்காரமாய் விதியைக்கடந்து பொய்யான உடலை ஆகாசமார்க்கமாகக்கொண்டுபோகின்ற யமதூதர்களைப் போல அசோகவனத்திற்கழைத்துப் போனார்கள்.

பிராட்டிகளங்காண் படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

இருபத்துமூன்றாவது,

மருத்துமலைப் படலம்.

இப்படலத்தில் முன்னம் ஸ்ரீராம ருத்தரவின்படி யாவர்க்கும்ஆகாரங்கொண்டுவரப்போன விபீஷணர் மீண்டு யுத்தகளத்தில் இந்திரஜித்தவினுடையபிரம்மாஸ்திரத்தால்இலக்ஷ்மணாதியர்க்குநேர்ந்தவிபத்தையும் அங்ஙன் ஸ்ரீராமரடைந்திருக்குஞ் சோபத்தையுங்கண்டு ஆஞ்சநேயர்பாற்சென்று அவரைக் கனோக்கி யெழுப்பவும் அவரவரை யழைத்துக்கொண்டு சாம்பவந்தரிடஞ்செல்ல, அவர்கூறுவிற் சஞ்சீவிமருந்தைக்கொண்டுவரும்படி ஆஞ்சநேயருக்குணர்த்தி அஃதிருக்குமிடத்தையுங் குணத்தையுமறிவிக்க, உடனேயவர் விஸ்வரூபங்கொண்டு சாம்பவந்தர்கூறிய மார்க்கமே சென்று சஞ்சீவிமருந்துள்ள மலையைக்கண்டுபெயர்த்து அதனைச் செண்டுபோலத் தூக்க, சாம்பவந்தரும் விபீஷணரும் ஸ்ரீராமரிடஞ் சென்று திருவடியை வருடவும்; அவர் திருக்கண்விழித்தருளி நோக்கித் தமது குறை கூறிக் கிலேசித்தபோது சாம்பவந்தர் அனுமான் சென்றிருக்குங் காரியத்தைக் கூறி அவரைத்தேற்ற, வேருடன் சஞ்சீவிமலையைத்தூக்கிக்கொண்ட ஆஞ்சநேயர் யுத்தகளத்துக்கு நேரே ஆகாயமார்க்கமாய் வந்தமாத்திரத்தில் பிரமாஸ்திரத்தினால்மாய்ந்த இலக்ஷ்மணாதியருயிர்பெற்றெழுந்ததுகண்ட ஸ்ரீராமர் அவரையாசீர்வதிக்க, அக்கால் சாம்பவந்தர் வேண்டுகோளின்படி ஆஞ்சநேயர் அம்மலையைமீட்டும் இருந்தவிடத்திற் சேர்க்கும்படிதூக்கிச்செல்லுதல் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமலக்ஷ்மணாதியர்க்கு நேர்ந்த விபத்தை ஆகாரங்கொண்டு மீண்ட விபீஷணர் காணல்.

கவி.

போயினனடையலிப்பாற் புரிகெனப்புலவர்கோமான்
எயினகருமநோக்கி யெய்தியவிலங்கைவேந்தன்
பேயினவுணவுகொண்டு மீண்டவையுறையுள்விட்ட
ஆயினலாகத்தான்வந் தமர்ப்பெருங்களத்தனானன்.

இப்படி சீதாபிராட்டியார் போய்விட்டபிறகு முன்னம் ஸ்ரீராமமூர்த்தி நியமித்தபடி கந்தமூலபலாதிகளைக் கொண்டுவந்த இலங்காதிபதியான விபீ

ஷணாழ்வார் அந்த ஆகாரங்களைப் பர்ணசாலையில் வைத்துப்போட்டுத் தான் ரணக்களத்தில்வந்துசேர்ந்து, யுத்தஞ்செய்துகொண்டிருந்த வானரவீரரெல்லாம் இந்தலோகங்களைச் சிருஷ்டிக்கும்படியாய் நோற்ற பிரம்மாவினுடைய வாக்கினால் மாய்ந்தவர்களைப்போல மாண்டுகிடக்கிறதைக் கண்டு, விஷத்தைப் பானம்பண்ணினவரைப் போலப் பித்துக்கொண்டு மயங்கி, நடந்தவிதமொன்றும் அறியாமல், கண்சுழன்று மனங்கொதித்து, மெய்யுளைந்துளைந்து பெருமூச்சுவிட்டு, ஆவியுண்டோ இல்லையோ என்னும்படியாக மூர்ச்சையாகி, சூழ்ந்திருக்கின்ற பேய்க்கூட்டங்களும் - நாய்களும் - நரிகளும் - தூரமாயோடிவிடும்படியாகச் சமீபித்துவந்து, இளையபெருமாளைக் கட்டித்தழுவின படியே விழுந்துகிடக்கின்ற ஸ்ரீராமமூர்த்தியை மத்தியிற் கண்டு திடுக்கிட்டார்.

எலும்பென்பதும் - உடலென்பதும் - உயிரென்பதும் - ஆகியவிவைகளைச் சினேகத்திற் கிசைந்ததாகச் சொல்வதெல்லாம் பின்னிட்டதேயாகும். அப்படிக்கல்லவென்று அதனிலையைமாற்றி முன்னாக இருந்தவைகளென்று சொன்னாலும், முழுதுமாராய்ந்து பார்த்தபோது அந்த நட்புக்குக்காரணமான அன்பென்று சொல்லப்பட்ட தத்துவத்தி னியற்கையைத் தேவர்களுமறிந்தவர்களல்லாதவர்களானார்கள். ஏனென்றால், விபீஷணாழ்வாரைப்போல அந்தத்தேவர்கள் துன்பமடையவில்லை. இவர் அவ்வளவுதுக்கமடைந்தவராயிருந்தாலும், இந்த ஸ்ரீராமலக்ஷ்மணர்களுக்கு அழிவு உண்டாகாதென்று தெரிந்த ஞானவானாயிருக்கின்றபடியினாலே தனது பிராணனை விடவுமில்லை, புலம்பவுமில்லை. ஆனால் பெருமானுக்கு இவ்வளவுவருத்தம் வந்ததேயென்று அழுது மிகவுமனங்கொதித்து, ஸ்வாமியினுடைய தேகத்தில் காயமொன்றுமில்லாமையால் மனம் நடுங்காமலும் பயப்படாமலுமிருந்தார்.

அன்றியும், மிகுந்த பலாஷ்டிகனான இந்திரஜித்து பிரஹ்மாஸ்திரப்பிரயோகஞ் செய்தான். அதனால் இளையபெருமாளுக்குத் துன்பமுண்டாயது. அந்தத் துன்பத்தைச் சகிக்கமாட்டாமல பெருமாள் மூர்ச்சையானாரென்கிற துட்பக்கருத்தைத்தெரிந்துகொண்டு, இதற்கென்ன உபாயஞ்செய்து இதை நீக்கலாமென்று ஆலோசித்து, ஸ்வாமியினுடைய திருவுளத்தில் பெருந்துன்பமுண்டாயிருக்கின்றதனால் மூர்ச்சையாயினார். இந்த மூர்ச்சை தெளிந்தபிறகு ஸ்வாமியின் திருவுள்ளத்தை யறிகிறது நம்மால்முடியுமோ? இளையபெருமாளுக்குப் பொல்லாங்குண்டானால் ஸ்வாமி, தம்முடையபிராணனை வைத்திருக்கமாட்டாரே: அந்த மாயவாழ்வையுடைய திருட்டுப்பயலோ ஜெயம் பெற்றுப்போயிருக்கின்றானே: என்று கண்களிலிருந்தும் தாரைதாரையாகக் கண்ணீர் பெருகவிட்டுக்கொண்டு, அந்த நாகபாசம் போனதுபோலவே பிரம்மாஸ்திரமும் இன்றைக்கே நாசமாகப்போகிறது. இளையபெருமாளுக்கும் ஒருதுன்பமில்லை, இந்த விசாலமான ரணக்களத்தில் மாண்ட வானரசேனைகளெல்லாம் பிழைத்துக்கொள்ளுவார்கள். அந்தமஹா துஷ்ட நீச

ராக்ஷசனும் ஜெயம்பெறுவானோ? என்று மனோதிடங்கொண்டு, ஸ்வாமியின் மூர்ச்சைதெளிவதற்கு முன்பாக இப்போதே உதவிசெய்யத்தக்க அனேகம்பேர்கள் மரணமடையாமல் இருப்பார்களேயானால் தேடிக் கண்டுபிடித்துக்கொண்டு வருகின்றேனென்று ஒருகொள்ளிக் கட்டையைக் கையிலெடுத்துக்கொண்டு, இரத்தவெள்ளமாகிய சேற்றில் நடந்து சுற்றிப்போனார்.

வானரவீரர்களைத் தேடிச்சென்ற விபீஷணாழ்வார் ஆஞ்சனேயரைக் கண்டு களையாற்றல்.

கவி.

வாய்மடித்திரண்டுகையு முறுக்கித்தன்வயிரச்செங்கண்
தீயுகக்கனக்குன்றிற் றிரண்டதோண்மழையைத்தீண்ட
ஆயிரகோடியானைப் பெரும்பிணத்தமளிமேலான்
காய்சினத்தனுமனென்னுங் கடல்கடந்தானைக்கண்டான்.

இப்படிப்போன விபீஷணாழ்வாரானவர் ஓர்பால் வீரையடித்து இரண்டு கைகளையும் பிசைந்துகொண்டும் — தமது செவந்த திருக்கண்களில் அக்கினிப்பொறிகளைச் சிந்திக்கொண்டும் - மேருமலையைப்போலத் தோள்கள் மேகமண்டலத்தை யளாவும்படியாக ஆயிரகோடியானைப் பெரும்பிண மெத்தையின்மீது ஆஞ்சனேயரென்கிற வீரசிம்ஹமானது மிகுந்தகோபத்தோடும் படுத்துக்கிடக்கிறதைக்கண்டு, தமது கண்களில் நீர்சொரியும்படிப் பார்த்து, உயிரிருக்கின்ற தென்பதை ஊகித்தறிந்து, தேகத்திற் பதிந்திருக்கின்ற அம்புகளை ஒவ்வொன்றாக மெல்லமெல்ல உபாயமாய்வாங்கி, மேகஜலங்கொண்டுவந்து அவருடைய முகத்தைக்கழுவிக் குளிரச்செய்தார்.

அப்போது முன்பு சுவாசம்பிறந்தது. பிறகு ரோமாசிகள் சிலிர்த்து வெயர்த்தன. கண்களைவிழித்தார். தேகத்தைமெல்ல அசைத்தார். வாயில் நீரூறினது. உடனே தூங்கிவிழித்தாற்போலக் கொட்டாவியு முண்டானபோது ஸ்ரீராமநாமத்தை மறவாமல் அறித்தார். அதைக்கண்டு தேவர்களெல்லாம் ஆரவாரித்தார்கள். அப்போது விபீஷணாழ்வான் ஆநந்தபாஷ்பம் பொழிந்து மிகுந்த அன்புடனே ஆஞ்சநேயரைக் கட்டித்தழுவினார். அந்த விபீஷணரை வாயுபுத்திரரும் அன்புடனே சேர்த்தணைத்தழுவி, ஐயா சிரேஷ்டவானே: ஸ்வாமி யாங்கா யெழுந்தருளி யிருக்கின்றாரோவென்று வினவினார்: அதற்கவர் ஆம்; அப்படியே திடகாத்திரரா யிருக்கின்றாரென்று விண்ணப்பஞ்செய்தார். அதைக்கேட்ட மாத்திரமே இந்தமூன்று லோகங்களையும் தாங்கும்படியான தமது திருக்கைகளைக்கூப்பித் தெண்டனிட்டு நிற்கின்ற ஆஞ்சநேயரை விபீஷணாழ்வார் பார்த்துச் சொல்லுகிறார்.

ஐயா அஞ்சனைச்செல்வரே! ஸ்வாமியானவர் தமது திருத்தம்பியார்மீது வைத்த அன்பினாலே மூர்ச்சையாய்க்கிடக்கின்றார். இனித்தெளிந் தெழுந்

திருந்தால் ஸ்வாமி திருவுள்ள மெப்படி முடியுமோ? தெரியாதென்றார். அக்காலாஞ்சனேயர் ஒன்றுந் தோன்றாதவராய்ச் சற்றுநிதானித்து, நல்லது: சாம்பவ ரெவ்விடத்திருக்கின்றார் கண்டீரோவென்று வினவினார். அதற்கவர் அடியேனுக்கு அவரெங்கேயிருக்கிறாரென்றுந் தெரியாது. அவரிறந்துபோனாரோ உயிரோ டிருக்கின்றாரோ தெரியாது. நானிப்போதுதான் வருகிறேனென்றார். அதைக்கேட்ட வாயுபுத்திரர் அவரைப்பார்த்து, ஓ வெற்றிபெறத்தக்க ராக்ஷசர்களுக்கெல்லா மிராஜசிரேஷ்டரா யிருக்கின்ற விபீஷணாழ்வானே! அந்தச் சாம்பவந்தருக்கு மரணமில்லை. அவரெங்கே யிருக்கின்றாரென்று பார்க்கலாம்வாரும் என்றனர்.

ஆஞ்சனேயரும் விபீஷணரும் சாம்பவந்தரைத்தேடி யவரிடமடைய அவர் ஸ்வாமியின் க்ஷேமசங்கதிகளை வினவ இவர்கள் சொல்லுதல்.

கவி.

அன்னவன்றன்னைக்கண்டா லாணையேயரக்கர்க்கெல்லாம்
மன்னவவெம்மைவிட்டு வாழ்விக்குமுறுதிவல்லான்
என்னவுமுயிர்த்தேமைய வேகுதும்விரைவினென்னாச்
சின்னெறியருளிற்சென்றார் சாம்பனைவிழியிற்சேர்ந்தார்.

அந்தச்சாம்பவந்தரைக்கண்டோமானால் நம்மைமறுபடியும்வாழச்செய்யத்தக்க யத்தனங்களை நிறைவேற்றுவதில் வல்லவராக்கும். என்று சொன்னமாத்திரத்தில் விபீஷணாழ்வான், ஐயா அநுமானே! அப்படியானால் நாம் சீக்கிரமாகப் போகலாம் வாருமென்று கொஞ்சதூரம் அந்த விருளிற்போனார்கள். சாம்பவரைத் தங்கள் நல்விதிவசத்தால் அவ்விடத்திற் கண்டார்கள்.

அதிக வார்த்திகத்தினாலும், பிரம்மாஸ்திரம் அழுந்தத் தைத்ததினாலும், தேகத்திலுண்டான காயவருத்தத்தினாலும், மூச்சொடுங்கி ஒன்றுந்தெரியாமல் மயங்கினமனதை யுடையவராயிருந்தும்; இந்த ஆஞ்சநேயரும் விபீஷணாழ்வாரும் வருகின்ற சத்தத்தை வச்சிரமுஷ்டியை யுடையவரான அச்சாம்பவர் தம்முடைய செவிகளாற் கேள்விப்பட்டு, இங்குவரப்பட்டபேர் விபீஷணாழ்வானோ? என்னை அடிமைகொண்ட ஸ்ரீராமமூர்த்தியோ? அநுமானோ? அல்லது எளியேன்பொருட் டையோவென்று இரக்கமுற்றுக் கிருபைசெய்யும்படியாகவருகின்ற தேவர்களோ? மகாரிஷிகளோ? மற்றியாரோ அறியேன். பகைவர்கள் நம்மைக் கொன்றுவிட்டுப் போனபடியால் அவர்கள் வரமாட்டார்கள். நம்மை ரக்ஷிக்கத்தக்கவர்களே வருவார்கள். என்று நினைத்துத் தம்முடைய ஆயாசந்தீர்ந்து, தமதருகில் வந்துநின்று மலையில்வீழுமருவி போலக் கண்ணீர்சொரும்படி அழுதுகொண்டிருக்கின்றவர்களை உணர்ந்து, கண்ணைமூடினபடியே, ஐயா குணபூஷணர்களாய் வந்து என்னருகில் நின்றவர்களே! நீங்கள் யாரென்று கேட்டனர்.

இப்படிகேட்ட சாம்பவருடைய வாக்கியத்தை வினவிய விபீஷணாழ்வாரானவர் பிழைத்தோம் பிழைத்தோமென்று சந்தோஷிக்கவும் சாம்பவந்தர்

அவரை யின்னாரென் றறிந்து, ஐயா விபீஷணாழ்வானே! உம்மோடுகூட நிற்கின்றவர் யாரென்றுகேட்டனர். அப்போது ஆஞ்சநேயர், ஐயா வெற்றியாளரே! உமக்கு மங்கலமுண்டாகக்கடவது. அடியேன் அநுமான். இதோ தண்டனிட்டேன்; என்றுசொல்லக்கேட்ட சாம்பவந்தர் மனமகிழ்ந்து, ஐயா மகாநுபாவனான மாருதியே! இனியெல்லாரும் பிழைத்தோம். இனி யாதொருகுறையுமில்லை. என்று மிகுந்தகளிப்புடனே ஓங்கி உச்சாகங்கொண்டு நின்று, ஐயா! இந்திரஜித்து ஏவின அப்பிரம்மாஸ்திரமே யானபோதிலும், வேதத்திற்கும் வேதம்போ லெழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீராமமூர்த்தியை ஒன்றுஞ்செய்ய மாட்டாதென்னும்படியான அவருடைய வல்லமையை ஆதியிலேயே தெரிந்திருக்கின்றேன். இப்போது அந்தச் சர்வலோகநாயகரான ஸ்ரீராமமூர்த்தி என்னசெய்கின்றார்? அதைத்தெரிவியுமென்றுசொன்னதைக்கேட்ட அஞ்சனாதேவி புத்திரர் கைகூப்பி, ஓ எம்பெருமானாகிய சாம்பவரே! ஸ்வாமியானவர் இளையபெருமாளுக்குத் துன்பமுண்டானதென்றுமிகுந்த துக்கத்துடன் மூர்ச்சையாயிருக்கின்றாரென்றார்.

சாம்பவந்தர் சஞ்சீவிமருந்துள்ள மலையைக்கொண்டுவர அஃதிருக்குமிடத்தையுங் குணத்தையும் ஆஞ்சநேயர்க்கு அறிவித்தல்.

கவி.

அன்னவன்றன்மைகண்டா லாற்றுமேயாக்கைவேறே
இன்னுயிரொன்றேமூலத் திருவருமொருவரேயால்
இன்னதுகிடப்பத்தாழா திங்கினியிமைப்பின்முன்னர்க்
கொன்னியல்வயிரத்தோளாய் மருந்துபோய்க்கொணர்தியென்றான்.

அதைக்கேட்ட சாம்பவர் — ஐயா! உள்ளதுதான். இளையபெருமாளுக்கு ஏதேனும் வருத்தமுண்டாகக் கண்டாரானால் தாம் சகிப்பரோ? அவர்களிருவருக்கும்உடலிரண்டு. உயிரொன்று. மூலவஸ்துக்களானநாராயணர்களே இப்போது ராமலக்ஷ்மணர்களாக வந்திருக்கின்றவர்களே தவிரவேறல்ல அது நிலைமையிருக்கட்டும். ஓமேருமலையை யொத்ததோள்களையுடைய வாயுபுத்திரரே! நீர் க்ஷணப்பொழுதுக்குள்ளாகப் போய்ச் சஞ்சீவியைக் கொண்டுவரவேண்டும். நம்முடைய வெழுபதுவெள்ள வானர சேனையும், ஸ்ரீராமமூர்த்தியும், இளையபெருமாளும், இந்த மூன்றுலோகத்தவர்களும், தர்மதேவதையும், ஸ்வதப்பிரமாணமான வேதமும், உம்மால் வாழ்வடைந்தன. ஐயா அதிபலாஷ்டியான ஆஞ்சநேயரே! தாமதியாமல் நான் சொன்னபடியே சஞ்சீவியைக் கொண்டுவரப் போகக்கடவீர். அந்தச் சஞ்சீவியானது எங்கேயிருக்கின்றதென்றால்? இந்தச் சமுத்திரத்தைத் தாண்டி வடக்குமுகமாய் ஒன்பதினாயிரம் யோசனைதூரம் போனீரேயானால், இமயப்பருவதத்தைச் சேர்வீர். அந்த மலையினுடைய விஸ்தாரம் இரண்டாயிரம் யோசனையுள்ளது. அதைக்கடந்து ஒன்பதினாயிரம் யோசனைதூரம் போவீரேயானால் வமகூடபருவதத்தையடைவீர்.

ஓ சிரேஷ்டரே! அந்தப் பருவதத்திற்கப்பால் வடக்கே ஒன்பதினாயிரம் யோசனை தூரம்போனால் ரிஷபகிரி யிருக்கின்றது. அதைத்தாண்டி ஒன்பதினாயிரம் யோசனைதூரம்போனால் சகலபர்வதங்களுக்கும்பெரியதான மகாமேருவென்னும் வடகிரியிருக்கின்றது. பகைவர்களுடைய பலங்களையெல்லாம் யுத்தத்தாற் றோற்கச் செய்வதாகிய திருத்தோள்களையுடைய ஆஞ்சனேயரே! அந்தமலையின் விசாலத்தைக்கணக்கிடின், முப்பத்திரண்டாயிரம் யோசனைதூரமாகும். அம்மேருவைத் தாண்டி ஒன்பதினாயிரம் யோசனை தூரஞ்சென்றால் நீலகிரியைக்காண்பீர். அந்த நீலகிரிபருவதம் இரண்டாயிரம் யோசனை உயரமுள்ளதாக இருக்கின்றது. அதற்கு நாலாயிரயோசனை தூரத்தில் மேகமண்டலவரையிலுயர்ந்த சஞ்சீவி மலையைக் காண்பீர். அதைக்கண்டமாத்திரமே எங்களுடைய துன்பத்தை முடித்துவிடுவீர். அஃதெப்படியென்றால் - அந்தமலையின்மீது இறந்தவர்களைப் பிழைப்பிக்கின்ற அமிர்த சஞ்சீவியென்கிற ஒருமருந்திருக்கின்றது. தேகம் துண்டுதுண்டாய்ப் பிளந்தாலும் பொருந்தச்செய்யும்படியான மருந்தொன்றிருக்கின்றது. ஆயுதங்கள் தைப்பதினாலுண்டாகிய இரணத்தைப்போக்கு மருந்தொன்றிருக்கின்றது. உருவமழிந்துபோனால் அந்த உருவத்தை மீட்டுங் கொடுப்பதான ஒருநல்லமருந்திருக்கின்றது. இப்படிப்பட்ட மருந்துகள் நான்கும் தேவர்கள் பாலசமுத்திரத்தைக் கடைந்தகாலத்திலெழுந்தன. அவற்றை அந்தத்தேவர்கள் அவ்விடத்து வைத்திருக்கின்றார்கள். நான்குவேதங்கட்கு மெட்டாத பரஞ்சுடராகிய நாராயணமூர்த்தி வாமனாவதாரத்திலுலகங்களை யளந்தகாலத்தில் யான் முரசஞ்சாற்றிச் சுற்றிக்கொண்டு வந்தேன். அக்கால் அம்மலையைக்கண்டு அங்குள்ளமுனிவர்களை இஃதியாதென்று வினவினேன் அவர் அச்சஞ்சீவிமலையின் பெருமையை எனக்குச் சொல்லினார்கள்.

ஓ பொய்க்குச் சமீபத்துஞ்செல்லாத அனுமானே! இந்தச் சஞ்சீவிமருந்தை அநேக தேவர்கள் காத்துக்கொண் டிருக்கின்றார்கள். நீரவர்களைக்கண்டு பின்னிடையாதேயும். அதுவுமல்லாமல் ஒருவர்க்கு மடங்காததாய் நெய்பூசிய வசிகளையுடையதான ஒருசக்கரஞ் சுழன்றுகொண் டிருக்கின்றது. நீர் செய்யவேண்டிய அநுஷ்டானங்களின் பொருத்தன்மையை முடித்து உம்மைச் சூட்சுமசரீரியாகச் செய்துபோகாவிட்டால், அந்தமருந்துகள் உமது கண்ணுக்கு அகப்படாமல் மறைந்துவிடும். ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். என்று அறிவிலதிகசிரேஷ்டரான சாம்பவானவர் வேண்டிய அடையாளங்களையும் அநுபோகங்களையுஞ்சொல்லி, மருந்தை யெளிதிற்கொண்டுவாத்தக்க தந்திரமுஞ் சொன்னார்.

ஆஞ்சனேயர் விஸ்வரூபங்கொண்டு சஞ்சீவி மருந்துள்ள மலையைக்கொண்டுவர ஆகாயம் பாய்தற் சிறப்பு.

கவி.

சங்கிதவேபனியாகி னிறந்தோரும்பிறந்தோரே யெங்கோற்கியாதும்
இங்கிடையூறெய்தாமற் றெருட்டுதிநீபோயெனச்சொல்லி யவரைத்தீர்ந்தான்
ஓங்கினன்வானெடுமுகட்டை யுற்றனன்பொற்றோளிரண்டுந் திசையோடொக்க
விங்கினவாகாயத்தை விழுங்கினனேயென வளர்ந்தான் வேதம்போல்வான்.

அதைக்கேட்ட ஆஞ்சநேயர் — ஐயா புண்ணியசீலரே! அடியேனுக்கு இப்பொழுதே விடைகொடுத்தருளுவீராகில் இதுவரையிலிறந்தவர்களும் பிறந்தவர்களானார்கள். எம்முடைய ஸ்வாமிக்கு யாதொரு பொல்லாங்கும் இடையூறும் வாராதபடி நீங்கள்போய்ச் சமீபமாயிருந்து, உபசாரஞ்செய்து ஆறுதல் சொல்லிக்கொண்டிருங்கள். இதோபோய்வருகிறேனென் றவர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு அதிகவிசையாய்ப்புறப்பட்டு அண்டமுகடுவரையும் ஓங்கி, இரண்டுதோள்களும் இரண்டுதிக்கையளாவ விஸ்வரூபங்கொண்டு, ஆகாசமுழுதும் வளர்ந்து, வேதம்போல நிறைந்து, கிரஹங்களும்-நட்சத்திரங்களும்-கோர்த்த மணிமாலைபோல வரிசையாய் மார்பில் தோன்றவும், ஒருதோளுக்கு மற்றொருதோள் ஆயிரயோசனை விஸ்தாரமென்று யாவருஞ் சொல்லிக்கொள்ளவும், ஒருபாதத்துடன் மற்றொருபாதத்தைப் பெயர்த்து வைக்கிறதற்கு இலங்காபட்டணமும் போதாமற்போய்விடவும், பெரியகைகளை விசுகிறதற்கு நீண்டதிக்குகளும் பற்றாமற்போகவும் வளர்ந்தார். அதிகவிசைகொண்டு புறப்பட்ட அனுமானுடைய விஸ்வரூபத்தின் பெருமையை யாராலிட்டுச் சொல்லவல்லவர்கள்.

இப்படி வாலைச்சிக்கெனத்தூக்கி வாயையுஞ் சிறிது அகலத்திறந்துகொண்டு, பெரியகாலை நிலத்திற்பதியும்படி மிதித்து, மார்பைவிசாலித்து விரித்துக்கொண்டு, திருக்கழுத்தைக் கொஞ்சமுன்சுருக்கி, திருமேனியிலுள்ள ரோமங்கள் செழித்துநிற்க விசைகொண்டு எழும்பினபோது அந்த லங்காபட்டணமானது சமுத்திரத்தில் முழுகிப்போகின்ற கப்பலைப்போலக்கிடுகிடென்று சுழன்றது. இவருடைய வேகத்தால் குலாசலங்களெல்லாம் பாளம்பாளமாய்ப் பிளந்துவிடும்போலிருந்தன. சமுத்திரமானது நாலுபக்கங்களிலும் கால்கிழிந்து பாய்ந்தது. கிழக்கிலுமேற்கிலும் மின்னல் மின்னியது. மலைகளுமரங்களும் மேலெழும்பி விழுந்தன. தேவவிமானங்கள் ஆகாசத்தில் ஒன்றோடொன்று மோதுண்டு இடியைப்போலவிழுந்தன. சமுத்திரங்குழிந்து மேலேழுந்திக்குகளிற் சிதறின. இந்தப்பிரகாரமாக அனுமான் பாய்ந்தபொழுது பெரியமலைகளெல்லாம் அவருடைய வேகத்தாற்பெயர்ந்து பின்றொடர்ந்து வடமுகமாய்ச் சாய்ந்துவிழுந்தன. அவர்தேகத்திற்பிறந்த சண்டமாருதக் காற்றினால் பிதாவாகிய வாயுதேவரு மனந்தளர்ந்து ஓய்ந்துபோவாரென்று தேவர்களெல்லாம் பேசிக்கொண்டார்கள்.

இப்படி மாருதியானவர் ஆகாசமார்க்கமாய்ப் போகின்ற வேகத்தினால் கடல்நீர் வற்றிப்போயிற்று. மேகங்கள் நீங்கிப்போயின. பெருங்காடுகளெல்லாம் வெந்து கரியாய்ப்போய்விட்டன. முன்னே காற்றோடவும், அதன்பின்னே கடலோடவும், மகாவிசையுடன் செல்கின்ற ஆஞ்சநேயருடைய திருமேனியானது பின்னேபோகவும், இவ்வாறு சகலவுயிர்களும் உள்ளங்குழைந்து போகும்படிப்போகின்ற அவருடைய உருவத்தைப்பார்த்து; எல்லாத்தேவர்களும் இவர் தம்முடையபலத்தை முன்பொருநாள்காட்டினபோது கடல் சூழப்பட்ட லங்காபட்டணமென்னு மிராக்ஷசர்கள் வசிக்கின்ற மேட்டைச் சமுத்திரத்திற் சேர்த்துவிட்டார். இந்நாளில் நம்முடைய துக்கமே பறி

யண்டு போய்விட்டதென்று பேசிக்கொண்டார்கள். இந்தப்பிரகாரமாக ஆஞ்சநேயர் மேகமண்டலத்தைத் தாண்டிச் சூரியர்களுஞ் சந்திரர்களுமின்ற மண்டலங்களைக்கடந்து, நக்ஷத்திரங்கள் வாழுகின்ற எல்லையையுந் தாண்டிப்போய், எல்லாச் சாம்ராச்சியங்களையுமுடைய தேவர்களுக்குப்புகலிடமான சுவர்க்கலோகத்தைத்தாண்டி, மூலதாமரைப் புஷ்பத்திற் பிறந்த பிரம்மலோக மின்னங்கொஞ்சதூரந்தானிருக்கின்ற தென்னும்படியாக உயர்ந்த விஸ்வரூபத்துடனே புறப்பட்டுப்போயினர்.

இவரைப்பார்த்த சுவர்க்கலோகவாசிகளான தேவர்களிற் சிலர் வெற்றிபெற்ற கருடபகவானுக்கும், அதனால் ஸ்ரீயப்பதிவசிக்கின்ற பிரமபதத்திற்குப்போகின்றாரென்றார்கள். சிலர் பிரம்மதேவர் தம்முடைய லோகத்திற்குப்போகின்றாரென்றார்கள். சிலர் இவர் மூன்றுகண்களையுடைய உருத்திரமூர்த்தியென்றார்கள். சிலர் தமக்குத் திருவுள்ளமான நான்குவேதங்களுமேட்டுதற்கருமையாய் திருவுருவத்தைக்கொண்டு இந்தப்பிரகிருத பூமியில் விளையாடுகின்ற ஸ்ரீயப்பதியே என்றார்கள். இவருடைய திருமேனியினளவைத் தெரியக்காணலாமென்று இமைகொட்டி முன்பாக நமது கண்ணாலிவைச் செலுத்தினாலும் இன்னுங் காண்கிறதற்கு அளவுடையவராகக் காணப்படவில்லை. இவர் பரமபதத்திற்குப்போகிறவராய்க்காணப்படுகிறாரென்று அநேகதேவர்கள் சொல்லிக்கொண்டார்கள். சிலதேவர்கள் இது உருவமென்றார்கள். சிலதேவர்கள் இது உருவல்ல ஒளியென்றார்கள். சிலதேவர்கள் இந்தப்பிரகாசமுள்ளமேனி அருவென்றார்கள். சிலதேவர்கள் இவ்வெல்லாவண்டங்களுக்கு மேலாகவிருந்து இந்தவண்டங்களெல்லா முண்டாகிறதற்குக் காரணமாயிருக்கின்ற வஸ்துவென்றார்கள்; சிலதேவர்கள் இதுகாற்றுக் கதிதேவதையென்றார்கள்.

இந்தப்பிரகாரமாக எல்லாக்காரியங்களையு நிச்சயித்தறியவல்ல புத்திமான்கள் இந்த ஆஞ்சநேயருடைய விஸ்வரூபப்பிரகாசத்தை இன்னபடியென்று தெரிந்துகொள்ளச் சக்தியற்றவர்களாய் விட்டார்கள். தாமரைமலர்மேல் வாசமாயிருக்கின்ற பிரம்மாவினுடைய அண்டம்வரையிலுயர்ந்து மத்தியவாகாசமெல்லாம் தம்முடைய உருவத்துக்குள்ளடங்கி மறைந்துபோகும்படியாகவும், மேருமலைபோன்ற தோள்களின் வீச்சினால் அண்டப்பித்திகை தேயும்படியாகவும் — விசைகொண்டெழும்பின அந்த வாயுகுமாரருடைய திருமேனியிற் பிறந்த கோஷத்தைக்கேட்டு, திக்குப்பாலகர்களுடைய தலைகளெல்லாம் நடுநடுங்கின. அண்டகோளமெல்லாஞ் சிதறிப்போய்விடும்போலிருந்தது. மஹாபலிச் சக்கரவர்த்தியானவர் வாமனமூர்த்திக்கு மூன்றடிமண்கொடுத்தபோது அவர் தமது திருபாதத்தால் உலகங்களை யளக்கும்படி நீட்டினநாளில் கற்பகப் பூமாலையையளித்த தேவர்களோடு மஹாரிஷிகள் முதலான பெரியோர்கள் யாவரும் தங்களுக்குரிய வேதங்களைப் பாராயணம்பண்

ணிக்கோஷித்ததுபோல, இவ்வாஞ்சநேயர் விஸ்வரூபங்கொண்டு சஞ்சீவிமலையையெடுக்கப் போம்போதும் லோகமெல்லாம் வேதகோஷமாக இருந்தது.

ஆஞ்சனேயர் சாம்பவந்தர்கூறிய மார்க்கமாகச் சஞ்சீவி பருவதத்திற்குச் செல்லுதல்.

கவி.

தேவருமுனிவர்தாமுஞ் சித்தருந்தெரிவைமாரும்
மூவுலகிடையுள்ளோரு முறைமையாற்றொடர்ந்துமொய்த்தார்
தூவினமணியுஞ்சாந்துஞ் சுண்ணமுமலருந்தோக்கும்
பூவுடைமராதெய்வத் தருவெனவிசும்பிற்போனான்.

தேவர்களும் - முனிவர்களும் - சித்தர்களும் - அவர்களுடைய தேவிமார்களும் - சுவர்க்கமத்திய பாதாளத்திலுள்ளவர்களான மற்றவர்களும் - ஆநந்தத்துடனே ஒருமிக்கச்சேர்ந்து மொய்த்துக்கொண்டு, ஆஞ்சநேயர்மீது தூவின ரத்தினங்களும் - சந்தனங்களும் சுகந்தப்பொடிகளும் - பலவித புஷ்பங்களும் மேலேபடிந்திருக்க, புஷ்பங்களால் நிறைந்த தேவகற்பக விருக்ஷத்தைப்போல அஞ்சனாதேவி திருக்குமாரர் ஆகாசமார்க்கமாய்த் தாவிப்போயினர்.

இந்தப் பிரகாரமாகச்சென்ற வாயுகுமாரர் இமவத்பருவதத்தைச் சேர்ந்தார். அங்கிருக்கின்ற இமைபாகாட்ட முடையவர்களான தேவர்களும், யாகாதிகளையுடைய முனிவர்களும், இன்னுந் தர்ம்மமார்க்கத்தைச் சேர்ந்தவர்களெல்லாம், ஐயா ஸ்ரீராமதூதரே! உம்முடையகாரியம் அநுகூலமாகக் கடவதென்று வாழ்த்தினார்கள். அதைத்தாண்டி அப்பால் ஈசானதிக்கில் தோன்றும் கயிலாசகிரியைக் கண்டு சந்தோஷமுற்று, அம்மலையி லெழுந்தருளியிருக்கின்ற உமாமகேஸ்வராகிய சிவபெருமானை தாமரைமலர்போன்ற தமது திருக்கரங்களைக்கூப்பித் தரிசனஞ்செய்துபோகின்றார். அப்படிப்போகின்ற ராமதூதனைக் கயிலாசபதியான பரமசிவனவர் இருந்த அங்குடனே கடாக்ஷித்துப் பார்வதிதேவிக்குக் காட்டி, இவர்தான் வாயுபுத்திரராகிய ஆஞ்சநேயரென்றார். அதைக்கேட்ட பார்வதி அப்படியா? இவரென்ன காரணமாயிவ்வுத்தரதிசை வந்தாரென்று கேட்க, மஹாதேவர் ஓ பெண்மணியே! ஸ்ரீராமமூர்த்தியின் தூதரிவர். இப்போது சஞ்சீவிமருந்தின் பொருட்டுவந்தார். வஞ்சகர்களான லங்காவாசிகள் செய்யும் பொல்லாங்கை நீக்கப்போகிறது சத்தியம். நாளைக்குமகாயுத்தம் நடக்கப்போகிறது. ஆகையால் அதை நாமும்போய்ப் பார்க்கலாமென்றார்.

பின்பவ்வாஞ்சநேயர் ஆயிரயோசனை தூரம் கடந்துபோய் ஹேமகூடத்தைச் சேர்ந்து, அவ்விடத்தில் முடிவில்லாத சந்தோஷங்களை அநுபவித்துக்கொண்டிருக்கின்ற தேவசமூகங்களைக் கண்டு, அப்பாலங்கிருந்து சக்ராத்தைப்போலப் பாய்ந்து, நிஷதபருவதத்தி லுச்சியிற் குதித்தார்.

அளவில்லாத சாஸ்திரங்களைப் பயின்ற அறிவாளர்களுடைய பார்வைக்கும், கிருபாவான்களான தேவர்களுடைய மனதிற்கு மெட்டப்படாத வேகமுடையவரான ஆஞ்சநேயர் அந்த நிஷதபர்வதத்தைக் கடந்து, இந்தப் பூலோகத்திற்கும் அஷ்டதிக்குகளிலுள்ளவைக்கும் - பிரம்மலோகத்திற்கும் அளவுகருவியாகவிருக்கின்ற மேருகிரியின்மீது பாய்ந்தார். இமைகொட்டாத கண்களையுடையவர்களான தேவர்களாலும் இதனிலைமை இப்படிப்பட்டதென்றறியக்கூடாத அந்த வடமலைக்குமேலே போன வாயுகுமாரர், நாவலந்தீவென்று சமுத்திரத்தாற் சூழ்ந்த பூவளாகத்தில் மூன்று லோகத்தவர்களும் கொண்டாடுகிறதற்குக் காரணமான தெய்வத்தன்மையுள்ள சம்புநாவல் விருக்ஷத்தையுந் தமது திருக்கண்களாற் கண்டார்.

அந்த மலையினுச்சியி லிவ்வுலகங்களை யெல்லாம்படைத்த சிருஷ்டிகர்த்தாவினுடைய திவ்வியநகரத்தையும், அந்த நகரத்தின்மத்தியில் சஹஸ்திரவிதழ்களோடுகூடிய மூலசொர்ணதாமரைப் புஷ்பத்தின்மீது நான்குதிருமுகங்களுடனேகூடிய வப்பிர்ம்மதேவர் எழுந்தருளி யிருப்பதையுங்கண்டு இரண்டுகையுங்கூப்பித் தெண்டனிட்டு, அந்தத் தாமரைப்புஷ்பத்திற்கு ஈசான்யதிசையில் ஆயிரஞ்சூரியர்கள் கிரணங்களைவீசிப் பரப்பினதுபோலச் சடைகளைப் பரப்பி தாமரைமலர்போன்ற ஐந்து திருமுகங்களைக்காட்டி மூன்றுலோகத்தவர்களு மர்ச்சித்த புஷ்பங்களுடனே அர்த்தநாரிபாகனாய் எட்டுத் திருத்தோள்களோ டெழுந்தருளி யிருக்கின்ற உருத்திரமூர்த்தியைக்கண்டு வணங்கி, பிறகு நில்லைக்காந்தார விருக்ஷத்தினடியில் தேவர்களெல்லாம் வணங்கும்படியாகவும் - மஹாரிஷிகளெல்லாம் பெருஞ்[illegible]முண்டாகப் பிரம்ம சூத்திரங்களாற் பல்லாண்டுகூறவும் - பூமிப்பிராட்டியாரோடும் பெரியபிராட்டியாரோடும் திருத்துழாய் மலர்ந்த கிரீடதாரியா யெழுந்தருளியிருக்கின்ற சகலகாரண மூலவஸ்துவாய்ச் சர்வலோகபாலராய் வீற்றிருக்கின்ற ஸ்ரீயப்பதியைக்கண்டு சேவித்தார்.

அப்பால் சந்திரனுக்கொப்பாகிய வெற்றிக்குடையானது நிழலிடும்படியாகவும் - அரம்பைமுதலிய சுந்தரவதிகள் அழகியகையிற் கொண்ட சாமரைகளால் தென்றற் காற்றை வீசிக்கொண்டிருக்கவும் - சுவர்க்கலோகவாசிகளான தேவர்களெல்லாம்வந் தடிவணங்கி நிற்கவும் - தேவதுந்துபிமுழங்கவும் - இவ்வளவு வைபவத்துடனே தேவேந்திர னெழுந்தருளி யிருக்கிற நிலைமையைக்கண்டு அவனையுங் கைகூப்பிக்கும்பிட்டுவிட்டு, பின்னர் மலர்களையுடைய கற்பகவிருக்ஷத்தையெட்டி அம்மரங்கள்முழுமையும் தனதழகைக் காட்டுகின்ற சொர்ணபீடங்கள் பிரகாசிக்கும்படியாகத் தேவர்களுக்கிருப்பிடமான மேருவின்சிகரப்பிரதேசத்தில், மூன்றுலோகத்தாருந் தொழும்படியாகிய அஷ்டதிக்குகளையு மிரக்ஷித்துக்கொண்டிருக்கின்ற திக்குப்பாலகர் அந்தந்தத் திசையில் நிற்கின்ற நிலைமையையுங்கண்டு வணங்கி அந்தமலையைவிட்டப்பாற்போயினர். இப்பாலவ்வனுமான் உத்தரகுருக்ஷேத்திரத்தை யடைந்து,

அவ்விடத்திற் சூரியன் தன் கிரணங்களைப் பரப்பிக்கொண்டு இருளைத்துரத்தி உதயமான செய்கையைப்பார்த்துவருந்தித் தமக்குத்தாமே நினைக்கின்றார்.

ஆ! ஆ! இப்பொழுது விடிந்துவிட்டது. இவ்வளவுதானோ என்னே தம்பி பெருமான் மூர்ச்சைதெளிவதற்கு முன்பாகவும் அர்த்தராத்திரியாகிறதற்குள்ளாகவும் சஞ்சீவிமருந்தைக் கொண்டுவந்து மரணமடைந்தவர்கள் துன்பத்தையெல்லாம் நீக்குகிறேனென்று சபதம்பண்ணி வந்தேனே: இப்போது சூரியோதயமாய்விட்டதே: நான் நிச்சயித்தபடி செய்யமாட்டாமற் போனேனே: இனிநான் செய்யப்போகிற தென்னவிருக்கின்றது? என்று சமானரஹிதரான ஸ்ரீராமதூதர் அதிகதுக்கமுற்று, பின்னராலோசித்துப் பார்க்கும்போது சூரியன்தமது இடப்பாகத்தில் உதயமானதைக்கண்டு சூரியோதயமேற்குத்திக்கிலுண்டாவது சம்பவிக்கமாட்டாதேயென்று நிதானித்து, இப்போது விடியவில்லை. மேருபர்வதத்திற்கு வடபால் சூரியன் பிரவேசித்ததால் மேற்பாரிசத்தில் உதயமாகுமென்று சாஸ்திரஜ்ஞர்கள் சொல்லுவார்களல்லவோ? அப்படியே இந்தவடபாரிசத்திற் சூரியனுதயமானான். தென்பாரிசத்தில் இப்போது அர்த்தஜாமராத்திரி. என்று சமாதானம் ஆயினர்.

பிறகு இவ்வுலகத்திற் புண்ணியஞ்செய்த சிலர்கள் ஆண்பெண்ணிருவராய்த்தோன்றி அழியாத ஆயுளைப்பெற்று ஒருவருக்கொருவர் உள்ளமும் உயிரும்போலவொன்றாகி, அளவில்லாத இன்பங்களை அநுபவித்துக்கொண்டு நம்பிகளாய்வாழ்ந்திருப்பவர்களுடைய சுவஸ்திரபத்திர நாட்டையுங் கண்ணுற்கண்டார். இப்படி அக்கினிச்சுவாலைபோற் பிரகாசிக்கின்ற சடாபாரத்தையுடைய உருத்திரமூர்த்தியும் — இலக்ஷுமிதேவியைத் திருமார்பில் தரித்திருக்கின்றவரான விஷ்ணுமூர்த்தியும் — தம்மைவழிபடு மன்பினரைக் குறைபடாவண்ணங் காத்திரக்ஷிக்கும்படிக் கெழுந்தருளி வாழ்கின்ற காணியென்றும், வெற்றிமாலையைத் தரித்த கிரீடதாரியும் தியாகியுமாகிய சோழமகாராஜன் வசிக்கின்ற காவிரிநதிசூழ்ந்த நாடென்றும் யாவராலுஞ்சொல்லுதற்கொப்பான வளப்பமுள்ள அவ்வுத்தரகுருநிலத்தைக் கண்ணுக்கழகாகப்பார்த்து அப்பாற்போயினர்.

இப்பால் விசாலமான மேருபாரிசத்தின்மேலேறி நடக்கும்படியான யோக்கியரும் இப்பிறப்பிலேயே பிரமபட்டம் பெற்றவருமாகிய ஆஞ்சநேயர், எல்லாலோகங்களையும் திரிவிக்கிரமாவதாரத்தால் அளவிட்ட பெரிய பெருமாளுடைய திருமேனியைப்போலக் கறுத்துத் தோன்றுகின்ற நீலகிரியைக் கண்ணுற்பார்த்தார். இவ்வாறு இராத்திரியுங் குறைந்துபோகும்படிக் கறுத்துவிளங்குகின்ற அந்த நீலமலையைத்தாண்டிப் போனபிறகு மேருமலைக்குச்சமமான திருத்தோள்களையுடைய அவ்வாஞ்சநேயர் மஹாவிவேகஜ்ஞானமுள்ளவரான சாம்பவர் தமக்குபதேசித்த சஞ்சீவிபர்வதத்தைக்கண்டு தூரமாகநின்று, அம்மலைமுழுவதும் சூரியனும் பிரகாசத்திற் குறைவடையத்

தக்க பிரகாசம் வாய்ந்த அந்தச்சஞ்சீவிமருந்துகளிருப்பவற்றைக் கண்டு இதுதான்சாம்பவர்சொன்ன அடையாளமென்று குபீரென்று அந்தமலையின்மீது பாய்ந்தார். அப்படி பாய்ந்தமாத்திரத்தில் அந்தமலையானது பாதாளத்தில் மறைந்துவிட்டது. அந்தமலையைக் காத்திருக்கின்ற தெய்வங்கள் நடுங்கி அதிககோபத்துடனே வந்து அனுமானைப்பார்த்து, ஓ பலவானே! நீயாவன்? இவ்விடத்திற்குவந்த காரணமென்ன? என்றுகேட்க அந்தத் தேவதைகளுக்குத்தாம் வந்தகாரியத்தைத் தெரியச் சொன்னார்.

ஆஞ்சனேயர் சஞ்சீவிபர்வதத்தை வேரோடு பேர்த்தெடுத்தல்.

கவி.

கேட்டனவுய்யவேண்டித் தீயற்றிப்பின்கெடாமலெப்பால்
காட்டெனவுணர்த்திவாழ்த்திக் காந்தனகமலக்கண்ணன்
வாட்டலைநேமிதோன்றி மறைந்ததுமண்ணினின்றும்
தோட்டனனனுமன்மற்றைக் குன்றினைவயிரத்தோளான்.

இவ்வண்ணம் வந்த காரியத்தைக்கேட்ட தேவதைகள் ஐயா! அனுமானே இலக்ஷுமணராதி வானரவீரர்களெல்லாம் பிழைப்பதற்குவேண்டிய மருந்துகளைக்கொண்டுபோய் யாவரையும் பிழைப்பித்து மறுபடி இவ்விடத்தில் கொண்டுவந்து காட்டுவீரென்று அநேகமாய்வாழ்த்தி அத்தேவதைகள் மறைந்தன. பிறகு செந்தாமரைக் கண்ணரான சாட்குண்ணிய மூர்த்தியினுடைய கூரிய சக்ராயுதமானது தரிசனையாகி, அதுவுமறைந்துவிட்டது. இனிக்காலதாமதமாகிறதென்று ஆஞ்சநேயர் நினைத்து அந்தச்சஞ்சீவி மலையைத் தம்முடைய வஜ்ஜிரமலைக்குச்சமானமாகிய திருத்தோள்களாற் பூமியினின்றும் பேர்த்துக் கையிலேந்தி ஆகாசமார்க்கமாகப் போகவேண்டுமென்று கருதி, உலகத்துக்கெல்லாந் தாயைப்பார்க்கிலுமிருந்த தயையுள்ளவரான அவ்வனுமான் ஆயிரம்யோசனை விசாலமாகப்பருத்து, மேலே ஆயிரம்யோசனைதூரம் உயர்ந்து, பூமியில் ஆயிரம்யோசனை ஆழ்ந்துநிற்கின்ற அந்தச் சஞ்சீவிபர்வதத்தை ஒருக்ஷணப்பொழுதுக்குள்ளாக ஒருபந்தைத் தூக்குவதுபோல அலக்ஷியமாகத்தூக்கினார்.

சாம்பவந்தரும் விபீஷணரும் ஸ்ரீராமரிடஞ்சென்று திருவடிவருட சுவாமி மூர்ச்சைதெளிந்து தன்மனதிலுள்ள குறைகளைச் சொல்லி வருந்தல்.

கவி.

அத்தலையன்னவ ணையவாந்துணை
இத்தலையிருவரும் விரைவினெய்தினார்
கைத்தலத்தாலடி வருடுங்காலையின்
உத்தமற்குற்றதை யுணர்த்துவாமரோ.

இவ்விடத்தில் ஆஞ்சநேய ரிவ்விதமாயிருக்க, அவ்விடத்தில் விபீஷணாழ்வானும் சாம்பவனும் அதிவேகமாய் இரணக்களத்தில் மூர்ச்சித்துக் கிடக்

கின்ற ஸ்வாமியினிடத்திற்குச் சென்று, தங்கள் கைத்தலங்களால் அவருடைய திருவடித்தாமரைகளைப் பிடித்துக்கொண்டிருக்கின்றார்கள். அப்போது ஸ்ரீராமபிரானவர், வண்டைப்போலுந்தொடரும் ஸ்திரீகளுடையமனதைத் தம்மிடஞ்சாராமல்வேறுடனேநீக்கப்பட்டவைகளும்-எல்லாஜீவகோடிகளும் பெறுவதற்கருமையாகிய கருணையெல்லாந்தாமேகொண்டவைகளும், சமஸ்த வரங்களையுங் கொடுக்கின்றவைகளும்-கொடுமையென்பது சிறிதேனுமில்லாதவைகளும்-இரண்டு தாமரைப் புஷ்பங்களையொத்த தாம்பிரமயமாகிய தமது திருக்கண்களைத்திறந்து, கரடிக்குத்தலைவரான சாம்பவரும்-மிகுந்த புகழையுடையவரான விபீஷணனும்-அநுகதன்மையர்களாய் தங்களுடைய திருமுடியில் கூப்பினகைகளோடும் ஏக்கமுற்றுத் தமக்குப் பக்கத்திலிருக்கின்றதைக்கண்டு கடாக்ஷித்து, அப்பா விபீஷணா! உன்னையனுப்பின காரியத்தை நிறைவேற்றிக்கொண்டு வருத்தமில்லாமல் வந்தாயோ? என்றுவினவிப் பின்பு அதிககீர்த்திமானான சாம்பவரைப் பார்த்து, ஐயா சாம்பவந்தரே! பிழைத்துவந்தீரோ? என்று கேட்டருளிப் பின்னுஞ் சொல்லுகின்றார்.

பொய்யில்லாதவர்களும் அதிக புத்திமான்களுமான ஓ விபீஷண சாம்பவர்களே! நமக்கு மிப்படிப்பட்ட அழிவு நேரிட்டதே: செய்கையற்று உயிரிழந்த நம்முடைய இளையவன்முதலான யாவர்களும் பிழைக்கவில்லையே: இவர்கள் பிழைக்கும்படியாகச் செய்யும் உபாயமுண்டாயிருந்தாற் சொன்னீர்கள். சீதையென்கின்ற ஒருபெண்ணால் மனமழுக்கமடைந்து அறிவையுங்கூட இழந்த என்னுடைய தப்பிதத்தால் நேரிட்ட ஈனத்துவத்தை நானென்னென்று சொல்லப்போகின்றேன்? இந்த லோகமுள்ளபரியந்தம் பெரும்பழியான ஒரு கதையை நிலைநிறுத்திவைத்துவிட்டேன். ஐயோ! முன்னமேயென் தம்பி - அன்று! இதுமாயமான், உண்மையானமானன்று நம்பாதீர். இது நம்மையேயகட்டுபாயின் பேதையரைப் பகட்டுதல் இதற்கருமையோ? என்று சத்தியமாக நல்ல உறுதிகளான வார்த்தைகளைச் சொல்லியுங் கேளாமல், ஒரு பெண்வார்த்தையைத் தடுக்கமாட்டாமற் போனபடியாலித்தப்பழி ஆணியாக நின்றுவிட்டது.

ஐயா அன்பர்களே! அஃதிருக்கட்டும்; இராவணனைக் கண்களாற்கண்டு அவனோடு யுத்தஞ்செய்து என்வல்லமையைக்காட்டி அவனுயிரைவாங்காமல் விட்டுவிட்டு, நான் பூர்வத்திற்செய்த பாவவினையால் எல்லாருடைய பிராணன்களையு மிழக்கும்படிப் பண்ணினேன். பிறகவன் குமாரனான இந்திரஜித்து வந்துயுத்தஞ் செய்தபோது, இலக்ஷ்மணன் தேவதாஸ்திரப் பிரயோகம் பண்ணி அவனைக் கொன்றுவிடுகிறேனென்று சொன்ன நல்லகாரியத்திற்கும் இசையாமல், எனக்கிவ்வளவு அழிவுநேரிடுவதற் கிருக்கிற ஊழினால் தடுத்துவிட்டேன். மேலும் என்னுடையபாவம் என்னைச்செயங்கொண்டபடியால் நானித்தரணக்களத்தி லிலட்சுமணனோடு நிற்காமல், ஆயுதங்களுக்குப் பூஜை

செய்ய வேண்டுமென்று நினைத்துப்போய்விட்டேன். அதனால் நம்முடைய சேனைகளெல்லாம் அழிந்துபோய்விட்டன. இலட்சுமணனும் இறந்துபோனான். நானுமிராக்ஷசர்களைச் செயிக்காமற் போய்விட்டேன்.

ஆதலால், இனியிவ்விடத்திலிருந்து இப்படி பலஹீனத்தன்மையைச் சொல்லிக்கொள்ள வேண்டியதில்லை. இந்தரணக்களத்தி லிறந்துபோன அதிசூரவான்களான எனது நேயர்களையெல்லாம் காணும்படி நான் தேவலோகத்திற்குப்போய்ப் பிறக்கிறதே நல்லது. இல்லாவிட்டால் வாழமாட்டேன். என்தம்பியையும் என் இஷ்டபந்துக்களையு மிழந்தபிறகு துஷ்டர்களான ராக்ஷசர்களையெல்லாங் கொல்லஅஸ்திரப் பிரயோகஞ்செய்து, இராவணனுடைய உயிரைவாங்கித் தேவர்களுக்குதவிசெய்தும் நானதனாலடையப்போகின்ற லாபமென்ன? என்தம்பி இறந்தபிறகு மற்றவர்களை வெல்லக்கூடவேண்டியதென்னவிருக்கின்றது? எனக்குப்பெருங்கீர்த்தியெதற்கு? இராஜ்ஜியமெதற்கு? வீரமெதற்கு? இனியவர்களான பந்துக்களெதற்கு? தர்மமெதற்கு? சாஸ்திரக்கேள்வியெதற்கு? உண்டாகிறலாபமெதற்கு? வேதவிதிப்படி நடக்கிறதெதற்கு? பிரபுத்துவமெதற்கு? ஆ! ஆ! என்னுடைய இரக்கத்தையும் பாழாக்கி, இலட்சுமணனையும் இழந்து, இப்போதிராக்ஷசர்களையெல்லாங் கொன்று வீரதத்துவத்தைக் காட்டுவேனேயானால், பெருந்திருடனும் வஞ்சகனுமாகி விடுவேன். இனி மாண்டுபோவதேயல்லாமல் வேறே செய்யத்தக்ககாரிய மேதேனுமிருக்கின்றதோ?

மேலும்—இவ்வுலகத்தில் வல்லமையுள்ளோரெல்லாம் இதைக்கேட்டால், முன்னே தகப்பனையிழந்தான். பிறகு ஜடாயுவென்பவரு மாண்டார். தனக்குயிருந்த அன்புள்ள இஷ்டர்களு மடிந்தார்கள். தன்னையெல்லாவிதத்திலுங் காத்துக்கொண்டிருந்த தம்பியும் இறந்தான். சீதையையிழந்துபோனான். இப்படியிருந்தும் சந்தோஷத்துடன் இருக்கின்றான். என்றுபலவாய்ச் சொல்லிக்கொள்ளுவார்களே: நானிராக்ஷசர்களை யெல்லாம் வென்று மூலவேரறக் கொன்று அயோத்தியைச்சேர்ந்து, சத்துருக்கனனுந் துணைவனுமானதைப்பிரியை யிழந்து நான்மாத்திரம் உயிருடனே வந்துவிட்டேனென்று மகிழ்ந்து இராஜ்யபாரஞ் செய்கிறது மிகவுநன்றாயிருக்குமல்லவா? இவ்வளவு ஐஸ்வரியமும் இந்த சோகத்தினளவாகவே நின்றுவிடும். ஆனபடியால் இவைகளெனக்கொன்றும் வேண்டாம். இப்போதே யென்பிராணனை என்தம்பியுடனே முடித்துவிடுகிறேனென் றுறுதியாய் ஸ்வாமிசொன்னதைக்கேட்ட ஜாம்பவர் ஸ்ரீராமருடைய திருவடிகளில் வீழ்ந்து தண்டனிட்டுச் சொல்லுகின்றார்.

ஸ்வாமி! அடியேனுக்கொரு விண்ணப்பமிருக்கின்றது. தேவரீர் உமது பிரபாவத்தை யாதுகாரணத்தாலோ மறந்து அறியாமலிருக்கின்றீர்? அடியேன் முன்னமே தேவரீருடைய வல்லமையைச் சிறிது அறிந்திருக்கின்றேன். அதையிப்போது அடியேன் சொல்வது புத்தியீனமாகும். ஏனெனில், தேவர் பெருமையைப் பிரமேந்திராதி தேவர்களும் சொல்லத் தவறி

டுவார்கள். தேவரீரே பிறகு உம்முடைய அநந்தகல்யாண குணங்களையெல்லாந் தெரிந்தருளப் போகின்றீர். இப்போது இந்திரஜித்துவிட்ட ஆயுதம் பிரம்மாஸ்திரமென்று தெரிந்துகொண்டோம். அதெப்படி யென்றால் — இளையபெருமாள்மீதும் அளவில்லாத வானரவீரர்கள் மீதும் பாய்ந்து, யாவரையும் ஏககாலத்திலே ரணக்களத்தில் வீழச்செய்தவெற்றியினாலே தெரிகின்றது. ஓ மன்மதாகாரரான ஸ்வாமி! இது சத்தியமான வாக்காகும். அந்தப் பிரம்மாஸ்திரம் இந்திராதி தேவர்கள்மீதும் தானவர்கள்மேலினும் விட்டபோதினும், அவர்கள் பிராணன்களையெல்லாம் உண்டுவிடும். தேவரீரொருவரைமாத்திரம் ஒன்றுஞ்செய்யமாட்டாது. ஆதலால் தேவரீடத்திற்குவாராமல் மறைந்துவிட்டது. இது பிரம்மாஸ்திர மென்பதற்கு வேறு சாக்ஷியும் வேண்டுமோ?

மூர்ச்சித்திருக்கும் இளையபெருமாளாதி வானரவீரர்களை யெழுப்பும்படி ஆஞ்சநேயர் சஞ்சீவிபர்வதங்கொண்டு வரச்சென்றன ரவர்வந்தவுடனே யாவருமெழுவரென்று சாம்பவந்தர் ஸ்வாமியின் மனதைத்தேற்றிச் சந்தோஷிப்பித்தல்.

கவி. ௧

பெருந்திறலனுமனீங் குணர்வுபெற்றுளான்
அருந்துயர்முடிக்குறு மளவிலாற்றலான்
மருந்தினைப்பொழுதினிற் கொணருமவ்வாய்மொழி
பொருந்தினன்வடதிசைக் கடிதுபோயினான்.

பனிவரைகடந்தனன் பருப்பதங்களின்
தனியரசதன்புறந் தவிர்ந்துசார்ந்துளான்
இனியொருகணத்தின்வந் தெய்துமீண்டிது
துணிவருதுன்பினை துடைத்திதொல்லையோய்.

ஓ எங்களாண்டவரே! தாம்வருத்தப்படாதேயும். அதிக பலவந்தரான அஞ்சனைகுமாரர் மூர்ச்சைதெளிந்தார். அவரெல்லாருடைய துன்பங்களையு நீக்கும்படியான வல்லமையுள்ளவர். எல்லாரையும் பிழைப்பிக்கும்படியான சஞ்சீவிமருந்தைக் கொண்டு ஒரு க்ஷணப்பொழுதுக்குள்ளாக வருகிறேனென்று வாக்குத்தத்தம் பண்ணிவிட்டு வடக்கே போயிருக்கின்றார். அவரிப்போது இமவத்பர்வதத்தைக்கடந்து மேருமலையைத்தாண்டிச் சஞ்சீவிமலையைக்கண்டார். இனியொரு க்ஷணப்பொழுதுக்குள்ளாக வந்து சேருவர். ஓ ஆதிமூலவஸ்துவே! தேவர்கொண்ட துன்பத்தை நீங்கியருளவேண்டும். அந்தமருந்தை அடியேனும், அடியேன் பிதாவாய் லோகசிருஷ்டிநாதரான பிரம்மாவும், திரிநேத்திரதாரியாகியசிவபிரானும், சக்ராயுதபாணியாகிய உபேந்திரனுமல்லாமல், மற்றத்தேவதானவ மனிதர்களில் ஒருவரும் அறியும் வல்லமையுடையவர்களில்லை. அந்தச் சஞ்சீவிமருந்துகள் க்ஷீரசாகரங்கடைந்து அமிர்தமுண்டாக்கினகாலத்தில் அதனுடன்கூட உற்பத்தியானவைகள். நீலமேகஸ்

யாமளரூபரான ஸ்ரீ விஷ்ணுமூர்த்தியினுடைய சக்ராயுதமானது அவற்றையொருவரு மபகரித்துக்கொள்ளவொட்டாமற் காத்துக்கொண்டிருக்கின்றது. அம்மருந்துகள் உத்தர குருக்ஷேத்திரத்திற்கப்பா லிருக்கின்றன. ஸ்வர்க்கலோகத்தி லிருப்பவர்களும் அதைப்போய்ப்பார்த்து வந்தவர்கள் அல்லர்.

ஓ சர்வலோக சரண்யரான எங்களாண்டவரே! அந்தச்சஞ்சீவிமருந்து உண்டானகாலமுதல் அவற்றை யாரும் கையால் தொடவில்லை. அமிர்தத்துடன் உண்டான வல்லமையால் சுவர்க்க மத்திய பாதாளமென்று சொல்லப்பட்ட லோகங்களை ஆதியிற் சிருஷ்டித்த பிரஹம்மதேவ னிறந்தபோதினும், அவனுடைய பிராணனையு மறுபடியு முண்டாக்கிவிடும். அவற்றில் தேகத்திற் பதிந்த ஆயுதமுனையா லுண்டாகியபுண்ணை நீக்கிவிடுவதான சல்லியகரணியென்பதொன்று, முறிந்த அவயவங்களைச் சேரும்படிச் செய்யும் சந்தானகரணியென்பதொன்று, போனவுயிரை மறுபடியும் திருப்பும் மிருதசஞ்சீவினியென்பதொன்று. மேனி யழிந்தவர்களுக்கு மறுபடியும் அந்தமேனியை உண்டாக்கும் சமனியகரணியென்பதொன்று. இப்படி நான்குவித மருந்துகளிருக்கின்றன. ஓ மூலகாரணவஸ்துவானவரே! அந்தமருந்துகள் நிச்சயமாகவரப்போகின்றன. வாயுகுமாரரானவர் தர்மமே தமக்குக்காட்ட அவற்றைக் கொண்டுவரப்போகின்றார். தவிரமாட்டார். தேவரீர்வருத்தப்படவேண்டாம் அவருக்கது அருமையல்ல, என்று வணங்கிச் சாம்பவர்சொல்லவே, அகங்கார மமகாரங்களை யாவருக்குநீக்கி ரக்ஷிக்கின்றவரான ஸ்ரீராமமூர்த்தி மிகுதியும் சந்தோஷித்தவரைப்போலத் தோன்றினார்.

ஆஞ்சனேயர் சஞ்சீவிபர்வதத்தைக் கொணர்தல்.

கவி.

பொன்மலைமீதுபோய்ப் போகபூமியின்
நன்மருந்ததுவுமென் றுரைத்தநல்லுரைக்
கன்மையில்லையென் றயிர்ப்புநீக்கினேன்
என்னலும்வடதிசை யெழுந்ததங்கொலி.

அப்போது ஸ்ரீராமபத்திரர் அச்சாம்பவரைப்பார்த்து, ஓ சர்வோத்தமரே! நீர் கூறியவினைத்துஞ்சரியே: அனுமான் மேருமலையி னப்புறமாகப் போகபூமியிலுள்ள நல்ல சஞ்சீவிமருந்தைக் கொண்டு வருவானென்று சொன்ன இந்த நல்லவார்த்தைக்குச்சந்தேகமுண்டாகமாட்டாதென்று நினைக்கின்றேனென்றருளிச் செய்துகொண்டிருக்கையில், வடதிக்கில் ஒருபெருங்கோஷம் உண்டாயிற்று. அதையாவரும் கேட்டார்கள். சமுத்திரமெல்லாமேலெழுந்து அலைவீசவும், மலைகளெல்லாம் அங்கங்கே பறியுண்ணவும், மகாவிரைச்சலோடு ஆகாசத்திலெழும்பிவருகிற சண்டமாருதம் வடதிசையிலிருந்து புறப்பட்டதாக ஒரு பெரும்பயங்கரம் தோன்றினது. நக்ஷத்திரக் கூட்டங்களெல்லா நிலைமாறி உதிர்ந்து விழ்ந்தன. சூரியமண்டிலமானது சந்திரமண்டிலத்தைப்போலக் குளிர்ந்து மேகங்களுடன் கூடிக்கொண்டது. மலைகளு மரங்க

ளும் வேரோடுபெறியுண்டு ஆகாசமட்டுமெழும்பி மறைந்து மூடிக்கொண்டு சமுத்திரத்தையெல்லாம் தூர்த்துவிட்டன. ஸ்ரீராமவிபீஷண சாம்பவர்களுடைய துக்கநீங்கத்தக்கதாக அனுமான் அஷ்டஹாசஞ்செய்து சப்தித்தார். ஆண்சிம்ஹத்துக்குச் சமமான வாயுபுத்திரர்கர்ஜித்த பெருங்கோஷமானது ஆகாசத்திலுள்ள மேகங்கள் நக்ஷத்திரங்கள் முதலானவைகளும் - பூமியிலுள்ள கடல்மலைமுதலானவைகளும் - பிரதித்தொனி கொள்ளும்படியாகச் செய்துவிட்டது.

அப்போதவ் வாஞ்சனேயரானவர் எப்படி காணப்பட்டாரென்றால் திருப்பாற்கடலைக் கடையும்படி யத்தனித்தபோது அதிகபிரகாசப்பெருந்தியமந்தரகிரியைக் கொண்டுவர வேண்டுமென்று ஸ்வாமிநியமித்தமாத்திரமே, அதை எடுத்துவருவது தம்வலிக்கு அற்பமென்பதுபோல ஏந்திக்கொண்டு ஆகாசமார்க்கமாய் வந்த சமானமில்லாத வல்லமை யுடையவராகிய கருடபகவானைப்போலக் காணப்பட்டார். அன்றியும் உலோகத்தைத் தாங்கிக்கொண்டிருக்கின்ற ஆதிசேஷனுடன் சபதமிட்டுக்கொண்டு போராடி மேருவின் சிகரத்தைத் தன் வல்லமையாற் பேர்த்துக்கொண்டுவந்த தம்முடைய பிதாவாகிய வாயுதேவனுக்குச் சமமாகவுந் தோன்றினர். இதைக்கேட்ட சாம்பவர் - சுவாமி? இதோ அனுமான் வந்துவிட்டார். என்றுசொல்லி முடிகிறதற்குள்ளாக அவரும் பாய்ந்துவந்து, தம்முடைய பாதத்தைப் பூமியில் வைத்தூன்றினர். அந்தத் தெய்வத்தன்மையுள்ள சஞ்சீவிபர்வத மாத்திரம் இந்தச்சண்டாள ராக்ஷசருரில் வருவதற்குக் கூடாமல், ஆகாசத்திலேயே அந்தரமாக நின்றுவிட்டது. ஆஞ்சநேயர்மாத்திரமே ரணக்களத்திற்குவந்து சேர்ந்தார்.

ஆஞ்சனேயர்கோண்டுவந்த சஞ்சீவிபர்வதத்தின் வாடைபட்டவுடன் வானரவீரர்க ளுயிர்த்தெழுதல்.

கவி.

காற்றுவந்தசைத்தலுங் கடவுளுட்டவர்
போற்றினர்விருந்துவந் துவர்தபுண்ணியர்
எற்றமும்பெருவலி யழுகொடெய்தினர்
கூற்றினைவென்றுதம் முருவுங்கூடினர்.

அந்தச் சஞ்சீவிமருந்தினுடையகாற்றுவந்து வீசினவுடனே தெய்வலோகத்திலுள்ள தேவர்களெல்லாம், தங்களிடம் வந்திருந்த வானரவீரர்களையெல்லாம் வாழ்த்திப்போற்றியாசிர்வதித்தார்கள். அவ்வானர வீரர்களெல்லாம் அதிகதேஜஸும், பிருந்தவல்லமையும் பொருந்தினவர்களாகி, யமனைச்செயித்து, இரணக்களத்திற் கிடக்கிற தங்கள்தங்கள் பூர்வதேகத்தைவந்துசேர்ந்துகொண்டார்கள். இராக்ஷசர்களுடைய தேகமெல்லாவற்றையுமருத்தன் முதலானராட்சசர்களை கொண்டுபோய்க் கடலிற்போட்டுவிட்ட படியினாலே, அவைகளெல்லாங் கடலில்மறைந்து ஒழிந்துபோய்விட்டன. மற்றவைகளில் யுத்தத்தால் மாண்டு பட்டுப்போன மரங்களெல்லாமும் உயிர்பெற்று வாழ்வ

டையுமேயானால், குரங்குக்கூட்டங்கள் ஜீவன்பெற்றதைப்பற்றிச் சொல்லவேண்டுமோ? இளையபெருமாளுடைய திருமேனியிற் பதிந்திருந்த பிரம்மாஸ்திரத்தோடு மற்ற அம்புகளெல்லாம் கழன்று விழுந்துவிட்டன. கடுத்துக்கொதித்துக்கொண்டிருந்த அங்கமெல்லாம் குளிர்ப்படைந்தது. மூடியிருந்தகண்கள் சுழன்றன. மூர்ச்சைதெளிந்து அறிவுவந்தது.

இலக்ஷ்மணரெழுந்ததைக்கண்ட ஸ்ரீராமபிரான் சந்தோஷித்துத் தழுவிக்கோள்ளல்.

கவி.

யாவருமெழுந்தன ரார்த்தவேழ்கடற், றூவரும்பேரொலி செவியிற்சார்தலும்
தேவர்கள்வாழ்த்தொலி கேட்டசெங்கணன், எவரின்னினையென விளவலோங்கினன்.

ஒங்கியதம்பியை யுயிர்வந்துள்ளுற, வீங்கியதோள்களாற் றழுவிவெந்துயர்
நீங்கினனிராமனு முலகினின்றிவ, தீங்குளதேவரு மறுக்கஞ்சிந்தினர்.

இப்படி யாவரும் எழுந்தமாத்திரமே சப்தசமுத்திரங்களும் கோஷித்தன. இந்தப்பேரோசை இலக்ஷ்மணப் பெருமாளுடைய திருச்செவியில் வந்து நுழையவும். தேவர்கள் பல்லாண்டுகூறிய ஆரவாரத்தைக்கேட்டு வருத்தநீங்கி எழுந்திருந்தார். அப்படி யுயிர்பெற்றெழுந்த திருத்தம்பியாரைக் கண்டமாத்திரத்தில் ஸ்ரீராமமூர்த்தியானவர் திருத்தோள்கள் பூரிக்கத் தழுவிக்கொண்டு துக்கநீங்கினர். உலகத்தில் யாவருக்கு முண்டாயிருந்த வருத்தமெல்லாம்போய் மயக்கமுமொழிந்தார்கள். அரம்பை ஊர்வசி திலோத்தமை முதலானபேர்கள் நிர்த்தம்பண்ணினர்கள். கின்னரர்கள் சப்தசுரநரம்புகளுள்ள கின்னரங்களைமீட்டித் தேவாமிர்தமுந் தோற்றுப்போகும்படிப் பாடினர்கள். உலகத்தவர்களெல்லாம் சந்தோஷ ஸ்நானம் பண்ணினர்கள். மஹரிஷிகளெல்லாம் வேதபாராயணம் பண்ணினர்கள். வேதபுருஷர்கோஷித்தார். வேதியர்களுடைய ஞானம் விருத்தியாயின. தர்மங்களைத்தும் ஓங்கிவளர்ந்தன. தேவர்களுடைய மனதுகுளிர்ந்தது. பிரம்மாஸ்திரமானது ஸ்வாமியைச் சூழ்ந்துவந்து வணங்கி, ஸ்வாமி! தேவரீருடைய திருத்தம்பியார் பிழைத்துவிட்டார். இனியென்னால் அவருக்கொரு இக்கட்டும் உண்டாகப்போகிறதில்லை. அதற்குத் தேவரீரிடத்தில் அடியேன் வராமையே சாக்ஷியாகும். என்று சொல்லிவிட்டுப் போய்விட்டது.

அப்போது தேவர்கள் ஆனந்தகோஷமிடும்படியாகத் தாயினுமிருந்த அன்பையுடையவராகிய ஆஞ்சநேயரைச் சகலலோக நாயகராகிய ஸ்ரீராமபிரானவர்கண்டு, அதிகசந்தோஷத்துடனே திருக்கண்களில், ஆனந்தபாஷ்பம் பொழியத்தக்கதாக மனமுருகித் தமது திருமார்பிறுகத் தழுவினர். அக்காலவ்வாஞ்சநேயர் ஸ்வாமியினுடைய திருவடிகளில் வணங்கினர். அப்படி வணங்கின வாயுகுமாரரை சுவாமி பார்த்து, அப்பா அஞ்சனைச்செல்வனே! நாங்களெல்லா முன்னாலே தசரதமகாராஜருக்குப் பிறந்து அதிக துக்கத்தால் இந்தரணக்களத்தில் மாண்டுபோய் விட்டோம். இப்போது மறுபடியு முன்

னுடைய வயிற்றில் நானும், இளைய பெருமாளும், சுக்கிரீவன் முதலான யாவரும் பிறந்தோம். ஐயா வேதங்களை நிலைநிறுத்தின பிரதாபசாலியாகிய அஞ்சனையனே! நாங்களெல்லாம் அழிந்துபோக எங்கள் பிராணன்களையெல்லாம் உபகரித்த உன்னுடைய உபகாரத்துக்கு எங்களுயிரைத்தான் உனக்குப் பிரதிபலனாகக் கொடுத்தபோதிலும், அந்த உபகாரத்துக்கீடாகுமா? எங்களைப் பழிக்குள்ளாகாமற் காப்பாற்றி, எங்கள் பகையெல்லாநீக்கி, எங்கள் வமிசங்களையெல்லாம் நீயேரக்ஷித்தாய். என் தம்பிமேற்பட்ட அம்புகளாலே அவன் மாண்டதால், இந்த ஏழுலோகங்களும் மாண்டவைபோலக் காணப்பட்டன. நானுனது உபகாரத்துக்குப் பிரதியென்ன செய்யப்போகிறேன்.

ஸ்ரீராமபிரான் ஆஞ்சனேயரை வாழ்த்திச் சிரஞ்சீவிப்பட்டமளித்தல்.

கவி.

இன்றலைவா தெய்வகுமெய்மொழி, நின்றுலாமுனர் வெளிறுநாலிறும்
ஒன்றுபின்னரோ யுகமிலாநீ, என்றும்வாழ்தியா லினிமேனவலால்.

அப்பா அனுமானே! ஒருக்ஷணப் பொழுதுக்குள்ளாகச் சஞ்சீவிகளைக் கொண்டுவந்து எங்களெல்லாரையும் இன்றைக்கு மாண்டுபோகவொட்டாமல் எங்கள் வாழ்நாளை எங்களுக்குதவிசெய்தாயானதால், நீ யொருக்காலும் வருத்தமு நோயுமில்லாமற் சிரஞ்சீவியாகி, சதாகாலமும் சந்தோஷமாக வாழ்ந்திருக்கக்கடவாயென்று ஆசீர்வதித்தார். மற்றப்பேர்களும் அநுமானுடைய உதவியால் தங்கள் தங்கள் உயிர்களைப்பெற்று மிகுந்தஅன்புடையவர்களாய் அவரைச்சூழநின்று வணங்கி வாழ்த்தினார்கள். அப்பொழுது ஆஞ்சநேயர் சுக்கிரீவமகாராஜனையும் அங்கதன் முதலானவர்களையும் பார்த்து, நாமந்தச் சஞ்சீவியை மலையுடனே கொண்டுவரவேண்டியதற்கு நேரிட்ட முகாந்திரங்களையெல்லாஞ்சொன்னார். அதைக்கேட்ட சாம்பவர் வாயுகுமாரரைப் பார்த்து; ஐயா அதிகபலவந்தரான ஆஞ்சநேயரே! நீர் கொண்டுவந்துதவிய சஞ்சீவி பருவதம் இங்கேயிருக்குமானால், பொய்யாளர்களான ராட்சசர்களில் மாண்டவர்கள் பிழைத்துக்கொண்டே யிருப்பார்கள். ஆகையாலிந்த மலையைக்கொண்டுபோய் மறுபடியுமவ்விடத்தில் வைத்துவிட்டு வரவேண்டும், என்று நியமித்தார்.

சாம்பவந்தர் சொற்படி அஞ்சனேயர் சஞ்சீவிமலையை மீட்டும் உத்தரதிசையிற் கொண்டேகல்.

கவி.

என்றசாம்பவ னியம்பினீதரோ
நன்றுசாலவென் றெண்ணுநாழிகைச்
சென்றுமீள்வனென் றுணர்ந்துதெய்வமாக்
குன்றுதாங்கிடக் குரிசில்போயினன்.

இப்படிசொல்லிய சாம்பவந்தர் வார்த்தையை அனுமான்கேட்டு, ஆம்இது மிகவுநல்லபுத்திதான். என்றங்கீகரித்துக்கொண்டு, இதோ ஒருநாழிகைக்குள்

ளாகக் கொண்டுபோய் வைத்துவிட்டு வருகிறேனென்று அந்தத் தெய்வீக மலையை மறுபடியுந் தூக்கிக்கொண்டு ஆஞ்சநேயர் வடதிசையை நோக்கிச் சென்றார்.

மருத்துமலைப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

இருபத்துநான்காவது,

களியாட்டுப் படலம்.

இப்படலத்தில் தசக்கிரீவன் இந்திரஜித்தினுடையபிரமாஸ்திரத்தினற் பகைவர்கள் தங்கள் சேனைகளோடு மாண்டார்களென்றுஞ் சந்தோஷத்தை வகித்துக் கள்ளுண்டு காமவெறியாய் ஆடல் பாடலாதிகளைச் செய்யும் ஆயிழையாரது அலங்கோலத்தைப் பார்த்துத் தானுங் களித்தவனாய்க் கொலுமுகத்திலிருப்ப, அக்கால் ஸ்ரீராமலட்சுமணருடைய விற்குணத்தொனியோடு வானரசேனைகளினுடைய ஆரவாரிப்பு முண்டாகக்கேட்டுத் திடுக்குற்ற அவ்விராவணனுக்குத் தூதுவர் யுத்தகளத்திறந்தோரெல்லாம் உயிர்த்தெழுந்தனரென்றறிவித்தமை சொல்லப்படுகின்றது.

இராவணனிந்திரஜித்துவினுடைய வெற்றியைக்கேட்டு மகிழ்ந்து ஆடல் பாடல் களைச்செய்யு மாயிழையாரோடு களியாடல் செய்திருத்தல்.

கவி.

இன்னதித்தலையதாக விராவணனெழுந்துபொங்கித்
தன்னையுங்கடந்துநீண்ட வுவகையன்சமைத்ததீதம்
இன்னமுதல்வர்பாட முகத்திடைக்கிடந்தசெவ்வடைக்
கன்னிகன்மாலெனுரை கெனக்களியாட்டக்கண்டான்.

ஸ்ரீராமர் சன்னிதியிலிப்படி நடக்க - இலங்கையிலிராவணன் பிரமாஸ்திரத்தால் எல்லாரு மிறந்துபோனார்களென்று தன்னையறியாத சந்தோஷங்கொண்டு, கின்னர கந்தருவர்கள் தேவகானங்களைப்பாட - கண்களென்கின்ற கெண்டைமச்சியங்களை முகத்திலுடையவர்களான ஸ்திரீகள் கள்ளுண்டுமயங்கியாட - அதைப்பார்த்துக்கொண் டிருந்தான். வித்தியாதர ஸ்திரீகள் - இராட்சசஸ்திரீகள் - தானவஸ்திரீகள் - நாகலோக ஸ்திரீகள் - யக்ஷஸ்திரீகள் - சித்தஸ்திரீகள் - இவர்களெல்லாங் கூட்டங்கூட்டமாக வந்தார்கள். மேனகை - திலோத்தமை - அரம்பை - ஊர்வசி - இவள்முதலாகிய தேவஸ்திரீகள் தங்களுடைய பாதச்சிலம்புகள் கலீர்கலீரென்று சப்திக்கும்படியாகவும், தோளணிந்துயிலும் - சங்கங்களும் - முருடுவாத்தியங்களும் - வானமதிர முழங்கும்படியாகவு நிர்த்தம் பண்ணினார்கள். அவர்களுடைய புஷ்பமாலைகளைத் தரித்திருக்கின்ற கருண்ட குழல்களும், தொங்கிக்

கொண்டிருக்கின்ற குண்டலங்களும், கருண்டவிதழ்களோடுகூடிய சொர்ண புஷ்பங்களும், நெற்றித்திலகமும், இலவமலர்போலுஞ் சிவந்தவாய்களினுள் மறைந்திருக்கின்ற முத்தையொத்த தந்தபந்திகளும், தாமரை மலர்போன்ற சிவந்தகண்களும், அளகபாரங்களாகிய காடுகளினுலேமூடப்பட்ட சந்திரனைப் போலமுகமும் விளங்கிக்கொண் டிருந்தது.

இளங்கிரணங்களை வீசுகின்ற தந்தபந்திகளினுடைய வெள்ளியசந்திரிகைகளும், மிகுந்த வொளியைவீசுகின்ற இரத்நாபரணங்களுடைய இவ்வொளிகளும், சொர்ணம்போலப் பிரகாசிக்கின்ற தீபங்களைத் தோற்கடிக்கும்படியான தேககாந்திகளும் பிரகாசிக்கின்றபடியினாலே; அந்தப் பிரகாசங்கண்டு அவர்களிடத்தில் மோகங்கொண்டு மயங்கித்திரிகின்றவர்களைப் போலவே இராத்திரிகாலமு பயக்கங்கொண்டு அங்கங்கே தத்தளித்து மறையும்படியாய் விட்டது. அக்கால் பெருங்கல்விச் செல்வநிறைந்த குற்றமற்றவழியிலே நடந்து பூர்வவினைப் பிரயோஜனத்தை அறிந்த பெரியோர்களுடைய வாக்கியங்களில் பழகித்தேர்ந்தும்—இவற்றாற்பின்படையும் பிரயோசனமாகிய மோக்ஷநெறியிற்றெளியாத அறிவீனனைப்போலவும், வஞ்சகனாயிருக்குமொருவன் கற்பனைசெய்த மாறுபாட்டைப்போலவும், குடித்தகள்ளினுடைய வேகமானது அவர்களுடைய தேகமுழுவதும் நிறைந்துவிட்டது. அதனால் ஒவ்வொருவரும் அடிக்கடி சிரித்தார்கள். தேகத்தில் வெயர்வையுண்டாயிற்று. இதழ் துடித்தது. முல்லையரும்பையொத்த பற்கள் வெளியே தோன்றின. வேல்போன்ற கண்களின்கடை சிவந்தன. புருவங்கள் வளைந்தன. வாய்வெளுத்தன.

மேலும் — அளகபாரமவிழ்ந்து அவர்களுடைய அவயவங்களை மறைத்துக்கொள்ளவும், தரித்துக்கொண்டிருந்த சேலையும் — மேகலாபரணமும் — சிலம்புகள் அணிந்திருக்கின்ற மாந்தளிர்போன்ற பாதங்களின்மேல் நழுவி விழுந்து விடவும், ஸ்திரீகளெல்லா மயங்கிச் சோர்ந்துவிட்டார்கள். கோர்த்த மணிகளாகிய மேகலாபரணங்களும் - வஸ்திரங்களும் - அவிழ்ந்து, பிழுக்களைப்போல அவர்களை அவமானப்படுத்த யத்தனித்தன. அவர்களுடைய அளகபாரமானது தம்மைச்சேர்ந்தவர்களுக்கு எவ்வித இக்கட்டுவந்தபோதிலுந் தாங்கள் செய்யத்தக்க பெரிய உபகாரமேசெய்வதுபோல, அவர்களுடைய மானத்திற்குப் பங்கம்வரவொட்டாமற் காப்பாற்றினது. மன்மதன் மாந்தர்களை மயங்கச்செய்து வாட்டுந்தொழிலை விட்டுத் தூணியிற் போட்டுவிட்ட அம்பைப்போலத் தங்கள் காமசேஷ்டையினால் மாந்தர்களை மயங்கச்செய்து கொல்லுந் தொழிலைவிட்டுச் சொருகினகண்களையுடைய ஸ்திரீகள், பாடும்பாணி தப்பித் தாளமாத்திரையுங்கடந்து தந்திரிவழியே சுரங்களைச் சேர்க்காமற் சுதிபழிந்த மார்க்கமாய்ச் சுரமழிந்தபாடலைப் பாடினார்கள்.

அன்றியும் புள்ளாங்குழலினாற்பாடும்பாட்டிற்கிசைய சமயமாய்ப்பாடாமல் அதன்சுதியை விரோதமானசனக்ரத்தைக்கொண்டு மாற்றி, குறைவில்லாத

No. 60. இராவணன்பிரமாஸ்திரத்தால்பகைவர் மாண்டாரென்று களியாடல் செய்திருக்கையில் தூதர்கள்பாசறைச்சேதியறிவித்தல்.



ஸ்ரீராமதூதியரிலங்கையைக்கொளுந்தக்கண்ட இந்திரஜித்து சஞ்சீவி மலையைவைத்துவரும் அநுமனெதிரில்மாயாசீதையைவதைத்தல்.

உயுத்தகாண்டம். களியாட்டுப்படலம்.

உருசியையுடைய பாலிலே புளித்ததேனைக் கலந்தாற்போலக் கள்ளுண்ட மயக்கத்தால் வெடித்தகுரலைக்கொண்டு உரத்தகதியிற்பாடினார்கள். ஆரியக்கூத்தில் எல்லாவேடிக்கைகளையுங் கண்டபேர்களுக்கு இந்திரசாலவித்தையைக் காட்டுவதுபோலப் பாடிப்பாட்டின் பாவனைகளைத் தங்கள் அவயவங்களாற் காட்டுஞ் சமர்த்தர்களான ஸ்திரீகள் தங்கள் கண்களாற் பதாதிவீரர்களைக் காட்டி, வாயால் யானையைவெளியிட்டு, கைகளின் அபிநயத்தால் தேரின்வடிவத்தைக்காட்டி, பின்னடக்கப்போகிற கெடுதிக்கு உற்பாதமாக விருந்தார்கள். முன் அழுவதைப்போலக்காட்டிப் பின்சிரிப்பார்கள். பாடியாடுகின்றவர்களை வணங்குவார்கள். தாம் பாடுவதையும் ஆடுவதையும் விட்டுத் தூங்குவார்கள். பவளம்போன்ற வாயிற் சொள்ளுவழியவிடுவார்கள். மயக்கத்தாற் சோர்ந்து ஒருவர்மேலொருவர் விழுவார்கள். கண்களுறங்கத் தியிர்விட்டுக் கொண்டுபோய்ச் செத்த உருவத்தின் மாதிரியாய்க் கள்ளுண்டமயக்கத்தால் விழுந்தும், தங்களுள்ளத்திலுள்ள நினைப்பைத் தங்கள் செய்கையால் உணர்த்தினார்கள்.

எல்லா ஆசைகளையு நீக்கி அகங்கார மமகாரங்களைக்கெடுத்த சுத்தமான மனதையுடையவர்களான ரிஷிகளுக்கெல்லா மயிர்க்கால்கள் தோறும் காமதீர்சுரக்க வண்டுகளைப்போலப்பிறழுகின்ற நோக்கத்தையுடைய ஸ்திரீகளின் கறுத்த நீலோற்பலத்தையொத்த கண்கள் செந்நிறமாய்மாறவும், செவந்த இதழ்கள் வெண்மையாய்விடவும், கங்கணங்கள் பூண்ட கைகள் திருட்டுரோகூசர்களுக்கு முடிவுண்டாகிறதென்று தெரிவிக்கவும், செண்பகமலர்போன்ற மேனியெல்லாம் ஒளிமாண்டுசெத்ததேகத்தைப்போலப் போய்விட்டது, சேற்கெண்டை — இயமன் - வேல் - மன்மதபாணம் - என்றிவைகளையொத்ததாயிருந்தபோதிலும் அவைகளுடைய லக்ஷணங்களையெல்லா மிழந்துவிட்டபெரிய கண்களையுடையவர்களான ஸ்திரீகள்தங்கள் ஸ்தனங்களின்மீது அசைந்து கொண்டிருக்கின்ற சொர்ணமங்கிலியம்பூட்டிய கயிற்றையும், காஞ்சியென்னு மேகலா பரணத்தையும், வஸ்திரத்தையுங்களைந்து - மேகத்திற்குச் சமமாகிய அளகபாரத்தையுஞ் சேர்த்துக்கட்டினார்கள்.

களியாட்டினாற் சந்தோஷித்திருந்த இராவணன்வானரவீரர்களின் ஆரவாரங்களைக்கேட்டல்.

கலி.

முத்தன்னமொழியலாகா முகிழ்நகைமுறுவலெல்லார்
இத்தன்மையெய்தநோக்கி யரசுவீற்றிருந்தவெல்லை
அத்தன்மெய்யரியின்சேனை யார்கலியார்த்தவோதை
மத்தன்மெய்ம்மயக்கமுந்து செவிதொறுமடுத்தமாதோ

இந்தப்பிரகார முத்தொன்றைத்தவிர வேறொன்றையுஞ் சமானஞ் சொல்லப்போகாத தந்தபங்க்திகளையுடைய ஸ்திரீகள் அலங்கோலப்பட்டிருக்

கின்றதை இராவணன் கண்குளிரப் பார்த்துக்கொண்டு ஆகிருக்கபோது, வானரவீரர்கள் ஆரவாரித்த பேரோசையானது மகோன்மத்தனுன அவனுடைய இருபது செவிகளிலும்வந்து நுழைந்தது. அப்படியந்த வானரவீரர்கள் ஆர்ப்பரித்த ஓசையானதுவந்து நுழைந்தவுடனே நாட்டியங்களும், கள்ளுண்டமயக்கமும், தாறுமாறுகப் பாடுகின்றபாட்டுகளும், மத்தளத்தின்சுதியும், பவளம்போன்ற வாயையுடையவர்கள் பிணங்கும் பிணக்கும், அவர்களின் கடைக்கண்பார்வையும், அவர்களுடையகொஞ்சுமொழியும், ஆகியவெல்லாம்இராவணனுக்கு வாடினபுஷ்பத்தைப்போல வெறுப்பாய்விட்டன. யானைகளுடைய மதமொழுங்கவும், குதிரைகள் உறங்கிவிடவும், இராக்ஷசர்கள் பயங்கொள்ளவும், வீரகண்டாமணியைத்தரித்த ஸ்ரீராமலட்சுமணர்களுடைய தெய்வத்தன்மை பொருந்திய வில்லின் நாணொலியானது பாற்கடல் கடைந்தபோது பிறந்த பேரோசையைப்போலத் திடுதிடென்று ஒலித்தது.

அப்போது முத்துகளைத் தோற்கடிக்கும்படியான தந்தபந்திகளமைந்த வாயோடுகூடிய முகங்களுள்ளவர்களும் தங்கள் கண்களென்கிற வேலாயுதத்தால் தாக்குகின்றவர்களுமான ஸ்திரீகளின் கூட்டங்கள், இராவணனுடைய கண்களுக்கு வானரவீரர்களுடைய கூட்டங்களைப்போலத் தோற்றின. மந்தரகிரியால் மறுக்கமடைந்த கடலைப்போலத் தன்மனங்கலங்கி, தன்முகங்களாகிய பத்துச்சந்திரர்களுக்கும் அன்றையராத்திரியானது பகலைப்போலிருந்தது.

தூதுசென்றசாரணர் யுத்தகளத்தில்நடந்த சவிஸ்தாரங்களை வண்டினுருவமாய்வந்து இராவணனுக்குச்சொல்ல அவன் மந்திராலோசனைச் சபைக்குவருதல்.

கவி.

ஈதிடையாகவந்தா ரலங்கன்மீதேறினர்போய்
ஊதினர்வெய்கள்வண்டி னுருவினுற்றவெல்லாம்
தீதிலார்பகைஞரென்னத் திக்கென்றமனத்தன்தெய்வப்
போதுகுபந்தர்நின்று மந்திரத்திருக்கைபுக்கான்.

இவ்வண்ணமிருக்கிற சமயத்தில் தூதுபோய் வண்டின்ருபமாய்வந்த இராட்சசர்களிராவணனுடைய மாலையின்மீதுபோயேறி, புள்ளாங்குழலோசையைப்போல விசைத்துப்பகையாளிகள் ஒருதுன்பமில்லாமற் பிழைத்தார்களென்றும் - இன்னும் அங்கேநடந்த வேவுகாரியங்களையெல்லாமும் - விவரமாகச்சொன்னர்கள். இதைப்புங்கேட்டமாத்திரத்தில்இராவணனனவன் கொதிகொதிக்கின்ற மனதுடனே கற்பகப்பூப்பந்தலைவிட்டு மந்திராலோசனை மண்டபத்திற்கு வந்துசேர்ந்தான்.

களியாட்டுப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

இருபத்தைந்தாவது,

மாயாசீதைப் படலம்.

இப்படலத்தில் மந்திராலோசனைச்சபைக்குவந்த இராவணன் அங்குவந்திருந்தவர்களோடாலோசிக்கும்போது மாலியவா னிதுனும் இனியாவனவுற்றிற் கதிவுறுத்தச் சிறிதுங்கேளாது இந்திரஜித்துவின் கருத்துக் கிசைந்திருக்கையில் சுக்கிரீவன் வேண்டுகோளால், ஸ்ரீராமலக்ஷ்மணர்களும் வானரவீரர்களும் பாணங்களாலும் கொள்ளிக்கட்டைகளாலுமிலங்கையைக்கொளுத்த, அக்கால் சஞ்சீவிமலையைக் கொண்டுபோய் முன்னிருந்தவிடத்தில் வைத்துத்திரும்பிய ஆஞ்சனேய ரிலங்கையின் மேலைவாயிலால் வந்து வீரகர்ஜனை செய்வதறிந்த இந்திரஜித்து மாயாசீதையையுண்டாக்கிக் கொண்டுவந்து அவனெதிரில்வெட்ட, அதுகண்ட ஆஞ்சனேயர் பிரலாபித்து ஸ்ரீராமர்பால்வந்து கூறவும் அவர்சோபித்து விபீஷணர்செய்த சைத்யோபசாரத்தினுற்றெளிந்தபின் இளையபெருமாளும் சுக்கிரீவமகாராஜனும் முதலாயினேருக்கு இன்றைக்கே இலங்கையையு மிராவணனுதியரையு மழித்தழிவிடுவோமென்று புறப்பட, அப்போது ஆஞ்சனேயர் ஸ்ரீராமரை நோக்கி இந்திரஜித்து சீதாதேவியை வெட்டியெறிந்தபின் அயோத்தியைநோக்கிச் சென்றுனென்றுகூறவும் அதனுலவருக்குண்டான கிலேசத்தை இளையவர் தேற்றிக்கொண்டிருக்கும்போது ஆஞ்சனேயர வ்விருவரையு மயோத்திக் கெழுந்தருளும்படி வேண்டிப் பிரயாணமாகுங்கால் விபீஷண ரிவையனைத்து மிந்திரஜித்துவின் மாயையென்றுணர்ந்து ஸ்ரீராமராக்ஞையால் வண்டுருக்கொண்டு சென்று அசோகவனத்திற் சீதையினிருப்பையும் நிகும்பலையில் இந்திரஜித்துவின் யாகப்பிரயத்தனத்தையுங் கண்டு வந்து சுவாமிக்குத்தெரிவித்து அந்தயாகத்தையு மவனையு மழிக்குமாறு தம்மோடிளையபெருமாளை யனுப்பும்படி விண்ணப்பஞ் செய்துகொண்டமை சொல்லப் படுகின்றது.

இராவணன் மந்திராலோசனைக்குவந்தகாலையில் மாலியவான்சிலவற்றுறுத்தல்.

கவி.

மைந்தனுமற்றுளோரு மகோதரன்முதலோராய
தந்திரத்தலைமையோரு முதியருந்தழுவத்தக்க
மந்திரரெவரும்வந்து மருங்குறப்படர்ந்தார்பட்ட
அந்தரமுழுதுந்தானே யவையவர்க்கறியச்சொன்னான்.

இவ்வாறிராவணன் ஆலோசனைச்சபைக்கு வந்தவுடனே, இந்திரஜித்து மகோதரன்முதலான மந்திரிகள் - விருத்தர்கள் - இன்னுமந்திராலோசனைக்கு வரத்தக்கவர்கள் - ஆகிய இவர்களெல்லாம்வந்து இராவணனைச் சூழ்ந்திருந்தார்கள். நடந்தகாரியங்களையெல்லாம் இராவணனே யவர்களுக்கு விவரமாகத்தெரிவித்தான். அப்போது மாலியவானெழுந்து சொல்லுகிறான்.

ஐயா இராவணேஸ்வரா! இந்தலங்கையிலிருந்து ஒருக்ஷணநேரத்திற்குள்ளாக மேருபர்வதமும் பின்னிடும்படிப்பாய்ந்து வல்லமையுள்ள சஞ்சீவிமருந்துள்ள பர்வதத்தைக் கொண்டுவருகிறதற்கு வல்லவன் வெற்றிமாலையைத்தரித்த தோள்களையுடைய அனுமானையாகவேண்டும். ஏனென்றால்—சமஸ்தமான லோகங்களுக்குங் காரணவஸ்துவான ஸ்ரீராமமூர்த்தியையும், புருஷகாரபூதையான பிராட்டியையும், உள்ளபடி கண்டிருக்கிற மகானுபாவனானவனாலேதான். ஆ! ஆ! நம்முடையசேனைகளில் மாண்டுபோனவர்களையெல்லாம் கடலிற்கொண்டுபோய்ப் போடாமல் இரணக்களத்திலேயே யிருக்கச்செய்திருப்போமேயானால், அவர்களெல்லா மிந்தச் சஞ்சீவிக்காற்றுப்பட்டுப் பிழைத்து விடுவார்களல்லவா? எப்போது பிரஹ்மாஸ்திரம் பழுதுபட்டுப் போய்விட்டதோ? இனி அவர்களுக்கு ஒரிடையூறு முண்டாகமாட்டாது. /

மேலும் - இந்தலங்கையென்கிற மலையை இந்தச் சமுத்திரமத்தியிலிருந்து பெயர்த்துப் பூமிகிழியும்படியெறிந்தால், அதைத்தடுக்கிறதற்கு நம்மிலாரிருக்கின்றார்கள்? நாமவர்களுடனே சண்டைசெய்ய முடியுமோ? அந்தவநுமான் மேருமலையைப்பிடுங்கிக்கொண்டு இந்த ஊர்மேலேயெறிவானானால், அதைவிலக்குகிறதற்கு ஒருவராலாகுமோ? அந்த அநுமான் லோகசிருஷ்டியின் முறையைக்கெடுத்து மாற்றவேண்டுமானாலு மாற்றிவிடுவான். ஆதியுமந்தமுமில்லாத பரமேஸ்வரனுடைய கலியாணகுணங்களைச் சொல்வதில் குற்றமற்ற வேதங்களாற்கூறுகின்ற மூர்த்திகள் மூன்றுபேர்களென்பது, ஆலோசியாமல்தான் சொல்லிவைத்ததோ? அநுமானோடுசேர்த்து நான்குமூர்த்திகளென்றே நாமெல்லாம் அங்கிகரிக்கவேண்டும். இறந்துபோனவர்களெல்லாம் இறந்துபோனவர்களாகவேபோக, வேறேபிறவி பிறந்தவர்களைப்போலிருக்கிற நாம் பிழைக்கவேண்டிய மார்க்கத்தைமறந்துபோனோமே: ஆனபோதிலும் - இனியாவது ஜானகியை மரியாதையுடனே கொண்டுபோய்விட்டுத் தர்மசீலர்களான ஸ்ரீராமலட்சுமணர்களை அடைக்கலமடையலாம். என்று சொல்லிப் பின்னு மேல்வினையுங் காரியங்களையெல்லா நன்றாயறிந்தவனான மாலியவானிராவணனைப்பார்த்துச் சொல்லுகிறான்.

ஓ இலங்கேசா! இந்தச் சமுத்திரத்தைப் பானம்பண்ணவல்லவர்களாய், ஆகாசத்தையும் பூமியையும் ஒன்றாய் மறைக்கும்படியான ஆயுதவல்லமையுள்ள பெரிய ராக்ஷசவீரர்களெல்லாம் இறந்துபோனார்கள். இன்னுமிந்தலங்கையு நீயும், உன்பிள்ளை இந்திரஜித்து ஒருவனுமேதான் இருக்கின்றீர்கள். வேறேவீரர்களென்று சொல்லும்படியானவர்கள் யாரிருக்கின்றார்கள்? ஒருவனைக்காட்டு பார்ப்போம். இனிநாம் வெற்றியடைவோமென்பது கனவிலுநினைக்கப்போகாது. ஓ சூலாயுதத்தைக் கையிலுடைய உமாபதியாகிய உருத்திரமூர்த்தியைக் கயிலாசபர்வதத்துடனே பேர்த்தெடுத்த வெற்றித்தோள்களையுடைய இராவணேஸ்வரா! ஒருபாணத்தால் வாலியைச் சுவர்க்கத்திலேற்றிச் சமுத்திரராஜனை ஜெயித்துக் கும்பகர்ணனை மாளும்படிச்செய்த அந்த ஸ்ரீரா

மனை, மழையிலுண்டாகும் குமிழிக்குச் சமமான இந்தராக்ஷசர்களோ போர்க்களத்தில் வெல்லச் சமர்த்தர்களென்றான்.

மாலியவான் கூறியபுத்திமதிகளை இராவணன் நிக்கிரகித்தபோது இந்திரசித்து சிலவார்த்தைகூறல்.

கவி.

என்றுமாலியவான்கூறப் பிறையெயிற்றெழிலிநாப்பண்
மின்றெரிந்தென்னநக்கு வெருவரவுரப்பிப்பேழ்வாய்
ஒன்றினொன் றசனியென்ன வுத்தரியுரைத்தமாற்றம்
நன்றுநன்றென்றுசீறி யுரைத்தனனவத்தையோரான்.

இப்படியாகக்கூறிய மாலியவானது வார்த்தையைக்கேட்ட இராவணன், மேகத்தினது மத்தியில் மின்னற்கூட்டங்கள் பிரகாசித்ததுபோல, பிறைபோலும்வளைந்த கோரதந்தங்கள் வெளியிற்றெரியச் சிரித்து யாவருமஞ்சும்படியாகப்பேரொலியோடு அதட்டி பிளந்த வாய்களிலுள்ள உதடுகளை மடித்து இடியேறுபோலுங்கர்ச்சித்து மிகவுங்கோபித்து அடாபாட்டா! மாலியவானே! நீ சொல்லிய வார்த்தையானது மிகவுநேர்த்தி! மிகவுநேர்த்தி! உனக்குதான் இதுதகுமென்று, நன்மையிதுவென் றுணருவதாலறியாத இராவணன் - இராக்ஷசர்களெல்லா மாண்டாலுஞ்சரி, கம்பீடத்திலுள்ள அளவில்லாத ஆயுதங்களெல்லாம் அழிந்தாலுஞ்சரி, மிகுந்த அழகுடையவளான அந்தச்சீதையை என்னாசையைக்கெடுத்து மறுபடியும் விட்டுவிடுகிறதற்காகவா நான்சிறைபிடித்துக்கொண்டுவந்தேன்? என் பிள்ளைதானெதற்கு? மற்றபந்துக்கள்தானெதற்கு? பயந்து உயிர்வாழவேண்டுமென்று எண்ணியிருக்கின்ற நீங்களெல்லாரும் பிழைத்துப்போய்விடுங்கள். நாளைக்கு நான் ஊழித்தீயைப்போலப் புறப்பட்டு மனிதர்களையும் குரங்குகளையும் சிந்தச்சிதற வடித்துப்போடுகிறேன் என்றான்.

அப்போது இந்திரஜித்து-தகப்பனைப் பார்த்து, ஐயா! உமக்கு அங்கீகரிக்கக்கூடுமானால் எனக்குத் தெரிந்தகாரிய மொன்றிருக்கின்றது. நான் பிரஹ்மாஸ்திரத்தை அக்கினிமுன்னிலையிற் பூசைசெய்து அந்த ஸ்ரீராமன்மீது ப்பிரயோகித்தேன். அஃதவனுடைய மேனியைத் தொடாமலே வந்துவிட்டது. ஆகையால் அவன்மனிதனல்லன். தேவனுமல்லன். இருடியுமல்லன். விபீஷணன் சத்தியமாகச்சொன்ன யானெனதென்னும் செருக்கற்றவர்களால் தியானிக்கப்படுகின்ற ஸ்ரீயப்பதியே இப்படி யவதரித்தானென்று சந்தேகமில்லாமல் தெரிந்துகொண்டேன். அது நிற்கட்டும்: அதைச்சொல்லுகின்றது வீரலக்ஷணத்துக்குப் பொருந்தாது வருகிறது வரட்டும், ஐயா வீரவானே! இன்னொரு தந்திரமிருக்கின்றது. நான் நிகும்பலைக்குப்போய் அந்தயாகத்தைச் சீக்கிரத்திற் செய்துமுடித்தால் நம்முடைய சேனைகளெல்லாம் பிழைத்து, நமக்குண்டாயிருக்கின்ற துன்பமெல்லாம் நீங்கிவிடுமென்றான்.

இதைக்கேட்ட ராவணன், ஆம்: அதுநல்லதுபிரியந்தான். அப்பா! அப்படியே பரிவாய் நிகும்பலையாகஞ் செய்யக்கடவாய் என்றான். அதைக்கேட்ட இந்திரஜித்து, ஐயா! அந்தயாகம் நான்செய்கிறதை உன் தம்பிவிபீஷணன் அவர்களுக்குச் சொன்னால், அந்தப் பகையாளிகள்வந்து நான்செய்கிற யாகத்தை முடியாதபடி அழித்துவிடுவார்களே யென்றான். அதற்கிராவணன் அவர்கள்வாராதபடி செய்கிறதற்கு என்ன உபாயம் பண்ணலாமென்றான். அதற்கிந்திரஜித்து சொல்லுகிறான்.

இந்திரசித்து நிகும்பலையாகம் இடையூறின்றி முடியவெண்ணி மாயாசீதையையுண்டாக்கி அநுமான்முன்பு மாய்ப்பேனெனச் செல்லுதல்.

கவி.

சானகியுருவமாகச் சமைத்தவட் கமைகண்ட
வானுயரநுமன்முன்னே வாளியிற்கொன்றுமாற்றி
யானெடுஞ்சேனையோடு மயோத்திமேலெழுந்தேனென்னப்
போனபின்புரிவதொன்று மிலாதவர்துயரம்பூண்பர்.

ஐயா இராவணேஸ்வரா! ஜானகியைப்போல ஒருராக்ஷசியை ஏற்படுத்திக்கொண்டுபோய் அனுமான் கண்முன்னிறுத்தி என்கைவாளால் அந்த மாயாசீதையைக் கொன்றுவிட்டு என்சேனையோடுங்கூட அயோத்திக்குப்போகிறேனென்று வழிகாட்டிவிட்டுப் போய்விட்டால், அவர்களெல்லாம் அந்தத் துக்கத்திலேமூழ்கி, இங்கே சீதை இறந்துபோய்விட்டாள். இனி இவ்விடத்திலிருப்பதினால் பிரயோசனமில்லை. அவ்விடத்தில் நம்முடைய தம்பிமாரும்—தாய்மார்களும் - மற்ற பந்துக்களும் - நம்முடைய பட்டணமும் - அழிந்துபோய்விடுமே: என்கிற வருத்தத்தினால் சோர்ந்துகுன்றி சேனையும் தாங்களுமாய்ப் போய்விடுவார்கள். அப்படியவர்கள் போகாவிட்டாலும் அனுமானையாவது அவ்விடத்திற்கனுப்பி நடந்தகாரியத்தைத் தெரிந்துகொண்டாலேயல்லாமல், தங்கள் விசனத்தைப் பொறுத்துக்கொண்டிருக்கமாட்டார்கள். அதற்குள்ளாக நான் நிகும்பலைக்குப்போய் யாகத்தை முடித்துக்கொண்டு, அதிலுண்டாகிற ஆயுதங்களினால் அவர்களையெல்லாங்கொன்று உமக்கு வெற்றியை உண்டாக்குகிறேனென்றான். அதுகேட்டவிராவணன் அப்படிச்செய்கிறது நல்லதென்று சமாதானப்பட்டான். வேறொருராட்சசியைச் சீதாபிராட்டியைப்போல மாயஞ்செய்துகொண்டுவருகிறதற்கு இந்திரஜித்துப்போயினான்.

வானரவீரர்கள் இலங்காபுரியைக் கொளுத்தல்.

கவி.

அத்தொழில்புரிதனன்றென் றன்னையுமையவெண்ணித்
தத்தினனிலங்கைமூதூர்க் கோபுரத்தும்பர்சார்ந்தான்
பத்துடையெழுசான்ற வானரப்பரவைபற்றிக்
கைத்தலந்தோறோர்கொள்ளி யெடுத்தெரிவலங்கொண்டானை.

இவ்விடத்தில் இப்படியிருக்க- அவ்விடத்தில் சுக்கிரீவமகாராஜர் மற்றவானரவீரர்களோடும் ஸ்ரீராமமூர்த்தியைத் தண்டஞ்சமர்ப்பித்து, ஸ்வாமீ! இந்த லங்கைக்கோட்டையைச் சீக்கிரமாகச் சுட்டுவிடுகிறோமென்றார்கள். ஸ்ரீராமரும் அதற்கிசைந்து அப்படியே செய்யுங்களென்றார். உடனே பதினெழுவெள்ள வானரசேனைகளும் ஆளுக்கொரு கொள்ளிக்கட்டையைக் கையிலெடுத்துக்கொண்டு சுக்கிரீவமகாராஜனுடனே புறப்பட்டுப்பாய்ந்து இலங்காபட்டணக் கோட்டையைப்போய்ச் சேர்ந்து, கோட்டைவாயிலில் வெள்ளைநிறத்து மேகங்கள் மின்னல்களை வரிசைவரிசையாக மின்னிக்கொண்டு நுழைகிறதுபோல அங்குள்ளவர்களெல்லாம் பீதியடையும்படியாகவும் - நாலுபக்கங்களிலும் இந்தலங்கைக்கு நாசகாலம் வந்துவிட்டதென்று சொல்லத்தக்கதாகவும் – இராத்திரியில் நக்ஷத்திரங்கள் பூமியில் விழுகிறதுபோல அளவில்லாத கொள்ளிக்கட்டைகளை வீசியெறிந்தார்கள். யானைகளையொத்த வானரங்கள் வீசியெறிந்த அந்தக்கொள்ளிக்கட்டைகள், ஸ்ரீராமமூர்த்தி சமுத்திரத்தின்மீது ஏவின அக்கினியாஸ்திரங்களைப் போல, வஞ்சகனான ராவணனுடைய லங்கையின்மீது மேலும்மேலும்போய்விழுந்தன. இப்படிநெருப்பெரியுங்கொள்ளிகளிலங்கைக்கோட்டையின்மீது நெருங்கினவுடனே இலங்காபட்டணமானது ஸ்வாமிபிரயோகித்த அம்புகள்பட்டுச் சமுத்திரம்வேகிறதுபோல வெந்தது. அக்கால்பெருங்காட்டில் நெருப்புப்பற்றியெரியும்போது அதில் வாசஞ்செய்திருந்த பக்ஷிசாதிகள் சப்தித்துக்கொண்டு ஆகாசத்திலெழும்பினதுபோல இலங்கையிலுள்ளவர்களெல்லாம் பெருங்கூச்சலிட்டுக்கொண்டு அந்தரத்திலெழும்பிப் போனார்கள், மூன்றுலோகத்தவர்களாலும் நித்தியசூரிகளாலும் வணங்கும்படியான வில்வீரசிகாமணியாகிய இளையபெருமாளும் ஸ்ரீராமமூர்த்தியும், நெருப்புக்குச்சமானமான சிலபாணங்களைப்பிரயோகிக்க, இலங்கையிலுள்ள மாடகூடகோபுரங்களெல்லா மலைகளைப்போல இடிந்து விழுந்தன.

அநுமார் சஞ்சீவிபர்வதத்தை இருப்பிடத்திற்சேர்த்து மீண்டு இலங்கையின் மேலைக்கோட்டைவாசலில் வந்துகர்ச்சித்தல்.

கவி.

இத்தலையின்ன நிகழ்ந்திடுமெல்லைக்
கைத்தலையிற்கொடு காலினெழுந்தான்
உய்த்தபெருங்கிரி மேருவினப்பால்
வைத்தநெடுந்தகை மாருதிவந்தான்.

இங்கேயிப்படி நடந்துகொண்டிருக்கும்போது முன்னே தம்முடைய திருக்கைகளைச் சிரசின்மேல் வைத்துக்கொண்டுபோய் மருந்துமலையைப் பேர்த்தெடுத்துக்கொண்டு வந்து மறுபடியும் அதை மேருமலைக்கப்புறத்தில் வைத்துவிட்டுவரப்போன ஆஞ்சனேயர் அவ்விலங்கையின் மேற்குவாசலில் வந்துசேர்ந்து வீரகர்ச்சனைசெய்தார். அக்காலத்து ஓசையைக்கேட்ட அந்த

விலங்கைப்பட்டணத்தி லுள்ளவர்கள். இத் தகனியுடைய கருடபகவான் சிறுவதைக்கேட்ட பாம்புக்குலங்களை யொத்துப் பயந்தார்கள்.

இந்திரசித்து மாயாசீதையைக் கொண்டுவந்து ஆஞ்சநேயர்முன்பு நிறுத்திச் சிலவார்த்தைகூறல்.

கவி.

சானகியாம்வகை செய்துசெனைத்தோர்
மானினையானை வடித்தழல்பற்று
கனைகுவானொரு கைக்கொடுநேத்தான்
ஆனவனன்னிலையின்னவைதைத்தான்.

இப்படிச் செற்றுவிசனில் வந்துசேர்ந்த வாயுபுத்திரருக்கு முன்பாக எல்லாத்தந்திரங்களிலுஞ் சமர்த்தனும் இயமனையுஞ்செயப்பெற்றுச் சொட்டுப்போட்டவனுமான இந்திரஜித்தனவன் ஜானகியைப்போலொருமாயப்பெண்ணை யுண்டாக்கி, அவளுடைய தலைமயிரை இடதுகையிற்பற்றி, வலதுகையி லொருவாளையுருவிக்கொண்டு அதிக கோபத்துடனே அநுமானைப்பார்த்துச் சில சொற்களைச் சொல்லத்தொடங்கினன்.

ஓ தூதனே! நீங்கள் இவள்நிமித்தமாகவந்து இவ்வளவு சண்டைசெய்தீர்கள் அல்லவா? இப்போது என்பிதாவாகிய ராவணேஸ்வரன் இவளைவெறுத்துத் தள்ளிவிட்டான். காளிவருடைய ஆவியை இதோ உண்டுவிடப்போகிறேன். அப்பாலுங்களாலானதைப் பாருங்களென்றான். அதுகேட்ட ஆஞ்சநேயர் புத்திமயங்கிப் பரவசப்பட்டு அந்தமாயாசீதையைப் பார்த்து, இவர்தானே நாங்கண்ட சீதாபிராட்டியார்? ஐயோ! நம்முடையவாழ்வு போய்விட்டதே. இதைத்தடுக்கிறதற்கு வேறேருபாயமுந் தோற்றவில்லையே; என்று கலங்கி உயிருண்டோ இல்லையோவென்னும்படி வாயுலர்ந்து மூர்ச்சையடைந்து மீட்டுந்தெளிந்து யோசித்தனர்.

அநுமார் இந்திரசித்துவுக்குச் சிலநீதிவார்த்தைகூற அதனைக்கேட்ட இந்திரசித்து சிலபொய்வசனம்புகன்று மாயாசீதையைவெட்டி நிகும்பலையாகஞ் செய்யச்செல்லுதல்.

கவி.

யாதுமினிச்செய வில்லெனவென்றுஞ்
நீதியுரைப்பது நேரெனவோராக்
கோதில்குலத்தொரு நீருமைமிக்காய்
மாதையொழித்தல் வசைத்திறமென்றே.

இனிச்செய்கிறதற்கு வேறேசெயலில்லை, ஆகிலும் நம்மாற் கூடியவளவாயி விவனுக்குச் சிலநீதிவார்த்தையைச் சொல்லலாம். என்றுநினைத்துச் சொல்லுகின்றார். அப்பா! நீ உயர்ந்த பிரமகுலத்திற்பிறந்து நல்லகுணமுடையவனாயிருக்கின்றாயே; ஒரு பெண்பிள்ளையைக்கொல்லுகிறது நீங்காத பழியாகாதல்லவா

பிரமம்மவமிசத்திலே நாலாந்தலைமுறையா யிருக்கின்றாய். மேலும் சாஸ்திரங்களையெல்லாந் திரக்கற்று மிருக்கின்றாய். ஒரு பெண்பிள்ளையை வதைசெய்கிறது பெண்பழியென்று நீ யறியவில்லையா? பூலோகத்தாரெல்லாம் வருத்தப்படுகின்றார்கள். தேவர்களெல்லா நடுங்கிக்கண்கூச்சம் அடைகின்றார்கள். அவைகளை நீ கண்ணாலேயாவது பார். ஐயோ! உனக்குக் கொஞ்சமாவது இரக்கமென்பதில்லையே; பெண்கொலைசெய்கிறது பெரும்பழியல்லவா? உன்பிதா வெறுத்துவிட்டபடியினாலே என்னிடத்திற் கொடுத்துவிட்டுப்போய்விடு. அப்படிச்செய்வாயேயானால் இச்சமூன்றுலோகமும் உனக்குவசமாய்விடும். நல்லவெற்றியென்பது உனக்கிதுவல்ல. அதை நீ யறிந்திலையோ தும். அற்பகாரியத்தைச் செய்கிறதினால் இதுவரையில் வுனக்குண்டாயிருக்கும் புகழுக்கு அழிவுண்டாகுமே; என்று பலநீதிவார்த்தைகளை பரிவோடுங் கூறினர்.

இவ்வண்ணங்கூறிய ஆஞ்சநேயரை அவ்விந்திரஜித்துப்பார்த்துச் சினந்து, அடாகுரங்கே! என்தகப்பனுக்குவேண்டாத இவளை உன்கையிற்கொடுப்பேனாயானால் எனக்குப்புகழுண்டாகுமா? இவளை யென்வாளால்வெட்டியெறிந்துவிடுகிறேன். இவள்போய்விட்டாள். உங்களுக்கிவளிடத்தி லாசைவேண்டாம். அயோத்தி யென்பொரு நகரைக் காத்துக்கொள்ளப் போங்கள். அதையுமிதோ கரியாகச்சுட்டுவிட்டு வரப்போகிறேன். அங்கேயிருக்கின்ற தம்பிமார்களும், தாய்மார்களும், தேவர்கள் விலக்கினபோதும் பிழைக்கவிடமாட்டேன். அக்கினியைப் பொழிகின்ற என்னுடைய பாணங்களினால் அவர்களெல்லா மாண்டுபோய் விட்டார்களென்று நம்புங்கள். இப்போதே போகின்றேன். வேகமாய்ப் போகவேண்டியதாதலால் புஷ்பக விமானத்திற் போகப்போகிறேன். அவர்கள் தப்பிவிடுவார்களென்று நினைக்கவேண்டாம். என்னுடையபாணங்கள் லகுவானவைக ளெல்லவாக்கு மென்றுகூறி துரிதப்பட்டான்.

கவி.

ஆளுடையாயருளாயருளாயென், றேழைவழங்குற சொல்லினிரங்கான்
வாளினெறிந்தனன் மாகடல்போலும், நீளுறசேனையி னூடெகிர்ந்தான்.

அப்போது அந்த மாயாசீதையானவள் பயந்தவளைப்போல அவனைப்பார்த்து நடுங்கி, ஐயா எங்களாண்டவரே! என்னைக்கொல்லாமல் கிருபைசெய்துவிட்டுவிடும்; விட்டுவிடும்; என்றநேகவிதமாகக் கெஞ்சிக்கேட்கவும் கொஞ்சமும் இரங்காமல் தன்கைவாளினால் அவளை ஒரேவீச்சாக வீசிவிட்டு, கடலைப்போற் சூழ்ந்துவருகின்ற சேனையுடனே புறப்பட்டுத் தெற்கிலிருந்து வடக்குமுகமாகப் பொன்மயமான புஷ்பகவிமானத்தி லேறிக்கொண்டு இந்திரஜித்துப் போய்விட்டான்.

கவி.

போனவன்மாறி நிகும்பலைபுக்கான்
ஆயவனெஞ்சு துயர்க்கடலுண்டான்

ஓய்வொடுநெஞ்ச மொடுங்கவுலர்ந்தான்
வயனையன்னிவ னின்னனசொன்றான்.

இதைக்கண்ட வாயுகுமாரர் ஒன்றுந்தோற்றமல் பிரமித்து மனஞ்சோர்ந்து, மேருமலை சாய்வதுபோல மூர்ச்சித்துக் கீழேவிழுந்துவிட்டார். அதுகண்ட இந்திரஜித்து அப்புஷ்பகவிமானத்தோடுந்திரும்பி நிகும்பலைச் சாலைக்குட்போய் நுழைந்து விட்டான். அப்பா லாஞ்சனேயர் சிறிது மூர்ச்சை தெளிந் துயிர்வாடி உடல்சோர்ந்து மனங்கலங்கித் தளர்ந்து, ஓ அன்னத்துக்குச்சமமான சீதாபிராட்டியாரே! என்பார். ஓ பெண்களுக்கு அருங்கலநாயகமே! என்பார். ஓ என்தாயே! என்பார். கொஞ்சமாவது தெய்வவருளில்லையே [illegible] இந்த அற்பகாரியத்தைச் செய்யக்கண்டும் பாவியாகிய என்னுடையமனது பின்னப்பட்டுப் போகவில்லையே என்பார்., இப்படியாக ஆஞ்சநேயர் தன்பலமெல்லாம் ஒடுங்கி எழுந்திருந்து இந்திரஜித்துவின்மேற்பாய நினைப்பார். மிகுந்த துக்கத்தினால் தள்ளாடிக் கீழேவிழுந்து பெருமூச்சுவிட்டு அழுதுபுலம்புவார். ஒருபக்கமாய்ப்போய் வருத்தப்படுவார். நெருப்புப் பறக்கும்படி மூச்சுவிடுவார். உடல்நடுங்குவார். தலைமேற் கையைவைத்துக்கொண்டு பூமியில்மோதி விழுவார். இப்படியெல்லாம் துன்பப்பட்டுப் பின்னும் பலவாறாகப் புலம்பத்தொடங்கினர்.

இந்திரசித்து மாயாசீதையை வெட்ட அநுமார் புலம்பல்.

கவி.

முடிந்தது நந்தமெண்ண மூவுலகிற்குங் கக்குல்
விடிந்ததென் றிருந்தேன்மீள வெந்துய ரிருளின் வெள்ளம்
படிந்தது வினையின்செய்கை பார்த்தது பாவியாளால்
தடிந்தனன் றிருவையன்றே தவிர்ந்தது தருமமம்மா.

பெருஞ்சிறைக் கற்பினாளைப் பெண்ணினைக்கண் ணிற்கொல்ல
அருஞ்சிறு கற்றபுட்போல் யாதுமொன் றியற்றலாற்றேன்
இருஞ்சிறை யழுந்துகின்றே னெம்பிரான்றேவிபட்ட
அருஞ்சிறை மீட்ட வண்ண மழகிது பெரிதுமம்மா.

பாதகவரக்கன்றெய்வப் பத்தினி தவத்துளாளைப்
பேதையைக் குலத்தின்வந்த பிழைப்பிலா தாளைப்பெண்ணைச்
சீதையைத் திருவைத்தீண்டிச் சிறைவைத்த வரக்கன்றானே
காதவுங் கண்டுநின்ற கருமமே கருணைத்தம்மா.

கல்விக்கு நிமிர்ந்தகீர்த்திக் காகுத்தன் றூதனாகிச்
சொல்விக்க வந்துபோனே றேவியைத் துயர்செய்தாரை
வெல்விக்க வந்தேனுன்னை மீட்பிக்கவன்று வெய்தில்
கொல்விக்க வந்தேனென்றே கொடும்பழி கட்டிக்கொண்டேன்.

வஞ்சியை யெங்குக்காணுந் துயரிடைமறந்தானென்னச்
செஞ்சிலை யுரவோன்றேடித் திரிகின்றானுள்ளந்தேற
அஞ்சொலா ளிருந்தாள்கண்டே னென்றயா னரக்கன்கொல்லத்
துஞ்சினாளென்றுசொல்லத் தோன்றினேன் றோற்றமீதால்.

அருங்கடல் கடந்திவ்வூரை யன்னெரி மடுத்துவெள்ளக்
கருங்கடல் கட்டிமேருக் கடந்தொருமருந்துநாட்டிக்
குரக்கினியுன்றனோடொப்ப வில்லெனக் களிப்புக்கொண்டேன்
பெருங்கடற் கோட்டந்தெய்வை யாயதென் னடிமைப்பெற்றி.

விண்டுநின் றுக்கைசிந்திப் புல்லுயிர்விட்டிலாதேன்
கொண்டுநின் றுனைக்கொல்லக் கூசினேனெனதிரோகொல்லக்
கண்டுநின்றேனே யென்றன் கைகளாற் கலத்தின்வெஞ்சோ
றுண்டுநின் றய்யகல்லே னெளியனோ வொருவனுள்ளேன்.

ஐயோ தெய்வமே! நம்முடைய எண்ணமானது இனி முடிந்துவிட்டதென்றும், திரிலோகத்தையு மூடிக்கொண்டிருந்த பாவஇருளும் விடிந்துவிட்டதென்று நினைத்திருந்தேனே: மறுபடியும் துக்கவிருள் நம்மைமூடிக்கொண்டதே: பாவவினையே மேலிட்டுப் பரவிவிட்டதே; பாவியாகிய இந்திரஜித்து சீதாபிராட்டியாகிய இலக்ஷ்மியை வாளால்வெட்டிவிட்டானே: தர்மமும் உலகத்தைவிட்டுக் குடிபோய்விட்டதுபோ லிருக்கின்றதே; இந்தநாளாகப் பெருஞ்சிறையாகவிருந்த மஹாபதிவிரதையான ஒருபெண்ணைக் கண்ணுக்கெதிரே கொல்லுகிறதைப் பார்த்தும், அந்தச் சடாயுபகவான் சிறகறுந்துபட்டதுபோல நான் ஒருகாரியமுஞ் செய்யாமலிருந்து இப்போது வருத்தப்படுகின்றேனே; என் ஆண்டவராகிய ஸ்ரீராமபிரானுடைய தேவியை நான் சிறைமீட்கும்படியாகச் செய்தகாரியம் வெகு அழகாயிருக்கின்றது. இந்தமஹா பாதகனாகிய ராக்ஷசனால் தெய்வீகமாகிய பத்தினித்தன்மையை வாய்ந்தவளும், தவத்திலிருந்தவளும், உயர்ந்தகுலத்திற்பிறந்து யாதொரு குற்றமுஞ்செய்யாத மஹா உத்தமியும், பெண்ணென்பவளும், சீதையும், இலட்சுமியுமாகிய தேவியாரைத்தொட்டுச் சிறையில்வைத்த இராக்ஷசன் ஒருதப்பிதமுமில்லாமலே கொல்லுவித்ததைப் பார்த்திருந்த தர்மத்தின் ஸ்வபாவம் வெகு கருணையுடையதா யிருக்கின்றது.

என்தாயே! எல்லாச் சாஸ்திரங்களுக்கும் எட்டப்படா திருக்கின்ற கீர்த்திமானான ஸ்ரீராமமூர்த்தியினுடைய தூதுவனாகி, நான் அவர்சொன்ன சொல்லைத் தெரிவிக்கவந்து, மறுபடியும்போய் அளவில்லாத இந்தத் துன்பத்தைச்செய்த சண்டாளராக்ஷசர்களை இடங்காட்டி வெல்லும்படிச் செய்ய வந்தேன். தேவரீரை மீட்பிக்கவரவில்லை. இப்போது கொடுமையாய் உம்மைக்கொல்லச் செய்யவந்தேனென்று ஒருகொடும்பழியைக் கட்டிக்கொண்டேன். என்னாண்டவரும் வில்வீரருமான ஸ்வாமியானவர் தேவரீரை எங்குங்காணாமல் துயரால் ஒருமரம்போலச் சோர்ந்து தேடிக்கொண்டு வந்தபோது, அவர்திருவுள்ளம் தேறும்படி அடியேன் சீதாபிராட்டியாரைக் கண்டேனென்று சொன்னேன். அப்படிச்சொன்ன நான் இப்போது ராக்ஷசன்கொல்லப்பார்த்தேன். ஐயோ! இனியந்த ஸ்வாமியை யான் கண்டு தேவரீர் பத்தினியானவர் மாணமாய் றுட்டாரென்று சொல்லும்படி நேரிட்டதே இது

தானே நான்பிறந்ததின் பலன்? அம்மா! யான் பெரிய சமுத்திரத்தைத் தாண்டி இந்தலங்கைநிரம்ப நெருப்பிட்டுக் கொளுத்தி; பிறகு கடலை அணைகட்டி யாவரையு மிதிற்கொண்டுவந்து சேர்த்துப் போராடவிடுத்து, அப்பால் மேருவைத்தாண்டி ஒருவருக்குங் கிடைக்க அருமையான சஞ்சீவிமருந்தைக் கொண்டுவந்து, குரங்குகளுக்குள்ளே உனக்குச்சமமான கைங்கரியசாலிகளில்லையென்று பேர்வாங்கிச் சந்தோஷித்தேன். என்னுடைய கைங்கரியநிலைமை, இப்போது பெருங்கடலில் கோஷ்டம் உரைத்ததுபோல ஆய்விட்டது. என் அம்மணி! உம்மைவிட்டு நீங்கி அடியேனுடைய உடல்சிதைந்து அற்பவுயிர் கழியாமற்போனேன். உம்மைப்பிடித்துக்கொண்டு வந்தாகின்ற அந்தத் திருட்டுப்ப[illegible]த்தீர்த்ததற்குப் பின்னிட்டுப்போனேன். உம்மையென்னெதிரே கொல்லும்படிப் பார்த்துக்கொண்டிருந்தேன். இப்படிப்பட்ட நான் கலத்திற்போட்ட ஷட்ரசான்ன பதார்த்தங்களாகிய நல்லுணவையுண்டுகொண்டிருந்து பிழைக்கும்படியாக இருக்கின்றேன். நான்சாமானிய ஞானவனோ? நானுமொருவனா யிருக்கின்றேனே; என்று நின்றழுதார்.

அநுமார் தெளிந்தெழுந்து நடந்த சங்கதியை ஸ்ரீராமரிடஞ்சென்று சொல்லி மூர்ச்சித்தல்.

கவி.

என்னநின்றிரங்கிக்கள்வ னயோத்திமேலெழுவனென்று
சொன்னதுமுண்டுபோன சுவடுண்டுதொடர்ந்துசெல்லின்
மன்னனிற்குற்றதன்மை யுணர்கிலன்வருவதோரேன்
பின்னினிமுடிப்பதியாதென் றிரங்கினுணர்வுபெற்றான்.

இவ்வண்ணமாகப் பலவற்றையு மெண்ணியெண்ணி யழுதவராகிய ஆஞ்சநேயர், இராக்ஷசப்பாதகனாகிய இந்திரசித்துவானவன் அயோத்திக்குப் போகிறேனென்று சொன்னான். அப்படியே போயுமிருக்கிறான். நாமவனைத் தொடர்ந்துபோனால் நம்முடைய ஆண்டவனுக் கிங்கே நடந்த காரியந் தெரியாது. இனிச்செய்யவேண்டுவதிதுவென்று மெனக்குத் தோற்றவில்லை. இனி நாமென்னசெய்யலாம், என்று இரக்கமுற்றுத்தெளிந்து, நல்லது; நடந்தகாரியங்களைலோகநாயகரான சக்கரவர்த்தித் திருமகனாரிடத்தில் விண்ணப்பம்பண்ணிவிட்டு மாண்டுபோகின்றேன். இல்லாவிட்டால் அவராலோசனைபண்ணி நியமித்தபடிச் செய்கின்றேன். வேறேதீர்மானம் ஒன்றுமில்லை. என்றுதுணிந்து பருத்தழகிய திருத்தோள்களையுடைய வீரசிகாமணியாகிய தசரதகுமாரருடைய திருவடிப்பக்கல் சேர்ந்து, ஆண்சிங்கத்துக் கொப்பான ஸ்ரீராமபிரானுடைய வீரகண்டாமணியை யணிந்த திருவடிகளிலே தேகமும்-மனதும்-கண்களும் - உயிரும் வாடிப் பெருங்குரல்கொண்டழுது பெருமூச்சுவிட்டுக்கொண்டு, தேகமெல்லாங் கண்ணீருருவியாறாக ஓடும்படிப் பெரியமலைபோல விழுந்தார்.

கவி.

வீழ்ந்தவன்றன்னைவீரன் விளைந்ததுவிளம்புகென்னத்
தாழ்ந்திருதடக்கைபற்றி யெடுக்கவுந்தரிக்கிலாதான்

ஆழ்ந்தெழுதுன்பத்தாழி யரக்கனின்றயில்கொள்வாளால்
போழ்ந்தனனென்னக்கூறிப் புரண்டனன்பொருமுகின்றான்.

அப்படி விழுந்த ஆஞ்சநேயரைப் பெரியபெருமாள் கடாக்ஷித்து, அப்பனே ஆஞ்சநேயா! நடந்ததென்ன சொல்லுகவென்று கையைப்பற்றித் தூக்கினார். அப்போதுஞ் சகிக்கமாட்டாமல் ஆஞ்சநேயர் மிகுந்ததுன்பங்கொண்டு, ஸ்வாமி! வருத்தப்பட்டுக்கொண்டிருந்த சீதாபிராட்டியாரை அவ்விந்திரசித்தென்னும்ராக்ஷசன் கூரியவாளாயுதத்தால் வெட்டிப் பெறிந்துவிட்டானென்று பூமியில்விழுந்து புரண்டுபுரண்டழுது மூர்ச்சித்தார். தேகம் அசையவில்லை, மூச்சுவிடவுமில்லை. கண்ணுஞ் சிமிட்டவில்லை. கண்களில் நீருஞ்சொரியவில்லை. ஒன்றும்பேசவுமில்லை. அழுது[illegible]மில்லை. பூமியில் விழவுமில்லை. சாகவுமில்லை. இப்படி ஆஞ்சநேயருக்குண்டான துன்பமென்னத்தினாலென்று தேவர்களுக்குந்தோற்றவில்லை. ஆஞ்சநேயர் சொன்னவார்த்தையைக்கேட்டமாத்திரத்தில் வானரசேனைகளெல்லாம் அடித்து அறிவுசோர்ந்து, பெரியவாடைக்காற்றில் அகப்பட்ட விருக்ஷங்களைப்போல நடுங்கிக் கற்பகவிருக்ஷம் போலெழுந்தருளி யிருக்கின்ற ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் திருவடித் தாமரைகளின்மீது மலைகள் விழுந்ததுபோல விழ்ந்தழுதார்கள்.

சீதையிறந்தாளென்ற வார்த்தையைக்கேட்டு ஸ்ரீராமரும் இலக்ஷ்மணரும் திகைத்துப் பூமியிற்சாய்ந்துவிட விபீஷணர் ஆயாசந்தீர்த்தல்.

கவி.

சித்திரத்தன்மையுற்ற சேவகனுணர்வுதீர்ந்தான்
மித்திரர்வதனநோக்கா னிளையவன்வினவப்பேசான்
பித்தரும்பிதற்றொணாத பேரபிமானமென்னும்
சத்திரமார்பிற்றைக்க வுயிரிலனென்னச்சாய்ந்தான்.

அப்போது மகாவீரரான ஸ்ரீராமர் சித்திரப் பிரதிமைபோல் அறிவுசோர்ந்து, தமது நண்பர்கள் முகத்தையும் பாராமல் இளையபெருமாள் கேள்விக்கும் பிரதியுத்தரங் கூறாமல், பித்தர்களுஞ் சகிக்கமுடியாத அபிமானமென்கிறவேலாயுதம் மார்பில் தைக்க உயிரிழந்தவனைப்போலப் பூமியிற்சாய்ந்து விழுந்தார். அக்கால் இளையபெருமாள் இப்படி விழுந்த ஸ்ரீரகுநந்தனருடைய தன்மையைப் பார்த்தும், தங்களுக்குநேரிட்ட வெட்கத்தை நினைத்தும், தலையெடுத்தோங்கினதருமம் மறுபடியு மழிந்துவிட்டதேயென்று ஆலோசித்தும், வாய்ச்சொல்லும், மனமும், கண்களும், திருமேனியும், சோர்ந்துவாடி; தாயையிழந்த கன்றுக்குட்டியைப்போற் பூமியில் விழுந்துவிட்டார்.

பிறகு எல்லாம் அறியத்தக்க ஞானமுள்ளவரான விபீஷணாழ்வார் நடுங்கி, சம்பவித்தவருத்தத்தினுண்மையைத் தெரிந்துகொள்ளாமல், அந்தச்சிறுபயல் இவர்களை நம்மால்ஜெயிக்கமுடியாது, நமக்கு இவ்வளவு நாசமு மிவளால்தான் சம்பவித்தது, என்று நினைத்துக் கொன்றாலுங்கொல்லுவான், என்பதாக மனதிற் சந்தேகத்தினால், குளிர்ந்தநோக்கொண்டு ஸ்வா

யின் திருமுகத்தில் தெளித்து, திருமேனியைத்தொட்டு உணர்வுண்டாகும் படியான எல்லாவுபாயங்களையுஞ்செய்து, திருவடித்தாமரைகளையும், திருக்கரங்களையும், திருமேனியையும்பற்றி வருடினார். அம்மாத்திரத்தில் வேதங்களுங்கண்டுணரவரியவரான பரவஸ்துவானவர் திருக்கண்களைவிழித்து சுவாசம் விட்டார். அப்போது இளையபெருமாள் ஊற்றெடுத்துக்கண்ணீரொழுக மனமழிந்து உற்றதைநினைத்து ஆற்றமாட்டாமல் வருத்தப்பட்டுக்கொண் டிருந்தாரேயன்றி, அந்தப்பிரமையை மாற்றவேயில்லை. தம்முடைய மானத்துக்கு உயிரேமுடிவாக ஹீனம்வந்திருந்தும், தமையனைத் தேற்றும்படி நினைத்துத் தமது சில அபிப்பிராயங்களைச் சொல்லத்தொடங்கினார்.

சீதையிறந்ததாகக்கேட்டு வருந்தும் ஸ்ரீராமரை இலட்சுமணர் தேற்றுதல்.

கலி.

முடியுநாட்டானேவந்து முற்றினூற்றுன்பமுந்தீர்ப்
படியுமாருஞ்சிறியோர்தன்மை நினைக்கிதுபழியிற்றுமால்
குடியுமாசுண்டதென்னி னறத்தொடுமுலகைக்கொன்று
கடியுமாறன்றிச்சோர்ந்து கழிதியோகருத்திலார்போல்.

தையலைத்துணையிலாளைத் தவத்தியைத்தருமக்கற்பின்
றெய்வதந்தன்னைமற்றுன் றேவியைத்திருவைத்தீண்டி
வெய்யவன்கொன்றானென்றால் வேதமேயுழப்பதின்ன
மூய்யவோகருணையாலோ தருமத்தோடுறவுமுண்டோ.

அரக்கரென்னமரர்தாமென் னந்தணர்தாமென்னந்தக்
குருக்களென்முனிவர்தாமென் வேதத்தின்கொள்கைதானென்
செருக்கினர்வலியராகி நெறிநின்றார்சிதைவரென்னின்
இருக்குமிதென்னுமிம்மூன் றுலகையுமெரிமடுத்தே.

முழுவதேழுலகமின்ன முறைமுறைசெய்கையேன்மூண்
டெழுவதேயமரரின்ன மிருப்பதேயறமுண்டென்று
தொழுவதேமேகமாரி சொரிவதேசோர்ந்துநாம்வீழ்ந்
தழுவதேநன்றுநந்தம் விற்றொழிலாற்றலம்மா.

புக்கிவ்வூரிலைமப்பின்முன்னம் பொடிபடுத்தரக்கன்போன
திக்கெலாஞ்சுட்டுவானோ ருலகெலாந்தீய்த்துத்தீர்க்கத்
தக்கநாங்கண்ணீராற்றித் தலைசுமந்திருகைநாற்றித்
துக்கமேயுழப்பமென்றாற் சிறுமையாய்த்தோன்றுமன்றே.

அங்குமிவ்வறமேநோக்கி யரசிழந்தடவியெய்தி
மங்கையைவஞ்சன்பற்ற வரம்பழியாதுவாழ்ந்தே
மிங்குமித்துன்பமெய்தி யிருத்துமேலெளிமைநோக்கிப்
பொங்குவான்றளையிற்பூட்டி யாட்செயப்புகல்வரன்றே.

மன்றலங்கோதையாளைத் தம்மெதிர்கொணர்ந்துவாளிற்
சொன்றவர்தம்மைக்கொல்லுங் கோளிலாநாணங்கூரப்
பொன்றினரென்பாரிவ் போக்கினூற்பொதுமைபார்க்கி
னன்றிதுகருமமென்னி லுயர்கின்றதிலார்போல்.

சுவாமீ! தனக்கழிவுகாலம் ஊழ்விதிப்படி வந்து சம்பவித்தால் அல்பனுயிருக்கின்றவன் துக்கசாகரத்தில் மூழ்குவது சுபாவம். தேவரீருக்கு இது பழிப்பாகுமல்லவா? மிகப்பெருமைபெற்ற நம்முடையகுடிக்கே ஒருகுறைவுவந்தால் தர்மத்துடனே இந்த மூன்றுலோகங்களையு நாசப்படுத்திப்போடாமல் அறிவில்லாதவர்களைப்போல நாமாண்டுபோய் விடலாமோ? ஐயனே! பிராட்டியாரோ பெண்பிள்ளை. மேலும்ஒருதவியும் இல்லாதவள். தவப்பெண். தர்மபதிவிரதாதெய்வம். அல்லாமலுந் தேவரீருடையதேவி. சாக்ஷாதுமகாலக்ஷுமி. இப்படிப்பட்ட சீதாதேவியாரை மகாசண்டாளனான ராக்ஷசப்பயல் கையால்தொட்டுக்கொன்றானேயானால், இதைக்கேட்டும் வருத்தப்படவேண்டியதெதற்கு? இப்படி வருத்தப்படுவது இன்னமும் உயிர்வைத்துக்கொண்டிருக்கவா? அல்லது தேவரீருடைய கிருபையினாலோ? இனி நமக்குத் தர்மத்துடனே சிநேகமும் உண்டாகுமோ?

சுவாமி! இனி நமக்கு ராக்ஷசர்களென்ன? தேவர்களென்ன? பிராமணர்களென்ன? குருக்கள்மாரென்ன? மகாரிஷிகள்தாமென்ன? இனி வேதத்தின் முறையான ஆசாரமென்ன? துஷ்டர்கள் வல்லமையுடையவர்களாகி யோக்கியர்கள் அழிந்துபோவார்களேயானால், இந்த மூன்றுலோகத்தையும் அக்கினியாற் சுட்டெரிக்காமற் சும்மாயிருப்பதென்னகாரணம்? இனியிந்த ஈரேழுலோகங்களும்ஒழுங்காகத்தர்மங்களைச்செய்துகொண்டுவிர்த்தியாக்கும்படி இருக்கின்றனவோ? தேவர்களின்னமும் பிராணனுடனே இருக்கவோ? இன்னமும் தர்மமுமிருக்கின்றதாக நாம் வணங்கிக்கொண்டிருக்கவோ? இன்னமுமழையும்பெய்யவேண்டுமோ? நாமின்னும் சோர்ந்து வீழ்ந்து அழுதுகொண்டிருக்கின்றதோ? ஆ! ஆ! நம்முடைய வில்வல்லமை வெகு அழகாயிருக்கின்றது. ஓ தபாநிதி! இவ்விலங்கையில் நுழைந்து ஒருக்ஷணத்துக்குள்ளாக அதைச் சாம்பலாக்கிவிட்டு, அந்தராக்ஷசப்பயல் போன திசைகளையெல்லாம் சுட்டெரித்து, தேவலோகங்களை யெல்லாங் கொளுத்தி முடித்துவிடக்கூடிய நாம் கண்ணீரைத்துடைத்துக்கொண்டு வெறுங்கையைத்தலையின்மேல் வைத்து எளியவர்கள் போலத்துக்கமுற்று வாடினோமானால்; உலகத்திற்குச் சிறுமையாய் முடிந்துபோகாதோ?

சுவாமி! அயோத்தியிலு மிப்படியே தர்மத்தைப்பார்த்து இராஜமுடியைத் துறந்துவிட்டுக்காட்டிற்குவந்து, சீதாபிராட்டியாரை அந்தவஞ்சகன் பிடித்துக்கொண்டுபோக அந்தருமத்தின்வரம்பைக்கெடுக்காமலிருந்துஉயிர்வைத்துக் கொண்டிருந்தோம். இப்போது இவ்விடத்திலுமிப்படிப்பட்ட துன்பத்தையடைந்து சும்மா இருப்போமானால். இராக்ஷசர்கள் நம்முடையஎளியதன்மையைப் பார்த்து நம்மைச் சிறையில் விலங்கிட்டுவைத்து அடிமைசெய்யும்படியாகவுஞ் சொல்லமாட்டார்களா? நாமிப்போது நம்முடைய ஆவியைப் போக்குவோமேயானால், சீதையை வாளினாலே கொன்றவர்களைக் கொல்லும்படியானவல்லமைஇல்லாதவர்களாய் வெட்கப்பட்டிறந்துபோனார்களென்று

சொல்லுவார்கள். ஆகையால் தர்மத்தைப் பார்க்கிறதற்கு இதுகாலமல்ல. தேவரீர் அறிவில்லாதவர்களைப்போலத் தாமசித்திருக்கின்றது தக்ககாரியமன்றென்று சொன்னார்

இப்படி இளையபெருமாள் சொல்லவே சூரியகுமாரரான சுக்கிரீவமகாராஜன் கனவுகண்டவரைப்போலத் திடீரென்றெழுந்திருந்து, ஓ கருணாநிதி! இனி யாலோசித்துக்கொண் டிருக்கலாமோ? விளக்கில் வீழ்கின்ற விட்டிலைப்போல இராவணனுடைய அரண்மனையிற்போய் அவனுடைய அகன்றமார்பிற் குதிக்கலாம் வாருங்கள். இலங்கையைப்பேர்த்துப் பாவிகளாகிய ராட்சசர்களென்று பெயருள்ளவர்களையும், அவர்கள் பெண்டுகளையும், பாலுண்கின்ற குழந்தைகளையும், அவர்களுக்குப்பந்துக்களாயிருக்கின்ற யாவரையுந்தொலைத்துக் கொன்றுவிடுவோம். அதற்காகத் தேவர்கள் நம்மேல் யுத்தத்திற்கு வந்துவிலக்குவார்களேயானால், அவர்களுடைய சொர்க்கலோகத்தையும் பேர்த்துப் பூமியிற்போட்டு விடுகிறோம். தர்மத்தையினிக் கெடுத்துவிடுகிறோமென்று புறப்படுவதானால் நாமிங்கேயிருந்து வருத்தப்பட்டுக்கொண்டிருப்பதெதற்கு? இந்த லோகமூன்றையும் அழித்துக் காற்றுடியைப்போலச் சுற்றித்திரிந்து நமக்குதவி செய்யாமலிருந்த தேவர்களுடைய வமிசங்களையுங் களையறுத்துவிடுகிறோம். என்று லங்கையின்மேற் பாய்கிறதற்கெத்தனித்தார். மற்ற வானரவீரர்களு நம்முடைய ராஜனுக்கு முன்னதாகப் பாய்ந்துபோய் இராட்சசர்களையெல்லாம் அவர்கள் வசிக்கின்ற வீட்டுடனேயொத்து இன்றைக்கே பூமியிலறைந்து கொன்றுவிடுகிறோமென்று புறப்பட்டார்கள்.

அப்போது ஆஞ்சனேயர் இன்னொருகாரிய மிருக்கின்றதென் றெழுந்து, அதிவஞ்சகனான இந்திரஜித்து அயோத்தியின்மீது புறப்பட்டுப்போனானென்றுஞ் சொன்னார். தாய்மார்களுந் தம்பிமார்களுந் தவஞ்செய்கின்ற அயோத்தியாநகரத்துக்கு இந்திரஜித்துப் போயினானென்று சொன்னவார்த்தை ஸ்ரீராமருடைய திருச்செவியில் நுழைந்தவுடனே, முன்னிருந்த வேதனைக் காடானது பின்வந்ததுன்பமாகிய நெருப்பினால் வெந்து சீதையினிடத்திலுண்டான துக்கநீங்கினார். ஆழ்ந்த திருப்பாற்கடலில் நித்திரைநீங்கி வந்ததுபோல முன்னைய துன்பக்கடலிலிருந்து கரையேறி, கொழுந்துவிட்டெரிந்துகொண்டு புறப்பட்ட கோபாக்கினியும் பயமும் மனதிலழுந்த உளம்வாடி, உழுந்துருளு மவ்வளவுபொழுதும் தாமசிக்காத முயற்சியை யுடையவராயிருந்தும் அக்காலொன்றுந்தோற்றமல் மயங்கி இவ்வாறு பிரலாபிப்பதாயினார்.

இந்திரசித்து அயோத்தியில் யாவரையுங் கொல்லப்போனானென்று ஆஞ்சனேயர் சொல்லக்கேட்ட ஸ்ரீராமர் வருந்தல்.

கவி.

திருமிச்சீதையோடு மெங்கிலதன்றென்றீமை
வேரொடுமுடிப்பதாக விளைந்ததுவேறாயின்றும்
யாரொடுந்தொடருமென்ப தறிகிலேனிதனையைய
பேரிடவதியுண்டோ வெம்பியர் பிழைக்கின்றாரோ.

நினைவதன்முன்புசெல்லு மானத்திலெடிதுநின்றான்
வினையொருகணத்தின்முற்றி மீள்வின்றான்வினையேன்வந்த
மனைபொடிபட்ட தங்கு மாண்டனதாரமீண்டும்
எனையன தொடருகின்ற துணர்கிலே னிறப்புங்காணேன்,

தாதைக்குஞ்சடாயுவான தந்தைக்குந்தமியனாய
சீதைக்குங் கூற்றங்காட்டித் தவிர்ந்திலதொருவென்றீமை
பேதைப்பெண் பிறந்துபெற்ற தாயர்க்கும்பிழைப்பிலாத
காதற்றம்பியர்க்குமூர்க்கு காட்டிற்றுங்காட்டிற்றன்றே

உற்றதொன்றுணரகில்லா துணர்ந்துவந்துற்றாரேனும்
வெற்றிவெம்பாசம்வீசி விசித்தவன் கொன்றுவீழ்த்தால்
மற்றையபுள்ளின்வேந்தன் வருகிலன்மருந்துநல்கக்
கொற்றமாருதியாங்கில்லை யாருயிர்கொடுக்கற்பாலார்.

மாகவாகாயஞ்செல்ல வல்லையின்வயிரத்தோளா
யேகுவானுபாயமுண்டே யியம்புதிநின்றவெல்லாஞ்
சாகமற்றிலங்கைப்போருந் தவிர்கவச் சழக்கன்கண்கள்
காகமுண்டதற்பின் மீண்டு முடிப்பனென்கருத்தையென்றான்.

ஐயோ! என்றீமையானது இந்தச்சீதையோடு தீர்ந்துவிட்டதென்று நினைப்பதற்கில்லையே: சூரியவமிசத்தை வேரோடு முடிப்பதாக மூண்டுகொண்டதே: இன்னம் இது யாரைப் பற்றப்போகிறதோ தெரியவில்லையே: ஆ! ஆ! இதை மாற்றிவிடும்படியான முயற்சியும் உண்டாகுமோ? என்தம்பிமார்களும் பிழைப்பார்களோ? நினைக்கிறதற்கு முன்னாகப் போகும்படியான புஷ்பகவிமானத்திலேறிப் போனானே: தன்னுடைய கொடுஞ்செய்கையை ஒரு க்ஷணத்துக்குள்ளாக முடித்துக்கொண்டு வந்துவிடுவானே: ஐயோ! என்பிறந்தஸ்தானமும் சாம்பலாய்ப் போய்விட்டது. இங்கே பெண்சாதியு மாண்டுபோனாள். இன்னம் எனக்கு என்னசம்பவிக்கப் போகிறதோ தெரியவில்லை. நான்மாண்டுபோகாமலிருக்கின்றேன், என் தீமையானது என்னையீன்ற தகப்பனாருக்கும் - சடாயுவென்கிற பிதாவுக்கும் - தனிமையாயிருந்த சீதைக்கும் - இயமனைக் காட்டிவிட்டும் அவ்வளவோடு முடியவில்லை. எனதுதீமையே ஒருபெண்ணாய்ப்பிறந்து எங்களைப்பெற்ற தாய்மார்களையும் - இயாதொரு குற்றமுஞ் செய்யாத அருமைத்தம்பிமார்களையும் — வானரரையும் - நாட்டாரையும் - அவ்வியமனுக்குக் காட்டிவிட்டதே:

ஐயோ! அந்தப் பாதகத்துரோகிகள் தங்களுக்கு இப்படிவருமென்று முன்னறிந்தவர்களல்லவே: ஒருவேளை இந்தச்சண்டாளனோடு எதிர்ப்பார்களேயானால், இவன் நாகபாசத்தாலே கட்டியும் பிரமாஸ்திரத்தினால் எளியும் கொன்றுவிடுவானே: அக்காலத்தப் பக்ஷிராஜனாகருடன் வரமாட்டானே: சஞ்சீவி பர்வதத்தைக் கொண்டுவருகிறதற்கு இந்தவாயுகுமார

னும் அங்கில்லையே: வேறேயார் அவர்களுக்குச் சஞ்சீவியைக் கொடுக்கப் போகின்றார்கள்? அப்பா ஆஞ்சநேயா! ஆகாசமார்க்கமாக அயோத்திக்குச் சீக்கிரம்போய்ச் சேரும்படியான உபாயமுண்டானாற் சொல்லுக. இங்கிருக்கிறதெல்லாஞ் செத்தாலுஞ் சாகட்டும். இலங்கையில் சண்டையுகிற்கட்டும். அவ்விந்திரஜித்தென்கிற துஷ்டனுடையுகண்களைக் காகங்கள் இன்னுப்படியாகச் செய்தபின்பு மறுபடியும்வந்து எனதெண்ணத்தை நன்றாய் முடித்துக்கொள்ளுகிறேனென்று சொல்லினர்.

இப்படி ஸ்ரீரகுநந்தனர் சொல்லக்கேட்ட இளையபெருமாள்சுவாமியை நமஸ்கரித்து, அடியேன் விண்ணப்பத்தைக் கேட்டருளும். ஐயனே! பரதாழ்வானை யுத்தத்திற் கட்டுப்படியாக நாகபாசத்தைவிடுகிறதற்குத்தக்கவன் இவ்விந்திரஜித்துவோ? அந்தப்பரதாழ்வான் இந்தச்சத்துருக்களுக்கு முன்பாக வருவாரானால் இந்த மூன்றுலோகமுந் தீய்ந்துபோக மாட்டாதோ? தேவரீர் துக்கசாகரத்தில் மூழ்காதேயும். ஆகிலுமிந்தத் துஷ்டவஞ்சகன் பிரஹ்மாஸ்திரத்தைக்கொண்டு கட்டிக்கல்லுகிறதற்கு அடியேனென்று பரதாழ்வானை நினைத்தருளினீரோ? அப்படி எண்ணவேண்டாம். அவ்விந்திரஜித்து அவர் கைப்பாணத்தால் அவனுடைய சேனைகளுடன் மடிந்து பூமியில் தலைகீழாய்க் குத்துண்டு விழப்போகிறதைத்தேவரீரே கடாக்ஷித்தருளப்போகிறீர். என்று வெகுகோபத்துடன் சொன்னார். அப்போது அநுமான்கைகளைக்கூப்பிக்கொண்டு, ஸ்வாமி! அடியேன் சிறுதோளின்மீது தேவரீருடைய திருக்கைக்குத் துணையாகவிருக்கின்ற கோதண்டத்துடனே எழுந்தருளும். வாயுதேவனும் பின்விடும்படி இந்தக்ஷணத்திலே தானே அயோத்தியாபுரியைச்சேருகிறேன். இன்னுமிடமுண்டாயிருக்குமானால் அந்தக்ஷணத்திலேயே எல்லாத்திக்குகளையுஞ் சுற்றிவருகிறேன், அதுவுமல்லாமல் அடியேன் மாத்திரமேபோய் அந்தப் பூதையாளியைக் கொன்று எல்பகையுந் தீர்த்துக்கொள்ளுகிறேன்.

ஓ என்னாண்டவனே! அடியேன் அப்போதே அவனையேன்கொல்லமாட்டாமற் போனேனென்றால், சீதாபிராட்டியாரைக் கொல்லுகிறேனென்று பிடித்துக்கொண்டு வந்தான். அவனுக்கு நீதிவார்த்தையைச் சொல்லி விலக்கிக்கொள்ளலாமென்று நினைத்தேன். அவன் அக்கிரமமாய்ப் பேசிக்கொண்டிருந்து உடனே வாளால் வீசிவிட்டான். அதைப்பார்த்துச் சகிக்காமல் மூர்ச்சையாய்ப் பூமியில்விழுந்து உணர்வற்றுப்போனேன். அப்படிக்கில்லாமற் சற்றேநிற்பானானால் அந்தத்துஷ்டனாகிய ஈனன் உயிர்தப்பிப்போவானோ? ஸ்வாமி! தாமதிக்கவேண்டியதென்ன? அழாய்பாலையைத்தரித்ததிருக்கோதானை யுடையவர்களான நீங்க ளிரண்டுபேரும் அடியேன்மீது எழுந்தருளுங்கள். அவனுடைய புஷ்பகவிமானம் அயோத்திக்குப்போய்ச் சேருவதற்கு முன்பாக அடியேன்போய்ச் சேர்ந்து அவன்வரவுக் கெதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றேனென்றார். இவையனைத்துங்கேட்டு ஸ்ரீராமலக்ஷ்மணர்கள்

நல்லதப்படியே எழுகிறோமென்று புறப்பட்டார்கள். உடனே விபீஷணாழ்வான் தண்டஞ்சமர்ப்பித்துச் சொல்லுகிறார்.

ஸ்வாமி! அடியேனுக்கொரு விண்ணப்ப மிருக்கின்றது. அதாவது, அதிகதுக்கத்தால் நடுங்கி மனந்தேறமாட்டாத செய்கையால் அடியேன் மயங்கித் திகைத்துப் போய்விட்டேன். இப்போது அடியேனுக்குக் கொஞ்சநினைவுதோன்றினது. அவன்செய்தது மாயமென்று சந்தேகிக்கின்றேன். மகாபத்தினியாகிய லோகமாதாவை அந்தப்பாவி கையால்தொட்டுக் கொல்லுவானானால், இந்த மூன்றுலோகமும் வெந்து சாம்பலாய்ப் போகமாட்டாதா? அதெப்படியிருக்க அவன் அயோத்தியை நோக்கிப்போனது தந்திரமாயிருக்கின்றது. அதைச் சற்றுநேரத்துக்குள்ளே தெரிந்துகொள்ளலாம். அடியேன் இமைப்பொழுதுக்குள்ளாகச்சென்று பிராட்டியா ரிருக்குமிடம் போய் ஆராய்ந்து தேடிப்பார்த்து, உள்ளதை அறிந்துவந்து சொன்னபிறகு ஆகவேண்டியதைச் செய்யலாமென்று விண்ணப்பம் பண்ணிக்கொண்டார். அதற்குப் பெரியபெருமாளும், ஆம்: இது தகுதியானதுதான் என்று சொன்னார்.

விபீஷணர் ஸ்ரீராமனுக்குச் சில நேரதலைச்சொல்லி வண்டுருவங்கொண்டு சென்று சீதையினிருப்பும் இந்திரசித்து நிகும்பலையாகத்திற்குச் சென்றதுமறிந்து ஸ்ரீராமரிடம்வந் துரைத்தல்.

கவி.

வண்டினதுருவங்கொண்டான் மானவன்மனத்திற்போனான்
தண்டலையிருக்கை தன்னைப் பொருக்கெனச்சார்ந்துதானே
கண்டனனென்பமன்றே கண்களார்கருத்தாலாவி
உண்டிலையென்னச்செய்த வோவியமொக்கின்றாளை.

பின்பு விபீஷணாழ்வான் வண்டினுருவத்தைக்கொண்டு ஸ்ரீராமபிரானுடைய திருவுளவேகத்தைப் போல அந்தரமார்க்கமாகப் போய் அசோகவனத்தைச் சேர்ந்தார். ஆவியுண்டோ இல்லையோ என்னும்படியான துயரத்துடனெழுந்தருளியிருக்கின்ற சித்திரப் பிரதிமையை யொத்தவளும், என்னுடைய துக்கத்தை என்னுயிருடனே தீர்த்து விடுகின்றேனென்று சிந்தைகொண்டிருந்ததைத் திரிசடை சமாதானஞ்சொல்ல மறுபடியும் தேறிவந்தபோது சப்தமேகங்களும் உகாந்தகாலத்திற் குமுறுவதுபோல வானரவீரர்கள் சப்தித்த ஓசையைத் தேவாமிர்தம்போலக்கேட்டு உயிர் தரித்திருந்தவளுமாகிய சீதாபிராட்டியாரைக் கண்குளிரக் கண்டனர்.

கவி.

வஞ்சனையென்பதொன்றி லாவுயநவைமைகும்
நெஞ்சினளுகியுள்ளந் தன்னுறவொழிந்துநின்றாய்
வெஞ்சிலைமைந்தன்போதூ னிரும்பகேவள்வியானெழ்
நெஞ்சவிலகக்கலிசேனை யெழுந்தெழுந்தேகக்கண்டான்.

இந்திரஜித்து வஞ்சனைசெய்துவிட்டுப் போனானென்று நினைத்து அளவில்லாத சந்தோஷத்தையுடைய மனத்தராகித் துக்கமற்றுநின்று, இந்திரஜித்து நிகும்பலைக்குப்போய் வேள்வி செய்ய யத்தனித்தானென்பதை இராவணனுடைய சேனைகள் கூட்டங்கூட்டமாகப் புறப்பட்டுப்போவதைக் கண்டார். அவ்வியாகத்திற்கு வேண்டியகலப்பைகளும், விறகும், நெய்யும், தேவர்களெல்லாம் பார்த்து ஐயோ இவ்வஸ்துக்கள் அபிசார ஹோமத்திற்கு வேண்டியவைகளாயுள்ளனவே ஆகையால் நம்மையெல்லாம் வாழ்வினின்றும் நீக்கி மீளாத தாழ்வி லழுத்துமே யென்று மனவருத்தப்படுதலைக் கண்டு, ஆ! ஆ! இப்பாதகன் என்னமாயஞ் செய்கிறானென்று வருந்தி ஐயோ இறந்த ராட்சசவீரர்களெல்லா மெழுந்துவிடுவார்களே அவ்வண்ண மெழுந்துவிட்டால் மீண்டுஞ் சாகார்களே சுவாமிகாரியம் இன்னமாய்விடுமே யாதுசெய்வதென்று என்னி ஆகிலும் நல்லதுபார்ப்போமென்று நிச்சயித்துத்திரும்பி மகாவரப்பிரதாபசாலியாகிய ஸ்ரீராமபிரான் திருவடியில் தமது திருமுடிசாய்த்து வணங்கித் தான்போய்வந்த காரியத்தைச் சொல்லுகின்றார்.

விபீஷணர் தாம்போய்க்கண்டுவந்தவைகளைச் சுவாமிக்குச் சொல்லுதல்.

கலி.

இருந்தவேள்வியானே யெதிர்ந்தனனென்னசுரர
அருந்ததிகற்பினுக் கழிவுண்டோவரக்கனம்மை
வருந்திடமாயஞ்செய்து நிகும்பலைகுறுகுபுக்கான்
முருக்கழல்வேள்விமுற்றி முரசறைமுடிக்குமுன்னாள்.

ஸ்வாமி சக்கரவர்த்தித்திருக்குமாரரே! உலோகமாதாவாகிய பிராட்டியார் க்ஷேமமாக எழுந்தருளி யிருக்கின்றாள். அடியேன் கண்ணாரக்கண்டேன். அருந்ததிக்குச் சமமான மஹாபதிவிரதையாகிய அந்த மாதேவிக்கும் அழிவுண்டாகுமோ? அந்தராக்ஷசன் நம்மைவருத்தப்படும்படியாக மாயஞ் செய்துவிட்டு நிகும்பலைக்குச் சென்று யாகத்தை முடித்துக்கொண்டு நம்மைக்கருவறுக்க யத்தனப்பட் டிருக்கின்றான். இதுதான் நடந்தசேதியென்று விண்ணப்பஞ் செய்தார்.

இப்படி விபீஷணாழ்வான் சொன்னவுடனே ஏழுலோகங்களும் சேர்ந்து வாழ்த்தினதுபோலச் சப்தசமுத்திரங்களும் ஒருமிக்கப் புறப்பட்டுச் சப்திக்கின்ற சப்தமோ அல்லவோ வென்று தேவர்களுஞ் சந்தேகிக்கத் தக்கதாக வானரக்கூட்டங்களெல்லாம் கர்ச்சித்து, மலைகளெல்லாம் பொடிப்பொடியாகும்படி எழுந்து கூத்தாடின. விசேஷமணியாகிய ஸ்ரீராமபிரானும் சீதாபிராட்டியாரைப்பற்றி யுண்டான சந்தேகம் நீங்கி, விபீஷணாழ்வானைத் தமது தேகமும் – ஆசையும் – உயிரும் - ஒன்றாகச்சேரத் தழுவி, ஐயா விபீஷணா! இத்தகைத்துன்பம்போகிறது ஒரு அருமையோ? என்பக்கலில் நீ இருக்கிறாய். தெய்வமிருக்கிறது. வாயுபுத்திரனிருக்கிறான். நாம்செய்த தவமுமிருக்கின்றது. வேதமும் பொய்த்துப்போகவில்லை. என்றுசொல்லியருளினார்.

சீதையிருக்கின்றாளென்ற சுபவார்த்தையைக்கேட்ட ஸ்ரீராமர் சந்தோஷித்த, காலையில் நிகும்பலையையழிக்க இலக்ஷ்மணரைத் தன்னுடன்கூட்டி யனுப்பும்படி விபீஷணர் வேண்டல்.

கலி.

என்றலுமிறைஞ்சியாக முற்றுமேல்யாரும்வெல்லார்
வென்றியுமரக்கர்மாடே விடையருளிளவலோடும்
சென்றவனவியுங்கண்டு வேள்வியுஞ்சிதைப்பனென்றான்
நன்றதுபுரிதியென்றா னாயகனவ்வதானன்.

அதுகேட்ட விபீஷணாழ்வான் ஸ்வாமியை வணங்கி, ஓ கருணாநிதி! இந்திரஜித்து அந்த நிகும்பலையாகத்தை முடிப்பானேயானால் அவனை யாரும் வெல்லமாட்டார்கள், இராட்சசர்களுக்கே ஜெயமுண்டாய்விடும். ஆகையால் தேவரீர் நியமனஞ்சாதித்தால் இளையபெருமாளுடனேபோய் அவனுயிரைவாங்கி, அவன்செய்துகொண் டிருக்கும் யாகத்தையும் சிதைத்துவிடுகிறேனென்றார். அதைத் திருச்செவிசாத்தின சக்கரவர்த்தித் திருக்குமாரர், நல்லது; அப்படியே செய்யுங்க ளென்றுசொல்லிப் பின்னுஞ் சொல்லுகின்றார்.

மாயாசீதைப் படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

இருபத்தாறாவது,

நிகும்பலைப்படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமர்விபீஷணர்வேண்டுகோளின்படி இலக்ஷ்மணருக்குத் தாம் அகஸ்தியராற்பெற்றிருந்த அஸ்திராதிகளையளித்துச் சுக்கிரீவனாதியரைத் துணைகூட்டியனுப்ப, உடனே இலக்ஷ்மணனாதியர் நிகும்பலைக்குப்போய் இந்திரஜித்துவினாற் காவல்செய்துள்ள பலசேனையூகங்களையும் யாககுண்டத்தையு மழித்துப் பராக்கிரமித்துநிற்க, அக்கால் இந்திரஜித்து தன்சேனையனைத்துஞ் சின்னபின்னமானதைக் கண்டு தனக்குத்தானே பலயோசித்திருக்க, அப்போ தாஞ்சநேயர் அவன் செயலனைத்தையுந்தூஷித் தெதிர்த்து நிற்கையில் அவனுஞ் சிலபேசிப் பலபாணங்களால் அவரைச் சோகமுறச்செய்ய, அதுகண்டு விபீஷணர் சூழ்ச்சியால் யுத்தசன்னத்தராய் அனுமானை யூர்ந்துவந்த இளையபெருமாளோடு இந்திரஜித்து கடும்போர்விளைத்து மெலிந்துபோய் மீட்டும் வந்து தேவாஸ்திரங்களைப் பிரயோகிக்கவும் அவற்றையுமவர் வெற்றிகொள்ள, அப்பால் இந்திரஜித்து விபீஷணரைத்தூஷித்து பலபாணங்களால் பிரயோகிக்குந்தோறும் இலக்ஷ்மண ரவைகளைத் துண்டித்ததும், உடனே விபீஷணரும் அடங்காத கோபத்தினராய்த் தமது தண்டாயுதத்தினாலே அவனுடையசாரதியையும் குதிரைகளையும்வதைத்

தரும், அப்பாலவ் விந்திரஜித்து மறைந்து இராவணனிடம் போய்ச் சேர்ந்ததும் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமபிரான் இலக்ஷ்மணருக்கு அஸ்திராதிகள்கொடுத்து சுக்கிரீவன் முதலியோரைத் துணைகூட்டி யனுப்புதல்.

கவி.

தம்பியைத்தழுவியையன் றாமரைத்தவிசின்மேலான்
வெம்படைதொடுக்குமாயின் விலக்குவான்பொருட்டாலந்த
அம்புநீதுரப்பாயல்லை யனையது துரந்தகாலை
உம்பருமுலகுமெல்லாம் விளியுமஃதொழிதியென்றான்.

சாக்ஷாது ஸ்ரீராமமூர்த்தியானவர் தனது தம்பியாகிய இலக்ஷ்மணப்பெருமானைத்தழுவி, அப்பா! நமது பெரும்பகைவனாகிய இந்திரஜித்தானவன் தாமரைமலரி லுறையும் பிரமதேவனது அஸ்திரத்தைப் பிரயோகிப்பானேயானால், அதை விலக்கும்பொருட்டு அப்பிரமாஸ்திரத்தையே நீயும் தொடுத்துவிடாதே அப்படித்தொடுத்து விட்டாயேயானால், தேவலோகம்-பிரஹ்மலோகம்-பூலோகமெல்லா நாசமாய்விடும். மேலும் பாசுபதாஸ்திரம்-நாராயணாஸ்திரம்-இவைகளை அவன் உன்மேற் பிரயோகிப்பானேயானால், அவைகளையும் அந்தந்த அஸ்திரங்களாலே நீக்கும்படியான விதத்தைச் செய்துநீக்கி, பிறகுன் வில்வித்தையின் வல்லமையினாலே அந்த இந்திரஜித்துவின் ஆவியை உண்டுவிட்டுவரக் கடவாய். அப்பா பிரதாபசாலியே! அவனென்னென்ன மாயங்களைச் செய்கிறானோ அவைகளைக் குறிப்பாய்ப் பார்த்துக்கொண்டிருந்து, அவைகளையெல்லாம் வேரறக்களைந்துவிடு. விசாலமான தர்மசிந்தையைக்கொண்டு பலவகையான பெரும்போர்களையுஞ் செய்து, வருத்தப்படாமல் சமயம்பார்த்துத் தேவர்களுக்குக் கூற்றுவனாய்ப் பிறந்திருக்கின்ற அந்த இராவணியைக் கொன்றுவிடு.

ஐயா யமனுக்கொப்பாயிருக்கின்ற இலட்சுமணா! அவன் பதறிக்கோபங்கொண்டு அநேககோடி பாணவருஷங்களைப்பெய்து வேகத்துடனே உன் பாணங்களை விலக்கினபோதும், அல்லது மெலிவித்தபோதும், அவன் அம்பைப்பூட்டியெய்கின்ற வில்லைவெட்டி யெறிந்துவிட்டுப், பிறகு அவனைக் கொன்றுவிடு. அவன் அம்புதொடுக்கிறதற்கு முன்பாக உன் வில்லில் அம்பைப்பூட்டிக்கொண்டு, அவனெந்தத் துறைகளில் பாணங்களைப் பிரயோகிக்கிறானோ அந்தந்தத் துறையிலேயே அவைகளை நீக்கிவிடு. அவன் வேகமாய்ப் பிரயோகித்தாலும்—தாமசமாய்ப் பிரயோகித்தாலும்—நீ பராமுகமாயிராமல் அவைகளைக் குறிப்பாகப்பார்த்து, அந்தந்த வேகத்துக்குத்தக்கபடி நீயும் அஸ்திரப்பிரயோகம் பண்ணுக, என்றிந்தச் சமஸ்தவஸ்துக்களும் தாமாயிருந்தும் தம்முடைய அளவில்லாத குணப்பிரபாவங்களைத் தாமே அறியமாட்டாத சகல காரணபூதரான ஸ்ரீயப்பதியானவர் அவருக்குவேண்டிய எல்லா

நிகும்பிலையில்யாகஞ்செய்திருந்த இந்திரஜித்துவை, இலக்ஷுமணனெதிர்க்கையில்விபீஷணருக்குமவனுக்கும்போர்விளைதல்.



உயுத்தகாண்டம். நிகும்பிலைப்பட்டணம்.

உபாயங்களும் அந்த உபாயங்களுக்கு வேண்டிய மந்திரங்களும் உபதேசித்து அவைகளை வினயத்துட னேற்றுக்கொண்ட ஸ்ரேஷ்டராகிய அவ்விளைய பெருமானைக்கடாக்ஷித்துப் பின்னும் சொல்லுகின்றார்.

ஓ தனுர்வேதத் தேர்ச்சியையுடைய இலக்ஷுமணனே! இதோநான் பிடித்துக்கொண் டிருக்கின்ற வில்லைப்பார். இது மிகுந்த பலமுள்ள வில்லாக்கும். இதை நீ மிகுந்த தைரியத்துடனே பிடித்துக்கொள். இந்த வில்லினுடைய சாலாற்றைச் சொல்லுகின்றேன்கேள். ஓ வில்வீரனே! தமிழ்ப் பாஷையை வெளியிட்டதனால் தமிழ்முனியென்று பெயர்பெற்ற அகஸ்திய மகாமுனிவர் முன்னமிதைப்பற்றிச் சொன்னவைகளையெல்லா நீ சித்திரப்பாவைபோலசையாமலிருந்து விவரமாய்க்கேட்டிருக்கின்றாயல்லவா? ஆயிரந்திருத்தோகள் ஆயிரந்திருமுடியையுடைய விராட்டாகியமஹாவிஷ்ணுவினது திருமேனியிற் பிறந்த பிரஹ்மாவானவர்வளர்த்த யாகத்தினாலேவரப்பெற்ற வில்லாக்கும். இதுவென்றுசொல்லித்தமுடைய கவசத்துடனேகூட அவ்வில்லையும் தம்முடைய அம்பறாத்தூணியுங் கொடுத்து, இன்னும்வேண்டிய பலஉறுதிகளையுமுபதேசித்து, மேருமலையைப்போலப் பிரகாசிக்கின்ற இளையபெருமானைக்கட்டித் தழுவினார். அப்படித் தழுவினவுடனே சுவர்க்கலோகத்தில் வசிக்கின்றவர்களான தேவர்களெல்லாம் இனிநங்களுடைய துக்கமெல்லா நீங்கிப்போய்விட்டதென் றெனக்கித்தார்கள். அக்கால் இலக்ஷுமணர் தேவர்கள் பல்லாண்டுகூறவும், தேவஸ்திரீகள் வாழ்த்தி ஆசீர்வதிக்கவும், பார்வதியை இடதுபாகத்திலுடைய சந்திர சடாமகுடதாரியாகிய சங்கரமூர்த்தி திரிபுரமெரிக்கக் கோபித்துப் புறப்பட்டதுபோல இந்திரசித்தாகிய பகைவன்மேல் யுத்தத்திற்குப் போகிறதற்காகச் சித்தமானார்.

அப்போது ஸ்ரீராமர் - அப்பா வில்வீரசிகாமணியாகிய தம்பி! மாருதி முதலான வானரவீரர்களை உனக்குத் துணைவர்களாக அழைத்துக்கொண்டு போய் வருவாயாகவென்று விடைகொடுத் தருளினார். அக்கால் தர்ம்மசீலராகிய இளையபெருமாள் தமது ஆசாரியராகிய பெரியபெருமாளுடைய திருவடித்தாமரைகளைத் தமக்குள்ளும் புறத்துமாகத் திருமுடியிற் சூடிக்கொண்டு, அறுகியமேகம்போலத் திருமேனியை யுடையவராய்ப் பிரிவையெண்ணியழுது கண்ணீர் பூமியிற் புரண்டோடும்படி நெஞ்சழிந்து நிற்கின்ற அப்பெரியபெருமானை மும்முறைசுற்றிவந்துதெண்டனிட்டு, வச்சிரமலைபோலிருக்கின்ற வில்லையிடதுகையிற் பற்றிக்கொண்டு, இந்திரசித்தனின்மேல் அதிக கோபங்கொண்டவராய் அவனுடைய தலையைக்கொண்டு வருகிறேனென்று ஸ்வாமியினிடத்தில் விண்ணப்பம்பண்ணிப் புறப்பட்டுப்போயினார். இவ்வண்ணம் காட்டிலும் நம்மைப்பிரியாமல் எல்லாக்காரியங்களையுஞ்செய்ததிருத்தம்பியார் மிகுந்தவேகத்துடன் சென்றபோது, தேகத்தைவிட்டுப்பிரியாத உயிரைப்போன்ற அவர் தமதுதிருக்கண்களுக்கு மறைவானவுடனே தாயினமைப்பருவமாயிருந்தபோது விஸ்வாமித்திரருடைய யாகத்தைக் காக்கிறதற்காகப்போன அன்

றையதினம் தமது பிதாவாகிய தசரதமகாராஜா எந்தநிலையி லிருந்தாரோ அந்தநிலையைத் தாமு மடைந்திருந்தார். உடனே வானரசேனைக் கதிபதியான சுக்கிரீவமகாராஜா முதலான வானரவீரர்கள் எரிகின்ற கொள்ளிக்கட்டையைக் கையிலுடையவர்களாகி, காட்டுவழிகளு மலைகளுங்கிழிபடும்படியாக அதிக வேகத்துடனேபோய் நிகும்பலையைச் சேர்ந்தார்கள்.

இலக்ஷுமணரும் வானரவீரர்களும் இந்திரஜித்துவினுடைய சேனைகளையும் யாககுண்டத்தையு மழித்தல்.

கலி.

உண்டாயதொரா வுலகுள்ளொருவன்
கொண்டானுறைகின் றதுபோற்குலவி
விண்டானும்விழுங்க விரிந்ததனைக்
கண்டாரவரக்கர் கருங்கடலே.

இவ்வாறு சென்று சேர்ந்த வானரவீரர் முதலாயினோர் அங்கே ஒராலிலையின்மீது லோகங்களை யெல்லாந் தமக்குள்ளேயொடுக்கின ஒருநாராயணஸ்துவானவர் சயனித்துக்கொண் டிருக்கிறதுபோல இந்திரசித் திருக்கின்றதையும், சுற்றிலும் இராக்ஷசக்கருங்கடல் சூழ்ந்திருக்கின்றதையும் பின்னுஞ் சில ராக்ஷசச் சேனைகள் சக்கர யூபஸ்தம்பம் காட்டிக்கொண்டு காவலாயிருக்கின்றதையும், அந்தத்துஷ்டன் மத்தியில் ஓமாக்கினியுடனே கூடியிருந்து வடவாமுகாக்கினியுடனே கருங்கடலானது நின்றதுபோ லிருக்கின்றதையும், நீர்க்கடலுடனே மற்றக்கடல்களெல்லாஞ் சூழ்ந்துகொண் டிருக்கின்றதுபோல அணியணியாக மேகம்போலுநிறமும் பருத்ததேகமுமுடையயானைகளும்-தேர்களும்-குதிரைகளும்-கொடிப்படைகளுமாகி ஆயிரகோடி சேனைகள் ஆயிரயோசனை விஸ்தாரமாக விரிந்திருக்கின்றதையும், இன்னும் பொற்றேர்களும்-குதிரைகளும்-யானைகளும்-காலாள்களும்-அளவில்லாமல் இந்திரசித்துவின் ஆஞ்ஞையின்படி பற்பலவியூகமாய் லோகத்தைவளைந்து ஆயிரங்கடல்சூழ்ந் திருக்கின்றதுபோ லிருக்கின்றதையுங் கண்டார்கள். இப்படிச் சூழ்ந்திருக்கின்ற ராக்ஷசர்களுடைய மேனியின்மீது ஆகாசத்தையெட்டிக் குத்தும்படியாக நெறித்துக்கொண்டிருக்கின்ற செம்மயிர்க் காடானது, நீலமேகத்துக் கொப்பாகிய திருமேனியையுடைய ஸ்ரீராமமூர்த்தியானவர் சமுத்திரத்தின்மீது அக்கினியாஸ்திரங்களைப் பிரயோகித்ததுபோலக் காணப்பட்டது. அந்த ராக்ஷசர்கள் இளையபெருமானையும் வானரவீரர்களையும் பார்த்தும் தங்களெசமானனுடைய வுத்தரவின்றி முந்தலாகாதென்றிருந்த அவர்கள் விற்களெல்லாம் குணத்தொனி யில்லாமல், மேகத்திற்றோன்றிய இந்திர தனுசைப்போ லிருந்தன. அவர்கள் சங்கங்கள் சமுத்திரத்தில்வாழு முயிர்களைப்போல நிச்சப்தமா யிருந்தன. பேரிகைகள் கர்ச்சிக்காத மேகங்களைப்போலே ஒலியாம லிருந்தன.

அப்படி ஒலியடங்கிப்போன பெருங்கடல்போலிருந்த இராக்ஷசசேனையை மெலிவடையாதவானரவீரர்கள் நெருங்கி, மிகுந்தபலம்பொருந்திய ஸ்ரீராமருடைய கிருபையால் ஆகாசமுங் கிழிபட்டுப்போகும்படி ஆரவாரித்தார்கள். இப்படிச்சப்தித்த வானரசேனைகளுக் கெதிராக இராட்சசர்களும் சப்தித்து வானரவீரர்களைவந்து சூழ்ந்துகொண்டார்கள். பேரிகைகள் முழங்கின. வானரவீரர்கள் மரங்களையு மலைகளையுங்கொண்டு இராட்சசக்கடலைத் தூர்த்துவிட்டார்கள். இராக்ஷசர்கள் சூல்கொண்ட மேகம்வருஷிக்கின்ற நீர்த்தாரைகளைப்போல அம்புகளைப் பிரயோகித்தார்கள். இப்படி ராக்ஷசர்கள் ஆயுதங்களைப் பிரயோகித்தபடியால் அவைகள் வானரசேனைகளின்மீது தடாகத்தில் அன்னங்கள் படிந்ததுபோல வந்து படிந்தன. மேலு மிராக்ஷசர்கள்விட்ட அம்புகளும் - மழுக்களும் - வளைதடி முதலானவைகளும் - வானரர்களுடைய பற்களும், தலைகளும், உடல்களும், பூமியில்விழும்படியாகச்சென்று, அவர்கள்விட்ட மலைகளை மரங்களையும் சின்னபின்னங்களாய்ச் செய்தன. மேலுமேலு மிராக்ஷசர்கள் அம்புகளையும் - மழுக்களையும் - இருப்புலக்கைகளையும் - கொழுக்களையும், வேல்களையும், வளைதடிகளையும் வீசினதினால், வானரர்களுடைய வால்களும் - தலைகளும் - உடல்களும் - வயிறுகளும் கால்களும் - கைகளும் - சின்னபின்னப்பட்டுத் தரையில்வீழ்ந்தன.

இப்படி ராக்ஷசர்களுக்கும் வானரர்களுக்கும் கைகலந்து யுத்தநடக்கும்போது விபீஷணாழ்வான் வெற்றிவீரராகிய இளையபெருமானைப் பார்த்து, ஸ்வாமி! தேவரீரிப்படி தாமசித்துக்கொண்டிருப்பது நீதியோ? சீக்கிரமாயெழுந்தருளி இந்தயாகத்தைச் சிதையாமற் போவீரானால் இந்தராக்ஷசக்கடலை நாம்ஜெயிக்கமாட்டோமென்று விண்ணப்பம் பண்ணிக்கொண்டார். அப்போது அந்தமார்க்கத்தில்வந்து நின்ற தேவர்களும்-அசுரர்களும்-பிரமாவும்-அச்சுதனும்-உருத்திரனும்-மூன்றுலோகத்துக்கு நாயகனாகிய தேவேந்திரனும் மற்றுமுள்ள யக்ஷ கின்னர கந்தருவ ராஜியர்களுமாகிய இவர்களில், இந்தயுத்த வேடிக்கையைச்செவ்வையாகப் பார்த்தவர்கள் ஒருவருமில்லை. இப்படி யிருவகையாருடைய சேனைகளும் எதிர்த்து நின்றன. அணியணியாக எதிர்த்துநின்ற வானரப்படைகளின்மீது மூன்றும்பிறைச் சந்திரனையொத்த வக்கிரதந்தங்களையுடைய இராக்ஷசர்களும் எதிர்த்துநிற்க, பலவிடங்களிலும் அவரவர்களுக்கு ஆயுதங்களா யுள்ளவைக ளெல்லாம் இருபடைகளிலும் பிரவேசித்தன.

அப்போது இளையபெருமாள் அந்தச்சேனைக்குள் நுழைந்து கூர்மையான பாணங்களை வருஷித்தார். அதனால்ராக்ஷசர்களிந்தலோகத்தைவிட்டு யமனுடைய பட்டணமாகிய வைவச்சுதபுரியைப்போய் அடைந்தார்கள். மதங்கொண்ட யானைகளும், குதிரைகளும், நூறுகோடியாக இரணகளத்தில் படிந்ததினால், பெருக்கெடுத்தோடின ரத்தக்கடலில் மேகங்கூடமுழுகும்படியாக இராக்ஷசர்கள்விட்ட அம்புகளைத் துண்டிதுண்டாக்கிக் குவித்துவிட்டார். மத

யானைகள் விழுந்திறந்த குழிகளில் அக்கினி பற்றியெரிவதுபோன்ற செம்பட்ட மயிர்களையுடைய இராக்ஷசரின் தலைகள் விழுந்து, அநேக யாககுண்டத்துக் கொப்பாக இருந்தன. இலட்சுமணைப் பெருமானுடைய வில்லிலிருந்து புறப்பட்ட பாணங்களாற் பிளக்கப்பட்டவைகளான யானைக ளிரத்தங்களைக் கக்கிக்கொண்டு, உடலும், வயிறும், மலைகளையுங் குகைகளையுமொத் திருந்தன. சில பாணங்கள்பட்டு உதிர்ந்தபற்கள் மின்மினிப் பூச்சிகளுக்கொப்பா யிருந்தன. அறுந்துவிழுந்த தலைகள் அம்புதைத்திருப்பதினாற் பாம்புள்ள புற்றுக்களையொத்துப் பூமியிற் கிடந்தன. மேகவருஷம்போன்ற பாணங்கள் பாய்ந்ததினால் அறுந்து இரத்தக்கடலில் விழ்கின்ற கொடிகள், சமுத்திரத்தில் மேகங்கள்படிவதைப்போ லிருந்தன.

சில பாணங்கள்பட்டுக் காம்பற்று உதிரக்கடலில் விழுந்து முழுகுகின்ற சத்துருக்களுடைய குடைகள், கேதுவாகிய செம்பாம்பினால் விழுங்கிய சந்திரனுக்கொப்பாக இருந்தன. சிலபாணங்கள்பட்டுப் பெரியயானைகள் துதிக்கையுங் கால்களுமறுந்து இரத்தக்கடலி லடித்துக்கொண்டு போகின்றன. அவைகளுக் குயிரில்லாதபடியால் அந்தரத்தத்தில் மிதந்து சமுத்திரத்திலுள்ள முதலைகளுக்கொப்பாக இருந்தன. அக்கினிமுகாஸ்திரம்பட்டு யானைமேற் போர்வைகளெரிவதினால் மூங்கிற்காடுகள் நெருப்புப்பற்றி வேகின்ற மலைக்குச்சமமா யிருந்தன. சமுத்திரத்துக்கொப்பான இராட்சசர்களைக் கரடிகள்சேர்ந்து அவர்களுடைய தலையின்மீதுள்ள மண்டையோட்டைப் பேர்த்துத் தரையில்தள்ளுவதைப் பார்க்கும்போது, மலையின்மேலுள்ள புற்றை நகங்களினாற் பேர்க்கிறதைப்போ லிருந்தன. இலட்சுமணருடைய பாணங்கள் மழையைப்போல வருகிறபடியினாலே இரதத்திற் கட்டிய குதிரைகளும் யாளிகளுந்தடுமாறுந்தோறும், இராட்சசவீரர்களாகிய சாரதிகள் தங்கள் தலையிற்சூடிய பூமாலையில் மொய்த்த வண்டுகளோடு கீழே விழுந்து இறந்தார்கள். இராட்சசர்களுடைய தேகங்கள் துண்டுதுண்டாயறுபட்டபடியினாலே இரதகஜதுரக பதாதியாகிய அங்கங்கள் நிறைந்திருக்கின்ற யுத்தகளத்தில் அந்தந்தவிடங்களிலே யோடுகின்ற ரத்தவெள்ளங்கள் யாவரும் பழிக்கும்படியாக எலும்பு நிணங்குங்காண அலசின.

இளையபெருமாளானவர் தம்முடைய பிதாவான தசரதச்சக்கரவர்த்தி ஒரேதேரைச் செலுத்திக்கொண்டு அநேகந்தேரை நடத்திக்கொண்டு எதிர்த்துவந்த அசுரர்களுடைய பேரணியைக் கொன்றுவிட்டதுபோல அஸ்திரப்பிரயோகஞ்செய்து கொன்றுவிட்டார். அப்போது சண்டமாருத மடித்ததினால் மலைகளும், மேகங்களும், வானநக்ஷத்திரங்களும், அழிந்துபோனதுபோலி, இராக்ஷசர்களுடைய தலைகளும், தேகங்களும், அஸ்திரங்களும், ஓமகுண்ட அக்கினியிற் படபடவென் றுதிர்ந்தன. அன்றியும், மதயானைக்குச் சமமாகிய இளையபெருமான் சம்ஹரிக்கிறபடியினாலே ஆகாசத்தைமுட்டி-

யுயர்ந்திருக்கின்ற இராக்ஷசர்களுடைய பெருந்தலைகள் ஒன்றோடொன்று தாக்குண்டு, வேதமந்திரங்களை நிறைய உருச்செபித்து ஸ்தாபனம்பண்ணின பூரணகும்பத்தை உடைத்துப் போட்டன. மதயானைகளைவாரியும் இராக்ஷசர்களுடைய தலையையுருட்டிக்கொண்டுமோடுகின்ற இரத்தப் பெருவெள்ளமானது, இந்திரஜித்து வளர்த்துக்கொண் டிருக்கின்ற ஓமாக்கினியை அவித்துவிட்டுப் போயின.

இலட்சுமணர் பிரயோகித்த பாணங்கள் செம்பட்டமயிரையும் வீரக்கழலையுமுடைய இராட்சசர்களுடைய வாள்பிடித்தகைகளை ஆகாசத்தில் நின்றுந்துணித்து இடியைப்போல வீழ்த்தினபோது, அவைகள்பட்டு யாகத்துக்காக நின்றிருந்த எருமைக்கடாக்கள் மாண்டு துர்ச்சகுனத்தைக் காட்டின. மதஜலமொழுகுகின்ற பெரியமலைபோன்ற யானைகளின்மீதிருந்து பலங்குறைந்து வாளிழந்த ராட்சசர்கள் இலட்சுமணருடைய பாணங்களுக்குப் பயந்து, அந்த யாகசாலைமுழுவது மூடியிருக்கின்ற இரத்தவெள்ளத்தில் முழுகிப் பதுங்கிக்கொண்டார்கள். அதியுஷ்ணமாய்ச் சொலிக்கின்ற அக்கினிமுகாஸ்திரங்கள் கால்களையறுத்துத் தலைகளிற்பாய்ந்து செல்லுவதினால், எல்லாராட்சசர்களும் புத்திமயங்கிக் கையிற்பிடித்திருக்கின்ற வேலைப் பூமியிலூன்றிக்கொண்டு மெய்நடுங்கிக் குடல்சரிந்துதொங்கி யசையும்படியாகச் சின்னபின்னப்பட்டார்கள். சிலராட்சசர்கள் பாணங்களால் உடல்பிளந்த தங்கள் பிள்ளைகளைக் கைசோரவிடாமல் தோள்களின்மேற் சுமந்து அவர்கள் தொங்கிக்கொண்டுவரவும், தங்களுடைய குடல்கள் முதுகுபக்கமாய்ச் சரிந்துவிழவும், திக்குமுக்காடி, அஸ்திரப்பிரயோகம் பண்ணுகின்ற இலட்சுமணரை நெருங்கி எதிர்த்துவந்தார்கள். நெய்யுங்கள்ளு நிறைந்திருக்கின்ற சாடிகள் பொரிக்குடங்களுடனே யுடைந்துபோகும்படியாகக் கோடாநுகோடியான கூட்டமாய் இராட்சசக்கவந்தங்கள் கூத்தாடின. சில உடல்கள் மயங்கி விழ்ந்தன.

இந்தப்பிரகாரமாக இளையபெருமான் காற்றைப்போலவும், விஷத்தைப்போலவும், நெய்வோர்களுடைய நூலைப்போலவும், தேகத்தைத்தொடர்ந்த நோயைப்போலவும், பாவிலுற்ற பிணியைப்போலவும், இராக்ஷசசேனைகளிருக்குமிடங்கள்தோறும் பிரவேசித்து எல்லாரையுங்கொன்று நாசமாக்கினார். இப்படிவிசாலமாகிய பெருங்கடலையொத்திருந்த இராட்சசப் பெருஞ்சேனைகள் சண்டமாருதக் காற்றடிக்க வேர்பறித்து சாய்ந்துவீழ்ந்த தோப்பைப்போல நான்குபக்கத்திலும் வீழ்ந்துகிடக்கின்றதை இந்திரஜித்துப் பார்த்தான். அவன் பலம்பொருந்திய யானைப்பிணங்களின் மலைகளையும், குதிரைகளுந் தேர்களுஞ் சின்னபின்னப்பட்டு உடலும் தலைகளுமாகிய பர்வதங்களையும், இரத்தக்கடலையு மல்லாமல்; அவ்விடத்தில் வேறொன்று மிருக்கப் பார்க்கவில்லை. தன்னோடுகூடவந்த நூறுநூறுகோடி ராட்சசபதாவீரர்களை இளையபெருமானுடைய பாணங்கள் கூறுகூறாக்கிக் குவித்த குப்-

பல்களையும் இரத்தவாறுகளையுமே யல்லாமல், இராவணகுமாரன் வேறொன்றுங் காணவில்லை. அக்கால் விஷத்தைக்காட்டிலும் அதிக கொடியவர்களான சிலராக்ஷசர்கள் நடுங்கி நாவறண்டு பயந்து தன்னண்டை ஓடிவருகிறார்கள். மிகுந்தகோபத்தையுடைய சில ராக்ஷசவீரர்கள் திரும்பிவராமட்டாமல், ஐயோ! நமக்கு உதவியாக ஒருவருமில்லையே: என்றுவிழுந்து மாண்டார்கள்.

இந்தப்படி ஓமாக்கினி அவிந்து அவ்விடத்திலிருந்த கலப்பைகளும் கட்டினகட்டறுந்த தர்ப்பைப் புல்லும் சின்னபின்னப்பட்டுப் போகவும், தான் உருப்போட்டுச் செபித்துக்கொண்டிருந்த மந்திரவெழுத்தும் விட்டுவிட்டுத் தொட்டுவிடத் தெரியாமல் மறந்துவிட்டு, அந்த ஓமாக்கினிபொங்கினதுபோல அதிக கோபங்கொண்டிருந்தான். அப்போது அந்தப் போர்க்களத்திலே பாணவருஷத்தால் மாண்டுபோனவர்கள் தவிர உயிருள்ளவர்களாயிருந்த இராக்ஷசர்களெல்லாம் ஒருமிக்கச் சேர்ந்தார்கள். வானரசேனா சமுத்திரமானது இந்திரஜித்துவைச் சூழ்ந்து வளைத்துக்கொண்டது. ஆயிரகோடியாகிய ராட்சசசேனை எவ்வளவு மாத்திரத்திற்குள்ளாக அழிந்துபோனதையும் சத்தியசந்தரான இலட்சுமணப் பெருமானுடைய வில்வல்லமையையும் பார்த்த இந்திரஜித்துவுக்கு அதிக துக்கமும் மிகுந்தகோபமும் வளர்ந்தன. பூமிதேவியானவள் திருமேனி நடுங்கித் துக்கிக்கத்தக்கதாகக் கொலைசெய்து திரிந்துகொண்டிருந்த இராட்சசர்கள் வயிசத்துடன் ஒருவனுக்குப்போவதையும், அதைக்கண்டு மகாரிஷிகள் கையையசைக்கின்றதையும், இந்திரஜித்து கண்ணினாலே பார்த்தான். இப்படி மானங்கெட்டுப் போகவும், ஒருவருடனும் பேசாமலிருந்தமோனம் விக்கினப்பட்டுப்போகவும், அளவில்லாத மிகுந்தபல முள்ளவர்களான இராட்சசசேனைகளும் நாசமடைந்துபோகவும், தன்மனதில் நினைத்திருந்த எல்லாவெண்ணங்களும் மடிந்து சில சொல்லத் தொடங்கினான்.

இருபத்தைந்துவெள்ளஞ் சேனையில் இப்போதிருக்கின்றது பத்தாக்குரோணி சேனையாகும். இனிநா மிங்கிருந்து யாகஞ்செய்யலாமென்பது சிறுபிள்ளைத் தன்மையாகும். இந்தயாகமுஞ் சிதைந்துபோய்விட்டது. நாம்வளர்த்த யாகாக்கினி அடங்கியவிந்தது. இதுவரையிலும் யுத்தகளத்தில் நமக்குண்டாகிய வெற்றி யடங்கிவிட்டதென்பதற்கு இதெல்லாமோ ரேதுவாகும். அஃதிருக்கட்டும். இந்திரசித்துமனிதருக்குத் தோற்றுப்போனானென்று இழிவான வார்த்தையை என்னெதிரேநின்று யாவருஞ் சொல்லுவதனாலே, நம்முடைய குலத்தினுடைய பெருவல்லமையும் ஒழிந்து அழிந்துபோய்விடுமல்லவா? மேலும் மந்திரவிதிப்படியான இந்தயாக மழிந்துபோய்விட்டதேயென்று இப்போது நாம் சிந்தைநொந்து வருந்தப்படுவது, தேவலோகத்திலேயிருக்கின்ற தேவர்கள் இந்திரசித்துவுக்கு மனிதர்களிடத்தில் சண்டை செய்யமுடியாது. இவன்வல்லமை தேவேந்திரனிடத்தில் மாத்திரந்தான்

செல்லுமென்று பரிகாசம் பண்ணும்படிக்காகவோ? ஆ! ஆ! நாம் யாகஞ்செய்ய முயன்றது வெகுநேர்த்தி: வெகுநேர்த்தி: என்று தனக்குத்தானே ஆலோசித்தான்.

இந்தப்பிரகாரமாக இந்திரஜித்து சொல்லிக்கொண்டிருக்கும்போது வானரவீரர்கள் பெரியமலைகளையும், மரங்களையும், இராட்சசப்பிணங்களையும், இறந்தயானைகளையும் வீசியெறிந்து, அவனைச்சூழ்ந்திருந்த சேனைகளைச் சின்னபின்னப்படச் சிதறவடித்தார்கள். இராட்சசர்கள் அந்தவடியைச் சகிக்கமாட்டாமல் ஒருவர்மேல் ஒருவர் நுழைந்து பதுங்கினார்கள். இலட்சுமணருடைய பாணங்கள்வந்து பாய்கிறபடியினாலே அவரவர்கள் அங்கங்கே பதுங்கிக் குடலழிந்து, உடல்பிளந்து, மதமொழுகின யானைபோலக் கோபமாயினார்கள். இலட்சுமணருடைய பாணங்களும், வானரவீரர்கள்வீசிய மலைகளும் மரங்களும், உகாந்தகால சண்டமாருதம் அடித்தபோது மழைத்தாரைகளுடனே மேகங்கள் விழுவதுபோல இராக்ஷசசேனைகளின்மீது படிந்தன. அப்போது ஆஞ்சநேயர் ஒருமராமரத்தைப் பிடுங்கிக் கடலுக்குச்சமமான இராட்சசப்பெருஞ்சேனைகள் சின்னபின்னப்பட்டுச் சிதறிப்போகும்படி மோதியடித்துத் துரத்திவிட்டு, இந்திரஜித்துவுக்குச் சமீபமாகப்போய் அவனுக்கு மிகுந்தகோபமுண்டாகத்தக்க சிலவார்த்தைகளைச் சொல்லுகின்றார்.

ஆஞ்சநேயர் இந்திரஜித்துவைத் தூஷித்தெதிர்த்தல்.

கவி.

நானுனையிரந்துகூற நயமொழியொன் றுங்கேளாய்
சானகிதன்னைவாளாற் றடிந்ததோதனதன்றந்த
மானமேற்சேனையோடும் வடதிசைநோக்கிமீது
போனதோகோடிகோடி வஞ்சமும்பொய்யும்வல்லாய்.

நடந்திரைப்பரவையென்ன சக்கரமுகப்புக்குக்
கிடந்ததுகண்டதுண்டோ நுவெனுவிகேட்டிலாயோ
தொடர்ந்துபோயபோத்திதன்னைக் கிளையொடுந்துணியநூறி
நடந்ததெப்பொழுதுவேள்வி முடிந்ததேகருமமன்றே.

எந்தகன்றாலமெல்லா மினிதுறைந்தியற்கைதாங்கும்
பாந்தளிற்பெரியதிண்டோட் பாதனைப்பழியிற்றீர்ந்த
வேந்தனைக்கண்டுநின் விவ்வலக்காட்டியின்று
போந்தசோவுயிருங்கொண்டே யாயினும்புதுமையன்றே.

அம்பரத்தமைந்தவல்வீற் சம்பரனுவிராக்கி
யும்பருக்குதவிசெய்த வொருவனுக்குதயஞ்செய்த
நம்பியைமுதல்வரான மூவர்க்குநால்வரான
தம்பியைக்கண்டின்றன் றனுவலக்காட்டிற்றுண்டோ.

நீயொத்தவலிவாளி யுடலுறச்சிவந்தசோரி
காயத்தின்செவியினூடும் வாயினுங்கண்களூடும்
பாயப்போயிலங்கைபுக்கு வஞ்சனைபலப்பச்செய்யு
மாயப்போ[illegible]த்தெல்லா மின்றெரோழியுமன்றே.

பாசமோ மலரின்மேலான் பெரும்படைக் கலமோ பண்டை
யீசனார் படையோ மாயோ னேமியோ யாதோ வின்னும்
வீசநீர் விரும்புகின்றீ ரதற்குநாம் வெருவிச் சாலக்
கூசினோம் போதுநம்மைக் கூற்றினார்க் குதவவந்தார்.

வரங்கணீ ருடையவாறு மாயங்கள் வல்லவாறும்
பரங்கொள்வான் வசிவிற்றெய்வப் படைக்கலம் படைத்தவாறு
முரங்களுமின்றதன்றே யும்மையா முயிரினோடுஞ்
சிரங்களைத் துணித்துமென்னக் கண்டது திறம்பினேமோ.

விடந்துடிக்கின்றகண்டத் தண்ணலும் விரிஞ்சன்றானும்
படந்துடிக்கின்றநாகப் பாற்கடற்பள்ளியானுஞ்
சடந்துடிக்கிலராய்வந்து தாங்கினுஞ் சாதனின்னை
யிடந்துடிக்கின்றதண்டே யிருத்திரோ வியம்புவீரே.

கொல்வனென் றன்னைத்தானே யென்றொரு சபதங்கொண்ட
வில்லிவந் தருகுசார்ந்தான் சேனையைமுழுதும் வீட்டி
வல்லனேல்பொருவாயென்று விளிக்கின்றான் வசிவினானின்
ஒல்லொலியையெய்யு மோமத்துக் குறைப்பொன்றுமோ.

மூவகையுலகுக்காக்கு முதலவன் றம்பிபூச
தேவர்கண் முனிவர்மற்றுந் திறத்திறத் தலகுஞ்சேர்ந்தார்
யாவருங்காணநின்ற நினைவினை தாழ்ப்பதென்னே
சாவதுசாதமக்கே யென்றனன் றருக்கப்பான்.

அடா இந்திரசித்தனே! நானுன்னைக் கெஞ்சிச்சொன்ன வார்த்தையொன்றையுங் கேட்டாயில்லை. அப்படியே ஜானகியைவாளினாலே வெட்டிவிட்டாயோ? குபேரனிடத்திற் பறித்துக்கொண்ட புஷ்பகவிமானத்தின் மேலேறிக்கொண்டு இராட்சசசேனைகள் சூழும்படியாக வடக்குத்திக்கிலுள்ள அயோத்தியாபுரிக்குப் போனாயோ ஒன்றுமில்லையே; கோடிகோடியான வஞ்சனைத்தன்மையும் பொய்யுங் கற்றிருக்கின்றாயே; அடா இராவணன்குட்டியே! கடலைப்போல ராட்சசசேனைகளைச் சக்கரவியூகங்கட்டி நீ இங்கே யெங்களுக்குத் தெரியாமலிருந்தாயல்லவா? எங்களிளையபெருமானுடைய வில்லினோசையை நீ கேட்கவில்லையோ? நீ அயோத்திக்குப்போய் அங்கிருக்கின்றவர்களைப் பந்துக்களுடனே கொன்றுவிட்டு எப்போது இவ்விடம்வந்தாய்? உன்னுடைய யாகமுடிந்து விடிந்ததல்லவோ? உன்காரியமெல்லாம் அனுகூலப்பட்டுப் போனதல்லவோ? விசாலமாகிய விந்தப்பூலோகமெல்லாம் பாதுகாப்பதல்லாது அதனைத் தாங்கிக்கொண்டிருக்கின்ற ஆதிசேஷனைக்காட்டிலு நீண்டதிருத்தோள்களையுடையவரும் யாதொருகுற்றமுமில்லாத மகாசத்தியசந்தருமான எங்கள் பரதமகாராஜரை நீ பார்த்து, உன்வில்வல்லமையை அவரிடத்திற்காட்டி மறுபடியும் உன்னுயிர்தப்பிப் பிழைத்துவந்தாயோ? ஆ! ஆ! ஈதெல்லாநினைக்க ஆச்சரியமாயிருக்கின்றது.

அடா இராவணி! சுவர்க்கலோகத்திலிருந்த சம்பராசுரனைச் சம்ஹரித்துத் தேவர்களுக்கு உபகாரஞ் செய்தவரான தசரதமஹாராசாவுக்குத் திருக்குமாராய் அவதரித்தகுணபூஷணரும், தமக்கு முன்பவதரித்த மூன்று திருத்தமையன்மார்களுக்கு நான்காமவரென்னுந் திருத்தம்பியுமாய்ச் சத்துருக்களை அழிக்கின்றகாரணத்தால் ஸ்ரீசத்துருக்க மஹாராஜரென்று திருநாமம் பெற்றவரை நீ பார்த்து உன். வீரத்தைக் காட்டினையோ? எங்களிளையபெருமான் பிரயோகித்த அக்கினிமயமான பாணங்கள் உன்னுடலில் இரத்தம் வடியச்செய்த காயத்திலும்– செவியிலும் - வாயிலும் - கண்களினிடத்திலும் பாய்ந்து சல்லடைக்கண்களாய்த் தொளைத்தபோதெல்லாம், அந்தவடிபட்டு ஓடிப்போய் இலங்கையில் நுழைந்தும் அடிக்கடி இப்படிப்பட்ட வஞ்சனைகளை அபரிமிதமாய்ச் செய்துகொண்டுவருகின்ற உன்வல்லமையெல்லாம் இன்றோடே நாசமாய்விடப்போகின்றது. உன்னுடைய நாகபாசமும்-- பிரஹ்மாஸ்திரமும், பாசுபதாஸ்திரமும், நாராயணாஸ்திரமும், இன்னுமற்றுமுள்ள தேவாஸ்திரங்களும், பின்னுமெதையெதை நீயும் உன்னப்பனும் உன்னைச் சேர்ந்தவர்களும் எங்கள் மேற்பிரயோகிக்க இச்சிக்கின்றீர்களோ அவைகளுக்கு நாங்கள் பயந்துபோய்க் கூசிக்கிடக்கின்றோமல்லோம். உங்களைக் கருவறுக்கிறதற்கு இளையபெருமானாகிய யமன் இதோவந்திருக்கின்றார்.

அடா இந்திரசித்தே! நீங்கள் தேவர்களிடத்திற் பெற்றிருக்கின்ற வரங்களும், நீங்கள் கற்றிருக்கின்ற மாயவஞ்சனைகளும், நீங்களத்தேவர்களிடத்தில் வாங்கியிருக்கின்ற தேவாஸ்திரங்களும், உங்கள் தேஹவல்லமையும், இறவையிதுஞ்சற்கு நிலைத்திருக்கின்ற விதத்தை நீங்களே பார்த்திருக்கின்றீர்களல்லவா? உங்களைநாங்கள் உயிருடனேதலைகளையும் துண்டிட்டுவிடுகிறோமென்று சொன்னதில் நாங்களேதாவது மாறுபட்டுப்போனோமா? கண்டத்தில் விஷமுள்ளவரான உருத்திரமூர்த்தியும், வைபிற்கதையேந்தினவரான பிரஹ்மாவும், பாற்கடலிலே ஆதிசேஷசயன முள்ளவரான விஷ்ணுமூர்த்தியும், தங்களுடல் நடுங்காமல்வந்து உங்களுக்கு உதவிசெய்தபோதிலும், நீங்கள் மரணமடையப் போகின்றது சத்தியமாகும். உங்களுக்கிடந்துடிக்கின்றதல்லவா? நீங்களினி உயிர்பிழைத்திருப்பீர்களோ? அடாபாவி! இதை நீயே சொல்லக்கடவாய். உன்னையின்றைக்குக் கொல்லுவேனென்று சபதம்பண்ணிக்கொண்ட வில்வீரசிகாமணியாகிய இளையபெருமான் இதோ சமீபமாக வந்து, உன்சேனையை முழுவதுங்கொன்று, உன்னையுஞ் சீக்கிரமாய்ச் சண்டைக்குவாவென்று அழைக்கின்றார். அவர் வில்லினோசையானது நீ செய்கின்ற ஓமத்துக்கு மந்திரமாகிய கிரியையென்று நினைத்திருக்கின்றாயோ?

அடா வஞ்சகா! இந்த மூன்றுலோகங்களையும் பிரகாசிக்கின்ற ஸ்ரீராமபிரானுக்குத் திருத்தம்பியாகிய இலட்சுமணருடைய சண்டையின்பெருமையைப் பார்க்கிறதற்கு, தேவர்களு முனிவர்களு மற்றெல்லா லோகவாசிகளுமான சகலர்களும்வந்து நிற்கின்றார்கள். இனிக்கணப்பொழுதுந்தாமசிக்கப்படாது.

நீங்களிந்தச் சமர்க்களம் விட்டு மாண்டுபோவது சத்தியந்தான். என்று ஆஞ்சனேயர் கூறியவனைத்தையும் இந்திரசித்துக்கேட்டு அக்கினிமயமாகச் சுவாசித்து, வெற்றிமாலையையணிந்த தோள்களில் மின்னற்பறக்கவும் பிளவாகியவாயில் நெருப்புப்பறக்கவுஞ் சிரித்து இவ்வாறுசொல்லுகிறான்.

இந்திரசித்து அனுமாரைத் தூஷித்தெதிர்த்தல்.

கவி.

மூண்டபோர்தோறும்பட்டு முடிந்தநீர்முறையிற்றீர்ந்து
மீண்டபோதனையெல்லா மறந்திரோவினிதல்வேண்டி
யீண்டவாவென்றனின்றீ ரித்தனைபெரும்பட்டு
மாண்டபோதுயிர்தந்திய மருந்தவைத்தனிரோமான.

அடா அனுமக்குரங்கே! நீ சிறிதும் பயமில்லாதவனாய் என்னெதிரே வந்து இவ்விதவார்த்தைகளைக் கர்வித்துச் சொன்னாயல்லவா? என்னோடு செய்த எல்லாச்சண்டையிலும் பட்டு மாண்டுபோன நீங்கள் அவ்வொழுங்கை யிழந்து நடந்த சண்டையையில்லை மறந்துபோனீர்களோ? நீங்கள் சாகிறதற்கிப்படி ஆசைப்பட்டிருக்கின்றீர்கள் போலும், நீங்களெல்லோரு மாண்டால் உயிர்பெற்றுக் கொள்ளும்படியான சஞ்சீவிமருந்து வைத்திருக்கின்றீர்களோ? இந்தலட்சுமனனாகட்டும், இவனண்ணனிராமனாகட்டும், இன்னுந்தடுக்கிறவர்களெல்லாரும் வந்து விலக்கினாலும், குரங்குகள் கூட்டங்கூட்டமாக மாளப்போகின்ற என்னுடைய வெற்றியையும், அதைக்கண்டு இந்த மனிதர்கள் அடையப்போகின்ற வருத்தத்தையும், தேவர்களும் ரிஷிகளுமே பார்க்கப்போகின்றார்கள்.

அடா வானரமே! என்னையிலேருந்த வெற்றியினாலும் என்னுடைய விஜயத்தோள்களுமிருக்க, மாமிச போஜிகளானசிவன்களும் பிழைக்கப்போகின்றனவோ? எங்கேபோயொளித்துக்கொண்டாலும் விடாமல் சுனலாகிய குரங்குகளுடனே இந்த ராமலட்சுமணர்களாகிய மனிதர்களையுங் கொன்று, தப்பியிருக்கின்ற தேவலோகத்துக்கும்போய் அங்கே தேவவுருவம்பெற்றிருக்கின்ற யாவரையு நாசமாக்கிவிடுவேன்: சஞ்சீவிமருந்தாலும் பிழைக்கமாட்டார்கள். நான்செய்தயாகம் இப்படி அழிந்துபோய்விட்டபடியினாலே ஜெயம்பெற்றதாக வாய்வீரம் பேசிக்கொள்ளுகின்றீர்கள், அப்படியொன்றும் பேசவேண்டியதில்லை. நான் சண்டைக்குவருகிறதற்குத் தாமசப்படவுமில்லை. உங்களை யொவ்வொருவராகத் தலைகளையுந் தெறிக்கிறதற்குத்தக்க வீரர்கள் என்கையிலிருக்கின்ற பாணங்களாயிருக்கின்றன. இவ்விதம் உண்மையா அல்லவா யோசித்துப்பார். உங்களைப்போல நான் வாயினால் வீரம்பேசமாட்டேன். நீங்களெனக்கு முன்னும் வெற்றியைக் கொடுத்துவிட்டுப் போயிருக்கின்றீர்கள். ஆத்திரப்பட்டால் வெற்றியுண்டாகமாட்டாது. நான் கோபித்துப் புறப்படுவேனேயானால் ஒருதாமாவது என்னெதிர்த்து நிற்கமாட்டார்கள். இன்னமும் நீங்கள்மாண்டுபோகப்போகின்றீர்களோ?

வெற்றிகொள்ளப் பார்க்கின்றீர்களோ? அதை யறிந்துகொள்ள வேண்டில் நில்லுங்கள்: நில்லுங்கள்:

என்று சொல்லிக்கண்களில் நெருப்புப் பொறிபறக்கப்பார்த்து, மின்னலைப்போலமின்னுகின்றகவசமணிந்து, அம்பறாத்தூணிகட்டி, விரல்களிற் பொன்மயமானபுட்டில்களணிந்து, வில்லைக்கையில்தாங்கி, வஜ்ரபருவதத்துக்குச் சமானமாகிய தேரின்மேலேறி வில்லைக் குணத்தொனிசெய்து சங்கநாதம் பண்ணினான். இந்த ஆடம்பரங்களைக் கேட்டுத் தேவஸ்திரீகளெல்லாம் கண்களில் அறைந்துகொண்டார்கள். ஒருக்ஷணத்துக்குள்ளே எல்லாரையுங் கொன்றுவிட்டவனல்லவோவென்று தேவர்களெல்லா மனங்கலங்கினார்கள். கயிலாசபதியும், பிரம்மதேவனும், மறுபடியு மின்றைக்குச் சண்டைநேரிட்டதென்றார்கள். முப்பத்துமுக்கோடி தேவர்களும், சமஸ்தமானரிஷிகளும், தம்முடைய தபோபலத்தினால் இந்திரசித்துச்செய்த நிகும்பலையாகம் தவறிப்போய்விட்டது. அப்படி தவறிப்போனபடியினாலே இந்தச் சண்டாளப்பயல் இனிப்பிழைக்கமாட்டான். இப்போதிவனை அழைத்துவந்தது விதியேயல்லாமல் வேறல்ல. இலட்சுமணப் பெருமானுடைய அம்பினாலே இவன்மாண்டு இரணக்களத்தி லுழைத்துக்கொள்ளப்போகிறதை நாம் காணப்போகிறோம். என்றுகளித்தார்கள். இந்திரசித்தினுடைய வில்லின் குணத்தொனி செவிகளில்வந்து நுழைந்தவுடனே வானரர்கள் தங்களாண்மைகுன்றி, கையிலெடுத்து நின்ற மரங்களையு மலைகளையு மறுபடியும் பூமியிற் சோர்ந்துவிழவிட்டு, நாமினி யிறந்துபோவோமென்று பயந்து ஓட்டம் பிடித்தார்கள். வானரசேனாதிபதிகள்மாத்திரந் தாங்கள் கையிற்கொண்ட மரங்களையு மலைகளையும் போடாமலெதிர்த்து நின்றார்கள்.

இப்படி வானரர்களெல்லாம் உகாந்தகால சண்டமாருதத்தால் நாலுபக்கங்களிலும் பொங்கிவழிந்தோடுகின்ற சமுத்திரஜலத்தைப்போல ஓட்டம்பிடித்ததைக்கண்ட ஆஞ்சனேயர், அவ்விடத்திலிருந்த ஒருபெரியமலையைப் பேர்த்தெடுத்தார். அப்போது யமனுக்கும் யமனான இந்திரசித்து, அடா குரங்கே! நில்லு: நில்லு: நீ வாய்வாதம்பேசி மலையைப்பேர்த்தெடுத்தது தேவர்கள்பார்க்கும்படி என்னையிந்த ரணக்களத்திற் கொன்றுவிடலாமென்றோ? நல்ல காரியஞ் செய்தாய். உன்னைக்குரங்கென்று சொல்லுகிறது தகும். நல்லவன்தான் வா: வா: என்றுகூவிக்கூப்பிட்டான். இப்படி வில்வீரர்களுக்குள்ளே அதிவீரனான இந்திரசித்துவுக்கு முன்பாக மலையைப்பேர்த்தெறிய எதிர்த்து நிற்கின்ற அனுமானைத் தேவர்கள்பார்த்து, இந்த மல்லயுத்தவீரருக்கு என்ன தைரியமப்பா வென்று ஆச்சரியப்பட்டார்கள். வாயுதேவன்பார்த்துத் தன்பிள்ளையின் பலத்தைக் குறித்தாநந்திக்கிறான். ஆஞ்சனேயர் அந்தமலையைஆகாசத்திலும் அஷ்டதிக்குகளிலும் நெருப்புப்பொறிகள் சிதறும்படியாகச்சுழற்றி இந்திரசித்தின்மீதுவீசியெறிந்தார். அநேகவிடிகள் ஒன்றாய்ச்சேர்ந்துகொண்டு வருகின்ற ஒருபெரிய இடிமலையைப்போல் வருகிற அதன்வேடிக்கைகளை

லோகத்தவர்களெல்லாம் கண்டு மனநடுங்கினார்கள். இராக்ஷசகூட்டங்கள் அதைப்பார்த்துச் சின்னபின்னப்பட்டுப் போனார்கள்.

அப்போது மேருவைப்போல்பருத்த தோள்களையுடைய இந்திரசித்துத் தன்குண்டலங்கள் மிகுந்த பிரகாசமாய்ப் பிரகாசிக்கும்படியாக வீராஷ்டகாசஞ்செய்து அஸ்திரப்பிரயோகம் பண்ணி, வாயுபுத்திரர் ஆகாசமார்க்கமாக வெறிந்த அந்தமலையைத் தூளாய்த்திரும்படிப் பண்ணிவிட்டான். தேவர்கள் அதைக் கண்டார்களேயல்லாமல் அவன் அஸ்திரப் பிரயோகம் பண்ணினதை ஒருவரும் பார்க்கவில்லை. மறுபடியும் வேறேயொரு மலையைப்பேர்த்து வீசும்படி யத்தனித்த ஆஞ்சநேயருடைய வச்சிரமலைக்குச்சமமானமார்பிலும், அதிகநீளமாய்த்தாழ்கின்ற கால்களிலும், கைகளிலும், இந்திரசித்துப்பிரயோகிக்கப்பட்ட விஷத்தில் தோய்ச்சதூட்டிய அக்கினிமுக பாணவருஷங்கள் வந்து பாய்ந்தன. அப்போ தவ்வனுமான் மலையில்வளர்ந்த மூங்கிற்காடுகள் எரிவதுபோலத்தோற்றுகின்ற படியினாலும், தமதுதிரியுள்ள விருட்சங்களோடுந்தன்மையினாலும், இந்திரசித்துவிட்ட பாணங்கள் கிரணங்களைப்போலப் பிரகாசிக்கின்ற படியினாலும், உதிரவெள்ளம் பெருகியோடுந்தன்மையினாலும், உதயகிரியில் தோன்றுகிற சூரியனுக்குச்சமானமாக விருந்தார்.

இந்தப்பிரகாரம் வாயுபுத்திரர் சோகமானவுடனே அங்கதகுமாரர் முதலான வானரவீரர்கள் அதிககோபத்துடனெழும்பி இந்திரசித்துமுன் வந்து சேர்ந்தார்கள். சுக்கிரீவமகாராஜரும் வந்துசேர்ந்தார். இந்திரசித்து அவரைப்பார்த்து மிகுந்த கோபத்துடனே சொல்லுகின்றான். அடா குரங்கரசனே! ஓர் சிம்ஹமானது போருக்குமுன்பாக வந்தபோது யானையை எதிர்க்குமேயல்லாமல் ஒரு அல்பக்குரங்கைத் தொடர்ந்துவருகிறதுமுண்டோ? இளைசான உங்களைக்கொன்றதனை லெனக்கென்னலாபம்? சற்றுநேரமவகாசகொடுத்திர்த்தாலென்னோடு சண்டைசெய்ய வல்லவனான அந்தராமனுடைய தம்பியைக் காட்டிக்கொடுத்து நீங்கள் பின்னிட்டுப்போகாமல், என்கோபத்துக்கு எடுபட்டு வீணேயென் செத்துப்போகிறீர்கள். சோர்ந்துவிழுந்து போன அனுமானை நீங்கள் பார்க்கவில்லையோ? அவனைப்பார்த்தும் நீங்கள் பலமுள்ளவர்களோ? என்கையில் வில்லிருக்க அந்த வில்லுக்கிப்போது பலங்குறைந்துபோய்விட்டதா? இந்தவில்லால் நீங்கள் முன்னடிபட்டவர்களல்லவோ? நீங்களப்போதில்லாமல் இப்போதென்ன பலத்தைப்பெற்று வந்தீர்கள்? அந்தமனிதரை யெனக்குக் காட்டிக்கொடுத்துவிட்டு நீங்கள் வாசம்பண்ணுகின்ற மலைகளைத் தேடிப் பிழைத்தோடிப்போங்கள். என்றுசொல்லி இளையபெருமாளை நோக்கி வருவதானான்.

இப்படியவன் வருகின்றதைப்பார்த்து வானரவீரர்கள் அவன்மீது மலைகளையுமரங்களையும்பறித்துக்கொண்டெறிந்தார்கள். அப்படிவந்த அந்தவானரவீரர்களுடையகூட்டங்களின்மீது இந்திரசித்துவில்லுடையவில்லிலிருந்து புறப்பட்டுமேருமலையையும் உருவிப்போகத்தக்க பாணங்கள் கோடிகோடியாகப்

பாய்ந்தன. அதனால் எல்லாரும்வருத்தமுற்றுச்சக்திசோர்ந்துபோய்விட்டார்கள். அப்போது விபீஷணாழ்வான் இளையபெருமாளைப் பார்த்து, சுவாமி! தேவரீருடைய சைநியமெல்லாம் மாண்டுபோகின்றதே; இப்போது பாணவருஷங்களைப் பிரயோகிக்கின்றதல்லவா வெற்றி? அந்த இந்திரசித்தென்னுங் காளமேகம்செய்த யாகம் அழிந்துபோய் விட்டது. இனியவனைப் பிழைக்கவொட்டாதபடி ஹதஞ்செய்ய வேண்டுமென்று விண்ணப்பம் பண்ணிக்கொண்டார். இளையபெருமாளும் போர்க்களத்துக்கு வந்து இந்திரசித்துவைச் சந்தித்தார்.

இலக்ஷ்மணர் அனுமானையூர்ந்துவந் தெதிர்க்கவும் இந்திரசித்து அவரோடு கடும்போர்விளைத்து மெலிந்துபோதல்.

கவி.

வந்தானெதிர்ந்தனைமாருதி மயங்காமுகமலர்ந்தான்
எந்தாய்கடிதேறுயென இருதோண்மிசையென்றான்
அந்தாகவென் றவந்தையனு மமைவாயினனிமையோர்
சிந்தாகுலக்களைந்தானென நெடுஞ்சாரிகை திரிந்தான்.

அப்போது சாக்ஷாத் ருத்திரமூர்த்திபோலும் உக்கிரத்தையுடைய அனுமான் சோர்வுநீங்கி முகமலர்ச்சியுடனே ஓடிவந்து இலக்ஷ்மணர் சந்நிதியில்நின்று, என் ஆண்டவரே! அடியேனுடைய இரண்டுதோள்களின்மீதும் ஏறியருளக் கடவீரென்று விண்ணப்பஞ்செய்தார். இளையபெருமாள் நல்லதென்று திருவுளம் உவந்து ஆஞ்சநேயர் திருத்தோளின்மீதேறியருளினார். உடனே வாயுகுமாரரும் தேவர்களுடைய துக்கங்களை நீக்கினதுபோலச் சந்தோஷமுற்றுச் சாரிகைதிரிந்தார்.

அப்போது ஆயிரமேகங்க ளொன்றுகூடினதுபோலக் கருநிறமுள்ளவனுகிய இந்திரசித்து ஆயிரங்குதிரைகள் பூட்டிய உயர்ந்ததேரின்மீது ஏறினான். இருவரும் ஒருவரோடொருவர் எதிர்த்தார்கள். ஆஞ்சநேயரும் சகஸ்திரநாமாங்கிதரான திரிவிக்கிரமரைப்போல அஷ்டதிக்குகளிலும் சுற்றித்திரிந்தார். அக்கால் பதினான்குவருஷமாக நித்திரைநீங்கிப் பெருமாள் கைங்கரியமே நமக்குத்தாரகமாக எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீராமாநுஜர் அக்கினிக் கொப்பானவைகளும், சத்துருக்களுடைய பிராணனை ஐயத்து ஆகாரமாயிருக்கின்றவைகளும், எங்கும் பேயைப்போலத் திரிகின்றவைகளும், பகையைப்போல் வருத்தப்படுத்துகின்றவைகளும், நோயைப்போலத் துன்பப்படுத்துகின்றவைகளும், தவறுதலிரகிதமுடையான ஊழ்வினைக்கொப்பானவைகளும், மழுவையொத்தவைகளும், கழுகுக்குத் தாய்போலிருக்கின்றவைகளுமாகிய பாணங்களைப் பிரயோகம்பண்ணினார். இந்திரஜித்துவும் அந்த அம்புகளை அந்தந்த அம்புகளாலேயே துண்டாக்கிவிட்டு, ஆகாசமுழுவதையும் — அஷ்டதிக்குகளையும் — சப்தசமுத்திரங்களையும் மூடிக்கொள்ளும்படி உகாந்தகாலத்திற் பெய்கின்ற மேகவருஷத்தைப்போல உலோகத்தில் இவைகளால்

லாத வேறென்னபாணங்க ளிருக்கின்றவைகளென்னும்படியாக வெல்லாவித அம்புகளையும் புங்கானுபுங்கமாகப் பிரயோகித்தான். அவைகளையெல்லாம் இளையபெருமாள் பொதிகளைப்போலப் பறந்தோட அந்தந்தப் பாணங்களாலேயே தடுத்துவிட்டார்.

அப்போது இந்திரஜித்துத் தனதுதேரை ஆயிரவிதசாரிகளோடும்படிச் செய்தான். அக்கால் அனுமானும் பலசாரிகைதிரிந்தார். இப்படி இந்திரசித்துவின் சக்கரம்பூண்ட தேரினாலும், வெற்றிபெற்ற ஆஞ்சநேயருடைய திருவடிகளினாலும் சிறுகுன்றுகளும் - பெருமலைகளும் - மரங்களும் - மற்றப்புற்களுமாகிய வெல்லாம் சாம்பலாகி, அந்தச்சாம்பலும் தோற்றாத விதமாகத் தேர்போனவழி வாயுபுத்திரர்செல்லவும், வாயுபுத்திரர் போனவழி இந்திரசித்துவின் தேர்செல்லவுமாயிற்று இவ்விதமாய் இரண்டுவீரர்களும் இன்னார் இன்னாரென்று அவ்விடத்திலுள்ள யுத்தவீரர்களுந் தெரிந்துகொள்ளாதபடி சாரிகைசுழன்று பாணங்களைப்பொழிந்தார்கள். இவர்களைப்பார்த்ததேவர்கள் திரிலோகத்திலும் ஒரு வீரரும் இவர்களுக்குச் சமமாகமாட்டார்களென்று சந்தோஷித்தார்கள். இலட்சுமணப்பெருமாளும் இந்திரசித்துவும் ஒருகடலுடனே மற்றொருகடல் வந்து எதிர்த்தாற்போலச் சண்டைசெய்தார்கள் ஆகாசமுமிடம்போதாமல் பாணங்கள் வருகின்றனவென்று தேவர்களெல்லாம்பயந்து, தங்கள் கண்களாலு மனத்தாலும் அவைகளை வேறு பிரித்தறியக் கூடவில்லை. அவைகளுக்கு ஒரு கணக்கிடலாமென்று நினைத்தும் இவ்வளவென்று தொகையுஞ்செய்ய முடியவில்லை. அவைகளுக்கூடே காற்றுநுழையக் கூடவில்லை.

இந்தப்பாணங்கள் அவரவர்களுடைய தேகங்களிற்பூஞ்செய்கின்றவைகளையல்லாமல் வேறொன்றுஞ் செய்யவில்லை. அஷ்டதிக்குகளும் அக்கினிமயமாயெரிந்தன. அவரவர்களுடைய விற்குணத்தொனியானது இடியைப்போல எங்கு நடுங்கச்செய்துவிட்டது. மேகங்களில் நிறைந்திருக்கின்ற இடியையும் இவ்விருவருடைய பாணங்கள் உருவிப்போய் விட்டன. நட்சத்திரங்களெல்லாம் கரிந்துபோயின. உலோகமெல்லாம் புகைமண்டிப்போனது. திக்குகளெல்லாம் வெடித்துப்போயின. எங்கேபார்த்தாலும் இடிகள் விழுகின்றதுபோல வில்லின்குணத்தொனி பெருங்கோஷமாக ஒலித்தன. இரண்டு வீரர்களும் பல்லை நறநறவென்று கடித்தார்கள். அவர்களுடையபாணங்கள் ஆகாசத்தை ஊடுருவிக்கொண்டுபோய் அக்கினிப்பொறிகளைக் கக்கின. தேவர்களெல்லோரும் இவைகளைப்பார்த்தார்கள். கடல்களெல்லாம் வற்றிப்போய் விட்டன. மலைகளெல்லாம் பிளந்துபோய்விட்டன. சூரியனுடலினும் நெருப்புப்பற்றினது. மரங்களெல்லாம் வெந்தன. இரத்தக்கட லெல்லாம் வற்றின. எங்கும் எரிபற்றின. பாணங்கள் துளைபட்டுக் கடலைத் திடர்ப்படுத்திவிட்டன. உலோகமுழுவதும் கிறுகிறுவென்று சுழன்றன.

அக்கினிச்சுவாலையை வீசுகின்ற கூர்மையாகிய பாணங்கள் இருவகைச் சேனைகளும் ஓட்டமெடுக்கும்படியாக எங்குஞ்சுற்றின. உலோகத்திலுள்ள ஜீவகோடிகளெல்லாம் தத்தமிடங்களைவிட்டுச் சிதறித் திக்குத்திக்குகளாகப்போயின. யானைகளும் - குதிரைகளும் - குரங்குகளும் - அழிந்து, கடலைப்போல ரத்தவெள்ளமோடத் தலைப்பட்டது. அநேகர் கொலையுண்டு மரணமடைந்தார்கள். சக்கரவர்த்தித் திருத்தப்பியாகிய இளையபெருமாள் பிரயோகிக்கின்ற பாணங்களில் சில புகையைப் பரப்பிக்கொண்டு பறந்தன. சில நெருப்பைச் சொரிந்துகொண்டு போயின. சில லோகமெல்லாம் புகையாய் எரிந்தோடின. சில ஒன்று ஆறாய் விரிந்தோடின. சில இடசாரியாயோடின. சில வலசாரியாயோடின. சில நெருங்கி யோடின. சில விரிந்தோடின. சில அஷ்டதிக்குகளிலும் பாய்ந்தோடின. அப்போது ஜலமுகாஸ்திரங்களையும், அக்கினிமுகாஸ்திரங்களையும், பர்வதாஸ்திரங்களையும், மேகாஸ்திரங்களையும், இடியாஸ்திரங்களையும், சமுத்திராஸ் திரங்களையும், சூரியாஸ்திரங்களையும், கைலாசபதியாகிய ருத்திரமூர்த்தியினுடைய சிரங்களையொத்த பஞ்சமுகாஸ்திரங்களையும், மேருமுகாஸ்திரங்களையும், இந்திரசித்துப் பிரயோகித்தான்.

இப்படிச் சுமித்திரைதனயரும் இந்திரசித்துவும் விட்ட கூர்மையான பாணங்கள் இவர்களுடைய தேககாவலான கவசங்களிலும், பலம்பொருந்திய தோள்களிலும், முகங்களிலும், வஜ்ரத்திற்குச்சமானமாகிய மார்புகளிலும், கால்களிலும், காமினிகளாகிய ஸ்திரீகளின் கடைக்கண்களைப்போலப்பதிந்து பாய்ந்தன. எந்தநாளையிலாவது இவர்களைப்போல யுத்தஞ்செய்தவீரர்கள் யாராவ திருந்தார்களாவென்று தேவர்களெல்லாம் இவ்விரண்டு வீரர்களையும்புகழ்ந்து ஸ்தோத்திரம்பண்ணி ஆரவாரித்தார்கள். இப்படியிவ் விந்திரசித்தும் இளையபெருமாளும் ஒருவருக்கொருவர் எதிராகி, கிருஷ்ணபட்சத்திரிதியையிலும், பூர்வபட்சத் திரிதியையிலும் தோன்றின மூன்றாம்பிறைச் சந்திரர்களைப்போல் வளைந்த பொன்மயமானதங்கள் விற்களை வளைத்தார்கள். இவ்விரண்டு வீரர்களுடைய பாணங்களும் பாய்ந்து லோகமெல்லாம் வெந்தன. கடல்களெல்லாம் வெந்தன. தேவர்களெல்லாம் நாவுலர்ந்து யுகாந்தகாலமின்று வந்துவிட்டதோ வென்று சந்தேகித்து மனநொந்து போனார்கள். ஆகாசமெல்லா நட்சத்திரங்களை யுதிர்த்துவிட்டது. சூரியன் கிரணங்களை யுதிர்த்தான். பூரணச்சந்திரன் தன்னிடத்திலுள்ள மானை இழந்துபோனான். மேகங்களெல்லா மழையைச்சொரிந்தன. அஷ்டகுலாசலங்களும் முடிகுலைந்துபோயின. உலோகத்திலுள்ள ஜீவகோடிகளுக்கெல்லாம் தேகத்தைவிட்டு உயிர்கழிந்துபோகும்போலாய் விட்டது.

அப்போது அஷ்டதிக்குகளைச் செயம்பெற்ற இராவணனுடைய குமாரனை இந்திரசித்து கூர்மையான பத்துப்பாணங்களை இளையபெருமாளுடைய திருமேனியில் எய்தான். இளையபெருமாள் தம்முடைய வில்லைவளைத்து,

இந்திரசித்துவின் கவசமுந்தேகமும் ஊடுருவிப்போகும்படி சில அக்கினிமுகாஸ்திரத்தைப் பொழிந்தார். இந்திரசித்து தேவர்களை முன்னாக்கொடர்ந்து அரத்திக்கொண்டறுத்தவைகளான சில சாச்ஜொலியமாய்ப் பிரகாசிக்கின்ற பாணங்களைப் பொறுக்கியெடுத்து வேகமாய்ச்செலுத்தி, ஆஞ்சநேயருடைய திருத்தோள்களின்மீது பிரயோகித்தான். அவைகள்பட்டு ரத்தவெள்ளஞ்சொரிகின்ற மலையையொத்த அனுமானுடைய திருமேனி சூரியனைப்போலச் செவந்திருக்கின்றதை இளையபெருமாள் பார்த்து, மிகுந்தகோபத்துடனே இந்திரசித்தேறியிருந்த தேரை வேறொரு பக்கத்திற்கும் போகவொட்டாதபடி குதிரைகளையும் வண்டில்களையும் சிதைத்துவிட்டு, இருளைக்கெடுக்கின்ற சூரியகிரணங்களைப்போலச் சரவருஷங்களைப் பொழிந்தார். இந்திரசித்துவின் தேர் அழிந்தமாத்திரத்தில் அதைக்கண்ட தேவர்கள் மிகுந்த சந்தோஷங்கொண்டு கோவென்று ஆரவாரித்தார்கள். பிரஹ்மேந்திராதி பிரதம தேவர்களும் சந்தோஷித்தார்கள்.

அதைக்கண்ட இந்திரசித்து மிகுந்த கோபமுற்றுக் குபீரென்று பாய்ந்து வேறொரு தேரின்மேலேறி, பத்துப்பாணங்களை இளையபெருமாள் திருத்தலையிற் பிரயோகித்தான். அவைகள் பட்டவுடனே இலட்சுமணர் அடித்துச் சோர்ந்து, உடனே சோகமாறிப் பிறைமுகாஸ்திரங்களையெடுத்துப் பிரயோகித்தார். அவைகளையவன் விலக்குகிறதற்கு முன்பாகப் பூர்வம் விருஷபவாகனரூடரான உருத்திரமூர்த்தியானவர் கர்வங்கொண்டெதிர்த்துவந்த யமனை ஏகபாதத்தினாலே மார்பிலெட்டியுதைத்ததுபோல இளையபெருமாள் அவன்மார்பில் ஒருபாணத்தை எவினார். அந்தப்பாணம் மவ்விராக்ஷசனுடைய கவசத்தையும் அவன்மார்பையும் தடாரித்துக்கொண்டு போனவுடன் அவன் பரவசப்பட்டுச் சோகமடைந்தான். அதைக்கண்டதேவர்கள் ஆரவாரித்தார்கள். மறுபடியும் இளையபெருமாள் மத்தியானகாலத்துச் சூரியனுக்கொப்பான ஒரு பாணத்தைப்பிரயோகஞ்செய்து அவனுடைய விருதுக்கொடியை யறுத்துத்தள்ளி, இன்னுஞ்சிலபாணங்களைக்கொண்டு அவனுடைய வச்சிரமயமானதோள்களையுஞ் சின்னபின்னப்படத் தொளைத்துவிட்டார்.

அவைபட்டமாத்திரத்தில் இந்திரசித்துவின் தேகத்திலிருந்து இரத்தவெள்ளமானது அக்கினிமயமாய்ச் சூடுகொண்டு ஒழுகிவரச்சலனமுற்ற வடமேருபர்வதம்போலக் களைத்துச்சாய்ந்து, மறுபடியுஞ் சோகந்தெளிந்து பக்ஷிகள்மாமிசத்துக்காகச் சுழலிட்டுக் கொண்டிருக்கின்ற சிலபாணங்களைப் பிரயோகித்தான். அவைகள்போய் இளையபெருமாளுடைய கவசத்தில் நுழையாமல் கீழே பலபலவென்று உதிர்ந்துபோக, அதைக்கண்டு ஆயிரங்குதிரைகள்பூட்டிய தேரையுடைய இந்திரசித்து அதிககோபங்கொண்டு மறுபடியும் ஆயிரம்பாணங்களை இளையபெருமாளுடைய திருமார்புக்குக் குறிவைத்தெவினான். அவைகளை இராமானுஜர் குறிபார்த்துச் சிலதிவ்யபாணங்களால் முறித்தெறிந்து, சிலபாணங்களை அவனுடைய தேகத்தில் ஊன்றச்செய்து, சில

பாணங்களை அவன் வில்லினுநாணறும்படிப் பிரயோகித்தார். அப்போது இந்திரசித்துத் திகைத்து இளையபெருமாளுடைய வில்லைப்பார்த்து, இந்தவில்லென்ன விஷ்ணுவினுடையதோ? சிவனுடையதோ? அல்லது பிரஹ்மாவினுடையதோ? என்றுசந்தேகித்து, அவருடைய கவசத்தையும் பேதிக்கமாட்டாமல் தன்னிடத்திலிருக்கின்ற பாணங்களெல்லாம் அவரை ஜெயிக்கமாட்டாமையைக் கண்டு மனமயங்கிப்போனான்.

அந்தத்தன்மையை அவன் சிறியபிதாவான விபீஷணர்கண்டு, இளையபெருமாளைக்கிட்டிவந்து அவர் திருமுகத்தை உற்றுப்பார்த்து, ஸ்வாமி! அடியேனுடைய ஒரு சிறுவிண்ணப்பத்தைக் கேட்டருள வேண்டும். இவன் எப்படிப்பட்ட தேவர்களையும் போரில் வெற்றிபெற்றவனுக்கும். இப்படிப்பட்டவனிப்போதுமனந்தளர்ந்து பித்துக்கொண்டுபோனான். இனியிவன் பிழைக்கப்போகின்றதில்லை என்றார். அப்போது இந்திரசித்து யமனைப்போலக் கோபித்து, வில்லில் வேறு நாணையிட்டுக் குணத்தொனி செய்து, இதைத்தடுத்துவிடு பார்ப்போமென்று ஏழுலோகத்தையும் போய்முட்ட அதிகவேகங்கொண்டு வாயுவாஸ்திரத்தைப் பிரயோகித்தான். இளையபெருமாளும் அதனை வாயுவாஸ்திரத்தைக் கொண்டே தடுத்துவிட்டார். அவன் மறுபடியும் அக்கினியாஸ்திரத்தைத் தொடுத்தான். இவரந்த அக்கினியாஸ்திரத்தைக் கொண்டே தடுத்துவிட்டார். இராக்ஷசன் வருணாஸ்திரத்தைத் தொடுத்தான். இளையபெருமாளும் அந்த அஸ்திரத்தைக்கொண்டே தடுத்துவிட்டார். அந்தத்துஷ்டன் சூரியாஸ்திரத்தைப் பிரயோகித்தான். தர்மிஷ்டரான இராமானுஜரும் சூரியாஸ்திரத்தைக் கொண்டே தடுத்துவிட்டார். அக்கால் இந்திரசித்து இராமானுஜரைப்பார்த்து, நல்லது இலக்ஷுமணா! இத்தனை அஸ்திரங்களையுந் தடுத்தாயல்லவா? இந்த அஸ்திரத்தைத் தடுத்துவிடு பார்ப்போமென்றுகூறி சமுத்திராஸ்திரத்தைச் செலுத்தினான். அதற்கிலக்ஷுமணர் — அடா இந்திரசித்தே! நான்வேறொன்றும் ஏவவில்லை. அந்த அஸ்திரத்தைக்கொண்டே தடுக்கின்றேன் பாரென்று தொடுத்தழிக்கிறார்.

அப்போதிந்திரஜித்து இனிக்கொல்லத்தக்க அஸ்திரத்தைத் தொடுக்கவேண்டுமென்று நினைத்து, ஓ இலக்ஷுமணா! இனிமாண்டுபோனாய். என்றுகூறி பிரஹ்மாஸ்திரத்தை யெடுத்துப் பிரயோகித்தான். அக்காலந்தராமார்க்கத்தில் வேடிக்கைபார்த்துக்கொண்டு நின்றவர்களான பிரஹ்மாவும், தேவரிஷிகளும் — பிரஹ்மரிஷிகளும் — தேவேந்திரனும் — மற்றமற்ற தேவகணங்களும் மனநடுங்கி, இனிமேல் இளையபெருமாளுக்கு இந்த அஸ்திரத்தினால் மரணமுண்டாகாமற் போகக்கடவதென்று ஆசீர்வதித்தார்கள். அப்போது அப்பிரஹ்மாஸ்திரமானது உகாந்தகாலத்தில் உலோகங்களையெல்லா மழிக்கும்படியான வடவாமுகாக்கினியோடு துவாதசாதித்தர்களுடைய பிரகாசத்தைக்காட்டிலும் மிகுந்த கிரணங்களை வீசிக்கொண்டு சமானமில்லாமல் வருகின்றதை இளையபெருமாள்பார்த்து, இவனிந்தப் பிரஹ்மாஸ்திரத்தைத் தன்

வல்லமையால் மீட்டுக்கொள்ளவுமாட்டான். தடுக்கவுமாட்டான். நாமாண்டு போவோமென்று விட்டான். இனி நாம் நம்முடைய நிலைமையைக்காட்டாமற் போனோமானால் தகுதியல்லவென்று தம்மிடத்திருந்த சகஸ்திர கமலவாசனுகிய பிரஹ்மாவினுடைய அஸ்திரத்தைத்தொடுப்பதாகத்திருவுள்ளங்கொண்டு அதனைப்பார்த்து, ஓ சதுர்முகாஸ்திரமே! தேவலோகத்தை மன்னித்துப் பூலோகத்தை மன்னித்து, இந்தச் சத்துருவினுடன் மாத்திர நீபோராடி அவனிட்ட உன்பெயர் வாய்ந்த அஸ்திரத்தைமாத்திர மாற்றிவிடக்கடவாயென் றாக்கியாபித்து விட்டார். அதைக்கண்ட தேவர்கள் ஆச்சரியப்பட்டு, ஆ! ஆ! இவருடைய கிருபையே கிருபை, அதுதம்முடையதேஹத்தை அழிக்கவந்த போதும் தாம் தர்ம்மத்தையழிக்காதபடி யிருக்கின்றாரே; என்றுஒருவரோடொருவர் கூறி ஆனந்தித்தார்கள்.

இந்திரசித்து தேவாஸ்திரங்களை விடுத்துப் போர்விளக்கையில் இலட்சுமணரவற்றையும் வெற்றிகொள்ளுதல்.

கவி.

உருமேறுவந்தெதிர்த்தாலதனெதிரேநெருப்புய்த்தால்
வருமாங்கதுதவிர்ந்தாலென மலரோன்படையையத்
திருமாறனக்கிளையான்படை யுலகேழையுந்தீய்க்கும்
அருமாகனலெனநின்றது விசும்பெங்கணுமணுகி.

இப்பால் ஸ்ரீராமபிரானுடைய திருத்தம்பியார்விட்ட அஸ்திரமானது இடியேறுவந்து எதிர்த்தகாலத்தில் அதற்கு எதிராக வேறுநெருப்பைப் பிரயோகித்தால் முன்வந்த இடி மாய்ந்துவிட்டதுபோல இராக்ஷசன்விட்ட அஸ்திரத்தை மாய்த்துவிட்டு, சப்தலோகங்களையுஞ் சுட்டெரிக்கும் படியான பெருந்தீயைப்போல ஆகாசத்தையெல்லா மூடிக்கொண்டு நிறைந்துநின்றது. இப்படியவ் வஸ்திரமானது எங்கும்படராதபடி சூரியகுல திலகராகிய இளையபெருமாள் வேறொரு அஸ்திரத்தைத் தொடுத்து அதன்மீது விட்டார். அது ஒருவிஷம் மற்றொருவிஷத்தை மாய்த்துவிடுவதுபோல அந்த அஸ்திரவேகத்தை மாய்த்துவிட்டது. தேவர்களதைக்கண்டு, வெற்றிபெற்ற இந்த இளையபெருமானுக்கு இனிமேலுங் கைகூடாத நன்மைகளும் இருக்கின்றவைகளோ வென்று மனத்தைரியங்கொண்டு சந்தோஷப் பட்டார்கள். அப்போது ஆயிரங்கண்களையுடைய தேவேந்திரன் அத்தேவர்களைப் பார்த்து, ஓ தேவ சமூகங்களே! இராமலக்ஷ்மணர்களாகிய இருவருக்கு மிதுமுடியாதகாரியமல்லவென்று நீங்கள் நிச்சயந்தெரியாமற் சொன்னீர்கள். யதார்த்த பொருளைச் சொல்லுகிறேன் கேளுங்கள். நாராயணரென்கிற திருநாமங்களையுடையவர்களாய், நமக்கெல்லா மூலமுமுதற்காரண வஸ்துவுமாய், பாவவினைகளையெல்லாம் கழித்த ஞானிகளும் தம்மை ஆராய்ந் தறியவிடாத ஒரு மஹாமாயையினாலே தம்மை மறைத்துக்கொண்டு, நாம் பாராயணம் பண்ணுகின்ற நான்கு வேதங்களையுங்கடந்த புராணபுருஷர்களாகும் இவர்கள்.

அறிவுக்கு மெட்டப்படாமல் அப்பிரமேயர்களா யிருந்தவர்கள். தர்ம்மமார்க்கம் கெட்டுப்போகப் போகிற தென்று இந்தலோகத்து மனுஷியர்களைப் போலவந்து அவதரித்து அத்தத்தர்மத்தை நிலைநிறுத்துவார்கள்.

ஆகையால் அதர்ம்மிகளான இந்த ராக்ஷசர்களை வேரறக்களையும்படித் திருவயோத்தியில் தசரதமகாராஜாவின் தபோமகிமையால் அவருக்குப் புத்திரர்களாக அவதரித்து, அந்த அவதார ரஹஸ்யங்களை ஒருவருந் தெரிந்து கொள்ளக்கூடாத விதமாய் மறைத்துக்கொண் டிருக்கின்றார்கள். சிலகோடிகளிலெல்லா நிறைந்து யாவரும் ஸ்தோத்திரிக்கத்தக்க ஒருவனென்கிற ஈஸ்வரனை யாவரும் சந்தேகிக்காதபடி வெளிப்படுத்துகின்ற நிச்சயத்தையுடையவர் இவர். அந்த ஸ்ரீராமனேனென்றால்? இந்தலோகமெல்லாவற்றினும் பாலில்தோய்ந்த பிரைபோலக் கலந்து அவைகளுக்கு உத்திருஷ்ட ஆதாரஸ்தானமா யிருக்கின்ற நாராயணனும், வேதபுருஷனும் புகழ்ந்து சொல்லுகிறதற்கு முடியாத சகலகாரண பூதனுமாகும். இது மூலரஹஸ்யமென்று அறியுங்கள். பெரியபாற்கடலிலே சயனித்துக்கொண் டிருந்தவரும், முன்னால் நாம் நம்முடைய முறைகளைச் சொல்லிக்கொண்டபோது துர்ப்பாக்கியர்களான இராக்ஷசர்களைக் குறித்துடனே களைந்தெடுத்துக் கொன்று சுபாக்கிய தர்ம்மத்தை ஸ்தாபனம் பண்ணுகிறதற்குத் திருவுளங் கொண்டவரும் இவர்தான் என்று சொல்லுகிறேன்.

அப்போது தேவர்கள் நாங்களிந்த ரஹஸ்யங்க ளெல்லாவற்றையும் அநுபவித்தாய் அறிந்திருந்தும், அவருடைய மஹாமாயப் பிரயோகத்தாலே எங்களுக்கு அவையெல்லாம் தெரியாமல் மறந்துபோனோம். இப்போது உம்முடைய அநுக்கிரகத்தா லுபதேசித்த வாக்கியத்தைப் பற்றினதினாலே எங்களுக்குள்ள சந்தேகமுழுவது நீங்கினோம். இனி எங்களுடைய சத்துருக்களை யெல்லாம் ஜெயித்துவிட்டுச் சந்தோஷமாய் வாழ்ந்தோம், எங்கள் வருத்தங்களைக் கடந்தோம், என்றுகூறி வணங்கித் தெண்டனிட்டார்கள். இப்படியிருக்க வக்கிரதந்தங்களையுடைய இந்திரசித்து நாராயணாஸ்திரத்தையெடுத்து இளையபெருமானைப் பார்த்து, நீ இந்த அஸ்திரத்தைத் தடுத்துவிடுவாயேயானால் உன்னை யெதிர்த்து யார்நிற்கவல்லவர்கள்? உனக்கிணை யாரிருக்கின்றார்கள்? நீ இதைத் தப்பித்துக் கொள்ளமாட்டாய். உடனே மாண்டு சுவர்க்கம் அடைந்துபோவாய். இது தப்பாமற்சொல்லும், என்று சொல்லி லோகங்களெல்லா நிலைகலங்கித் தடுமாறும்படியாகப் பிரயோகித்து விட்டான். அதைக்கண்டு தேவர்களெல்லாம் தங்களிரண்டு கைகளையுஞ் சிரசின்மேற் கூப்பிக்கொண்டு தங்களைக் காத்துக்கொண்டார்கள். அப்படியே வானரர்கள் முதலாகிய மற்றவர்களும் சித்தத்தைக் குவித்து வாய்திறவாமல் நடுங்குகின்றார்கள்.

அப்போது பழமறையைத் [illegible] யாவர்களையும் சம்ஹரிப்பதான அந்த நாராயணாஸ்திரம் வருகின்றதை இளையபெருமான் பார்த்து, [illegible]

சக்கரதாரனை ஸ்ரீயப்பதியேயென்று தியானித்து எதிரே நடந்து போனார். அக்காலந்த நாராயணாஸ்திரமானது எந்தலோகங்களையுஞ்சுட்டெரிக்கும்படிச் செல்லுகின்ற தென்பதைத்தெரிந்தவரும், ஒருவராலும் விலக்கற்கரிதாகிய முழுமுதற் காரணவஸ்துவின் அஸ்திரமென்று தியானிக்கின்றவருமான ஸ்ரீராமாநுஜர்மீது போகாமல் விலகி வலங்கொண்டுசுற்றி அந்தர மார்க்கமாகப் போய்விட்டது. உலோகமெல்லாம் நிறைந்துவந்த நெருப்பும் அவிந்துபோனது. புகையு நீங்கிப்போய்விட்டது. அப்படிப் பொதுவாய் நாராயணாஸ்திரம் போய்விட்டதைக்கண்ட தேவர்களெல்லாம் இளையபெருமாளை ஸ்தோத்திரம் பண்ணினார்கள். வானரவீரர்களெல்லாம் ஆநந்தக்கூத் தாடினார்கள். தேவஸ்திரீகளெல்லாம் நாட்டியமாடினார்கள். மஹரிஷிகளெல்லாம் ஐயா இளையபெருமாளே! உலோகங்களை யெல்லா மிரக்ஷித்தீரே: இதற்கெம்மாற் செய்யுங் கைம்மாறு யாதுண்டென்று கொண்டாடினார்கள். தாமரைப்புஷ்போற்பவனான பிரம்மதேவனும் தேவேந்திரனும் வாய்நிறையப் புகழ்ந்தார்கள்.

இதை இந்திரசித்துப் பார்த்து இவனோரோவென்று சந்தேகித்து, இவனந்த அஸ்திரத்திற்கு முதல்வனும் உடையவனுமென்று நினைத்து, ஆராயிருந்தபோதிலும் இருக்கட்டும். இனிநான் ஆலோசிக்கமாட்டேன். என்று நினைத்துச் சிவாஸ்திரத்தைப் பிரயோகம்பண்ணி இவனைக் கொன்றுவிடுகிறேனென்று சபதம்பண்ணினான். பார்ப்பானாகிய பிரமதேவன் சிருஷ்டித்த லோகங்களையெல்லாம் ஒரேநாளில் ஒருமாத்திரையானத்திலே சம்மரிக்கின்ற உருத்திரமூர்த்தியினுடைய பாசுபதாஸ்திரத்தைத் தொடுக்கிறதற்காக இந்திரஜித்து எண்ணியிருப்பதை யறிந்து மேலுலகத்தில் வாசமாயிருந்த தேவகணங்களெல்லாம்பயந்துவிட்டன. உலோகமெல்லாம் இனி நம்மை க்ஷணநேரத்துக்குள்ளாக அழித்துவிடுவானே இந்தச் சண்டாளனென்று பயங்கிவிட்டன. அப்போது இந்திரசித்து அந்த அஸ்திரத்தைக் கையிலேந்தி, இதுசிவபிரானுடையதாயிற்றே; அவர்நம்மீது கருணைகொண்டு கொடுத்ததல்லவா? இதற்காக அநேகம்பேர்கள் பலகால் தவஞ்செய்தும் அவர்களுக்குக் கொடாமல் உனக்குக்கொடுத்தேனென்று அந்த ருத்திரமூர்த்தியே சொல்லியிருக்கின்றாரே: ஆகையாலிது இந்த லட்சுமணனுடைய உயிரைவாங்குமோவென்று சந்தேகிக்கவேண்டியதில்லை. அல்லாமலு நாமேயிதை முன்னால் சத்துருக்களின்மீது விட்டபோதும் இதற்கெதிராக நின்றவர்கள் ஒருவருமில்லை யல்லவா? என்று தைரியங்கொண்டு இராவணியானவன் அந்த அஸ்திரத்துக்கு மானஸிகமாகப் புஷ்பம் — தீர்த்தம் — சந்தனம் — நைவேத்தியம் — தூபம் — தீபம் — இவைகளைக் கொடுத்து, இந்தலக்ஷ்மணனுடைய உயிரைக் கொண்டுவரக்கடவாயென்று அநுசந்தித்து, அதிககோபத்துடனே பெரியவில்லிற் பூட்டிய நாணியைக் தோள்புரளவாங்கி, ஒருவிதத்தாலும் தடைபடாத வல்லமையிற் சிறந்த பாசுபதாஸ்திரத்தைப் பிரயோகித்து விட்டுவிட்டான்.

அப்போது அந்தப் பாசுபதாஸ்திரமானது ஒருபக்கத்திலே சூலாயுதங்களையும், மழுவாயுதங்களையும், பலவித பாணங்களையும், அக்கினியையும், விஷத்தையும், சர்ப்பங்களையும், கீரிடி நெருப்பிடிகளையும், அநேகமாய ஸ்வரூபங்களையும், கரும்பூதங்களையும், பெரும்பேய்களையும், உலோகமெல்லாம் நிரப்பிக் கொண்டு வருவதல்லாமல்; ஒருபக்கத்திலே வடவாமுகாக்கினியாயு மற்றொருபக்கத்திலே லோகங்களையெல்லாம் பின்தொடர்ந் தழிக்கும்படியான சூறைப்பெருங்காற்றையு முடையதாய்ச் சப்தசமுத்திரங்களுக்கும் அப்புறமாயிருக்கின்ற பெரும்புறக்கடல் வந்ததுபோலவும், அந்தச் சமுத்திரத்தில் வாசமாயிருந்த பேரிருள் மூடிவந்ததுபோலவும் வந்தது. அதைக்கண்டமாத்திரத்தில் இந்த அஸ்திரம் பழுதாகமாட்டாது. இலட்சுமணன் இறந்துபோனார். என்றுபயந்து தேவர்களெல்லாம் ஓட்டம்பிடித்தார்கள். இரிஷிகளெல்லாம் பறந்தார்கள். வானரங்கள்பட்ட பாட்டைக்குமிக்குச் சொல்லுகிறதிசயமோ? சூரியசந்திரர்கள் கதிமாறினார்கள். இந்தத் திரிலோகமுழுவதும் சுழன்றன.

அதைப்பார்த்த விபீஷணாழ்வான் உயிர்நீங்கும்படியான பயத்துடனே மனந்திடுக்கிட்டு, இந்த அஸ்திரத்தை நீக்கும்படியான உபாயங்களும் உண்டாகுமோ? ஓ ஸ்வாமி! ஓ வீரர்களுக்குள்ளே முதன்மையான இளையபெருமாளே! ஓ சக்கரவர்த்தித் திருக்குமாரரே! என்று கூப்பிட்டார். அதற்கு இளையபெருமாள் சிரித்தார். அக்கால் வெற்றிமாலையைத் தரித்த பலவான்களான வானரவீரர்களெல்லாம் இளையபெருமாளுடைய திருவடி நிழலிலொதுங்கி, ஸ்வாமி! தேவரீருக்கு அபயம்: அபயம்: என்று கூவினார்கள். இப்படிகூவின எல்லாரையும் இராமாநுஜர் பயப்படாதேயுங்களென்று திடங்கூறி, உங்களெல்லாருக்கும் அபயங் கொடுத்தோமென்று தமதுதிருக்கரத்தால் அவர்களை யாதரித்து, இந்தப்பூலோக சுவர்க்கலோகத்தார் படுகின்ற பயங்களை நாமறிந்தோம். இனிநாமிதைச் சும்மா விடப்போகிறதில்லை. பஞ்சமுகமுடைய சிவபிரானது அஸ்திரத்தையே தொடுக்கின்றேன். என்று நிச்சயித்து அந்தப் பாசுபதாஸ்திரத்தை யெடுத்து, இந்திரசித்துவிட்ட அஸ்திரத்தைமாத்திரம் அழித்துவிடக்கடவாய். உலோகத்துக்கு ஒருபத்திரவமும் செய்யவேண்டாம். என்று அபிமந்திரித்து அதனுள் வேறொரு அக்கினியாஸ்திரத்தைச் சேர்த்துச் செலுத்தினார். அதுபோய் அந்த அஸ்திரத்தினுண்டாகிய எல்லா விபரீதங்களையும் ஒரு க்ஷணப்பொழுதுக்குள்ளாக விழுங்கிவிட்டது.

அப்போது தேவலோகவாசிகளெல்லாம் ஆரவாரித்தார்கள். பூலோகவாசிகளும் ஆர்ப்பரித்தார்கள். தேவதுந்துபிகள் முழங்கின. சப்த சமுத்திரங்களும் கோஷித்தன. சப்தமேகங்களு முழங்கின. சாஸ்திரங்களுடனே கணிதாதிதேவதைகளும் சப்தமிட்டன. வானரர்களெல்லாம் கர்ச்சித்தார்கள். ஜெயவிஜயீபவ: என்று சதா பல்லாண்டு கூறிக்கொண்டிருக்கின்ற

ஆகாசவாணியும், தர்மதேவதையும், துதித்தன. மற்றவர்களெல்லாரும் அதிகோஷ்டமாகச் சப்தித்தார்கள். இந்தலக்ஷ்மணன் உகாந்தகாலத்தில் உலோகங்களையெல்லாம் சம்ஹரிக்கின்றவனுடைய பாசுபதாஸ்திரத்தை மயங்காதபடி தெரிந்து அரைமாய்த்துவிடவும் வல்லவனுகேயென் றெண்ணிக் கொல்லும் யமனிலுங் கொடியவனான இந்திரசித்து மனந்திகைத்துப் போனான். குறையாத வெற்றியாளர்களான வானரவீரர்களெல்லாம் இவர் சாக்ஷாத் விஷ்ணுவாமிச மென்பதைத் தெரிந்துகொண்டார்கள். அக்கால் இந்திரஜித்து தேவாஸ்திரங்கள் வியர்த்தமாய்ப் போய்விட்டவைகளென்று வெட்கப்படாமல், நமக்குப் பாணப்பிரயோகம் பண்ணுகிற சாமர்த்தியம் இருக்கின்றதல்லவா வென்று விசைகொண்டு, தன் கைச்சமர்த்தால் சில பாணங்களைவாரி விதைத்துவிட்டான். அவைகளெல்லா மிருத்த ஞானஸ்வரூபரான இளையபெருமாளுடைய பருத்த தோள்களின்மீதும், நுதற்கட்டியின்மீதும் பாய்ந்தன. அதுகண்ட சுக்கிரீவமகாராஜனாதிய மகாபலாட்டியரான வெற்றிவீரர்கள் கையோயாமல் அனேகமலைகளைவாரி வருஷமாகப் பெய்து இராக்ஷச சேனைகளைத் துவம்சப்பண்ணிக்கொண் டிருந்தார்கள், இளையபெருமாள் சதகோடி பாணவருஷங்களை இராட்சசர்க ளினிப்பிழைக்க மாட்டார்களென்று சொல்லும்படிப் பிரயோகித்தார். அப்போது இந்திரஜித்துத் தன்சிறிய பிதாவாகிய விபீஷணாழ்வானைப் பார்த்து வெகுவாய் நிந்திக்கத் தலைப்பட்டான்.

இந்திரசித்து விபீஷணரைத் தூஷித்தெதிர்த்தல்.

கவி.

முட்டடர்த்தண்டுமேந்தி மனிதரைமுறையந்துந்திப்
பிரட்டரிற்புகழ்ந்துபேதை யடியரிற் றொழுதபின்சென்
றிரட்டுறுமுரசமென்ன விசைத்ததேயிசைக்கின்றாயைப்
புரட்டுவென்றலையைபின்று பழியெனவொழிவன் போலாம்.

விழிபடமுதல்வரெல்லாம் வெதும்பினவொதுங்கவீழ்ந்து
வழிபடவுலகமூன்று மடிபடவந்ததேனு
பழிபடைதாங்கலாற்று மாட்டவர்யாண்டும்வெஃகாப்
பழிபடவந்தவாழ்வை யாவரேபகர்பாலர்.

நிருதனையுமுன்ன மின்னனிருதரெல்லாம்
வேருதனையும்வீவா ரிராவணனோடுமீளா
ரொருவனொருவனின்றாய் நீயுனையுறைய நின்றே
டாருளரக்கர்சிற்பா ரரசுவீற்றிருக்கையா.

முத்தைநாளுலகந்தந்த மூத்தவானோர்கட்கெல்லாந்
தந்தையார்தந்தையாரைச் செருவிடைச் சாயத்தள்ளி
அந்தணர்தந்தையாரைக் கயிலையொடொருகைக்கொண்ட
வெந்தையாரரசுசெல்வ மிப்பெரும் பலங்கொண்டேயோ.

பனிமலர்த்தவிசின்மேலோன் பார்ப்பனகுலத்துக்கெல்லாந்
தனிமுதற்றலைவனான வுன்னைவந்தமரர்தாழ்வார்
மனிதருக்கடிமையாய்நீ யிராவணன்செல்வமாள்வாய்
இனியுனக்கென்னேமான மெங்களோடடங்கிற்றன்றே.

சொல்வித்துப்பழித்ததுங்கை மூக்கினைத்துணிவித்தோரா
வெல்வித்தும் படைக்கையுக்க டமையனை யெங்களோடுங்
கொல்வித்துந்தோற்றின்ற கூற்றினர்குலத்தையெல்லாம்
வெல்வித்தும்வாழும் வாழ்வின் பெருமையே விழுமிதன்றே.

ழுதியோணிந்ததின்றோ விராவணனிராமனம்பாற்
புழுதியேபாயவாகப் புரண்டனன்புரண்டுமேல்வீழ்ந்
தழுதியோரியுங்கூட வார்த்தியோவிவனைவாழ்த்தித்
தொழுதியோயாதோசெய்யத் துணிந்தனைவிசயத்தோனாய்.

ஊனுடையுடம்பினீங்கி மருந்தினுலுயிர்வந்தெய்து
மானிடரிலக்கைவேந்தைக் கொல்வரேல்நீயுமன்னுன்
றூனுடைச் செல்வந்துய்க்கத் தகுதியேசாத்திறேனும்
வானிடைப்புகுதியன்றே யான்பழி மறுக்கிலனென்றான்.

ஓ சிற்றப்பா! உன்கையிலேபலம்பொருந்திய ஒருதண்டத்தை வைத்துக்கொண்டிருந்தும் மனிதர்களுக்குத் தாழ்ந்து, இராட்சசமுறைமைமாறி, புரட்டுக்காரரைப்போலப் புகழ்ந்து, புத்தியில்லாத அடிமைகளைப்போலத் தொழுது, அவர்களுக்குப்பிறகே நின்றுகொண்டு தப்பட்டையைப்போல் வீணுச்சொன்னதையே சொல்லிக்கொண் டிருக்கின்றாய். உன்தலையை அறுத்தெறிந்துபோடுவேன். பழியாகுமேயென்று விட்டுவிட்டேன். எல்லார் கண்ணுக்கும் தோற்றும்படியான உயர்ந்த ஆசனத்தின்மீது வீற்றிருந்து மும்மூர்த்திகளும் பயந்தொதுங்கித் தெண்டனிட்டுச் சொன்னபடி கேட்கவும் திரிலோகத்தாரும்வந்து காலில்வணங்கவு மகாதைஸ்வரியம் சம்பவித்தாலும், எல்லாரையு மழிக்கும்படியான ஆயுதத்தைக் கையில்வைத்திருக்கின்ற புருஷர்களெல்லாம் வெட்கிப் பழிக்கத்தக்கவனாகவிருக்கிற உன்வாழ் வென்னத்திற்காம்? ஐயோ! இந்தவாழ்வை யாராவது நயந்தவர்களாக நீகண்டாவது கதையிற்கேட்டாவ திருந்ததுண்டா? நீரிருக்குமட்டுமீன்களிருக்கும். நீர்போனால் மீன்களெல்லாம் ஒருமிக்கமாண்டுபோகும். அதுபோல ராவணனுடனே ராக்ஷசர்களெல்லா மாண்டுபோகப் போகின்றார்கள். தவறமாட்டார்கள். இலங்காபட்டண மிருக்கின்றது. நீயொருவன்தானிருக்கின்றாய். நீ ராஜரீகஞ் செய்கிறதற்கு உன்னோடுகூட யாரிருக்கின்றார்கள்?

ஓ சிற்றப்பா! முன்னால் உலகத்தையெல்லாம் பெற்ற தேவபிதாவாகிய பிரஹ்மாவின் தகப்பனான விஷ்ணுவை யுத்தத்தில் தோற்கடித்து, சுப்பிரமணியருடைய பிதாவாகிய சங்காரமூர்த்தியைக் கயிலாச மலையுடன் பேர்த்து ஒருகையில் தூக்கின என்பிதா இராஜரீகஞ்செய்தது உன்னைப்போல மனுஷியசஹாயத்தைக் கொண்டுதானோ? அந்தப்பிரஹ்மவமிசமான பிராஹ்மண

குலத்துக்கெல்லாம் தனித்தலைவனாயிருக்கின்ற உன்னைத்தேவர்களெல்லாம் இனிமேன்னமாய் வணங்குவார்கள் ? நீ மனிதர்களுக்கு அடிமையாகி இராவணனுடைய செல்வமெல்லாம் எப்படியாளப்போகிறாய் ? உனக்கென்ன மானமிருக்கின்றது ? எங்களுடனேகூட பெருமையெல்லாம் அடங்கிவிடப்போகின்றது. உங்கள் தங்கையை மூக்கறுத்தவர்களுக்கு நீ வேண்டிய உளவுகளையெல்லாஞ் சொல்லிக்கொடுத்தும், அதனாற்பலவிகழ்ச்சிகளை யுண்டுபண்ணியும், பிரகாசத்தைவீசுகின்ற ஆயுதங்களைக் கையிலுடைய உங்கள் தமயனை எங்களோடுகூட இறக்கும்படிப் பண்ணியும், எங்களுக்கு இதுவரையிலுந் தோற்றுக்கிடந்த யமனாலே எங்கள் குலத்தையெல்லாம் ஜெயிக்கச்செய்தும் வருகிறாய். இதனால் நீ யடையப்போகிற வாழ்வைக்காட்டிலும் தரித்திரமுற்றிருப்பதேமேலாகுமல்லவா ?

ஓ வெற்றிபெற்ற தோள்களையுடைய சிற்றப்பா ! சித்திரமெழுதி அழகுபெற்றிருக்கின்ற பலமுள்ளதோள்களையுடைய இராவணன் ஸ்ரீராமனுடைய பாணத்தினாலே நிலப்புழுதியே தனக்குப் பாயாகப்புரண்ட காலத்தில், நீயும்புரண்டு அவன்மேல்விழுந்து அழப்போகின்றாயோ ? அல்லது அவனைவாழ்த்தித் தொழப்போகின்றாயோ ? என்னசெய்ய நிச்சயித்திருக்கின்றாய் ? மாமிசத்துடனேகூடின தேகத்திலிருந்து நீங்கிப்போன உயிரை மறுபடியும் சஞ்சீவியாற்பெற்ற மனிதர்களுக்குள் இலங்காதிபதியான இராவணேஸ்வரனைச் செயிப்பவர்களுமுண்டா ? நீயும் அவனுடைய செல்வத்தையெல்லாம் ஆளும்படியாகத் தகுந்தவனாவாயோ ? அந்தராவணன்விடுகின்ற பாணத்தினாலே அவர்களுடனே நீயும் சுவர்க்கமடையப்போகின்றாயல்லவா? ஐயோ! இப்போது நான் உன்னைக்கொன்றால் பழிவருமென்றல்லவா முன்பின் பார்க்கிறேனென்றான்.

இப்படி மேகநாதனென்னும் இந்திரஜித்துக்கூறிய வார்த்தைகளையெல்லாஞ் செவிகொடுத்துக்கேட்ட விபீஷணாழ்வான் மாலையணிந்த முடியை அசைத்துச்சிரித்து இவ்வாறு சொல்லுகிறார்.

விபீஷணர் இந்திரசித்துவுக்குச் சிலவற்றைக்கூறல்.

கவி.

அறந்துணையாவதல்லா லருநரகமையநல்கு
மறந்துணையாகமாயாப் பழியொடும்வாழமாட்டேன்
துறந்திலேன்மெய்ம்மையெய்தும் பொய்ம்மையேதுறப்பதல்லாற்
பிறந்திலேனிலங்கைவேந்தன் பின்னவன்பிழைத்தபோதே.

உண்டிலெனறவம்பொய்ம்மை யுரைத்திலென்வலியாலொன்றுங்
கொண்டிலென்மாயவஞ்சங் குறித்திலெனியாருங்குற்றங்
கண்டிலரென்பாலுண்டே நீயிருக்காண்டிரன்றே
பெண்டிரிற்றிறம்பினாரைத் துறந்ததுபிழையிற்றோ.

மூவகையுலகமேத்து முதல்வனெவர்க்குமூத்த
தேவர்தந்தேவன்றேவி கற்பினிற்சிறந்துளாளை
நோவனசெய்ததீதென் றுரைப்பநுந்தாதைசீறிப்
போவெனப்போந்தேனின்று நகரத்திற்பொருந்துவேனே.

வெம்மையிற்றருமநோக்கா வேட்டதேவேட்டுவீயு
மும்மையேபுகழும்பூண்க துறக்கமுமுமக்கேயாக
செம்மையிற்பொருந்திமேலோ ரொழுக்கினோடறத்தைத்தேறு
மெம்மையேபழியும்பூண்க நரகமுமெமக்கேயாக.

அறத்தினைப்பாவமெல்லா தென்னுமதறிந்துஞானத்
திறத்தினதுறுமென்றெண்ணித் தேவர்க்குந்தேவைச்சேர்ந்தேன்
புறத்தினிற்புகழேயாக பழியொடும்புணர்கபோதச்
சிறப்பினிப்பெறுகதிர்க வென்றனன்சீற்றந்தீர்த்தான்.

அப்பா இந்திரஜித்தே! பாவமெப்போதும் கெட்டது. தர்ம்மமே உயர்ந்ததாகும். நான் தர்ம்மத்தைத் துணையாகப் பற்றுவேனே யல்லாமல் பாவத்தைத் துணையாகக்கொண்டு மாயாப்பழியுடனே உயிர்வைத்திருக்கமாட்டேன். பொய்யைப்பகைத்து விட்டுவிடுவேனேயல்லாமல் மெய்யில் கொஞ்சமேனும் தவறமாட்டேன். இலங்காதிபதியாகிய இராவணனெப்போது தவறிநடந்தானோ ? அப்போதே யவனுக்குத்தம்பியாகநான் பிறக்கவேயில்லை. நானிதுவரையிலும் கள்குடித்தவனல்ல. பொய்சொன்னவனும் அல்ல. மேலும் பலிதமாக ஒருவரிடத்திலும் ஒன்றும் அபகரித்துக் கொள்ளவில்லை. மாயமானவஞ்சனையை நான் நினைத்ததேயில்லை. இதுவரையிலும் என்மேற் குற்றஞ் சொன்னவர்களொருவருமில்லை. இவையனைத்தையு நீயுநின்றந்தை முதலானபேர்களும் பார்த்திருக்கின்றீர்களல்லவா? பெண்பிள்ளையின்பொருட்டுத் தவறிநடந்தவர்களைத் துறந்துவிட்டதினாலே என்மீது பிழையென்று சொல்லத்தகுமா?

அப்பா இந்திரசித்தே! திரிலோகத்தாரும் ஸ்தோத்திரஞ் செய்யத்தக்க முதற்காரணவஸ்துவும், எல்லார்க்குமூத்த தேவதேவனுமான ஸ்ரீராமமூர்த்தியினுடைய தேவியும்,கற்பிற்சிறந்தவளுமான சீதாபிராட்டியாரை மனவருத்தப்படுத்துவது தகாதென்று மாத்திரந்தான் சொன்னேன். அதற்குன்தகப்பன் என்னைக்கோபித்து அப்புறம் போய்விடென்று கட்டளையிட்டான். அதன் பிறகுதான் வந்தேன். அப்படியிருக்க நான் நகரத்திற்பொருந்தி வாழ்வதெப்படி? நல்லது: அதிக குரூரர்களாய்த்தர்மத்தைப்பாராமற் கெட்டவிருப்பத்தையே நல்விருப்பமாக விரும்பி மாளுகின்ற உங்களுக்கே கீர்த்தியுண்டாகட்டும். மோக்ஷமும் உங்களுக்கே கிடைக்கட்டும். ஒழுங்காய்நடந்து பெரியோர்கள் நியமித்த அநுஷ்டானப்படித் தர்ம்மத்தைப் பின்பற்றுகின்ற என்போன்றவர்களுக்கே நிந்தையுண்டாகட்டும். நரகமும் எங்களுக்கே கிடைக்கட்டும்.

அப்பா இந்திரசித்தே! தர்மத்தைப் பாவம் வெல்லமாட்டாதென்கிறதை அறிந்திருந்தபடியினாலே ஞானமார்க்கத்திற்கும் இதுவே தகுதியென்று நினைத்துத் தேவதேவரான ஸ்ரீராமமூர்த்தியை அடைக்கலம்புகுந்தேன். இதைக்கண்டு என்னை யெல்லாரும் புகழ்ந்தாலும் சரி: இகழ்ந்தாலுஞ்சரி: நான் அஷ்டஅயிஸ்வரியபோகங்களை யனுபவித்தாலும் சரி: அவைகளை யிழந்தாலுஞ்சரி: எனக்கு அவைகளிலே எண்ணமில்லை. என்று சாந்தசீலரான விபீஷணாழ்வான் சொன்னார்.

இந்திரசித்து விபீஷணர்மீது பாணப்பிரயோகஞ்செய்ய அதைவிபீஷணர்கண்டித்தல்.

கவி.

பெருஞ்சிறப்பெல்லாமென்கைப் பிறைமுகப்பகழிபெற்றால்
இறுஞ்சிறப்பில்லையைய வெங்கினிப்போவையென்னுத்
தெறுஞ்சிறைக்கலுழனன்ன வொருகணைதொடுத்துச்செம்பொன்
உறுஞ்சுடர்க்கழுத்தைநோக்கி யூக்கினனுருமின்வெய்யோன்.

இவையனைத்தையும் இந்திரஜித்துக்கேட்டு, ஓ சிற்றப்பா! நீ அடையப்போகிற சிறப்புகளெல்லாம் என்கையிலிருக்கிற அர்த்தசந்திரபாணத்தா லழிந்துபோகின்ற சிறப்பேயல்லாமல் வேறல்ல. நீ என்னைவிட்டு எங்கே தப்பிப்போகப்போகிறாய்? என்றுகூறி இடியினும் கொடியவனான அவ்விந்திரசித்து எல்லாவற்றையு முறித்தெறியத்தக்க வேகமுள்ள சிறகுகளோடுகூடிய ஸ்ரீகருடாழ்வாருக்கொப்பான ஒரு அர்த்தசந்திரபாணத்தை வில்லிலேதொடுத்து, விபீஷணாழ்வானுடைய இரத்தினாபரணங்களணிந்த கழுத்துக்குக் குறிவைத்து எய்துவிட்டான்.

அந்தப்பாணமானது இடியைப்போலவும் விஷபானம்பண்ணவரான திரிநேத்திர சங்காரமூர்த்தியினுடைய சூலாயுதம்போலவும் வேகங்கொண்டு வருகின்றதன்மையை இளையபெருமாள் பார்த்து, விபீஷணாழ்வானிதோமுடிந்துபோனார் முடிந்துபோனாரென்று சொல்லிக்கொண்டிருக்கின்ற தேவர்கள்பார்க்கும்படியாகத் தம்முடைய திருக்கையிலுள்ள ஒருபாணத்தால் அந்தப்பாணத்தைத் துண்டாக்கிக் கீழேதள்ளினார். அந்தப்பாணம் துண்டுபட்டுப்போனமாத்திரத்தில், யமனுக்குமியமனான இந்திரசித்து ஒருவேலாயுதத்தை யெடுத்துப் பிரயோகித்துவிட்டான். அஃதொரு சூரியன் வருகிறதுபோல வருகின்றதைக்கண்டு சகலலோகத்தாரு நடுக்கமுற்றனர். உடனே தனுர்வித்தியாசாமர்த்தியரான இலட்சுமணப்பெருமாள் அதையுந்துண்டாய்விழும்படி வெட்டித்தள்ளினார்.

அப்போதுவிபீஷணாழ்வான் தம்மீது இந்திரசித்து வேலாயுதத்தைப் பிரயோகித்தானேயென்று அதிககோபங்கொண்டு, பாதசாரியாகத்தானே வாயுவேகமாய்ப்போய்த் தம்முடைய தண்டாயுதத்தினாலே இந்திரசித்துவின்



NO. 522.
இலக்ஷுமணர் இந்திரஜித்துவைசங்கரித்து, அவன் சிரசை அங்கதனுங் கொண்டுபோய் ஸ்ரீராமருக்குப்பாதகாணிக்கையாக வைத்தது.

தேரைச் செலுத்திக்கொண்டிருந்த சாரதியையும், தேரிற்பூட்டிய குதிரைகளை யுங் கொன்று, அவனுடையதுடிப்பையு மாற்றிவிட்டார். இப்படியழிந்த அத் தேரின்மேலிருந்துகொண்டே இந்திரசித்து கோடி அம்புகளைப்பிரயோகித்து விபீஷணாழ்வான் தோள்களின்மேலும், இலட்சுமணப்பெருமாள் தோள் களின்மேலும், மற்றவானரவீரர்களுடைய மார்பின்மேலும், இரத்தவெ ள்ளம் பெருக்கெடுக்கத் தக்கதாகச்செய்து அண்டங்களெல்லாம் கிடுகிடெ ன்று நடுங்கும்படி விராஷ்டகாசம்பண்ணினன்.

இந்திரசித்து ஆகாசத்தில் மறைந்து இராவணனிடம் செல்லுதல்.

கவி.

ஆர்த்தவனையபொழ்தி லழிவிலாத்தேர்கொண்டன் றிப்
போர்த்தொழில்புரியலாகா தெனப்தோர்பொருளையுன்னிக்
கார்த்தவிமையாமுன்னம் விசும்பிடைக்கரந்தானென்னும்
வார்த்தையைநிறுத்திப்போன னிராவணன்மருங்குசென்றான்.

இவ்வண்ணம் அஷ்டகுலாசலங்களும், அஷ்டதிசையும், சப்த சமுத்திரங் களுங் கலங்கும்படியாகச் சப்தித்தவனாகிய இந்திரசித்தானவன் இனிவேறோர் தேரின்மீதேறியல்லாமல் யுத்தஞ்செய்வது தகாதென்று நிச்சயித்துக்கொ ண்டு, பார்த்தகண் ணிமைப்பதற்கு முன்னம் ஆகாசத்தில் மறைந்துவிட்டா னென்னும் ஒரு சாமார்த்திய வார்த்தையை யாவரும் சொல்லத்தக்கதாக மேகத்தில் மறைந்துபோய் இராவணனிடம் போய்ச்சேர்ந்தான்.

நிகும்பலைப் படலம் முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

நேயந்தேருவாகு,

இந்திரஜித்துவதைப்படலம்.

இப்படலத்தில் இந்திரஜித்து இராவணனிடஞ்சென்று நிகும்பிலையாகம் அழிந்ததையும் இலக்ஷுமணருடைய பராக்கிரமத்தையுங் கூறி இனிச்சீதை யை விடுவதே நமக்குச்சிறப்பென் றறிவிக்கவும் அவனதுகேட்டுச் சினந்து தானே போருக்கெழமுயல, அக்கால் இந்திரஜித்து தடுத்து மீட்டுத் தானே போருக் கெழுந்து சென்று அன்றிரா முழுதும் இல க்ஷுமணரோடு கடும்போர் விளைக்க, முடிவில் யமாஸ்திரத்தால் இலட் சுமணர் இந்திரஜித்துச்செய்தமாயப்போர்களைத்தையுங் கொன்று அவனை த் தங்கரிக்க, அதுகண்ட ஸ்ரீராமர் இலக்ஷுமணருடைய வெற்றியை வி யந்து விபீஷணனை நாசுசன்மானித்தல் சொல்லப்படுகின்றது.

இராவணன் தன்பால்வந்த இந்திரசித்துவைநோக்கி நடந்த வரலாறனைத்தையுங் கேட்க இந்திரசித்துச் சொல்லுதல்.

கவி.

விண்ணிடைக் கரந்தானென்பார் வஞ்சனை விளைக்குமென்பார்
கண்ணிடைக்கலக்கநோக்கி மையுறவுழக்குங்காலை
புண்ணிடையாக்கைச்செக்கர் ரிழிதரப்புக்குநின்ற
என்னுடைமகனைநோக்கி யிராவணனிவையசொன்னான்.

இங்கே வானரவீரர்கள் இந்திரசித்து ஆகாசத்தில் மறைந்துவிட்டானே: முன்போல ஏதேனு மோசஞ்செய்வானோவென்று கண்கலக்கஞ் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். அந்தருணத்தில் தேகமெல்லாம் சல்லடைக்கண்களைப் போலத் தொளைக்கப்பட்ட புண்களிலே இரத்தமொழுகத் துக்கதாகப்போய் எதிரேநின்ற மகாசூரனென்று யாவருங் கொண்டாடும்படியிருந்த இந்திரசித்துவை இராவணன்பார்த்து, அப்பா மேகநாதா! உன்னுடைய நிகும்பிலையாக முடிவுபெறாமல் அழிந்துபோனதென்பதை உன்தோள்களிலே அபரிமிதமாய்ப் பதிந்திருக்கின்ற அம்புகளே யெனக்குத்தெரிவிக்கின்றன. கருடனைக்கண்டு படத்தையொடுக்கின பாம்பைப்போல ஒருநாளும் பின்னிடையாதவல்லமையுள்ள தேகநடுங்கி அதிகவருத்த முற்றிருக்கின்றாய். மகனே! நீ நடந்தகாரியத்தைச்சொல்லுக, என்றுகேட்ட தகப்பனை ராவணனை இந்திரசித்துப்பார்த்து, ஐயா பிரதாபலங்கேஸ்வரா! நான்செய்த யாகவந்தனைகளையெல்லாம் உமதுதம்பியாகிய விபீஷணன் சூரியனைக்கண்ட இருளைப்போல ஓடச்செய்தான். அந்த உதவியினாலே இலட்சுமணன் தன்னுடைய சேனைகளுடனேகூடவந்து சூழ்ந்துகொண்டு, நான்செய்த யாகத்தைச் சிதைத்துவிட்டு, மிகுந்த கோபத்துடனே வெகுசமர்த்தாய் யுத்தத்துக்கு எதிர்த்தானின்றான்.

அப்போது நான் பிரஹம்மா, விஷ்ணு, ருத்திரனென்று சொல்லுகின்ற மூன்று தேவர்களுடைய அஸ்திரங்களையும் பிரயோகித்தேன். அவைகளையெல்லாம் அந்த ஸ்ரீராமன்தம்பி தடுத்துவிட்டான். சமஸ்தலோகங்களையும் சகலதேவர்களையும் சிருஷ்டித்த தேவதேவோத்தமனான சாக்ஷாது நாராயணமூர்த்தியினுடைய அஸ்திரமானது நிராயுதனாய் அஞ்சலித்துக்கொண்டு நின்ற அந்தலட்சுமணனை வலஞ்செய்துவிட்டுப் போய்விட்டதேயானால், அதைக்காட்டிலும் வல்லமைபெற்றது லோகத்திலே வேறொன்றிருக்கின்றதோ? ஐயா! நம்முடைய குலத்திற் பூர்வகோடீச் செய்துவந்த பாவத்தினாலேயே இந்த மானாதபெரும்பழியைச் சம்பாதித்துக்கொள்ளலாயிற்று. அவ்விலக்ஷ்மணன் கோபிப்பானேயானால் இந்த மூன்றுலோகங்களையும் ஒருவனே முடித்துப்போடுவான். இவருமின யுத்தநடக்கும்போது லோகமெல்லா மழிந்துபோகுமென்னும் அந்தக்காரணத்தினாலே அவனென்மேற் பிரமாஸ்திரத்தை விடவில்லை. ஆகையால் நான் இவர்களையும் ஜெயம்

பெற்றுவந்தேன். மற்றிரண்டு அஸ்திரங்களையு நானேமறுபடியும் பிரயோகித்தேன். அப்போதும் அந்த அஸ்திரங்களை மாத்திரம் தடுத்துவிட்டான். இன்னமும் பகைவர்களுக்குப் பலம் விர்த்தியாகின்றது. அவர்கள் தங்கள் சொந்தபலத்தாலே நம்மைக் கொல்லுகிறதற்கு நிச்சயித் திருக்கின்றார்களென்று சொல்லிப் பின்னுஞ் சொல்லுகின்றான்.

இந்திரசித்து தன்கருத்தை இராவணனிடம் வெளிப்படுத்த வதைக்கேட்ட விராவணன் சிலவற்றைக்கூறல்.

கவி.

ஆதலாலஞ்சினேனென் றருளலையாசைதானச்
சீதைபால்விடுதியாயி னவையுவர்சீற்றந்தீர்வர்
போதலும்புரிவர்செய்த தீமையும்பொறுப்பருன்மேல்
காதலானுரைத்தேனென்றா னுலகெலாங்கலக்கிவென்றான்.

ஐயா எனதருமைப் பிதாவே! அதற்காக நான் பயந்துவந்தேனென்று திருவுளம்படாதேயும். நீர்மாத்திரம் அந்தச் சீதையினிடத்திலிருந்த ஆசையைவிட்டுவிடுவீரேயானால் அந்தராமலட்சுமணர்கள் கோபமாறிப் போய்விடுவார்கள். நீர் அவர்கள் விஷயத்திற் செய்த அபசாரத்தையும் பொறுத்துக் கொள்ளுவார்கள். நான் உம்மிடத்திலுள்ள பக்ஷத்தினாலே சொல்லுகின்றேனே யல்லாமல் வேறொரு காரணத்தினாலும் அல்லவென்று லோகங்களையெல்லாம் கலங்கச்செய்த மகாவீரனான இந்திரசித்துச் சொன்னான். இப்படியவன் சொன்னவுடனே இலங்காதிபதியாகிய ராவணன் தன்பத்துமுகங்களிலும் வச்சிரதந்தங்கள் பிரகாசிக்க இருபதுதோள்களுங் குலுங்கச் சிரித்து, அப்பா இந்திரசித்தே! நீ இனிமேல் இந்தச்சண்டைக்குப் போகமாட்டாய் போலேயிருக்கின்றது. பயங்காதே. நீ மனிதர்களுக்காகப் பயப்படவேண்டாம். வருத்தப்படவும் வேண்டாம். நானேபோய் என்னொருவனாலே அந்தமனிதர்களைச் செயித்து எனக்கு வெற்றியுண்டாக்கிக் கொள்ளுகின்றேன் பார். என்றுகூறிப் பின்னுஞ் சொல்லுகிறான்.

கவி.

முன்னையோரிறந்தாரெல்லா மிப்பகைமுடிப்பரென்றும்
பின்னையோர்நின்றாரெல்லாம் வென்றனர்பெயர்வரென்றும்
உன்னையேயவரைவென்று தருதியென்றுணர்ந்துமன்றா
லென்னையேநோக்கியானிந் நெடும்பகைதேடிக்கொண்டேன்.

பேதைமையுரைத்தாய்மைந்த வுலகெலாம்பெயரப்போகக்
காதையென்புகழினோடு நிலைபெறுவமரர்காண
மீதெழுமொக்குளன்ன யாக்கையைவிடுதல்லாற்
சீதையை விடுதலுண்டோ விருபதுதிண்டோளுண்டாய்.

வென்றிலனென்றபோதும் வேதமுள் ளளவுமியானும்
நின்றுளெ னன்றேமற்றவ் விராமன்பேர் நிற்குமாயின்

பொன்றுதலொருகாலத்துந் தவிருமோபொருளைத்தன்றே
வென்றுளார்நாளைமாள்வார் புகழுக்குமிறுதியுண்டோ.

விட்டனன்சீதைதன்னை யென்றனம்விண்ணோர்கண்ணிக்
கட்டெதல்லாற்பின்னை யாவெனக்குறுவதாமோ
பட்டனனென்றபோது மெளிமையிற்படுகிலேனு
வெட்டினேடிரண்டொன திசைகளையெறிந்தவென்றேன்.

அடா இந்திரசித்தே! முன்னே இறந்தவர்களெல்லாம் பின்னுலிருக்கின்றவர்கள் இத்தப்பகையை முடித்துவிடுவார்களென்று நினைத்தார்கள். பின்புள்ளாரெல்லாரும் எதிரிற்போனவர்கள் ஜெயத்தினைப் பெற்றுக்கொண்டுவருவார்களென்று நினைத்திருக்கின்றார்கள். இப்போதுநீபோய் அந்தமனிதர்களை ஜெயம்பெற்றுக் கொடுப்பா யென்று நானினைக்கவில்லை. நானே யித்தப்பகையைத் தேடிக்கொண்டது. நானேயிவர்களை ஜெயம்பெறுவேன். இனி வேறொருவரையும் அனுப்ப நானினைக்கவேயில்லை. நீபுத்தியில்லாத வார்த்தையைச்சொன்னாய். இந்த லோகங்களெல்லாம் அழிந்தாலும் அழியாத பெருஞ்சரித்திரமானது என்புகழுடனே நிலைநிற்கும்படியாகத் தேவர்கள் கண்முன்னே ஜலபுற்புதம்போன்ற இந்தத்தேகத்தைவிட்டாலும் விடுவேனேயல்லாமல், எனக்கிருபதுதோள்களிருக்கவும் என்பிராணனோடே சீதையை விட்டுவிடுவேனோ? நானொருவேளை தோல்வி யடைந்தபோதிலும் வேதமுள்ளபரியந்தமும் அந்தராமன்பேர் நிற்பதுபோல என்பேரும் நிலைநிற்குமல்லவா? வீரமெப்போதாவது தவிர்ந்துபோகப்போகிறதா? இன்றுள்ளவர்கள் நாளைக்கிறப்பாரென்பது யாவர்க்கும் பொதுவல்லவா? புகழொன்றுமாத்திரந்தான் நிலையாயிற்கும். நான்சீதையை விட்டுவிட்டபோதிலும் தேவர்களெல்லாம் இலேசாய்நினைத்துவந்து என்னைக்கட்டுவார்களே யல்லாமல், திரிலோகபயங்கரனான இராவணனென்று எள்ளளவாவது உள்ளநடுங்கிப் பயப்படப்போகின்றார்களா? அல்லவென்று நானிறந்தாலும் அற்பத்திலிறந்து போகமாட்டேன். நானிந்தத் தசதிசைகளையும் வெற்றிபெற்றவீரனென்று நீ அறியமாட்டாயா? வீண்வார்த்தைகளைப் பலவாய்ச்சொல்லிப் பிரயோசனமென்ன? நீயுன் அரண்மனையைப்போய்ச் சேர்ந்து உன்தோளிற்பதிந்திருக்கின்ற அம்புகளையெல்லாம்வாங்கி, பெரியயுத்தத்திலேபட்ட வருத்தத்தைத் தீர்த்துக்கொண்டு, இந்த ராத்திரியைச் சுகமாய்க் கழிக்கப்போய்விடு. என்று சொல்லி நீண்டபற்களையுடைய புலியானது மிகவுஞ்சீறிக்கோபித் தெழுந்தாற்போல இராவணன் சிம்ஹாசனத்தைவிட் டெழுந்திருந்து, என்னுடையதேரை விரைவிற்கொண்டுவாருங்கள் கொண்டுவாருங்களென்று ஆர்ப்பரித்தான்.

இந்திரசித்து இராவணனைத்தேற்றிச்சென்று இலட்சுமணனோடு கடும்போர் விளைத்தல்.

கவி.

எழுந்தனன் றன்னைநோக்கி யிணையடியிறைஞ்சியெந்தாய்
ஒழிந்தருள் சீற்றஞ்சொன்ன வுறுதியைப்பொறுத்தியென்று

கழிந்தனனென்றபின்னர் நல்லவாக்காண்டியென்று
மொழிந்தனன்றெய்வத்தேர்மே லேறினன்முடிப்பதுற்றான்.

அப்படிப்புறப்பட்ட ராவணனை மாண்டுபோகிறதற்குச் சமீபித்தவனான இந்திரசித்துத் தடுத்து அவனுடைய காலில்விழுந்து, ஓ என்பிதாவே! என்மீது உமக்குண்டானகோபத்தை நீக்கியருளவேண்டும். நீர்கொண்ட உறுதியை நிலைநிறுத்தியிருக்கின்றீர். நானேவப்படி நிலைநிறுத்தாமற்போனேன். இனியுமக் குண்டாகப்போகின்ற நன்மையை நீரேபார்க்கப்போகின்றீர். என்றுசொல்லிவிட்டுத் தேவர்களிடத்திற் பறித்துக்கொண்ட ஒருதிவ்யரதத்தின்மேலேறி, தானதுவரையிலும் வெளியிடாமல் மறைத்துவைத்திருந்தமந்திரவலியுள்ளஆயுதங்களையும், இன்னுந்தன்னிடத்திலுள்ள ஆடையாபரணங்களையும், தேவர்கள்தனக்கு அடைக்கலப்பொருளாகக் கொடுத்திருந்தவைகளையெல்லாம் விரும்பினபேர்களுக் கெல்லாந் தானஞ்செய்துவிட்டு, அதன்பின்பு ராவணனைக்கடைக்கண்ணாற் பார்த்துப்பார்த்து இரண்டுகண்களிலுந்தாரைதாரையாய் நீர்பெருகும்படியாக யுத்தகளத்தைநோக்கிப் போயினான். அப்போதிலங்கையிலுள்ள இராட்சசசிரேஷ்டர்களெல்லா மெழுந்து அதிவேகமாயோடிவந்து, ஐயா வெற்றிமாலையைத்தரித்த தோள்களையுடைய இந்திரசித்தே! உம்மைவிட்டுப் பிரியமாட்டோம். உம்மோடுகூடவே நாங்களும் இறந்துபோகிறோமென்றார்கள்.

அதைக்கேட்ட இந்திரசித்து அவர்களைப் பார்த்து, ஓ நண்பர்களே! அப்படியல்ல; நீங்களெல்லா நம்முடைய எஜமானனான இராவணனைக் காத்துக்கொண்டிருங்கள். நீங்கள் மனங்கலங்கவேண்டாம். இன்றைக்கே அந்த மனிதர்களை ஜெயித்துவிடுகிறேன். என்றுசொல்லி அவர்களைச்சமாதானஞ்செய்தபோது அவர்களிற் சிலர் வணங்கினார்கள். சிலர் வாழ்த்தினார்கள்; சில ரவன்வடிவத்தைப்பார்த்துத் தம்வாயுலர்ந்து நின்றார்கள். சிலர் பெருமூச்சுவிட்டார்கள். சிலர்மனமுருகினார்கள். அப்போது பயந்து இரைந்துகொண்டு வந்து பார்க்கின்ற இராக்ஷசஸ்திரீகளுடைய கடைக்கண்களென்கிற வேலாயுதங்கள் இந்திரஜித்தின்மேற்பாய, அந்தயுத்தத்தை ஜெயித்து வெகுவிசனத்துடனே புறப்பட்டுப்போனான். முன்னமிவன் மேகத்தில் மறைந்தபோது அவ்விடத்தில் இளையபெருமாள்பிடித்தவில்லுடனே ஆகாசத்தைப்பார்த்து, ஓ விபீஷணரே! அந்தத்துஷ்டன் ஓடிப்போனான்போலேயிருக்கின்றது. இருந்தானேயானால் ஏதாவது செய்வானல்லவா? ஒன்றையுங்காணேனே யென்றார். இப்படிச்சொல்லிக் கொண்டிருந்த சற்றுநேரத்திற்குள்ளே ஆயிரங்குதிரைகள் பூட்டிய தேரினுடைய விரைச்சலைக் கேள்விப்பட்டார்.

அந்தத்தேரானது மகமேருவினதுசிகரமும் உருளும்படியாகவும் மற்றபர்வதங்களெல்லாம் நெக்குவிடும்படியாகவும் வேகத்தையுடையது. மணிமயமாகிய கொடிகள்கட்டினது. இடியைப்போலு மதிர்ச்சியையுடையது. மின்னற்கூட்டம் திரண்டு விளங்குவதைப்போல் இரத்தினவிளக்கமுடையது. கட

லைப்பானம்பண்ணுகின்ற வடவாமுகாக்கினியானது வெளிப்பட்டு வருகிறதுபோல உலோகங்களெல்லாம் திக்குத்திக்குகளாகப் பறந்தோடும்படியாகவும், சமுத்திரமெல்லாஞ் சுழன்றிடத்தக்கதாகவும், உலோகங்கள் அடுக்கழியவும், சூரியசந்திரர்கள் கதிமாறவும், வானரசேனைகள் குடல்சரியவும், அஷ்டகுலாசலங்கள் நிலைதடுமாறிப் போகவும், பூமிவெடித்துப் பாளம்பாளமாய்க் கிழிபட்டுப்போகவும், அந்தவெடிப்பின் வழியாகச் சர்ப்பராஜனிடத்திலிருந்து புறப்பட்ட விஷத்தைப்போல இருள் பரவிநிற்கவும், ஆதிசேஷனுடைய படங்கள் கலங்குண்ணவும், எதிருள்ள விருளானது பட்டப்பகலைப்போல வெளிச்சமாகவும்வந்து சேர்ந்தது.

கவி.

ஆர்த்ததுநிருதர்தமனிகமுட னமரரும்வெருவினர்கவிகுலமும்
வேர்த்ததுவெருவலொடலமரலால் விடுசினநிருதனைவெகுளியோன்
தீர்த்தனுமவனெதிர்முடுகிமெதிர்திசை செவிடுறதிராவிசைசெழுமின்
போர்த்தொழில்புரிதலுமுலகுகளும் புகையொடெரிகையனல்பொதுளியதால்.

இச்சமயத்தில் இராட்சசக்கூட்டங்கள் யுகாந்தகாலசமுத்திரம்போலப் பெருங்கோஷ்டமிட்டார்கள். ககனவாசிகளாகிய தேவர்களெல்லாம் பயப்பிராந்திகொண்டார்கள். குரக்குக்கூட்டங்களெல்லாம் வேர்த்துப்பயந்து ஐயோ இனியாதுசெய்வது நாசகாலன்வந்துவிட்டானேயென்று மனச்சுழற்சிகொண்டன. அதைப்பார்த்தவனாகிய பாதகன் தனதுவில்லைவளைத்து நாண்பூட்டி கோடாநுகோடியாகப் பாணங்களைப் பிரயோகித்தனன். இதைப்பார்த்தவராகிய இளையபெருமாளும் அவ்விந்திரசித்துவின் முன்னமேறுகி அஷ்டதிக்குஞ் செவிடாகும்படி மகாவிசையோடு நாணேறிட்டெக்காளத்தையெழுப்பி அநேகபாணங்களைப் பிரயோகிக்க லோகமெல்லாம் புகைமண்டி அக்கினிபற்றியெரிந்தது. விபீஷணாழ்வான் இளையபெருமாளைப்பார்த்து, ஸ்வாமீ ! இனித்தேவரீர் இவனைவிட்டுவிட்டால் வெற்றிமாலையை அணியமாட்டீரென்று வணங்கிச்சொன்னார். அதைக்கேட்ட சுந்தரபுருஷராகிய ஸ்ரீராமாநுஜர் மீட்டும்வில்லைக் குணடங்காரம்பண்ணி, உலோகமெல்லாம் தத்தளிக்கவும் — அஷ்டகுலாசலங்களினு மனமுதிரவும் — பூமியைத் தாங்கிக்கொண்டிருக்கின்ற ஆதிசேஷனும் திடுக்கிடவும்—இடிக்குச்சமமானபாணங்களை அடுக்கடுக்காகப் பிரயோகித்தார். இப்படியிருக்கும்போது இந்திரஜித்துவிட்ட அக்கினிமுகாஸ்திரங்களாலே வானரர்கள் கண்டகண்ட இடங்களிற் சிதறியோட்டம்பிடித்தார்கள். இளையபெருமாள் பிரயோகித்த அனல்முகப்பாணங்கள் வடவாக்கினியைப்பார்க்கிலும் எரிந்துகொண்டு சம்பரிக்கத் தலைப்பட்டபடியினாலே இராக்ஷசர்களெல்லாம் திக்குத்திக்குகளாகச் சின்னபின்னப்பட்டு ஓட்டம்பிடித்தார்கள்.

அப்போதுலோகமுழுவதும்அக்கினிமயமாய்நிறைந்தபடியினாலேஇருதிறத்தாருடைய சேனைகளும் எண்ணத்தொலையாதபடிமாண்டார்கள். இளைய

பெருமாளும்இந்திரஜித்தும் ஒருவரையொருவர் குறிப்பிட்டுப்பிரயோகிக்கின்ற அஸ்திரவருஷங்கள் அக்கினிமழைபோலவும்இடிமழைபோலவும்பாய்ந்தன. இந்திரஜித்துவிட்டபாணங்களை இளையபெருமாள் விடுகிறபாணங்கள் அங்கங்கே துண்டுதுண்டாக்கிக் கொண்டுபோய் அவனுடைய உடலிலுள்ள இரத்தங்களைப் பானம்பண்ணின. இந்திரஜித்துவின் பாணங்கள் இளையபெருமாளுடைய கவசத்தைப் பேதிக்கமாட்டவுமில்லை. அதைக்கிழிக்கவுங்கூடாமற் போயின. அநந்தனுடைய திருமேனியில் மாத்திரம் புற்றில்நுழைகின்ற பாம்பைப்போல நுழைந்தன. அப்போது இளையபெருமாள் விஷத்துக்கொப்பான இந்திரசித் தரித்துக்கொண்டிருக்கின்ற கவசமானது சின்னபின்னப்பட்டுப் போகும்படி அநேககூர்மையான பாணங்களைப்பிரயோகித்தார். அதைக்கண்ட இந்திரசித்து தன்தேகமெல்லாம் சல்லடைக் கண்கள்போலத்தொளைக்கப்பட்டதனுற் கண்களில் அக்கினிப்பொறிபறக்கத் தக்கதாகக் கோபித்தெய்தின பாணங்கள் இளையபெருமான்மேற் படாமல் ஆகாசமார்க்கத்திலேயே ஓய்ந்துபோகிறதைக்கண்டு தேவர்கள் சந்தோஷத்தினாலே ஒருதோள் ஆயிரந்தோள்களாகப்பூரித்தார்கள்.

அதைப்பார்த்த இந்திரசித்து இனிசாயகங்களை வில்லால் ஜெயிக்கிறதற்கு முடியாதென்பதை யறிந்து, பிரம்மாவின் புத்திரரும் தனது பாட்டனுமாகிய புலஸ்தியப் பிரம்மாவினிடத்தில் வாங்கினதும் சூரியனுக்கீடான பிரகாசமுள்ளதுமாயிருக்கின்ற ஒரு வேலாயுதத்தை யெடுத்து, அதிவேகத்துடனே வல்லமைகொண்டு மேகத்துக்கொப்பாக வீசியெறிந்தான். அந்தவேலாயுதமானது அதிகசாஜ்ஜ்வல்யமாய் வெளிப்பட்டது. அதை இளையபெருமாள் கடாக்ஷித்து, சப்தரிஷிகளுடைய சொல்லைப்பார்க்கிலும் வல்லமையுள்ளதான ஒரு அக்கினிமுகபாணத்தினாலே இரண்டுதுண்டாக முறிபட்டுவிழும்படிச் செய்து பின்னுமனேகபாணங்களைப் பிரயோகித்தார். அவைகள் ஆணியறைந்ததுபோல இந்திரசித்துவின் தேகமெல்லாம் ஆயிரமாயிரமாய் அழுந்து புண்படுத்தி, இரத்தவெள்ளம் பூமியில் வழிந்தோடச் செய்தன. இந்திரசித்துவின் கைகள் பாணங்களை யெடுக்கிறதற்குப் போகிறதைக்கண்ட சூரியவம்சோத்பவரான இளையபெருமாள் சிலபாணங்களைப் பிரயோகித்து, அவன் முதுகிற்கட்டியிருந்த அம்பறாத்தூணியையும், அதிலுள்ள அம்புகளையும், துண்டுதுண்டாகும்படி அறுத்தெறிந்து, இவனுக்குத் தேரிருக்குமானால் இவன்பலங்குறையாது. பாணங்களால் குதிரைகளும் இறக்கமாட்டா. அலங்கரித்திருக்கின்ற மணிவடங்கள் துணிபடமாட்டா. இந்தத்தேர் மிகவுஞ்சிறப்பான நிலைமையுடையதென்று தெரிந்து ஒருபாணத்தைப் பிரயோகஞ்செய்து, சாரதியினுடைய மலைபோன்ற தலையை யறுத்துப் பூமியிலுருட்டிவிட்டார்.

அப்போது இந்திரசித்தினுடைய தேரானது ஒருவருஞ் செலுத்துதற்கில்லாமல், நலஞ்செய்யாது பஞ்சேந்திரிய விஷயங்களில் விழப்புண்டு வருந்

தப்பமிறைவனுடைய மனதைப்போலவும், மேனியை மினுக்கிக் காமத்தை விலைப்படுத்தித் தந்திரத்தாற் பொய்மையை மெய்போற் காட்டுகின்ற வேசைகளினுடைய கற்பைப்போலவும், பலவழிப்பட்டு ஓடத்தொடங்கியது. அதைக்கண்ட இந்திரசித்து அந்தக்குதிரைகளின் இஷ்டப்படித் தானே செலுத்திக்கொண்டு, தன்தேகத்தையே அம்பறாத்தூணியாக வைத்து, அதிற்பதிந்திருக்கின்ற அம்புகளைப் பறித்தே இளையபெருமாள்மீதும் — அநுமான்மீதும் — மற்ற வானரங்கள் மீதும் — அநேகமாகப் பிரயோகஞ்செய்து, தேவர்களெல்லாம் நடுங்கத்தக்கதாக அட்டகாசஞ்செய்தான். அப்போது தேவர்கள் வீரரென்று சொல்லப்பட்டவர்களுக்கெல்லாம் முதன்மையாகநிற்கிற வீரனுக்குமிவன். வீரர்களுடைய தன்மை இவனொருவனிடத்திலேதானிருக்கின்றது. சூரரென்று சொல்லப்பட்டவர்கள் மரணமாகிற காலத்திலும் தங்களறிவு மயங்கமாட்டார்கள். இவ்விரண்டுபேர்தான் இவ்வீரரென்னத்தக்கவர்கள், என்று தெய்வீகமாகிய கற்பகப் புஷ்பங்களை வருஷித்தார்கள். அப்போது இளையபெருமாள் அவன் செய்கையைப் பார்த்து, இவனே தன்மீதுபாய்ந்திருக்கின்ற அம்புகளையே பறித்து நம்மீது எய்கின்றான். அப்படியெய்வதிற் கையுந்தடுமாறவில்லை, மனமும் உயிரைப்போலக் கலங்கவில்லை. தேகத்திற் கோடிகோடியாக அம்புகளைப் பிரயோகிக்கவும் கொஞ்சமேனுங் கண்சிமிட்டவுமில்லை. இவன்மாண்டுபோனாலிவனோடே ஆண்பிள்ளைத்தனமும் போய்விடுமென்று அவன் சாமர்த்தியத்திற்கு மெச்சினார்.

இலட்சுமணரும் விபீஷணரும் இந்திரசித்து இறக்கவேண்டியதைப்பற்றிச் சில வாலோசித்தல்.

கவி.

தேரினைக்கடாவிவானிற் செல்லினுஞ்செல்லுஞ் செய்யும்
போரினைக்கடந்துமாயம் புணர்க்கினும்புணர்க்கும்போய்க்
சாரினைக்கடந்தும்வஞ்சங் கருதினுங்கருதுங்காண்டி
வீரமெய்ப்பகலினல்லால் வீகிலனருளின்வெய்யோன்.

அப்போது விபீஷணாழ்வான் இளையபெருமாளை வணங்கி, ஸ்வாமி! இவன் தேரைச் செலுத்திக்கொண்டு ஆகாசத்தில் மறைந்துபோனாலும் போவான். செய்துகொண்டிருக்கின்ற யுத்தத்தினைவிட்டு ஏதாவது மாயஞ் செய்தாலும் செய்வான். மேகத்தில் மறைந்து வஞ்சனைசெய்தாலுஞ் செய்வான். இவன் பகற்காலத்திலல்லாமல் இராத்திரியிலிவன் மாளமாட்டான் என்று விண்ணப்பம் பண்ணிக்கொண்டார். இலங்காதிபதியான இராவணசகோதரரிப்படிச்சொல்லக்கேட்ட இராமாநுஜர், அவனிதோ சாகப்போகிறானேயல்லாமல் இனியெங்கே தப்பிப்போவான். அவனெங்கே போனாலும் என்பாணமும் அங்கே போகுமல்லவா? இவன், பலமெல்லா மொடுங்கிப்போனான். இனித்தாமசமில்லை. இப்போதே நாமிவனை வெற்றிகொள்ளலாம். என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது இந்திரஜித்தானவன் விரதத்தைப்போலச்

செக்கர்நிறமானது திசையெல்லாம் படரும்படியாய், அவன் தேகத்திற் பதிந்திருக்கின்ற அம்பைப்போல நெருங்கிய ஆயிரங்கிரணங்களை வீசிப் பிரகாசிக்கின்ற தேரில்தோன்றுகின்ற சிறப்புடனே, அவ்விந்திரஜித்து ஆகாசத்தில் மறைந்து தூரநின்றாற்போலச் சூரியன் உதயமானான். அக்கால் உலகத்தில் யாவரும் சந்தோஷித்தார்கள் பொழுதும் விடிந்தது. சூரியனும் விளக்கைப்போலமேலே பிரகாசித்தான். இனிராக்ஷசர்களாகிய இருள் மாண்டுபோய்விடும். மாயமெல்லாங் குறைந்து வலியுங்கெட்டு இந்திரஜித்து இனி மரணமடைந்துவிடுவான். என்று தேவர்கள் சுவர்க்கமெல்லா நிறையும்படி. கல்லென்று ஆரவாரித்தார்கள்.

அப்போ தினிவினையும் வினைவையறிந்த விபீஷணாழ்வான் இலட்சுமணரைப்பார்த்து, ஸ்வாமி! கூர்மைமழுங்காத சூலாயுதத்தையுடைய சங்கரமூர்த்தியானவர் கிருபைசெய்து கொடுத்த இந்தத்தேரழியாதவரையிலும், இவன்பிடித்திருக்கின்ற வில் முறியாதவரையிலும், இவன் மரணமாகமாட்டான். இது சத்தியமாகுமென்று சொன்னார். அதைக்கேட்ட இளையபெருமாள் நீர் சொல்வதெல்லாம் நிச்சயந்தானென்றுகூறி, இந்தப் பச்சைக் குதிரைகளும் — கொடி-குடை-மொட்டு-கொடிஞ்சை-தட்டு - சக்கரத்தோடு அச்சுமுதலாகிய பலவுறுப்புகளுடன்கூடிய தேரும் — இலேசிலொழிய மாட்டாதென்பதைத் திருவுளத்தில் நினைத்து, வில்வித்தைக் காசாரியரான அந்த ஸ்ரீராமாநுஜர் தமதுவல்லமையினால் அந்தத்தேரின் ஆணிகளை வேறுபடுத்தி, அச்சுவேறு சக்கரம்வேறாகக் கழலும்படிச் செய்துவிட்டார். அப்படித் தேர்த்தட்டுவிலகிக் கீழேவிழுந்தவுடனே அதிற்கட்டியிருந்த குதிரைகளெல்லாம் எவ்வாறாயினவென்றால், ஒருமரமானது கோடரியால் வெட்டுண்டு கிளைவேறு முதல்வேறாகி விழுந்தபோது அதில் வாழ்ந்திருந்த பக்ஷிகளெல்லாம் பலவிதப்பட்டுப் பறந்துபோவது போலப் பலவாறாக ஓட்டம்பிடித்தன. அப்படியழிந்த தேர்த்தட்டிலிருந்த இந்திரசித்து அங்கிருந்த ஆயுதங்களையெல்லாம் வாரிவாரி இளையபெருமாள்மீது வீசியெறிந்தான். அவைகளையெல்லாம் ஸ்ரீராமாநுஜர் தம்முடைய திவ்யபாணங்களால் துண்டு துண்டாக்கிவிட்டார்.

உடனேயவன் ஆகாசத்திற்பாய்ந்து மூன்றுலோகங்களும் கிழிபட்டுப் போகும்படியாகக் கர்ச்சித்தான். அப்போது அவனையொருவரும் பார்க்கவில்லை. அவன் கர்ச்சனைமாத்திரம் கேட்டார்கள். அப்படிக்கர்ச்சித்த மல்லயுத்தத்தில் தேர்ந்த தோள்களையுடைய இந்திரசித்து தான்பெற்ற வரத்தின் வல்லமையினாலே ஆகாசத்திலிருந்து மலைகளை வருஷித்தான். அப்போது வானரவீரர்கள் ஓடிப்போவதற்குத் திக்குத்திசை தெரியாதபடியினால் தலைகளும் உடல்களும் நசுங்கிப் பூமியில் விழுந்தார்கள். அக்காலெங்கேபார்த்தாலும் சிலாவருஷமேயல்லாமல் வேறொன்றுங் காணப்படவில்லை. இந்திரசித்தோவா ஆகாசத்தில் மறைந்து காணப்படாதிருந்தபடியினாலே, இளையபெருமாள் சாஸ்திரக்குகளிறு நிறைந்துநின்ற ஆச்சரியசெய்திதான

ஸ்ரீமகாவிஷ்ணுவின்வடிவத்துக்கொப்பாகத்திவ்வியபாணங்களை ஓயாமற் பிரயோகித்துக்கொண்டிருந்தார். அந்தப்பாணங்களெல்லாத்திக்குகளிலு நிறையவே யுத்தஞ்செய்யும் வல்லமையிழந்து கறுத்த மேகங்களின் கூட்டத்துக்கு மத்தியில் இரத்த மேகமான திருப்பதுபோல் நின்ற இந்திரசித்துவி னுருவத்தை உலோகமெல்லா நிறைந்திருக்கின்ற சர்வவியாபகமூர்த்தியான இளைய பெருமாள் பார்த்து இது செய்வாரானார்.

இந்திரசித்துவின் விற்பிடித்த கையை இலட்சுமணர் தறித்துத் தள்ளுதல்.

கலி.

நிலையறுதெனினு மற்றத் தின்னலியோன்றிரண்டதோளும்
மலையறுதொறியாதென்று வரிசிலையோன்றுவாங்கிக்
கலையறுத்திங்களன்ன கூரியான்கையைக்கொய்தான்
விலையறுமணிப்பூணோடும் வில்லொடுநிலத்துவீழ.

இவன்கையிற்பிடித்திருக்கின்றவில்முறியமாட்டாதேபோனாலும் போகுக. இவனுடையகையை யறுத்துத் தள்ள விட்டால் இந்தச்சண்டை முடியாது, என்று திருவுளங்கொண்டு தம்முடைய வில்லைவளைத்து அதிற் சோடசகலைகளோடுங்கூடிய சந்திரனுக்கொப்பாகிய ஒளியுள்ள அர்த்தசந்திரபாணத்தைப் பூட்டி, விலையுயர்ந்த ரத்னாபரணங்களைத் தரித்த அவனுடைய கையானது பூமியில் விழும்படிப் பிரயோகித்தார்.

அம்பாத்திரத்தில் அவன் விற்பிடித்திருந்தகையானது அமோகமான பெருங்காற்றடித்தபோது பிரளயகாலமேகமானது ஆகாசத்திற்போட்ட பச்சைவில்லுடனே கீழேவிழுந்ததுபோல விழுந்தது. பூமியைச் சுமந்துகொண்டிருக்கின்ற கார்க்கோடக சர்ப்பமானது தன்வாயினாற் சந்திரனைக் கடித்துக்கொண்டிருக்கின்றது போல விரல்களழுந்தப் பிடித்திருக்கின்ற வில்லுடனேகூட வீரபுருஷனாகிய இந்திரசித்துவின் இடதுகையானது கீழேவிழுந்து, மரங்களு மலைகளும் பொடியாகவும் குரங்குகள் நசுங்கிப்போகவுந் துடித்தது. அப்போது அந்தர மார்க்கத்தில் நின்று பார்த்துக்கொண்டிருந்த தேவர்களெல்லாம் திப்பிரமைகொண்டு, இந்திரசித்துவின்கையானது சூரியன் நடுங்கும்படியாகவும், சந்திரன் பயப்படும்படியாகவும், மேருமலை சிதறிவிழும்படியாகவும், ஒருநொடிப்போதில் அறுந்துவிழுந்துவிட்டதே: வாழ்நாளிப்படியிருக்க இந்தச் சூத்திரத்துக்கொப்பான ஜீவவாழ்க்கையைச் சிலபேர் இச்சிக்கின்ற தென்னகாரணமென்று ஆச்சரியப்பட்டார்கள். தர்மதேவதைக்கொப்பானபுண்ணியபலத்தையுடைய இலட்சுமணப்பெருமாள்விடுத்த அம்பினாலே இராவணகுமாரனுடைய வச்சிரத்தையொத்தகையானது அறுந்ததைப் பார்த்துஇராக்ஷசர்களெல்லாம் தங்கள்தலைகள் அறுந்தாற்போலப்பயந்தார்கள்.

இப்படி இந்திரசித்துவின் கையற்றவுடனே வானரக்கூட்டங்கள் ஆரவாரித்து, மின்னலைப்போன்ற வக்கிரதந்தங்களையுடைய ராக்ஷசசேனைகளை யெல்லாம் திரும்பிவாராதபடி கைகளினாலும், பற்களினாலும், விருக்ஷங்களி

னாலும், பெரியமலைகளினாலும், வீரசுவர்க்கலோகத்திற்குப் புறக்குடியேற்றி விட்டார்கள். இவர்கள்செய்தி யிப்படியிருக்க - கார்கால மேகத்தைப் போலக் கறுத்தநிறத்தையுடையவனான இந்திரசித்து செவந்ததிருமேனியுங் காளகண்டமுமுடைய ருத்திரமூர்த்தி யிருந்தநிலையுடனே கொடுக்கப் பெற்றுக்கொண்ட சூலாயுதத்தை யெடுத்தெறியும்படியாக எண்ணங்கொண்டு, இளையபெருமாளுக்கு முன்னே வந்துநின்று, இந்தச்சூலாயுதத்தினாலே உன்னைக்கொன்றுவிட்டல்லாமல் நானிறக்கப்போகிறதில்லையென்று சொன்னான்.

இலட்சுமணர் இந்திரசித்துவின் தலையைக்கண்டித்துப் பூமியில்விழச் செய்தல்

கலி.

மறைசனைதேறத்தக்க வேதியர்வணங்கற்பால
இறையவன்ராமனென்னு நல்லறமூர்த்தியென்னின்
பிறையெயிற்றிவனைக்கோறி யென்றொருபிறைவாய்வாளி
நிறையுறவாங்கிவிட்டா னுலகெலாநிறுத்திநின்றான்.

செயிருக்குலிசவேலு நெற்றியினெருப்புக்கண்ணன்
நாமவேலுமற்றை நான்முகன் படையுநாணத்
தீமுகக்கதுவவோடிச் சென்றவன்சிரத்தைத்தள்ளிப்
பூமழைமாரிசிந்தப் பொலிந்ததப்பகழிப்புத்தேள்.

இப்படிச் சண்டமாருதக் காற்றைப்போலவும், இடியைப் போலவும், வடவாமுகாக்கினியைப்போலவும், ஊழிக்காலத்தில்வந்த யமனுடைய உருவத்தைப்போலவும் — கொல்லுகிறேனென்று வாயாற்சொல்லிக்கொண்டு வருகின்ற இந்திரசித்துவை அயோத்தியாபுரியின் மகாராஜாவான ஸ்ரீராமச்சந்திரருக்குத் திருத்தம்பியாராகிய தர்மஸ்வரூபமென்னும் இளையபெருமாள் பார்த்து, இனியிவனைத் தலையறுக்க வேண்டியகாலஞ் சமீபித்து விட்டதென்று நினைத்து, வேதங்களெல்லாங் கரைகண்ட மகாரிஷிகளாலே வணங்கும்படியான ஸ்ரீயப்பதியே இந்தஸ்ரீராமனென்று சொல்லத்தக்க தர்மஸ்வரூபியாயிருப்பாரானால்; இந்த வக்கிரதந்தங்களையுடைய இராக்ஷசனைக் கொல்லக்கடவதென்று ஒருஅர்த்தசந்திர பாணத்தை வில்லிற்பூட்டி ஆகர்ணபரியந்தமாக இழுத்து விட்டுவிட்டார்.

அம்பாத்திரத்திலந்த அர்த்தசந்திர பாணமானது விஷ்ணுவின்சக்கராயுதமும், இந்திரனுடைய வச்சிராயுதமும், நெற்றியில் நெருப்புக்கண்ணையுடையவருடைய பாசுபதாஸ்திரமும், பிரம்மாஸ்திரமுந்தோற்றுப்போகத்தக்கதாக அக்கினியைக் கக்கிக்கொண்டுபோய், இந்திரசித்துவினுடைய தலையை அறுத்தெறிந்து பூமியிற்றள்ளித்தேவர்கள் கற்பகப்பூமாரி பெய்யத்தக்கதாகப் பிரகாசித்தது. அந்தத்தலையானது உயரவெழும்பி ஆகாசத்தைப்போய் முட்டுகிறதற்கு முன்பாக இந்திரசித்துவினுடைய முண்டமா

னது பிடித்த சூலத்துடனும், உடலில் தைத்திருக்கின்ற பாணங்களுடனும், சண்டமாருதத்தால் அடியுண்ட மேகமாய்த்து மின்னலுடனும், இடியுடனும், நிலத்தில் விழுந்ததுபோல விழுந்தது. ஆகாசத்திற் பிரகாசிக்கின்ற இரண்டு சந்திரர்களைப்போல் மின்னுகின்ற இரண்டு குண்டலங்களுடனேயும், கருண்ட தலைமயிருடனேயும், செவந்த கண்களுடனேயும், சூரியன்தன் மண்டலத்தோடுவிழுந்து பூமியில் விழுந்ததுபோல இந்திரசித்துவினுடைய தலையானது நிலத்தில்வந்து விழுந்தது. அவனுக்குயிர்போனகாலத்தில் உடலை யிருந்த உணர்வும், இந்திரியங்களும், அந்தக்கரணங்களும், சிதறுண்டு போனதுபோல, கூர்மையானபற்களையுடைய இராக்ஷசர்கள் தங்கள் தலைவனிறந்தவுடனே போர்க்களத்தி லிருக்கச் சக்தியற்றவர்களாய்த் தங்களாயுதங்களை விட்டோடிநின்று மிகுந்த பிராகாரத்தையுடைய இலங்காபட்டணத்தை நோக்கி ஓட்டம்பிடித்தார்கள்.

இப்படிவில்வீரர்களுக்குள்ளே அதிகவீரனுடனே இந்திரசித்துஇறந்த மாத்திரத்தில், இனி ராவணனுக்கு இலங்காதிபத்தியஞ் செல்லமாட்டாதென்கிற சந்தோஷத்தினாலே தேவர்களெல்லாம் உடுத்திருந்த வஸ்திரத்தைக் களைந்து மேலேயெறிந்து ஆரவாரித்தார்கள். அப்போதந்தத் தேவர்களெல்லாம் கொள்ளை விரதிகளான சமணர்களுடைய திருவான தேவஸ்தானங்களை யொத்திருந்தார்கள். அக்கால்தேவேந்திரன் முதலான எல்லாத்தேவர்களுந் தாங்கள் மறையாமல் மிகுந்த கிருபையுடையவர்களாய்ப் பூலோகத்தாருக்கெல்லாந் தெரியும்படியாகத் தரிசனையானார்கள். அவர்களுடைய திவ்யதேகங்களை வானரர்களெல்லாம் தங்கள் கண்களாரக் கண்டார்கள். தர்மத்தில் நிலைத்து நிற்கின்றவர்களுக்கு அழிவென்பதொருகாலு மில்லையென்கிற பெரியோர் வார்த்தை சிறப்படைந்தது. இராக்ஷசர்களுடைய பாணங்கள் பாய்ந்ததினாலே மாண்டு கடலைப்போற் கிடந்த வானரப்பிரேதங்களெல்லாந் தேவர்களுடைய ஆசீர்வாதத்தால் உயிர்பெற்றெழுந்தன.

அங்கதகுமாரன் இந்திரசித்துவின் தலையைத்தூக்கிக்கொண்டுவர
இலட்சுமணர் ஆஞ்சநேயர்மீ தாரோகணித்து ஸ்ரீராமபிரான்சந்நிதிக்கெழுந்தருள
அவர் சந்தோஷித்தல்.

கலி.

ஆக்கையினின் றுவீழ்ந்த வரக்கன்றன் றலையையங்கை
தூக்கினனுன்னக்கூர்த்த வாலிசேய்துதுசெல்ல
மேக்குயர்த்தமரர்வெள்ள மன்னினர்தொடர்த்துவீசும்
பூக்கிளர்பந்தர்நீழ லனுமன்மே லிளவல்போனான்.

அப்போது தேகத்தைவிட்டு மாண்ட இந்திரஜித்துவின் தலையை மிகுந்த சந்தோஷத்துடனே வாலிகுமாரனான அங்கதகுமாரன் கையில்தூக்கிக்கொண்டு முன்னேபோனான். தேவர்கள் வாரிவாரி இறைக்கின்ற புஷ்பப்பந்தலுக்குள்ளாக ஆஞ்சநேயர்மீது இளையபெருமாளெழுந்தருளினார். அக்கால்

ஸ்ரீராமமூர்த்தியானவர் பூரித்ததோள்களை யுடையவரும், எங்குநிறைந்த புகழையுடையவரும், அதிக சந்தோஷமுட்கொண்ட திருவுள்ளத்தை யுடையவருமாகி, தேவர்கள் நிமித்தமாகப் பாற்கடலைக்கடைந்தவாலியின் புத்திரனாகிய அங்கதன் தூக்கிக்கொண்டு வருகின்ற இந்திரஜித்துவின் தலையைக் கண்டு, இராத்திரிகால சந்திரனிடத்திலுண்டான களங்கத்தைப்போல எனக்குண்டான பழியானது போகமாட்டாதென்றுபுலம்பிக்கொண்டிருந்தேன். இப்படிப்பட்ட வெனக்குத் தர்மதேவதை கிருபைசெய்தபடியினாலே இப்போது அந்தத்துன்பம் நீங்கிவிட்டேன். இதைக்காட்டிலும் செல்வம் வேறே பெறப் போகின்றேனோ? இனி எனக்கென்னகுறை? என்று தமக்குள்தாமே சந்தோஷித்து அவ்வங்கதகுமாரனைப் பார்த்துச்சொல்லுகின்றார்.

ஓ வானராதிபதியே! தென்றிசையிற் கடல்சூழ்ந்த இவ்விலங்கையைக் காத்துக்கொண்டிருக்கின்ற அற்பத்திருட்டுப்பயலான இராவணன்பெற்ற பிள்ளையென்னும் இந்திரசித்துவை இலட்சுமணன் கொல்ல, அவனுடைய தலையையெடுத்துக்கொண்டு நீ முன்னே வந்தபடியினாலே இனிநான் தலையெடுத்துப்போனேன். சத்துருபதியு மாய்விட்டேன். தேவர்களெல்லாம் தலையெடுக்கும்படியாகவும், சமுத்திரஞ்சூழ்ந்த பூலோகத்தாரெல்லாம் பிழைக்கும்படியாகவும், தேவேந்திரன் பெருமையடையும்படியாகவும், வேதபுருஷன் விருத்தியடையும்படியாகவும் ஆச்சுது. எப்போதுந் தேன் துளித்துக்கொண்டு வாடாமலிருக்கின்ற வெற்றிமாலையை யணிந்த அங்கதகுமாரா! தேவர்களையெல்லாஞ் ஜெயித்த இவ்விந்திரஜித்துவின் மாயிசமுள்ள தலையை நீ கையினாலே தூக்கினாய்: ஆ! ஆ! மகா அற்புதம்: என்று சந்தோஷங்கொண்டாடினார்.

அன்றையும் முன்னே இளையபெருமாள் போனது முதற்கொண்டு புத்திமயங்கி எழுந்தருளியிருக்கின்றவரும், அதிகமாயமே தன் ஸ்வரூபமாகக் கொண்டிருக்கின்ற இந்த ராக்ஷசனைச் சத்தியமே ஜெயஞ்செய்து தர்மமே ரக்ஷிக்கவேண்டுமென்று விரதங்கொண்டிருக்கின்றவருமாகிய ஸ்ரீரகுநந்தனர்; தம்முடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற பரதாழ்வாரைப்போலப் பக்தியையுடையவரான இளையபெருமாள் வருகின்ற விதத்தைக் கடாக்ஷித்தார். அக்கால் துஷ்டேந்திரியங்களை நசித்தவராய்த் திரும்பிவருகின்ற தம்முடைய திருத்தம்பியார்மேல் வைத்த திருக்கண்களாகிய தாமரையினிடத்தில் கண்ணீரானது தாரைதாரையாக வடிந்தது. அந்தக்கண்ணீர் அன்பின் கண்ணீரோ? அமுதகண்ணீரோ? ஆநந்தசமுத்திரமோ? எலும்புகளெல்லாம் உருகி வெளிப்பட்டுவருகிறதிருபாவாரியோ? அதை இன்னதென்று நிச்சயித்துச் சொல்லுகிறதற்கு யார்தராமாகும்?

இந்திரசித்துவின் தலையை ஸ்ரீராமர் பாதத்தில் காணிக்கையாகவைத்து
இலட்சுமணர் வணங்க சுவாமி சந்தோஷித்தல்.

கலி.

விழுந்திழிகண்ணினீரு முலைதையுங்கவிப்பமவீங்க
எழுந்தெதிர்வந்தவீர னிணையடிமுன்னரிட்டான்

கொழுந்தெழுஞ்செக்கர்க்கற்றைக் குழாங்கொளவெயிற்றினீட்டம்
அழுந்துறவடித்தபேய்வாய்த் தலையடியிறையொன்ருக.

அப்படி யெழுந்தருளி வருகின்ற இளையபெருமானானவர் ஸ்ரீசக்கரவர்த்தித் திருக்குமாரர் திருவடித் தாமரைகளில் தம்முடைய திருக்கண்களில்வடிகிற நீரும், சந்தோஷமும், எக்களிப்பும், அதிகரிக்கும்படியாகத் தெண்டனிட்டு; செம்பட்டை மயிர்க்கற்றைகளையுடையதும், பிரகாசிக்கின்ற வக்கிரதந்தங்களழுந்தும்படியாக உதட்டை மடித்ததும், பிலத்துவாரத்தையுடையதுமான இந்திரஜித்தினுடைய தலையை ஸ்ரீ பாதகாணிக்கையாகச் சமர்ப்பித்தார். அப்போது ஸ்வாமியானவர் தமது திருவடியில் இளையபெருமான் வைத்த அந்தத் தலையைப் பார்ப்பார், தமது திருத்தம்பியாருடைய விரலட்சுமி எழுந்தருளியிருக்கின்ற திருத்தோள்களைக் கடாக்ஷிப்பார். எதிரேசேவித்துக்கொண் டிருக்கின்ற வாயுபுத்திரரைக் கடாக்ஷிப்பார். இளையபெருமானுடைய திருக்கரத்தி லிருக்கின்ற வில்லைக் கடாக்ஷிப்பார். தேவர்கள் நாணத்திக்கின்றதைக் கடாக்ஷிப்பார். இளையபெருமான் இந்திரஜித்தைச் சம்ஹரித்த கொலையைத் திருவுள்ளத்தில் நினைப்பார். பிறகு மிகுந்த ஆநந்தத்தால் ஒன்றும் பேசாமலெழுந்தருளித் தமது திருவடித்தாமரைகளில் தெண்டன் சமர்ப்பித்துக்கொண் டிருக்கின்ற இளைய பெருமானுடைய திருமேனியை, அதில் தைத்த அம்புகளின்வழியா யொழுகுகின்ற இரத்தங்கள் காளமேகத்திற் செவ்வான கிறங் கலந்ததுபோலவும், கருமாணிக்க மலையின்மீது சூரியோதய மானது போலவும், தமது திருமேனியில் தோயும்படியாக வாரித்தழுவி, அத்திருத்தம்பியாரைக் கடாக்ஷித்து இதனைச் சொல்லுகின்றார்.

கவி.

கம்பமதத்துக் களியானைக் காவற்சனகன் பெற்றெடுத்த
கொம்புமென்பாலினிவந்து குறுகிற்றன்றென் றெண்ணினேன்
வம்புசெறிந்தமலர்க்கோயில் மறையோன்படைத்த மாநிலத்திற்
றம்பி யுடையான் பகையஞ்சா னென்னுமாற்றந் தந்தனையால்.

அப்பா தம்பி! கொட்டாரத்திற் கட்டியிருக்கின்ற மத்தகஜங்களை நித்தியம் காவல்காக்கத் தக்கதாக இராஜ்யாதிகாரஞ் செலுத்தும்ஜனகமஹாராஜன்தனது தபோபலத்தாற் பெற்றெடுத்த சீதையும், இனியென்னிடம் வந்து சேர்ந்ததுபோலச் சந்தோஷமடைந்தேன். வாசனை பொருந்திய மூலதாமரைப் புஷ்பத்தி லெழுந்தருளி யிருக்கின்ற பிரஹ்மாவினாலே சிருஷ்டிக்கப்பட்ட இந்தப் பூலோகத்திலே தம்பியையுடையவர்கள் பகைக்கஞ்சமாட்டார்க ளென்கிற ஆப்தவாக்கியத்தை நீயே திருஷ்டாந்தப்படுத்தினாய், என்று திருவாய்மலர்ந்தருளி, இளையபெருமான் திருத்தோளிற்கட்டிக் கொண்டிருந்த அம்பறாத் தூணியை அவிழ்த்திறக்கி, திருத்தோளும் திருமார்புமறையவணிந்திருந்த கவசத்தின் தாட்பிணிப்பை விடுவித்துக் கழற்றி, உடம்பிலும் புத்தத்தில் அம்புகள் தைத்ததனு லுண்டாயிருந்த புண்களைத் தமதுதிருத்

சு. 68. இந்திரசித்தின்சரீரத்தின்மேல்மண்டோதரிவிழுந்தழுகையில் இராவணன் சீதையைவெட்டவேனென்றெழ மகோதரன் தடுத்தல்.

இராவணன்மூலபலச்சேனையைவரவழைத்துக்காணுகையில்மாலியவானால் அந்தசேனைவீரர்கள் இராமலட்சுமணர்களைத் தெரிவித்தல்.

தோள்களாற் பலதரம் ஒற்றி ஆறுதல்படச்செய்து, திருத்தம்பியாருடைய திருமுகத்தைக் கடாக்ஷித்து, அப்பா புருஷோத்தமனே இப்போது நீ யடைந்த இந்த வெற்றி உன்னுடையதுமல்ல. மிகுந்த பலமுள்ள அநுமானென்று நாமதேயமுள்ள நம்முடைய சிநேகனுடையதுமல்ல, வேறே பெருந்தேவ வரப் பிரசாதத்தினுடையதுமல்ல. இந்த விபீஷணனாலாம் சம்பாதித்த தாக்கும், என்று புகழ்ந்து சொல்லிவிட்டுச் சந்தோஷமாக ஸ்ரீசக்கரவர்த்தித் திருக்குமாரரெழுந்தருளி யிருந்தார்.

இந்திரஜித்து வதைப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

இருபத்தெட்டாவது,

இராவணன்சோகப்படலம்.

இப்படலத்தில் சிலதூதர்கள் இலங்கையிலோடி இந்திரஜித்துவின் மரணத்தை இராவணனுக்கு அறிவித்தமாத்திரத்தில் அவன் வெகுவாய்த் துக்கித்தெழுந்து இரணக்களம்வந்து ஒருகை யறுபட்டுத் தரையிலிழுந்துகிடக்கும் அவன்தேகத்தை யெடுத்து நகரத்துக்கொண்டுவர, அதுகண்ட மண்டோதரியானவள் சகிக்கமாட்டாத வியசனத்தோடு தன்பிள்ளைமேல் விழுந்தழ, இத்தனைக்கும் காரணமாகிய சீதையை இனி வெட்டுவதே சரியென்று கையில் வாளேந்தி யெழுந்த இராவணனை மகோதரன் அலைத்தடுத்து நிறுத்துதல் சொல்லப்படுகின்றது.

இந்திரசித்துவின் மரணத்தைத் தூதுவர்கள் இராவணனுக்கு அறிவித்தல்.

கலி.

தூதரோதன வேலைகடந்தாராய்ப்
பூதரோதரம் புக்கெனப்போர்த்திழி
சீதரோதக் குருதித்திரையொரீஇத்
ஆதரோதவெங் காவிற்புகுந்தனார்,

இவ்வண்ணம் நடந்தவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த தூதுவர்கள், இந்திரசித்துவானவன் இளையபெருமாளால் கொல்லுண்ட சங்கதியைச் சொல்லும்படி யுத்தகளத்தில் இறந்தவர்களைப்பற்றி அழுகின்ற வெகுராட்சசப்பிரஜைகளாகிய சமுத்திரத்தைக் கடந்து, ஒருவரை யொருவர் கடாய்ந்துசென்று அப்போர்க்களமெங்கும் வழிவிடையாது சுற்றிச்சுற்றி, சோரநீரையால் தேகத்திலிருந்து வெளிப்பட்டு காற்றினுல் வெம்மை நீங்கித் தண்மையையடைந்த இரத்தக்கடலையும் கடந்து பொன்மதிலினது வெற்றியுடைய புருஷார்த்தேபோல இலங்கையின் கோபுரவாயிலாய் நீர்ச்சார்த்தைப்போல விரைந்

கோடினார்கள், கறுத்த அன்றிற் பெட்டைகளைப்போல இராக்ஷசஸ்திரீகள் அவரவர்கள் வீட்டுத்தெருமுற்றங்களிற் கூட்டங்கூட்டங்களாய் நின்று இன்றையோடு இலங்கை அழிந்துபோய் விட்டதென்று அழுதுகொண்டிருந்த இராவணனுடைய கொலுமண்டபத்திற்குச் சென்றனர்கள்.

கவி.

பல்லும்வாயு மனமுந்தம்பாதமும்
நல்லுயிர்ப்பொறை யோடுநடுங்குவார்
இல்லையாயின னுன்மகனின்றெனச்
சொல்லினர்பயஞ் சுற்றத்துழங்குவார்.

அவ்வண்ணம் சென்றதூதுவர்கள் தங்கள் வாய்களோடு பற்களும், நடந்துவந்தபாதங்களும், உயிருமனமுநடுங்கும்படி நின்றுசொல்லுகின்றார். ஐயா இராவணேஸ்வரா ! உம்முடைய ஜேஷ்டகுமாரனாகிய இந்திரஜித்து இன்றையதினமுதல் இப்பூமியிலில்லாமற் போய்விட்டார். என்று மிகுந்தபயத்துடனே சொன்னார்கள். அதைக் கேட்டமாத்திரத்தில் பக்கத்தில் நின்றிருந்த தேவர்களும், மஹாரிஷிகளும், நிர்த்தம் பண்ணிக்கொண்டிருந்த அரம்பை ஊர்வசி முதலானபேர்களும், இன்றைக்கு லோகம் அழிந்துவிடுமென்று துக்கத்துடனே நாலாபக்கங்களிலுமோடி யொளித்துக் கொண்டார்கள். இராவணன் கண்களில் நின்றும் அக்கினிபற்றி யெரியும்படிக் கோபங்கொண்டு, தன்கையில் வாளையுருவிக் கேதஞ்சொன்ன தூதுவர்களை ஒரேவீச்சாகவீசி யெறிந்துவிட்டு, இருபது கைகளும் அலைகளைப்போலச் சோர்ந்து விழும்படியாக ஒருபெருஞ் சமுத்திரம்போற் கீழேவிழுந்தான். அவன் வாயினிடத்திலிருந்து பெருமூச்சுப் புறப்பட்டது. கண்களில் அக்கினிப்பொறிகள் இவ்வுலகத்தைச் சுட்டெரிக்கத்தக்க ஊழித்தீயானது லோகமெல்லாம் பரவும்படிப் புறப்பட்டதுபோலப் புறப்பட்டன. படங்களையுடைய ஆதிசேஷனும், அந்த ஆதிசேஷனாற் சுமக்கப்பட்ட பூமியும், நிலைபெயர்ந்து கிறுகிறுவென்று சுழலும்படியாகத் தேகத்தைப் புரட்டிப்புரட்டி விஷக்கடலைப்போலக் கோஷித்து, இந்திரசித்துவைக் கொன்றுவிட்டார்களே யென்று அக்கினிக்கொப்பாக அதிகதீக்ஷணமான கோபமும், பிள்ளையினிடத்தில் வைத்திருந்த அன்பும், தோன்றும்படியாக இருபது கண்களிலும் உருக்கின செம்பைப்போல இரத்தக்கண்ணீர் ஆறுபெருக்கோடப் பற்களை மலைகளும்பொடிப்பொடியாகும்படி நெறநெறவென்று கடித்து, இடியிடித்தது போலக்கைகளை மோதிப் பெரியமலையிலிருந்து கடல்நீர் புறப்பட்டதுபோலப் பத்துவாயினுமிருந்து சொள்ளுநீர் வடியத்தக்கதாகப் புலம்பத் தொடங்கினான்..

இராவணன் இந்திரசித்திறந்தமைக்குப் புலம்பல்.

கவி.

மைந்தவோவென்று மாமகனேயெனும், எந்தையோவென்று மென்னுயிரேயெனும்
முந்தினேனுனை நானுனேனெனும், வெந்தபுண்ணிடை வேல்பட்டவெம்மையான்.

புரந்தரன்பகை போயிற்றன்றோவெனும், அரந்தையானவ ரார்த்தனரோவெனுஞ்
கரந்தைசூடியும் பாற்கடற்கள்வனும், நிரந்தரம்பகை நீங்கினரோவெனும்.

நீறுபூசிய நேமியு நீங்கினார், மாறுகுன்றொடு வேலை மறைந்துளார்
ஊறுநீங்கின ராயுவனத்திரோ, டேறுமேறிய வாவுவரென்னுமால்.

வானமானமும் வானவரீட்டமும், போனபோன திசையிடம்புக்கனர்
தானமானவை சார்கிலர்சார்குவ, தானமானுடர் வென்றிகொண்டோவெனும்.

கெட்டனாதர் கிளைத்தினவாறொரு, கட்டமானுடன் கொல்லவென்காதலன்
பட்டொழிந்தன னேயெனும்பன்முறை, விட்டழைக்கு முழைக்கும் வெதும்புமால்.

எழுமிருக்கு மிரைக்குமிரக்கமுற், றழுமரற்று மயர்க்கும்வியர்க்கும்போய்
விழும்விழிக்குங் கிடக்குந்தன்மேனியால், உழுகிலத்தை யுருளும் புரளுமால்.

ஐயனேயெனு மோர்தலையானினம், செய்யவெனையா சென்னுமங்கோர்சிரம்
வையனேனுன்னைக் காட்டிக்கொடுத்தநான், உய்வகேயென் றுரைக்குமங்கோர்சிரம்.

எழுவிற்கோல மெழுதியகைகளால், தழுவிக்கொள்கலை யென்னுமங்கோர்தலை
உழுவைப்போத்தை யுழையுயிருண்பதே, செழுவிற்சேவக னேயெனு மோர்சிரம்.

நீலங்காட்டிய கண்டனுநேமியு, மேலுங்காட்டி னெறிந்தபடையெலாம்
தோலுங்காட்டத் துரந்தனை மீண்டநின், ஓலங்காட்டிலை யோவெனுமோர்சிரம்.

நாசமாம் களத்திடைக்காண்பெனோ, பாகசாதனன் மௌலியொடும்பறித்
தோகைமாதவ ருச்சியில்வைத்தநின், வாகைநாண்மல ரென்னுமற்றோர்தலை.

சேலியற்க ணியக்கர்சந்தேவிமார், மேலினித்தவிர் கிற்பர்கொல்வீரநின்
கோலவிற்குரல் கேட்டுக்குலுங்கித்தம், தாலியைத்தொட லென்னுமற்றோர்தலை.

கூற்றமுன்னை நிர்வந்துயிர்கொள்வதோர், ஊற்றந்தானுண்டத் தன்றெனையுமொளித்
தேற்றவெவ்வுல குற்றனையெல்லையில், ஆற்றலாயென் றழைக்குமங்கோர்தலை.

இப்படியாக ராவணன் வெந்தபுண்ணில் வேல்நுழைந்ததுபோன்ற தன்மையையுடையவனாய், அப்பா பிள்ளையே! என்பான். என்னருங்குமாரனே! என்பான். என்னப்பனே! என்பான். என்னுயிரே! என்பான். உனக்குமுன்னே இதோவந்தேன் என்பான். நான் பிந்தியிருப்பனோ என்பான். தேவேந்திரனுக்குப் பகையாயிருந்தாயே; அந்தப்பகை நீங்கிவிட்டதா என்பான். துன்பப்பட்டுக்கொண் டிருந்த தேவர்கள் இப்போது ஆர்ப்பரித்தார்களோ ? என்பான். கரந்தம்பூவைத் தரித்த சிவமூர்த்தியும், பாற்கடலிற் பள்ளிகொண்டு ஒருவருக்கும் அகப்படாம லொளித்துக் கொண்டிருக்கின்ற அந்தவிஷ்ணுமூர்த்தியும், எப்போதுந் தங்களுக்குப் பகையாளிகளில்லாமல் இனிச்சுகப்பட்டார்களோ என்பான். விபூதியைப் பூசிக்கொண்டிருக்கின்றவனான சங்கரனும் - கையிற் சக்கராயுதத்தை வைத்துக்கொண்டிருக்கின்றவனான விஷ்ணுவும் - உனக்குப்பயந்து ஓடிப்போய் மலையிலும் கடலிலும் ஒளித்துக்கொண்டிருந்தவர்கள், தங்களுக் குன்னாலுண்டாயிருந்த இக்கட்டு நீங்கினவர்களாய் இனிவிருஷபத்தின் மேலும் கருடன்மீது மேறிக்கொண்டு உல்லாசமாக உலாவுவார்களல்லவா என்பான். தே

வவிமானமேறித் தேவகணங்களெல்லாம் உனக்குப்பயந்து நாலுதிக்கிலேயோடியொளித்துத் தங்களிருப்பிடத்தில் வந்துசேராமலிருந்தார்களே. அப்படிப்பட்டவர்கள் இந்த அல்பமான மனிதர்களுடைய வெற்றியினலேயா மறுபடியும் தங்கள் யதாஸ்தானம்வந்து சேரும்படியாகநேரிட்டது என்பான். இந்தப் புத்தியில்லாத அற்பத்தூதர்கள் சொன்னபடியே பெண்டிழந்து பெருந்துக்கப் பட்டுக்கொண்டிருந்த ஒருமனிதன் கொன்றதினுல், எனது ஆசைக்குமாரன் மாண்டழிந்தானே என்பான்.

ஓ இந்திரசித்தே! என்று கூப்பிட்டுக் கையுங்காலுமுதறிக்கொண்டு சோர்ந்துகிடப்பான். உட்காருவான். ஓவென்றிரைவான். இரக்கங்கொண்டழுது புலம்புவான். மூர்ச்சைபோவான். உடம்பெல்லாம் வெயர்வையடைவான். ஓடிப்போய்ப்பூமியில்விழுவான். கண்ணைவிழிப்பான். அசையாமற்கிடப்பான், தன்தேகத்தாலே பூமியைக்கிளறுவான். கடகடவென்று உருளுவான். மல்லார்ந்து குப்புறுவான். ஒருவாயாலென்னையனென்பான். வேறொருவாயாலினிநான் இராஜாங்கமுஞ் செய்வேனோ என்பான். இன்னொருவாயால் அப்பா! வஞ்சகனுகிய நான் உன்னைப் பகையாளிக்குக் காட்டிக்கொடுத்துவிட்டு நான்மாத்திரம் பிழைத்திருப்பேனோ என்பான். ஒருவாயால் சந்தனகஸ்தூரிகளாற் சித்திரமெழுதி உருக்குலஸ்தம்பத்தைப்போலிருந்த உன்கைகளினுலே என்னைக்கட்டித் தழுவாமற் போய்விட்டாயே என்பான். மற்றொருவாயால் ஆண்புலிபோன்ற உன்னுயிரை மான்குட்டிக்கொப்பான அந்த மனிதனும் வாங்குகிறதா? அப்பா தேர்த்தவில்வீரனே! என்பான். ஒருவாயால் நீலநிறத்தைக் காட்டிக்கொண்டிருக்கின்ற கண்டத்தையுடையவனுன கயிலாசபதியும், சக்கரதாரனுன விஷ்ணுவும், முன்னம் அபரிமிதமாகவெறிந்த ஆயுதங்களையெல்லாம் தோற்கடித்துத் துரத்திவிட்டாயே; அப்படி துரத்தித்திரும்பிய நீ அவர்களுக்கு உன்னுடைய வீரகர்ச்சனையை இனிக்காட்டமாட்டாயோ என்பான்.

ஒருவாயால் இந்திரனுடைய கிரீடத்தைப்பறித்த உன்விஜயத்தைக்கண்டு சந்தோஷங்கொண்ட தபசிரேஷ்டர்கள் உன்தலையின்மேல் வைத்த வெற்றிமாலையை, இப்போதுகாகங்கள் அடிக்கின்றயுத்தக்களத்திற் காண்பேனோ என்பான். ஒருவாயால் — அப்பா வீரசிகாமணியே! உன்னுடைய வில்லின் குணத்தொனியைக் கேட்டுநடுங்கிய யக்ஷர்களுடைய பெண்சாதிமார்கள், தங்கள் தாலியைக் கையிற்பிடித்துக்கொள்வதை இனி நீக்கிவிடுவார்களோ என்பான். ஒருவாயால் — அப்பா இந்திரசித்தே! இயமனும் உன்னெதிரேவந்து உன்னுயிரைக் கைப்பற்றும்படியான வல்லமையுடையவனல்லவே; ஆனதால், நீயெனக்கு ஒளிப்புக்காட்டிக்கொண்டு உனக்குவிருப்பமான எந்தலோகத்திற்போய் மறைந்திருக்கின்றாய்? அளவில்லாத பலமுடையவனுன இந்திரசித்தே! வா: வா: என்றழைப்பான்.

இராவணன் இந்திரசித்துவைக் கூவிக்கொண்டழுது யுத்தகளம் புகுதல்.

கலி.

இன்னவாறழைத் தேங்குகின்றுனெழுந்
அன்றுமாத்திரத் தோடினனூழிநாள்
பொன்னின்வானன்ன போர்க்களம்புக்கனன்
தன்மகன்றலை தாக்கையைநாடுவான்.

இந்தப்பிரகாரமாக இராவணன் புத்திரனைக் கூவிக்கொண்டழுது எழுந்திருந்து நினைக்கிறதற்குள்ளாக ஓடி, தன்னரும் புத்திரனுகிய இந்திரசித்துவின் தேகத்தைத் தேடும்படியாக ஊழிக்காலத்திற் பொன்னிறமாயிருக்கின்ற ஆகாசத்துக்கொப்பான இரணக்களத்தைவந்து சேர்ந்தான். அப்போது தேவர்கள்முதலாகிய தன்னுடைய கிங்கரர்களு மற்றெல்லோரும் அதைப் பார்த்து- ஐயோ! இந்த மூன்றுலோகங்களும், அவைகளின் மூன்றுமைகளும், இனி வெளிச்சமாய்ப் போகுமோவென்று நினைத்துப் பரிதபித்தவர்களாய்க் கூடத்தொடர்ந்து வந்தார்கள்.

இப்படி ராவணன் ரணக்களத்திற்கு வந்ததைக் கண்டமாத்திரத்தில் அங்குப் பிணங்களைத் தின்கிறதற்குவந்திருந்த பேய்களும், பக்ஷிகளும், அவனுடைய கிங்கரர்களைப்போலச் சில அழுதன. சில ராவணன்பாதத்தில் விழுந்து வெகுபரிதாபங் கொண்டவைகளைப்போலத் தொழுதன. சிலபேய்கள் பயத்தால் யானைப்பிணங்களுக் குள்ளே புகுந்து ஒளித்துக்கொண்டன. வந்தராவணன் கோடிகோடி குதிரைப்பிணக் கூட்டங்களையும், உயுத்த வெற்றியாளர்களாகிய இராக்ஷசர்களுடைய பிணங்களையும், முகபடாமணிந்த யானைகளையும், முறிந்துவிழுந்திருக்கின்ற தேர்களையும் புரட்டிப்புரட்டி, தான்முழுவதுந் தன்குமாரனுடைய தேகத்தைத் தேடிப்பார்த்து, அசத்தியரோக்கமுள்ள கண்களிற் கண்ணீர் பெருக்கெடுத்தோட நெய்விட்டெரிகின்ற அக்கினியைப்போலக் கொதிக்கின்ற மனதுடனே அதிகபலமுள்ள வெற்றிவில்லைப் பிடித்தபடியே இந்திரசித்துவின் வல்லமையுள்ள கையறுந்து கிடக்கின்றதைத் தன்கண்ணுரக்கண்டு, பெரியபாகுவலயமும், அம்புகளைப்பொழிகின்ற விரற்புட்டிலும், தோளலங்காரமும், தைத்தபகழிகளும் பிரகாசிக்க அக்கினிமயமான கண்களையுடைய கார்க்கோடகசர்ப்பம்போலக் கிடக்கின்ற அந்தக்கையைத் தன் செவந்த கையால் தூக்கித் தன்தலையின்மேல் வைத்துக்கொண்டு, ஊழிகாலச் சண்டமாருதத்தைப் போலப் பெருமூச்சுவிட்டுக்கொண்டு அந்தக்கையை மலையையொத்த தன்மார்பிற் சேர்த்து அணைப்பான், கழுத்தில் வைத்துச் சுற்றிக் கொள்வான். மறுபடியுந் தன்தலையில் அணிந்து கொள்ளுவான். சுழலுகின்றதன்னை விலாற்றிக்கொள்ளுவான். முகர்ந்து மனமுருகுவான். பிறகுதூக்கிப்பான்.

இராவணன் இந்திரசித்துவின் தலையிழந்த தேகத்தைக்கண்டு வருந்துதல்.

கவி.

கய்கண்டான்பின் கருங்கடல்கண்டனன்
மெய்கண்டானதன் மேல்விழுந்தானரோ
பெய்கண்டாரை யருவிப்பெருந்திரை
மொய்கண்டார்திரை வேலையைமூடவே.

இப்படி கையைப்பார்த்தபிறகு சமுத்திரக்கடலைப் பார்த்ததுபோல அவ்விராவணன் இந்திரசித்துவின் தலையில்லாததேகத்தைக்கண்டு, கண்ணீரருவித்திரைகள் சமுத்திரத்தைக் கவிந்துமூடும்படியாக அந்தப்பிணத்தின்மேல் விழுந்து, இலட்சுமணருடைய பாணவருஷங்களால் மூடப்பட்டிருக்கின்ற இந்திரசித்துவின் மார்பைக் கண்ணீரால் நிறைந்திருக்கின்ற தன்னுடைய உடலில் ஒற்றிக்கொள்ளுவான். வாரியணைத்துக்கொள்வான். ஓவென்று அலறுவான். ஸ்ரீசிரேஷ்டனாகிய அந்த லங்காபதியுற்ற புத்திரசோகத்தை இந்த லோகத்தில் வேறொருவரும் அடையவில்லை. இந்திரசித்துவின் மார்பில் தைத்திருக்கின்ற பாணங்களைப் பலதரமாகப் பறித்து அவைகளைத் துண்டுதுண்டாக முறித்தெறிவான். மூர்ச்சையாய்ப் போவான். மோந்துபார்ப்பான். தேகத்தோடு சேர்த்து அணைப்பான். ஜ்வலிக்கின்ற சூரியனுடனே சப்தலோகங்களையும் வயிற்போட்டு மென்றுவிடுகிறேனென்று சொல்லிச்சொல்லிக் கோபிப்பான். இடமில்லாமல் ஆகாசமெல்லா நிறைந்துநிற்கின்ற தேவர்களுடனேயும், இரிஷிகளுடனேயும், உயர்ந்தவர்களான மற்றயாவர்களுடனேயும், மும்மூர்த்திகளுடனேயும், இந்த மூன்றுலோகங்களுடனேயும், போரிட்டு ஆறுவானென்று யாவருஞ் சொல்லுந் தன்மையுடையவனாகி இந்திரசித்துவின் தலையைக்காணாமல் மிகுந்தகோபங்கொண்டு, அம்மனிதர்கள் தலையைக் கொண்டுபோய்விட்டார்களென்று தீர்மானித்தவனாய் மனதிற்புண்பட்ட வியசனமுடையவனாகி, ஆகாசமும் வெடிபடும்படியாக ஓவென்று அலறியழத் தொடங்கினான்.

இராவணன் உயுத்தகளத்திற் பிரலாபித்தல்.

கவி.

நிலையுமாதிரத்துநின்ற யானையுநெற்றிக்கண்ணன்
மலையுமேபெயர்வேனான் மறிதற்குமறித்தமைந்தன்
தலையுமாருயிருங்கொண்டா ரவருடலோடுந்தகப்
புலையனே னின்னுமாவி சுமக்கிறேன் போலும்போலும்.

எரியுணவளைமூதா ரிந்திரனிருக்கையெல்லாம்
பொரியுணவுலகமூன்றும் பொதுவறப் புரந்தேன்போலாம்
அரியுநுமலங்கன்மெனவீ யிழந்தவென் மதலையாக்கை
நரியுணக்கண்டேனானி னுயுறுமுணவுகன்றல்.

பூண்டொருபகைமேற்புக்கென் புத்திரனேம்போனார்
மீண்டிலர்விளிந்துவீழ்ந்தார் விரதியர்ருவரோடும்

ஆண்டொருகுரங்குமொன்று மமர்க்களத்தாருமின்னம்
மாண்டிலரினிமற்றுண்டோ விராவணன்வீரவாழ்க்கை.

கந்தர்ப்ப ரியக்கர்சித்த ரரக்கர்தங் கன்னிமார்கள்
சிந்தொக்குஞ்சொல்லினருன் றேவியர்திருவினல்லார்
வந்துற்றெங்கணவன்றன்னைக் காட்டென்றுமருங்குவீழ்ந்தால்
அந்தொக்கவாற்றவோநான் கூற்றையுமாடல்கொண்டேன்.

சினத்தெவ்வெங்கொற்றமுற்ற வின்திரன்செல்வமேவ
நினைத்ததுமுடித்துநின்றே னேரிழையொருத்திசீரால்
எனக்குநீசெய்யத்தக்க கடனெலாமேங்கியேங்கி
உனக்குநான் செய்வதானே னென்னின்யாருலகத்துள்ளார்.

ஐயையோ! அஷ்டதிக்குகளிலு நிலைத்துநின்ற திக்கெஜங்களும், நெற்றிக்கண்ணனுடைய கயிலாசமலையும், என்னால் தோற்றுப்போவதற்கு அலசியமாயிருந்தனவே: அப்படிப்பட்ட நானிறப்பதற்கு முன்னே என்பிள்ளையினுடைய தலையையும் அவனதிருண்மயில் உயிரையுங் கொண்டுபோன அந்தமனிதர்கள் தேகத்துடனே தலையுமுயிரு முடையவர்களாயிருக்கவும், புலையனாகிய நான் இன்றையவரையிலும் ஆவியைப் பெய்யாய்ச் சுமந்துகொண்டிருக்கின்றேன்போலிருக்கின்றது. இது வெகுகீர்த்தி: வெகுகீர்த்தி: அளகாபுரியை நெருப்புவைத்தெரித்து இந்திரபட்டணத்தைப் பொரியுண்டு போகும்படித் தூரத்தியடித்து மூன்றுலோகங்களையும் என் ஒருகுடையின்கீழ் ஆண்டுகொண்டுவந்த நான், வண்டுகள் தேனுண்ணும்படியான வெற்றிமாலையையணிந்த முடியினையுடைய தலையையிழந்த என்பிள்ளையினது தேகத்தை நரிகள்தின்னும்படிக் கண்டேன். நானுண்ணு முணவைக்காட்டிலும் பிறரெச்சிற்கலையைத் தேடிக்கொண்டுபோய்த் தின்னுகின்ற நாயினுணவு நல்லதாயிருக்குமல்லவா? ஒருபகையாளியின்மேற் பெருங்கூட்டங் கூடிக்கொண்டு என்பிள்ளையுடனே கூடப்போன வீரர்களில் ஒருவராவது மீளாமல் எல்லாருமாண்டு போனார்கள். பகைவர்கள் பக்ஷத்தில் இராமலட்சுமணர்களென்கிற இரண்டுதவசிகளோடு அவர்களுக்குப்படையாகவந்த குரங்குகளில் ஒன்றுவது ரணக்களத்தில் மரணமாகவில்லையே: இனி ராவணனுடைய வெற்றிப் பிரதாபவாழ்வு முண்டாயிருக்கின்றதாய் நினைக்கலாகுமா?

அப்பா இந்திரசித்தே! கந்தர்ப்பஸ்திரிகளென்ன? யக்ஷஸ்திரிகளென்ன? சித்தஸ்திரிகளென்ன? இராக்ஷஸஸ்திரிகளென்ன? கிளிகளுநாகணவாய்ப் புட்களுநாணும்படியான ஒலியும், சிந்தைப்போ லினிமையும் வாய்ந்தசொற்களையும் மிகுந்த அழகையுமுடையவர்களான உன்சொந்ததேவிமார்களென்ன? இவர்களெல்லாம் எங்கள் பிராணநாயகனைக் காண்பிக்கவேண்டுமென்று என்னண்டைவந்து வீழ்ந்தபோது, இயமனையும் வெற்றிகொண்டிருக்கிற நான் உங்கள்புருஷனையமன்கொண்டுபோய்விட்டானென்று அவர்களோடுகூட அலறியழுவேனோ? மஹாவெற்றிப்பிரதாபசாலியான இந்திரனுடையசெல்வத்தை

கானடையவேண்டுமென்று கோபங்கொண்டபடியே என்னினைவை நிறைவேற்றிக்கொண்டிருந்த நான், சீதையென்கின்ற வொருபெண்ணின் ஆசையால் எனக்கு நீ செய்யவேண்டியதாயிருந்தகடமைகளை நீ என்முன்னிறந்தபடியால் உனக்கு நானேயழுது செய்யும்படியானேனே; என்னைப்பார்க்கிலும் ஹீனர்களாக இந்தலோகத்தில் வேறேயாவரு மிருக்கின்றார்களா? என்றிவைமுதலாகிய பல துக்கவார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு அழுதனன்.

இராவணன் இந்திரசித்துவின் உடலை யெடுத்துக்கொண்டு இலங்கையிற் புகுதல்.

கவி.

என்பனபலவும்பன்னி யெடுத்தழைத்திரக்கியேக்கி
யன்பினன் மகனைத்தாங்கி யரக்கியரரற்றிவீழப்
பொன்புனைநகரம்புக்கான் கண்டவர்புலம்பும்பூசல்
வன்பதுதிக்குமற்றை யொருதிக்குமுற்றதன்றே.

இவ்வண்ணம் பலமுறை இரங்கிச் சொல்லி என்றுதன வெல்லாமெண்ணியழுது, அப்பா இந்திரசித்தேயென்று கூவி இரைந்து அழுது, மிகுந்த ஆசையுடனே இந்திரசித்துவின் தேஹத்தைத் தூக்கிக்கொண்டு இராக்ஷசஸ்திரீகளெல்லாரும் புலம்பிப் புரண்டழுதுகொண்டுவரத் தன்னுடைய சொர்ணாலங்கார நகரத்தைச் சேர்ந்தான்.

இப்படி ராவணன்போனதைக் கண்டவர்கள் புலம்பி யலறுகிற ஓசையானது தசதிசைகளிலும்போய் முட்டினது. இந்திரசித்துவின் தேஹத்தைக்கண்ட இராக்ஷசஸ்திரீகளிற் சிலர் துக்கத்தைச் சகிக்கமாட்டாமல், குரூரகிருத்தியத்தையுடைய இராக்ஷசகுலத்திரியர்களின்படியே தங்கண்களைப்பிடுங்கிக் கொண்டார்கள். சிலர் தங்கள் கழுத்தினை அறுத்துக்கொண்டார்கள். சிலர் தங்கள் மார்பைப்பிளந்து ஈரலைப் பிடுங்கி யெறிந்தார்கள். சிலர் தங்கள் நாவை உயிருடனே பிடுங்கிக் கொண்டார்கள். அன்றியும் – அஷ்டதிக்குகளையும் வெற்றிகொண்ட புத்திரனாகிய இந்திரசித்துவின் கிரீடத்துடனே தலைநீங்கின முண்டத்தை இராவணனெடுத்துக்கொண்டுபோகக் கண்ட இராக்ஷசர்களெல்லாம் சமுத்திரத்துக் கொப்பாகத் தங்கள் கண்களினின்று தொழுகவிடுகின்ற அன்பின்கண்ணீர் வெள்ளமானது பலவழியிலுமோடிக் கடலிற்போய் விழுந்தது. அப்போது இந்திரசித்துக்குப் பிராணபதமாயிருந்த இராக்ஷசஸ்திரீகள் முதலான பெண்சாதிகள் கூட்டமாகக்கூடித் தலையின்மேற் கைகளைவைத்துக்கொண்டு சித்திரங்கள்போல விழுந்து புரண்டழுகின்ற இராஜமாளிகையில், இரத்தநீர் சொரிகின்ற கண்களையுடையவனாய் இராவணன்போய்ச் சேர்ந்தான்.

அப்போது மயன்குமாரத்தியும் இந்திரசித்துவின் தாயுமான மண்டோதரியானவள் கீழுந்த அளகபாரமானது அவிழ்ந்து குதிகாலில்விழுந்து புறனத் தாமரைப்பூவால் தென்னங்குரும்பையை யுடைப்பதுபோலத் தன்கைக

ளால் முலைகளின்மீது அறைந்துகொண்டு, ஆபரணங்களையெல்லாம் சுமக்கின்றபடியினாலே அகன்ற அல்குலேயல்லாமல் இடையுங்கொஞ்சம்உண்டுஉண்டு என்று நினைக்கும்படியாகத்தலைமேலே கையைவைத்துக்கொண்டு, நெருப்பை மிதிப்பதுபோல் அடிபெயர்த்துவைத்து, பிள்ளைமேலுண்டாகிய ஆசையினாலே ஓர்மயிலானது வேடன் அம்புபட்டு உயிர்சோர்ந்து மலையின்மீது விழுந்ததுபோல இந்திரசித்துவின்மேற் சோர்ந்து விழுந்து, சுவாசம் விடாமல் அறிவுங்குலைந்து உயிரிழந்துபோனளோவென்று சொல்லும்படியாகத் தேஹமசையாமலும் – ஒன்றும் பேசாமலும் – துக்கியாமலும் – வெகுநேரபரியந்தம் அழாமலுமிருந்து, பிறகு மெல்லமெல்லச் சோர்வுநீங்கி அறிவடைந்து வாயைத்திறந்து அலறிப் புலம்பத் தொடங்கினாள்.

இந்திரஜித்துவிறந்ததற்கு மண்டோதரி புலம்பல்.

கவி.

கலையினற்றிங்கள்போல வளர்கின்ற [redacted]
சிலையினலரியைவெல்லக் காண்பதோர் [illegible]முஞ்செய்தேன்
தலையிலாவாக்கைகாண வெத்தவஞ்செய்தேனந்தோ
நிலையிலா வாழ்வையின்னு நினைவெறு நிலையிலாதேன்.

ஐயனேயழகனேயென் னரும்பெற லமுதேயாழிக்
கையனைமழுவனையென் றவர்வலிகடந்தகால
மெய்யனே முளரியன்ன நின்முகங்கண்டிலாதேன்
உய்வெனோவுலகமூன்றுக் கொருவனேசெருவில்வோனே.

தாளரிச் சதங்கையார்ப்பத் தவழ்கின்ற பருவத்தேயும்
நாளணியணிந்துமேனி நடக்கின்றபருவத்தேயும்
வாளரிக்கண்ணினார்கள் வாழ்த்திட மறுகினேகி
மீளரும்விளையாட்டின்னங் காண்பெனோவிதியிலாதேன்.

அம்புலியம்மவாவென் றழைத்தலுமவிர்வெண்டிங்கள்
இம்பர்வந்தானையஞ்ச லெனவிருகரத்திலேந்தி
வம்புறுமறுவைப்பற்றி முயலெனவாங்கும்வண்ணம்
எம்பெருங்களிறேகாண வேசற்றேனெழுந்திராயே.

இயக்கியராக்கிமார்கள் விஞ்சையரேழைமாதர்
முயற்கறைபயிலாத்திங்கள் முகத்தியர்முருகனின்னை
மயக்கியமுயக்கந்தன்னான் மலரணையமளிமீதே
அயர்த்தனையுறங்குவாயே யமர்பொரு தலசினையோ.

முக்கணான்முதலினோரை யுலகொரு மூன்றினோடும்
புக்கபோரெல்லாம்வென்று மீன்றவென்புதல்வன்போலாம்
மக்களிலொருவன்கொல்ல யாள்பவன்வானமேறு
உக்கிடவனுவொன்றோடீ யுதைத்ததுபோலுமம்மா.

பஞ்சொடுபற்றிதென்ன வரக்கர்தம்பரவையெல்லாம்
வெஞ்சினமனிதன்கொல்ல விளிந்ததேமீண்டதில்லை

அஞ்சினேனஞ்சினேனச் சீதையென்றமுதாற்செய்த
நஞ்சினாலிலங்கைவேந்த னுயிர்த்தையனன்றே.

அப்பாமகனே! கலையினாலோங்கிய சந்திரனுக்கொப்பாக நீவளர்கின்ற காலத்திலே உன்வில்வினாலே இந்திரனை ஜெயிக்கப் பார்க்கும்படித் தவஞ்செய்திருந்த நான், உன்னைத் தலையில்லாத முண்டமாகப் பார்க்கும்படி என்ன கெட்டதவஞ் செய்தேனோ? ஐயோ! நினைவுகெட்டநான் நிலையில்லாத இந்த உயிர்வாழ்க்கையை இன்னமும் ஆசைப்படுவேனோ? ஓ அப்பா! ஓ என்னையா! அடா என் அதிகசுந்தரவானே! நான் பெறுதற்கரிய தேவாமிர்தம் போன்றவனே! கையில் சக்கரத்தைத்தரித்த விஷ்ணுவையு மழுவாயுதத்தையுடைய சிவனையும் தோற்கடித்த யமனுக்குச்சமமான வல்லவனே! இந்த மூன்றுலோகத்திற்கும் ஒரு வீரசிகாமணியே! ஓ மஹாவீரனே! உன்னுடைய தாமரைமலர்போன்ற திருமுகத்தைக் காணாதநானும்பிழைப்பேனோ? காலில் தண்டை[illegible]க்கும்படியாக நீ தவழ்ந்துவிளையாடின குழந்தைப் பருவத்திலும், நாளுக்கொருமேனியாய் அலங்கரித்துக்கொண்டு நடந்து விளையாடின பருவத்திலும், வாளைப்போலரிபடர்ந்த கண்களையுடைய மாதர்கள் வாழ்த்தும்படியாகத் தெருவேபோய் ஒருவரும் விளையாடாத விளையாட்டாடின உன்விளையாட்டை விதிகெட்டபாவியான நான் மறுபடியும் பார்க்கப் போகிறேனோ?

அடா எனதருமைச் செல்வனே! நீ குழந்தையில் அம்புலியே இங்கேவாவென்று அழைத்த மாத்திரத்தில் உன்னிடத்திற்குப் பயந்துகொண்டுவந்த சந்திரனைப் பயப்படாதே பயப்படாதேயென்று இரண்டுகையினாலும் அவனைப்பற்றிப் பிடித்து, அவனுக்குத் தோஷமாயிருந்த மறுவை முயலென்றுபற்றிப்பிடுங்கின அந்தவல்லமையையுடைய என்பெரியயானையே! நான் வருந்துகிறதுக்கம் தெரியவில்லையா? எழுந்திருந்துவரக்கடவாய். இராக்ஷசஸ்திரீகள்யக்ஷஸ்திரீகள் வித்தியாதரஸ்திரீகளாகிய முயற்கறையில்லாத சந்திரனுக்கொப்பான முகத்தையுடையவர்கள் உன்னைமோகப்படுத்திச் சையோகஞ்செய்ததனாலே புஷ்பசயனத்தின்மீதுஅயர்ந்து நித்திரைசெய்கிற நீ, உயுத்தஞ்செய்து அலுத்துப்போனையே? ஆ!தெய்வமே!மூன்றுகண்களையுடையசிவபெருமான்முதலானபேர்களையும், மூன்றுலோகத்தாரையும்,யுத்தத்திலுஞ் செயித்துவெற்றிபெற்றிருந்த என்புதல்வனு ஒருசிறுமனிதனாலே கொல்லப்பட்டுப்போனான்? இது ஆகாசத்தையளாவிய மேருமலை[illegible] போடும்படி ஒரு அணுவானது எழுந்து மோதின[illegible] விருக்கின்றதே: அடாமகனே! பஞ்சக்கூட்டத்தில் அனற்பொறி விழுந்ததுபோல இராக்ஷசக்குலமெல்லாம் ஒருமனிதன் கோபித்துக்கொல்ல ஒருவராவது தப்பாமல் மாண்டுபோனார்களே: எனக்குப் பயமாயிருக்கின்றதே: எனக்குப்பயமாயிருக்கின்றதே: அப்பா இந்திரஜித்தே! சீதையென்கிற பேரைவைத்து அமுதினால் சிருஷ்டித்திருக்கின்ற விஷத்தினாலே இலங்கேஸ்வரனை உன்தந்தை

யானவன் நாளைக்கு உன்னைப்போலவே மாளப்போகின்றானல்லவா? என்று கூவி அழுதுகொண்டிருந்தாள். அப்போ திராவணன் வெகுகோபங்கொண்டு, என்பந்துக்களுக்கு மரணத்தைத்தேடி வரவழைத்தவள் அந்தச்சீதை அல்லவா? அந்தப் பெரும்பாறையையொத்த மனதையுடைய வஞ்சகியை என் கையிலுள்ள வாளாயுதத்தினாலே கொன்று நாசமாக்கிவிடுகிறேனென்று ஓடினான். அப்படியோடுகின்ற இராவணனை மகோதரன்பார்த்து, ஓஹ!! இவனிப்போது பெரியபழியைத் தலைமேற்சுமந்து கொள்ளுகின்றானே: ஈதென்ன பாவம்? என்றெண்ணித்தன்மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு,அவன் சமீபத்திற்போய் அவன் காலில் வீழ்ந்துவணங்கி, ஐயா பிரதாபலங்கேஸ்வரா! வெகு காலமாய்ச் சம்பாதித்த உம்முடைய பெருமைக்கு இப்போது கெடுதிநேரும்படிச்செய்ய யத்தனித்தீர். இதென்னகாரியம்? என்று சிலபுத்திகளைச் சொல்லத்தொடங்கினான்.

இராவணன் சீதாபிராட்டியாரைச் சினந்து வெட்டப்போயினதை மகோதரன் தடைப்படுத்தி நிறுத்தல்.

கவி.

நீருளதனையுஞ்சூழ்ந்த நெருப்புளதனையுநீண்ட
பாருளதனையும்வானப் பரப்புளதனையுங்காலின்
பேருளதனையுமாயாப் பெரும்பழிபிடித்திபோலாம்
போருளதனையும்வென்று புகழுளதனையுமுள்ளாய்.

தெள்ளருங் காலகேயர் சிரத்தொடுந் திசைக்கண்யானை
வெள்ளியமருப்புச்சிந்த வீசியவிசயத்தோள்வாள்
வள்ளியமருங்குற்செவ்வாய் மாதர்மேல்வைத்தபோது
கொள்ளுமேயயாவிதானே நாணத்தாற் குறைவதல்லால்.

மங்கையர்குலத்துளாளைத் தவத்தியைமுனிந்துவாளால்
சங்கையொன்றின்றிக்கொன்றான் குலத்துக்கே தக்கானென்று
கங்கையஞ்சென்னியானுங் கண்ணனுங் கமலத்தோனுஞ்
செங்கையுங்கொட்டியுன்னைச் சிரிப்பரார்சிறியனென்று.

நிலத்தியல்பன்றுவானி னெறியன்றுநீதியன்று
தலத்தியல்பன்றுமேலோர் தருமமேலதுவுமன்று
புலத்தியன்மரபின்வந்து புண்ணிய மரபூண்டாய்
பலத்தியல் பன்றுமாயாப் பழிகொளமருகுவாயோ.

என்றுநீயிவளைவாளா லெறிந்துபோயிராமன்றன்னை
வென்றுமீண்டிலங்கைமூதூர் மெய்த்திரு வெறும்புவாயோ
பொன்றினள்சீதையென்றே போவர்களவர்தாமல்லால்
வென்றிடமுடியாதென்னும் வீரமோவிளம்பவென்றான்.

ஐயா! எல்லாயுத்தத்திலும் ஜெயம்பெற்றுக் கீர்த்தியை அடைந்த நீர், பிருதிவி — அப்பு - தேயு - வாயு - ஆகாசம் - என்கின்ற பஞ்சபூதங்களுள்ளவரையிலும் ஒழியாத பெரியபழியைக் கைக்கொள்ளவா புறப்பட்டீர்? கால

கேயர்களுடைய தலைகளையும் - திக்கெஜங்களையும் - கயிலாசமலையையும் — சின்னபின்னப்பட வீசின வெற்றிவாளாயுதத்தை, கொடியையொத்த இடையையும் செவந்தவாயையு முடைய சீதையின்மேற் பிரயோகித்தால்; அந்தத் தெய்வத் தன்மையுள்ள வாளாயுதமானது வெட்கத்தால் முனைமடிந்து போகுமே யல்லாமல் அச்சீதையினுடைய ஆவியைவாங்குமா? இந்தத் தசக்கிரீவனென்னும் இராவணன் ஸ்திரீஜாதியாகியும் தவப்பெண்ணாகியு மிருக்கின்றவளைக் கோபித்துக் கொஞ்சமுங் கூச்சமில்லாமல் வாளாயுதத்தாற் கொன்றான். இப்போது பலவீனனானான். மேலுமவன் ராக்ஷசகுலத்திற் பிறந்தவ னானபடியினாலே அதற்குத்தகுந்தபடி புத்தியில்லாமற் செய்தான். என்று கங்கையென்கிற பெண்ணைத்தலையில் வைத்திருக்கின்ற சிவபிரானும், விஷ்ணுவும், தாமரைப்புஷ்பத்தை ஆசனமாகவுடைய பிரம்மதேவனும், கை கொட்டிக்கொண்டு சிரிப்பார்களே:

ஓ புலஸ்தியப் பிரம்மவம்சத்திற் பிறந்த புண்ணியசீலனான இலங்கேஸ்வரா! ஸ்திரீகளைக்கொல்வது பூலோகத்தி லுள்ளவர்களுடைய இயற்கையு மல்ல. தேவலோகத்தி லுள்ளவர்களுடைய ஸ்வபாவமுமல்ல. மற்ற எந்தலோகத்தாருக்கும் ஒத்தகாரியமல்ல. பெரியோர்களுடைய தருமமென்னலாமோ வென்றால் அப்படிக்குமல்ல: வீரவான்களுக்கும் இது தகுதியல்லாத காரியமாச்சே: இப்படிக்கிருக்க எந்நாளு நீங்காதிருக்கின்ற பழியைத் தேடிக்கொள்ள உமதுபுத்தி மயங்கிப்போனீரே: இன்றைக்கு நீர் இந்தச் சீதையை வாளினாலே வெட்டிப்போட்டு இராமனைச் செயித்துவிட்டு மறுபடியு மிலங்கைக்குவந்து சுகப்பட்டுக்கொண் டிருப்பீரோ? அதுவுமல்லாமல் அந்த ராமலட்சுமணர்கள் சீதை மாண்டுபோனாள். இனி நாம் சண்டை செய்வதினாற் காரிய மென்னவென்று போய்விடுவார்கள். அப்போது உம்பால் அவர்களை ஜெயிக்க முடியவில்லையென்று சொல்லுவார்களே: அது வீரவாக்கியமாகுமோவென்று சொல்லினன்.

இராவணன் கோபந்தணிந்து இந்திரசித்துவின் உடலைத் தயிலதோணியில் விட்டுவைப்பித்தல்.

கவி.

என்னலுமெடுத்தகூர்வா ளிருநிலத்திட்டுமீண்டு
மன்னவன்மைந்தன் றன்னை மாற்றலார்வலியாற்கொண்ட
சின்னமுமவர்கடங்கள் சிரமுங்கொண்டன்றிச்சேர்கேன்
தன்னருந்தயிலத்தோணி வளர்த்துமினென்னச்சொன்னான்.

இப்படி மகோதரன் சொன்னதைக்கேட்ட இராவணன் ஓங்கினவாளைப் பூமியி லெறிந்துவிட்டுத் திரும்பி, தன் பிள்ளையைப் பகைவர்கள்கொன்ற பழிக்காக அந்தப் பகைவர்களுடைய தலைகளைக்கொண்டல்லாமல் திரும்பி வரமாட்டேன். இந்த முண்டமான தேஹத்தைத் தைலதோணியிற் போட்டு வையுங்க ளென்று நியமித்தான். அந்தப்பிரகாரமாகவே அவர்கள் இந்திரசித்துவின் தேஹத்தை வாசனைத் தயிலதோணியில் வளர்த்தி வைத்தார்கள்.

இராவணன்சோகப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

இருபத்தொன்பதாவது,

படைக்காட்சிப் படலம்.

இப்படலத்தில் இராவண னுத்தரவின்படி சில தூதர்களோடி ஆங்காங்கு மூலபலமாயுள்ள சேனைகளையெல்லா மழைத்துவந்து அவனுக்குக்காட்டி. அவ்வச்சேனைகளிருந்தவிடமுதலியவைகளையுந்தெரிவிக்க, அக்காலவ் விராவணன் அச்சேனாவீரர்களை வரவழைத்து முன்னர்நடந்தனவும் பின்னர் நடக்கவேண்டுவனவுங் கூறியிருக்குங்கால் மாலியவானால் அச்சேனாபதிகள் இராமலக்ஷ்மணர்களுடைய பராக்கிரமத்தையறிந்து இராவணனைத்தேற்றின்மை சொல்லப் படுகின்றது.

இராவண னுத்தரவின்படி சிலதூதரோடி மூலபலச்சேனையைக் கொணர்ந்து அவனுக்குக் காட்டுதல்.

கவி.

அத்தொழிலவருஞ்செய்தா ராயிடையனைத்துத்திக்கும்
பொத்தியநிருதர்தானை கொணர்கெனப்போயதூதர்
ஒத்தனரணுகிவந்து வணங்கின ரிலங்கையுன்னார்
பத்தியினமைந்ததானைக் கிடமிலை பணியிதென்றார்.

அப்போ திராவணன் தனது மூலபலசேனைகளையெல்லா மழைத்துக் கொண்டு வரும்படி சிலதூதர்களுக்கு நியமிக்க, அந்த நியமனப்பிரகாரம் போன தூதர்கள் நாலுதிக்கிலும்போய் அங்கங்குள்ள ராக்ஷசர்களையெல்லாம் அழைத்துக்கொண்டு வந்து இராவணன் பாதத்தில் விழுந்து, ஸ்வாமி! நாங்களழைத்துக்கொண்டு வந்த சேனைகளுக்கு இந்தலங்காபட்டணத்தி லிடமில்லை. இனியுத்தரவுபடி நடந்துகொள்ளுகிறோ மென்றார்கள். அப்படித் தூதர் சொன்னதைக்கேட்ட ராவணன் மிகுந்த சந்தோஷங்கொண். டெழுந்திருந்துவந்து அச்சேனைகள் எங்கேயிருக்கின்றனவென்று கேட்டான். அப்போ தந்தத்தூதர்கள் இரண்டுகைகளையுங் கூப்பிக்கொண்டு, ஐயா இலங்கேஸ்வரா! அந்தச்சேனைகளெல்லாம் இன்னவிடத்தி லிருக்கின்றனவென்று ஓரிடத்தைக் குறிப்பிட்டுச்சொல்லக் கூடுமோ? சப்தசாகரங்களும் ஊழிகாலத்தில் உலோகங்களை யெல்லாம் வந்து வளைந்துகொண்டதுபோல வந்திருக்கின்ற சேனைக்கு இந்தலோகமே போதாதென்று சொல்லி நின்றார்கள்.

அப்போது பூமியில் மிதித்து நடக்கின்ற சேனைகளினு லெழும்பிய பெருந்தூளி எங்கு நெருங்கினபடியினாலே ஆகாசமார்க்கமாயேறி, மேலுமேலுமாகக் கற்பமுடிவின் காளமேகத்தைப்போலக் கண்ணுற்பார்க்கவு முடியாமல் இலங்காபட்டணத்தை நோக்கி வந்தன. அப்படி வருகின்றசேனைகள் வாள்களை விதிர்க்கின்றதினாலே மேகத்திரளெல்லாம் ஓடிவிட்டன. அவர்களுடைய பேரிகை முழக்கத்தைக்கேட்ட இடியும் அதனோடு நெரொத்துச் சப

திக்கமாட்டாது. கிட்டின ஆயுதங்களும் - குதிரைகளும் - இயானைகளும் - தேர்களும் - அங்கங்கு போகும்போது கடல்களெல்லாங் கொதித்து மேலெழும்பி விடுமேயானால், அதற்குச் சமானம் வேறெதைச் சொல்லலாம்? இந்த மூலபலசேனைகள் நடந்துபோகின்ற பாரத்தைப் பொறுக்கமாட்டாமல் உலோகங்களெல்லாம் ஒன்றுடனொன்று முட்டி நசுங்கிவிட்டன. மேலுலகத்திலே சந்திரனுக்கும் நக்ஷத்திரங்களுக்குந் தத்தநிலைமை நீங்கிவிட்டது. சூரியனுந் தான்முன்னம்போகின்ற பழையவழியை விட்டுப் பயந்து விலகிப்போய்விட்டான்.

ஆகாசத்தை யளாவின மேருமலையைப் போலப் பிரகாசிக்கின்ற கோபுரங்களையுடைய இலங்கா புரியினது நான்கு வாசலாலும்போய் நுழைந்து இந்தப் பூலோகமும் பொறுக்க மாட்டாதென்று சொல்லும்படி நடக்கின்ற சேனையானது, இயமனானவன் கருங்கடலே யென்றுரிடத்திற் சேர்த்துவைப்பதற்குச் சமானமாக இருந்தது. இந்தச் சேனையெல்லா நெருக்கமாயிருக்கின்ற இலங்கைக்கோட்டை வாசலின்வழியாக நுழையவேண்டுமானால் அநேகநாள் செல்லவேண்டி வருமென்று அந்தலங்கையின் மதிலின்மீதேறி, எல்லாவண்டங்களிலுமிருக்கின்ற மேகங்களெல்லாம் ஒருமிக்கக் கலந்தது போல இலங்கா பட்டணத்திற்குள்ளே பிரவேசிக்க யத்தனித்தன. அப்படி சேனை இலங்கையை நோக்கி வரும்போது இராவணேஸ்வரன் சப்தசாகரங்களையும் ஒரேகாலத்திற்பார்க்கவேண்டுமென் றெண்ணுகிற அறிவினனைப் போலச் சேனையை ஒரேதடவையில் இவ்வளவென்று பார்க்கவேண்டுமென்கிற ஆசைகொண்டான்.

கவி.

மாதிரமொன்றினின்று மறுதிசை யென்மண்டி
ஓசீர்செல்லதென்ன தானையையுணர்வுகூட்டி
வேதவேதாந்தங்கூறும் பொருளினை விரிக்கின்றார்போல்
அவ்வவரணிகடோறும் வரன்முறைகாட்டிச்சொன்னார்.

அலங்காரமான ஒரு பெரிய கோபுரத்தின்மேலேறி நின்று ஒருதிக்கிலிருந்து மற்றொருதிசையை நோக்கிச் சமுத்திரஜலம் போலதைப்போர்த்த சேனையை வேத வேதாந்தார்த்தத்தை ஒருமிக்க விரித்துப் போகின்றவர்களைப் போலத் தூதுவர்கள் இராவணனுக்கு அணியணியாகப் பலதரமாய்க்காட்டி இன்னதின்ன தென்று சொல்லத்தொடங்கினார்கள்.

ஐயா இராவணேஸ்வரா! இதோ வருகின்றார்களே இவர்கள் சாகத்வீபத்தில் வாழ்கின்றவர்கள். தானவர்கள்செய்த யாகத்திற் பிறந்தவர்கள். தேவர்களையெல்லாம் ஒருமிக்கத் தோற்றுப்போம்படி அடித்தவர்கள். மாயைக்கு முதன்மையானவர்கள். மேகமண்டலத்தை யளாவிய தேகத்தையுடையவர்கள். ஐயா அதிவீரவானே! இவர்கள் குசத்வீபத்தில் வசிக்கின்றவர்கள். கொலைச்செய்கையிலும் சிருஷ்டி விருத்தியிலும் யமனுக்குப் பழிப்பையும்

பிரமனுக்குப் பகைத்தையும் உண்டாக்கினவர்கள். எப்போதும் தேவலோகவாசிகளான அமரர்கள் தங்கள் கீர்த்தியையும், ஐஸ்வரியத்தையும், இருப்பிடத்தையும், இழந்துபோனது இவர்களாலே தான். வெற்றியேயிவர்களுக் கியற்கையான தொழிலாயிருக்கின்றது. ஓ இராவணேஸ்வரா! இவர்கள் சான்மலித்வீபத்தில் வசிக்கின்றவர்கள். இமையா நேத்திரத்தையுடைய தேவர்களுக்குத் தலைவனான இந்திரனுடைய பொன்னுலகத்தை அழியும்படி யடித்தவர்கள், சந்திரனை ஜடாமகுடத்தில் தரித்த கயிலாசபதியாகிய உருத்திரமூர்த்தி யருளிச்செய்த வரத்தினாலே சிரேஷ்டப் பட்டவர்கள். காட்டுத்தீப் போன்ற கோபத்தையுடையவர்கள். ஐயா திக்விஜயப்பிரதாபசீலனே! இவர்கள் கிரௌஞ்சத்வீபத்தில் வாசம் பண்ணுகின்றவர்கள். பழையகாலத்தில் மேருமலையை இது தேவர்களுக் கிருப்பிடமாயிருக்கின்றதென்று பேர்த்துக் கொண்டுபோய்ச் சமுத்திரத்திற் போட்டுவிடுகிறதற்கு இவர்கள் யத்தனித்தபோது, தேவர்களெல்லாம் அக்குலையைத் தலைகுனிய நடுவந்து அப்படிச் செய்யவேண்டாமென்று வேண்டிக்கொண்டதினாலே சும்மா விட்டுவிட்டார்கள்.

ஓ கயிலாசகிரியைப்பேர்த்த புஜபலவீரனே! இவர்கள் பிலக்ஷத்வீபத்தில் வாழ்கின்றவர்கள். சுக்கிரன் தன்னிஷ்டப்படிக்கு ஒரு அசுரக் கன்னிகையைச் சேர்ந்து அவள் வயிற்றிற்றோன் [illegible] க்கொடியோர்கள். விளையாட்டைப்போலப் பாற்கடலை வற்றும்படி கொஞ்சகாலத்துக்குள் குடித்துவிட்ட பலவந்தர்கள். ஓ நங்களாண்டவனே! இந்த வக்கிரதந்தங்களையுடைய அளவில்லாதவர்கள் கருங்கடலுக்கப்பால் மந்தமாருதக்காற் றலாவும்படியான கந்தமாதனமென்கிற பருவதத்தில் வாழ்ந்துகொண் டிருக்கின்றவர்கள். முன்னுள் ஆகாசவிஷம் பிறக்கும்போது அதனுடன்கூடப் பிறந்தவர்கள். ஐயா தசகண்டேஸ்வரனே! இவர்கள் சாகரத்வீபத்தில் மகாமேன்னப்பட்ட பொதியமலையென்று நிலையமாயிருக்கின்றதே, அங்கே வசிக்கின்றவர்கள். பிரமனானவர் இவர்களாலே லோகத்துக்கு இக்கட்டுண்டாகுமென்றெண்ணி, ஓ ஐயன்மீர்! நீங்கள் தயைசெய்து இத்தமலையி லிருங்களென்று யாசித்தபடியினாலே அதிலே இருக்கின்றார்கள். ஐயா பெருங்கீர்த்திமானே! இந்த முஷ்காயுதத்தையும் - சூலாயுதத்தையும் - முசண்டியாயுதத்தையும் - சக்கராயுதத்தையும் - வில்லையும் உடையவர்களாய் நிற்கின்ற வீரர்கள், புஷ்கரத்வீபத்தில் வசிக்கின்றவர்கள். விஷத்துக் கொப்பானவர்கள். சப்தசாகரத்திற்குந் தலைவர்கள்.

ஓ எங்கள் தலைவனே! பிரகாசம்போன்ற கைகளையுடைய இவர்களை முன்னாலே பிரமதேவர் பார்த்து, இவர்களுக் கிந்தலோகம் போதாதென்று நினைத்து, நீங்கள் சப்தலோகங்களிலும் பாதாளலோகத்திலும் போயிருங்களென்று சொல்ல அங்கே போயிருந்தார்கள். இப்போ தும்மிடத்தில் அன்புடையவர்களாய் அந்தப் பிரமாவின் ஆக்கினையையுங்கடந்து வருகின்றார்கள். ஐயா இராவணேஸ்வரா! இவர் இறவிசித்தில்வில் விருத்தியடைந்திருந்த

வர்கள். இயமனை முன்னாலே தங்கள் தாயார்சொல்லைக் கேட்டுத் தங்கள் வல்லமையாற் சக்கரவாள கிரியின்மீது விலங்கிட்டுப் பலமோடுங்கும்படி வைத்திருந்தார்கள். பிறகு பிர்ம்மதேவன் கெஞ்சிக் கேட்டுக்கொண்டதினால் விட்டார்கள். ஐயா ஜயப்பிரதாபனே! இவர்கள் நிருதியின் வமிசப்பிள்ளைகள். சூரியனுக்கும் தேவர்களுக்கும் எவ்விதபந்துத்துவம் உண்டாயிருக்கின்றதோ? அவ்வளவு உமது வமிசந்தார்களுடனே பாந்தவ்விய முடையவர்கள். இரத்தபானங் கிடையாவிட்டால் இந்தச்சப்த சாகரங்களையும் தாகத்துக்குச் சாப்பிடத்தக்கவர்கள். கறுத்தமேனியர்கள். ஒவ்வொருத்தர் சப்த குலபர்வதங்களையும் பேர்த்தெடுக்கும் வல்லமையுடையவர்கள்.

ஐயா இலங்காதிபதியே! இவர்கள் பூலோகத்தை நிலைநிறுத்திய ஆதிபுருஷவராகமூர்த்தியை மோகங்கொண்டுபார்த்த ஸ்திரீகள்வயிற்றிற் பிறந்தவர்கள். இந்திரனைஐராவதமென்கிற யானையின்மேலேறவொட்டாமலடித்துஅவனை ஜெயித்து வெற்றியாலை தரித்தவர்கள். இதோ பெரியமலைகளைப்போல நிற்கின்ற கொடுங்கண்களை யுடையவர்களான வெற்றியாவர்கள் ஒருவருக்கும் பின்னிடைய மாட்டார்கள். நாகதலத்திலே யே வாசம்பண்ணுகின்றவர்கள். அவ்விடத்தி லிருந்தபடியே எந்நேரமும் நவ்திருத்தியங்களைச் செய்துகொண்டிருக்கின்றபடியினாலே ஆயிரந்தலைகளையுடைய ஆதிசேஷனுசித்திரையில்லாமல், விழித்தகண் விழித்தபடியே எங்கேயிவர்கள் நம்மை இம்சிக்கவருவார்களோவென்று பார்த்துக்கொண்டே யிருப்பான். இதோ கைகளிலிருக்கின்ற வாள்கள் பிரகாசிக்கவும் வக்கிரதந்தங்கள் ஒளிவீசவும் வருகின்றவர்கள், நெற்றிக்கண்ணாகிய சிவபெருமான்பூர்வத்தில் நடனஞ்செய்தபோதுதோற்றப்போன காளிதேவியின் கோபாக்கினியிற் பிறந்த பேய்க்கூட்டங்களுடன் பிறந்தவர்கள். இதோவில்லைக்கையிற் பிடித்துக்கொண்டு வடதிசையிலிருந்து வருகின்றவர்கள், பாபம்பிறந்தபோது அதனுடன்கூடப்பிறந்த பழையவர்கள். விளக்கைப்போன்ற கண்களையுடையவர்கள். கோபம்பிறந்தால் காலயுங்கொன்று உயிரைவாங்கும்படியான சண்டாளர்கள்.

ஐயா பிரதாப லங்கேஸ்வரா! இவர்கள் பஞ்சமுகராகிய உருத்திரமூர்த்தி கோபங்கொண்டு, உலோகத்தையெல்லாம் சுட்டெரிக்கும்படியாக விழிக்கின்ற நெற்றிக்கண்ணிற் பிறந்தவர்கள். சூலமேந்திக்கொண்டு நிற்கின்ற இவர்கள் உருத்திரமூர்த்தி யமனுடையமார்பி லுதைத்தபோது, அவன்கக்கின ஏழுசமுத்திரத்தையொத்த இரத்தத்தில்நின்றும் பிறந்த வீரவான்கள். இதோ பெருங்கூட்டமா யிருக்கின்றவர்கள் ஆலகாலவிஷந்தினும் அமுதத்தினும் பிறந்த இராக்ஷச யுத்தவீரர்கள், இவர்கள் வடவாமுகாக்கினியில் வாசுகி விஷத்தைக் கக்கினபோது அவ்விஷாக்கினியிலிருந்து பிறந்தவர்கள். மேகத்திற் பற்றியெரிகின்ற அக்கினியைப்போல் நிருக்கின்ற செம்பட்டமயிரையுடைய இவர்கள் உருத்திரன் இரதாரூடராகப் போய்த் திரிபுரங்களை யெரித்தபோது அந்தத்தீயிற் பிறந்தவர்கள். ஐயா தசக்கிரீவமகாரா

ஜனே! இவர்களையெல்லாம் தனித்தனியே சொல்லப் புகுந்தால் கூடியமாத்திரத்தில் நினைக்கவும் குறிப்பிட்டு அறியவும் அளவுபடமாட்டார்கள். இவர்கள் செய்யும்படியான மாயைகளையும், இவர்கள் செய்திருக்கின்ற தவங்களையும், இவர்கள் பெற்றிருக்கின்ற வரங்களையும், ஒவ்வொன்றாய்ப் பேரிட்டுச் சொல்லவேண்டுமானால், ஆயிரம் யுகமானாலு முடியாது. ஐயா மகாதைஸ்வரியனான இலங்கா நாயகனே! இவர்களி லொருவனேபோய் அங்கிருக்கின்ற பலவந்தர்களான குரங்குகளையெல்லாம் கெட்டிக்காரர்களான அவ்விரண்டு மனிதர்களோடும் ஒருகையினாலே வாரியடித்துவிட்டு வருவானானால், மற்றெல்லாரைப்பற்றியும் வேறென்ன சொல்லவேண்டுமென்று தூதுவர் சொன்னார்கள்.

இவையனைத்துங் கேட்ட ராவணன் அந்தத்தூதுவர்களைப் பார்த்து, இந்தச்சேனைகளுக்குத் தொகை எந்தக்கணக்காக வகுத்திருக்கின்றதோ அதைச்சொல்லுங்களென்று கேட்டான். அதற்கவர்கள் – ஐயா இலங்காதிபதியே! இவர்களுடையதொகையை ஆயிரம்வெள்ளமென்றுபைத்தியம்பிடித்தோர்கள் சொல்லுவார்கள். இவர்களுடைய தொகையைச்சொல்லுகிறதற்குக் கணக்கில்லை என்றார்கள், அதைக்கேட்டமாத்திரத்தில், நல்லது நீங்கள்போய் இந்தச்சேனைகளுக்கு நாயகர்களை என்னிடத்திற்கு அழைத்துக்கொண்டுவாருங்கள். அவர்கள் வந்தபிறகு நான் அவர்களுக்குச் சொல்லவேண்டிய காரியங்களையெல்லாஞ் சொல்லி, மரியாதை வார்த்தைகளையும் பேசி, உபசாரத்துடனே தகுந்த வெகுமானங்களையுஞ் செய்யவேண்டுமென்றான். அப்படியே தூதுவர்கள் அந்தந்தத் திக்குகளுக்குப்போய்ச் சமுத்திரத்தையொத்த அந்தச் சேனை நாயகர்களைக் கண்டு இராவணேஸ்வரன் உங்களை யழைத்துக்கொண்டுவரச் சொன்னானென்று சொல்ல, அந்தச் சேனாதிபதிகளெல்லாரும் வந்து இராவணன் பாதங்களிற் புஷ்பங்களைத்தூவி ஒருவருடைய கிரீடம் ஒருவர்கிரீடத்தில் மோதுண்டவோசை ஆகாசத்தை முட்டும்படியாக வணங்கினார்கள்.

அப்படி யவர்களெல்லாரும் வரிசை வரிசையாக வந்தனை வழிபாடுகள் செய்து சந்தோஷத்துடன் ஒருபக்கமா யிருந்தபோது அதிவீரனாகிய ராவணன் அவர்களைப்பார்த்து, உங்கள்வரவு நல்லவரவாய் முடியக்கடவதென்று அவர்கள்மனதைத் திருப்திகரம்பண்ணி, உங்கள் பெண்டுபிள்ளைகளெல்லாம் க்ஷேமமா யிருக்கின்றார்களாவென் றுபசாரவார்த்தைகளைச் சொன்னான். அதைக்கேட்ட அந்தச் சேனாவீரர்க ளிராவணனை வணங்கி, ஐயா திரிலோகாதிபத்தியமுள்ள பிரதாபலங்கேஸ்வரா! பருத்ததோள்களையுடையநீர் மிகுந்த தபோவல்லமைகளை யுடைத்தாயிருக்கின்றீர். உரியதா யுமக்குவேண்டியவைகளெல்லாவற்றையு முடித்துக்கொள்ளுகிறதற்குக் குறையென்ன? நீர்தேவர்களையெல்லாம் ஓடவிட் டடித்ததைப் பார்த்திருக்கின்றோம். இனியெங்களுக்கென்னகுறை? இஃதிருக்கட்டும். உம்மிடத்திலிருக்கின்ற ஸ்திரீகள்பிள்ளைகளெல்லாரினும் துக்கப்படாதவ ரொருவருமில்லை. நீருமப்படியே அதிகதுக்க

முற்றிருக்கின்றீர். இப்படி நேரிடுகிறதற்குக் காரணமென்னவென்று கேட்டார்கள். அதற்கிராவணன் அவர்களைப்பார்த்து, தனக்குச் சீதையின்மேலிருந்த மோஹத்தினாலே சம்பவித்த காரியங்களையெல்லாம் விவரித்துச் சொன்னான்.

அதைக்கேட்ட மூலபலசேனாபதிகள் அவனைப் பார்த்து, ஐயா இராவணேஸ்வரா! கும்பகர்ணனையும், இந்திரசித்தையும், நம்முடைய குலத்தவரான மஹாவீரர்களையும், இராக்ஷசர்களுடைய பெருங்கூட்டங்களையெல்லாமும் வென்றவர்கள்; இரண்டு மனிதர்களும் அவர்களுக்குச் சேனையாகிய வானரங்களுமா? இதென்ன ஆச்சரியம்: நீரெங்களை வரவழைத்தது இந்தலோகத்தைச் சேஷனுடைய உச்சியிலிருந்து எடுக்கிறதற் கில்லாமலும், சப்தகுலாசலங்களையும் வேரோடு பறிப்பதற் கில்லாமலும், சமுத்திரத்தைக் கையாலள்ளிக் குடிப்பதற்கில்லாமலும், பூவையு மிலைகளையுந்தின்றுகாட்டிற் பிழைத்துக் கொண்டிருக்கின்ற குரங்குகளின்மேலேவுகிறதற்காகவா? என்று கூறிக் கையுடனே கையையறைந்து இடியிடித்தாற்போலச் சிரித்து நின்றார்கள். அந்தக் கோரதந்தங்களையுடைய இராக்ஷசர்களைப் புஷ்கரத்வீபத்தாருக்குத் தலைவனான வன்னியென்பவன் சமாதானப்படுத்தி இராவணனை நோக்கி, அந்தமனிதர்களுடைய வல்லமை யெவ்வளவென்று கேட்டான்.

மூலபலச்சேனைகட்கு இராமலட்சுமணர்களாதி வானரவீரர்களின் திறத்தை மாலியவான் அறிவித்தல்.

கவி.

மற்றவாசகங்கேட்டலு மாலியவான்வந்
துற்றதன்மையு மனிதரா லுற்றமுமுட்டனும்
கொற்றவானரத்தலைவர்தந் தகைமையுங்கூறிக்
கிற்றுங்கேட்டிராவென் றவன் கிளத்துவான்கினைத்தான்.

அவனப்படிக் கேட்டவுடனே மாலியவானென்கிற பேருள்ளவன் வந்து, இந்தப்பகை நேரிட்ட காரணமும் — இராமலட்சுமணர்களுடைய சௌரியமும் — அவர்களுக்குத் துணையாகவந்திருக்கின்ற வானரவீரர்களுடைய சக்தியும் சொல்லுகிறேன் கேளுங்களென்று சொல்லத்தொடங்கினான். ஓ வன்னி முதலிய சேனாபதிகளே! சப்தசாகரங்களையும் சண்டமாருதம்போலத் தாண்டிப் போகின்றவனும் சப்தகுலாசலங்களைப் பேர்க்கும்படியான வல்லமையுள்ளவனுமான வாலியினுடைய மார்பை, ஸ்ரீராமனென்பவனுடைய சரம்புபோய் பிளந்தெறிந்துவிட்டது. மேலுமந்த ஸ்ரீராமனானவன் கறுத்தபெருமலையைப் போன்ற கரன் — தூஷணன் - திரிசிர னென்பவர்களையும், அவர்களுடைய கடலையொத்த சேனையையும், ஒருவில்லால் ஒருநாழிகைக்குள்ளாகக் கொன்றுவிட்டான். பருத்த தோள்களையுடைய விராதனும், மாரீசனும், அவனால் தான் மாண்டுபோனார்கள். அந்தமனிதர்களுடைய வல்லமையை நீங்கள் வந்து கேட்கிறதென்ன? இந்தப்பெருங்கடல் வெந்தபோது நீங்களங்கே கொந்

சமாவது பார்க்கவில்லையோ? அதுவல்லாமலும் கங்காபவானியைச் சடாபாரத்திலேவைத்த உருத்திர மூர்த்தியினுடைய பெரியவில்லை அவன் முறித்தெறிந்தபோது அந்தஓசை உங்கள்செவியில்வந்து கேட்கவில்லையோ? இதுவுமல்லாமல் இந்தலங்கையில் தீயினுங் கொடியவர்களான இராக்ஷசசேனைகள் ஆயிரம்வெள்ளமுண்டு. அந்தச்சேனைகளெல்லாம் இந்த ராமலட்சுமணர்களுடைய இரண்டுவில்லாலே யமபுரம்போய்அங்குமிடமில்லாமல் நிறைந்திருப்பதுபோலிருக்கின்றது.

அல்லாமலு மஹா வெற்றிவில்லை யுடையவனான கும்பகர்ணனென்கிற உங்கள் எசமானனும், அவன் பெற்ற பிள்ளைகளும், பிரகஸ்தன் முதலான மற்றவீரர்களும், இந்திரசித்துமடியமுன்னமே மடிந்துபோனார்கள். இன்றைய வரையில் நானும் இதோவிருக்கின்ற சிலபேர்களு மாத்திரந்தான் பிழைத்திருக்கின்றோம். எங்களுக்கு மூலச்சேனையாக முந்நூறுவெள்ளஞ் சேனையிருக்கின்றது. நீங்கள் வராவிட்டால் அதை இன்றைக்கு யுத்தத்திற் கனுப்பும்படி நிச்சயித்திருந்தோம். வீரகண்டாமணியைத் தரித்த அந்த ராமலட்சுமணர்களுடைய வல்லமையையும் வானரப் பெருஞ்சேனைகளுடைய வல்லமையையும் தெரிவிக்கவேண்டுமானால், ஓரேயொரு குரங்குவந்து இந்தலங்காபட்டணத்தை நெருப்பூட்டி மிகுந்த கோபிஷ்டனான அட்சயகுமாரனையும் பூமியிற் போட்டுத் தேய்த்துப் பெருஞ்சண்டைசெய்து தூதுபேசிவிட்டு, இராக்ஷசஸ்திரீகளெல்லாம் அலறும்படி இராக்ஷசசேனா சமுத்திரத்தையும் இந்த ஜலசமுத்திரத்தையும் தாண்டிக்கொண்டு போய்விட்டது. இலங்கைக்குவந்து சண்டைசெய்கிறதற்காக வானரர்கள் சமுத்திரத்தை மலைகளைக்கொண்டு அணைகட்டி தூர்மார்க்க மேற்படுத்தியதை நீங்கள் பார்க்கவில்லையா?

மேலும் சஞ்சீவிமருந்தை ஒரு நொடிக்குள்ளாக மேருவுக் கப்பால் தாண்டிப்போய்க்கொண்டுவரும்படியான அநுமன்போல் எழுபதுவெள்ளம் வானரங்க ளிருக்கின்றன. இஃதிவ்விடத்தில் முக்கியமான காரியமாயிருக்கின்றது. சாமானியஸ்திரீகளைப்போலல்லாமற் பதியேதெய்வமென்றுவிரதம்பூண்டிருக்கின்ற சீதையென்னுங் கற்புடையபத்தினியின்சிறை நிமித்தத்தாலேவேண்டியமுயற்சிகளைச்செய்துகொண்டு வந்திருக்கின்ற அந்தவில்வீரர்களே செயம்பெறட்டும். அல்லது நீங்களே வெற்றிபெற்றாலும் பெறுங்கள். இதுநிச்சயமானகாரியமென்பதை உங்களுக்குத் தெரிவித்தேன். என்று தான் சொல்லி இன்னும் வேண்டிய வார்த்தைகளை யெல்லாஞ் சொல்லிமுடித்தான்.

மூலபலச் சேனாபதிகள் இராவணனுடன் சிலபேசி யவனைத் தேற்றுதல்.

கவி.

வன்னியன்னவைநோக்கிநீ யிவ்வுலோமடிய
வென்னகாரணமிரல்செயா திருந்ததென்றிசைத்தான்
புன்மைநோக்கினனானதற் பொருந்திலேனென்றான்
அனைத்தேவினிப்பையுமென் கடனிதென்றான்.

அப்போது வன்னியென்னும் சேனாபதி இராவணனைப்பார்த்து, ஐயா நீர் இத்தனை ராக்ஷசவீரர்களெல்லா மடிந்துபோனதைக் கண்டும் என்னகாரணத்தினால் அந்தமனிதர்கள்மேல் யுத்தத்திற்குப்போகாமலிருந்தீரென்று கேட்டான். அதற்கிராவணன் அவ்வன்னிமுதலியவர்களைப்பார்த்து, ஓ சேனாபதிகளே! மனிதர்களும் குரங்குகளுமென்கிற அற்பத்தை நினைத்து அவர்கள்மீது யுத்தத்திற்குப் போவதற்கு வெட்கப்பட்டுக்கொண்டு நின்றுவிட்டேனென்றான். அதற்கவர்கள் ஆம்! அதுமெய்தான், நீர் அவர்கள்மேற் சண்டைக்குப்போகிறது தகுதியல்ல. அந்தக்காரியம் எங்கள்கடமை என்று சொல்லினார்கள். பின்னும் வன்னியென்பவன் தனியேசொல்லுகின்றான்.

ஐயா! இராவணேஸ்வரா! எல்லாந்தெரிந்த வும்முடையபாட்டனான மாலியவானுடைய அபிப்பிராயம், சீதையைக்கொண்டுபோய் விட்டுவிட்டு அந்த மனிதர்களைச் சமாதானம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்பது. அது ஆதியிலேயே செய்யவேண்டும். இனிச்செய்கிறது கெடுதி. இப்போதிறந்துபோன இந்திரசித்துவை நாமினி யெங்கே காணப்போகிறோம்? இனியந்தச் சீதையைக்கொண்டுபோய் விட்டுவிட்டாலும் யுத்தத்தில் மடிந்துபோன வீரர்களை நாமறுபடியும் பெறப்போகிறதில்லை. அதனால் நம்மை எல்லோரும் எளனம்பண்ணுவார்கள். ஆகையால் - நாமவர்களுடன் யுத்தஞ்செய்து அவர்களை வமிசத்துடன் கருவறுப்பதே தகுந்தகாரியம். என்றெழுந்தார்கள்.

மூலபல சேனைகள் யங்களேசென்று மனிதர்களையும் வானரங்களையும்
செயிப்போமென்று போதல்.

கவி.

என்றெழுந்தனரிராக்கத ரிருந்திலேயாமே
சென்றுமற்றவர் சில்லுடற்குருதிநீர்தேக்கி
வென்றுமீளுதும் வெள்குதமேன்மிட வில்லாப்"
புன்றொழிற்குல மாதுமென்றுரைத்தனர்போனார்.

இவ்வண்ணம் சொல்லி யெழுந்தவர்களாகிய அவ்வன்னி முதலிய மூலபல சேனாபதிகளெல்லாம் இராவணனைப் பார்த்து, ஐயா பிரதாபலங்கேஸ்வரா! நீரிங்கேயே இரும். நாங்கள்போய் அந்தமனிதர் குரங்குகளினுடைய சிறுவுடலி னிரத்தங்களைக் குடித்துவிட்டு வருகிறோம். அவர்கள் பலமில்லாத அற்பசாதிக ளானவர்கள்தானே யென்று சொல்லிப்போனார்கள்.

படைக்காட்சிப்படலம் - முற்றிற்று.


உயுத்தகாண்டம்.
மூலபலவதைப்படலம்.

ஸ்ரீராமஜெயம்.

முப்பதாவது,

மூலபலவதைப்படலம்.

இப்படலத்தில் இராவணன் மூலபல சேனையைப் போர்க்களஞ் செல்லும்படி விடுத்துத் தான் தனது மூலச்சேனையோடு போர்க்கோலங் கொண்டுடன்சென்று நிற்கவும் அச்சேனைகள் யாவரும் ஸ்ரீராமருடைய படைக்குட்புகுந்து பராக்கிரமித்திருக்க, அக்கால் வானரசேனைகளும் சாம்புவந்தர் முதலிய சேனாவீரர்களும் பயந்தோடிவதை ஸ்ரீராமமூர்த்தி கண்டு விபீஷணனால் அம்மூலபல சேனையின் திறமையறிந்து அலக்ஷியஞ்செய்யவும் அதனை,அங்கதனறிந்தோடிஅச்சாம்புவந்தர் முதலிய வானர சேனைகளைப் பயந்தீர்த் தழைத்துவர, அக்கால் ஸ்ரீராமர் இளையபெருமா ளாதியரை வானரசேனையைக் காத்திருக்கும்படித் திட்டஞ் செய்து தாம்தனியே மூலபலசேனைக்குட் புகுந்து யாவரையுஞ் சங்கரித்துவிட, அதுகண்ட அம்மூலபலச்சேனாபதிகள் யாவரும் ஒன்றுகூடி ஸ்ரீராமரைவளைத் தெதிர்க்கவும் ராமரவர்களை அப்பாலிப்பா லகன்றோடாதபடி சரக்கூடிட்டு நிறுத்தி அச்சேனாபதிகளையும் இராவணனுக்கு மூலசேனையாயிருந்த இராக்கதர்களையுஞ் சங்கரித்து இளைய பெருமான் அவ்விராவணனோடு செய்யும் இரணரங்கத்தை நோக்கிச் செல்லுதல் சொல்லப்படுகின்றது.

இராவணன் மூலபலசேனையோடு உயுத்தகளம்புகுந்து பராக்கிரமித்தல்.

கவி.

வானரப்பெருஞ் சேனையை யானொருவழிசென்
றூனறக்குறைத் துயிருண்ப னீயிர்போயொருங்கே
ஆனமற்றவ ரிருவரைக்கோறிரென் றமைத்தான்
தானவப்பெருங் கிரிகளை வான்கொடுதடிந்தான்.

அதைக்கேட்டுத் தானவர்களென்கிற மலைகளையெல்லாம் தன்கைவாளாயுதத்தினாலேவெட்டி ஜெயம்பெற்ற வீரனான இராவணன் மிகுந்த சந்தோஷத்தனாகி, ஓ மூலபலச்சேனாபதிகளே! நானொருபக்கத்திற்போய் வானரசேனைகளையெல்லா பாமிசங்களைச் சிதைத்து அவர்களுயிர்களைப் பருகிவிடுகிறேன். நீங்கள்போய் ஒருமிக்க அவ்விரண்டு மனிதர்களை மாத்திரங் கொன்றுவிடுங்களென்று ஆஞ்ஞாபித்தான். இப்படித் திட்டப்பண்ணினவுடனே அந்தச்சேனாபதிகள் தங்கள் தங்கள் வாஹனங்களின்மேலேறிக்கொண்டு, பெருங்கடலைப்போ லிருக்கின்ற தங்கள்சேனையிற் போய்ச்சேர்ந்தார்கள். அதை இராவணன்பார்த்து, இந்தச் சேனைகளுக்கு முன்னாக நம்முடைய மூலச்சேனையை அவர்கள்மீதுயுத்தத்திற்கு அனுப்புங்களென்று கட்டளையிட்டான்.

கவி.

ஏவியப்பெருந் தானையைத் தானும்விட்டெழுந்தான்
தேவர்மெய்ப்புகழ் தேய்த்தவன் வில்லியர் தேர்மேல்

காவன்மூவகை யுலகமுமுனிவருங் கலங்கப்
பூவைவண்ணத்தன்சேனைமே லொருபுறம் போனான்.

அவ்வாறேயந்தச் சேனைகள் சென்றபின்பு தேவர்களுடைய புகழையெல்லா நாசப்படுத்தினவனான இராவணனும் தேர்மேலேறிக்கொண்டு, திரிலோகத்தவர்களு மகாரிஷிகளு நடுங்கிப் பீதியடையும்படியாகப் புறப்பட்டு, காயாம்பூவைப்போல் திருமேனியையுடையவரான ஸ்ரீராமமூர்த்தியினுடைய சேனைகளின்மீது ஒருபக்கத்திற் பிரவேசித்தான். அப்போது வள்ளுவர்கள் யானைமீதுபேரிகையைக்கொட்டிச் சேனைகளெல்லாஞ் சண்டைக்குப்புறப்படுங்களென்று பலபலதிசைகளிலும் அறைந்தபோது, மூலபலசேனைகள் பூமியையும் - ஆகாசத்தையும் - அஷ்டதிக்குகளையு மொய்த்து நிறைந்து கூட்டங்கூடின. அந்தமூலபலப் பெருஞ்சேனையெல்லாம் ஆயுதந்தரித்த தேகத்தைநெருக்கிச்சுருக்கிக்கொண்டு வாமனவுருவங்கொண்ட விஷ்ணுவானவர் விஸ்வரூபங்கொண்டுவளருகிறதைப்போல வருகிறபடியிலே, சமுத்திரமெல்லா மறைந்தது. ஆகாசமெல்லா மறைந்தது. உலோகத்திலுள்ள ஜீவகோடிகளெல்லா மறைந்தன.

அந்த மூலபலராக்ஷசர்கள் தருமத்தை வேரோடுவிழுங்கிக் கிருபையைப்பானம்பண்ணி வெற்றிபெற்ற வீரத்தையே ஆபரணமாகப்பூண்டு பாபத்தையே தங்களுக்கு மஹிஷியாகக் கலியாணஞ் செய்திருக்கின்றவர்களும், மேகத்தைப்போலக் கறுத்தவர்களும், ஆலகால விஷத்தைப்போன்ற மனத்தையுடையவர்களும் நெருப்புப்பற்றி யெரிகிறது போலத் தலைமயிரையுடையவர்களும், இயமனும் புகழும்படியானவர்களும், நீளமான கைகளினாலே சமுத்திரஜலத்தை வாரி யிறைத்துவிட்டு அதிலிருக்கின்ற மீன்களுடனே மகரமச்சங்களையும் வாயிற்போட்டு மென்று விழுங்கிவிட்டு இடிகளைப் பிடித்துக் காதுகளுக்குக் குண்டலம்போலத் தொங்கவிட்டுக்கொண்டு மேகங்களையுரித்து வஸ்திரமாகப் போர்த்துக்கொண்டுலாவிக் கர்ஜிக்கின்றவர்களும், மேகக்கூட்டங்கள் சத்திக்கும்படி குலாசலங்களைப் பேர்த்துப் பாலாகவும்மலைப்பாம்புகளைக்கட்டிப்பிணித்திருக்கின்ற வீரகண்டாமணியாகவுந்தரித்தவர்களும், ஆகாசத்திற்பறந்துபோகின்ற கருடன்காற்று இவைகளைப்பார்க்கிலும் நாலத்தனை வேகமுள்ள நடையையுடையவர்களும், பசிக்குண்ணும்படியாக மாமிசங் கிடையாமற் போகுமானால் திக்கஜங்களையும்பிடித்து வாயிற்போட்டுக் கொள்ளுகின்றவர்களும், குடிப்பதற்குத் தாகங்கிடையாவிட்டால் ஆகாசத்திற் படர்ந்திருக்கின்ற மேகங்களையெல்லாம் பிடித்து வாயிற் பிழிந்துகொள்ளத்தக்க விடாயையுடையவர்களும், பனிகளுறைந்த மந்தரகிரி முதலானவைகளைக் கைகளினாலே யோங்கியறைந்து குளிரைநீக்கி உஷ்ணத்தையுண்டாக்கும்படியானவர்களும், சந்திரனைப்பிடித்து உடம்பைச்சொறிந்து தினவைநீக்கிக் கொள்ளுகிறவர்களும், மலைகளைக் கடைந்து பிடித்திருக்கின்ற தண்டாயுதத்தை யுடையவர்களும், இடியைப்போலக் கர்ஜிக்கின்றவர்களும், சூலத்தையாவது - மழுவாயுதத்தையாவது—வாளாயுதத்தையாவது - வேலாயுதத்

தையாவது — தண்டாயுதத்தையாவது - சக்கராயுதத்தையாவது — அம்புவில்லையுமாவது கையிற்கொள்ளுவார்களேயானால், இயமனையும் — விஷ்ணுவையும் — சிவபிரானையும், சுப்பிரமணியனையும் ஜெயிக்கும்படியானவர்களுமாயிருந்தார்கள்.

அவர்களில் ஒருவரே இந்தலோக முழுவதையும் வெற்றி கொள்ளுவார்கள். இரண்டுபேர் சேர்ந்தார்களேயானால் இந்தப்பதினாலு லோகங்களையுமடித்துவிடுவார்கள். சுற்றித் திரிவார்களேயானால் பூமியும் அவர்களுடனே சுழலும். வருவார்களேயானால் சப்தசமுத்திரங்களும் பின்தொடர்ந்துவரும். மேகங்களெத்தனையோ? அத்தனையத்தனை பதாதிகளாயிருந்தார்கள். பிரம்மாண்டத்துக்குள் விசாலித்திருக்கின்ற மலைகளெத்தனையோ? அத்தனை தேர்களுண்டாயிருந்தன. அளவில்லாத குதிரைகளிருந்தன. குதிரைகளெத்தனையோ அத்தனையானைக ளிருந்தன. இப்படிப்பட்ட யானை — தேர் — குதிரை — ஆகியவிவைகளைப் பார்க்கும்போது அவைகளுடைய சேணங்களும், மேற்றவிசுகளும், கொடி - குடை - சிகரம் - ஆகிய உறுப்புகளும், பொன்னு மிரத்தினங்களு மல்லாமல் வேறொன்றினால் அலங்கரிக்கப்பட்டவைகள் ஒன்றாவதுகிடையாது, இந்தப்பிரகாரமாக இந்த மூலபலமானது ஆரவாரித்துக்கொண்டு போகும்போது மேலெழும்பின பவளப்பொடி போன்ற தூளிகள் நிறைந்து தூர்த்துவிட்ட படியினாலே சமுத்திரமானது நிலதிறமாயிச் செந்நிறமடைந்தது. அதோடு யானைகளினுடைய மதநீர்வெள்ளமுங் கலந்தபடியினாலே தனக்குச்சுபாவமாயிருந்த உப்பு நீங்கிப்போய்விட்டது. அந்தச் சேனைபுறப்பட்ட இலங்காபட்டணத்தின் கோட்டை வாசலின்வழி எப்படியிருந்ததென்றால்: மலைகளையும் - சமுத்திரங்களையும் - மற்றப்பொருள்களையும் — பிரமேந்திராதி தேவநிலயங்களையும், மற்றலோகங்களெல்லாவற்றையு மழிந்து போகாதபடி உட்கொண்டு, மறுபடியு முமிழ்ந்த தனிப்பொருளாகிய ஸ்ரீயப்பதியினுடைய திருவாய்மலருக் கொப்பாயிருந்தது.

அன்றியும் - பொறுக்கக்கூடாத நாற்றத்தையுடைய மதநீர்மிகுந்த யானைகளுந் தேர்களுங் குதிரைகளு நிறைந்திருக்கின்ற அந்தச் சேனாசமுத்திரத்தைச் சுமக்கக்கூடாமையால்: ஆயிரம் சிரங்களையுடைய ஆதிசேஷனும் அடித்தப்போனான், திருப்பாற்கடலிற் பிறந்த ஆலகாலவிஷத்தைக் கண்டு சகிக்கமாட்டாமல் ஓட்டம்பிடித்த தேவர்களைப்போல, வானரக்கூட்டம் நிற்கிறதற்கு மிடங்கிடைக்கப் பட்டாதபடியினாலே ஓடிப்போய் வடதிசையைச் சேர்ந்து நின்றுவிட்டன. சக்கரவாளகிரியினாற் சூழப்பட்டிருக்கின்ற சப்தசமுத்திரங்களும் வலைகளுக்கொப்பாகவும், மூலபல ராக்ஷசர்களெல்லா மான்கூட்டங்களாகவும், இயமனும் - விதியும் - அவர்களுடைய பாபங்களும் - அவைகளைப்பிடிக்கும் வேடர்களாய் இலங்காபட்டணத்தி லிருந்து தொடர்ந்துவர இரணகளம் வந்து சேர்ந்தார்கள். வீரர்கள் கர்ச்சித்த ஓசையும், தேர்வண்

டில்களினுடைய அதிர்ச்சியும், மேகத்தையொத்த யானைகளின் முழக்கமும், குதிரைகளினுடையகனைப்பும், அஷ்டாதச வாத்தியங்களினுடைய சப்தமும், ஒன்றாகச்சேர்ந்து அண்டமுங் கிழிபட ஒலித்தன. அந்தமூலபல சேனாசமுத்திரத்துக்கு ஆயுதங்களெல்லா மீன்களாகவும், இயானைகள்முதலைகளாகவும், குதிரைகள் அலைகளாகவும், பேரிகையோசை முழக்கமாகவும், கோபக்கண்களை யுடைய ராக்ஷசசேனைகள் அதிகொரமான சுறாமச்சியமாகவும், இருந்தன. கருத்தகுடங்களைப்போல உருண்டுதிரண்ட தோள்களையுடைய இராக்ஷசசேனைகள் பொற்றலமாகிய சுவர்க்கலோகத்தில் மிதித்துநடக்கின்றபடியினாலேயும், அந்தத் தரையானது யானைமதம்பாய்ந்து ஒழுகிறபடியினாலேயும் சேறாகியும் குழைசேறாகியும் கெட்டுப்போய்விட்டது. இப்படி ராக்ஷசசேனைகளெல்லாம் ஆகாசத்திற் சென்றபடியினாலே சிகரத்தின்மேற் கட்டியிருக்கின்ற அந்த லங்காபட்டணமானது அழிந்துபோகாம லிருந்தது.

அப்போது தேவர்கள் பூமியைப்பார்த்தார்கள். சமுத்திரத்தைப் பார்த்தார்கள். விசாலமாயிருக்கின்ற ஆகாசமுகட்டைப் பார்த்தார்கள். எட்டுத் திக்குகளையும் பார்த்தார்கள். எங்கும் வெளியென்பது கொஞ்சமாவதில்லாதிருக்கக் கண்டார்கள். எங்குநிறைந்திருக்கின்ற வெற்றிக்கொடிகளையும் பார்த்தார்கள். அதனாலெல்லாரு நடுங்கிப்பயந்து, நாம் நிக்கலாட இந்தலோகத்திலிருக்கின்ற சராசரப் பொருள்களெல்லாம் [illegible] ரூபத்தைப்பெற்று அளவில்லாத ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு வந்தனவோ? அப்படிக் கில்லாவிட்டால் அலைகளோடுங்கூடிய சப்த சமுத்திரங்களும் பாபத்தினாலே இந்தத் துஷ்டராக்ஷசரூபங் கொண்டனவோ? என்றுசொல்லிப் பயந்தார்கள்.

மூலபல சேனைகளைக்கண்டதேவர்கள் பயந்து உருத்திரமூர்த்தியினிடத்தில் அடைக்கலம் புகுதல்.

கவி.

நடுக்கிநெஞ்சடை கண்டனைவானவர்நம்ப
ஒடுங்கிபாங்கராத் துறைவிடமறிகெழுமியிரைப்
பிடுங்கியுண்குவர் யாரிவர்பெருமையைபண்டறிவார்
முடிந்ததெம்வலி யென்றலமோடமொன்றுமயன்றார்.

என்றிறைஞ்சலு மிருண்மிடற்றிறைவனுமினிநீர்
ஒன்றுமஞ்சலீர் வஞ்சனையரக்கரையொருங்கே
கொன்றுநீக்குமக் கொற்றவனிக்குலமெல்லாம்
பொன்றுவிப்பதோர் விதிதந்ததாமெனப்புகன்றான்.

அப்படிப் பயந்தவர்களாகிய தேவர்கள்—காளகண்டனாகிய சங்கரமூர்த்தியைப்போய்ச் சேர்ந்து, ஸ்வாமீ சம்ஹாரகர்த்தாவே! நாங்களொளிந்து பிழைக்கும்படியான இடம் அகப்படவில்லையே; எங்களையெல்லா மிந்தராக்ஷசர்கள் கொன்று தின்றுவிடுவார்களே: இவர்களுடைய பெருமையை யாரளவிட்டுச் சொல்லப்போகிறார்கள்? எங்கள் பலமெல்லாம் இன்றையதினத்துடனே

முடிந்துபோய் விட்டது: இவர்களொவ்வொருவரைக் கொல்லுகிறதற்கு ஆயிரம் ஸ்ரீராமர்கள் வந்து நாற்பதுவருஷம் யுத்தஞ்செய்தாலு முடியாதே: நாமுங்கூடவிருந்தாவது கொல்லலாமென்றால், நின்றுயுத்தஞ் செய்கிறதற்காகிலும் ஒருவெளியிடம் வேண்டாமா? அதுவுமல்லாமல் முதலாவது நம்முடைய உயிரிருந்தாலல்லவா சண்டைசெய்யலாம்? அவர்கள் எல்லாரையுங்கொன்றுவிடுவார்களே: அப்பாலியார் இவர்களோடு எதிர்த்து யுத்தஞ்செய்யப்போகிறார்களென்று வணங்கினார்கள். அப்போது விஷகண்டராகிய உருத்திரமூர்த்தியானவர் அவர்களைப் பார்த்து, நீங்களொன்றுக்கும் பயப்பட வேண்டாம். இந்தவஞ்சகர்களான ராக்ஷசர்களை யெல்லாம் ஒருமிக்க அந்த ஸ்ரீராமனொருவனே சம்ஹரித்து விடுவான். இவர்களையெல்லா நாசம்பண்ணுகிறதற்கு அவர்கள் விதியே கொண்டுவந்துவிட்டதென் றருளிச்செய்தார்.

வானரசேனைகள் மூலபலசேனைகட் கஞ்சியோடல்.

கவி.

புற்றினின் றுவல்லரவினம் புறப்படப்பொருமி
இற்றதெம்வலியெனவெ[illegible] இரிதருமெலிபோல்
மற்றவானரப்பெருஞ்சேனை பயங்கொண்டுமறுகிக்
கொற்றவீரரைப்பார்த்தில திரிந்ததுகுலைவால்.

இப்படி யிருக்கும்போது புற்றிலிருந்து பெரும்பாம்புகள் புறப்பட்டபோது எங்கள் வலியழிந்ததோமென்று வேகங்கொண்டு ஓட்டப்பிடிக்கின்ற எலிகளைப்போல, வானரசேனா சமுத்திரமானது ஸ்ரீராமலட்சுமணர்களுடைய வீரப்பிரதாபத்தையும் ஆலோசித்துப்பாராமல் நடுநடுங்கிப் பயந்து ஓட்டப்பிடித்தன. அப்படி யோடும்போது சிலவானரங்கள் சேதுவழியாக ஓட்டம்பிடித்தன. சில வானரங்கள் சமுத்திரத்தைத் தாண்டிப்போகிறதற்குப் படகுகளைத்தேடித் திரிந்தன. சிலவானரங்கள் சமுத்திரத்தில் நீந்திப்போயின. சிலவானரங்கள் இரண்டிரண்டாக நீந்திக்கொண்டுபோய் நடுச்சமுத்திரத்தில் முழுகிப்போய் விட்டன. சிலவானரங்கள் எட்டாமரக் கிளைகளிற்போ யேறிக்கொண்டன. சிலவானரங்கள் மலைக்குகைகளிற் புகுந்துகொண்டன. சில வானரங்கள் இந்தச்சேதுக்கட்டடந்தான் நமக்கு உயிரைக்கொடுத்ததென்றன. சிலவானரங்க ளதுகேட்டு, ஆயினுமந்த ராக்ஷசர்கள் இந்த அணையின்வழியாக நம்மைத் தொடர்ந்துவராமல் இதை உடைத்துவிட்டுப் போய்விடலாமென்றன. சிலவானரங்க ளெப்போது நாமெங்கேபோனாலும் அங்கே ஆகாசத்தின்மார்க்கமாய் வந்துவிடுவார்களே யென்கிற பயத்தினாலே, பிரஹ்மாசிருஷ்டித்த அஷ்டதிக்குகளினுஞ்சிதறி யோட்டம்பிடித்தன. சுக்கிரீவமகாராஜரும், ஆஞ்சநேயரும், அங்கதகுமாரனும், ஸ்ரீராமலட்சுமணர்களைவிட்டுப் பிரியமாட்டாதவர்களாகி நின்றார்கள். மற்ற வானரவீரர்களெல்லாரு மோசமுக் கடலைக்கடந்து வடகரைக்குப் போய்விட்டார்கள்.

ஸ்ரீராமர் விபீஷணரைநோக்கி இச்சேனைகளின்வரலாற்றைச் சொல்லென்ன வவர்சொல்லுதல்.

கவி.

இக்கொடும்படை யெங்குள தியம்புதி யென்றான்
மெய்க்கடுந்திறல் வீடணன்விளம்புவான் வீர
திக்கனைத்தினு மேழுமாத்தீவினுந் தீயோர்
புக்கடைத்திடப் புகுந்துள திராக்கதப் புணரி.

இப்படி வானரங்களும் வானரவீரர்களுந் தட்டுக்கெட்டுத்தடுமாறி யலைவதையும் - மூலபலசேனைகள் ஊர்த்தண்ணியங்கொண்டு பராக்கிரமித்து நிற்பதையும் - ஸ்ரீராமபிரான் கடாக்ஷித்து, ஓ விபீஷணா! இந்தப்படை இத்தனைநாள் எங்கேயிருந்ததென்று கேட்டார். விபீஷணாழ்வான் ஸ்ரீராமபிரானுடைய திருவடித்தாமரைகளில் வணங்கி, ஸ்வாமி! எல்லாத்திக்குகளிலு மற்றச் சப்தத்வீபங்களிலு மிருந்தவர்களைத் துஷ்டராவணனுடைய தூதுவர்கள்போயழைத்தபடியினாலே, இந்தச்சேனைக்கடல்வந்து சேர்ந்தது. கீழேழுலகத்திலிருந்துமேலேறி ஊழிகாலத்துச்சமுத்திரம்போல முன்னாலேவருகின்றசேனை இராவணனுக்குமூலபலமாகவிருந்த சேனைகளாகும். இதுதவிர இனிராக்ஷசர்களென்கிற பெயருள்ள ஒருபூண்டுங்கிடையாது. இப்போதிந்த அண்டத்திலுள்ள ராக்ஷசர்களெல்லாம் ஒருவரொழியாமல் தங்கள் பாவங்கள் பிடரியைப் பிடித்துத்தள்ள, மாண்டுபோகும்படியான விதியைப் பின்பற்றின புத்தியினாலே தூண்டப்பட்டு வருகின்றார்களன்றி வேறல்லவென்று விண்ணப்பம் பண்ணினார்.

மூலபலசேனைகட்குப் பயந்தோடின வானரசேனைகளை யழையென்று சுவாமி சொல்ல அங்கத னழைக்கச் செல்லுதல்.

கவி.

கேட்டவண்ணலு முறுவலுஞ்சீற்றமுங் கிளரக்
காட்டுகின்றனென் காணுதிபொருகளத் தென்று
ஓட்டின்மேற்கொண்ட தானையைப்பயந்துடைத் தூவோய்
மீட்டிகொல்லென வங்கதனோடினன் விரைந்து.

அதைக்கேட்ட பெரியபெருமாள் சிரித்துக் கோபங்கொண்டு, இவர்கள் படும்பாட்டை நான் காட்டுகின்றேன். சற்றேபார். ஓடிப்போன நம்முடைய வானரசேனைகளைப் பயந்தீர்த்துவிட்டு அடைத்துக்கொண்டுவரக் கடவாய். என்று நியமிக்கவும் அங்கதகுமாரன் வானரங்களை அழைத்துக் கொண்டுவருகிறதற்கு வேகமாயோடி வானரசேனையைக் கிட்டி, ஓ வானரங்களே! நான் சொல்லுகின்ற வார்த்தையைச் சற்றேநின்று கேட்டுவிட்டுப் போங்களென்று நல்லவார்த்தையாகச்சொல்லினான். அப்படிச்சொல்லியும் அவ்வானரங்க ளதற்குச் செவிகொடாமல், நாங்களொன்றுங் கேட்கமாட்டோமென்றுசொல்லிக்கொண்டேயோடினார்கள். அவ்வானரப் படைத்தலைவர்கள்மாத்திரந் திரும்பிச்

சமுத்திரத்தின் வடகரையிலுள்ள ஒருமலையின்மீது நின்றார்கள். அவ்வாறுநின்றவர்களை அங்கதகுமாரன் பார்த்து நீங்களெதற்கு ஓடிவந்துவிட்டீர்களென்று கேட்க, அவ்வானரவீரர்கள் சொல்லுகிறார்கள்.

அங்கதகுமாரனா லழைத்தசேனைகள் பதில்மொழிகூறல்.

கவி.

ஒருவனிந்திர சித்தெனவுள்ளவ னுளனால்
செருவினுற்றவை கொற்றவமறந்தியோ தெரியிற்
பொருவின்மற்றவ னிற்றிலனியாரொடும் பொருவா
னிருவர்விற்பிடித் தியாவரைத்தடுத்துநின் றெய்வார்.

ஐயா மிகவும் வெற்றியாளராகிய யுவராஜாதிபதியே! இந்த ராக்ஷசப்பெருஞ்சேனைகள் கூட்டங்கூடிக்கொண்டு வருகிறதைக் காணவில்லையா? நாமெல்லோரும் இறந்துபோனபிறகு என்னகாரியஞ்செய்யப்போகிறோம்? உயிருந்தாலும் உப்புமாறிப்பிழைக்கலாம். இந்திரஜித்தென்னும் ஒருவன்செய்த யுத்தத்தில் நாம்பட்டபாட்டை நீர்மறந்துபோய் விட்டீரோ? இவர்களுக்குச் சமானமானவர்கள் யாராவ திருப்பார்களோ இவர்களிற்றலைவர்களை இரண்டுபேர்வில்லைப்பிடித்துக்கொண்டு எப்படித்தடுத்து யுத்தஞ்செய்வார்கள்? திரிபுரசம்ஹாரகர்த்தாவான உருத்திரமூர்த்தி முதலானதேவர்கள் நம்மைபடைத்தவர்களுக்கு எல்லாவரங்களையுங்கொடுத்து இரக்ஷிக்கிறவர்களாயிருந்தாலும், இவர்களோடெதிர்த்து நிற்கமாட்டாதவர்களாய் ஒளித்துக்கொண்டிருக்கின்றார்கள். இப்படியிருக்க இந்தராமலட்சுமணர்களாகிய மனிதர்களா குரங்குகளைக்கொண்டு இந்தராக்ஷசர்களை ஜெயிக்கப்போகிறார்கள்? ஸ்ரீகைலாசபதியாகிய உருத்திரமூர்த்தியும் - சக்கரதரனாகிய விஷ்ணுவும் - கமலவாசனாகிய பிரமம்மாவும் - தேவர்கோனாகிய இந்திரனும் - ஒன்றுசேர்ந்துகொண்டு ஆபிரகோடி ஊழிபரியந்தம் இவர்களுடன் சண்டைசெய்து இவர்களி லொருவரையாவது கொல்வார்களேயானாலும் "வெற்றியாகும் அப்பப்பா!! இந்த எழுபதுவெள்ள வானரசேனைகளும் ஒருராக்ஷசன் தின்று உமிழ்வதற்குத்தான் போதுமோ? நாங்களென்ன தேவர்களைக்காட்டிலும் வல்லவர்களோ? அல்லவே! ஆலோசிக்குமிடத்தில் அற்பஜெந்துக்கள்தானே: இதனை நீர் நன்றாயாலோசித்துப்பாரும்.

அன்றியும்-இந்த லோகங்களையெல்லாஞ் சிருஷ்டித்த பிர்ம்மா தன் ஆயுசுபரியந்தம் கிரமமாகநின்று இவர்களுக்குத் தொண்டுசெய்யவேண்டி ஆசிர்த்துக்கொன்றாக எங்களை அவர்களுக்கு உணவிட்டாலும், அதற்குத்தான் நாங்களும் இந்தவானரங்களும் போதுமா? இவ்விராட்சசர்களுக்குத்தலைவனாக இருக்கின்றராவணனுக்குப் பத்துத்தலையும் இருபதுகைகளுமுண்டு. அவனொருவனை ஜெயிக்காமலிருக்கின்றோம். அப்படியிருக்க-இப்போதுவந்தவர்களுக்கு ஆயிரந்தலைகளும், இரண்டாயிரங்கைகளு மிருக்கின்றன. ஐயா! சமுத்திரமணலை எண்ணினாலு மெண்ணலாம். இவர்களை எண்ணத்தொலையாதே:

கும்பகர்ணனென்கின்ற ஒருவனுடைய அம்பைச் சஹிக்கவும் சக்தியில்லாமற்போயிற்று அவன்செய்தகொடுமையைத்தான் நாங்கள்பார்த்திருக்கின்றோமே: தேவர்களையல்லாமல் அறிவுடையவர்களும் உண்டோ? அவர்களே பயப்படுகிறார்களே: ஆ! தம்பி! நீர் சிறுபிள்ளையானபடியால் இளங்கன்று பயமறியாதென்பதுபோல ஒன்றியாய் எங்களைத் தேடிக்கொண்டு வந்தீர். ஆஞ்சநேயருடைய வல்லமையும், சுக்கிரீவருடைய பலமும், இராமலக்ஷ்மணர்களுடைய வில்வீரத்தன்மையும், தங்களுயிரைத் தாங்கிக்கொள்ளவு முடியமாட்டாது. ஆதலாலிவர்களால் எங்களுக்காக வேண்டியதென்ன? ஓ எங்களாண்டவனே! நாங்களுண்கிறதற்குக் காட்டிற் கனிகளுங்காய்களுமிருக்கின்றன வசிக்கின்றதற்கு மலைக்குகைக ளிருக்கின்றன. இந்தலோகத்தை மனிதர்களாண்டாலென்ன? இராக்ஷஸர்க ளாண்டாலென்ன? யாரும் உயிருடனே யிருந்தால்தானே புகழையும் ஐஸ்வரியத்தையும் அடையப்போகிறார்கள்? அதுபோல நாங்களிருந்தாலல்லவா எங்கள் பிள்ளைகளும், பெண்டுகளும், பிழைப்பார்கள்? எங்களை எங்கேயாவதுபோய்ப் பிழைத்துவிடுங்களென்று சொல்லவேண்டிய நீர், எங்களைச் சாகும்படியாக அழைக்கின்றீரே: இஃதுமக்குத் தர்மமாவென்று கெஞ்சினார்கள்.

அங்கதகுமாரன் சாம்புவந்தரைப்பார்த்து சிலவசனங்கூறல்.

கவி.

சாம்பனை யங்கனோக்கி வாலிசே யறிவுசான்றோய்
பாம்பணையமலன்மற்றிவ் விராமனென்றெமக்குப்பண்டே
யேம்பல்வந் தெய்தச்சொல்லித் தேற்றினையல்லையோநீ
யாம்பலம்பகைஞன்றன்னோ டயிந்திரமமைந்தோனென்னும்.

இவையனைத்துங்கேட்ட அங்கதன் தனியே சாம்புவந்தரைப் பார்த்து, ஐயா பெரியோனே! சேஷசாயியான ஸ்ரீயப்பதியே இந்த ஸ்ரீராமபிரானென்று முன்னாலெங்களுக்கு நீர் சந்தோஷமுண்டாகச் சொல்லவில்லையா? ஆம்பற்புஷ்பத்துக்குப் பகைவனான சூரியனிடத்தில் ஐந்திர வியாகரணங்கற்ற ஆஞ்சநேயருக்கொப்பான புத்திமானாகிய நீர், என்னைப்போலொத்தவர்கள் தப்பிதஞ்செய்தால் அவர்களுக்குத் தகுந்த புத்திசொல்லித் தேற்றுவிக்கின்றவரல்லவா? அப்படிப்பட்ட நீரே பயந்தவர்களைப்போல உயிரைக் காப்பாற்றிக்கொண்டீரே: இனியென்னகீர்த்தி: உம்முடைய விவேகத்தினாலே பிரயோசனமென்ன? வீரவான்களாயிருக்கின்ற பேர்கள் மரணமடைந்தாலும் தங்கள் வீரங்குறைவார்களோ? நாம் பயந்தபோதே பழியையும் பாவத்தையும் பூண்டுகொண்டோம். இனி அம்பினாலே ரணக்களத்தில் பிராணனைவிடுகிறதேயல்லாமற் பிராணனுடனேயும் இருக்கலாமா? மிகுந்த பயமடைந்து விஷத்துக்குச்சமமான நம்மை அமுதத்திற் கொப்பானவர்களென்று திருவுளங்கொண்ட ஸ்ரீராமலட்சுமணர்களைத் தனிமையாக விடுகிறதைவிடச் சாகிறதே நல்லதல்லவா? ஐயா சாம்பவரே! தானவர்கள் வானவர்கள் முதலானவர்களாலே கடையமாட்டாத பாற்கடலைக்கடைந்து அமுதங்கொடுத்த என்றந்தை வாலியானவன் ஸ்ரீராமபாணமொன்றாலே மாண்டுபோனதை மறந்துபோன காரணமென்ன? அவருடைய பாணத்தினாலே சமுத்திரராஜன் பட்டபாட்டை நீர் பார்க்கவில்லையா? இவர்களெத்தனை ராக்ஷசர்களாயிருந்தபோதிலும் அவர்களிடத்தில் தர்மமில்லையல்லவா? ஆகையால் தர்மத்தை பாவமும் ஜெயம்பெறுமென்று நீர் நிச்சயித்திருக்கின்றீரோ? நீரும் பயித்தியக்காரரைப்போல் இந்த அவிவேகிகளான வானரங்களுடனே ஓடிவந்துவிட்டது உம்முடைய விவேகத்துக்குத் தகுதியல்லவே என்று சொன்னான்.

சாம்புவந்தர் தன்னைத்தேற்றவந்த அங்கதகுமாரனுக்குப் பதின்மொழி விடுத்தல்.

கவி.

நாணத்தாற் சிறிதுபோது நல்கினனிருந்துபின்னும்
தூணைத்த திரடோள்வீர தோன்றியவரக்கர்வீரங்
காணத்தானிற்கத்தானைக் கறையிடற்றவர்க்குமாமோ
சேணற்பூவுண்ணும்வாழ்க்கைக் குரங்கின்மேற்குற்றமுண்டோ.

இப்படியங்கதன் சொல்லக்கேட்டசாம்பவர்சற்றுநேரம்வெட்கப்பட்டு வருத்தமுற்றுயோசித்து, அங்கதகுமாரனைப்பார்த்து இவ்வசனஞ்சொல்லுகிறார். ஐயா எருக்குந்தம்பப்போற்றிரண்ட புயங்களையுடைய அங்கதகுமாரரே இதுகாறு நீர் சொன்னவினைத்துங்கேட்டுநாணத்திற்கிலக்கானேனாயினும், இந்தராக்ஷசர்கள் வரும்போது இவர்களைப்பார்க்கவாவது- இவர்களுக்கெதிரே நிற்கவாவது அந்தரிஷிகண்டனாகிய உருத்திரமூர்த்தியினால்தானாகுமா? புஷ்பங்களையுண்டு வாழ்ந்துகொண்டிருக்கின்ற குரங்குகளிவர்களைக்கண்டும்இவர்களுக்குமுன்னிற்குமோ? இவர்கள்மேற்குற்றஞ்சொல்லலாகுமோ? தேவர்களும்அசுரர்களும் ஒருவரோடொருவரெதிர்த்து முன்னாளிற் சண்டைசெய்தபோது, அவர்களில் யார் என்கண்ணுக் ககப்படாமலிருந்தார்கள்? விசாலமான இந்த மூன்றுலோகத்திலுள்ள மஹா வல்லவர்களுக்குள்ளும், இவர்களுக்குச் சமமான கொலைபாதகர்கள் யாரிருக்கின்றார்கள்? முன்னிருந்த மாலியென்பவனையும், மாலியவானென்பவனையும் பார்த்திருக்கின்றேன். காலநேமியென்பவனைப் பார்த்தேன். இரணியனைப் பார்த்தேன். ஆலகால விடத்தையும் பார்த்திருக்கின்றேன். மதுவென்பவனும், அவன்தம்பி கைடவனென்பவனும், சமுத்திரத்தைச் சின்னபின்னப்படக் கலக்கினதையும் பார்த்தேன். அவர்களுக்கெல்லாம் இவர்களுக்கிருக்கின்ற வல்லமையில்லை. இவர்கள் மிகுந்தபலவந்தர்கள். அதிக வரம்பெற்றவர்கள். மாயத்தில் வல்லமையுள்ளவர்கள். சமுத்திரமணலினு மதிகப் பெருந்தொகையானவர்கள். இவர்களுடையபாணமோ பாவத்தினுமிகுந்தகொடியது. ஆயுதப்பயிற்சியிற் கைதேர்ந்தவர்கள்.

இப்படியிருந்தால் இவர்களைக்கண்டவர்கள் யார்தான் தோல்வியடையாதவர்கள்? தேவர்களே இவர்களைக்கண்டு ஓட்டம்பிடித்தார்கள்: எப்படியிருந்த

போதிலும்—ஐயா! சண்டையிற்பயந்து முதுகுகாட்டி யோடினால் மறுமையில் அவசியமாய் நரகமடைவார்கள், நாங்கள் திரும்பிவருகின்றோம். ஆனால் மேகம்போலும் திருமேனியையுடைய ஸ்ரீராமபிரான் சந்நிதியில் எப்படி வெட்கமில்லாமல் முகங்காட்டி நிற்போம்? என்று சாம்பவர்சொல்லக்கேட்ட அங்கதகுமாரன்—ஐயா பெரியோனே! பகைவர் மேலெதிர்ப்போகிறதும், அவர்களைக்கண்டு சமயம்வந்தால் ஓடிப்போகிறதும், மறுபடியும் எதிர்த்து வந்தவர்களை யடித்துக்கொல்லுகிறதும், வீரவான்களுக்கெல்லாம் ஏற்றகாரியமே: அதுநிற்கட்டும், நீர் மிகுந்தபுத்திமானாகையால் அடியேன் சொல்லுகிறதை ஆலோசித்துக் கேட்கவேண்டும். நீசொன்னதுக்கும் பயப்படவேண்டாம். நாமெல்லாம் ஒருமிக்கக் கூட்டமாகப்போய் நின்றாலு நம்மாலொன்றுஞ் செய்யமுடியாது. சக்கரவர்த்தித் திருக்குமாரரே அவர்களோடெதிர்த்துச் செயம்பெறுவாரேயானால் நாம்பிழைக்கின்றோம். இல்லாவிட்டால் அவருடனே நாமுமிறந்துபோகிறதே நமக்குக்கீர்த்தி யென்று அங்கதகுமாரன் சொல்லினான்.

அங்கதகுமாரனுடைய சொற்களினால் திரும்பிவரக்கண்டவானரச்
சேனைகளை ஸ்ரீராமபிரான் ஆதரித்திருவேன இளையபெருமாளுக்
காக்கியாபித்தல்.

கவி.

ஈண்டியதாலைசீங்க கிரட்டிதன்யாமேசென்று
பூண்டவெம்பழியினேடும் போக்தாம்போகதென்று
மீண்டனர்தலைவரெல்லா மங்கதனேடும்வீரன்
பூண்டவெம்படையைநோக்கித் தம்பிக்குமொழிவதானன்.

அத்தநீபுணர்நியக்தே யாக்கர்தானவுணரேதான்
எத்தலையுளரென்றாலும் யான்சிலையெடுத்தபோது
தொத்தாகனலின்வீழ்ந்த பஞ்செனத்தொலையுந்தன்மை
ஒத்தோரிடையூறன்டென் றுணர்விடையுதிப்பதன்றால்.

ஓ வானரவீரர்களோ நம்முடைய கூட்டமான சேனையெல்லாம் போர்க்களத்தைவிட்டு நீங்கியிருப்பானேன்? நம்மாலேநாமே எம்பழியைச்சம்பாதித்துக் கொள்ளவேண்டும்? நாம்போகலாம்வாருங்க ளென்றுகூறி அங்கதகுமாரனை யழைக்கவும்சாம்பவந்தர்முதலானவானரவீரர்களும், மற்றவானரசேனைகளும், திரும்பிவந்துசேர்ந்தார்கள். அப்போது பெரியபெருமாள் மூலபலம் வருகின்றதைப் பார்த்து இளையபெருமாளுக்கு நியமிக்கின்றார். தம்பி இலக்ஷ்மணா! இராக்ஷசர்கள்தா னகட்டும், அசுரர்கள்தா னகட்டும், எத்தனைபேர் வந்தபோதிலும் நான் வில்லெடுத்தபோது எரிகிற அக்கினியில் விழுந்த பஞ்சைப்போல் நாசமாவார்களே யல்லாமல், நமக்கொக்காது மிக்கட்டுமாயிட்டா தெர்பதை நீ அறிந்திருக்கின்றாய் அல்லவா. நம்முடைய வானரசேனைகள் தங்களை ரக்ஷிப்பவர் ஒருவருமில்லாமையாற் பயந்து ஓடிப்போய்த் தங்கள்

உறைவிடந்தேடிப்போயின. ஆனதால் நான் இந்தராக்ஷசச் சேனைகளையெல்லாங்கொன்று நீக்குகிற பரியந்தம் இராக்ஷசர்கள் யாராவதுவந்து வானரங்களை வருத்தப்படுத்த வொட்டாமல் நீ அவர்களைப் பாதுகாத்துக்கொண்டிரு. இந்தப்பக்கத்தி லிந்தச்சேனைகளை ஏவிவிட்டு அங்கேயிருக்கின்ற துஷ்டராவணன் வேறே தந்திரம் பண்ணிக்கொண்டு அந்தப்பக்கமாய் வருவானானால், வானரங்களையெல்லாம் கொன்றுவிடுவான். அவனை மிகுந்தகோபமுள்ள வில்வீரனாகிய உன்னையல்லாமல் யார் தடுப்பார்கள்? ஆனதால் ஆஞ்சநேயனு நீயும், சுக்கிரீவராஜனும், சீக்கிரமாக வானரசேனையைக் காத்துக்கொண்டிருக்கும்படியாகப் போய்விடுங்கள். நீங்கள் என்னைத் தனியேவிட்டுப்போகக்கூடாதென்று நினைப்பீர்களேயானால் நாம் தோற்றுப்போய் விடுவோம். என்று சொல்லக்கேட்ட இளையபெருமாள் ஸ்வாமிக்குத் தண்டன் சமர்ப்பித்துச் சொல்லுகின்றார்.

கவி.

அன்னதே கருமமைய வன்றியுமடியே னின்று
லென்னுனக் குதவிசெய்து மிதுபடையென்றபோது
சென்னியிற் சுமந்தகையர் தேவரே போலயாமும்
பொன்னுடை வரிவிலாற்றல் புறனின்றுகாண்டு நன்றே.

ஆண்டவனே! தேவரீர் திருவுள்ளப்படியே நடக்கின்றோம். அப்படிக்கில்லாவிட்டால் இந்தச் சேனைகளுக்குமுன்பாக அடியேங்களாலே தேவரீருக்கு என்ன ஒத்தாசை யுண்டாகப்போகின்றது? தேவர்களைப்போல அடியேங்களுஞ் சிரசிற் கைகூப்பிக்கொண்டு தேவரீருடைய வில்வீரத்தைப் பக்கத்தில்நின்று நன்றாய் சேவித்துக்கொண் டிருக்கின்றோம். என்று சொல்லிவிட்டு இளையபெருமாள் புறப்பட்டபோது ஆஞ்சநேயர் ஸ்வாமியைநோக்கி, ஓ எங்களாண்டவரே! அடியேனை அற்பக்குரங்கென்று விட்டுவிடாமல் அடியேன் தோளின்மீதேறி யுத்தத்திற் கெழுந்தருளுவீரானால், நல்லதென்று அடியேன் நினைக்கின்றேன். அப்படிக் கில்லாவிட்டால் நாய்போன்ற அடியேன் தேவரீர் பின்னின்று தேவரீருக்கு வேண்டிய அடிமைத் தொழிலிற் பிழையில்லாமல் நடத்துகின்றே னென்றார். அப்போது சக்கரவர்த்தித் திருக்குமாரர் ஆஞ்சநேயரைக் கடாக்ஷித்துச் சொல்லுகின்றார்.

தன்தோளிலாரோகணித்து யுத்தத்திற் கெழுந்தருளவேண்டு மென்றுவேண்டிய
அநுமானை இலட்சுமணருடன்கூட்டியனுப்புதல்.

கவி.

ஐயநிற் கியலாதுண்டோ விராவணனயலேவந்துற்
றெய்யும்விற்கரத்துவீர னிலக்குவன் றன்றேடேற்றால்
மொய்யமர்க்களத்தினுன்னைத் துணைபெறு தொழிலின்முன்பு
செய்யுமாவெற்றியுண்டோ சேனையுந்திசையுமென்றே.

ஐயா அநுமானே! உனக்குமுடியாத காரியமும் இருக்கின்றதோ? அதற்காகவல்ல நான் சொன்னது, இராவணன் அந்தப் பக்கத்தில்வந்து இளைய

னோடு எதிர்ப்பானேயானால் உன்னுதவியில்லாவிட்டால் அவன்செய்கிற யுத்தத்தில் வெற்றியுண்டாகுமா? அதுவுமல்லாமல் சேனையும் அழிந்துபோய்விடுமல்லவா? மிகுந்த அழகுள்ள தலைமயிரையுடைய இந்திரசித் தென்பவனுடைய யுத்தத்தில் இலட்சுமணன் எதிர்க்கின்றபோது, வேறேயாரைக்கொண்டு அவனை வெற்றிபெற்றான்? உன்னாலே அல்லவா? ஓ வீரர்களுக்குள்ளே மஹாவீரனே! எல்லா ஞானமும் வல்லோர்களுக்கு நாயகமாகி நிற்போனே! உன்னை ஒருக்காலும் நான் பிரியமாட்டேன். நீயேயிவர்களோடு ஜெயம்பெறக்கடவாயென்று நியமிப்பேன். ஆதலால் நீ இந்தவானரசேனையைக் காத்து, என்னுடனே அயோத்தியின் சுகத்தையெல்லாம் விட்டுவந்த சிம்ஹத்தையொத்த இளையவனைக்காத்து, வானராதிபதியாகிய சுக்கிரீவனைக் காத்து, தேவலோகத்தாரையும்-பூலோகத்தாரையும்-வேதமார்க்கத்தையும்-விருத்திசெய்யக்கடவா யென்றார். பிறகு வாயுபுத்திரர் மற்றொன்றுஞ் சொல்லாமல் இளையபெருமாளோடு கூடப்போனார். அப்பால் பெருமான் விபீஷணாழ்வானைப் பார்த்து, அப்பா! நீயும் என்தம்பிக்குப் பின்போய் துஷ்டர்களாகிய ராக்ஷசர்கள்செய்யு மாயத்தைத் தெரிந்து அவைகளைக்கெடுத்து நம்முடைய வானரசேனைகளைக் காக்காமற் போனாயேயானால், நமக்குவெகு கெடுதியுண்டாகுமென்றார். அவரும் அப்படியே நல்லதென்று புறப்பட்டார். சுக்கிரீவமகாராஜரும் தேவரீருடைய ஆஞ்ஞையின்படியே ஆகட்டும் பாக்கியமென்று இளையபெருமாள் பின்னேபோனார். மற்ற வானரவீரர்களெல்லாரும் இதுவே நல்லகாரியமென்று வானரசேனையைக் காத்துக்கொண்டு நின்றார்கள்.

ஆயிரவெள்ள மென்னும்படி வந்த மூலபலசேனைகளாகிய இராட்சசர்கள் யாவரையும் ஸ்ரீராமர் தனியே புகுந்து சங்கரித்தல்.

கவி.

வில்லினைத்தொழு தவாங்கி யேற்றினன்மெய்ந்நாண்மேருக்
கல்லெனச்சிறந்ததேனுங் கருணையங்கடலையன்ன
எல்லொளிமார்பிற்றீராக் கவசமிட்டிடையாவேதச்
சொல்லெனத்துணையவாளித் தூணியும்புறத்துத்தாக்கி.

இப்படி எல்லாரும் எம்பெருமான் திருவுள்ளப்படி போனபின்பு ஸ்ரீராமமூர்த்தியானவர் தெய்வத்தன்மை பொருந்திய கோதண்டத்தை வணங்கிக் கையிற்பிடித்து நாணேயிட்டு, மேருமலைக்கொப்பான திருமார்பில் கவசஞ்சார்த்தி, வேதவாக்கியம்போலக் குறைவில்லாத அக்ஷயத்தூணியையுந் தோளில்வரிந்து கட்டினார். அப்போது நூறுயோசனை வட்டமாக எள்ளிட இடமில்லாமல் நிறைந்திருக்கின்ற மூலபலசேனையின் முன்னணிவந்து ஸ்வாமியைச் சுற்றிக்கொண்டு, அவர்மேற் பிரயோகித்த ஆயுதங்க ளொன்றோடொன்று தாக்குண்டு நெருங்குவதைத் தேவர்கள் கண்டார்கள். உடனேயத்தேவர்களுடைய தேஹமெல்லாம் நடுங்கிப்போய்விட்டது. சேனுபராகம் ஆகாசமுழுது மூடிவிட்டது. அப்போது தேவர்கள் ஸ்ரீராமரைநோக்கி,

ஓ ஸ்ரீயப்பதியே! அடியேங்களுக்கு ரக்ஷகமாக எழுந்தருளியிருக்கின்றகவசமே! ஒருவராலும் அளவிடவொண்ணாத சமுத்திரத்துக்கொப்பான ஸ்வரூபனே! தர்மத்தின்பெருக்கே! வேதபாராயணர்களுடைய வல்லமையே! இந்தச்சேனைகளின்மேலெதிர்த்துப் போகிறதற்குத் தேவரீரல்லாமல் வேறொருவரால் முடியுமோ? தேவரீருடைய திருவுளப்படியேசெய்து முடித்தருளக்கடவீரென்று ஸ்தோத்திரம் பண்ணினார்கள். மகாரிஷிகள்முதலான பரமவைதிக தர்மமார்க்கத்தை நிறைவேற்றுகின்றவர்கள் பெருமானுடைய தனிமையையும் இராக்ஷசச்சேனையின் பெருமையையும் பார்த்துச் சஹியாதவர்களாகி, கண்களில் கண்ணீர் பெருக்கெடுக்கத்தக்கதாக அழுது மனம்பதைத்து, பாவிகளாகியவெல்லாரும் தோற்றுப்போகக்கடவர்கள். ஸ்ரீராமபிரான் ஜெயம்பெறக் கடவர். என்றாசிர்வாதம் பண்ணினார்கள்.

அப்போது மூலபலசேனையானது ஸ்ரீராமமூர்த்தியைப்பார்த்து, சபாஸ், தனக்குதவியாயிருந்த சேனைகளெல்லாம் ஓடிப்போய் ஒருவருந் துணையில்லாமல் தனியாய்நின்றும், நம்முடைய பெருஞ்சேனையைக் கண்டு கொஞ்சமும் பயப்படாமல் பாணங்களைப் பொறுக்கிக்கொண்டு வீரத்தன்மைகுறையாமற் பிரயோகித்துக்கொண் டிருக்கின்றானே: இதுவே வெற்றிகொள்வதிலும் சிரேஷ்டமல்லவா? மாயையன் எல்லாமறிந்தவ னானபடியினாலே பொய்சொல்லமாட்டான். அவன் மெய்யேசொன்னான். திரிபுரசம்மாரியான சிவபிரானுக்குமொருதேரிருந்தது. தேவர்களெல்லாஞ்சேனையாக வந்தார்கள். ஆச்சரியபூதரான விஷ்ணுமூர்த்தியானவர் நங்குலத்தைக்கருவறுத்தநாளில்கருடவாகனத்தின்மீதுஅநேகதேவகணங்களுடனேவந்தெதிர்த்தார். இவன்தனித்துக் கால்நடையாய் வந்து பயப்பட்டொளியாமல் நிற்கின்றானே: நாம் ரதகஜதுரகங்களோடுசிம்ஹம்யாளிமுதலானவைகளுடனேமேருமலைக்குச்சமமான தேகத்தை யுடையவர்களாய்ச் சப்தசமுத்திரம்போல வரவும், நம்மைக்கண்டு சிறிது பஞ்சாமல் - வாருங்கள்; வாருங்கள்: என்றழைக்கின்ற இந்தமனிதனுக்கு இந்தலோகத்தில் ஓடிப்போகப் போக்கிடமெங்கே? நம்மிடத்தில் நின்றும் எப்படி உயிர்தப்பிப் போகப்போகிறான்? என்று நெருங்கி ஆர்ப்பரித்து ஒருசிம்மத்தை அநேக யானைகள்போய் வளைந்ததுபோலச் சூழ்ந்துகொண்டார்கள்.

அம்மாத்திரத்தில் நல்ல தாகட்டுமென்று கீழேழுலோகத்தையு மேலேழுலோகத்தையும் ஒன்றாகத் திரட்டிச்செய்ததையொத்த தமது வெற்றிபொருந்தியவில்லை வேதநாயகராகிய ஸ்ரீராமமூர்த்தியானவர் குணத்தொனி பண்ணினார். அப்போது ராக்ஷசர்களுடைய மனதிலுள்ள கோபமெல்லாம் அடங்கிப்போய்விட்டது. காவலாகவந்த யானைகளுக்கு மதமுலர்ந்து போய்விட்டது. நின்றவீரர்கள் வாயுலர்ந்து போனார்கள். குதிரைகளெல்லாம் காலோய்ந்துவிட்டன. இராக்ஷசர்களுடைய வல்லமைகளெல்லாம் தளர்ந்துவிட்டன. மூலபலசேனைகளை இப்படி யாகுமானால் ஸ்வாமியின் வெற்றியைப்பற்றிச்

சொல்லவும்வேண்டுமோ? குதிரைகளும் சிம்மங்களும் தம்மைப்பூட்டியிருக்கின்ற சக்கரங்களுடன்கூடிய தேர்களை முறித்துவிட்டு ஓட்டம்பிடித்தன. எங்கு மிந்தப்பிரகாரமாக ஓரார்ப்பாட்டம் பிறந்தது. இப்படி நடந்தகாலத்தில் அந்தச்சேனைகளுக்கு இடந்துடித்த துர்நிமித்தத்தைக் கண்டு தேவர்களெல்லாம் குதித்துக் கூத்தாடினார்கள். அப்போது வேதப்பிரதிபாத்திய வஸ்துவான இராமமூர்த்தியானவர் இராக்ஷசர்கள்மீது மின்னல்களைப்போலொத்த பாணங்களைத்தொடுத்தார். பின்னும் யாளிகளின்மீதும், அவைகளைச் செலுத்துகிறவர்களின்மீதும், யானைகளின்மீதும், யானைப்பாகர்களின்மீதும், குதிரைகளின்மீதும், குதிரைப் பாகர்களின்மீதும், வீரவான்களுடைய தேர்களின்மீதும், வாளின்மீதும், வில்லின்மீதும், பூமியிலிருந்தெழும்பின தூளியின்மீதும், ஸ்ரீராமர் அம்புகளை அபரிமிதமாகப் பிரயோகித்தார். மலைகள் விழுந்தனபோல யானைகள் விழுந்தன. அந்தயானைகள் விழுந்தனபோல வீரர்களுடைய தலைகள் விழுந்தன. அந்தத்தலைகளைப்போற் குதிரைகள் கால்முறிந்து விழுந்தன. குதிரைக்கால்கள் அறுந்து விழுந்தனபோல வில்முறிந்துவிழுந்தன. அந்த வில்லுகளைப்போல வெற்றிக்கொடிகள் முறிந்து விழுந்தன. சந்திரர்களிற்று விழுந்ததுபோல இராக்ஷசர்களுடைய வக்கிரதந்தங்கள் அறுந்துவிழுந்தன.

அக்கால் கோடைகாலத்திலே நாலுபக்கங்களிலும் காற்றுவீசும்போது ஆகாசத்திலுள்ள மேகக்கூட்டங்கள் அபரிமிதமாய் வருஷிக்கிறதுபோல் ஸ்ரீராமபாணங்கள் பாய்கிறபடியினாலே, யானைவீரர்களும் - குதிரை வீரர்களும் - தேர் வீரர்களும் — தங்களூர்திகளோடு மாண்டுபோனார்கள். அதனால் நாலுபக்கங்களிலு மிரத்தவெள்ளங்கள் ஓடுகிறதைப் பார்த்து அவரவர்கள் தைரியமற்றுப்போனார்கள். மேகங்களுந் தோற்றுப் போகும்படியாக ஸ்ரீராமபிரான் சொரிகிற பாணவருஷங்கள் பாய்வதினால் இராக்ஷசர்களுடைய விழித்தகண்களும், எடுத்தகைகளும், வளைத்தவில்லுகளும், எறிந்தவேல்களும், வீசியவாள்களும், சப்திக்கின்ற வாய்களும், நடக்கின்றகால்களும், பூரித்த தோள்களும், சின்னபின்னப்பட்டுப் போய்விட்டவைகளே யல்லாமல்; அவர்கள் பிடித்திருந்த உறைகழற்றிய ஆயுதங்கள்செய்த தொன்றையும் ஒருவரும் பார்க்கவில்லை. இராட்சசர்கள் தொடுத்துக்கொண்டிருந்த அம்புடனே விற்கள் துணிந்து விழுகிறதற்கு முன்பாகத் தைரியங்கொண்டெடுத்த வாள்களுடனே தோள்களு மற்றுவிழுந்தன. உடனே வேகமாய் நடந்துகொண்டிருந்த கால்களுங் கண்டங்கண்டங்களாய் அறுந்தன. இப்படியாகும்போது மிருந்த கோபங்கொண்டு அந்தவீரர்கள் என்னசெய்யமாட்டுவார்கள்? தாங்கள் வரம்பெற்றதனால் துணிவுகொண்டு யுத்தத்திற்செலுத்தின குதிரைகளில் ஒவ்வொன்றையும் ஸ்ரீராமபாணங்கள் நூறுநூறாய்ப் பாய்ந்து கொல்லுவதினாலே, குளம்புகள் துணிபட்டு — கண்கள் சிதறுண்டு — சேணங்கள் அறுந்து - மார்பும்பிளந்து விழுந்தவைகளே யல்லாமல் நாவியோடச் சக்தியுள்ளவைகளோ? தேர்வீரர்களென்று பேர்வைத்துக்கொண்டு வந்த பாவிகள்

அதைச் செலுத்தலாமென்று நினைத்தால், முன்புமாண்டு குப்பற்குப்பலா யுயர்ந்துகிடக்கின்ற பிணங்களினாலே அஃதப்புறமிப்புறம் நகர்கிறதற்கு முடியாமற் போயிற்று. அப்படியொருவேளை பேர்ந்ததேயானால் அபரிமிதமான பாணங்கள் பாய்கிறபடியினாலே ஒன்றுநூறாய் உடைந்துதிர்ந்து போனதேயல்லாமல், வேறொன்றுஞ் செய்யமாட்டாமற் போய்விட்டன.

எட்டுத்திக்கிலுமிருந்த சமர்த்தர்களான இராட்சசர்களெல்லாம் ஸ்வாமியைக்கிட்டி ஒருவரும் பிழைத்துப்போனவர்களில்லை. வரிசைவரிசையாக எதிர்த்துவந்த யானைகள் ஸ்ரீராமபிரானுடைய அம்புகள் பாய்வதினாலே வெகுநேரத்திற்கு முன்பாக அம்புபட்டு ஓடிவந்து விழுவதுபோலச் சுருண்டுவிழுந்தனவைகளே யல்லாமல், வேறென்னக்காரியஞ்செய்ய வல்லவைகளாகும்? தடாகத்தில் மலர்ந்திருக்கின்ற தாமரைப் புஷ்பத்துக்கொப்பான திருக்கண்களையுடைய சக்கரவர்த்தித் திருக்குமாரர் ஒருபாணத்தைப் பிரயோகிப்பாரேயானால் அது நூறுகோடிப்படைகளைச் சம்ஹரிக்குமாகையால், இறந்த சேனைகளைக் கணக்கிட முடியாமற் பிரஹ்மதேவனும் பிரமித்துப்போய்விட்டான். அந்த யுத்தகளத்தில் மாண்ட சீவர்களைப் பிடிக்கவந்த யமனுக்கும், அந்தப்பாணத்தின் வேக முண்டாகமாட்டவில்லை. ஸ்ரீரகுகுல வம்சோத்பவராகிய ஸ்ரீராமமூர்த்தி யெய்தபாணங்கள் இராக்ஷசர்களுடைய கிரீடங்கள் தரித்த தலைகளைக் கோடிகோடியாக அறுத்துச் சிதறிவிட்டுப் பின்னுமிருந்த வேகங்கொண்டு ஓடுவதினாலே, அவைகளின் வாயினுண்டாகிற அக்கினியானது கொடிகள்கட்டியிருக்கிற தேரின்மேலும் யானைகளின்மேலும்பட்டுக் கோடைகாலத்திடிவீழ்ந்து பற்றியெரிகிற காடுபோல எரிந்தன. பாணங்கள் பட்டுமுறிந்த வேலாயுதங்கள் வாளாயுதங்கள் முதலான ஆயுதங்கள் மேலெழும்பியிருந்த வேகங்கொண்டுபோய்ச் சமுத்திரத்தில் வீழ்ந்து உஷ்ணங்கொண்டு பற்றியெரிவதினால், சமுத்திரநீர்வற்றி அதிலுள்ள மீன்களெல்லாமாண்டு மணலில் அழுந்திப்போய் விட்டன.

உயுத்தத்தில் அரிந்தமனென்னும் திருநாமமுள்ள ஸ்ரீராமமூர்த்தியானவர் செலுத்தின திவ்வியபாணங்கள் சத்துருக்களுடைய ஊரெரிந்ததுபோலவும் பட்டணமெரிந்ததுபோலவும் பிரகாசித்துக்கொண்டு ஓடுகிறபடியினாலே, சமுத்திரஜலம் வற்றினதுபோலவே இரணக்களமுழுவது நெருப்பாய்ப் பற்றிக்கொண்டு சத்துருக்களுடைய தேர்களெல்லாம் எரிந்தன. அச்சத்துருக்களுடைய தலைகளுமெரிந்து சிதறிப்போய் விட்டன. ஸ்ரீராமபாணங்கள் பட்டு இராக்ஷசர்கள் பிடித்திருக்கின்ற வாள்களும், வேல்களும், அவர்களுடைய தோள்களும் அறுந்து; மலைப்பாம்புகளைப்போலத் துடித்தன. யானைகளின்மீதிருந்து யுத்தஞ்செய்ய பத்தனித்த வீரவான்களுடைய மடித்த வாய்களுடனே அவர்களுடைய தலைகள், இடிவிழுந்த மலைக்குலங்கள்போல பூமியில் விழுந்துவிட்டன. ஸ்ரீராமபாணம் ஒன்றுபாய்ந்தவுடனே இராக்ஷசர்களைச் சுமந்த கோரமானயாளிகள் சிம்ஹங்கள் ஓட்டம்பிடித்தன.

பிணங்களைத் தின்னுகிறதற்குப் பிசாசங்களு நாய்களும்வந்து சேர்ந்தன. கையிற்பிடித்த வாளுடனே இராக்ஷசர்களுடைய நூறுகோடிதோள்கள் அறுந்துபோயின. இராக்ஷசர்கள் வைத்துக்கொண்டிருந்த வருணாஸ்திரம், பிரிதிவியாஸ்திரம், நாகாஸ்திரம், கட்காஸ்திர முதலானவைகளெல்லாம் சின்னபின்னப்பட்டுப் போய்விட்டன.

ஊழிகாலச் சமுத்திரம்போலப் பெருக்கெடுத்து வருகின்ற இராட்சசரத்தவெள்ளத்தினுள்ளே சக்கரம்பூட்டிய தேர்களழுந்திப்போய், தேர்வீரர்களு முழுகிப்போய்விட்டார்கள். பாகர்களுடனே யானைகளழுந்திவிட்டன. குதிரைகளவ்விரத்தநீர்ச் சுழியிலகப்பட்டு மாண்டுபோயின. புழுதிபட்டுக்கிடந்த ரணக்களமுழுவதுஞ் சேறுபட்டுப்போயின. இராமபாணத்தாலெறியுண்ட இராட்சசர்களுடைய தலைகள் மேலே யெழும்பினதினாலே தங்களைக் காயப்படுத்துமென்று தேவர்கள் அங்குமிங்குமாக ஓடி யொதுங்கிப்போனார்கள். இப்படி மேலேயெழும்பிய தலைகள் திரும்பிப் பூமியில் விழ்கின்றபோது அங்கு சஞ்சரிக்கின்றவர்களெல்லாம் இராட்சசத்தலைகள் சிலாவருஷம்போல மேலேபடுமென்று வருத்தப்பட்டார்கள். உலோகங்களையெல்லாம் அழித்துவிடுவதான யுகாந்தகாலவருஷத்துக் கொப்பானதும் சிம்ஹத்துக்குச் சமமானதுமான இராமபாணங்களால், கண்களை விழித்துக்கொண்டு ஆகாசத்தில் மொய்த்துக்கொண்டிருந்த பாவிகளாகிய இராட்சசர்களுடைய தேகமெல்லாம் கருக்கொண்டமேகங்கள் விழ்கிறதுபோலவும், ஆகாசத்திற் போகின்ற விமானங்கள் விழ்கிறதுபோலவும், பூமியின்மீது விழுந்தன.

கவி.

தெய்வநெடும்படைக்கலங்கள்விடுவர்சிலர்சுடுகணைகள்சிலையிற்கோலி
எய்வர்சிலரெறிவர்சிலரெற்றுவர்சுற்றுவர்மலைகள்பலவுமேந்திப்
பெய்வர்சிலர்பிடித்துமெனக்கடுத்துறுவர் படைக்கலங்கள்பெறாதவாயால்
வைவர்சிலர்தெழிப்பர்சிலர்வருவர்சிலர் திரிவர்சிலர்வயவர்மன்னோ.

இப்படியானபோது மூலபல ராட்சசர்களிற் சிலர் தெய்வத்தன்மை பொருந்திய ஆயுதங்களை விடுவார்கள். சிலர் எரிக்கும்படியான பாணங்களை வில்லிற்பூட்டி எய்வார்கள். சிலர் ஆயுதங்களைச்சுழற்றி எறிவார்கள். சிலர் ஆயுதங்களாலோங்கிக் குத்துவார்கள். சிலர் மலைகளைக் கைகளிற்பேர்த்தெடுத்துக்கொண்டு சூழ்ந்துநின்று வீசியெறிவார்கள். சிலர் கைப்பிடியாய்ப்பிடித்துக்கொள்ளுகிறோமென்று கோபித்துக்கொண்டு நெருங்கிவருவார்கள். சிலர் ஆயுதங்களொன்றுமில்லாமற் சும்மா வாயினால் மாத்திரம் வைவார்கள். சிலர் அதட்டுவார்கள். சிலர் நெருங்கிவருவார்கள். சிலர் அங்குமிங்குமாகத் திரிவார்கள். அநேகம்பேர் ஆர்ப்பரிப்பார்கள். அநேகம்பேர் யுத்தஞ்செய்வார்கள். அநேகம்பேர் பிடிப்பிடியாய் பாணங்களை வாரிவாரி எறிவார்கள். அநேகம்பேர் சூலாயுதங்களை யெறிவார்கள். அநேகம்பேர் ராமபாணங்களுக்குப் பயந்து ஒளித்துக்கொள்ளுவார்கள். அநேகம்பேர் கண்களில் நெருப்புப்

பொறிபறக்கப் பார்ப்பார்கள். அநேகம்பேர் ஸ்ரீராமர்மேலெறிகிறதற்கு மலைகளைப் பேர்ப்பார்கள்.

இப்படியாகச் சூரியனை மேகங்கள்சூழ்ந்து மறைந்துகொண்டதுபோல ஸ்ரீராமரை அநேகராட்சசர்கள் சூழ்ந்துகொண்டு தங்கள்தங்கள் ஆயுதங்களைப் பிரயோகம்பண்ணினார்கள். அப்படியவர்களெறிந்த ஆயுதங்களும், எய்த ஆயுதங்களும், எறிகிறதற்கு மெய்கிறதற்கும் கையிலெடுத்த ஆயுதங்களும், பிடித்த ஆயுதங்களுமெல்லாம் ஸ்ரீராமபாணம் பட்டு முறிந்து துண்டு துண்டாய் விழுந்தன. ஸ்ரீராமரைவந்து சூழ்ந்துவளைந்த தேருங் குதிரையும் சில்லுச் சில்லாகவும் துண்டந்துண்டமாகவு நெரிந்துபோயின. வளர்ந்த மயிர்களுடனேகூடின இராட்சசர்களுடைய தலைகள் பலபலவென்று உருண்டன. இராத்திரி விடிந்து சூரியனுதயமானதுபோலச் சூழ்ந்திருந்த இராட்சசர்கள் மடியவே பருத்த திருத்தோள்களையுடைய ஸ்ரீராமபிரானும் வேறு பக்கத்தில் திரும்பினார். இப்படி கழனித்தொழிலாளர்கள் தாமரைப்புஷ்பங்களுடனே நெல்லைச்சேர்த் தறுக்கும்படியான செழிப்பையுடைய திருவயோத்திக்குத் தலைவரான ஸ்ரீராமருடைய பாணங்கள் பெரியோர்களுடைய சொல்லுக்கடங்காத துஷ்டர்களான வலியராட்சசர்கள் தரித்திருக்கின்ற கவசங்களைத் தூளாக்கி, அவர்களுடைய தேஹங்களைத் துண்டுதுண்டாகச்செய்து, பிடித்திருந்த வில்லைமுறித்து, தலைகளை அறுத்து, வல்லமையை ஒடுக்கி, வெற்றியைக்கெடுத்து, அவர்கள் மேலுமேலுமாக எறிகின்ற மலைகளையு நொறுக்கிவிட்டன. இயமட்டிலேபோகாமல் மரங்களைப் பிடித்துவந்த கைகளையுந் துண்டிட்டுவிட்டன.

தேவர்களெல்லாம் - யானைகள் காலிழந்துபோயின, உருவிச்சென்ற அம்பால் வாலறுந்துபோயின, துதிக்கையற்றுப் போயின, கழுத்தறுந்துபோயின, இளம்பருவமழிந்துபோயின, தந்தங்களற்றுப் போயின. என்று பேசுகிறார்களேயல்லாமல்; சமுத்திரத்துங் கொப்பானகஜங்கள்ஆசையற்றன. மேகம்போலச்சொரிகின்ற மதமழிந்துபோயின, வலியற்றுப்போயினவாகிய இந்தத் தொழில்களை ஒருவருங்கண்டுசொல்லவில்லை. இராட்சசர்கள் ஆகாசமார்க்கத்திற் பறக்கும்படியாக நூறுகோடி வேலாயுதங்களையும், நூறுகோடி அம்புகளையும் பிரயோகித்தார்கள். கொல்லுதலை தமக்குத் தொழிலாயுள்ள மலைகளுக்கொப்பான நூறுகோடி யானைகள் நடக்கின்றன. குதிரைகள் பூட்டின தேர்கள் நூறுகோடி ஓடுகின்றன. இவைகளையெல்லாம் தனி வீரராக எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீராமபிரான் சின்னபின்னப்படுத்தினார். ஒரு வில்லாளியான ராட்சசன் ஒரேகாலத்தில் சப்தலோகங்களையு நாசமாக்கிவிடுவானுக்கும். அப்படிப்பட்டவீரர்கள் அளவில்லாதவர்கள் நெருங்கிவந்து பாணவருஷங்களை ஸ்ரீராமச்சந்திரர்மீது சொரிந்தார்கள். அவர்கள் பிரயோகம்பண்ணின அஸ்திரங்களெல்லாம் ஸ்ரீராமபாணத்தாற் பொடிப்பொடியாவதுமன்றி, ஞானசம்பத் தில்லாதவர்களுடைய தலைகள் பெருமலையைப்

போல உருள அவர்கள் பெரியதேகங்களெல்லாம் சின்னபின்னப்பட்டுச் சிதைந்துபோயின.

ஆறாயிரம் யானைகளின் பலமுள்ளவர்களான ஒவ்வொரு ராட்சசர்கள் இராமபாணமொன்று உருவிச்சென்றபோது தங்கள்பேர்மாறிமலைகளென்று சொல்லுகின்ற உடலழிந்துபோனார்கள். ஆறாயிரவீரர்களின் தோள்களறுந்து அவைகளிலிருந்துபொழிகின்ற இரத்தவெள்ளத்திலமிழ்ந்தி நீந்திக்கரையேற மாட்டாமல்யானைகள் கூட்டங்கூட்டமாக இரத்தவாறுகளோடு கடலிற்போய் விழுந்துவிட்டன. ஏககாலத்திலே லோகத்திலுள்ள ஜீவகோடிகளையெல்லாம் பலகாரம்பண்ணும்படியான வல்லமையையுடைய யமனும்—அவனுடைய தூதர்களும்-காலனும்—இரண்டுகோடியுடையவர்களாக இருந்தபடியினாலே, அந்தச் சமர்க்களத்தில் நடந்தோடித்திரியமாட்டாமலினைத்தும் அந்தஉயிர்களையெல்லாம் பிடித்துக்கொண்டு தங்கள் வைவஸ்வத பட்டணத்திற்குப்போக வழி தெரியாமலு மயங்கிப்போய்விட்டார்கள். அழிந்ததேர்களும்-மாண்டயானைகளும் - சிதைந்த குதிரைகளும் — ஒன்றின்மேலொன்று அடுக்கடுக்காய்விழுந்து ஆகாசத்தைமுட்ட ஓங்கிக் குவிந்தவைகளேயானாலும், அதிகபலமுள்ள கவந்தங்கள் கூட்டங்கூட்டமாக வெழுந்து கூத்தாடுகின்றபடியால் அந்தப் பிணக்குப்பல்களெல்லாம் உயிர்பெற்றதுபோலவே விளங்கின. மாண்டராட்சசர்களுடைய ரத்தமானது கருஞ்சூரியனைப்போ லெழுந்தருளிய தமது திருமேனியில் தெறித்து ஊழிக்காலத்தில் உலோகங்களையெல்லாம் சுட்டெரித் துண்ணும்படியான பிரளயகால சூரியனைப்போலப் பெருமாள் பிரகாசித்தார். பின்னும் சத்ருக்களுடைய தேகத்திலிருந் தொழுகின இரத்தத்திற் குளித்தெழுந்தவரைப்போலவு மிருந்தார்.

இந்தப்பிரகார நெருப்புக்குச் சமானமாகவும் இடிக்குச்சமானமாகவு மிருந்த ராமபாணங்கள் ஓயாமலறுக்கிறபடியினாலே வெகு மாயமுள்ளவர்களான ராட்சசர்கள் தலைகளிழந்து மாள்கின்றதைப் பார்த்திருந்தும், பின்னேயிருக்கின்ற மற்றராட்சசர்கள் தங்கள் வல்லமை குறையாதவர்களாய்த் தங்கள் தேகத்தினுள்ளே யிருக்கின்ற பிராணனைக் கொடுத்துவிட எத்தனித்து ஸ்ரீராமமூர்த்தியை ஈக்கள் மொய்த்துக்கொண்டதுபோல மொய்த்தார்கள். ஸ்ரீராமபிரானும் அந்த ஈக்களைக்கொல்லுகின்ற தேனையொத் திருந்தார். இப்படித் தம்மை மொய்த்துக்கொண்ட பின்னணியான மூலபல சேனைகளின்மேல் ஒரு இமைப்பொழுதுக்குள்ளாகத் தம்முடைய வில்லிற் பாணங்களைப்பிரயோகித்தெய்து அந்த ராட்சசர்களுடலமெல்லாம் கழற்காயைப்போலச் செய்துவிட்டு, அவர்கள் தேர்களும் யானைகளும் குழம்பாகும்படி தம்முடைய திவ்ய பாணங்களினாலே குழப்பிவிட்டார். அப்போதுவந்த ராட்சசர்களில் அநேகர் பிராணனை யிழந்தார்கள். அநேகர் ஓட்டம்பிடித்தார்கள். அநேக ருயிர்தப்பிப் பிழைத்தார்கள். அநேகர் வருத்தப்பட்டுப் போனார்கள். அநேகர் யுத்தத்தைக்கண்டு சந்தோஷப்பட்டார்கள். அநேகர் மாண்டுபோ

னார்கள். அநேகர் உருண்டுபோனார்கள். அநேகர் புரண்டு போனார்கள். அநேகர் பாணங்களாற் சாம்பலாய் வெந்துபோனார்கள். அநேகர் கரிந்துபோனார்கள். அநேக ரெழுந்து நின்றார்கள். அநேகர் கீழேவிழுந்தார்கள். அநேகர் குடல்சரிந்து போனார்கள். அநேகர் தலையறுந்துபோனார்கள். அநேகர் திசைதெரியாமல் மாண்டவர்களுக்கு முன்னே எதிர்ந்து நடந்துபோனார்கள். அப்போதுமாண்ட ராக்ஷசர்களுடைய தேகத்தின்மீது இரத்தினகுண்டலங்கள், பாகு வலயங்கள், மகரக்குழைகள், இரத்தினகிரீடங்கள், மணிக்கண்டிகைகள், கவசங்கள், வீரகண்டாமணிகள், ஆயுதங்களாகிய இவைகள் மேகத்தில்நின்று வருகின்ற மின்னல்களைப்போலச் சிந்திச்சிதறிப் பிரகாசித்தன.

ஸ்ரீராமபிரான் இராக்ஷசர்களின் கண்ணுக்கு எங்குந்தானா யிருப்பதாகச் சாரிகை வந்து கொல்லுதல்.

கவி.

முன்னேயுளன் பின்னேயுளன் முகத்தேயுளனகத்தின்
றன்னேயுளன் மருங்கேயுளன் றலைமேலுளன் மலைமேல்
கொன்னேயுளனிலத்தேயுளன் விசும்பேயுளன் கொடியோர்
என்னேயொருகவெப்பென்றிட விருஞ்சாரிகை திரிந்தான்.

அக்கால் மூலபலராட்சசர்கள் இராமனென்பவன் எங்களெதிரு மிருக்கின்றான். எங்கள் பின்னுமிருக்கின்றான். எங்கள் முகத்திலுமிருக்கின்றான். எங்கள் உள்ளத்திலு மிருக்கின்றான். எங்கள் பக்கத்திலு மிருக்கின்றான். எங்கள் தலைமேலுமிருக்கின்றான். தலையின் உச்சியிலு மிருக்கின்றான். பூமியிலுமிருக்கின்றான். ஆகாசத்திலு மிருக்கின்றான். இதென்ன ஆச்சரியம்? இப்படியும்ஒருமனிதனுக்குவேகமுண்டாயிருக்குமோ? என்றுசொல்லும்படியாய் சாரியுலாவிவந்தார், இதோ எனக்கெதிரே யிருக்கின்றான் எனக்கெதிரே யிருக்கின்றானென்று சொல்லும்படிச் சுவர்ணமயமானகோதண்டத்தைக் கையிற்பிடித்தபடியே அவர்களுடனே யுத்தஞ்செய்தும்அந்தமூலபலப் பெருஞ் சேனைக்கடல் நிலைத்திருப்பதால், ஒவ்வொருவருக்கு மவரவர்களுடைய நிழலைப்போல ஸ்ரீராமமூர்த்தியானவர் திரிந்தார். ஆழ்ந்த சப்தசமுத்திரத்திலும் ஏழுலோகங்களிலும் அந்த மூலபலச்சேனைக்கடல் நிறைந்திருந்தமையால், அநேகதந்திரங்களை யறிந்த அதிகமாயைகளை யுடையவர்களாய்ப் பிறந்த அவர்களுடைய உள்ளத்தின்க ணிருப்பதன்றியும் அவர்களுக்குப்புறத்திலும் வியாபித்திருக்கின்ற தம்முடைய ஸ்வபாவத்தின்படியே எங்கு மிராமனா யிருந்தார்.

இப்படி ஸ்ரீராமர் பலவிதமான சாரிசுற்றி வருகிறதைத் தேவர்கள்பார்த்துச் சுவாமிசாரிவருகிறாரென்று சொல்லாமல், இன்னவிடத்திற்குப் போனார் இன்னவிடத்தில் நுழைந்தாரென்றுமறியாமல், ஓ! ஓ! ஸ்வாமியானவர் தம்முடையயதார்த்த நிலைமையையெடுத்துக்கொண்டு உலோகமெல்லாந் தானேயாய் நிறைந்து விட்டார். இனி நம்மை ரக்ஷிப்பதற்கு அவதரித்த

வர் இராக்ஷசசம்ஹாரஞ் செய்கிற செய்கையை விட்டுவிட்டார்போலே யிருக்கிறதென்று சந்தேகித்தார்கள். அப்போது ஸ்ரீராமமூர்த்தியானவர் சண்டமாருதக்காற்றினால் முறிந்து அடிபட்டுப் பூமியில்விழுந்த மலையைப்போலவு மரங்களைப்போலவும் துஷ்டச்செய்கையையுடைய இராக்ஷசர்கள் துண்டுதுண்டா யறுந்துவிழும்படி அதிவேகமாய்ச் சாரிசுற்றிவந்து பாணங்களைப் பிரயோகித்து, ஆகாசத்தையளந்த திரிவிக்கிரமமூர்த்தியைப்போல விளங்கினார். மதத்தயானைகளும் - பெரியதேர்களும் - வேகமுள்ள குதிரைகளும் - வலியுள்ள யாளிகளும் - வல்லமைபொருந்திய சிம்ஹங்களும் — அதிக கோபிஷ்டர்களான ராக்ஷசவீரர்களுமாய் ஆகாசமு மறைந்துபோகும்படி மடிந்து மலைமலையாகக் கிடக்கிற பிணக்கும்பலின் மீது, ஸ்ரீராமமூர்த்தியானவர் க்ஷீரசாகரசயனியாகிய ஸ்ரீமகாவிஷ்ணுவைப்போலத் தாவி நடந்தருளினார்.

ஸ்ரீராமபிரானுடைய பாணங்கள் அழுந்தலால் ஆகாயத்தைத் தொடுகின்ற கொடிச்சீலையும், அழகிய மேற்றவிசின் பாரத்தோடு மதத்தயானைகளும், ஜலத்தில் பிரசண்டமாருத மோதுதலால் சரக்கேற்றிய கப்பல்கள் மூழ்கினதுபோல இராட்சசர்களி னிரத்தவெள்ளத்தி லழுந்தின. ஸ்ரீராமச்சந்திரருடைய அம்புகளா லறுபட்டு மேலெழும்பிவிழுகின்ற இராக்ஷசர்களுடைய மலைபோன்ற தலைகள், உயுத்தப்பெண்ணான விசயலட்சுமி தன்னுடைய செங்கையால் அம்மானைக் கையாடுகிறதுபோலிருந்தன. வாரிட்டிறுக்கிய வீரகண்டாமணிதரித்த இராக்ஷ[illegible]வக்கிரதந்தங்கள் ஸ்ரீராமபாணங்களால் துணிபட்டு யானைகளின்வயிறுகள் தோறும் விழுவது, ஆகாசத்திலுள்ள மேகங்களுக்குள் மூன்றாம்பிறைச் சந்திரர்கள் மறைவதுபோ லிருந்தன. இராக்ஷசர்களுடைய வக்கிரதந்தங்களும் - மதயானைகளுடைய வெண்மையாகிய தந்தங்களும் — இரணகளத்திற் குப்பல்கும்பலாகக் குவிந்துகிடந்து, வெகுகாலமாக உதித்துவந்த மூன்றாம்பிறைச் சந்திரர்கள் பூமியிலுதிர்ந்து கிடந்தாற்போலத் தோன்றின. அளவில்லாத ராக்ஷசர்களிறந்து அவர்களுடைய ரத்தவெள்ளச் சமுத்திரம் பூமியெல்லா நிறைந்து பரவினபடியினாலே, சப்ததீவுகளிலிருந்து வந்த ராட்சசர்களெல்லாம் பூமியில் நிற்கமாட்டாமல் உயர்ந்தமலைகளின்மே லேறிக்கொண்டார்கள். இராக்ஷசர்களுடைய தேகத்திலுள்ள பிராணன்களெல்லாம் வீரசுவர்க்கத்தில் நிறைந்துவிட்டன.

அப்போது ராவணனுக்கு உதவிசெய்பவனாகிய வன்னியென்கிற மூலபல ராக்ஷசசேனாதிபதி தனது மூலபல சேனையைப்பார்த்து, ஒருமனிதன் நம்முடைய சேனைகளைக் கொன்றுகொண் டிருக்க மலைபோல ஆகாரமுள்ள நாமெல்லாம் அவனை வெற்றிகொள்ளமாட்டாமற் பல்லைக்கடித்துக்கொண்டு சும்மாயிருக்கலாமா? அந்த மனிதனுடைய அம்புகள் நம்மீதுபடுகிறதற்கு முன்பாக நாமெல்லாம் கூட்டமாகக்கூடி அவன்மேல் விழுந்தாலும், அவன் மாண்டுபோவா னல்லவா? காலிறங்கிப்பெய்கின்ற மேகத்துக்குச் சமானமாகிய ஓ இராக்ஷசர்களே! நீங்களெல்லாம் பிரமைகொண்டு மயங்கிப்போனீர்

களா? நம்முடைய ஆயிரவெள்ளஞ் சேனையும் அடிபட்டு மாண்டுபோனபிறகு இலங்காபட்டணம் ஆராளவிருக்கின்றது? ஆகையால் இப்போதிருக்கிற நீங்களெல்லாமாவது ஒருமிக்க அந்தமனிதன்மீது பாயுங்களென்று சொன்னான்.

அதைக்கேட்ட மாத்திரத்தில் அப்போ திருந்த எழுவெள்ள ராட்சசசேனைகளும் அதிககோபங்கொண்டு வந்து ஸ்ரீராமரைச் சுற்றிவளைந்து, ஒருமலையின்மீது சப்தமேகங்களும் பெருவருஷம் வருஷித்ததுபோல ஆயுதப்பிரயோகம் பண்ணினார்கள். அப்படியவர்கள் தம்மீது பிரயோகித்த ஆயுதங்களை யெல்லாம் ஸ்ரீராமபிரான் துண்டு துண்டாய்த் தறித்துவிட்டு, தேரும் யானையும் - குதிரையுமாண்டு பூமியில் விழும்படிக்கொன்று, அந்தச் சேனைகளெல்லாம் சின்னபின்னப்பட்டுச் சிதறிப்போகும்படி சகஸ்திர முகாஸ்திரங்களை அபரிமிதமாகப் பிரயோகித்தார். அப்படி ஸ்ரீராமமூர்த்தி பிரயோகித்த சகஸ்திர முகாஸ்திரங்களினால் எங்கு மிரத்தப்பிரவாக நிறைந்துவிட்டபடியினாலே, கொள்ளிவாய்ப் பிசாசங்கள் தீபத்தைப்போல அக்கினியைக் கக்கிக்கொண்டு கூத்தாடின. கொழுப்போடுங்கூடின இரத்தப் பிரவாகத்தினால் நிறைந்த பெருங்கடலாகிய செவந்தவஸ்திரத்தை யுடையவளும், இரத்தமயமாகிய சந்தனத்தைப் பூசிக்கொண்டவளுமாகிய பூமிதேவி பிரகாசித்தாள். ஸ்ரீராமமூர்த்தியும் செவந்தநிறமாக அலங்கரித்தவரைப்போலத் தோன்றினார். இலவணசமுத்திரம் — நெய்சமு[illegible]சமுத்திரம் — தயிர்சமுத்திரம் — பாற்சமுத்திரம் - கருப்பஞ்சாற்றுச் சமுத்திரம் - சுத்தோதகச் சமுத்திரம் - என்று சொல்லப்பட்ட சப்தசமுத்திர[illegible]வெள்ளக்கடல்போல இரத்தத்தினால் நிறைந்து, ஸ்ரீராமர் திருக்கரத்திலுள்ள ஒருவில்லினாலே சற்றுநேரத்திற் குள்ளாக முன்கொண்ட பழையபேர் மாறிவிட்டன. ஸ்ரீராமருடைய கோதண்டமானது ஒரு தொடைக்குக் கோடி அம்புகள் பிரயோகித்துக்கொண்டு மூன்றாம்பிறைச் சந்[illegible]போல வளைந்தபடியே இருந்தது. இராட்சசர்கள் என்றைக்கு முடிந்து விடுவார்களோ என்னும்படியாக அளவற்றவர்களா யிருந்தார்கள்.

இராட்சசர்களிற் சிலர் ஸ்ரீராமர்பேரில் அஸ்திர சஸ்திரங்களைப் பிரயோகிக்கத் தொடுத்தார்கள். சிலர் ஆரவாரித்தார்கள். சிலர் ஆயுதங்களை எறிந்தார்கள். சிலர் ஸ்ரீராமர் பிரயோகிக்கிற பாணங்களைக்கண்டு தங்கள் வல்லமையுடனே எதிரேவந்து தடுத்தார்கள். சிலர் தடுக்கமாட்டாமல் கையசந்து போனார்கள். சிலர் ஓட்டம்பிடித்தார்கள். சிலர் சாய்ந்துவிழுந்தார்கள். சிலர் மதத்தயானையைப்போலக் கோபங்கொண்டு வந்தார்கள். சிலர் அண்டம் வெடிக்கும்படி கூவினார்கள். சிலர் அதிகமாய்ச் சீறிவந்தார்கள். சிலர் அஸ்திரப்பிரயோகம் பண்ணினார்கள். இப்படிப் பலபல செய்கைகளைச் செய்துகொண் டிருந்தவர்களெல்லாம் ஸ்ரீராமர் பிரயோகித்த பாணங்களினாலே துண்டுதுண்டாக்கி இரணகளத்தில் வீழ்ந்தார்கள். ஸ்ரீராமர் தமது கோத

ண்டத்தில் ஆயிரம் பாணங்களைத் தொடுத்துப் பிரயோகிப்பாரேயானால், அந்தப்பாணங்கள் பாய்ந்து மாளுகின்ற இராட்சசர்கள் ஆயிரம்பேர்களேயல்ல; பதினாயிரம் பேர்களா யிருந்தார்கள். அந்தப்பாணவேகத்தைக் கண்ணினாலும் மனத்தினாலும் நிச்சயிக்கமுடியாது. இராட்சசர்கள் பிரயோகிக்கும்படி எடுக்கின்ற கூர்மையான வேலாயுத சூலாயுத முதலியவெல்லாம் துண்டு துண்டாய் முறிந்ததே அல்லாமல், அவர்களுக்கொரு நன்மையுண்டாக வில்லை.

அக்கால் ஸ்ரீராமமூர்த்தியானவர் பாணங்களினாலே முன்னணியும் - அதற்குத்தலையும் - இருகைப் பிரதேசங்களு மமைந்த மகாபேரணிவகுத்து ஊசியு நுழையாதபடி செய்தார். அவ்வணியை இராட்சசர்கள் பேதித்துக் கொண்டுவர யத்தனித்தபோது, அவர்களுயிரை அந்தப்பாணவணிகளே உண்டுவிட்டன. மேலும் - அந்தப்பாணங்கள் அப்படியே அந்தந்தத்திசையை ஊடுருவி, அப்புறமும் இராக்கதர்கள் இருப்பார்களானால் அவர்களையும் ஊடுருவிப்போகும். ஸ்வாமியை எதிர்த்துவருகின்ற இராட்சசர்களெல்லாமடிந்து போகிறார்களே யல்லாமல், அவர்களுக்கு வெற்றியென்பது எவ்விதத்தா லுண்டாகுமோ தெரியாது. ஸ்ரீராமமூர்த்தியினுடைய பாணங்கள் ஊழித்தீய்க்குச் சமமாக இருந்தன. மூலபல ராட்சசசேனைகளோ வற்றியுலர்ந்த பெருங்காட்டுக்குச் சமமாகவும், யானைகளெல்லா நெருப்புப்பட்டு வேகின்ற மலைக்குச் சமமாகவுமிருந்தன. ஸ்ரீராமருடைய பாணங்கள் வீசியெறிந்த வலைக்குச்சமமாயிருந்தன. இராட்சதசேனைகள் சமுத்திரத்தில் வாழ்கின்ற செத்தமீன்களுக்குச் சமமாக இருந்தன. சக்கரவர்த்தித் திருக்குமாரர் யுகாந்தகால சண்டமாருதத்துக்குச் சமமாயிருந்தார். மூலபல ராட்சசசேனைகள் அந்தச் சண்டமாருதத்தாற் புழுதியாயுதிர்ந்து போகின்ற மலைகளுக்கொப்பாயின.

ஸ்ரீரகுநந்தனர் சப்தலோகங்களையும், அந்த லோகங்களிலிருக்கின்ற ஜீவகோடிகளையு மழிக்கின்ற பிரளயகால சமுத்திரத்துக்கொப்பா யிருந்தார். மூலபல ராட்சசர்கள் அந்தக்கடலில் மூழ்கிப்போகின்ற ஜீவபிராணிகளைப்போலானார்கள். மூலகாரணமாய் நடுவாய் அந்தியமாயிருக்கின்ற ஸ்ரீராமசந்திரர், எல்லாப்பொருள்களும் சமூலமாயடங்கிப்போகின்ற யுகாந்தகாலத்திற்கொப்பா யிருந்தார்கள். இராட்சசர்கள் அந்தயுகாந்தத்தில் ஆதாரமில்லாமல் மாண்டுபோகின்ற சராசரங்களுக்கொப்பா யிருந்தார்கள். ஸ்ரீராமர் ஆல்கால விஷமயமான சப்தசமுத்திரங்களைப்போ லிருந்தார். இராக்ஷசர்களெல்லாம் அந்த விஷக்கடலில் அகப்பட்டு மாண்டுபோன மீன்களுக்குச்சமமாக விருந்தார்கள். இராட்சசர்கள் வஞ்சனையைச் செய்து, விசாலமான பூலோகத்திலுள்ள நன்மைகளையெல்லாம் பறித்துண்டு, சத்தியங்கெட்டு பாவசிந்தனையையுடைய துஷ்டசாதியர்களா யிருந்தபடியால்; அவர்களை யழிக்கின்ற ஸ்ரீராமபத்திரர் தர்மத்துக்கொப்பா யிருந்தார். ஸ்ரீரகுவம்சோத்பவரான ஸ்ரீராமர் நச்சுப்பொய்கைக்குச் சமானமாயிருந்தார். இராக்ஷசர்கள் தண்ணீரில்லாத பஞ்சகாலத்தில் அந்த நஞ்சுநீரையுண்டு மாண்டுபோன தரித்திரர்களைப் போலானார்கள்.

இந்தப்பிரகாரமாக ஆயிரவெள்ள மூலபலராட்சச சேனையுமாண்டு அவர்களுடைய ரத்தப்பிரவாகமானது சமுத்திரத்தையும் இலங்காத்வீபத்தையும் பள்ளமேடு தெரியாதபடி மூடிக்கொண்ட மாத்திரத்தில், அவ்விலங்கைக்குள் ளிருந்த இராக்ஷசஸ்திரீகளெல்லாம் இலங்கை மதிலுக்குள்ளும் புறம்பும் தெரியாதவர்களாகிக் கலக்கமுற்று, தங்கள் கால் தளர்ந்தலறிக்கொண்டு ஓட்டம்பிடித்தார்கள். இப்படி மூலபலசேனை முழுவதும் மாண்டுபோனவுடனே நூறாயிரகோடி இராக்ஷசப் படைத்தலைவர்களாய், நாலாபக்கங்களிலும் பரவியிருந்தவர்களெல்லாம் ஒன்றாக நெருங்கி, இராக்ஷசப் பிணங்கள் பெரிய மலைகளைப்போலுயர்ந்து ஆகாசத்தை முட்டியிருக்கவும் இரத்தப் பிரவாகமானது பிரளயகாலக் கடலைப்போல எட்டுத்திக்கிலும் நிறைந்து நிற்கவுங்கண்டு ஒருவராலும் தடுக்கமுடியாத கோபங்கொண்டு, தங்கள் தங்கள் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, பெரிய தேர்களையும் - மதத்தயானைகளையும் - மற்ற யாளி சிம்ஹம் - குதிரை - இவைமுதலியவைகளையு நடத்திக்கொண்டு அதிவேகமாய்ப் புறப்பட்டு, மேகத்தையும் இடியையுமொத்த ஆயுதங்களையும் அம்புகளையும் எங்குநிறையும்படி ஸ்ரீராமர்மீது பிரயோகித்துக் கொண்டே வந்தார்கள். அப்போது பெரியபெருமாள் வருகின்ற இராக்ஷசர்களை நோக்கி, ஓ மூலபல சேனாபதிகளே! வாருங்கோள்: வாருங்கோள்: வந்து உங்களுடைய பிராணன்களையெல்லாமும், நீங்கள் பெற்றிருக்கின்ற வரங்களெல்லாவற்றையும், என்னம்புக் கிரையாகக் கொடுத்துவிடுங்கோள், என்று திருவாய்மலர்ந்து கொண்டே அந்தராட்சச சேனாபதிகளெல்லாருமிட்ட ஆயுதங்களையெல்லாந் தடுத்து அவர்களையுந் தனித்தனியே தடுத்தார். அப்போது ராக்ஷசசேனாதிபதிகள் ஸ்ரீராமர்பிரயோகித்த பாணங்களையெல்லாம்விலக்கி நெருங்கி அவரைப்பலவாயுதங்களால் மறைத்து, மேகத்திலும் அதிகமாக அம்புகளைப்பொழிந்து திக்குகளையெல்லாமூடி மிகுந்தகருவத்துடனே பின்னும் நெருங்கி வந்தார்கள்.

அந்தச் சமயத்தில் சக்கரவர்த்தித் திருக்குமாரர் பெருமைபொருந்திய சக்கராயுதத்திற்குச் சமானமாகிய வெற்றிபெற்ற திவ்யாஸ்திர வருஷங்களை அதிவேகமாய்ப்பொழிந்து, மலைகளுக்குநிகரான அந்த ராட்சசர்களுடைய தலைகளையறுத்[illegible]ற்குப்பலாகக் குவித்துவிட்டார். மகரமச்சியங்கள் பொருந்திய சமுத்திரத்தைப்போல ஸ்ரீராமமூர்த்தியை வளைந்துகொண்ட இராட்சசர்களுடைய மலைகளுக்கொப்பான தேகமானது சிதறிப் பூமியிலுருள, அவர்களுயிர்கள் வீரசுவர்க்கத்தையடைய, அதனாலே தேவர்களுடைய புராதன நகரமானது இடம்போதாமற்போய்விட்டது. மற்றராக்ஷசர்களெல்லாம் வருத்தப்பட்டார்கள். குதிரைகளெல்லாம் தலையறுந்து விழுந்தன. குதிரைப்பாகர்களுடைய தலைகள் அறுபட்டு இரணக்களப் புழுதியில் உருண்டுகிடந்தன. அவர்களுயிர்கள் வீரசுவர்க்கத்திலுள்ள அப்சரசுக்களை ஆலிங்கனம் பண்ணிச் சந்தோஷித்தன. சமுத்திரங்களும் - மலைகளும் - காடுகளும் -

கீழேழு லோகங்களும் – மேலேழு லோகங்களும் – ஆகிய இவைகளிலெல்லாம் இராட்சசர்களுடைய உயிர்களும், அவர்களுடைய தலைகளும், அவர்கள் தேகங்களும், அந்தத் தேகத்திலிருந்து ஒழுகுகின்ற இரத்தப்பிரவாகமுமாய் நிறைந்துவிட்ட படியினாலே; ஒருதிக்காவது வெறுமையாயிருக்கவில்லை.

இப்படியுத்த நடக்கும்போது ஸ்ரீராமரை எதிர்த்துவந்த இராட்சச வீரர்களெல்லா மாண்டுபோனவுடனே அவர்களைச் சூழ்ந்துவந்த சேனைகளெல்லாம் ஓட்டம் பிடித்தன. அப்போது தேவர்கள் ஸ்ரீராமபிரான்மீது புஷ்பமாரியைப் பெய்தார்கள். அதனாலே மேகவருஷமானது பெய்வதற்கிடமில்லாமல் அந்தரத்திலேயே நின்றுவிட்டது. இப்படியோடிப்போகின்ற சேனைகளை அறிவில்லாத சிலராட்சசர்களிடையிலே ஓடவொட்டாமல் தடுத்துக் கண்களில் அக்கினிப்பொறிபொழியும்படியாகப்பார்த்துத்திரும்புங்கள்திரும்புங்களென்று சொல்லி அதட்டிக்கொண்டு, யானைகளையும் - சிங்கங்களையும் - குதிரைகளையும் - ஸ்ரீராகவபிரான் மீது செலுத்திக்கொண்டு, உலோகங்களெல்லாஞ் செவிடுபடும்படி யாதுவும், மேகங்களெல்லாம் கிழிந்துதிர்ந்து போகவும், அஷ்டகுலாசலங்கள் அடுக்கழிந்து சிதையவும், தேவர்களுடைய தலைகள் நடுக்கங்கொள்ளவும், ஆயுதவர்க்கங்களெல்லாவற்றையும் அடுக்கடுக்காய்ப் பிரயோகித்தார்கள். அவர்கள் பிரயோகிக்கின்ற ஆயுதங்கள் இடிகளையு மின்னல்களையு நிகர்த்துப் பிரகாசித்து[illegible]குந்த ஒலியையிசைத்தன. அதைக்கண்ட சுந்தரபாகுவையுடையவரான ஸ்ரீராமர் சந்தோஷம் சந்தோஷமென்று வெகுநாளமாகப்ப[illegible]திகளை எதிர்கொள்ளுகிறதைப்போல அவர்களை எதிர்த்துப்போய், அக்கினிப்ரகாஸ்திரங்களைத் தேவர்கள் புஷ்பமாரிபொழியும்படிமேகம்பொழிவதுபோலப் பொழிந்தார்.

ஸ்ரீராமர் சரக்கூடமிட்டு இராட்சசர்களைச் சம்மரித்தல்.

கவி.

சுருக்கமுற்றதுபடை சுருக்கத்தாவினிக்
காக்கமுற்றொருபுறத் தென்னுங்கண்ணினான்
அரக்கருக்கன்றுசெல் வழியதாம்வகை
சரக்கொடுமதில்நெடு சமைத்திட்டானரோ.

இவ்வண்ணம் சுவாமியானவர் பாணப்பிரயோகஞ் செய்தகாலத்தில் இராட்சசப்படைகள் யாவுமிறந்தன. இன்னுமீதியாயிருக்கும் படைகளோடிவிடுமென்று யோசித்து அப்படைகள் போகாவண்ணம் பாணத்தினாலேயே நீண்டமதிலுண்டாக்கி வழியை மூடிவிட்டார். அக்கால் மாலியென்பவனையும், மாலியவானையும், மலைபோலுயர்ந்த கைடனையும், மதுவையு மொத்தவர்களான கவசங்களையணிந்த தேகத்தையுடைய இராக்ஷசர்கள், அப்பாணமதிலைக் கடக்கமாட்டாமல்நின்று திகைத்தார்கள். மற்ற ராக்ஷசர்களெல்லாம் சப்தசாகரங்களும் பொங்கிவருகின்ற ஊழிக்காலத்திலே வடவாமுகாக்கினி, சுட்டுக்

கொண்டேவர, எல்லாம்வெந்து மீந்துநிற்கின்ற சில ஜீவன்களைப்போல ஒரு மூலையிலொதுங்கினார்கள். இப்படி திகைத்தவர்களும் ஒதுங்கினவர்களுமாகிய இராக்ஷசர்களிற் சிலர் திரிபுரசம்ஹாரியும், புள்ளூர்திகளாகிய விஷ்ணுவும் பிரஹம்மாவும், வச்சிராயுததரனும், நம்முடைய பலத்தை அடக்கமாட்டார்கள். இந்த ஒருமனிதனே தனியாகநின்று நம்முடைய பலங்களையும் வரங்களையும் அழித்துவிடுவான்? நம்முடைய வல்லமையையும் அழித்துவிடுவான்? நம்முடைய ஆயுளையு நாசமாக்கிவிடுவான்? என்று நிச்சயித்தார்கள்.

வன்னியென்னு மிராட்சசப்படைவீரன் மற்றவிராட்சசர்களைப் பார்த்துச் சிலசொல்ல வவர்களுடன்பட்டு யாவரும் ஒருங்குசேர்ந்து சுவாமியுடன் சண்டைக்குவந்து மாளல்.

கவி.

எல்லோமெல்லோ மொன்றிவனைத்திற் கெடியோனை
வல்லோய்வல்ல போர்வளமுற்றி மலையோமேல்
வெல்லோம்வெல்லோ மென்றனன்வன்னி யிடலோரும்
தொல்லோர்சொல்லே நன்றெனவஃதே துணிவுற்றார்.

ஓ நண்பர்களே! இனிநாம் தப்பியோடி இந்தவனன் முகத்திலே விழிப்போமோ? இந்தராமன் நம்மிலொருவனைக் கொன்றுவானேயானால் தப்பாமல் இராவணனைக் கொன்றுவிடுவான். நாமெல்லோரும் ஒருமிக்க இவன்மீது எதிர்த்துப்போகலாமோ? அல்லது தனித்தனியேபோய்ச் சண்டை செய்யலாமோ? நாம் தனித்தனியே போவோமானால் இவனுக்குமுன்னே ஒருவேளை நிற்கமாட்டோம். நாமெல்லாரும் ஒன்றாய்க் கூடிக்கொண்டு நம்முடைய வல்லமைக்குக் கூடிய யுத்தங்களையெல்லாஞ் செய்யலாம். அப்படிக்கில்லாவிட்டால் இவனை நாம் ஜெயிக்கமாட்டோம். என்று சொல்லவு மற்றவீரர்களெல்லாம் அதைக்கேட்டு, பெரியோர்சொல்லே நல்லது: அப்படியே செய்யலாம். என்று நிச்சயம் பண்ணிக்கொண்டு எல்லாரும் ஒருமிக்கச் சப்தசமுத்திரங்களைப்போல ஆர்ப்பரித்துச் சங்கத்தொனி செய்து தோள்களைத் தட்டினார்கள். இப்படிச் செய்ததினாலே மேகங்களெல்லாம் கிழிந்து மின்னிக்கொண்டு பூமியில் விழுந்தன. இப்படி மேகங்களே விழுமானால் சுவர்க்கமத்திய பாதாளமென்று சொல்லப்பட்ட திரிலோகங்களும் பட்டபாட்டை இப்படியென்று சொல்லவேண்டுமோ? அவ்வாறவர்கள் சப்தித்தமாத்திரத்திலே அவர்கள் வல்லமைகளையெல்லாம் ஒடுக்கும்படியான ஸ்ரீராமபத்திரர் தம்முடைய கோதண்டத்தைக் குணத்தொனிபண்ணினார். அது தம்முடைய திருத்தோள் வல்லமையாலே திக்குகளையெல்லாம் அளவிட்டு ஸ்ரீமஹாவிஷ்ணுவினுடைய பாஞ்சசன்னியத் தொனியைப்போல லோகமுழுதும் கேட்டது.

அப்போது எல்லாலோகங்களிலும் பெருமைபெற்றிருக்கின்றவர்களும், திரிலோகங்களையும் ஜெயித்தவர்களும், தேவர்களையெல்லாம் புறங்காட்டியோடச் செய்தவர்களும், இயமனைப்போலத் தானவசேனைகளைச் சின்ன

பின்னப்படக் கொன்றவர்களும், உலோகத்திலுள்ள ஜீவகோடிகளையெல்லாங் கொன்றுதின்றவர்களும், மகா வில்வீரர்களுமான இராட்சசசேனாதிபதிகளெல்லாரு மொருமிக்கச் சேர்ந்துகொண்டு வந்து ஸ்ரீராமபத்திரரைத் தொழுவத்திற்சேர்த்துக் கட்டிவிட்டவர்களைப்போல வளைத்துக்கொண்டு; ஒவ்வொருவரும் இடிகளைப்போலக் கர்ச்சித்து யுத்தஞ்செய்ய யத்தனித்தார்கள். அதைக்கண்டு தேவர்கள் மனம்வாடிப் போனார்கள். ஆகாசமும் தீய்ந்துபோகும்படியாக அந்தராக்ஷசர்கள் பிரயோகித்த ஆயுதங்களிலே யிருந்து புறப்பட்ட அக்கினியும் — அவர்கள் கண்களிலிருந் துண்டான நெருப்பும் — ஒன்றாகச் சேர்ந்ததினாலே, ஏழுலோகங்களும் வெந்து குமுங்கிப்போய் விட்டன. தேர்களினுடைய அதிர்ச்சியும், வீரர்களுடைய அதட்டுதலின் சப்தமும், இரத்னமாலைகளினுடைய ஆரவாரமும், வீரகண்டாமணி ஒன்றோடொன்று தாக்குகின்ற ஓசையும், வில்லினாணோசையும், மேககர்ச்சனையையுங் கடலினாரவார ஓசையையும் ஒத்திருந்தன.

இவர்களுள் ஒவ்வொருவீரரு மிராவணனுக்குச் சமானமான பலமுடையவர்கள். அவர்களாலே செயிக்கப்படா லோகங்களில்லை. மிகுந்த தேஹவல்லமையு முள்ளவர்கள். இவர்களெல்லாம் வந்து சூழ்ந்தமாத்திரத்தில் தர்மசொரூபியான சக்கரவர்த்தித் திருக்குமாரர் சத்துருக்கள்வந்து சேர்ந்தார்களென்று திருவுளத்திலெண்ணி அவர்களுக்குமுன் எதிர்த்துவந்து நின்று, அந்த ராக்ஷசவீரர்கள் பிரயோகித்த ஆயுதங்களெல்லாம் தம்முடைய அம்பினாலே அறுந்துபோகும்படிச் செய்து, உகாந்தகால மேகவருஷத்தைப்போல அநேகதிவ்வியாஸ்திரங்களைப் பிரயோகித்தார். அதிகதேஜோமயமாகப் புறப்பட்ட ஸ்ரீராமபாணங்கள் அவர்கள் தரித்திருந்த தும்பைமாலையுடனே அவர்கள்மார்பைப் பிளந்ததினாலே சூரியன் தன்பரிவேடத்துடனே அழிந்து பூமியில் விழுந்ததுபோல அவர்கள் தாங்களேறிவந்த தேர்களுடனே கூட மடிந்துவிழுந்தார்கள்.

பூமியைச் சூழ்ந்திருக்கின்ற கடலில் முகபடாத்தை அணிந்திருக்கின்ற யானைகள் இரத்தவெள்ளத்தில் விழுப்புண்டுபோய் மின்னலுடனேகூட மேகமானது விழுவதுபோல விழுந்தன. வீரவான்களான ராக்ஷசர்களுடைய வலதுகரங்கள் பிடித்த வாளாயுதத்துடனே இரத்தக்கடலில் கொம்பன்சுறுமச்சியத்தைப்போல வீழ்ந்தன. அந்த ரத்தப்பிரவாகத்திலே குதித்துவீழ்ந்த குதிரைகள் இறாலுக்கொப்பாக இருந்தன. ஸ்ரீராமபாணம்பட்டு இராக்ஷசர்களுடைய கேடகங்கள் பறிபட்டு இரத்தக்கடலில் வீழ்ந்தன. அவைகள் கடலாமைக்கொப்பாக இருந்தன. காம்புகளுடன் கொடிகள் அந்தரத்தக்கடலில் வீழ்ந்தன. அவை பெருங்காற்றடித்துக் கப்பற் கூம்புகள் கட்டினபாய்களுடனே கடலில் மூழ்கினதுபோ லிருந்தன.

இப்படி ஸ்ரீராமபிரானவர் பருந்துகள்பறக்கின்ற ரணக்களத்தில் தாமொருவராகவேயிருந்து, ஒரு ஜாமபரியந்தம் ஆறுபிரயோசனை விஸ்தாரமாம்

சாரிகைசுற்றிச் சம்மாரம் பண்ணிக்கொண்டு வந்தார். ஸ்ரீராமர் நிற்கின்றவர்களுக்கு முன்பு நின்றும் — போகின்றவர்களுக்குமுன்பு போயும் — திரிகின்றபடியினாலே அவர்களிவரைப்பார்த்து, இவனிராவண குமாரனாகிய இந்திரசித்தனைப்போல சேனைகளை யெல்லாங் கொன்றுவிட்டான். இந்தராமன் கொன்றானென்று சொல்லுகிறது தகாதென்றார்கள். ஸ்ரீராமன் வில்லுங்கையுமாக வந்து இதோ என்னெதிரே நிற்கின்றான்: இதோ என்னெதிரே நிற்கின்றான். என் றிராட்சசர்கள் கலங்கிநிற்கின்ற காலத்தில் அவர்களில் ஒவ்வொரு அரக்கனும் கொடுங்கோபத்தோடு குரூரமாகிய பாணங்களைக் கண்ட கண்ட இடங்களில் எய்வார்கள். ஸ்ரீ கோதண்ட தீட்சாகுரு ஒருவன்றானின்றுபோர் செய்கிறானென்று உணரத்தக்க உணர்ச்சியில்லாதவர்களாய் ஸ்ரீராமபாணப் பிரகாசத்தால் எங்கும் பிரகாசமா யிருப்பதால், இஃதிராத்திரியல்ல பகலென்று சொல்லுவார்கள். சில ராட்சசர்கள் தம்மவரைப்பார்த்து, கேட்டீர்களா? இராமன் ஒருவனுண்டென்பது அபத்தம். இராமர்கள் பலபேருண்டென்பதே யதார்த்த மென்பார்கள். மூலபல சேனையாக வந்த ஆயிரவெள்ள மிராட்சசர்களில் மலைகளைப்போல நீண்டுயர்ந்த ஒவ்வொருவரும் ஸ்ரீராமபிரான்போலத் தங்கள் கண்களுக்குத் தோன்றுகிறபடியால், ஒருவரையொருவர் தம்தம் ஆயுதத்தாற் கொலைசெய்து உயிரைப் போக்கிக்கொண்டார்களே யல்லாமல் ஏகநாயகனாகிய ஸ்ரீரகுகுலோத்தமர் அந்தப் பாபிஷ்டிகளுயிரை வாங்கினதுமுண்டோ? இல்லை:

இரதத்தின்மேலும் — குதிரையின்மேலும் — செவந்த கொடுங்கண்ணையுடைய மேகம்போன்ற யானையின்மேலும் — பூமியினுநிற்க இடம்பெறாமற் சமுத்திரத்தினு மாகாயத்தினு மிருந்து போர்செய்கின்ற அரக்கர்களை அங்கங்கு இராமர்கள் புகுந்து சூழ்ந்து போர்செய்கிறார்களென்று சொல்லும்படியாக, சமஸ்தவண்டங்களிலும் — அவ்வண்டங்களுக்குள் சிறந்த பதவிகளிலும் — அப்பதவிகளில் உலாவுகின்ற சோதிமூர்த்திகளிலும் — அவர்களுடைய பக்கல்களிலும் — உடல்களிலும் பிரியாமல் அந்தரியாமியாக நின்ற தசரதநந்தனர் போர்புரிகின்றமையால் இராட்சசவீரர்கள் திப்பிரமை கொள்ளுவார்கள். எம்மையனுடைய இடதுகையில் தாங்கிய பெரியகோதண்டத்தின் தலையிற்கட்டிய மணிகள் கணகணகணவென்று ஒலிக்குந்தோறும், அங்குநின்ற மத்தகஜங்களும், அசுவங்களும் — நின்றநிலையிலேயே நடுங்கின. இமயகிரிபோல உயர்ந்து காணுகின்ற இரத சமூகங்கள் பூட்டுக்குலைந்து உதிர்ந்தன. அவற்றிலுள்ள இராட்சசவீரர்களு நடுங்கி மாண்டார்கள். எட்டுத்திக்குகளில் உள்ளவர்களும் செவிடுபட்டார்கள். சமுத்திரங்களும் அதிர்ச்சியாற் கலங்கிச் சேறுபட்டன. கொல்லுந் தொழிலையுடைய வியாக்கிரத்துக்குச் சமானமாகிய இராட்சசர்களது மனைவியர்களுடைய கண்களில் நின்றும் களகளவென்று நீர்சிந்திப் பிரவகித்தது.

இன்னும் திரிநேத்திரங்களையுடைய உருத்திரமூர்த்தியு நான்முகக்கடவுளும் சேர்ந்து, எம்பெருமான் கோதண்டத்தை வளைத்தெய்கின்ற அம்புகளை

இவ்வளவென் றெண்ணும்படியாகத் தொடங்கி, அந்த அம்புகள் கூட்டங் கூட்டமாகப் புறப்படுகின்றமையால் கணக்கிட முடியாமல், அவ்விருவரும் தனித்தனியாய் நின்று பார்ப்போமென்று பார்த்துக் கணக்கிடவு முடியாமல், இராமபாணத்தைக் கணிக்க நம்மாலாகுமோ? ஆகாது: என்றுசொல்லி ஆச்சரியமடைந்து ஸ்ரீராமபிரானுடைய புஜபலத்தை நினைத்துநினைத்துத் தோள்கள் பூரிப்பார்கள். இந்திராதிதேவர்களும் அப்பிரஹ்ம்ம ருத்திரர்களைப்பார்த்து, ஓ தேவசிரேஷ்டர்களே! இராக்ஷசசேனாவெள்ளம் ஆயிரமே; கௌசலை புத்திரராகிய எம்பெருமான் விடுகின்ற அம்புகளும் அவ்வளவே: என்று வாய்க்கணக்கிட்டு உண்மையை யறிவோமானாலும், ஒவ்வோர் அரக்கனுடைய உருவையு நூறு அம்புகள்போய்த் தைக்கின்றனவே; ஆகையால் - அம்புகளுக்கோ கணக்கில்லை. அநேக ஆயிரமாமென்னலாம்படி யிருக்கின்றன. இவ்வளவு அம்புகளையும் ஸ்ரீராமபிரானொருவருமே எய்தாரேயென்று சொல்லி மகதாச்சரியப்பட்டார்கள்.

அதிசௌரியமாக யுத்தஞ்செய்கின்ற அரக்கர்களுடைய கண்டத்திலும் கண்டத்திற்குமேற் கபாலத்திலுமாக அவர்களைத் தம்முடைய பாணங்கள் தொடர்ந்து பற்றியுருவுகின்ற தன்மையால், ஸ்ரீராமபிரானனவர் சமஸ்தசேதனு சேதனங்களுக்கு மூலகாரணமாய் நின்று தோற்றுவித்துத் தமக்குத் திருமேனியாய் நின்ற அவ்வுருவங்களை அவற்றிற்கு ஸ்தானமாகிய பிரமாண்டத்தை நிரம்ப அம்புகளையெய்து கலக்குகின்றானென்னும்படியானார். ஸ்ரீ தாசரதிக்குமுன்பாக ஓர்பக்கத்திலிருந்த இரண்டுகோடி ராக்ஷசவீரர்கள் அவருடைய பாணங்களால் உயிரிழந்து அழிந்தமாத்திரத்தில் மற்றப்பக்கங்களிற் பிழைத்திருந்த நிசாசரர்களெல்லாருங்கூடி, இப்படி ராமபாணத்தால் நாம் விருதாவாக அழிந்துபோவது என்னகாரணம்? முன்னே தவங்களைச் செய்து பெற்ற தேவதாஸ்திரங்களை இம்மனிதன்மேலெறிந்து அந்த ஆயுதங்களால் அவனுடைய உடல்முழுமையு மூடிவிடுவோம் வாருங்கள். என்று கோபமூண்டு மொய்த்துக்கொண்டு நாராயணாஸ்திரமுதல் பிரம்மாஸ்திரங் கடைசியாகிய தேவதாஸ்திரங்களை ஒருமிக்க எய்தார்கள். எய்தமாத்திரத்திற் பிரஹ்மாண்டமே கீழ்மேலாகும்போலக் காணப்பட்டது. அங்குகூடியிருந்த சமஸ்ததேவதா சமூஹங்களு நடுக்கங்கொண்டன.

அப்படிப்பட்ட தேவதாஸ்திரங்களைக்கிருபாசமுத்திரமாகிய ஸ்ரீராமபிரான்கண்டு புன்சிரிப்புச்சிரித்து, அவ்வஸ்திரங்களையெல்லாம் அவ்வஸ்திரங்களாலேயே துண்டித்துத்தள்ளி, மேலுந்தாம் அவ்வஸ்திரங்களை இராக்ஷசர்கள்மேல் எய்தால் அவர்களால் தடுப்பது அருமையாகும். தடுப்பதருமையானபோது அந்தப்பாணங்களினது சுவாலையாலே உலகமானது வடவாமுகாக்கினியில் மூழ்கினதுபோலப் பொரிந்து சாம்பலாய்விடும். என்று திருவுளமிரங்கித் தேவதாஸ்திரங்களைத் தொடாமற் குரூரமாகிய அநேக அம்புகளையெய்து, உயிர்பிழைத்திருந்த இராக்கதர்களுடைய தலைகளையெல்லாம் இடி

விழுந்தொடிந்த மலைச்சிகரங்களைப்போலக் கீழே தள்ளினார். இவ்வாறு ஸ்ரீராமர் பாணவருஷத்தால் மூலபலசேனைகளாகிய ஆயிரவெள்ள மிராக்ஷசர்களும், அவர்களுக்குப் படைத்தலைவராயிருந்த நூறாயிரகோடி இராக்ஷச வீரர்களும், இராவணனுக்குத் துணையாகவந்த அவன்சொந்த மூலபலச்சேனைகளும் யுத்தகளத்தில் உயிர்மாய்ந்து விழுந்தார்கள். அப்படி வீழ்ந்தவுடனே பூமிதேவியானவள் பாரநீங்கிக்குதூகலித்தாள். சமஸ்ததேவர்களு நம்முடைய சர்வாபீஷ்டத்தையு முடித்தோமென்று துன்பநீங்கினார்கள். அவர்களுக்குள் இந்திரனானவன் தான்வெற்றிமாலையைத் தரித்ததைப்போலச் சந்தோஷித்தான். அபௌருஷேயமாயு நித்தியமாயுமுள்ள வேதங்கள் இராட்சதர்களால் இதுவரையுமழிந்திருந்தவரம்புகளைப் பெற்றுயர்ந்தன. இராக்ஷசர்களுடைய தேர்ப்பாரத்தால் மடங்கியிருந்த ஆதிசேஷனும் அப்போது தன் தலைகளையுயர்த்தி இளைப்பாறிச் சிரமநீங்கினான்.

கவி.

ஆனையாயிரந்தேர்பதினாயிர மடர்பரியொருகோடி
சேனைகாவலராயிரம்பேர்படிற் செழுமணிக்கவந்தமொன்றாடும்
கானமாயிரமாயிரகோடிக்குக் கவின்மணிகணிலென்னும்
ஏனவம்மணியேழரைநாழிகை யாடியதினிதன்றே.

ஸ்ரீராமபிரானுடைய வில்லிற்கட்டிய மணியானது ஆயிரம்யானை பதினாயிரந்தேர் ஒருகோடிகுதிரை ஆயிரம்சேனாபதிகள் இறந்தால் ஒருதரம்கணிலென்று சப்திக்கும். இம்மூலபலசேனையின்வதையில் அம்மணியானது ஏழரைநாழிகைபரியந்தம் இடைவிடாது கணீர்கணீரென்று சப்தித்தது. அந்நேரம் சப்தித்ததென்றால் இறந்தபடைகளின் தொகையை யெவ்வண்ணமாகக்கணித்துச்சொல்வது. யாவருக்கு மரியவிஷயமே:

மூலபலசேனைகள் யாவையு மதமாக்கினதைக்கண்டு தேவர்கள் புஷ்பவருஷம் வருஷிக்க ஸ்ரீராமர் தனியேநின்ற சிறப்பு.

கவி.

தீமொய்த்தவனையசெங்க ணரக்கரைமுழுதுஞ்சிந்தி
பூமொய்த்தவரக்கராகி விண்ணவர்போற்றநின்றான்
பேய்மொய்த்தநரிகளீண்டிப் பெரும்பிணம்பிறங்கித்தோன்றும்
ஈமத்துட்டமியனின்ற கறைமிடற்றிறைவனொத்தான்.

இப்படி சமஸ்தமான பேரும் வாழ்த்தி வணங்கும்படியாகவும் - சமஸ்ததேவர்களும் கற்பகமலர்களைக் கைகளால் வாரித்தூவிச் சந்தோஷிக்கும்படியாகவும் - ஸ்ரீராமமூர்த்தியானவர் தீப்பொறிகள் நெருங்கிப்பறக்கின்ற செவந்தகண்களையுடைய மூலபலராக்ஷசர்களியாவரையுங் கொலைசெய்து, அந்த ரணரங்கத்தில் பேய்க்கூட்டங்கள் நெருங்கவும்-நரிகள் மொய்த்துக்கொள்ள

வும் -எப்படிநிற்கின்றாரென்றால்? அண்டபுவனசாராசரங்களையு மழித்து அப் பிணக்குவையல் நிறைந்த மசானத்தில் தாமொன்றியாய் நிற்கின்ற கறுத்த கண்டத்தையுடையஉருத்திரமூர்த்தியைப்போல நின்றார். மேலும்சுவர்க்கலோக பரியந்தம் அடர்ந்து வந்த இராக்கதர்கள்யாவரையும் கொன்றுசமைந்த திருக்கோலத்தால் மறுபடியும் சிருட்டி திதி சம்ஹாரத்தொழில் செய்யும்படி சர்வ சம்ஹாரகாலத்தில் எல்லாஉயிர்களையும் வாரியுண்டருளும் ஊழிமுதல்வனாகிய மாயப்பிரா னென்னுந் தாமாகிய மூர்த்தியையு மொத்திருந்தார்.

ஸ்ரீராமர் மூலபலப்படைகளைநீங்கி இலட்சுமணர் இராவணனோடு போர்புரியு மிடத்திற்குப் போதல்.

கவி.

ஆகுலந்துறந்ததேவ ரள்ளினர்சொரிந்தவெள்ளச்
சேகறுமலருஞ்சாந்துஞ் செருத்தொழில்வருத்தந்தீர்க்க
மாகொலைசெய்தவள்ளல் வாளமர்க்களத்தைக்கைவிட்
டேகினனிளவலோடு மிராவணனேற்றகைம்மேல்.

இப்பால் மகாகாருண்யராகிய ஸ்ரீராம்பிரான் துராத்துமாக்களாகிய அரக்கர்கள் நாசமடைந்தபடியால் தங்கள் மனோவியாகூலந்தீர்ந்த தேவர்கள் அள்ளி அள்ளிச் சொரிந்த குற்றமில்லாத மலர்களாலும் - சந்தனத்தாலும் உயுத்த ஆயாசந்தீர்ந்து, அவ்வுயுத்தகளத்தை விட்டு இளையபெருமாளோடு இராவணன் செய்கின்ற ரணரங்கத்தை நோக்கிச் சென்றார்.

மூலபலவதைப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

முப்பத்தோன்றாவது,

வேலேற்றுப்படலம்.

இப்படலத்தில்முன்னமூலபலச் சேனையைக் கண்டோடின வானரசேனைகள் அங்கதனூற்றேறி மீண்டதுகண்ட இராவணன் வேறே பலகோடி இராக்ஷசச்சேனைகளோடும் பராக்கிரமித்து மோகனாஸ்திரத்தை விடுக்கவும் இளையபெருமாள் விபீஷணர் கூறிய சூழ்ச்சியால் அதனை நாராயணாஸ்திரத்தால் மாய்க்க, அதுகண்ட இராவணன் விபீஷணர் மார்புக் கிலக்குவைத்து வேலாயுதத்தை யெறியவும் அதனைச் சுமித்திரைகுமாரர் தமதுமார்பிலேற்று மூர்ச்சிக்க, அக்காலிராவணன் வெற்றியோ டிலங்கைபுகுந்தபின் சாம்புவந்தர் வேண்டுகோளால் ஆஞ்சனேயர் சஞ்சிவிமலையைக் கொண்டுவரவும் இலட்சுமணர் சோகந்தீர்ந்தெழுந்து யாவரோடும் ரணக்களத்தைவிட்டுநீங்கித் தம்மை நோக்கிவரும் இராமபிரானை எதிர்கொண்டுகாண, உடனே ஸ்வாமி நடந்தகாரியங்க

இராவணன்விபீஷணர்மேல்விட்ட வேலை இலக்குமணரேற்று மூர்ச்சித்து,
நெ॰ 65. ஆஞ்சனேயர்கொணர்ந்த, சஞ்சீவியாற்றேறி ஸ்ரீராமனையகிழ்வித்தல்.

சுக்கிரீவனுதியர்மூலபலச் சேனையின்மடிவை, விபீஷணர்க்காட்டக்காணுகையில் இராவணனும் இலங்கைகோபுரமேறிக்காணுதல்.

ளனைத்தையுங்கேட்டு ஆஞ்சனேயரைப் பலமுறைகொண்டாடி இளை
யபெருமாளையுந்தழுவி ஆயாசந்தீர்ந்திருத்தல் சொல்லப்படுகின்றது.

இலக்ஷுமணரை எதிர்த்துநின்ற இராவணன் மோகனுஸ்திரம் விடுக்க, அதையவர் விபீஷணர் சூழ்ச்சியால் நாராயணுஸ்திரம் விடுத் ததமாக்குதல்.

கவி.

இவ்வழியயன்றவெல்லாமியம்பினுமிரிந்துபோன
தெவ்வழியாற்றல்வெற்றிச் சேனையின்செலவுஞ்சென்ற
வெவ்வழியரக்கர்கோமான் செய்கையுமிளையவீரன்
எவ்வமிலாற்றற்போரு முற்றுமாயியம்பலுற்றும்.

இம்மூலபலத்தில் சுவாமிக்கு நேர்ந்த ஜயப்பிரதாபங்களை முற்றும்சொல்
லினோம். இனி முன்புபயந்து ஓடிய வானரச்சேனைகள்மீண்டு செய்தசெயலை
யும், இராவணனது யுத்தகாரியத்தையும், இலக்ஷுமணப்பிரான் அவ்விராவ
ணனோடு செய்த யுத்தப்பிரபாவத்தையும் சொல்லுவோம். முன்னே மூலபல
சேனையைக்கண் டோடிப்போன வானரத் தலைவர்களெல்லாம் அங்கதகு
மாரனுல் போனதைரியம் வந்தவர்களாகி, நாம் ஊடலோடுகூடி வாழ்தலையே
விரும்பினோம். அதனுல் வந்தபழியை நாமேயல்லாமல் வேறேயார் விலக்க
வல்லவர்கள்? ஆகையால் நமக்குவந்தபழியை நாமே துடைக்கும்படி பாபிஷ்
டர்களாகிய இராக்கதர்களோடு எதிர்த்திறந்து வீரசுவர்க்கத்தை அடை
வோம், என்று தங்களுக்குள்ளே தீர்மானஞ் செய்துகொண்டு பாற்கடல்பெ
ருகி வந்ததுபோல யாவரும் ஒன்றாகத் திரண்டவர்களாய்த் தங்கள் தங்கள்
சேனைகளோடுகூட வந்து சேர்ந்தார்களன்றோ? அப்படி யவர்கள்வந்து சேர்ந்
தமாத்திரத்தில் இராவணனானவன் ஆயிரஞ்சக்கரங்களையுடையதாய் ஆயிரங்
குதிரைகள் பூட்டிச் சூரியமண்டலத்தைத் தனதொளியாற்பகைத்து விளங்கு
கின்ற இரதத்தின்மேலே தேவர்களைச்செயித்த வில்லு முதுகில் அம்பறாத்தூ
ணியு முடையவனாய்த் தனது வீரப்பிரதாப நான்குபக்கங்களிலும் பிரகாசிக்
கும்படி ஏறி, வேறே ஆறுகோடி தேர்வீரர்களும் - இருநூறுகோடி குதி
ரைவீரர்களும் - பத்துக்கோடி யானைவீரர்களும் - ஆயிரத்து முந்நூறுக்
கோடி பதாதிவீரர்களும் - ஆன்சிம்ஹத்துக்குச் சமானமாகிய தன்னைச்சூழ்ந்
துவரவும், திரிலோகத்திலும் அப்புறத்துள்ள உலகத்திலும் எதிர்க்கத்தக்க
வீரர்களுண்டாயிருந்தால் வரலாம்வரலாமென்று அழைப்பதுபோலத் தொனி
க்கின்ற பெரியரணபேரிகையும்-ஜெயசங்கங்களும் - இடிபோற் குமுறுகின்ற
எக்காளமும் - பதினாலுலோகமும் கேட்கும்படி ஒலிக்கவும், உயுத்தகளத்
தேவந்து சேர்ந்தான்.

அப்போது வானரவீரர்கள் அந்தக்கொடிய ராவணனையும், உயர்ந்து வி
சாலமாகிய ஆகாயத்தையு மறைக்கத்தக்க இராக்ஷசசேனு சமுத்திரத்தையுங்
கண்டார்கள். கண்டமாத்திரத்தில் இந்தப் பெரியயுத்தத்தில் ஸ்ரீராபகாரிய

மாக நாமெல்லோரும் பிராணனை விடுவதே நமக்குச் சுகிர்தமென்று திடங்கொண்டு தமக்குள்ளே அணிவகுத்துநின்று, இடிகளுக்குச் சமானமாகிய மலைகளைக் கையிற்பேர்த்தெடுத்து! எமனு நடுக்கங்கொள்ளும்படி தோள்களைக் கொட்டி, அஷ்டகாசஞ்செய்து ஆரவாரித்தார்கள். இதுகண்ட கொடிய ராவணனுடைய சேனைகளும் தம்முயிரை யுத்தத்தில்விடும்படி நிச்சயங்கொண்டு நின்றன. உடனே வானரசமுத்திரம் அவ்வரக்கர்களோடு எதிர்த்துநின்றது.

அங்கங்கே தலைகளும் - உடல்களும் - உதிரமும் - ஆயுதங்களும்—மற்றவைகளும் சிதறிக்கிடப்பதினால், பூமிமுழுமையும் யுத்தகளம்போலவே காணப்பட்டது. அப்போது பதினாலுலோகமும் ஊழிகாலத்தில் நிலைகுலைவது போல நடுக்கங்கொள்ளும்படி சம்ஹாரிக்கின்ற குரூரமாகிய யுத்தத்தைப்பார்த்த இராவணன், இன்னஞ் சிறிதுநேரநாம் தாமசிப்போமேயானால் நம்முடைய சேனைமுழுமையு நாசமாய் விடுமென்பதை நினைத்துக்கொண்டு சுற்றிலும் பார்த்தான்.

அப்படிப்பார்த்தபோது ஒருபக்கத்தில் வானரவீரர்களெறிகின்ற மரங்களும் கல்லுகளும் இராக்ஷசர்களுடைய வில்-வாள்-எழுக்தடி-சூலம்- ஆகியவிவற்றோடு அரத்தையும் வாய்மடியச்செய்யும் வேல்முதலிய கூர்மையாகிய ஆயுதங்களையு நொறுங்கும்படி செய்யவும், ஒருபக்கத்தில் தேகவலியும் தனுர்வேத வித்தையுமுள்ள இளையபெருமாள் போர் புரிவதாகவுமிருந்தது. பலபக்கத்தில் யானைக்கூட்டங்கள் துண்டுபட்டு விழுந்தும்-பல்குதிரைக்கூட்டங்கள் உயிர்துறந்து விழுந்தும் - தேர்க்கூட்டங்கள் சிதைந்து விழுந்தும் கிடக்கும்படியாக அனுமானும் அவர்பின்னே மற்றவானரவீரர்களு செய்கின்ற குழுதும் அதனைத்தொடர்ந்து செல்கின்ற நாலும்போல அரக்கர்சேனையுட்புகுந்து போர்செய்தலையும், ஒருபக்கத்தில் இவ்வளவென்று அளவுசெய்து சொல்லக்கூடாத விஸ்தாரமாகி நிறைந்த பெரியராட்சச சமூகத்தை எமனுக்கு விலாமுண்டென்று சொல்லும்படி கையில் விற்பிடித்துச் சாரிகைதிரிகின்ற வீரராகிய இராமாநுசர் தமது அம்புகளாற் கொல்வதையும் கண்டான்.

உடனே கொடியோனாகிய அந்தத்தசமுகன் ஆ! ஆ! நாம் இனிச் சிறிது பொழுது சும்மாயிருக்கப்போகாதென்று அதிகோபிஷ்டனாகி வேகத்தால் வாடைக்காற்றை யொத்தவைகளும், தடையில்லாமலூருவிப்பாய்வதால் இடியையொத்தவைகளும், மலைகளைப்பிளப்பவைகளும், அண்டத்தைச்சிறுதுண்டுகளாகச் செய்பவைகளும், திக்குகளைஇவ்வளவுதூரமுள்ளவையென்று அளவிற்பாய்ந்து அளப்பவைகளும்! எதிர்ப்பவருடைய உயிரை அபகரிப்பதினால் யாவராலும் தடுக்கக்கூடாத யமதூதர்களை யொத்தவைகளு மாகிய கொடிய அம்புகளை அணியணியாக வானரவீரர்கள்மேலே பிரயோகித்து அவர்களை வதம்பண்ணினான். இவ்வாறு குரூரபாணங்களைப் பிரதாபலங்கேஸ்வரன் இடைவிடாமலெய்தபோது குரங்குகளெதிர்க்கமாட்டாமல் திக்குத்திக்குகளாகச்சிதறி ஓட்டமெடுப்பதைக்கண்ட ஸ்ரீரகுநந்தனருடையதிருத்தம்பியார்

அவ்வானரங்களோடுவதை மரித்து நீங்கள் அஞ்சவேண்டாம் அஞ்சவேண்டாமென்று கருணைசுரந்து திருவாக்களித்து, அஞ்சனாதேவி புத்திரருடைய திருத்தோளாகிய தேரின்மேல் ஆரோகணித்தருளி, எரிந்துகொண்டிருக்குங் கோபாக்கினியையுடைய இராவணனுக்கெதிரேசென் றெதிர்ந்தார்.

அம்மாத்திரத்தில் இராவணனானவன் முகத்தில் தீமைபக்குகின்ற அம்புகளை நூறுகோடிக்கு அதிகமாகப் பிரயோகிக்க, அதுகண்ட இளையபெருமாள்சீக்கிரமாகவில்லைவளைத்து அவன்தொடுத்த வவ்வளவான அஸ்திரங்களையெய்து, காற்றுமுகத்திலகப்பட்ட பஞ்சுபோலத் திக்குகளிற்போய்த் துண்டுகளாகச்சிந்தும்படி அவன்விடுத்த அம்புகளையெல்லாம் அறுத்துத் தள்ளினார். அப்போது இவ்வாறு யோசிப்பதாயினான்.

ஓ ஓ!! ஏது மதிகெட்டுவந்து இந்தச் சிறுவன்கையிலகப்பட்டுக்கொண்டோம். இவன் நம்மைச் சும்மாவிடுகிறவனாகக் காணவில்லையே: அம்புகளாலிவனை வெல்லலாமென்றால் நம்மால் முடியாதுபோலத் தோன்றுகிறதே: திரிலோகங்களையும் வெற்றிபெற்ற நாம் திரும்பிவிடுவோமானால் அதிக பழிப்பாய் முடியுமே: இனி என்னசெய்யலாம்? நாம் தேவதாஸ்திரங்களைப் பிரயோகித்தால் அந்த தேவதாஸ்திரங்களையே தொடுத்துத் தடுத்துவிட்டு, மேலுமேலும் அஸ்திரங்களை நம்மேலெறிகின்ற சமர்த்தனாயிருக்கின்றான். இவன் நம்மைமாத்திரமோ? எல்லாவீரர்களையும் அநாயாசமாக வெல்லுவான். சமஸ்தபிராணிகளுடைய உயிரையும் வாங்கவல்ல யமனும் தனக்கெதிர்ப்பட்டால், உனக்கெவ்வளவு வல்லமையுண்டென்று அவனுடைய உடலைப் பிடித்துப் பார்க்கவும் வல்லவன். தன்னுடைய தமயனைப்போல எந்தவுலகங்களையும் கட்டெரிக்குஞ் சாமர்த்தியவான். இவன் யாருக்குந் தோற்கான். நாம் முன்னே சிவபிரானிடத்தில் தவஞ்செய்துபெற்ற மோகனாஸ்திரந்தான் இவனை வெற்றியழியச் செய்யும். ஆகலால் அவ்வஸ்திரத்தை யேவிக் காகங்கள் மொய்த்துக்கொண்டிருக்கின்ற இரணக்களத்திற் சீக்கிரத்திலேவிழத் தள்ளுவோம் என்றெண்ணினான்.

கவி.

என்பதுன்னிப்பல் விஞ்சையமைவத்திடை பெண்ணி
முன்பன்மேல்வரத் தூர்ந்தனனதுகண்டு முடுகி
அம்பின்வீடண னுரியான்படையினி னறுத்தி
என்பதோதின விலக்குவனதுதொடுத் தெய்தான்.

இவ்வாறாலோசித்துத் தீர்மானஞ் செய்துகொண்டு, அந்த அஸ்திரத்துக்குவேண்டிய மந்திரத்தைத் தியானித்தெடுத்து வில்லில்தொடுத்து, எதிரே நிற்கின்ற இராமாநுசர்மேல் பிரயோகித்தான். இப்படி ராவணனானவன் அபிமந்திரித்துப் பிரயோகித்த மோகனாஸ்திரத்தைக்கண்டு சமீபத்தில் நின்றுகொண்டிருந்த விபீஷணாழ்வான் இலட்சுமணப்பெருமானை நோக்கி, சுவாமி! அந்த அஸ்திரத்தை அறுக்கத் தேவரீர் ஸ்ரீமகாவிஷ்ணு அஸ்திரத்தையெய்து

துத்தள்ளுமென்று சொல்லினர். உடனே இலக்ஷுமணர் ஸ்ரீமகாவிஷ்ணு அஸ்திரத்தால் மோகனாஸ்திரத்தை அறுத்துத் தள்ளினர்.

அதைக்கண்ட இராவணனானவன் கோபங்கொண்டு, (குலத்துக்கூனம் கோடாரிக்காம்பு) என்பதுபோலும், இந்தவிபீஷணன் நம்முடைய சத்துருக்களுக்குச் சமீபத்திலிருந்து சமயோசிதமாக உபாயங்களைச் சொல்லிக்கொண்டு வருவதினாலே யல்லவோ நமக்கு இவ்வளவுகேடும் சம்பவித்ததென்று தனக்குள்ளே நினைத்து, தெய்வதச்சனாகிய மயனென்னும் மாயன்தன் மகளாகிய மண்டோதரியைப்பாணிக்கிரகணஞ் செய்துகொடுத்த காலத்திற்றனக்குக் கொடுத்ததும், சக்கராயுதத்தையும் வச்சிராயுதத்தையும் ஒத்ததும், பாய்ந்துருவத் தலைப்பட்டால் சுத்தவீரர்களுடைய வீரப்பிரதாபத்தையும் ஊழியையுங் கடந்து உருவத்தக்கதுமாகிய வேலாயுதத்தையெடுத்து, தன்வெற்றியை யழித்த தம்பிமேற் பிராணனை வாங்கும்படி அதிகவிசைகொண்டு எறிந்தான். இப்படி யெறிந்தபோது, விபீஷணாழ்வான் அந்த வேலினுடைய நிலைமையையெல்லாம் அறிந்தவராகையால்; ஓ இராமாநுஜரே! இந்த வேல் என்னுயிரை நாசப்படுத்தாமற் போகாது. அதைத் தடுக்கும்படியான உபாயமோ ஒன்றுமில்லையென்று விண்ணப்பஞ் செய்துகொண்டார். அது கேட்ட மகாநுபாவராகிய இலட்சுமணப்பெருமாள் அதையிதோ தடுத்துவிடுகிறேனென்று சொல்லி அதினெதிரே நின்று, அவரெய்த அம்புகளும் எறிந்த எல்லாவாயுதங்களும் எப்படியாய் விட்டனவென்றால்? பரம வைதீகமார்க்கானுசாரியாய்ப் பரமேகாந்த நிஷ்டராயுள்ள பாகவத சிரோமணியாகிய ஒருமகாபுருஷனை அவைதிகமார்க்கானுசாரிகளாகிய துஷ்டர்கள் அசூயையால் தூஷிக்கும் தூஷணங்கள் எப்படியடையுமோ? அப்படி யவ்விராவணனெறிந்த வேலை ஒன்றுஞ்செய்யாமற் போய்விட்டன.

அங்கே ஆகாசமார்க்கத்திற் பார்த்துக்கொண்டிருந்த தேவர்களெல்லாம் விபீஷணாழ்வான் இந்தவேலுக்குத் தப்பிப் பிழையாரென்று பரிசுத்தமாகிய மனம்வாடினார்கள். அதுசமயத்தில் இளையபெருமாளானவர் நாமெய்தவைகளும் எறிந்தவைகளுமாகிய ஆயுதங்களை யெல்லாம் இலக்ஷியம்பண்ணாமல் வருகின்ற வேலானது நம்முடைய திருத்தமையனாரை அடைக்கலமடைந்த விபீஷணாழ்வானுடைய உயிரைவாங்கும். அப்படி உயிரைவாங்க விபீஷணாழ்வான் அழிவாரேயானால் சாதுக்களாகிய தேவர்களும் கைகொட்டி நம்மை நகைப்பார்கள். தம்மை அடைக்கலமடைந்தவனுடைய உயிரைத் தங்கள் நிமித்தம் சத்துருவானவன் கொல்லப் பார்த்துக்கொண்டிருந்தார்களென்கிற பழிவந்து நம்மையடைவதற்கு முன்பாக இந்தவேலை நாமே யேற்றுக் கொள்ளுவோம். அப்படி யேற்றுக்கொள்ளுவதினால் நமக்குத் தோற்றுவந்தபோதிலு மகாகீர்த்தி நிலைநிற்கும். இந்தத்தருமமு நம்மைச்சேரும். ஆதலால் இனி ஆலோசிப்பதென்னவிருக்கின்றது? என்றெண்ணி யவ்வேலெதிரோடி விபீஷணருக்கு முன்னேசென்று தமது திருமார்பைக் காட்டிக்கொண்டு நின்

றார். அப்படி நின்ற ராமாநுஜனுக்கு முன்னே ஓடி விபீஷணாழ்வான் நின்றார். அவ்விருவரையும் விலக்கி நானே இந்தவேலை ஏற்றுக்கொள்ளுகிறேனென்று அங்கதப்பெருமான் போய் நின்றான். அம்மூவரையும் சுக்கிரீவமஹாராஜா தடுத்துத் தாமேபோய் நின்றார். இவை யனைத்தையுங்கண்ட ஆஞ்சநேயர்- ஆ! ஆ! நன்றாயிருந்தது: ஸ்ரீராமபிரானுக்கு அடிமை நானென்பது பொய்யோ? இந்தவேலை நானே ஏற்றுக்கொள்ளுகிறேன். நீங்களெல்லோரும் அப்புறத்தே போங்கள். என்றுசொல்லி எல்லாருக்கு முன்னேபோய் நின்றார்.

விபீஷணர் மார்புக்குநேராக இலகுவைத்து இராவணனேவிய வேலை இளையபெருமா ளேற்று மூர்ச்சித்தல்.

கவி.

முன்னின்றாரெலாம் பின்னுறக்காலினின்முடுகி
நின்மின்யானிது விலக்குவனென்றுரைநேரா
மின்னும்வேலினை விண்ணவர்கண்புடைத்திரங்கப்
பொன்னின்மார்பிடை யேற்றனன் முதுகிடைப்போன.

இந்தப்பிரகாரமாக ஒருவரையொருவர் தடுத்து முன்னேபோய் நிற்கிறதும், நிற்கிறவரைத்தடுத்து மற்றொருவர்போய் முன்னே நிற்கிறதுமாகிய விந்தத் துக்ககரமானசமாசாரத்தை இப்படிப்பட்டதென்று சொல்லி முடியுமோ? முடியாது: ஒருவர்முன் ஒருவராக நின்றவர்களை யெல்லாம் — நீங்கில்: நீங்கில்: என்று விலக்கிவிட்டு ஸ்ரீராமாநுஜரானவர் நானே ஏற்றுக்கொள்ளுகிறேனென்று சென்று, தேவர்கள் தங்கள் கண்களிற் கைகளால்மோதி அறைந்துகொண்டழவும், அந்தவேல் தமது முதுகை உருவிச்செல்லவும், தமது திருமார்பிலேற்றுக்கொண்டார். இப்படி வேலையேற்று இளையபெருமாள் சாய்ந்தமாத்திரத்தில் இதுவேநமக்குப் போதுமென்று சீக்கிரமாகத் தேரைச் செலுத்திக்கொண்டு போகின்ற பாபிஷ்டியான இராவணனை விபீஷணாழ்வான் கண்டு, அடா துராசாரமுள்ள கள்ளா! நீயெங்கே தப்பித்துக் கொண்டு ஓடுகிறாய்? நில்லடா நில்லு: என்றுசொல்லிக்கொண்டேபோய் எதிரே மறித்துநின்று புருஷசிம்ஹத்தைப்போலச்சீறி, தம்முடைய கையிலுள்ள தண்டாயுதத்தால் தேவர்களுந் தலைநடுக்கங்கொள்ளத் தேரிற்கட்டிய குதிரைகளையும் சாரதியையும் விழும்படிமோதி யடித்தார்.

உடனே ராட்சசகுலாதிபன் தேரில்நின்றெழும்பி ஆகாயமார்க்கத்தில் நின்று, அதிககோபத்தோடு கொடிய பத்தம்புகளை விபீஷணாழ்வானுடைய திருமேனியிற் பதியும்படிப் பாய்ச்சி, சமீபத்தில்நின்ற வாயுபுத்திரர் மேலும் ஆயிரமம்புகளை எய்து உயுத்தமுடிந்த தென்னுங் குதூகலத்தோடு இலங்காபட்டணை நோக்கிச் செல்லுகிறான். அப்போது சிரஞ்சீவியாகிய விபீஷணாழ்வானவர் பலவகையாலும் என்னை ஆராய்ந்து, தமது சரணத்தையு மெனக்குக் கதியாகத்தந்த பெரியபெருமாளின் திருத்தம்பியார் என்பொருட்டாக இரணகளத்திற் சோர்ந்து வீழ்ந்தனர். அடா இராவணா! அடா துன்மதி!

இந்தவஞ்சனைப் புத்தியால்நீ எங்கே ஓடிப்போவது? உன்னைக் கொலைசெய்து உன்னோடு நானுஞ்சாகிறேனென்று சொல்லிக்கோபித்துப்பின்தொடர்ந்தார். அதுகண்ட ராவணன் ஜெயமோ என்பக்ஷத்திலாய்விட்டது. விபீஷணனென்னும் இந்தச் சாதுப்பிராணியைக் கொல்லுவதினால் இனிப் பிரயோசன மொன்றுமில்லையென்று தனக்குள்ளே ஆலோசித்துக்கொண்டு சற்றேனுநில்லாமலும், விபீஷணாழ்வானுடனே ஒன்றும்பிரதியுத்தரம் பேசாமலும், பொன்மதில்சூழ்ந்த தன்னகரமேபோய்ச் சேர்ந்தான்.

இவ்வண்ணம் யுத்தகளத்தில் இலட்சுமணப் பெருமானைத் தனது வேலினால் கிடத்திவிட்டு இராவணன் போனபிறகு விபீஷணரும் மற்றவானரவீரரும் ஓவென்று கதறி ஐயோ ஐயோ இனியாது செய்வது என்று வருந்திப் பிரலாபித்துக்கொண் டிருக்குந்தறுவாயில் சாம்பவந்தர் விபீஷணாதி வானரர்களைக் கையமர்த்தி சற்றேபொறுங்கள் முன்னம் நம்மையெல்லாம் பிழைப்பித்த ஆஞ்சனேயர் நமக்குத் துணையாயிருக்கும்போது இலட்சுமணப்பெருமானிறந்தவரல்லவென்று சொல்லி ஆஞ்சநேயருடைய திருமேனியில் தைத்திருந்த அம்புகளைப் பிடுங்கிக் களைதெளிவித்து இதனைச் சொல்லுகின்றார்.

ஓ மகானுபாவரே! நம்முடைய ஸ்வாமியாகிய ஸ்ரீராமபிரானானவர் இளையபெருமாளடைந்த இந்த வருத்தத்தையுங் கண்டு சகிப்பாரோ! சகிக்கமாட்டாரே: நீரும் சீக்கிரத்திற்போய்ச் சஞ்சீவியைக் கொண்டுவராமல் இருப்பீரோ? இருக்கமாட்டீரல்லவா? என்று சொல்லினர்: இதைக்கேட்ட ஆஞ்சநேயர் அதிசீக்கிரமாக வெழுந்து தான் முன்பு கைகண்ட மருந்தைக் கொண்டுவர முன்பு தாவிப்போன வழியே சென்றுசஞ்சீவிபர்வதத்திலுள்ளஉயிர்தரு மருந்தாகிய அமிர்தசஞ்சீவியை யெடுத்துவந்தனர்.

ஆஞ்சனேயர் சஞ்சீவிமருந்தைக் கொணர இலட்சுமணர் மூர்ச்சை தெளிந் தெழுதல்.

கவி.

தந்தனன்மருந்துதன்னைத் தாக்குதன்முன்னேயோசம்
வந்தனுமாண்டார்க்கெல்லா முயிர்தரும்வலத்ததென்றால்
நொந்தவர்நொய்வுதீர்க்கச் சிறிதன்றேநொடிதன்முன்னே
இந்திரனுலகமார்க்க வெழுந்தனனிளையவீரன்.

இப்படி ஆஞ்சனேயர் கொண்டுவந்த சஞ்சீவி மருந்தின்வாடைதாக்குதன்முன்னே யுத்தகளத்தில் இலட்சுமணப் பெருமாள் வானரவீரர்களெல்லாமார்ப்பரிக்க எழுந்தனர். முன்புபிரமாத்திரத்தால் இறந்துபோனவர்களுக்கெல்லாம் உயிரைத்தந்து உற்சாகத்தைஉண்டாக்கிய சஞ்சீவிமருந்திற்கும், இணைசொல்லவும் உண்டோ? நொந்தவர்களுடைய நோவைத்தீர்ப்பது அந்த மருந்துக்கு அற்பமாகுமல்லவா? ஒருநொடிப் பொழுதுக்குள்ளாக இந்திரலோகவாசிக ளெல்லாரும் சந்தோஷங் கொண்டாடும்படி. உயிர்த்தெழுந்தவராகிய இராமாநுஜர் ஸ்ரீராமகைங்கரிய துரந்தர சீலராகிய

அநுமானைத் தமதிரண்டு திருக்கரங்களாலும் சேர்த்தணைத்து, என்னப்பனே ஆஞ்சனேயா! தாரகமந்திர வாச்சியராகிய ஸ்ரீரகுகுலோத்தமரை அடைக்கலமடைந்த விபீஷணாழ்வானையும் பட்டுருவிச்சென்று அவரும் விழுந்தனரோ? விழுந்தாரில்லையல்லவா? என்று வினவி, அவர் தமக்கு ஓரபாயமுமில்லாமல் தம்மைத் தொழுதுகொண் டிருப்பதையும் பார்த்து, அப்படிப்பார்ப்பதற்கு முன் னுண்டாயிருந்த அச்சமும் - துன்பமும் - சிறிதும் இல்லாதவராகி, சீதாபிராட்டியார் சிறையினின்று நீங்கின தன்மைபோல் குதூஹலமடைந்தார்.

இளையபெருமாளாதி யாவரும் தன்பால்வந்து வணங்கக்கண்ட ஸ்ரீராமபிரான் நடந்த யுத்தவரலாறுகளைக் கேட்க சாம்பவர்கூறுதலும் இளையபெருமாள் ஆயாசந்தீர்ந்திருத்தலும்.

கவி.

ஒன்றலபலவென்றேர்க்கு முயர்பிணத்[illegible]போம்
குன்றுகள்பலவுஞ்சோரிக் குரைகடலனைத்துந்தாவிச்
சென்றடைந்திராமன் றன்னைத் திருவடிவணக்கஞ்செய்தார்
வென்றியின்றலைவர்கண்ட விராமனென்விளைந்ததென்றான்.

பிறகு அவ்விளையபெருமாளும் - சுக்கிரீவமகாராஜரும் – விபீஷணாழ்வாரும் – ஆஞ்சநேயரும் – மற்ற வானரப்படைத் தலைவர்களும் எழுந்து, ஆகாயத்தையளாவிய அநேக பிரேதபர்வதங்களைக் கடந்து இரத்த ஆறுகளைத் தாண்டிச்சென்று தங்களைக் காணவேண்டிவரும் ஸ்ரீராமபிரானைத் தெண்டனிட்டு நின்றார்கள். அவரவர்களை நோக்கி உயுத்தம் என்னமாய் முடிந்ததென்று வினவினார். அதுகேட்ட அதிமேதாவியாகிய சாம்பவர் சுவாமியினுடைய திருவுளத்திற்கு ஏற்கும்படி இளையபெருமாள், யுத்தத்தில் இரதகெஜதுரக பதாதிகளைத் தும்சப்படுத்தி இராவணனெய்த மோகனாஸ்திரத்தை விபீஷணாழ்வானுடைய சொல்லினால் ஸ்ரீமகாவிஷ்ணுவினஸ்திரத்தைப் பிரயோகித்து, அழித்ததையும், அதுநோக்கி அந்தத் தசமுகன் விபீஷணாழ்வான்மேல் வேலெறிய அதையானேற்றுக் கொள்ளுகிறேன் யானேற்றுக் கொள்ளுகிறேனென்று சுக்கிரீவமகாராஜா முதலானோர் சென்றதையும், அவர்களை விலக்கிவிட்டு இளையபெருமாள் ஏற்றுக்கொண்டு உயிர்சோர்ந்ததையும், உடனே அநுமானானவர் தாவிச்சென்று சஞ்சீவிகொண்டுவந்ததையும், இலட்சுமணர் உயிர்த்தெழுந்ததையும், மற்றுமுள்ள செய்திகளையும் சாங்கோபாங்கமாகச் சொன்னார். இப்படிச்சொன்னவைகளெல்லாவற்றையும் கேட்டருளிய ஸ்ரீராமச்சந்திரானவர் வாயுபுத்திரரைத் திருமார்போடணைத்துத்தழுவி, உன்னையான் பெற்றிருக்கின்றேனாதலால்இனிப்பெறவேண்டியதுவேறுண்டோ? ஓ நவவியாகரண பண்டிதனே! இயாதொரு துன்பமும் அடையாத ஆயுளையடையக்கடவாயென்று திருவாய்மலர்ந் தருளினார்.

அப்போது மிகுதியும் அன்புள்ள இராமாநுஜர் மேகம் வருஷிப்பது போல இரண்டு தாமரசமலர்போன்ற நேத்திரங்களிலிருந்தும் தாரைதாரையாய் நீரொழுக விம்மிவிம்மியழுது, உயிர் புறத்திலேசெல்லத் தனித்துநின்ற உடலை ஒத்தவராகி, முன்னே பிரிவென்கிற துன்பத்தைத் தமக்குக் கொடுத்துவிட்டு நிரதிசயானந்த பரமபதத்தை யடைந்த பிதாவாகிய தசரதசக்கரவர்த்தியைக் கண்டாற்போலத் தமது அண்ணனாகிய ஸ்ரீராமபிரானைமறுபடியு நமஸ்காரஞ்செய்து சமீபத்திலேபோய் நின்றார். அவ்வாறுநின்ற இளையபெருமாளைப் பெரியபெருமாளானவர் செவ்வையாக உற்றுப்பார்த்து, என்னப்பனே! இலட்சுமணா! நம்மைச் சரணமடைந்த விபீஷணாழ்வானுக்காகஉன்னுயிரைக்கொடுத்த தாதுர்த்துவமானது நம்முடைய மரபுக்குத் தகுதியானதே: என்றுசொல்லி நீலநிறச் சூரியனையொத்த தேககாந்தியையுடைய ஸ்ரீராமமூர்த்தியானவர் தமது திருத்தம்பியார் பூண்டிருந்த கவசமுதலிய யுத்தபூஷணங்களையெல்லாம் ஒவ்வொன்றாகக் கிரமமாய்க்களைந்து, வில்லை ஆஞ்சநேயர்கையிற் கொடுத்துவிட்டு, தமது தலையிற் சுருண்டு நீண்டு தொங்குகின்ற கேசத்தால் மேகந்தவழ்கின்ற மேருமலையைப்போல விளங்குகின்ற இலட்சுமணருடைய ஆயாசத்தை ஆற்றிக்கொண்டிருந்தார்.

வேலேற்றுப்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

முப்பத்திரண்டாவது,

வானரர் களங்காண்படலம்.

இப்படலத்தில் ஸ்ரீராமபிரான் ஆக்ஞைப்படி சுக்கிரீவமகாராஜனாதியர் போர்க்களஞ்சென்று மூலபலசேனை மடிந்திருக்கும் விதத்தை விபீஷணர் காட்டக்கண்டு ஆச்சரியங்கொண்டு மீண்டு சுவாமியினிடம் வந்தமை சொல்லப்படுகின்றது.

மூலபலசேனையின் மடிவை ஸ்ரீராமராக்ஞைப்படி விபீஷணர் காட்ட சுக்கிரீவனாதியர் காணுதல்.

கவி.

ஆயபின்கவிதன்வேந்து மளப்பருந்தானையோடும்
மேயினனிராமன்பாதம் விதிமுறைவணங்கிவீந்த
தீயவர்பெருமைநோக்கி நடுக்கமுந்திகைப்புமுற்றார்
ஓய்வுறுமனத்தாரென்று முணர்ந்திலர்நாணமுற்றார்.

இவ்வண்ணமானபின்பு,வானரங்கட்கரசனாகிய சுக்கிரீவமகாராஜர் யாவராலும் கணக்கிடுதற்கரியவானரச்சேனையோடுகூட்டிக்கொண்டுவந்து இராமமூர்த்தியின்திருவடித்தாமரைகளில்சாஷ்டாங்கமாகத்தெண்டன்சமர்ப்பித்துநின்று

சொல்லுகிறார் எப்படியெனில்சுவாமி இரகுகுலோத்தமரே! இன்றுயுத்தகளத்தில் தாமெய்த அஸ்திரவருஷத்தால் மாண்ட கொடியவர்களாகிய இராட்சசச் சேனைகளின் பெருமையைப் பார்த்து நடுக்கமும் மதிமயக்கமு மடைந்தவர்களாய் தைரியமிழந்து யாதொரு விஷயமு மறியமாட்டாதவர்களாய் தாங்கள் பயந்தோடினதை நினைத்து வெட்கமுற் றிருக்கின்றார்கள். திரிலோகங்களுக்குள் வசிக்கின்றவர்களிலும் அதிக கூட்டமாயும், வடவாமுகாக்கினி பரந்து உயர்ந்தெரிந்து வருவதுபோன்று மூலபலம்வந்ததே; அஃதென்னமாய் முடிந்ததென்று விண்ணப்பம் செய்துகொண்டனர். அதுகேட்டருளி ஸ்ரீரகுநாயகர் - ஓ மகாராஜாவே! அம்முடிவைப் பார்க்கவேண்டுமானால் படைத்தலைவர்களுடு நீயுமாக விபீஷணாழ்வாரோடு யுத்தகளம்போய்ப் பாருங்களென் றருளிச்செய்தனர். உடனேவானர வீரர்களெல்லா"மூலபல மடிந்ததைக் காணவேண்டுமென்கிற ஆசையானது தங்களைத் தூண்டிவிடுதலாலே உடனே எழுந்திருந்து விபீஷணாழ்வானை நோக்கி, ஐயா! ராமநாயகன் மூலபலசேனையிற் செய்த பராக்கிரமத்தைப்போய்ப் பார்ப்போம் விரைவிலெழுந்திருந்து வாருமென்று அழைத்துக்கொண்டு அதிவேகமாய்ச் சென்று, கழுகுகளும் - பருந்துகளும் - பேய்களும் - பூதங்களும் - மற்ற மாமிசபட்சணிகளும் - கூட்டங்கொண்டிருக்கின்ற போர்க்களத்தைத் தங்கள் கண்களாற் பார்த்தார்கள்.

அப்படிப்பார்த்தமாத்திரத்தில் யாவரும் திப்பிரமையாய் நின்று, ஆ! ஆ! இவ்வளவுபேரையும் ஒருவில்லுடனே ஸ்ரீராமபிரான் ஒருவர் சகாயமும் வேண்டாமற் கொன்றாரல்லவா? அதனால் அவர்திருமேனிக்கு என்ன ஆயாசந் தோன்றிற்றோ? என்று கண்ணீர்விட்டு அழுதார்கள். இத்தனை ராக்ஷசர்களையும் ஸ்ரீரகுநாயகர் எப்படி கொலைசெய்தாரோ வென்று உடலுமுள்ளமு நடுங்கினார்கள். ஸ்ரீராமச்சந்திரருடைய கீர்த்தியை வாயாரப்பாடி ஆரவாரித்து உற்சாகத்தோடு தேகம்பூரித்தார்கள். அவ்விடத்தே இராக்ஷசர்களடைந்திருக்கின்ற கோரத்தைக்கண்டு பயந்தார்கள். இந்தத்துராத்துமாக்கள் நம்முடைய சுவாமியை வந்து எதிர்த்தார்களல்லவா வென்று" உள்ளத்திலிருந்த கோபங்கொண்டார்கள். நமதாண்டவருக்கு இப்போர்பட்ட சிரமமும் நேரிட்டதாவென்று துக்கத்தால் உயிர்தடுமாறி, எப்படிக் கிருந்தபோதிலும் இவர்கள் யாவரையும் கொன்று முடித்தாரல்லவா வென்றும் சந்தோஷத்தினால் உயிர்நிலைத்துநின்றார்கள். இந்தப்படிஅந்தவானரவீரர்கள் அடைந்தவிதங்களை இன்னதின்னதென்று அறிந்துசொல்லவல்லவர்கள் யாருண்டு? ஆயிரவருஷமாகப் பார்த்தாலு நம்மாற்பார்க்க முடியாதென்று சொல்லிக்கொண்டு அந்தந்த விடங்களிற்போய்ப் பார்க்குந்தோறும் அதிசயித்து நின்றார்களேயல்லாமல் முடியக்காணாதவர்களாகி, ஓ விபீஷணாழ்வானே! ஏழுசமுத்திரங்களும் இராட்சத வுருவங்கொண்டு வந்ததுபோல இந்தப்பாதகர்கள் தோன்றுகின்றார்களே; எங்களாற் கண்டுணரக் கூடவில்லையே: இதனைநீர்தெரிந்து சொல்லவேண்டுமென்று வானரப்படைத்தலைவர்களும் சுக்கிரீவமகாராஜரும் கேட்டுக்கொள்ள விபீஷணாழ்வான் சொல்லத்தொடங்கினார்

கலி.

சாகப்பரந் தெக்கணமெங்குஞ் செறிசாலம்
மோகத்தம்பித் பொன்றினவேறு முடலொன்றி
மேகச்சங்கத் தொக்கனவேழும் வெளியின்மை
நாகக்குன்றம் நின்றனகாண்மி னமரங்காள்.

ஓ நண்பர்களே! இயமனுமவன் பிரியாமல் வசிக்கின்ற கூர்மையுடைய ஸ்ரீராமபாணத்தால் இறந்தவைகளாய்க்கீழேவிழுந்து படிந்திருக்கபோதிலும், பந்தலைப்போல மேலே காகக்கூட்டங்கள் மொய்த்துக் கொத்திக்கொண்டிருக்கின்ற யானைப்பிரேதங்கள் யுத்தகளத்தில் வெளியில்லாதபடி ஒன்றின்மேலொன்று விழுந்து மேகராசிகள் நிறைந்து தவழ்கின்ற உயர்ந்தபர்வதம்போலத் தோன்றுகின்றதையும் தங்களுடைய செவந்த கண்களாலுருட்டிப் பார்த்தே வெற்றிபெறத்தக்க குரூரராக்ஷசர்களுடைய உடல்களில் ஸ்ரீராமபாணங்கள் எனக்குனக்கென்று ஒன்றின்முன் ஒன்றுசென்று தைத்து உயிரையுண்டதினாற் கிடக்கின்ற அவ்வுடல்களிலே பொத்திய அந்தப்பாணங்கள், சிங்கங்கள் வசிக்க யோக்கியமான பெரியமலைகளில் அழுந்து உறங்குகின்ற சர்ப்பங்களைப்போலத் தோற்றுவதையும் உதிர்ந்துகிடக்கின்ற கோரதந்தங்களின்ராசிகள் மணற்குன்றுகளைப் போலவும், பரந்துவிழுந்திருக்கின்ற கறுத்த உடல்களின் பரப்பு கருங்கடலைப்போலவும், தங்கள்தங்கள் நாயகன்மார்களைத் தழுவிக் களிப்போடு பிராணனைவிட்ட கற்புள்ள இராக்ஷசஸ்திரீகளுடைய ஒளியுள்ள முகங்கள் அக்கடலிற்பூத்த தாமரைமலர்க்காட்டைப் போலவும், அம்முகங்களில் தாவிநாவி ஆரவாரித்துக்கொத்துகின்ற கழுகுகள் கீதங்களைப் பாடிக்கொண்டு மொய்க்கின்ற வண்டுகளைப்போலவும் விளங்குவதையும் பாருங்கள்.

ஓ வானரவீரர்களே! கூரிய பாணங்களெல்லாம் இடிவிழுந்தபோது கட்டியகுதிரைகளிறந்ததினால் வெள்ளைக்கொடிகள் பாய்களாகவும், அக்கொடிக்காம்புகள் பாய்மரங்களாகவும், பெரியதேர்கள் அடர்ந்தோடுகின்ற உதிரமாகிய கடலில் மரக்கலங்களைப்போல மிதந்துசெல்வதையும், மும்மதங்களும் பெருகிவழிகின்ற யானைகள் தமதுடலில் அம்புகள்பாய்ந்து உருவிச்சென்ற காரணத்தால் எழுந்துசெல்லமாட்டாமல், தேர்களாகிய மரக்கலங்களோடுகின்ற இரத்தசமுத்திரத்தில் திமிங்கிலமென்று மீனராசானது கடலின்மேல் தலையைத் தூக்கித்தூக்கிப் பார்ப்பதுபோலத் தமது தலைமேலே தோன்றுகிறது அமிழ்கிறதுமாக இருப்பதையும், யானைகளைப்போலக் குதிக்கின்ற கவந்தங்களோடு கைகளைக் கோர்த்துக்கொண்டு தாளப்பிரமாணப்படி நடிக்கின்ற பேய்கள், அபிநயம்பிடித்தாடுகின்ற நடனத்தைத் தம்முடைய மாணாக்கர்களுக்குக் கற்பிக்கும்படி தாமும் அவர்களோடுகூடிக் காலடைவுபோட்டு அபிநயிக்கின்ற பாதசாஸ்திரிகளைப்போலத் தோன்றுகின்றதையும், வெற்றிவீரர்களுடைய கவந்தங்களோடு பொறிகளுடன் பொறிகள் பொருந்தக்கூடிக் கைகளைப் பிணைத்துத் தழுவிக்கொண்டு நர்த்தனம் பண்ணுகின்ற பேய்கள்

கோடரிபோலக் கூர்மைவாய்ந்து கீழேகிடக்கின்ற பல்லிடுக்குகளிலே தங்கள் கால்கள் சிக்கிக்கொண்டு நரம்புகளால் தளைக்கப்படுதலால், அப்பேய்கள் இக்கவந்தங்களோடு நடனஞ்செய்ய நம்மாலாகாதென்று கைசோரவிட்டு மெள்ள நழுவிச் செல்கின்றதன்மையையும் பாருங்கள்.

ஓ ஸ்ரீராமநேயர்களே! தங்களுடைய கூட்டங்களோடு சேர்ந்து நின்று யுத்தம்பண்ண விரும்பாமல் தனித்தனியாக முன்னேசென்று அதிக கோபங்கொண்டு வந்த யானைகளினது வெள்ளியதந்தங்கள், இராக்ஷசவீரர்களுடைய உடலில் வடிகின்ற இரத்தப்பிரவாகத்தில் அங்கங்கு தோன்றுகின்றவை, இளஞ்செவ்வானத்தில் மேகராசியின் மத்தியில் விளங்குகின்ற மூன்றாம்பிறைச் சந்திரனைப்போலத் தோன்றுகின்றதையும், பூதங்கள் அடிதோறுகிடக்கின்ற கொடிக்கூட்டங்களின் மேலும், விற்குப்பைகளின்மேலும், அம்புக்குவியல்களின் மேலும், வேல்ராசிகளின்மேலும், குவிந்த தேர்களின்மேலும், யானைகளின் மேலலங்கரித்த அம்பாரிகளின்மேலும் உட்கார்ந்துகொண்டு, இராக்ஷசர்களுடைய கண்களிற்பிறந்த தீப்பொறிகளால் வெந்து பக்குவப்பட்டிருக்கின்ற மாமிசங்களை எடுத்தெடுத்துத் தின்று தேகம்பூரிக்கின்றதையும், சமுத்திரமும் இரத்தக்கடலும் ஒன்றுடனே யொன்று கலந்து பெருகுவதினால், உதிரவெள்ளத்தோடுவந்த யானைப்பிரேதங்களைத் தமதினமென்று நினைத்து சுறாமீன்கள் சமீபத்திலேவந்து தமது இனமல்லாமையைக் கண்டு பயந்து இவைமலைகளோவென்று சந்தேகித்து, இனமென்று முன்னே தாம் நினைத்ததற்காக நாணித் தமதிருப்பிடத்துக்குப் போகின்றதையும் பாருங்கள்.

ஓ நண்பர்களே! ககனமார்க்கத்திநின்று யுத்தஞ்செய்தவர்களை ஸ்ரீராமபாணமானது சென்று துண்டித்ததனால் அவர்களுடைய பர்வதாகாரமாகிய தேகங்களானவை சர்வலோக ஈனியர்மீது போர்செய்ய வீராவேசத்தோடு வருபவர்கள்மேல் விழுந்ததினால், அந்தப் பிரேதங்களுக்குள்ளே அகப்பட்டுக்கொண்டு அவற்றினின்று நீங்கச்சக்தியற்றவர்களாய் அவர்கள் கைகால்களை யுதறிக்கொண்டு உபத்திரவப்படுவதையும், மிகுதியும் அடர்ந்து மொய்த்துவந்த இரத-கஜ-துரக பதாதியென்னு நால்வகைப்படைவீரர்களது உடலினின்றுந் தெறித்த இரத்ததாரைகள் தனது மேனியிற் பட்டதினால் சூரியன் ஆகாசமத்தியில் வந்தவனாயிருந்தும், உதயகிரியின் சிகரத்தில் உதித்தவனைப்போலக் காணப்படுகிறதையும், தங்களுடைய பராக்கிரமமுற்றும் ஓய்ந்த குரூரராக்ஷசர்கள் துண்டிக்கப்பட்ட காலத்தில் அவர்களுடைய தேகத்திலிருந்து இது ஆறுதானோ வென்னும்படி மேலேசென்ற உதிரத்தில் மூழ்கிச் செவந்நிறமடைந்து வேற்றுருவுற்றுநின்ற சந்திரன், வேறேயொரு சூரியபிம்பத்தைப் போலத் தோன்றுகிறதையும் பாருங்கள்.

ஓ நண்பர்களே! இந்த மூலபலத்தில்வந்த குதிரைகளும் யானைகளும் அநேககோடியாயினும், அவற்றுள் விசேஷமானவைகளைச் சொல்லுகிறேன் கேளுங்கள். இதோ பாகர்களோடு இறந்துகிடக்கின்ற பத்து

கோடிக்குதிரைகளும் குமுதமலர்போல மணம்வீசும் வாயையுடையவைகளாயும், நர்த்தனத்தில் தேர்ந்தவைகளாயும், யானையைப்போலக் காண்படும் பாரியதேகமுடையவைகளாயும், அமுதத்தோடு கூடப்பிறந்தவைகளாயுமாகும். இங்கே செத்துக்கிடக்கின்ற பன்னிரண்டுகோடி யானைகளும் தேவஸ்ரேஷ்டனாகிய பிரஹம்மதேவன் முன்னாள் செய்தயாகத்திலே பிறந்தவைகள். மேலு மழையும் - மேகமும் - சமுத்திரமும் - கங்காநதியும் - ஒருகாலத்தில் வறண்டுபோம். அப்படி வறண்டகாலத்திலும் இவைகளோ மதமொழியாது பெய்கின்றவைகளாகும். ஓ நண்பர்களே! இவ்விடத்திலே கோபவெறியாறியும், உயிரொழிந்தும் உதிரமெல்லாம் வடிந்துபோயும், ஓய்யாமல் மதத்தைப் பொழிந்துகொண் டிருக்கின்ற பதினன்கு கோடியானைகளும்; மேகவாகனனாகிய இந்திரனுடைய திசையிலுள்ள ஐராவதத்தின் பரம்பரையைச் சார்ந்தவைகளாகும்.

ஓ கிஷ்கிந்தாநகரவாசிகளே! இந்தவிடத்தே பிராணனீங்கிக்கிடக்கின்ற பத்மமென்னும் கணக்குள்ள யானைகள் தம்முடையதேகபாரத்தைச் சுமக்கமாட்டாமல் பூமிசாய்ந்துபோவதாயிருந்தால் அந்தப்பூமியை அநாயாசமாகத் தனித்தனிச்சுமக்கவல்லவைகள். மற்றயானைகளைப்போல இமைகொட்ட மாட்டாது. சார்வபௌமமென்னும் யானையின்வமிசத்திற் பிறந்தவைகளாகும். பிரேதமாய்க்கிடக்கின்ற இந்தஆயிரகோடியானைகளும் முன்னாலே இந்திரன் இராவணனுக்குக்கப்பங்கட்டினவைகள், கணக்கில்லாமல் இறந்துகிடக்கின்ற இவ்வானைகளெல்லா நிருதியென்பவ னிலங்காதிபதிக்குத் திறைகொடுத்தவைகளாகும். கொலையுண்டுகிடக்கின்ற இந்தப் பத்துலக்ஷம் குதிரைகளும் க்ஷீரசாகரத்திலே அமிர்தோதயகாலத்தில் அதனோடு சனித்தவைகள். தசக்கிரீவன் தன்னோடு பகைகொண்ட வருணராஜனைச் செயம்பெற்று அபகரித்தவைகளாகும். சின்னபின்னப்பட்டுக் கிடக்கின்ற இந்தப் பத்துலட்சங் குதிரைகள் பிரதாபலங்கேஸ்வரனுக்குத் தோற்றுக் குபேரனோடிப்போனபோது விட்டுவிட்டவைகளாகும். பத்மமென்னும் கணக்குள்ளவாய் மடிந்துகிடக்கின்ற இந்தக் குதிரைகளோ? வித்தியாதரராஜனை இராவணன் ஜெயங்கொண்டு பிடித்து வந்தவைகளாகும். என்று சொல்லிக்கொண்டு வந்தார்.

வானரசைநியங்கள் மீண்டு இராமபிரானிடம் வந்திருத்தல்.

கவி.

என்றுகாணினுங் காட்டினுமீதிறைக், குன்றுகாணினுங் கோளிலதாதலான்
நின்றுகாணுது நேமியினானைச், சென்றுகாண்டுமென் றேகினர்செம்மையோர்.

ஆரியற்றொழு சாம்பவன்பாங்கரும், மாரியூற்கை நிணத்தெழும்பொம்மலார்
பேருயிர்ப்பொ டிருந்தனர்பின்புறம், காரியத்தினிலைமை கழறுவாம்.

இப்படிச் சொல்லிக்கொண்டுவந்த இராவண சகோதரரை வானரேசர்கள் பார்த்து, ஐயா விபீஷணாழ்வாரே! நீர்காட்டிக்கொண்டே வரவும், நாங்கள் பார்த்துக்கொண்டே வரவும், இன்னும் ஆயிரத்திலொருகூறு முடியவில்

லையே: ஆகையால் இன்னொருசமயம் நீர்காட்ட நாங்கள்பார்க்கிறோம். நம்முடைய சுவாமியினிடமே போய்ச்சேருவோம். என்று தங்களுக்குள் பேசிக்கொண்டு சமஸ்த அண்டங்களுக்கும் அவற்றுள் வசிக்கின்ற பிரமேந்திராதி சகலசேதனர்களுக்கும் தானே நியமனகர்த்தா வென்பதற்குக் குறியாகத் திருக்கரத்தில் சுதரிசனாழ்வானைத் தாங்கியருளிய ஸ்ரீராமபிரானிடமே போய்ச் சேர்ந்து, அவருடைய சரணாரவிந்தங்களில் தெண்டன் சமர்ப்பித்தெழுந்து பக்கங்களிலே உட்கார்ந்துகொண்டு, தாம்பார்த்துவந்த எண்ணத்தொலையாமல் மடிந்துகிடக்கிற இரதகஜதுரகங்களையும் இராக்ஷசர்களையு நினைப்பார்கள். அவ்வளவு சேனைகளையும் இரண்டுமூன்று நாழிகைக்குள்ளாகக் கொலைசெய்த அதிபராக்கிரம முடையனவாய் நீண்டுபருத்துயர்ந்த தோள்களை உற்றுப்பார்ப்பார்கள். அப்படிப்பார்த்து மிகுந்த ஆச்சரியமடைந்து பெருமூச்செறிந்து ஆநந்த சமுத்திரத்தில் மூழ்குவார்கள். இஃதிப்படியிருக்க இனிநடந்த காரியங்களை மேற்சொல்லுவோம்.

வானரர் களங்காண்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

முப்பத்துமூன்றாவது,

இராவணன் களங்காண்படலம்.

இப்படலத்தில் இலட்சுமணனை வெற்றிகொண்டு இலங்கையிற் சென்று யாவரோடும் சந்தோஷமாயிருக்கு மிராவணன் தானனுப்பிய மூலபல சேனையின் மடிவையும் சஞ்சீவியாற் சோகந்தீர்ந்தெழுந்த இலட்சுமணனாதியர் சந்தோஷத்தையுந் தூதர்களாலறிந்தயர்ந்து உடனே கோபுரத்தின் மேலேறிக்கண்டு மகாகோபத்தோடு மீளுதலும் சொல்லப்படுகின்றது.

இலட்சுமணனை வெற்றிகொண்டு இலங்கையிற் சென்ற இராவணன் யாவரோடும் சந்தோஷங் கொண்டாடல்.

கவி.

அலக்கணெய்தி யமராழிந்திட, உலக்கவானர வீரரையோட்டியவ்
விலக்குவன்றனை வீட்டியிராவணன், துலக்கமெய்தினன் றேயில்களிப்பினே.

இவ்வண்ணம் வானரவர்க்கங்களெல்லாம் ஸ்ரீராமனைச்சேவித்து சந்தோஷமாயிருந்தார்கள். இஃதிப்படியிருக்க தேவர்களெல்லாந் துக்கசமுத்திரத்தில் மூழ்கிவருந்தும்படியாக வானரர்களையெல்லாந் துரத்தி, இலட்சுமணப்பெருமானைத்தனதுவேலினால் ஜெயஞ்செய்து தனதுஇலங்காபுரியை யடைந்து பிரமாதனருடனே சந்தோஷத்தோடிருந்த இராவணன்யாதுசெய்தனனெனில், யுத்தத்தில் ஆயாசமடைந்தவர்களுக்கும்-உள்ளன்போடு தன்னை உசாவவந்தவர்

களுக்கும் - தன்மாளிகையில் உண்ணத்தகுந்த போசனபதார்த்தங்களை இட்டு விருந்துசெய்ய வேண்டுமென்று விரும்பி, சுவர்க்கலோகவாசிகள் வரக்கடவர்களென்று ஆக்கியாபித்தான். உடனே தூதுவர்களோடிப்போய்ச் சொல்லக்கேட்ட தேவர்களும் தானவர்களும் ஓடிவந்து தன் சமுகத்தில் நிற்க அவர்களை இராவணன் பார்த்து, ஓ தேவதானவர்களே! இந்திரசித்து உங்கள் நகரை வெற்றிகொண்ட அந்நாளில் எப்படி பயத்தோடும் பக்தியோடும் போகங்களை எங்களுக்கு அமைத்துவைத்தீர்களோ? அப்படியே இன்றுமிங்கே அமைக்கவேண்டும். ஏதேனும் குற்றப்பட்டால் உங்கள்தேகத்தில் உயிரிலையாதென்பதை அறிவீர்களல்லவா. என்று வெகு உறுதியாகக் கட்டளையிட்டான். உடனே யாதொரு குற்றமுமில்லாத நல்ல மதுவகைகளும், மாமிசவகைகளும், மற்ற அன்னபானதிகளும், நல்ல ஆடைகளும், சந்தனங்களும், தரிப்பதற்கு யோக்கியமான மலர்வகைகளும், வாசனையூட்டிய ஜலவர்க்கங்களும், மிருதுவாகிய சயனசாமக்கிரியைகளும், மாளிகைக்கு உள்ளும் புறத்தும் வந்து நிறைந்தன.

அக்கால் தேவஸ்திரீகளாகிய அரம்பை மேனகை முதலானவர்கள் வந்து இராக்ஷசராஜர்கள் முதல் அடிமைத் தொழிலாளிகள் வரையும் வந்துள்ள யாவர்க்கும் வாசனைத்தைலமிட்டு மணமுள்ள கல்வைச்சந்தன அரைப்புகளால் மெல்லெனத்தேய்த்து, வாசனையூட்டிய நீரால் ஸ்நானஞ்செய்வித்து, நல்ல போசனபதார்த்தங்களை யூட்டுவார்கள். மற்ற தேவஸ்திரீகளிற் சிலர் இசைப்பாட்டுகளைப் பாடுவார்கள். சிலர் அப்பாட்டின் பொருளுக்கிசைய அபிநயங்காட்டி நடனஞ்செய்வார்கள். வேண்டுமென்று விரும்பின அரக்கர்களைச் சிலர் அன்புபெருகச் சயனஸ்தலங்களில் ஆலிங்கனஞ் செய்வார்கள். இப்படி முன்செய்த நல்வினைப்பயனால் சத்கிருத்தியவணிகனுக்கு முதற்பணங் குறையாமல் அதிகலாபம் வந்தடைவதுபோலத் தான் முன்னேசெய்த தபோபலத்தினுண்டாகிய எல்லாச் சுகங்களையும் எல்லாரும் போதுமென்றமட்டி லனுபவித்துக்கொண்டிருப்பதை இராவணன் கண்டு குதூகலமாயிருந்தனன்.

மூலபலசேனையின் மடிவையும் இலட்சுமணாதியர் சந்தோஷத்தையும் தூதர்களோடிவந்து இராவணனுக் கறிவித்தல்.

கலி.

இன்னதன்மை யமைந்துயிராக்கதர், மன்னன்மாவெந் தெய்துவனைக்கிஞர்
அன்னசேனை களப்பட்டவாறெலாம், தன்றுதூதர் செவியிடைச்சொல்லுவார்.

இவ்வண்ணஞ் சகல சம்பிரமத்துடன் சந்தோஷமா யிருக்கின்ற இராட்சசகுல நாயகனாகிய இராவணனுக்குச் சில தூதர்களோடிவந்து நமஸ்காரம் பண்ணி அவன்காதோடு வாய்வைத்து, மூலபலசேனைமடிந்த வரலாற்றை யெல்லாம் தங்கள் உடல்நடுங்கி நாவுலர்ந்து சுவாசமொடுங்கி, இருதயமிக

குலைந்து கண்களருவியொழுக, உள்ளே ஒடுங்கின்ற சொற்களைப் பலாத்காரமாக வெளிப்படுத்திச் சொல்லுவார்கள்.

ஐயா பிரதாபலங்கேஸ்வரா! ஓ தேவகுலத்தை நாசஞ்செய்த சௌரியவானே! தற்காலத்திலே விருந்துண்ணுகிற இராக்ஷசவீரர்கள்தான் உயிர்பிழைத்திருக்கிறவர்கள். நீர் ஆக்கியாபித்தபடியே போன ஆயிரவெள்ள மிராக்ஷசசேனைகள் உயுத்தகளத்துக்குப் புறத்திலேபோய் நின்ற இரண்டுமூன்று நாழிகைக்குள்ளாக இராமனென்பவன் தன் ஒருவில்லாலேயே அவ்வளவு சேனைகளையும் சின்னபின்னப்படுத்திக் கொன்றான். இப்போ தும்முடைய பராக்கிரமத்தாலே தேவர்களைக்கொண்டு இராக்ஷசர்களுக்குப் பிரபலகீர்த்தியைத் தரத்தக்க விருந்தினை நான்செய்வேனென்று நினைத்துச் செய்கிறீர். இது சந்தோஷங்கொண்டாடத் தக்கதன்று. உமது குலத்தார்க்கெல்லாம் இந்தவிருந்தையே உத்தரகிரியையிற் செய்யும் அன்னபலியாகப் பாவித்துச் செய்யக் கடவீர். சப்தத்வீபங்களிலும் - நானாவிதபர்வதங்களிலும் - வனங்களிலும் பாதாளமுதலிய இடங்களிலும் வசித்துவந்த இராக்ஷசர்களெல்லாம், ஸ்ரீராமனுடைய அம்புக்கு இரையாய்மடிந்து போய்விட்டபடியாலே இந்தலங்கையில் வசிக்கின்ற சிலராக்ஷசர்கள் நாம் உயிரோடிருக்கின்றவர்கள். உலகத்தில் வேறே இராட்சசப் பூண்டென்பதே கிடையாதென்றார்கள்.

அப்போது மற்றவர்கள்செய்து பெறக்கூடாத விருந்துசெய்து அந்தச் சந்தோஷத்தில் மூழ்கியிருந்த இராவணன் தூதுவர்கள் சொல்லிக்கொண்டு வந்த செய்திகளையெல்லாம் கேட்டமாத்திரத்தில், அவனுக்குண்டாகிய துடிப்பும் - கோபமும் - அவமானமும் - தன்னெஞ்சைப் பிளந்தன. வேண்டுமென்று செவந்த சாயத்தை யூட்டினாற்போல விளங்குகின்ற செவந்தகண்களில் தீப்பொறி பறந்தது. பெருமூச்சு அதிகரித்தது. அக்காலவன் சித்தப்பிரமையடைந்து எழுதிவைத்த சித்திரத்தைப்போல ஒடுங்கி அசைவற்றிருந்துவிட்டான். அப்படி சற்றேயிருந்தபின் அந்தராவணன் தன்னைத்தானே திடம்பண்ணிக்கொண்டு, அடா தூதர்களே! படையெடுத்துப்போன ராக்ஷசவீரர்கள் திரிலோகபயங்கரனான என்னைப்பார்க்கிலும் பலவந்தர்கள். எப்படிப்பட்ட யுத்தத்திலும் தோற்றுச் சாகமாட்டாதவர்கள். அவர்களை இத்தனைபேரென்று புத்தியால் அனுமானித்துக் கணக்கிடவு முடியாது. சமுத்திரமணல்போன்ற பெருந்தொகையுள்ளவர்கள். இத்தன்மையான ராக்ஷசர்கள் ஜயம்பெற்றார்களென்று சொன்னீர்களில்லை. ஜயம்பெற்றார்களென்னுமற் போனாலும் அபஜயப்பட்டு ஓடிப்போனார்களென்றாவது, உயுத்தத்துக்குப் போகப் பயந்து தங்கள்தங்க ளிருப்பிடமேபோய்ச் சேர்ந்தார்களென்றாவது சொல்லாமல்; இராமனென்னும் எமனொருவனால் இறந்தார்களென்று சொன்ன இந்தச்செய்தி உண்மைதானோ? பொய்சொன்னீர்கள்போலத் தோன்றுகிறதென்றான்.

இவ்வாறு பாபிஷ்டனாகிய இராவணன் சொன்னதைச் சமீபத்திலிருந்து கேட்டுக்கொண்டிருந்த மாலியவான் அவனைப்பார்த்து, என்னப்பனே! இந்த மூலபலத்தை அழித்ததென்பது ஸ்ரீராமனுக்குரிய செய்கையாகுமோ? நாம் அனுப்பிய தூதர்கள் நம்மிடத்திலே பொய்யையும் சொல்லுவார்களோ? அந்த ஸ்ரீராமன் சமஸ்தலோகங்களையும் அழிக்கவேண்டினால் எவ்வளவோ காலம் வேண்டுமோ? ஒரிமைப்பொழுதுக்குள்ளே அழித்துவிடுவானல்லவா? அவனொருவனாயிருந்து இவ்வளவு இராட்சசப் பெருங்கூட்டத்தை எப்படியழிக்கக்கூடுமென்பாயானால், விரிந்துகிடக்கிற சராசரங்களையெல்லாம் உகாந்தகாலத்தில் பார்வதியை இடப்பாகத்தில் வைத்த உருத்திரமூர்த்தி ஒருவரேயல்லவா தமது சங்கல்பத்தால் படுசூரணப்படுத்துகிறார். அவராமிசங்கொண்டு உயுத்தகளத்திற் புகுந்த இராமனுக்கு ஈதொருபெரிதோ? இஃதிருக்கட்டும்: என்றுகூறிப் பின்னுஞ் சொல்லுகிறான்.

அப்பா இராவணா! முன்னே நீ தேவர்களோடும் அசுரர்களோடும் அநேக யுத்தங்கள் செய்திருக்கிறாயல்லவா? அந்த யுத்தங்களுக்குள் எந்த யுத்தத்திலாவது உன்மேல் ஓரம்புந்தைத்ததுண்டா? இல்லையே: அப்படி நீசெய்த யுத்தத்தில் இந்திரனானவன் தன்னுடைய செல்வங்கள் யாவற்றையும் பற்றற உனக்கே ஒப்புவித்து விட்டதும் யதார்த்தந்தானே. இந்தப்பிரகார நீ செய்த யுத்தப்பிரதாபம் லோகங்களெல்லாம் வியாபித்தபின்பு எங்கேயாவது ஒரு யுத்தமுநேரிட்டதுண்டா? அதுவுமில்லையல்லவா? இப்போது நீ ஸ்ரீராமன் பக்கலிற்செய்த அபசாரத்தாலே உன்னுடைய பிரதாபமும், சகோதரர் புத்திரர் முதலிய பந்துஜனங்களும், சாதியர்களும், அழிந்துபோனார்கள். இதென்ன உனக்குத் தெரியாததோ? ஆகையால் இனியாகிலும் தீர்க்காலோசனை செய்து, ஜெகன்மாதாவாகிய சீதாபிராட்டியைக் கொண்டுபோய் விட்டுவிடும்படியான அறிவுங்கிசைந்த காரியத்தை நடத்தி, பிழைக்கும் வழியைப் பாரென்று சொன்னான். இப்படி சொன்னமாலியவானை இராவணன் அதிக கோபத்தோடு பார்த்து, நான் இலட்சுமணன்மேல் வேலைப்பிரயோகித்து அவனுடைய உயிரை யமனுக்கொப்புவித்தேன். அவனிறந்துபோன துன்பத்தால் அங்கிருந்த வானரப் படைத்தலைவர்களெல்லாம் அழுதுகொண்டிருக்கின்றார்கள். இது சங்கதியை எப்படியும் அந்தராமன் கேள்விப்படப்போகிறான். கேள்விப்பட்டபின்பு தேகவாழ்க்கையை வேண்டாமற் பிராணத்தியாகஞ் செய்துகொள்ளுவான். இதுபரியந்தம் அவர்களாலெனக்கு அநேகதுன்பங்கள் நேரிட்டபோதிலும், இப்போ தென்பக்ஷத்திலேயல்லவா செயமென்றுசொன்னான்.

இவ்வாறு மாலியவானைநோக்கி அதிபௌருஷத்தோடு இராவணன் சொல்லிக்கொண்டுவந்ததைக் கேட்டுக்கொண்டிருந்த தூதர்கள் மீட்டுமவனைவணங்கி, ஓ எங்களாண்டவனே! அதுசங்கதி உமக்குத்தெரியாதோ? இப்போது நீர் சொல்லியதெல்லாம் யதார்த்தமே: அநுமானென்பவன் கொண்டுவந்த

மருந்தால் உம்முடைய வேல்பட்டிறந்த இலட்சுமணனுயிர்பெற்றெழுந்தான். உடனே யங்கிருந்தயாவரும் ஓர் சிறுபொழுதும் தாமசஞ்செய்யாமற் சடுதியிலெழுந்து இலட்சுமணனோடு சென்று, செவந்த தாமரைமலர்போலுங் கண்களையுடைய தசரதராமனைச் சேர்ந்து ஒருவரையொருவர் ஆலிங்கனஞ் செய்துகொண்டு குதூகலமாகவே யிருக்கின்றார்கள். எங்களுடைய சொல்லில் தேவரீருக்குச் சமுசயமிருந்தால் தம்முடைய நேத்திரங்களாலேயே பார்த்தறியலாம் என்று சொன்னார்கள்.

தூதுவர்களுடைய சொல்லால் இராவணன் கோபுரத்தின்மீதேறி மூலபலப் படுகளத்தைப் பார்த்தல்.

கவி.

தேறிலனுரையானே மறுகுறுசிந்தைதேற
ஏறினன்கனகத்தாரைக் கோபுரத்தும்பரெய்தி
ஊறினசேனைவெள்ள முலந்தபேருண்மையெல்லாம்
காறினவுள்ளசோகக் கண்களாற்றெரியக்கண்டான்.

அவர்கள் சொன்ன சொல்லாலே இலட்சுமணனைச் செயம்பெற்றோமென்று ஆநந்தித்துக்கொண்டிருந்தமனம் அதிகதுக்கத்தோடு திடுக்கிட்டு, அந்தத் தூதர்களுடைய சொல்லினிடத்தில் நம்பிக்கை வையாமல் அதைக் கண்டறியும்படி சுவர்ணமயமான கோபுரத்தின்மேலேறி, இலங்கையிலிருந்து சுரப்பெடுத்துப் பெருகிச் சென்றதுபோல அபரிமிதமாகச்சென்ற தனது சேனைவெள்ளம் அழிந்துகிடக்கின்ற யதார்த்தத்தை உள்ளநோகும்படி தன திருபது கண்களாலும் பிரத்தியக்ஷமாகக் கண்டான்.

ஸ்ரீராமபாணத்தால் தலையறுப்புண்டு கிடக்கிற இராக்ஷசவீரர்களுடைய மனைவிமார்கள் கருங்குவளை மலரையும் - கருநெய்தற் பூவையும் - கருமையால்வென்ற தங்களுடைய கண்கள் தாரைதாரையாக நீர்சொரியும்படி அழுவதினால் செங்குமுத மலரைப் போலச் செக்கச்செவேலெனத் தோன்ற, இனி நமக்கார் ஆதரவென்று கைகளைத் தலையின்மேல் வைத்துக்கொண்டு தங்கள் தங்கள் புருஷப்பிரேதங்களண்டையிருந்து கடலோசையு மடங்கும்படியாகக் கோவென்றலறி யழுகின்ற ஓசையைத் தனதிருபது செவியாலும் கேட்டான். அன்றியும் - அதிக துக்காக்கிராந்தனாய் அந்த யுத்தகளத்துக்கு மற்றொருபக்கத்தே திரும்பியபோது, அளவைக்கடந்த யானைப்பெரும் பிணங்களை ஏந்திக்கொண்டும் - நீராழமட்டும் பூமியைப ஊடறுத்து மலைகளைப்புரட்டி அடித்துக்கொண்டும் - விரைந்தோடுகின்ற ரத்தநதிகளில், பேய்கள் புதுவெள்ளநீரில் ஸ்நானஞ்செய்வதுபோலக் குதித்துக்குதித்து மூழ்குகின்றமகிழ்ச்சியைத் துக்கத்தால் தனதுகண்களிற் சுரக்கின்ற கண்ணீரைத் துடைத்துக் கொண்டு பார்த்தான். மேலும் - வேறொருபக்கத்தில் ஆகாயத்தை முட்டவுயர்ந்த வலியதோள்களையுடைய தங்கள் புருஷன் மார்பின்மேல் ஸ்ரீராமபாணம் பட்டுத் தொளைத்துச்சென்ற புண்களின்வழியாகப் - பேய்கள் கைகளை

நுழைத்துக் கொழுப்புள்ள புதுமினைங்களைத் தோண்டித்தோண்டி எடுத்துத் தின்பதைப் பார்த்த இராக்ஷசகுல ஸ்திரீகள், ஐயோ! நம்முடைய நாயகன் இறந்துகிடக்கப் பேய்கள் தாறுமாறாகப் பிளந்து மாமிசங்களைப் புசிக்கின்ற கோரத்தை இந்தக் கண்களிருந்தபடியா லல்லவோ பார்க்கிறோம்? இவை நமக்குவேண்டாம். என்று துணிவுகொண்டு அவர்களிற்சில அரக்கியர் அங்கே கிடக்கிற வாள்களாலும், சில அரக்கியர்கள் வாளெடுக்குநேரமும் சகியாமல் கூரியநகமுள்ள விரல்களினாலும், தங்கள் தங்கள் கண்களைப் பேர்த்தெடுக்கிறதைப் பார்த்தான்.

அன்றியும் - நம்முடைய நிமித்தம் இத்தனை ராக்ஷசர்கள் மடிந்தார்களேயென்கிற துக்கத்தாற் பெருகுகின்ற உதிரநீரோடு இவர்களையெல்லாம் ஒருமனுஷியன் கொன்றானல்லவா வென்கிற கோபத்தாற் பிறக்கும் நிப்பொறிகளைக் கொட்டுகின்ற கண்களையுடைய இராவணன், தமிழ்ப்பாஷை யாலாகிய பாசுரங்கள் எப்படிப்பலபலபொருள் கொடுக்குமோ அதைப்போல் ஸ்ரீகோதண்டத்தில் நின்றும் ஸ்ரீராமபாணங்கள் புறப்பட்டு நேராகச் சென்று அபாரமாகிய ராட்சசர்களை உருவிக்கொண்டு போனபடியால், அணியணியாக விழுந்துகிடக்கிறஅவ்விராட்சச வீரர்களுடைய உடலினின்றும் பெருகியோடுகின்ற இரத்தவெள்ளம் பாயவே முகத்துவாரத்தின் வழியே கடலானது உதிரநீரைக் கக்குவதுபோல இரத்த அலைகளை அதிவேகமாய் வீசிமோதுவதைக் கண்டான். பின்னும்-விண்ணுலகமும்பிளந்து நிலைமாறும்படி ஆரவாரிக்கின்ற வானரசமூகத்தையும், அந்தப் போர்க்களமெங்கும் பிளந்து குழியும்படித் துள்ளித்துள்ளிக் குதித்தாடுகிற கவந்தக் கூட்டங்களையும், கண்களு நீலம்பூத்துப்போகும்படி இமையாமற்பார்க்கின்ற தேவர்களுடைய கொண்டாட்டத்தையும், வானரவீரர்களினுடைய களிப்பையும், இராட்சச கவந்தங்கள் துள்ளித்துள்ளிக்குதித்தாடுபவைகளையும் கண்டு; கோபுரத்தினின்றும் இறங்கி ஸ்ரீராமபிரானுடைய கோதண்டபராக்கிரமத்தையும், அவரை எதிர்த்து மூலபலசேனை நிர்மூலமானதையு மெண்ணினான்.

மூலபலப் படுகளத்தைப் பார்த்த இராவணன் மகாகோபத்தோடு கோபுரத்தினின்று மிறங்கி தனதரசாட்சி மண்டபம் சேர்தல்.

கவி.

கனைபிறக்கின்றதீய நுனைக்கொடுகடைவாய்நக்கிப்
புகைபிறக்கின்றமூக்கன் பொறிபிறக்கின்றகண்ணன்
மிகைபிறக்கின்றநெஞ்சன் வெஞ்சினத்திமேல்வீங்கிச்
சிகைபிறக்கின்றசொல்ல னரசியலிருக்கைசேர்ந்தான்.

இவ்வண்ணம் தனது மூலபலசேனைகள் மாண்டதை நினைக்குந்தோறும் கனகனவென்று சிரித்து, கடைவாய்களை நாவுகளால் நக்கிக்கொண்டும்-புகையெழும்படி பெருமூச்சு விட்டுக்கொண்டும், நிப்பொறிகள் பறக்கும்படி கண்



68. இராவணனும் ஸ்ரீராமபிரானும் போர்க்கோலங்கொண்டு தெய்வீகத்தேரேறுதல்.

உயுத்தகாண்டம். தேரேறுபடலம்.

கண்விழித்துப் பார்த்துக்கொண்டும், பலபல விதமான நினைப்புடையவனுகி கோபாக்கினியானது மேன்மேலும் வளர்வதற்குக்காரணமாகிய வார்த்தைக ளைப் பேசிக்கொண்டு வந்து சிம்மாசனத்தின்மேல் உட்கார்ந்தான்.

களங்காண்படலம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

முப்பத்துநான்காவது,

தேரேறுபடலம்.

இப்படலத்தில் இராவணன் மாண்டவர்கள்போக மீதியாயுள்ள இராக்ஷசசேனைகளைப் போர்க்கோலங்கொண்டு வரும்படி திட்டஞ்செய்து தானும் போர்க்கோலங்கொண்டு தனது தெய்வீகத்தேரேறி விற்குணத் தொனிசூட்டிச் சமர்க்களத்துற்றதும், அதனையறிந்த விபீஷணனும்வானர வேண்டுகோளால் ஸ்ரீராமபிரான் உயுத்தகோலங்கொள்ள உடனே உருத்திரமூர்த்தியினுக்ஞையால் இந்திரன் தெய்வீகத்தேரனுப்ப அதிலவரோகணித்ததும் சொல்லப்படுகின்றது.

இராவணன் போர்க்கோலங் கொள்ளுதற் சிறப்பு.

கவி.

பூதாமலையைமேனிப் புகைநிறப்புருவச்செந்தீ
மோதரனென்னுநாமத் தொருவனைமுகத்துநோக்கி
ஏதுனைநிகரிலாத இலங்கையுளிருந்தசேனை
யாதையுமெழுகென்றானை மணிமுரசெற்றுகின்றான்.

இந்தப்பிரகாரமாகவந்து உட்கார்ந்த மகாதுன்மார்க்கனுகிய இராவணேஸ்வரனுனவன் பர்வதாகாரமாகிய தேகத்தையும் - மேலெழுகின்ற கரும்புகையை யொத்த புருவங்களையும்-நெருப்புத்திரட்சி போன்ற சிவந்த கண்களையும்- மகோதர னென்னும் பெயரையுமுடையவனும் பாபகருமங்களைச் செய்வதில் தனக்குச் சமானமில்லாதவனுகிய அவன் முகத்தைப்பார்த்து, உயுத்தத்துக்குப்போய் மாண்டவர்கள்போக மீதியாய் இந்தலங்கா நகரத்துக்குள்ளிருக்கு மிராக்ஷசசேனு வீரர்கள் யாவரையும் போர்க்கோலம்பூண்டு வரும்படி யானையின்மேல் பறைசாற்றுவிக்கக் கடவாயென்று சொன்னன். அவ்வாறே செய்விக்கிறேனென்று சொல்லிவந்த மகோதரனது கட்டளையாற் கொட்டிய போர்ப்பறை யோசையைக் கேட்டமாத்திரத்தில், ஆயிரத்துநானூறுகோடி இராக்ஷசவீரர்கள் இரதகஜதுரகங்களோடு சமுத்திரம் வற்றியதுபோல தன்னிடத்தில் இனி ஒருவீரனும் உண்டென்று சொல்லாதவண்ணம் இலங்காநகரம் பாழாய்ப்போகும்படிக் கூடினர்.

கலி.

ஈசனையிமையாமுக்க ணிறைதனையிருமைக்கேற்ற
பூசனைமுறையிற்செய்து திருமறைபுகன்றதானம்
வீசினனியற்றிமற்றும் வேட்டனவேட்டோர்க்கெல்லாம்
ஆசறநல்கியொல்காப் போர்த்தொழிற்கமைவதானான்.

உடனே பிரதாபலங்கேஸ்வரனானவன் தனதரண்மனையிற்போய் தன்குலதெய்வமாயும் உலோகேஸ்வரராயுமுள்ள பரமசிவனைச் சிவாகமத்திற்கூறிய முறைமைப்படி பஞ்சாக்ஷரத்தைச் செபித்து ஆத்மார்த்தமாகப் பூசித்தும், தன்னகரத்துள்ள சிவாலயங்களிற் பரார்த்தமாக அர்ச்சனை தீபதூபாதிகளெடுத்து ஆராதித்தும், நானாவித தானங்களைச்செய்தும், யார்யார் எதையெதை விரும்பினார்களோ அவரவர்களுக்கு அதையதை வெகுமதியாகக் கொடுத்தும், பின்வாங்காமற் செய்கின்ற யுத்தத்துக்கு வேண்டிய அலங்காரங்களைச்செய்து கொள்ளுவதானான்.

ஸ்ரீசர்வேசுரனாகிய நாராயணன் அண்டங்களைச் சிருட்டிப்பதற்குத்துணைக்காரணமாகிய பிரமதேவன் யாகத்திலே படைத்த கவசத்தை ஒருகாலத்தில் இந்திரனானவன் பூண்டுவந்து யுத்தஞ்செய்து தோற்றோடிப்போகவே அவனிடத்திலிருந்து அபகரித்த கவசத்தை இரண்டு பக்கங்களிலும் அருவிநீரொழுகுகின்ற நீலமலையினிடத்தில் அநேகசூரியர்கள் உதயஞ்செய்தாற்போலத் தோன்றும்படி தனதுமார்பிற் பூட்டியும், மந்தரகிரியைச் சூழக்கட்டிய வாசுகியென்னும் சர்ப்பத்தைப்போல விளங்கும்படி உடைவாளை வலதுபக்கத்தில் தொங்கப் பொற்கச்சினால் அரையிலிறுகக்கட்டியும், கிரகங்கள் மகமேருவைச்சுற்றி அயர்ந்துபோய் அங்கங்கே கூட்டங்கூட்டமாக நின்றுவிட்டாற்போலப் பிரகாசிக்கின்ற கிம்புரிப்பூணமைந்த கடிசூத்திரத்தை அரைப்பட்டிகையின்மேல் இறுகப்பந்தித்தும், கருடபகவான் வேதங்களையே பக்கத்தில் விரித்துவைத்தாற்போற் பிரகாசிக்கிற தமது சிறைகளைவிரித்ததையொத்த வெள்ளைப்பட்டாடை உடுத்தும், அதன்மேல் இருபக்கத்திலு நிலாவானது வழிந்து ஒழுகுவதுபோல முறுக்கிய கொய்சகத்தைத் தொங்கச்சாத்தியும், அது அசையாமலிருக்கும்படி பொன்னாற்செய்த சர்ப்பாபரணத்தாற்சூழ இறுக்கியும், கருமேகக்கூட்டத்தோடு அதனுள்ளிருக்கும் இடிகளைப் புறப்படுத்தி எடுத்து ஆபரணமாகச் செய்ததையொத்த உடைமணியென்னு மணிவடமணிந்தும், பொற்றாமரை மலர்போன்ற வடிவமும் குகைக்குளிருந்து சிம்ஹராஜன் கர்ச்சிப்பதுபோன்ற முழக்கமுமுள்ள சதங்கைமாலையைச் சாத்தியும், இடியோசையைக்கேட்ட பாம்புகளைப்போலத் திரிலோகவாசிகளும் பயந்தொளிக்கும்படி யொலிக்கின்ற பொன்னாற்செய்த வீரகண்டாமணியைத் தரித்தும், சரிந்து தொங்குவதுபோல ஒளியுள்ள செஞ்சாயந்தோய்த்த சேலையை அந்த வீரகண்டைக்கு வலப்பக்கத்தில் அணிந்தும், இருபதுகைகளுக்கு நடுவே பலதலைகளையுடைய ஆதிசேஷனது மிடறுகளில் விஷக்கறை தோன்றுவதுபோலத்தோன்றும்படி முன்கைத்தோற்கட்டு விரற்புட்டில்கள் இவை

களைத்தரித்தும், பனைமரங்களைப்பொன்னிறமுள்ளநாகங்கள் தனித்தனியே சூழ்ந்து வளைந்தாற்போலக்கைகளில் இரத்தகங்கணங்களைப் பூண்டும், திருப்பாற்கடலைக்கடைந்த மந்தரகிரியைச்சூழக் கட்டிய சர்ப்பராஜனைப்போல விளங்கும்படி தோள்களிற் பாகுவலயங்களை அணிந்தும், சூரியன் தன்னோடு போர்செய்து இரத்தமயமாக உடல்குழம்பியோடச் செய்தாற்போலச் சிவந்த கிரணக்கூட்டங்களை வீசுகின்ற இரத்னகுண்டலங்களைக்காதுகளில் தொங்கவிட்டும், உதயகிரியிலுதித்த சூரியனுடைய கிரணசாலங்கள் கருங்கடலில் தவழ்வதுபோல் குங்குமமும்சந்தனமுமப்பிய எல்லாத்தோள்களிலும் குண்டலங்களினொளிவீசிக்கொண்டிருக்க அவற்றின் பக்கத்தே சந்திரர்களு நக்ஷத்திரங்களும் வரிசைவரிசையாக நின்று பிரகாசிப்பதுபோல முகங்களினிரண்டு பாரிசங்களிலும் பெருமுத்து மாலைகளைத் தொங்கவிடுத்தும் அலங்கரித்துக் கொண்டான்.

இலங்காதிபதியாகிய இராவணேஸ்வரனானவன் இவ்வாறு சர்வாபரணங்களையும் பூண்டவனாய் உதயகாலத்திற் பன்னிரண்டு சூரியர்களும் கிரணராசிகளை வீசுவதுபோல சாஜ்ஜ்வல்யமாய்ப் பிரகாசிக்கின்ற பத்துமுடிகளின்மேலும் தங்களுக்குநடுவே அநேகவிண்மீன்கள் விளங்கும்படி பலசந்திரர்கள் பிரகாசிப்பதுபோல முத்துக்குடைகள் மேலேகவிந்துநிற்கவும், கருக்கொண்ட நீலமேகங்கள் தவழ்கின்ற ஆகாயத்திற் பத்துப்பெருங் குடங்களிலிருந்து அவற்றின்மேற் செவ்வானத்தினொளிபடர அந்தக்குடங்களுக்கு இருபுறத்திலும் பிறைச்சந்திரர்கள் முளைத்தாற்போலப் பத்துமலைக்குகைகளுக்குச்சமானமாகிய பெரியகடைவாய்கள்தோறும் வளைந்த கோரதந்தங்கள் நிலாவீசவும், பத்துத்திசைகளிலும்பத்துயானைகளிருந்தால் அதன்முகங்களிலே கட்டிய பட்டங்களைப்போல ஒருராசியாயுள்ள பெருமுத்துகளினொளிநிரம்பிய வீரபட்டங்கள் நெற்றிகளின்மேல் விளங்கவும், ஊடலிலே இஷ்டநாயகிமார்களுடைய அழகிய சிலம்புசப்திக்கின்ற பாதங்களையல்லாமல் உலோகேஸ்வரர்களே யானபோதிலும் அவர்களுடைய பாதங்களை எக்காலத்திலும் வணங்கியறியாத தலைகளிலணிந்த பத்துக்கிரீடங்களும் தங்களொளியால் இந்தப்பூவுலகத்திலுள்ள சூரியனை ஒளிமழுங்கச்செய்து மற்றலோகங்களிலுள்ள அளவிடப்படாத இருளையெல்லாம் ஓட்டவும் மகாவிபவத்தோடு விளங்கினான். அன்றியும்சொர்க்கமத்திய பாதாளங்களிலுள்ள வீரர்கள்யாவரையும் வெற்றிகொண் டணிந்த வாகைமாலையையணிந்து, அதன்பக்கத்தில் மயில்போலுஞ்சாயலுள்ள யௌவனஸ்திரிகளுடைய கண்களும் வண்டுகளும் கலந்துமொய்த்துக்கொள்ளும்படி தும்பைமாலையைத்தரித்து, சகரர்களாலே தோண்டப்பட்ட சமுத்திரத்தையும் - தினங்களையும் - கடல்மணலையும் — இவைபோன்ற மற்றவற்றையும்— வேண்டியவைகளையெல்லாம் குறைவின்றித் தருகின்ற மந்திரங்களையும்—உவமைசொல்லக் கூடாதனவாகிய, ஐம்பெரும் பூதங்களும் அழியுங்காலத்திலுமழியாத தனது புகழைப்போல அளவுசெய்யமுடியாத அஸ்திரங்களால் நிறைந்த அம்பறாத்தூணியை முதுகிலிறுக்கிக் கட்டினான்.

இராவணனுடைய தெய்வீக ரதத்தின்சிறப்பு.

கவி.

வருகதேரெனவந்தது வையமும்வானு
முருகதேயமு மொருங்குடனேநினுமுச்சிச்
சொருகுபூவன்ன சுமையது துரகமிக் றெனினு
நிருதர்கோமக னினைந்துழிச்செல்வதோர்நிலைப்பில்.

இப்படிப் போர்க்கோலங்கொண்ட இராவணனவன் கட்டியக்காரனைப் பார்த்துத் தேர்வரக்கடவதென்று உத்தரவு செய்தான். அப்படி உத்தரவு செய்தமாத்திரத்தில் தனது தெய்விகரதம்வந்து சேர்ந்தது. அந்தத் தெய்விகரதத்தின் மகிமை எப்படிப்பட்டதென்றால்:—

சுவர்க்கமத்திய பாதாளங்கள் ஒருமிக்கத் தன்மேல் ஏறினாலும் தலையில்முடித்துக்கொள்ளும் பூமாலையைப்போல அந்தத் திரிலோகங்களையும் சுமந்து செல்வதும், இராவணன் நினைத்தவிடங்களுக்குக் குதிரைகளைப் பூட்டாமற்படிக்கே ஓரிமைப்பொழுதுக்குள்ளே போகத்தக்க யந்திரங்களமைத்ததும், அமுதத்தோடு திருப்பாற்கடலிற் பிறந்த ஆயிரங்குதிரைகளையும் - சூரியபகவானுடைய தேரிற்கட்டிய பச்சைக்குதிரையின் வமிசத்திற் பிறந்த குதிரைகளையும் - அதிதேவதைகளாகிய அக்கினிபகவானுக்காகவும் வாயுபகவானுக்காகவும் கடல்நீரையும் வற்றச்செய்யத்தக்க வடவாமுகாக்கினியினும் பிரசண்டமாருதத்தினும் ஜனித்தகுதிரைகளையும் கட்டிய சிறப்புடையதும், பூமிமேல் ஓடுவதுபோலவே ஆகாயத்தின்மேலும் — சமுத்திரத்தின்மேலும் — நெருப்பின்மேலும் — மகோன்னதமான மேருமலையின்மேலும்- ஓடத்தக்கதும், அண்டமுகட்டின்கணுள்ள பிரமனுடைய உலகத்துக்கும் — மற்ற எந்தத்தேவர்களுடைய உலகங்களுக்கும் — ஓரிமைகொட்டுங் காலத்துக்குள்ளேபோய்த் திரும்பத்தக்கதும், எட்டுத்திக்குக் கஜங்களினுடைய மணிகளைப்போலக் கோஷிக்கும் ஆயிரகோடி மணிகளையுடையதும், அநேக சூரியமண்டலங்களை மேருமலையின்மேல் குவித்துவைத்தாற்போற் பிரகாசத்தையும், அண்டங்களையே விலைபெறத்தக்க மதிப்பையுமுடைய இரத்தினங்களை முழுமையும்பதித்ததும், மகாரிஷிகள் தேவர்கள் முதலானவரும் அண்டாதிபதிகள் யாவரும் கொடுத்தவைகளும் — ஒருகாலத்தில் மேலேசொல்லியவர்களே யுத்தத்தில் தோற்று கைநழுவவிட்டவைகளும் - உயுத்தத்தில் அதிகுரூரமானவைகளும் - கடலின் மணலினுமிகுந்த தொகையுள்ளவைகளுமாகிய ஆயுதச்சுமைகளையுடையதும், ஜெயத்துக்கு வாசஸ்தானமானதும், உபேந்திரராகிய பாலன கர்த்தாவினுடைய சக்கரமும் — நெற்றிக்கண்ணராகிய பரிபாக கர்த்தாவினுடைய மழுவாயுதமும் - சதுமுகனாகிய சிருஷ்டிகர்த்தாவினுடைய கமண்டலமும் - ஓர்கால் ஒழிந்தாலும் ஒழியாத வலிமையுடையதும், தேவர்களும் - முனிவர்களும் — சூட்சுமமாகப் பார்த்தும் அறியக்கூ

டாத நானாவித சித்திரத்தொழில் சத்தியத்தைப் போல என்றுமழியாமற் பலசெய்யப்பெற்றதும், ஆகிய மகாரதம்வந்து சேர்ந்தது.

இராவணன் இரதாரூடனாகி யுத்தகளஞ்செல்லல்

கவி.

அனையதேரினை யருச்சனைவரன்முறை யாற்றி
எனையவெண்பதோர் கணக்கிலாமறையவ ரெவர்க்கும்
வினையினன்னிதி முதலியவளப்பரும் வெறுக்கை
நினையினீண்டதோர் பெருங்கொடையருங் கடனேர்ந்தான்.

தனது எதிரில்வந்து நின்ற இரதத்தை பிரதாபலங்கேஸ்வரனாகிய இராவணன் அருச்சனை முதலானவைகளைக் கிரமப்படிசெய்து, இத்தனைபேரென்று அளவுசொல்லக்கூடாத பிராமணஜனங்கள் யாவர்க்குந் தானமாகச் சொர்ணங்களையும் ஆடையணி முதலியவைகளையும் கொடுத்து, இரதத்துக்கு நமஸ்காரஞ்செய்து அதன்மேல் ஏறினான். இப்படி ராவணன் தேரேறியதைக்கண்ட இந்திரன்முதலாகிய சமஸ்ததேவர்களும் இவன் ஸ்ரீராமபாணத்தால் நாசத்தை யடையப்போகிறானென்பதை முன்னே யறிந்தவர்களா யிருந்தாலும், இவனாற் பலமுறை தாங்கள் பட்டிருக்கிறயுத்தசிரமபீதியால் இனி எதாய்முடியுமோவென்று பயந்து சிதறியோடி புத்தியுங்கண்களு மழுங்கிப்போய் மனந்திகைத்து நின்று, ஒருவரையொருவர் பார்த்து நாம் செய்யவேண்டியது என்னவிருக்கிறதென்று பேசிக்கொண்டார்கள். ஐம்புலவாசைகளையு நிரசித்த மகாயோகிகளும் பயந்தார்கள். இம்மட்டுத்தானோ? சர்வலோகங்களும் அச்சத்தால் தங்கள்தங்கள் நிலைகலங்கின. இப்படி சமஸ்தலோகவாசிகளும் பிராணபீதியடையும்படி இரதத்தின் மேலேறியபிரதாபலங்கேஸ்வரன் தன்னருகேநின்றஇராட்சசவீரர்களைநோக்கி ஓ என்னை இருமையினும்பிரியாத நண்பர்களே! இன்று நான் யுத்தத்திற்பிரவேசிப்பதினால் ஸ்ரீராமன் எனக்குத்தோற்று தேகவியோக மடைந்தானேயானால், அதைக் கேள்விப்பட்டு இயற்கைமணம் அமைந்த அளகபாரத்தையுடைய சானகியானவள் தன்னுடைய தாமரைமலர்போன்ற கைகளால் வயிற்றைப்பிசைந்தும் - மோதியும் - சகிக்கமுடியாத கொடிய துக்கசாகரத்தில் மூழ்குவாள். அல்லது நான் தோற்று அந்தத் தசரதபுத்திரனால் மாள்வேனேயானால், அது சமாசாரத்தைக் கேள்விப்பட்டு மயனுடைய புத்திரியாகிய மண்டோதரியென்பவள் இரண்டுகைகளையுங் கொண்டு வயிற்றைப்பிசைந்து மோதிமோதி யறைந்து திராத்துயரக்கடலிலே மூழ்குவாள். இந்த இரண்டு காரியங்களில் ஒன்றுமுடியாமல் வீணே நான் திரும்புவதில்லை. என்றுசொல்லி பலமுடிகளும் பலதலைகளும் பிரகாசிக்கின்ற காரணத்தாலும் - அளவுசெய்ய முடியாத பல ஆயுதங்கள் பலகைகளிலும் விளங்குகின்ற ஏதுவாலும்- சமுத்திரங்கள் பொறுக்கமாட்டாமற் பொங்கி ஆகாயத்தைமுட்ட அலைகளைவீசும்படி தம்முடைய திருவடியைப் பூமியில்வைத்து அளந்த திரிவிக்கிரம

மூர்த்தியைப்போலத் தோன்ற உயர்ந்து நிமிர்ந்து நின்று, ஆகாயமானது படீரென்று பிளந்து இருபிளவாகவும் – குலாசலங்கள் வெடிக்கவும் – புதுப்புண் வெடித்தாற்போலப் பூமிபாளமாகவும் – பசும்பொற்குடமானது ஆகாயத்திலிருந்து கழலுவதுபோலச் சூரியன் தன்கதிமாறிச் சுழலவும் – சந்திரன் தன்னிலைகலங்கி அமுதத்துளிகள் சிந்தி வருத்தமுறவும் – தன்னுடைய தோள்களைக்கொட்டி ஆரவாரித்து, குரூரமாகிய யுத்த நமக்குச் சமீபித்ததென்னும் ஒப்பில்லாத பெருங்களிப்பால் மேருமலையும் வெடித்துச் சிந்தும்படி தன்வில்லைக் குணத்தொனி செய்தான்.

அந்தக் குணத்தொனியைக்கேட்ட தேவதாஸ்திரிகளும் – தானவஸ்திரீகளும் – தங்கள் நாயகன்மார்களுக்கு இன்றையதினம் சுராசுரகண்டனாகிய பாபிஷ்டனால் பிராணநாசம் உண்டாமோ என்னமோ வென்று திடுக்கிட்டு, ஸ்ரீமகாலட்சுமியைத் தியானித்து, அந்தச் சர்வலோகநாயகியினது சின்னமாகிய தங்கள்மாங்கலியத்தைத் தொட்டுப் பயந்தார்கள். இவ்வாறு குணத்தொனிபண்ணித் தேரோடுகிற அதிர்ச்சியால் சமுத்திரமானது பலசுழிகள் சுழித்துப்பொங்கவும், பலஉயிர்வர்க்கங்களு நடுக்கமடைந்து சிதறியோடவும், ஆதிசேடனானவன் பூமியைச்சுமப்பதை விட்டு தனதுகாந்திபொருந்திய ஆயிரமணித்தலைகளையும் பரப்பிமேலெழுந்து வந்ததைப்போன்றதேகத்தையுடையவனாகித் தேரைச் செலுத்திக்கொண்டுவந்த இராவணனானவன் தேவர்களும் – மூவர்களும் – அசுரர்களும் – மற்றத் திரிலோகத்திலுள்ள வீரர்கள் யாவரும் – இன்றைக்கு இந்தப்பாபிஷ்டன் யுத்தத்தை உத்தேசித்தபடியால் உலோகமெல்லா நாசமாய் விடுமேயென்று தங்கள்தங்கள் பிராணன்மேல் ஆசையுடையவர்களாய்ப் பீதியடையும்படி, வடவாமுகாக்கினிக்கு இரண்டுபங்கதிகமாகத் தீப்பொறிகளும் உதிரத்துளிகளும் சிந்தும்படி யுத்தகளஞ் சேர்ந்தான்.

இவ்வண்ணமாக யுத்தகளத்தில்வந்த இராவணனையும் அவன்சேனைகளையும் பார்த்து விபீஷணர் ஸ்ரீராமபிரான் சந்நிதியிற் சென்று சுவாமி! தேவகண்டனாகிய இராவணன் தனது சைநியங்களோடு இரதாரூடனாய் யுத்தகளம் புகுந்தனன். அதுகண்டு பயந்து வானரசைநியங்களெல்லாம் ஓடவாரம்பிக்கிறது. என்று விண்ணப்பஞ் செய்து நின்றனர். அப்போது வானரர்களெல்லாம் கைகளைச் சிரசின்மேல்தூக்கிக் குவித்து, ஓ சர்வதேவ தேவோத்தமா? ஓ ராட்சசகுலகாலா! ஓ சாதுசஜ்ஜனோத்தாரா! எங்களைக்காத்தருளாய். என்று சொல்லவந்தவர்கள் பயத்தால் நாவெழாமல் குழறிக்குழறிச் சொல்லிக்கொண்டு, நடக்கக் காலெழாமல் அங்கங்கே சுருண்டுவிழுந்து உளைத்துக்கூவுங் கூச்சல் அதிகரித்தது.

ஸ்ரீராமர் போர்க்கோலங் கொள்ளுதல்.

கலி.

தொழுங்கையொடுவாய்குழறி மெய்ம்முறைதுளங்க
விழுந்துகவிசேனையிடு பூசன்மிகவின்னோர்

அழுந்துபடபோலமணி தஞ்சியெழுமந்நாள்
எழுந்தபடியேகடி தெழுந்தனனிராமன்.

அம்பரத்திரத்தில் ஆதியிலே பிரமேந்திராதி சமஸ்ததேவர்களும் – முனிவர்களும் – இராட்சசர்களால் துன்பப்பட்டுக் கலங்கி முறையிட்டகாலத்தில் க்ஷீரசாகரத்தில் திருவனந்தாழ்வான்மேலிருந்து யோகநித்திரைநீங்கி எழுந்தாற்போலச் சடுதியிலெழுந்து, மத்தகஜம்போலக் காணப்படுகிற தாம் ஒப்பற்ற யமனுடைய விஷபாசக் கயிற்றையே கட்டினாற்போலப் பளபளவென்று மின்னுகின்ற வாளாயுதத்தைத் திருவிடையின் வலப்பாரிசத்திற் கட்டி, விபீஷணரையும் வானரவீரர்களையும் பார்த்து, ஓ எனது மெய்ப்பத்தர்களே! கற்பின் பூங்கொடியாகிய சானகியினது துன்பத்துக்கும் – சுவர்க்கலோகவாசிகள் முதலிய சாதுஜனர்களுடைய துன்பக்கடலுக்கும் – இன்று முடிவு உண்டாகுமென்று திருவாய்மலர்ந்தருளித் தமது திருமேனியிற் கவசத்தினைத் தரித்தார்.

கவசத்தைப் பூட்டியபின் அதிகோபிஷ்டனாகிய நமனுடைய மடைப்பள்ளியைப்போல விளங்குகின்ற அழகியகைகளுக்கு விரற்புட்டில்களு முன்கைத்தோல்களுங் கட்டி, சமஸ்தபொருள்களையும் தன்னிடத் தடக்கிவைத்துக்கொண்டிருக்கும் பூமிபோல விளங்கி அளவுசெய்யமுடியாத நானாவித அஸ்திரங்களை வகித்த அம்பருத்தூணியை முதுகில் இறுகக்கட்டி யுத்தசன்னத்தராயினர்.

அப்போது சுவாமியினுடைய யுத்தத்திறத்தைக் கண்டு சேவிக்கும்படி வந்திருந்த தேவர்களை உருத்திரமூர்த்திபார்த்து, ஓ அண்டர்களே! இராட்சசர்களுடைய சண்டை இன்றோடே முடிவாகின்றது. ஸ்ரீராமனே வெற்றியடையப்போகிறார். இதற்குச் சந்தேகமில்லை. இனிராக்ஷசவுபத்திரவ பயமென்பது யாருக்குங்கிடையாது. நீங்கள் நிர்ப்பயர்களாய் மணிகள்கட்டி வெற்றிச்சக்கரங்கள் பூட்டிப்பொன்னாலமைத்த இரதத்தை அந்த ஸ்ரீராமனுக்கு அனுப்புவீர்களென்று சொல்லியருளினர். ஸ்ரீ உமாநாயகராகிய உருத்திரபகவான் சொல்லியதைக்கேட்ட தேவர்கள் இது செய்யத்தக்கதேயென்று சொல்லித்தங்கள் அரசனாகிய இந்திரனுக்குத் தெரிவித்தார்கள். அதுகேட்ட இந்திரன் ஒருக்ஷணகாலத்துக்குள்ளே திரிலோகத்தையும் கிரமமாகச்சுற்றிக்கொண்டு வரத்தக்க ஒப்பில்லாத தேரைக்கொண்டு வாருங்களென்று உத்தரவு செய்தான். உடனேதேவர்கள் குதூகலமாகச்சென்று இரதசாரதியாகிய மாதலியைப்பார்த்து, நமதிராஜனானவர் தேரையோட்டி வரச்சொன்னாரென்று சொல்லினார்கள்.

ஸ்ரீராமபிரானுக்குத் தேவேந்திரனா லனுப்பிய இரதத்தின்சிறப்பு.

கலி.

மாதலிகொணர்ந்தனன் மகோததியனாவும்
பூதலமெழுந்துபடர் தன்மையபொலன்றேர்

சீதமதிமண்டிலமுஞ் சேணொளியவெய்யோன்
பாதமெனநின்றது படர்ந்ததுவிசும்பின்.

இவ்வண்ணந் தேவர்கள் கூறியவார்த்தையைக் கேட்ட மாதலியென்பவன் சமுத்திரஞ்சூழ்ந்த பூலோகமெழுந்தவருந் தன்மையையொத்த அழகு பெற்றதாய் சகலவலங்காரங்களு நிறைந்த இரதமானது குளிர்ந்த சந்திரமண்டிலமும் மற்ற மண்டிலங்களுந் தனக்குப் பாதமாக ககனமார்க்கத்தில் வந்தது. அந்தத் தேரின்மகிமை யெப்படிப்பட்டதெனில் ஏழு குலாசலங்களினுமுள்ள பலத்தினையெடுத்துச்செய்த கொடிஞ்சும், பிருதிவியின் முழுப்பலமுள்ள சக்கரத்திற்சேர்த்த இருசும், அஷ்டநாகங்களினாற் செய்த வடக்கயிறும், வருஷம் - அயனம் - இருது - மாதம் - பக்ஷம் - வாரம் - நாள் - என்று இதுவரையிலு நடந்த காலங்களிலும் இனிவருங் காலங்களினும் விசாலித்திருக்கின்ற தட்டும், நக்ஷத்திரங்களினாற்செய்த மணியாலிகளும், திக்குகளினாலே யமைத்த பக்கச்சுவர்களும், மேகங்களினால் இயற்றிய அவனூறும், அஞ்சுபூதங்களினுடைய சக்திகளெல்லாம் ஒன்றாய்த்திரண்டமைந்த பலமும், புற்றுண்டு முதல் விருக்ஷங்கள்வரையிலுமுள்ள ஸ்தாபரங்களினாலமைத்த கொடிகளும், ஸ்ரீ சர்வேசுரனவர் சங்கற்பித்த தமது திருக்கரத்தால் பாற்கடலைக்கடைந்த காலத்திலுண்டாகிய ஆலகாலமே தனதிடத் தண்டாகும் ஆசனமும், அவருடைய திருவுந்தியின்முளைத்த மூலதாமரை மலரின் மொட்டே தனக்குமொட்டும், ஐம்பெரும் பூதங்களையும் திருவுதரத்தில் வைத்து மறுபடியும் உமிழ்கின்ற அச்சுதனையனாகிய ஸ்ரீஹரி சயனிக்கின்ற சயனமாகிய ஆதிசேஷனையொத்த விசாலமுமுள்ளதாயத்தத்தில் திவ்வியத் திருத்தேரானது.

அப்படிப்பட்ட திருத்தேருக்குச் சதுர் வேதங்களாற் சொல்லப்பட்ட யாகங்களினாலும், ஏழுசமுத்திரங்களினாலும், ஏழுமலைகளினாலும், ஏழுலகங்களினாலும், ஐம்பூதங்களினாலும், மூன்றுதீயினாலும், பெருந்தவங்களினாலும், யாகத்திற் சொரிகின்ற அவிர்ப்பாகத்தினாலும், ஐந்து ஞானேந்திரியங்களினாலும், ஐந்து கருமேந்திரியங்களினாலும், ஐந்து கடர்களினாலும், நாலுவேதங்களினாலும், மூன்று கரணங்களினாலும், பத்து வாயுக்களினாலும், இராப்பகலென்கின்ற இரண்டுபெரும் பொழுதினாலும், அவ்வவைகளின் உருவமாகச்செய்யப்பட்ட குதிரைகளைப்பூட்டி, சந்திரசூரியர் மண்டிலங்கள் அடித்தட்டில் நிற்கும்படி உயர்ந்த அந்தத் திருத்தேரை அம்மாதலியென்பவன் சமுத்திரஞ்சூழ்ந்த பூலோகத்தை நோக்கி ஆகாயமார்க்கமாக ஓட்டிவந்து தேவேந்திரனுக்கு முன்பாக அந்தரத்திலேயே நிறுத்தினான். அதைக்கண்ட தேவேந்திரன் இந்தத்தேரை இந்தப்பூமியின்கண் யுத்தகளத்திலெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ புருஷோத்தமனாகிய ஸ்ரீராமபிரானுக்குக் கொடுத்துக் கடவாயென்று மாதலிக்குக்கட்டளையிட்டவுடனே அங்கிருந்த தேவர்களெல்லாம் அந்தத்தேருக்கு நமஸ்காரஞ்செய்து, ஓ ஸ்ரேஷ்டனே! எங்கள் அரசனாகிய இந்திரனது கட்டளையால் ஸ்ரீராமச்சந்திரனிடத்திற் செல்லுகின்றாயன்றோ? நீ எங்களுக்கு

உபகாரார்த்தமாக ஜெயத்தைப்பெறக் கடவாயென்று கற்பகமலர்களை வாரிவாரி இறைத்தார்கள்.

அப்படி தேவர்கள்யாவரும்மலர்களை இறைக்குஞ்சமயத்தில் மாதலியானவன் இடதுகையிற் கடிவாளத்தைப்பிடித்து வலதுகையில் முட்கோல்கொண்டெடுத்து, அந்தரதமானது மனோவேகத்திலும் அதிவேகமாய் இருவினைகளுக்கும் விரோதியாய் நின்றமெய்ஞ்ஞான கோசத்தின் விசையையுடைத்தாகி ஆகாயத்தை உருவி, தான்வருவதைக்கண்டு திரிலோகத்தார்களும் கைகளைக்கூப்பித் தண்டன் சமர்ப்பிக்கும் படியாக வந்து, அப்பிராகிருதனாகிய ஸ்ரீராமமூர்த்தியின் பக்கலிற் சேர்ந்தது. சச்சிதானந்தத்திருமேனியை மறைத்து லீலாமானுஷ விக்கிரக ஸ்வரூபராய் எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீராகவனார் அந்தத்தேரைக் கடாக்ஷித்து, அதிக சோதிமயமாயிருப்பதினால் இது சூரியனுடைய ரதமென்போமேயானால் ஒற்றைவண்டியில்லை. அல்லது யுகமுடிவில் தோன்றுகின்ற வடவாமுகாக்கினிக் கடரென்போமேயானால் வெப்பத்தைக் காணோம். மேருமலையென்போமேயானால் இவ்வளவு பெரிய உருவமுடையதல்ல. ஆகையாலிது திரிமூர்த்திகளும் ஏறியுலாவுகின்ற தெய்வவிமானந்தானோ? யுத்தத்துக்கு ஆயத்தமாயிருக்கிற சமயத்திலே இப்போதிது வருவதற்கு என்னகாரணமென்று தமக்குள்ளே எண்ணி மாதலியைப்பார்த்து, யாருடைய கட்டளையால் இதைச் செலுத்திக்கொண்டு நீ என்பக்கலில் வந்தாயென்று திருவாய் மலர்ந்தருளினார். அப்படி அரசர்களுக் கரசனாகிய தசரதபுத்திரர் கேட்டதற்கு அவ்வவர்களி னுள்ளத்தை அறியவல்ல மாதலியானவன் சுவாமியைப்பார்த்துச் சொல்லுகிறான்.

ஸ்ரீகாகுத்தகுல நாயகனே! இந்தரதம் திரிபுரசம்ஹார கர்த்தாவாகிய சிவமூர்த்தியும் சதுர்முகப்பிரமனும் பூர்வகாலத்தில் ஆயிரஞ் சூரியர்களுக்கு உவமையான ஒளியுள்ளதாகச் சிருஷ்டிக்கப்பட்டது. ஊழிகாலத்தில் சமஸ்தவஸ்துக்களும் அழிந்தாலும் இதழியாம லிருப்பது. ஓ எங்கள்நாயகனே! இந்திரனுடைய ஏவுதலாலே தேவரீர் ஆரோகணித்தருளுவீரென்று ஓட்டிக்கொண்டு வந்தேன். இந்தப் பிரமாண்டம்போன்ற அநேகவண்டங்களை இதன்மேலேற்றி அடுக்கிவைத்து நடத்தினாலும் சிறிதும் சலனமில்லாமற் சுமந்துகொண்டு வேண்டிய விடத்திற்குச் செல்லும். குறுகவேண்டிய விடத்திற் குறுகிநிற்கும். உயரவேண்டியபோது அதியுன்னதமாக உயரும். இக்காரியங்களால் சமஸ்த அண்டங்களையுந் தனக்குள்ளே பொருந்த வைத்துக்கொள்ளுகின்ற ஸ்ரீ சர்வேசுரனுடைய திருவயிற்றை ஒப்பாகின்றது. தேவரீர் ஸ்ரீஹஸ்தத்தாற் பிரயோகிக்கப்பட்ட பாணத்தைப் போல அதிகவேகமாய்ப் போகத்தக்கது. பார்வையின் வேகத்தையும், மனோவேகத்தையும், சண்டமாருதத்தின் வேகத்தையும் கண்டால்; அம்மூன்றையும் தன்னுடைய வேகத்துக்குள்ளே அடக்கிக்கொள்ளும். வேகத்திலே ஞானமும் பின்னிடும்படி அதற்குமுன்னே செல்லுமானால், பூமியிலும் ஆகாயத்திலும் செல்லுமென்

படி இதற்கொரு விசேடமல்ல. நீரின்மேலும் தீயின்மேலும் பூமியாகாசங்களிற் செல்வதுபோலச்செல்லும். சப்தசமுத்திரங்களையும், பதினாலுலோகங்களையும், ஒருகணப்பொழுதுக்குள்ளாக இரண்டு முறை சுற்றிவரும். இடையே எங்கேனுநிற்குமென்றாலோ நிற்பதல்ல.

ஸ்ரீ கோதண்டத்தைக் கையிலேந்தி உலகங்களைக் காக்கவந்த எம்பெருமானே! இப்படிப்பட்ட திறமுள்ளதேர் இதுவல்லாமல் வேறுமுண்டோ? ஸ்ரீ உருத்திரமூர்த்தியினுக்கையால் பிரமனேமுதலிய தேவர்களும் முனிவர்களும் நம்முடைய சுவாமிக்குத் தேரைவிரைவாக அனுப்பென்று இந்திரனுக்குச் சொல்ல, அவ்விந்திரனக்கட்டளையைச் சிரமேலேற்றுத் தேவரீர் ஆரோகணித்தருளும்படி அனுப்பினனென்று சொன்னான். அதுகேட்ட நம்முடைய ஐயனாகிய ஸ்ரீராமபிரானவர் இராக்ஷசர்கள் ஏதாவதுமாயையாற் கற்பித்து அனுப்பியதோவென்று யதார்த்தமாய்ச் சந்தேகித்தவரைப்போலக் காணப்பட்டார். அப்படியவர் காணப்பட்ட மாத்திரத்தில் அந்தரத்திற் பூண்டுள்ள குதிரைகள் ஸ்ரீராமபிரானை நோக்கி, ஓ வேதங்களிற் பிரதிபாதிக்கிய மூலகாரணவஸ்துவே! இந்தமாதலி இப்போது சொல்லியவையெல்லாம் சத்தியமே; ஒன்றும் பொய்யல்ல வென்று வேதமொழிகளைக் கொண்டு சொல்லின. அப்போது தசரதநந்தனர் குதிரைகளினுடைய வேதமொழியால் இனிச் சந்தேகமில்லையெனத் தேறினவரைப்போலத் தோன்றி மாதலியைப்பார்த்து நீயாரென்று வினவ, அவன்கைகளைக் குவித்து நின்று, ஸ்ரீரகுநாயகரே! நானே இந்த மகத்தாகிய ரதத்தைச் செலுத்துகின்ற சாரதி. என்பேர் மாதலியென் றழைப்பார்களென்று உண்மை கூறினான்.

அப்படியவன்சொல்லியதன்மேல் எம்பெருமானவர் சமீபத்திலிருந்த சுமித்திராதேவி இளஞ்சிங்கமாகிய இலட்சுமணரையும் சிறியதிருவடிகளாகிய அனுமானையும் கடாக்ஷித்து, நீங்கள் இதைப்பற்றி ஆலோசிப்பதென்னவென்று கேட்டருளினர். அவர்களிருவரும் தண்டனிசமர்ப்பித்து வாயைப் பொத்திக்கொண்டு வணங்கி நின்று, ஓ எங்களாண்டவனே! நிச்சயமாக இந்திரனுடைய ரதமென்றே தோன்றுகிறதென்று சொன்னார்கள். அதுகேட்ட ஸ்ரீராமபத்திரர் இஃதுள்ளதேயென்று தெளிந்தனர்.

ஸ்ரீராமபிரான் இரதாருடராதல்.

கவி.

விழுந்துபுரடீவினை நிலத்தொடுவெதும்பத்
தொழுந்தகையநல்வினை களிப்பினொடுதுள்ள
அழுந்துயரத்தமர ரந்தணர்கைமுந்துற்
றெழுந்துதலையேறவினி தேறினனிராமன்.

நாம் ஸ்ரீகோதண்டத்தைத் திருக்கரத்தில் தாங்கியது முதல் தனதுவிர்த்தி நாசமாய்க் கீழ்விழுந்து புரண்டு துக்கித்துக் கொண்டிருக்கின்ற பாபவர்க்கங்களெல்லா நமக்கு மாதுருஸ்தானமாகிய இராவணனும் — செவிலி

இறந்துகிடக்குந் தன்தமயன்மேல் விழுந்து பிரலாபித்தழுதலைச் சாம்பவந்தர் தேற்றியதும், அதனுற்றேறிய விபீஷணர்போய் பலஸ்திரீசமூகத்தோடும் சமர்க்களம்வந்து இராவணன்மேல்விழுந்து பிரலாபித்தழுத மண்டோதரி அவனோடே ஸஹமரண மாதலைக்கண்டு அவ்விருவர்க்கும் கும்பகர்ணனுதிய மற்றப் பந்துவர்க்கத்தினர்க்கும் சாமக்கிரியை நடாத்திமுடித்து ஸ்ரீராமரைச் சரணடைந்ததும் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீராமர் இரதமேறியபோது சகல தேவர்களும் ஆகாயத்தில்நின்றாசீர்வதித்தல்.

கவி.

ஆழியந்தடந்தேர்வீர னேறலுமாசிகூறிப்
பூழியிற்சரித்ததன்மை நோக்கியபுலவர்போத
ஊழிவெங்காற்றின்வெய்ய கலுழனையொன்றுஞ்சொல்வார்
வாழியிவ்விராமன்றேரோ டெத்திறர்மலர்கள்வீசி.

இப்படித் திருத்தேரின்மேல் எம்பிரானுனவர் ஏறியருளின மாத்திரத்தில் அந்தத் திருத்தேரினது பரிசுத்தமாகிய சக்கரங்கள் பூமியிலுருண்ட தன்மையைநோக்கிய பிரமேந்திராதி சமஸ்த தேவசமூஹங்களும் முனிவர் கூட்டங்களும் ஒன்றுகூடி, இதற்கு முன்னே தேவகண்டகர்களோடே யுத்தஞ்செய்யவெழுந்தருளும் போதெல்லாம் தாமேறியருளுகின்ற பெரியதிருவடிகளுடைய திருத்தோள்களைச் சிறிதுநினைத்துத் தகுதியாதவர்களாய்ச் சிறியதிருவடிகளாகிய அநுமானுடைய திருத்தோள்களையே இந்தத் திருத்தேருக்குச் சமானமாகச் சொல்லலாமென்று பலவாறு துதித்துக் கற்பகமலர்களைத் தூவி, சுவாமியினிடத்துண்டாகிய அதிசயத்தால் வாழ்த்துகூறத் தலைப்பட்டு, இந்தத்திருத்தேர் யாதோரிடையூறு மில்லாமல் செல்லக்கடவதென்றும் - எல்லாப் பலங்களையும் வகிக்கக்கடவதென்றும் - சுவாமியை எதிர்த்துநின்ற இராக்ஷசர்களெல்லா நாசமாகக் கடவர்களென்றும் - உலோகேஸ்வரர்களுக்கும் ஈசுவரனாகிய ஸ்ரீராமபத்திரனுனவர் ஜெயம்பெறக் கடவரென்றும் - இராக்ஷசஸ்திரீக ளெல்லாரும் ஸ்ரீராமபாணத்தால் பிராணனீங்கிய தங்கள் தங்கள் நாயகன்மார்மேலும் பந்துஜனங்கள்மேலும் விழுந்துகதறி அழக்கடவர்களென்றும் வாழ்த்தி ஆர்ப்பரித்தார்கள்.

இப்படி சமஸ்ததேவர்களும் ஆர்ப்பரிக்காநிற்கையில் அந்தத் திருத்தேரானது யுத்தகளத்தை நோக்கி வந்ததை இராவணன்தனது இருபது கண்களாலும் பார்த்து, இதுவரையிலு நமக்கு நடுங்கி ஒடுங்கிக்கிடந்த துர்ப்பலர்களாகிய தேவர்கள் இன்றைய யுத்தத்தில் நாமிந்த அற்பமனுஷனாகிய இராமன்கையால் மாண்டிறிவோமென்று நினைத்துக்கொண்டு தேர் அனுப்பினார்கள். இனி எங்கே அவர்கள் தப்பிப்போவார்கள்? இப்போ இந்த ராமனைச் செயம்பெற்று அவர்களைத் தண்டித்து ஒழிப்பேன். அது பின்னையாகட்டும். என்றுகூறிப் பற்களை நறநறவென்று கடித்து பத்துவாய்களையு மடித்துக் கறுவிக்கொண்டு, அடாசாரதி! அதோ கோதண்டத்தைச்சிவந்தகையிற்

பிடித்து இரதாருடனுய் வருகின்ற இராமன்மேல் இரதத்தைச் செலுத்தக்கடவாயென்று கட்டளையிட்டான். முன்னேயிவ்விராவணன் தேர்வருவதைக் கண்டு பயந்தோட்டம்பிடித்த வானரங்களெல்லாம் ஒன்றுகூடி, ஸ்ரீராமபிரானே செயம்பெறுவாரென்று நிர்மாணித்துத் தேவர்கள் இரதத்தை அனுப்பினார்கள். ஸ்ரீராமச்சந்திரர் வெற்றிகொள்வா ரென்பதற்கு இனிச் சந்தேகமே இல்லையென்று பயப்படாமல் அதிதைரியமடைந்து போர்க்களத்தே வந்து மொய்த்துநின்று, அங்குமிங்குமாகத் திரிந்து மரங்களையு மலைப்பாறைகளையும் கொண்டு இராக்ஷசர்கள்மேலெறிந்து, திக்குப்பாலகர்களும் - ஆகாசமார்க்கத்தில் ஸ்ரீராமருடைய யுத்தசாதுரியத்தைக் கண்டு சேவிக்கும்படி வந்திருந்த தேவர்கூட்டங்களும் - திடுக்கிட்டுச் சிதறும்படியாகக் கல்லென்று பேரிரைச்சலிட்டன.

அக்கால் வாரிறுக்கிக்கட்டிய முரசவாத்தியத்தின் ஓசையும், வீரர்கள் கர்ஜிக்கும் ஓசையும், போர்க்களத்தில் இரதகஜதுரகபதாதிகள் வரிசைவரிசையாகவந்து நிறையும் ஓசையும் அடைந்து ஒருமித்துக்கோஷிப்பதினால்; உலகிலுள்ள வெல்லாரும் சகிக்கமாட்டாமல் பூமியில்வீழ்ந்து பேச்சடங்கினார்கள். இவ்வளவிலே நில்லாமல் ஸ்ரீராமருடைய திருத்தேரின் ஆரவாரமும், பிரதாபலங்கேஸ்வரனுடைய இரதத்தின் ஆரவாரமும், எல்லாருடைய செவிகளும் செவிடாகும்படி அதிகரித்தன. அப்போது ஸ்ரீரகுநாயகர் மாதலியினுடைய முகத்தைநோக்கி, ஓ என்பால் அன்பின்மிகுந்த சாரதிசிரேஷ்டனே! நான் சொல்லுங்காரிய மொன்றுண்டு கேட்கக்கடவாய், அதாவது - இந்தப்பத்துத் தலையுள்ள சத்துருவானவன் எதுஎது செய்ய நினைக்கின்றானே அவற்றையெல்லா மவன்செய்த பின்பு யான் செய்யும் எத்தனத்தைநோக்கி, அதற்குத்தக்கபடி நீ சாரதித்துவ வியாபாரஞ் செய்யக்கடவாய். முன்னதாக அவசரப்பட்டு நீ ஒன்றுஞ் செய்யவேண்டியதில்லை யென்பதை உன்மனதிற் பதியவைப்பாயாக என்று சொன்னார். அதுகேட்ட மாதலியானவன் ஸ்ரீராமச்சந்திர சுவாமியினுடைய முகாரவிந்தத்தைப் பார்த்து, சுவாமி! தேவரீருடைய திருவுளக்கருத்தையும், குதிரையினுடைய உள்ளத்தையும், சத்துருக்களுடைய எண்ணத்தையும், இருதிறத்தாருடைய சேனையின்மிகுதியையும், சேனைகளடைந்த குறைவுபாட்டையும், சுவாமியடையும் வெற்றியையும், சந்தேகமற்ற காலத்தையும், தகுதியான இடத்தையும்; செய்யப்புகுந்த யுத்தத்தின் திறத்தையும் ஆலோசிக்காதவனாகப்போவேனேயானால்; அஸ்வலக்ஷணசாஸ்திரமுதலிய நூல்களை ஐயமறக்கற்றுத்தேர்ந்த என்னுடைய ஞானத்தால் என்னபிரயோஜனமென்றான்.

அதுகேட்டருளிய ஸ்ரீராமபிரான் நல்லது அப்படியே செய்யென்றார். இப்படிப் பேசிக்கொண் டிருக்கையில் தசமுகனானவன் சுவாமிக்கு எதிரேவரவு மாதலியும் தேரைச்செலுத்த, ஸ்ரீராமமூர்த்தியும் இராவணனும்யுத்தத்துக்கு யத்தனிக்கும்போது மகோதரனானவன் இராவணனைப்பார்த்து, ஓ பிரதா

பலங்கேஸ்வரா! நீங்களிருவரும் போர்செய்ய நானொன்றும் செய்யாமல் சாக்ஷிபூதனைப்போல நின்றுகொண்டிருப்பது குற்றமாய் முடியுமல்லவோ? ஐ என்னைப் போஷித்துவந்த மஹாநுபாவா! எனக்குச்செலவு கொடுத்தால் இந்த ராமனையும் வானரசேனைகளையும் அதம்பண்ணி விடுகிறே னென்றான்.

இலக்குமணனைநோக்கி யெதிர்க்கச்சென்ற மகோதரனை ஸ்ரீராமர்மாய்த்தல்.

கவி.

அம்புயமனையகண்ணன் றன்னையானரியினேறு
தம்பியைத்தொலைத்ததென்னத் தொலைக்குவென்தொடர்ந்துநின்ற
தம்பியைத்தரித்தியாயிற் றக்கனைசொற்றமென்றான்
வெம்பிகலாக்கனகேத செய்வெனென்றவனின்மீண்டான்.

அதுகேட்ட இராவணனானவன்—ஓ ஜெயவீர பிரதாபசாலியே! இதோ நிற்கின்ற தாமரை மலர்போன்று விசாலித்துக்குளிர்ந்த சிவந்த கண்களையுடைய இராமனை நானே யுத்தத்தில் மடிக்கிறேன். அவ்விளங்கோனையாகிய இலட்சுமணனை என்பக்கநோக்கவொட்டாமல் நீபோய்ப் போர்செய்து தடுத்துவைத்திருப்பாயானால், அதுதான் நீ யெனக்குத் தேடிக்கொடுக்கும் வெற்றியென்றான். அதற்கு மகோதரன் - ஐயா பிரதாபலங்கேஸ்வரா! இது எனக்கொரு பெரிதான காரியமோ? இதோபோய் நீர் சொன்னபடி அதையே செய்து முடிக்கிறேன். என்று சொல்லிவிட்டுத் திரும்பி ஸ்ரீராமராஜர் எழுந்தருளியிருக்கின்ற இடத்துக்குப் போகையில், ஸ்ரீ புருஷோத்தமனுடைய தெய்வீக ரதமானது நெருங்கி எதிரேவந்தது. அந்த இந்திர ரதமானது நெருங்கிவருவதை மகோதரன்கண்டு அதிககோபிஷ்டனாய்த் தனது வலவனைப்பார்த்து அடா சாரதி! நம்முடைய ரதத்தை இராமன்தேரை முட்டும்படி ஓட்டென்று உத்திரவுசெய்தான். இப்படிச்சொன்ன மகோதரனை அச்சாரதியானவன் வணங்கி, ஐயா வீரவானே! ஸ்ரீராமனுடைய வீராவேசத்தைப் பார்த்தால் எனக்கொன்றுந்தோன்றவில்லை. அளவிடற்கு முடியாத பராக்கிரமமுள்ள கோடி இராவணர்களானபோதிலும் இன்றையதினம் வந்து ஸ்ரீராமனோடு எதிர்ப்பார்களேயானால் சாகாமல் பிராணனோடு திரும்பியும் போவார்களோ? கமலாக்ஷனாகிய ஸ்ரீராமன்முன்னே செல்லாமல் நீர் அப்புறம் நழுவிவிடுவதே நல்ல காரியமென்றான்.

இவ்வாறு சாரதி சொல்வதைக்கேட்ட மகோதரன் கோரதந்தங்களையுடைய ஆழமாகிய தனது வாயைமடித்து, அடா சாரதி! என்னுடைய சௌரியத்தைச் சிறிதும் கவனிக்காமல் அவமரியாதையான வார்த்தைகளைச்சொன்ன உன்னை இப்போதே மென்று தின்று விடுவேன். சந்தேகமில்லை. சுத்தவீரனாகிய மகோதரன் தன்சாரதியையே தின்றானென்கிறபழிக்கு அஞ்சிச்சும்மாவிட்டேன். என்றுகூறிக் கோபமாறியபின் அச்சாரதியானவன் அவனுடைய கோபத்துக்குப்பயந்து ஸ்ரீராமபிரானுடைய தேருக்கெதிரே தேரைச் செலுத்தினான். அப்படிச் செலுத்தியபோது மகாயுத்த நடந்தது. அந்தயுத்தத்

தில் பொன்மயமாகிய இரதகஜ துரகபதாதியென்கிற பெருங்கடலானது ஸ்ரீரகுநந்தனருடைய பாணங்களாகிய வடவாக்கினியால் வற்றிப்போய் மகோதர னொன்று மகாபாதக னொருவனுமே நின்று, சுவாமி யெழுந்தருளிய ரதத்திற்கட்டிய இடிக்கொடியின்மேலும் - தேரின்மேலும் - குதிரையின் கடிவாளவடத்தைக் கையிற் பற்றியிருக்கின்ற மாதலியின்மேலும் — ஸ்ரீராமமூர்த்தியினுடைய குவிந்ததோள்களின்மேலும் — அதிக விசையாகப் பாணவருஷங்களைப்பெய்து; ஆகாயமும் பூமியும் கிழியும்படி ஆரவாரித்தான். அதைக் கடாக்ஷித்த தேவதேவோத்தமனாகிய ஸ்ரீராமமூர்த்தி புன்னகைசெய்து, அந்தத் தீயவனுடைய வில்லையும் - கவசத்தையும் - கையையும் - தோள்களையும் - கழுத்தையும் - ஒவ்வொருபாணத்தா லறுத்துத்தள்ளினார். அறுத்துத்தள்ளின மாத்திரத்தில் தான் சொல்லிவந்தசொல் ஒன்றும் தன்செய்கை வேறொன்றுமாய் மாறிப்போய் மகோதரன் முடிந்தான்.

அக்கால் திரிலோகத்தையும், எட்டுத்திக்கையும் வெற்றிபெற்ற இராவணன் ஸ்ரீராமர் மகோதரன் முடியும்படி பாணப்பிரயோகம் பண்ணி உயிரைப் பகரித்ததைப் பார்த்து மனம்பொறாமல், அடா தேர்ப்பாகனே! இராமன்மேல் தேரைச் செலுத்துசெலுத்தென்று சொல்லினான். அப்படியவன் சொல்லுதலும் அந்தப்பாகனும் அவன் சொன்னபடி இரதத்தைச் செலுத்தினான். அதுகண்ட தயாசிந்துவாகிய ஸ்ரீராமபத்திரனானவர் மூடுபனிபோலக் கவிந்துகொண்ட இந்தச்சேனைகள் யாவற்றையும் பொடிபடுத்தி இவனைத் தனியனாகச் செய்துவிட்டால் பின்பு மனநெகிழ்ந்து நம்மைச் சரணமடைந்து உஜ்ஜீவித்துப்போய்த் தான் பெற்றிருக்கிற வரங்களையும், ஆயுளையும், பூரணமாக அனுபவிப்பான். அப்படியன்றி முன்னே தானே இவனோடு போர்செய்வோமானால்; ஐயோ! இவனிறந்துபோவானே; என்று திருவுளமிரங்கினவரானார். இப்படித் திருவுளமிரங்கிய ஸ்ரீராமபத்திரர் தாம் செய்துகொண்ட சங்கற்பம் அவனுக்குத் தோன்றாதபடியாகத் தமது கோதண்டத்தை நாணேற்றிட்டு, தேர் யானை குதிரை காலாள் இவைகளின்மேல் அஸ்திரங்களை எய்தனர்.

இராவணன் ஸ்ரீராமருடன் எதிர்த்தகாலையில் அவனுக்குண்டான துற்சகுனக்காட்சி.

கவி.

அடல்வரியரக்கர்க்கப்போழ் தண்டங்களெழுந்துமண்டும்
கடல்களும்வற்றவெற்றிக் கால்வேர்த்துடற்றுங்காலை
வடவரைமுதலவான மலைக்குலஞ்சலிப்பபோன்று
சுடர்மணிவலயத்திங்கத் துடித்தனவிட்டதெயர்ந்தோன்.

அந்தக்காலத்தில் மகாபராக்கிரம சாலியாகிய இராவணனுக்கு சமஸ்த அண்டங்களையும் முழுக்க நக்கத்தக்க சமுத்திரங்களும்வற்றிப்போகும்படி வலிப்புள்ள பிரசண்டவாயுவான தெழுந்து மோதுகின்ற காலத்தில் மேருமுதலா

கிய பர்வதங்கள் தள்ளாடி அசைவதுபோல் பாகுவலயங்களெல்லா நெக்குவிட்டுச் சிந்தும்படி இடதுதோள்கள் பத்தும் துடித்தன. ஆகாயத்தினின்றும் இரத்தமழை இடைவிடாது பெய்தன. உலகங்களெல்லா நடுங்க பெருமலைகளெல்லாம் பொடிப்பொடியாயுதிர மின்னுமல் இடிகள் விழுந்தன. சூரியனை ஒளிமழுங்கும்படி பரிவேடம் கவிந்துகொண்டது. தேரிற்பூட்டிய குதிரைகள் நடுங்கின. கைகளிற்பிடித்திருந்த பத்துவில்லுகளும் தாமே நாரிகளற்றன. பத்துவாய்களும் நாவுகளும் ஈரமில்லாமல் உலர்ந்தன. மார்பிலணிந்த நல்லமணமுள்ள மலர்மாலைகள் புலால்நாற்றம் வீசின. அவனது தேரிற்கட்டிய வீணைக்கொடிமேல் கழுகுகளும் காக்கைகளும் வந்து மொய்த்துக்கொண்டன. தன்னைச் சூழ்ந்துவந்த குதிரைகள் கண்களில் நீரைத் தாரைதாரையாகச் சொரிந்து அழுதன. பட்டமணிந்து அலங்கரித்து வந்த போர்க்குரியயானைகள் தறிகளில் கட்டிவைத்தாற்போலச் சோம்பிநின்றன.

இப்படி தனக்குத்துன்மைகளும் தேவர்களுக்கு நன்மைகளுந் தரத்தக்க துர்ச்சகுனங்கள் உண்டாயினவற்றைப் பார்த்தும் இராவணன்மனம் சிறிதும் தளராமல், ஏகமனுஷ்யனுக்கு என்னைவெல்லவும் முடியுமோவென்று நினைத்து; தேரை வேகமாய் நடத்திக்கொண்டு வருகிறான்.

ஸ்ரீராமமூர்த்தியும் இராவணனும் பராக்கிரமித்து நிற்றல்.

கலி.

கண்டசக்கர நான்முகர்கைத்தலங், விண்டசக்கத்தொல் வண்டம்வெடிபட
அண்டசங்கத் தமரர்தமர்ப்பெலாம், உண்டசங்க மிராவணனூதினன்.

சொன்னசங்கின தோசைதுளங்குற, வன்னசக்கென் றிமையவரேங்குற
அன்னசங்கைப் பொருமையினரியன், றன்வெண்சங்குந் தானுமுழக்கிற்றால்.

இவ்வண்ணம் இரதத்தைச் செலுத்திக்கொண்டு வருகிற இராவணன் உருத்திரமூர்த்தியும் பிரமதேவனும் தங்கள்தங்களது கரங்களை விதிர்த்துத் திருமேனி நடுங்கவும், பண்டைக்காலந்தொட்டுள்ள சகலாண்டங்களும் வெடிக்கவும், தேவலோகத்துள்ள தேவர்கூட்டங்களின் செருக்கையெல்லா மடக்கிய வெற்றிச்சங்கை இராவணன் வாயில்வைத்து ஊதினன். அவனூதிய சங்கத்தொனியைக்கேட்டுத் திருவுளங்கலங்கிய ஸ்ரீபாஞ்சசன்னிய ஆழ்வான் விரைந்தெழுந்தருளி, இராவண சங்கத்தொனியு நடுக்கமுறவும் — இந்திராதிதேவர்களெல்லாம் இஃதெந்தச் சங்கத்தினது தொனியென்று ஏக்கங்கொள்ளவும் — தானேநின்று தொனித்தருளினர். உடனே சுதரிசனமூர்த்தியும், கட்கமூர்த்தியும், சார்ங்கமூர்த்தியும், கதாமூர்த்தியும், சுவாமிக்குப் பரமகைங்கரியத்தைச் செய்யும்படி எழுந்தருளி சமீபத்தில் நின்றார்கள். தேவேந்திரோத்தமனாகிய ஸ்ரீராமபிரானவர் தம்முடைய அனந்தகல்யாண திவ்வியகுணங்களைச் சதுர்வேதங்களும் அறியாத தன்மையைப்போல அம்மூர்த்திகள் அவரையுங் காணாதவராயினர். அநந்தரம் திக்குகளும் — திரிலோகங்களும் — சமுத்

திரங்களும் — பர்வதங்களும் - பெருந்தேவர்களும் - நடுங்கவும், இவைகளெல்லாம் அடங்கிய பிரமாண்டமும் குலுங்கவும், இந்திரனுடைய சங்கை யெடுத்து மாதலியானவன் தன்வாயில்வைத்து ஊதினன். இராவணேஸ்வரனுடைய அம்புகள் ஜகந்மோகனாகாரலீலாமானுஷ திவ்யமங்கள விக்ரகஸ்வரூபராயெழுந்தருளிய அப்பிராகிருதனாகிய ஸ்ரீராமச்சந்திரருடைய அழகிய திருமேனியின்மேல்வந்து படிவதற்கு முன்பாக, தேவதாஸ்திரிகளுடைய தாமரைமலர்போன்ற கண்களாகிய அம்புகள் அனந்தமாய்வந்து தைத்தன. இருவருடைய தேர்களிலுங்கட்டிய குன்றிமணிபோற்சிவந்தகண்களையுடைய குதிரைகள் ஒன்றின்மேலொன்று துள்ளிப்பாயும் கருத்துடையனவாய் கண்களில் தீப்பொறிபறக்கப் பார்த்து, ஒன்றையொன்று வென்றுநின்று பின்பு தணியுமென்னலாம்படியான கடுங்கோபத்தைக் காட்டுகின்றன. பூமியும் - சுவர்க்கமும் - கடல்களும் - இன்றே முடிந்துவிடுமென்று சொல்லும்படியான பேரொலி யுண்டாகும்படி இராவணனுடைய தேரிலுள்ள வீணைக்கொடியும்; ஸ்ரீராமச்சந்திர ரெழுந்தருளிய இரதத்திற்கட்டிய இடிக்கொடியும், முறைமுறையாக ஒன்றையொன்று மோதின. இராவணேஸ்வரன் விற்களிலனைத்துப்பன்னின் குணத்தொனிகள் எழுசமுத்திரங்களும் ஒன்றாகச்சேர்ந்து கொலித்தாற்போல ஒலித்தன. ஸ்ரீசக்கராதாரனாகிய எம்பெருமான் ஸ்ரீகோதண்டத்தை வளைத்துச்செய்த குணத்தொனியானது, பிரமாண்டமே நிலைகுலைந்து தட்டுமாறும்படி ஊழிகாலத்தி லெழுந்த மேகமுழக்கம்போலத் தொனித்தது.

ஸ்ரீராமமூர்த்திக்கும் இராவணனுக்கும் சமர்மூளுதல்.

கலி.

மறைக்கின்றதொர்மனமும்மிடை படர்கின்றதொர்சினமும்
விரைக்கின்றதொர்பொறிபொங்கின விழியும்முடைவெய்யோன்
குறைக்கின்றனவெதிர்வெஞ்சிலை குழையக்கொடுங்கடுங்கால்
உறைக்கின்றனசுடர்வெங்கணை யுருமேறெனவெய்தான்.

ஸ்ரீராமனைப் பார்த்துப் பார்த்துப் பலபலவிதமாக வெவ்வெறியெண்ணிப் பதறுகின்ற மனத்தையும், இடையிடையே தோன்றுகின்ற கோபத்தையும், அக்கினிவிரைப்பதுபோலத் தீப்பொறிகள்பறக்கின்ற கண்களையுமுடைய கொடியோனாகிய இராவணப்பதகன், தன தாயர்த்தவில்லை இருகுதைகளும் பொருந்தும்படிவளைத்து, இடிகளையும் அக்கினியையும் ஒத்தவைகளும், யமனுடையமார்பினை நுழையத்தக்கவைகளும், மனமுமைபொத்தவைகளும், முன்னொருகாலத்தில் தேவர்கள் பிரயோகித்த அஸ்திரங்களையெல்லாம் யற்றுப்போகச்செய்த வலியுடையவைகளும், பாற்கடல்கடைந்த மத்தாகிய மந்தரகிரியைச்சுற்றிய வாசுகியென்னும் பாம்பினும் பெரியவைகளுமாகிய கொடியதீட்சணியமான அம்புகளை இடியோசைபிறக்கும்படி எய்தான்.

கலி.

துண்டப்படுமெனுமவைத் தொளைத்துன்னுறைதங்கா
தண்டத்தையும்பொறுத்தெருவென் நிமையோர்களுயிர்த்தார்
கண்டத்தெறுவினைக்காற்றினைக் கருணைக்கடல்கனகச்
சண்டச்சரமழைகொண்டவை யிடையேயறுத்திட்டான்.

அப்போது மேருமலையையும் துண்டப்படுத்தி அப்பட்டிலே தங்காமல் பிரம்மாண்டத்தையும் தொளைத்துக்கொண்டு அப்புறத்துப் போகுமென்று தேவர்களும் சந்தேகங்கொள்ளும்படி, திருபாகசமுத்திரமூர்த்தியாகிய ஸ்ரீ ராமபிரானுடைய ஸ்ரீகோதண்டத்தில் அம்புகளைத்தொடுத்து, வாயுவேகமாக வருகின்ற இராவணபாணங்களை அந்தரத்திலேயே துண்டந்துண்டங்களாய் விழும்படித் துணித்துவிட்டார்.

அக்காலத்தெய்தி நிறைவேற்றும் வல்லமையுடையவனொருவன் முயன்ற காரியமானது அவன்முன்செய்த தீவினை நடுவே வந்து இடையூறுபடுத்தவழிந்தாற்போல், ஸ்ரீராமபாணத்தால் தன்னுடையபாணங்கள்வழியழிந்துபோகக் கண்ட இராவணன் அளவில்லாத அஸ்திரங்களைப் பெருமழைவில் மேகங்கள்மழைக்காலத்திறங்கிப் பெய்தாற்போலப் பிரயோகித்தான். அந்தஅஸ்திரங்கள் ஆகாயம் - திக்கு - மலைகள், சமுத்திரங்கள் - பூமி -- இவ்விடங்களிலெல்லாம் நிறைந்து, ஒருபொருளையும் பார்க்கவொட்டாமல் எல்லாத்தேவர்களுடைய கண்களுக்கும் தடையாய்நின்று, கணிதசாஸ்திரிகளால் ஏற்படுத்தப்பட்ட கணிதங்களையும் கடந்து, வெளிப்பூமியில் காயவொட்டாமற்பரவி இருளையுண்டாக்கித் திகைக்கச்செய்தன. யானைத்தோலைப்போர்த்தமகாயுத்தத்தொழில்வல்ல உருத்திர பகவானும் இப்படிப்பட்ட அம்புகளின் பெருமையை நாமென்னசொல்வதென்றுமனந்திகைத்தனர். மற்றுப்பிரமன்முதலானபெருந்தேவர்களுமுனிவர்களும்பயங்கொண்டு ஜகத்திற்குநேர்ந்ததைக் கண்களாற்காணமாட்டோமென மூடிக்கொண்டேயிருந்துவிட்டனர்கள். அநேகஇடிகள்விழும்போது மலைகள் பொடிப்பொடியாய்ச் சிதறுவதுபோல, வானரசேனைகளெல்லாம் சிதறிப்போயின.

அக்காலம் எல்லாவற்றிற்கு முதல்வராகிய ஸ்ரீகோதண்டராமராகிய ராகவர் அவர்செய்கையைக்கண்டு அவற்றை விலக்கவேண்டுமெனத்திருவுளங்கொண்டு வில்லில் ஒரு அஸ்திரத்தைத் தொடுத்துப் பிரயோகித்தார். அப்படி பிரயோகித்தஅம்பானது என்னசெய்ததென்றால் :—

கலி

செக்கிலினை மறைவாணனுக் கொருவன்சிறுவிலைகாண்
முக்கிருநெற குணலின்பய னெலாவினை முதல்வன்
சக்திதன் வடிவெக்கனை மனையாள்வருதந்தை
வெக்கிலையைப் பயிலுந்தவ வைக்கன்செரி விசிகம்.

மூன்றுவகையாகிய வேள்விசெய்யும் வேதப்பிராமண னொருவனுக்கு தானியங்குறைந்துவிடுங்காலமாகிய க்ஷாமகாலத்திற்கொடுத்த ஒருவேளை

புணர்வினாகியபலன் அன்னங்கொடுத்த தாதாவுக்கு எவ்வண்ணம்பெருகிப் பயன்படுமோ அதைப்போல், ஸ்ரீராமபாணம் இராக்ஷசகுலநாயகன்பிரயோகித்த அம்புகளையெல்லாம் நாசமாக்கின. அவைகள் நாசமாயினதெத்தன்மைத்தெனில் அநேகபாவங்கள் ஒருசிறுபுண்ணியத்தின் முன்னிலாதோடுவதுபோலாயின. ஒருக்ஷணப்பொழுதுக்குள்ளாக இலட்சம் பாணங்களைத் தேவகுலகாலனானவன் எய்வான். அந்தக்ஷணத்துக்குள்ளேதானே இராக்ஷசகுலகாலவைரியானவர் அவ்வளவு அம்புகளையும் பிரதி அம்புகள்தொடுத்து அறுத்துத்தள்ளுவார். இப்படி அவன்எய்கின்ற அம்புகள்யாவும் ஸ்ரீராமபாணத்தால் துண்டு துண்டுகளாய்க் கடலிற்போய்விழுந்து நீர்க்குடிப்பதினால் அக்கடலும் சேறாகி, சமுத்திரத்துக்குள்ளே நீர்ப்பசையற்று அங்குள்ள பொருள்களெல்லாம் சாம்பலாகி அச்சாம்பல்கள் மேடுமேடாய்க்கிடக்கும்.

அப்போது யுத்தத்தில்வல்லவனாகிய இராவணேஸ்வரன் தானெய்கின்ற அம்புகளையெல்லாம் காகுத்ஸ்தகுலதிலகர் வில்லில் பிரதியம்பு தொடுத்தெய்து துண்டிக்கின்றமையால் மிகுதியும் கோபங்கொண்டு, எழுத்தடிகளையும் - கோடாரிகளையும் - தோமரங்களையும் - தண்டாயுதங்களையும் - இருப்புலக்கைகளையும் - சக்கராயுதங்களையும் - சூலாயுதங்களையும் - இவைபோன்ற மற்ற ஆயுதங்களையும் -- தனது இருபதுகைகளாலும் எடுத்தெறிந்தான். உடனே சூல்கொண்ட காளமேகம்போன்ற திருமேனியையுடைய ஸ்ரீகோதண்டராமரானவர் வேகத்தால் காற்றையும் - தீப்பொறிகளைச் சிந்துவதினால் அக்கினியையும் - ஓசையால் இடியையுமொத்த அம்புராசிகளைத் தொடுத்தெய்ய, அந்த அம்புகளுள் ஓரம்பானது இராவணன் அபரிமிதமாக எய்த ஆயுதங்களுள் ஆயிரம்வேல்களைத் துணித்தன, ஓரம்பானது ஆயிரமெழுத்தடிகளைக்கண்டித்தன. ஓரம்பானது ஆயிரங்கோடரிகளை முறித்தன. ஓரம்பானது ஆயிரமம்புகளைப் பொடிப்பொடிசெய்தன. ஓவ்வோரம்பானது ஆயிரஞ்சக்கரசூலாயுதங்களைச் சின்னபின்னப்படுத்தின.

இந்தப்பிரகாரம் சமயுத்தம் நடக்கிறசமயத்தில் ஸ்ரீராமபாணங்கள் தன்னுடலில் வந்து தைப்பதினால் இராவணனானவன் அம்புகள்பட்ட மதயானையைப்போல உள்ளங்கொதித்து, எழுமேகங்களும் ஒன்றாய்க்கூடிப் பெருந்துளிமழையைப் பெய்வதுபோலப் பத்துவில்லையும் வளைத்து அநேக அம்புகளைத்தொடுத்துப் பிரயோகித்தான். இந்த யுத்தத்தைக்கண்ட பிரிதிவிமுதலிய பஞ்சபூதங்களும் பாபிஷ்டனாகிய இராவணன் இன்று முடிவானென்று சந்தோஷித்தன. ஸ்ரீசர்வேசுரனாகிய ஸ்ரீராமபிரானெய்கிற அம்புமழைகள் விசேஷமாய் எங்கும் வியாபித்தபோதிலும், கருணையால் தங்களுக்குக் குளிர்ந்திருப்பதினால் தேவர்கள்தங்களுடைய உருவங்கள் குளிர்ச்சிஅடைவார்கள். அதிபாதகனாகிய இராவணனெய்கிற அம்புமழைகள் எவ்விடங்களிலும் சென்று உஷ்ணமாயிருப்பதினால், அப்பூதங்களுக்கும் தமது உருவம் வெப்பங்கொண்டுபோய் அக்கினிமயமாயின.

இராவணன் தனதிரதத்தோடு ஆகாயமார்க்கஞ்சென்று அங்கிருந்து பாணப்பிரயோகஞ் செய்தல்.

கவி.

மந்தரக்கிரியென மருத்துமாகுதி
சந்தவெற்பொருப்பெனப் புரங்கடாமெனக்
கந்தருப்பநகர் விசும்பிற்கண்டென
அந்தரத்தெழுந்தவ் வரக்கன்றேரரோ.

இவ்வாறிருக்கே யுத்தகளத்தே நின்றுற்போரிருந்து, ஸ்ரீகருடபகவான் ஆகாயமார்க்க[illegible]க் கொண்டுவந்த மந்தரமலை - ஸ்ரீ ஆஞ்சநேயர்கொண்டுவந்த சஞ்சீவிபர்வதம் - [illegible]னைத்தவிடங்களுக்குச் செல்லுகின்ற திரிபுரம் - கந்தர்ப்பலோகம் - இவற்று[illegible]ன்றை ஆகாயத்திற் கண்டாற்போலத் தோன்றும்படி இராவணனுடைய தேரானது அந்தரத்திலெழுந்து சென்றது. அங்கு நின்றபடி இராவணனெய்த பாணவருஷங்கள் ஸ்ரீராமசுவாமியினுடைய திருக்கண்களுக்கு முன்பாகவே வானரர்களுடைய உடல்களில் தைத்து உருவிப் போவதினால், இன்றேவானரர்கள் ஒழிந்தார்கள் - முழுமையும் ஒழிந்தாரல்லர் - என்றுசொல்லும்படி அநேக வானரவீரர்கள் பிராணனிழக்கிறார்கள். அதைக்கடாட்சித்த ஸ்ரீராமச்சந்திரர் தமதுசாரதியைப்பார்த்து, ஓ இளமையாகிய ரிஷபத்தையொத்தமாதலீ! நம்முடைய வானரசேனைவீரர்களிலநேகரிறந்தனர்கள். இவர்களிறக்கும்படி அம்புகளைப் பிரயோகித்த இராவணனுடைய இருபதுதோள்களோடு பத்துத்தலைகளையும் இதோ அறுத்துத் தள்ளுகிறேன். நீயுமிரதத்தை ஆகாயமார்க்கத்திற் செலுத்தக்கடவா யென்று கட்டளையிட்டனர்.

ஸ்ரீராமபிரான் தனது தேரையும் ஆகாயத்தில் நடத்திய இராவணன்தேரின் முன்னஞ் செலுத்தி யுத்தஞ்செய்தல்.

கவி.

அந்துசெய்குவனென வுந்துமாதலி
உந்தினன்றேரொனு மூழிக்காற்றின
இந்துமண்டலத்தின்மே லிரவிமண்டிலம்
வந்தெனவந்ததம் மானத்தேரரோ.

அதுகேட்ட புத்திமானாகிய மாதலியென்பவன் அப்படியே செய்கிறேனென்று கூறி, தேரென்னு பெயர்வைத்துக்கொண் டிருக்கும் ஊழிக்காற்றைச் செலுத்தவும் அது சந்திரமண்டலத்தின்மேற் சூரியமண்டலம் போர்க்குப் போனதுபோல இராவணனுடைய தேருக்குமுன்னே வந்து சேர்ந்தது.

அப்படிச் சேர்ந்தமாத்திரத்தில் மேகக்கூட்டங்கள் சிதறவும் - திக்குகளெல்லாம் தளர்ந்து நிலைகெடவும் - விண்மீன்திரள்கள் உதிரவும் - பெரியமலைச்சிகரங்கள் நொறுங்கி பொடியாகிச் சிந்தவும் - செல்லுகிறவேகத்தா லுண்டாகிறகாற்றால் சமுத்திர நீர் சுழலவும், குலாசலங்களியாவும் குலுங்கவும் -

அண்டமு நடுங்கவும் - குயவனுடைய சக்கரம் சுழலுவதுபோல இரண்டுதேர்களும் ஆகாயத்தில் வலமிடமாகவும் - பூமியில் இடம் வலமாகவும் சாரிகைதிரிந்தன. இப்படி உழன்றுழலுகிற காலத்துக்குள்ளே எவ்வுலகங்களிலும் சென்று ஒன்றாகநெருங்கியும் உடனே பிரிந்தும் செல்லுவதினால், இதுவளர்கின்ற கீர்த்தியையுடைய இறைவனாகிய ஸ்ரீதசரதராமன் தேரென்றும் இஃது இராவணன் தேரென்றும் தேவர்களாலும் அறியக்கூடாமற் போயது. இத்தேர்களின் சிகரங்கள் படுவதினால் உதிராதவிண்மீன்களும், சக்கரங்கள் தாக்குவதினால் நெக்குவிடாத மலைகளும், அதினுண்டாகும் தீப்பொறிகள் சிதறுவதினால் வலிகுலையாததிக்குகளும், அதிர்ச்சியினால் வாயாலிரத்தங்கக்காத உயிர்களும் காணப்படவில்லை.

அக்காலத்து கூடியிருந்த தேவர்களிற்சிலர் தேர்களிரண்டும் இப்போது இந்திரலோகத்திற் சென்றனவென்பார்கள். அப்படிச் சொன்னவர்களே இல்லை இல்லை சந்திரலோகத்திற் சென்றனவென்பார்கள். சிலர் பிரமலோகத்தை யடைந்தனவென்பார்கள். சிலர் இதோமந்தரமலையின்மேல் இறங்கினவென்பார்கள். சிலர் இத்தினம் உலகங்களழிந்துவிடுமென்றேங்கி நாவுலர்ந்து போனவர்களாய்ப் போனதேர்கள் திரும்பினவோவென்பார்கள். சிலர் மேகங்கள் தவழ்கின்ற ஆகாயத்திலுள்ள சுவர்க்கலோகம் பிளந்துபோச்சோவென்பார்கள். சிலர் பூமியில் இறங்கினவோ என்பார்கள். சிலர் இத்தேர்களிற் பூட்டியவை குதிரைகளோ? அல்ல: குதிரைகளானால் இவ்வளவுவேகம் ஏது? ஆதலால் ஆச்சரியகரமான காற்றுகளே யென்பார்கள். சிலர் தேர்வீரர்கள் பாற்கடல்மத்தியில் நின்று யுத்தஞ்செய்கிறார்களென்பார்கள். சிலர் ஏழுசமுத்திரத்துக்கும் அப்புறத்துச் சென்றார்களென்பார்கள். சிலர் மேற்குக்கடலின்கணிருக்கிறார்களென்பார்கள். சிலர் கிழக்குக்கடலின்கணிருக்கிறார்களென்பார்கள். சிலர் இங்கேவந்தனரென்பார்கள்.

இப்படி தேவர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டிருக்கையில் ஸ்ரீராமரெழுந்தருளியரதமும் - இராவணனேறிய தேரும் - சப்தசமுத்திரங்களிலும், சப்த தீவுகளிலும், சப்த குலாசலங்களிலும், சப்தலோகங்களிலும், அண்டப் பித்திகையிலும், ஊழிக்காற்றைப்போல ஓயாமல் திரிந்தன. அப்படித் திரிந்த கடல்களிலும் - உலகங்களிலும் - தீவுகளிலும் - குலாசலங்களிலும் - தனக்கிரையாகுமாயிருந்த பொருள்களை யெடுத்தெறிந்தாற்போல, இராவணனெறிந்தனவெல்லாம் ஸ்ரீராமசுவாமியின்மேலெறிந்த பாணவருஷங்களாகவே யிருந்தன. பிரதாபலங்கேஸ்வரனெறிகின்ற ஆயுதங்களையும், அவனெய்கின்ற அம்புகளையும், ஸ்ரீராமபாணங்களிற்சில அறுத்துத்தள்ளின. சில தடுத்துவிட்டன. இப்பட்டிலே தம்முடையவேகம் அடங்காமல் உலகமுழுமையும் சென்று பாய்ந்தன. ஸ்ரீராமச்சந்திரர் இராவணன் அபாரமாக விடுகின்ற அஸ்திரசஸ்திரங்களை அறுப்பதும் தடுப்பதுமேயல்லாமல் வேறொன்றுஞ்

செய்திலர். அவ்விருவர்களுடைய தேர்களும் யுத்தந்தொடங்கிய வழாநாள் மலைகளும், சமுத்திரங்களும், சந்திராதித்தர்கள் திரிகின்ற மேலுலகங்களும், கீழுலகங்களும், நிலைகுலையும்படி மோதிமோதித் திரிகின்ற சண்டமாருதம் போலப் பேரிரைச்சலோடு இலங்காநகரமே வந்து சேர்ந்தன.

அக்கால் இரண்டு சாரதிகளுநடத்திய வெற்றியுள்ள தேர்க்குதிரைகள் கடலிலுள்ள மணலினது தொகைக்கு மூன்றுபங் கதிகமாக எல்லாவிடங்களிலும் சாரிகைதிரிந்தவைகளாயினும், சற்றேனும் இளைக்கவும் இல்லை. இளைப்படைந்து பெருமூச்சுவிடவும் இல்லை. ஸ்ரீராமபத்திர ரெழுந்தருளிய இந்திரனுடைய தேரிற்கட்டிய மகாவலிவுள்ள இடிக்கொடியின் பேரில், அதிபிரதாப சாலியாகிய இராவணன் ஒரு அர்த்தசந்திர பாணத்தைப் பிரயோகித்து அதையறுத்துத் தள்ளினான். உலைக்களத்திற் காய்ச்சின பெரிய இருப்புலக்கையின் முனையைக் குடத்தினீரில் தோய்த்தமாத்திரத்தில் அந்நீர் சுவறிப்போவதுபோல, இராவணனால் அறுபட்ட இடிக்கொடியானது சமுத்திரத்தில் விழுந்தமாத்திரத்தில் அக்கடல்நீர் குறைந்துபோனது. அப்போதிராவணனனவன் ஸ்ரீதசரதபுத்திரர் ஆரோகணித்தருளியதேரிற்கட்டிய சப்தப்பிரமத்தைப்போல வழியாத குதிரைகளின்மேல் இராசிராசியாகச் சரங்களைப்பிரயோகித்து, சாரதித்தொழிலிற் கீர்த்திபெற்ற மாதலியினுடைய வயிரமார்பில் பன்னிரண்டு அம்புகளை எய்தான். இன்னுமவன் கட்டுகளமைந்த பத்து வில்லுகளையும் விர்த்தாகாரமான வானவில்லைப்போலவும் பிறைச்சந்திரனைப் போலவும் தோன்றும்படி வளைத்துத்தாவிய அம்புகள், ஸ்ரீஜானகிப்பிராட்டியின்மணவாளருடையதிருமேனியைக் கவித்துகொண்டமையால் தேவர்களும் சுவாமியினுடைய திருவுருவத்தைக்கண்டு சேவிக்கக் கூடாமற் போனார்கள்.

இப்படி சேவிக்கக்கூடாமற் போகவே அதிபராக்கிரமசாலியாகிய அந்தத்தேவர்கள் தெய்வசகாயராகிய ஸ்ரீராமசுவாமி இனித் தோற்றுவிடுவாரென்று தங்களுக்குள் ஒருகருத்துத் தோன்றிப் பயந்துவிட்டார்கள். இராக்ஷசர்களெல்லாரும் கோவென்று ஆர்ப்பரித்தார்கள். உலகமே திருவுருவமாகக் கொண்டஸ்ரீசர்வேசுரனிடத்துத் தனக்குண்டாகிற அன்பினால் பயம்ஜனித்து மேலேயுங் கீழேயும் காற்றுந்திரிந்ததில்லை. அண்டமுங்கலங்கியது. அக்கினியும் தனதுவெப்பமும் ஒளியுங்காட்டாதடங்கியது. ஏழுகடலும் ஆகாயத்தை அளாவும்படி பொங்காமல்தமக்குள்ளே அசைவற்று அடங்கின. சந்திரசூரியர்கள் ஆகாயமார்க்கத்திற் போகாமல் திரும்பினார்கள். மேகங்களும் தங்களிடத்துள்ள நீர் வற்றிப்போயின. திக்குயானைகள் களிப்பு நீங்கின. கடலலைகள் ஒலிக்க அஞ்சின. அங்காரகன்விசாகநக்ஷத்திரத்தை யேறிஅகாலத்திலுண்டாகு நடுக்கத்தைக் கொண்டு மேருவும் குலுங்கியது. வானரங்களும் - வானரப் படைத்தலைவர்களும் - சுக்கிரீவமகாராஜரும் - ஸ்ரீராமானுஜரும் - தங்களுக்குப் பிராணபதமாகிய ஸ்ரீரகுநந்தனரைக் காணாதவர்களாய்

கஜசிரேஷ்டத்தைக் காணாமற் காட்டியானைக் கூட்டங்கள் கலங்குவதுபோலவும் - திருவணை செய்தகாலத்தில் கடல்மீன்கள் கலங்கியனபோலவும் - கலங்கினார்கள்.

ஸ்ரீராமபத்திரரானவர் தருமநீதியின்படி இரதத்தைச் செலுத்திக்கொண்டிருந்த மாதலியினுடைய மார்பில் தைக்கும்படி இராவணனெய்த அம்புகளைக்கண்டு, முன்னே இளையபெருமாளுடைய திருமார்பில் வேல்தைத்ததன்று நேர்விப்பட்ட காலத்திற் கலங்கியதைப் பார்க்கிலும் அதிகமாகத் திருவுளங்கலங்கி, கீர்த்திமுள்ள இராக்ஷசகுலேந்திரனெய்த சரங்களையெல்லாம் இமைகொட்டுதற்கு முன்பாகத் துண்டுதுண்டுகளாக அறுத்துத்தள்ளி, வேறே தமது கோதண்டத்தில் அணியணியாக அம்புகளைத் தொடுத்தெய்து ஆகாயமெல்லாம் பாணவருஷ மாக்கிவிட்டார். அதுகண்ட தேவர்கள் முதலாகிய யாவரு மனந்தேறினார்கள். மேலும் - எல்லாவுயிர்களிலும் பிரியாமல் வசிக்கின்ற ஸ்ரீராமபிரானவர் அன்னங்களை வரிசையாக வைத்தாற்போல விளங்குகின்ற இராவணனுடைய தோள்கடோறும், வலிந்த பர்வதாகாரமாகிய வில்லுகளின் வரிகுறையும்படி பாணங்களையெய்தனர். அவ்வளவிலே நில்லாமல் திருப்பாற்கடலில் யோகநித்திரையில் விருந்துகொண்டே எல்லாம் அறியவல்லை பரஞ்சோதியாகிய ஸ்ரீதசரதாத்மஜர் இராவணனுடைய மார்பிற் பூட்டிய கவசத்தை உருவிக்கொண்டு இரத்தபானம் பண்ணும்படி வேணங்களை விசுகின்ற கூரிய அம்புகளைப்பிரயோகித்து, உடனே திக்கின்முடிவுவரையுஞ் சென்றடர்ந்த மேகராசிகள் தனதுமுனைபட்டுச் சிதைந்தோடும்படி மோதுகின்ற பரந்த வடிவினதாகிய பொட்டுள்ள வினையெழுதிய கொடியையும் ஒருபாணத்தால் அறுத்துத்தள்ளினார். ஸ்ரீராமபிரானுடைய ரதத்திற் கொடியில்லாமையைக்கண்டு சதுர்வேத ஸ்வரூபியாகிய ஸ்ரீகருடபகவான் அத்தேரின் கொடியிலெழுந்தருளினார். அதுகண்ட தேவர்கள் ஸ்ரீவேதபுருஷனாகிய வைனதேயன் அதிகோபிஷ்டராய் எழுந்தருளின ராகையால், இனி இந்தயுத்தத்தைப்பற்றி ஒன்றும்யோசிக்கவேண்டியதில்லையென்று ஸ்ரீபக்ஷிராஜனை நாலுவிதமாகத் துதித்தனர்.

ஸ்ரீ இராகவனும் இராவணனும் சிவாஸ்திரமுதலிய அஸ்திரங்களை மாறிமாறிவிடுத்துப் போர்விளைத்தல்.

கவி.

ஆயதொராமைதியி னறிவினினறிவான், காயகனொருவனை ஈலிகிலதுணர்வான்
வயினனிருளறு தாமரமெனுமத், தீய்வினைசருபடை தொடுதொழின்மதியோன்.

அந்தச்சமயத்தில் தேவகண்டகனாகிய இராவணன்போரில் ஒப்பில்லாதவராய்விளங்குகின்ற ஸ்ரீரகுநாயகனை இனித் தான்விடப்போகிற பாணமானது ஒன்றும் செய்யமாட்டாதென்பதை அறிந்தவனாக இருந்தும் அஞ்ஞானவைபவமாகிய தாமதகுணத்திலும் கருவினிடத்தும் பெருகுகின்ற வினையைபோல் அநேகாநேகஅஸ்திரங்களையுடைய இராவணன் வைத்திலும் ஸ்ரேஷ்டமானா

கிய சிவாஸ்திரத்தையெடுத்துப் பிரயோகித்தான். அக்கினிமயமாகிய முகத்தையும் - இரத்தமயமாகிய முகத்தையும் - தேவமுகத்தையும் - பேய்முகத்தையும் – சர்ப்பமுகத்தையுமுடைய அந்தப் பஞ்சமுகாஸ்திரமானது ஒருதிசையிலிருந்து ஒருதிசைவரையும் வளைந்து காணப்படுகின்ற வக்கிரதந்தங்களையுடையதாயும், தன்னைப்பிரயோகித்த எசமானன் எதையெதைச் செய்யவேண்டுமென்று நினைக்கிறானோ அவற்றையெல்லாஞ்செய்வதாயும், சூரியசந்திரர்களை விழுங்கத்தக்கதாயும், ஒருதிக்கில் அக்கினிச்சுவாலையையும் - ஒருதிக்கில் மழையையும் - ஒருதிக்கில் மின்னலையும் - ஒருதிக்கில் இடியையும் - ஒருதிக்கில் இரவென்றும் பகலென்றும் சொல்லப்படாத மயக்கத்தையும் – ஒருதிக்கில் கல்மழையையும் உண்டாக்கிக்கொண்டு, ஏழுலோகங்களிலுமிருதியும் அந்தகாரமே கவிந்துகொள்ளவும் அங்குள்ள சீவராசிகளெல்லாம் கதறவும் வருவதாயது.

கவி,

கண்ணுதலொருவனது படைகருதிப்
பண்ணவன்விடுதலு மதுகனிபருக
எண்ணுறுகனவிடை யுணர்வெனவிமையில்
துண்ணெனுநிலையினி னெறிபடைதொலைய.

அதை ஸ்ரீராமசாதனனவர் கடாக்ஷித்தருளி அதற்குத்தக்கபடி ஆலோசித்து, அந்தச் சிவமூர்த்தியினுடைய பாசுபதாஸ்திரத்தை யெடுத்து எய்தனர். அந்தச் சிவாஸ்திரமானது ஒருவன் கனவினுற்கண்டபொருள் விழித்தமாத்திரத்தில் மறைந்தாற்போல அந்த மாயையெல்லாம் போய்விடும்படி இராவணன்விட்ட பாணத்தை விழுங்கிவிட்டது.

ஒருவனுக்கு ஸ்ரீமத் பரமவேதமார்க்கஞானம் ஜனித்த மாத்திரத்தில் அசுரமோஹனார்த்தமாக உண்டான அவைதிகமார்க்கத்திற் பற்றுவிட்டாற்போலத் தன்பாண மழிந்துபோனதைக்கண்ட இராவணனானவன் இருபதுகண்களிலும் தீப்பொறிகள்பறக்கப் பற்களால் வாயைமடித்துக் கடித்து, கழுகினிறகுகளை யமைத்த குரூரபாணங்களை யெடுத்து ஸ்ரீரகுநந்தனருடைய திருமேனியிலழுந்தும்படி எய்தான். தேவர்களுடைய படைகளையும் கீர்த்தியையு நாசப்படுத்தியதும், இராவணனோடெதிர்த்த வீரர்களுடைய உயிர்களைக் கொண்டுபோய் நமனுடைய வயிற்றிலிட்டு நிரப்பியதும், இந்திரனுடைய செயத்தை முழுமையுந்தொலைத்ததும், ஒருகாலத்தில் எதிர்த்தபோது தேவர்கள் தங்கள் கையிற்பற்றியிருந்த ஆயுதங்களைப் பார்த்து அவமதித்துச் சிரித்ததும், எந்தலோகங்களிலுள்ளவர்களையும் வெற்றிகொண்டு பர்வதங்களைப் பேதித்துச் சென்றதுமாகிய வக்ரபாணமானது; பிரமனுக்குந் தெய்வமாகிய ஸ்ரீராமபிரானை நோக்கி வருவதாயது. அதை யங்கங்கேநின்று தேவர்கள் யாவரும்பார்த்து இதுலோகங்களையெல்லாம் கவளீகரிக்கும்போலிருக்கிறதென்று நடுக்கவும், அந்நடுக்கமொழிந்து யாவரும்கல்லென்று ஆரவாரிக்கும்படி

ஸ்ரீராமசந்திரர் இஷியின்மேல் வடவாமுகாக்கினியைப் பிரயோகித்தாற்போல அக்கினியாஸ்திரத்தைப் பிரயோகித்து அறுத்துத்தள்ளினார்.

இப்படி யறுத்துத்தள்ளின நொடிப்பொழுதுக்குள்ளே இராவணனானவன் உயிர்களை அபகரிக்கிற விஷயத்தில் யமன் பின்வாங்கினபோதிலும் தாம் பின்வாங்காதவைகளும், கடனீரையெல்லாம் வற்றச் செய்பவைகளும், மேருமலையையும் தூள்தூளாக்கத் தக்கவைகளும், காற்றும் பின்செல்லும்படி முன்னே செல்லத்தக்கவைகளும், உலகங்களையெல்லாம் உருவிப்போகத் தக்கவைகளுமாகிய நூறுகோடி அம்புகளைத்தொடுத்துச் செலுத்தினான். இவ்வாறவன் செலுத்தினதைக்கண்ட முனிவர்களிற் சிலர் இந்தராவணனுக்கு என்ன கைவேகமென்பார்கள். சிலர் இவைபாணங்களல்ல, மாயமாய மென்பார்கள். சிலர் இந்த அம்புகள் பாய்வதற்கு ஆகாயத்தில் இன்னமும் இடமுண்டோவென்பார்கள். சிலர் முன்னே யெல்லாம் இவ்வளவு பொல்லாதனவாகிய யுத்தத்தை இராவணன் செய்ததில்லை யென்பார்கள். இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கையில் சதுர்வேதங்களு மூலகாரண பரவஸ்துவென்றெடுத்துச் சொல்லப்பட்ட ஸ்ரீராமசாதனனவர் இலங்கைநாயகனா லேவப்பட்ட பாணங்களையாவும் கரிந்து அடிமுனைவரையு மிருபிளவாகும்படி அர்த்தசந்திர பாணங்களைச் செலுத்திப் பிளந்து தள்ளினார். அக்கால் பிரமாண்டத்துக்குள்ளே மகாதபங்களைச் செய்து வரங்களைப் பெற்றவர்களுக்குள்ளெல்லாம் சிறந்தவனாகிய தசக்கிரீவன் பலபோர்களிலும் வெற்றியொன்றுமேபெற்ற மயனால் தரப்பட்ட பாணத்தையெடுத்து, ஸ்ரீதசரத திருக்குமாரர்மேல் வில்லில் தொடுத்து விடுத்தான். அதைப் பார்த்திருந்த தேவர்களெல்லாரும் இவ்வரக்கர்குலேந்திரன் மாயாஸ்திரத்தைப் பிரயோகித்துப் பூமியைச் சுட்டு நிர்மூலப்படுத்துகின்றானோ வென்று நடுக்கங்கொண்டு சுருண்டுசுருண்டு விழுந்தார்கள். வானரங்களும் வானரப்படைத் தலைவர்களும் திக்குத்திக்குகளாக ஓட்டப்பிடித்தார்கள்.

அப்போது வேதவேதியர்கள் வணங்குதற்குரிய தெய்வமாகிய ஸ்ரீரகுநந்தனர் இனிப் பூலோகத்தில் மனுஷப்பூண்டில்லாமற் செய்துவிடுகிறானென்று வருகின்ற அந்தப் பாணத்தினுடைய சௌரியத்தை அறிந்து, காந்தர்வாஸ்திரத்தைக்கொண்டு அதனைத் துண்டங்கள் செய்துவிட்டார். அக்கா விராவணனானவன் பூர்வத்திற் பிரமனாற் படைக்கப்பட்டதும், இரணியகசிபானவன் தன்னைக்கொண்டு இந்தப் பிரமாண்டத்தைத் தன்வசப்படுத்தினதும், மதுவென்னும் அசுரன் தன்கையிற்கொண்டு யுத்தஞ்செய்ததும், சூரபத்மனென்னும் அசுரன் முற்காலத்தில் தேவர்களை ஹதஞ்செய்ததும், மேருமலைக்குச் சமானமானதும், சூரியனைப்போன்ற ஒளிவீசுவதும், உலகத்திலுள்ள தேவமனுஷ்யாதி சமஸ்தபிராணிகளும் ஒருயுககாலவரையு நின்று உருட்டினும் ஒருசற்று முருளாத கனமுள்ளதும், அநேக தேவர்களுடைய சிரங்களை உருட்டியதும், சமுத்திரஜலத்தைப் பானம்பண்ணின அகஸ்திய

ரத் தொடுக்கப்பட்டதாகிய கதாயுதமானது நம்மிடத்து உண்டல்லவா? அதையெறிந்து இந்தராமனுடைய உயிரைவாங்குவோமென் றுத்தேசித்தெடுத்துச்சுற்றி எறிந்தான். அந்தத் தண்டானது ஆகாயத்தில் ஆதித்தனைப்போல ஒளிவீசிக்கொண்டு வருவதால் இதுபட்டுக் குடம்போன்ற அண்டமானது உடைந்துவிடுமோவென்று சுவர்க்கவாசிகள் யாவரும் திடுக்கிடவும்- ஸ்ரீராமநாதனுடைய யுத்தத்தைக்கண்டு சேவிக்கும்படி வந்திருந்த சகலதேவர்களும் இருந்விடம் தெரியாமல் ஓடிப்போகவும் - மந்தரமலையானது அதனுடைய வேகத்தையுணர்ந்து தன்னையெடுத்துப்போகக் கருடபகவான் மறுபடியும் வருகிறுரோவென்று பயப்படவும் வருவதாயது. அப்படி வருகின்றதை ஸ்ரீராமச்சந்திரசுவாமியானவர் கடாக்ஷித்து, தேவர்களுக்கரசன் றன்னுயிர் ராங்கலனாலும் பார்த்து அளவுசெய்யப்படாத தாமரைமொட்டம்பைச் செலுத்தி தூளுதூண்டுகளாகத் துண்டித்து உதிர்த்துவிட்டார்.

அதுபார்த்த இராவணன் நம்முடைய தனுர்வேத வித்தியாசாதுரியத்துக்கு முன்னே இந்தராமனுடைய வித்தியாகியானத்தைப் பார்த்தால், இவனையொரு சிறுகுழந்தையென்றே எண்ணவேண்டும். பேயைப்போல யாதொரு பயனும்படாத அற்பஆயுதங்களை நாம் எய்வதினுல் இந்தராமனும் அவைகளைத் துண்டித்து, தான் தெரிந்துகொண்ட வில்யுத்தத் திறமையைக் காட்டுகின்றான். ஆதலால் அப்படிப்பட்ட ஆயுதங்களை எய்வதினுற் பயனொன்றுமில்லையென்று தனக்குள்ளே யோசித்துக்கொண்டு, இந்தமனுஷியனும் - இவனுக்குத் துணையாகிய பெருஞ்சேனைகளும் — இதனுல்தான் மடிவார்களென்று மாயாஸ்திரத்தை எடுத்துப் பிரயோகிப்பேனென்று யோசித்தான்.

இராவணன் இராமசுவாமியின்மேல் மாயாஸ்திரத்தை விடுத்தல்.

கவி.

பூசனைத்தொழில்புரிந்துதான் முறைமையிற்போற்றும்
காலனைத்தொழு திருடியுஞ்சுந்தருமென்னி
ஆசைபத்தினு மந்தரப்பரப்பினுமடங்கா
வீசினன்செல வில்லிடைத்தொடைகொடுவிட்டான்.

இந்தப்பிரகாரமாக யோசனைசெய்து அம்மாயாஸ்திரத்தைக் கையிலெடுத்து அதற்குப் பத்திரபுஷ்ப தூபதீப நைவேத்ய சத்ராசாமர பாத்தியாசமனுதிய முதலியவைகளையும் மனசாபத்தியாற் கொடுத்து, தன் உபாசனுமூர்த்தியாகிய சாக்ஷாதுபராமசிவனை அதிவிநய பயபக்தியோடு சிவாசமந்திரக்கூறும் விதிப்படி தியானித்துத் தொழுது, அம்மாயாஸ்திரத்திற் கதிதேவதையாகிய இரிஷிகையும் - மந்திரத்தையும் — மனதிலெண்ணி, அதனைப் பத்துத்திக்கிலும் ஆகாயப்பரப்பிலும் அடங்காதவண்ணமாக வில்லில்தொடுத்து, அப்பிராகிருதராகிய ஸ்ரீராமன்மேற் பிரயோகித்தான். இப்படியிராவணன் மாயாஸ்திரத்தைப் பிரயோகஞ்செய்த மாத்திரத்தில் அந்த அஸ்திரத்தினது மாயாசக்தி

யால் முன்னேமடிந்துபோன இராக்ஷச வீரர்களெல்லாம் ஆகாயத்தை யளாவும்படியான உடலோடு ஆயுளைப்பெற்று உயிர்த்தெழுந்தார்களென்னும்படி எங்கும் அரக்கர்களாய்நின்று ஆரவாரித்தார்கள்.

அஃதெப்படியென்றால் - இந்திரசித்துவும், அவனுக்கிளையோர்களாகிய அதிகாயனும், கும்பனும், நிகும்பனும், படைத்தலைவனுகிய மகாராக்ஷசனும், பிரகஸ்தனும், குருதிக்கண்ணனும், புகைக்கண்ணனும், வன்னியும், மற்றவர்களும், மகோதரனுதி மற்றமந்திரிகளும், மூலபல ராட்சசர்களும், இரதகஜதுரகபதாதிகளு மவ்விடத்தில் வந்துநின்று, மேகங்கள் கிர்ச்சிக்கும்படி கோவென்று பேரிரைச்சலிட்டார்கள். ஸ்ரீராமபாணத்தால் உயிர்மாய்ந்துபோனவை ஆயிரவெள்ளமென்று அறிவுடையோராலே சொல்லப்பட்ட அவ்வளவு சேனைகளும் இராவணன் சாக்ஷாது ஸ்ரீஉருத்திரபகவானிடத்திற்பெற்ற வரத்தால் உயிர்பிழைத் தெழுந்தனவோவென்று கண்டோர் சொல்லும்படி உயுத்தகளமுழுமையு நிறைந்துவந்து நின்று, தேவர்களுமுனிவர்களும் பயந்தோடும்படியாக முன்னே ஜெயித்தது எங்களைத்தானே? நாங்களிறந்துபோவதுமுண்டோ? அப்படி யிறந்துபோனதை இன்றைக்குக் காட்டுகிறோம். ஓ இராமா! ஓ இலட்சுமணு! ஓ சுக்கிரீவா! ஓ சாம்பவா! ஓ அனுமானே! உயுத்தத்துக்கு வாருங்கோள்: விரைவில் வாருங்கோள்: என்று தங்களைக் கொலைசெய்த வீரர்களுடைய பெயர்களையிட்டு அழைத்தன. பூமியை வேரோடு பேர்த்தெடுத்துக்கொண் டெழுந்தன வென்னும்படியான தோற்றத்தையுடைய பூதகணங்கள் பர்வதராசிகளைப்போல் ஒருபக்கத்திற் காணப்பட்டன. முதலையின் உருவம்போல விளங்குகின்ற வளைந்தகுண்டலங்கள் காதுகளிலே பிரகாசிக்கும்படிப் பேய்க்கூட்டங்கள் ஆகாயத்தினில் சிறிதிடமு மில்லையென்று சொல்லும்படியாகக் காணப்பட்டன.

இந்தச்சமூகங்களையும் அவைகள்செய்யும் பயங்கர கிருத்தியங்களையும் கண்ட ஸ்ரீமகாலட்சுமிநாயகராகிய ஸ்ரீராமபிரானுனவர் மாதலியைப்பார்த்து: ஓ தேவசாரதி! இங்கே தோன்றுகின்ற இவைகளெல்லா மாயத்தினுலுண்டாயினவோ? இறந்தராக்ஷசர்களும், அவர்கள்சேனைகளும், விதியினுடைய பலத்தால் உயிர்பிழைத் தெழுந்தார்களோ? பிரஹ்மேந்திராதிகளிடத்தில் தாங்கள் பெற்றிருந்த வரங்களினுல் உயிர்பெற்றார்களோ? அல்லது பிழைத்தெழுந்ததற்கு வேறே ஏதுவுமுண்டோ? எனக்கு ஒன்றுந்தோன்றவில்லை, உனக்குள் ஆலோசித்துச் சொல்லக் கூடுமாகுல் சொல்லக் கடவாயென்று சொல்லினர்.

அதுகேட்ட மாதலியானவ னவனைப்பார்த்து, ஒளிகொண்ட காளமேகம்போலத் திருமேனியையுடைய மாயப்பிரானே! இரும்புத்தொழில் செய்வதில் தேர்ச்சியுள்ள கருமானிடத்தில் ஒருவன் ஆல்கோத்துத்தைத்தும் சிறு ஊசி ஒரு பொன்னுக்குக் கொள்கவென்று விலைகூறிவிற்பதுபோல, இராவணனுனவன் மற்றெவராலு நிக்குதல்கூடாத மாயாஸ்திரத்தைப்பிரயோகித்தான்.

அதிகூர்மையுள்ள வெண்பற்களையுடைய அரவின்விஷத்தை உமதுநாமத்திரையமாகிய அச்சுத — அநந்த — கோவிந்த — என்னும் திருமந்திரங்களைப் பிரணவசகிதமாக உச்சரித்து அடக்கியதுபோலவும், அஷ்டகர்மவியாதிகளையும் அந்தநோய்க்குக் காரணமாகிய வினையையும் உமது திருநாமத்தையோதி ஒழிப்பதுபோலவும், தேவதாந்தரங்களையறிந்து மூவகைப்பற்றுவிட்டு நீங்களே பரவஸ்துவென உண்மைஞானம்பிறந்து நினைக்கும் பரமவைதிகர்களுடைய பிறப்பு ஒழிவதுபோலவும், இதோ உம்முடைய பாணப்பிரயோகத்தால் ஒழிந்துவிடப்போகிறது. இங்கே தோன்றுகின்ற எல்லாமும் தசக்கிரீவன் பிரமேந்திராதிகளிடத்திற் பெற்ற வரத்தினுலேயாவது, மாயையினுலேயாவது, தனது தவபலத்தினுலேயாவது, அல்லது யதார்த்தத்தினுலேயாவது உண்டானவைகளாயிருந்தபோதிலும் இருக்கட்டும்; நீர் ஞானாஸ்திரத்தைப் பிரயோகஞ்செய்வீரென்று சொன்னான்.

ஸ்ரீராமர் ஞானாஸ்திரத்தைப்பிரயோகித்து இராவணன்விட்ட மாயாஸ்திரத்தை அதஞ்செய்தல்.

கவி.

அறத்தலாற்றது ஞானமாக்கவிக்கணை தொடா
அறத்தலாதுசெல் வாதுகல்வழியவந் தனுகப்
பிறத்தலாற்றது பேதைமைபிணிப்புற்ற நம்மை
மறத்தலாற்றந்த மாயையின்மாய்ந்ததம் மாயம்.

இப்படி மாதலிசொன்னமாத்திரத்தில் சகலவேதங்களும் கிரிஞுல் வணங்கவும் தேடவும் எட்டப்படாத பரம்பொருளாகிய தாசரதியானவர் யானெனதென்னும் அகப்பற்றையும் புறப்பற்றையும் ஒழிப்பதற்கேதுவாகிய ஞானமய அஸ்திரத்தை விட்டனர். அந்த ஞானாஸ்திரமானது புறப்படவும் இராவணனுல்விடப்பட்ட மாயாஸ்திரமானது ஞானத்துக்கேதுவாகிய அஞ்ஞானத்தாற் கவியப்பட்டு ஸ்வரூபக்கியானமில்லாமற் செய்துகொண் டிருக்கும் வியாபாரங்களெல்லாம் ஸ்வரூபக்கியானம் பிறந்தமாத்திரத்தில் ஒழிந்துவிடுவதுபோல ஒழிந்துபோய்விட்டது. அந்தரமார்க்கத்தில் காளகண்டராகிய சங்கரமூர்த்தியும் — சக்கரதாராகிய உபேந்திர விஷ்ணுமூர்த்தியும் — சதுர்முகப்பிரஹ்ம மூர்த்தியும் — இராவணன் முதலிற்பெற்ற வரமுதலானவைகளையெல்லாம் ஆலோசித்து, இன்றோடே தேவகண்டகர்களாகிய இராக்ஷசர்களை உயிரோடு முடிக்கின்றகால மிதுதானென்று எதிர்பார்த்துக்கொண் டிருந்தார்கள்.

அந்தத் திரிமூர்த்திகளுடைய கண்களுக்கு முன்னேதானே சமஸ்ததேவர்களையும் வலியடங்கச்செய்யும் பிரதாபலங்கேசுரனுனவன் தானெய்த மாயாஸ்திரமானது ஊதமாய்ப்போனதைக் கண்டு, ஆயிரமணிகள் கட்டிக்கோஷிப்பதும் — தேவர்கள் கண்டால் வியாகுலமடைந்து நடுங்குவதுமாகிய சூலத்தை எடுத்து, சிருஷ்டிக்கப்பட்ட எல்லாவுயிர்களையும் எட்டெடுக்கும்

வலியுடையதென்று எண்ணி இமைகொட்டுமுன்னேயெய்தான். அந்தச் சூலாயுதமானது வடவாமுகாக்கினியும் வெப்பங்குறையவும் — தேவர்களும் வானரங்களும் பயந்தோடவும்—உலகமெங்கும் தனதொளிவீசவிரியும்படி மூன்று தலைகளிலும் சுவாலைகளை வீசிக்கொண்டு தடைபட்டு நில்லாமல், நயனகோசரத்துக்கும் எட்டப்படாத வேகமுடையதாய் வருவதாயிற்று. அதைப்பிரஹ்மேந்திராதிகள் கண்டு, ஓ தீனர்களுக்கு அபயப்பிரதானங் கொடுக்கின்ற சானகிராமனே! இராவணனிந்தச் சூலத்தைச்செல்லக்கடவாயென்று அபிமந்திரித்துவிட்டான். இந்த ஆயுதத்தை நாசப்படுத்த உமக்கே சக்தியுண்டு. எங்களிலொருவருக்கும் அடங்கமாட்டாது. மிகவுங்கூர்மையாகிய குரூரசூலமென்னுங் கூற்றுவனைச் சீக்கிரத்தில் துண்டித்துவிடும்; துண்டித்துவிடும்; என்று வெகுதுக்கத்தோடு பிரார்த்தித்தார்கள்.

இப்படி தேவர்கள்செய்த பிரார்த்தனையைக் கேட்டருளிய ஸ்ரீராமசுவாமியானவர் சிறந்த இடியும் திடுக்கிடும்படியாயும், பிரசண்டமாருதம்போல அதிவேகமாய்ச் செல்லும்படியாயும், சௌரியமான சில அம்புகளைப் பிரயோகித்தனர். அந்த அம்புகளெல்லாம் இராவணனுடைய சூலத்தை ஒன்றுஞ்செய்யமாட்டாமல் பரமபாகவதர்களைக்குறித்து ஆலோசியாமல் சிலர்செய்யும்நியதிருத்தியங்கள்பயன்படாமற் போவதுபோல நிஷ்பிரயோசனப்பட்டன. அதுகண்ட சுவாமியானவர் தேவதாஸ்திரங்களை ஓயாமல் எய்தும் அவற்றையெல்லா மிகழ்ந்து பன்னுமல் பிரஹ்மசாபத்தைப்போல வருகின்ற சூலத்தினது வலிமையைக்கண்டு, அதைத் தடுக்கவேண்டிய செய்கை இன்னதென்று அறியாதவர்கள் போலத்தோன்றிச் சும்மாநின்றார். சமஸ்ததேவஜனங்களும் ஸ்ரீராமச்சந்திரானவர் சூலத்தைத் தடுக்கவேண்டியதைப்பற்றி நினையாதவராய் ஒன்றுஞ்செய்யாமல் இருக்கின்றாரே யென்று பயந்தனர்கள். தருமதேவதையுமஞ்சித் தலைகுனிந்தது. மற்ற எல்லோரும் அச்சமுற்றார்கள். இப்படியாவரும் தம்முடைய யதார்த்த நிலையை அறியாதபடி மனுஷியனுகப் பிறந்த ஸ்ரீராமபிரானுனவர் பார்த்துக்கொண் டிருக்கையில் சுவாமி யெதிரில் வந்தது.

இராவணன்விட்ட சூலாயுதம் ஸ்ரீராமர்செய்த ஊங்காரத்தால் பொடியாதல்.

கவி.

சங்காரத்தாற் கண்டையொலிப்பத் தழல்சிந்தப்
பொங்காரத்தான் மார்பெதிரோடிப் புகலோடும்
வெங்காரத்தான் முற்றமுனிந்தான் வெருளிப்பே
ருங்காரத்தா னுக்கதுபன்னூ றதிராகி.

அந்தச் சூலமானது கட்டமாகிய மணியாரத்தால் ஒலியுதிர்த்துக்கொண்டு அக்கினிப்பொறிபறக்கச் சுவாமியினுடைய சந்தனமணிந்த திருமார்புக்கெதிரோடி உருவிச்செல்வதாய் வந்தபோது அதிகோபங்கொண்டு ஊங்காரஞ்செய்தனர். அந்த ஊங்காரத் தொனியால் அச்சூலமானது பற்பலபொடிகளாக நொறுங்கிவிட்டது.

இப்படி சூலமானது பொடிப்பொடியாக நொறுங்கிவிட்டதைக் கண்ட தேவர்களெல்லாம் போனவுயிர் வந்தவர்களாகி, சிறிதும் அச்சமில்லாமல் ஆநந்தபரவசங்கொண்டு ஆரவாரித்தார்கள். ஆரவாரித்துக்கொண்டே கற்பகமலர்களை வாரிவாரிச்சுவாமியின்மேலே இறைத்தார்கள். சிலர் பூமாரிபொழிதலை மறந்து துள்ளித்துள்ளிக்குதித்தார்கள். பின்னங்கிருந்தபடியே தெண்டஞ்சமர்ப்பித்து, இந்தமஹாசூலத்தினது பலத்தைக்குன்றச்செய்ய வல்லவர்நீரேயல்லாமல் வேறொருவருமுண்டோ? சாதுசனங்களாகிய எங்களுக்குத்துஷ்டர்களால்நேரிடுகிற துக்கங்களையெல்லாம் தடுக்க பகைவர்கட்குத் தீயைப்போல நின்று ஒழிப்பவரு நீரேயென்று துதித்துக்கொண் டிருந்தார்கள். இப்படியிருக்க—இனிச் செயமென்பது நம்முடைய பட்சத்திலென்று உச்சாகத்தோடு இராவணன்விட்ட சூலமானது அழிந்தாலல்லாமல் நம்மைவிட்டுப் போமாட்டாதென்று உணர்ந்து ஸ்ரீ ராமசந்திரனானவர் ஹுங்காரஞ்செய்துபொடிப்பொடியாய்ச் செய்துவிட்டதை அவன்கண்டு திப்பிரமையாய் அசைவற்றுநின்று, அந்நாளிலே விபீஷணாழ்வானானவன் சொன்னது தனக்குஞாபகத்துக்கு வந்தது.

இராவணன் விபீஷணர் கூறிய இராமமூர்த்தியினது மகத்துவத்தை யெண்ணல்.

கவி.

சிவனோவல்ல னான்முகனல்லன்றிருமாலாம்
அவனோவல்லன் மெய்வரமெல்லா மடுகின்றான்
தவனோவென்னிற் செய்துமுடிக்குந் தரமல்லன்
இவனோதானவ் வேதமுதற்கா ரணனென்றான்.

நாம் மஹாதபங்களைச்செய்து பெற்ற ஒருகாலத்திலு மழியாத வரங்களையெல்லாம் இந்த ஸ்ரீராமன் பாணப்பிரயோகம்பண்ணி அநாயாசமாகவே அழிக்கின்றான். ஆதலால் இவன் நம்முடைய குலதெய்வமாகிய சாட்சாது உருத்திரனும், பிரமனும், விஷ்ணுவும் அல்லன். ஆனால் நாம்பெற்றுள்ள வரங்களையெல்லாம் அழிக்கும் வல்லமையுடையவனா யிருக்கின்றான். ஒருவேளை மகாதபசிகளில் சிரேஷ்டனா யிருப்பானோ? அப்படி தவமுடையோனென்றால், நம்மைக்கொன்று முடிப்பதற்கு இவனருகனானான், பிறகு இவன் யாராயிருப்பானெனில், சகலவேதவேதங்களாலும் சொல்லப்பட்ட முதற்காரண வஸ்துவென்று தீர்மானஞ் செய்துகொண்டான்.

அந்தத் தீர்மானத்தை உடனேவிட்டுத் தன்னுடைய உன்மத்த சுபாவத்தால் யாரேயானபோதிலும் ஆகட்டும். என்னுடைய ஒப்பற்றபெயரொன்று நின்றுளத்தப்புவனங்களிலுமுள்ள சுத்தவீரர்களையெல்லாம்அழும்படிச்செய்து எனக்குமகாஜெயத்தைத்தருகின்றது. இப்படிப்பட்டகீர்த்தியைப்பெற்றிருக்கின்றேன். இப்பொழுதுஎனக்குநேரேவந்தமூலகாரணப்பொருளினவதார

மாகிய ஸ்ரீராமபிரான் என்னைக் கொன்றபோதிலும், எல்லாருடைய உயர்ந்த கீர்த்திகளுக்குள்ளும் தலைமைபெற்ற கீர்த்தி எனக்குச்சாஸ்வதமாக இருக்குமென்று திடங்கொண்டவனாய் தென்மேற்குத் திசைப்பாலகனாகிய நிருதியினுடைய வெற்றியுள்ள நாகக்கணையை நினைத்தமாத்திரத்தில் அது வந்து சேர்ந்தது. அதைஇராவணன் கையிற்கொண்டு, எமனுடையவிருதையும் அழிக்கவல்ல வில்லிலே தொடுத்து, உலகமுழுமையு நடுங்கும் படியாயும் — இருபதுகண்களிலும் தீச்சொரியும்படியாயு மெய்தான். இப்படி யிராவணனெய்த நாகாஸ்திரமானது பூமியைச் சுமக்கின்ற பிடரையுடைய ஆதிசேஷனு மனாருக்கும்படியாய் கோடிபடங்களைவிரித்து; அவ்வளவுதலைகளை உயர்த்தி, ஆழ்ந்து விசாலமாகிய வாய்களைத் திறந்துகொண்டு, மேருமலையும் சிறியதென்று சொல்லும்படி ஆகாயமுழுமையும் வியாபித்த தேகத்தை யுடையதாகி, தன்னுடைய எல்லாவாய்களிலும் சமுத்திரசலம்போல விஷங்கள் ஒழுகவும்—கண்களில் தீப்பொறிகள் சிந்தவும்—பேய்களின் வாய்களைப்போன்ற வாய்களிலுள்ள வெள்ளைப்பற்கள் எங்கும் பிரகாசிக்கவும் வருவதாயது.

இப்படி நாகாஸ்திரம் வருவதைக்கண்ட லோகத்தார் யாவரும் இந்தக் கொடிய சர்ப்பபாணமானது நம்முடைய ஐயனாகிய ஸ்ரீராமபிரானைத் தீண்டாமல் திரும்பமாட்டாதென்றும், இவ்வளவிலே நில்லாமல் பூமியையும் கடலையும் விழுங்கிக் குடியாமற்போகாதென்றும், தயை தாக்ஷணியம் சிறிதுமில்லாத குரூரனாகிய தசமுகன் இந்தச் சர்ப்பக்கணையை விட்டுச் சராசரப்பொருள்களையெல்லாம் இப்பொழுதே நாசமாக்கிச் சர்ப்பமயமாகச் செய்யும்படி உத்தேசித்தானென்றும் சொல்லிக்கொண்டு தடுமாறிக் கலங்கிக்கொண் டிருக்கையில்; அந்தச் சர்ப்பாஸ்திரமானது எங்கும்பாம்புகளாய் உயர்ந்த மலைகளைக் கவ்விக்கொண்டு வருவதாயது. அதை ஸ்ரீரகுநந்தனர்கண்டு, இது எந்தப்பக்கங்களிலும் பரவிவருகின்றபடியால் யாவருக்கும் பயத்தைத்தருவதா யிருக்கின்றதென்று திருவுளத்தில் நினைத்து, தப்பாமல் ஜெயத்தைத் தருவதாகிய கருடாஸ்திரத்தை யெடுத்துப் பிரயோகித்தார். இராவணனெய்த நாகாஸ்திரமானது எப்படிப் பலபலவுருவங்கொண்டு வேகமாய் வந்ததோ? அப்படியே இந்தக் கருடாஸ்திரமானது பொன்மயமாகிய மூக்கும் - நகங்களும் - சிறைகளுமுடைய அனந்த கருடப்பறவைகளாகி, காற்றைப்போலச் சிறைகளைவிரித்து அதிகவேகமாக ஆகாயமுழுமையும் வியாபித்தது.

இப்படி எங்கும் வியாபித்துப் பறக்கின்ற கருடப்பறவைகள் வாய்கள்தோறும் கொடூரத்தினால் அக்கினிகளைக் கக்கிக்கொண்டு விளங்குவதினால், இலங்காநகரம் சாம்பராய்ப் போகும்படி. தீயையிடுகிறோமென்று தனித்தனி ஆகாயத்தில் விளக்குகளை யெடுத்துச் செல்வதுபோ லிருந்தன. கிரணங்களை வீசுகின்ற இரத்தின ராசியாற் செய்தாற்போன்ற உருவத்தையுடைய அந்தக் கருடப்பட்சிகள், தாமரைத்தண்டுகளை அன்னங்கள் கவர்ந்துகொண்டு எழுந்தாற்போலச் சர்ப்பங்களைக் கால்நகங்களால் இடுக்கிக்கொண்டு வாய்களால்

விழுங்கிவிட்டன. அப்போ திராட்சசகுல நாயகனானவன் அக்கினிச் சுவாலையைப்போல் வீசுகின்ற சுவாசம் விட்டுக்கொண்டு கோபமுடையவனாய்க் கொதிகொதித்து, சுவர்க்கமும் பூமியு நிலைபேரும்படி இடிகளையொத்த பாணங்களை அநேகமாகத் தூவினான். அதன்மேல் ஸ்ரீரகுகுல நாயகரானவரெய்த அம்புகள் இராவண பாணங்களைப் பொடிப்பொடியாய்விழத் துண்டித்துத் தளியும் வேகமடங்காமல், தசக்கிரீவனுடைய மார்பில் அடிக்குதையும் தோன்றும்படி தைத்துநின்றன.

இப்படிச் சமுத்ர நடக்குங்காலத்தில் திரிநேத்திர காளகண்டருடைய வெள்ளிமலையைப் பேர்த்தெடுத்த பராக்கிரம சாலியாகிய இராவணனுக்கு ஸ்ரீராமபாணப் பிரயோகத்தால்புத்திமயங்கி, தான்கற்றிருந்த தனுர்வேத வித்தையும் – மந்திரவித்தையுமறந்துபோகத் தலைப்பட்டன. தருமதேவதைக்குச் சம்ரக்ஷணகர்த்தாவாகிய ஸ்ரீராமபிரானுக்குப் பராக்கிரமும் வீரமும் அதிகரித்தன.

ஸ்ரீராமர் இராவணனுடைய பத்துத்தலைகளில் தமதுபாணத்தால் ஒருதலையும் ஒருகையும் கண்டித்தலும் மறுபடி முளைத்தலும்.

கலி.

வேதியர்வேதத்து மெய்யன்மெய்யவர்க்
காதியனாகிய வத்தநோக்கினான்
சாதியின்மிர்த்தோர் தலையைத்தள்ளினான்
பாதியின்மதிமுகப் பகழியொன்றினால்.

பிரமனேறுத்தமர்களா லத்தியயனஞ் செய்யப்பட்ட நான்குவேதத்தினு மெய்ப்பொருளாய் விளங்கும் ஸ்ரீயப்பதியவதாரமாகிய இரகுபுங்கவ மூர்த்தியானவர்கொடிய இராக்கதர் கூட்டங்களுக்குத்தலைவனாகிய இராவணனுடைய நிலைமையையறிந்து அவனதுகூட்டமாகிய தலைகளில்உயர்ந்த ஒருதலையை அர்த்தசந்திர பாணமொன்றினால் கண்டித்துக் கீழேவிழ்த்தினார். பூர்வத்திலே மேருமலையின் சிகரங்களிலொன்றை வாயுபகவானானவர் மோதியறைந்தபோது அந்தச்சிகரமானது சென்றுகடலில் விழுந்ததுபோல, ஸ்ரீராமபாணத்தால் அறுபட்ட தலையானது நெருப்பைக் கக்கிக்கொண்டுபோய்ச் சமுத்திரத்தில் விழுந்து அமிழ்ந்தது. பார்த்திருந்த தேவர்களெல்லாம் பூமியில் இறங்கிவந்து, இலங்கைமலையானது நெக்குவிடும்படி மிதித்துக் குதித்து ஸ்ரீராமபிரானைத் துதித்துப்பாடி, உடுத்திருந்த வஸ்திரங்களை ஆகாயத்தில் விசிறியெறிந்து துள்ளித்துள்ளி யாடினார்கள்.

கலி.

இறந்தொருபிருடன் றருமத்திட்டினால்
பிறந்தனதாமெனப் பெயர்த்தேர்த்தலை
மிறந்தலைதெழுந்தது மடித்தாயது
சிறந்ததுதவமலாற் செயலுண்டாகுமோ.

தேகத்தைவிட்டுக்கழிந்த உயிரானது முன்செய்தகருமப்பயனால் அத்தேகத்தையே அடைந்தாற்போல, மறுபடியும் அறுந்ததலைக்குப்பதிலாகமகாகோபத்தோடு வாயைமடித்துக்கொண்டு அவ்விடத்திலேயே ஒருதலைமுளைத்தது. ஆகையால் எவற்றினும்சிறந்தது தவமேயல்லாமல் வேறுசெய்கையுமுண்டோ?

இப்படி யறுபட்ட தலையானது அறுபடவில்லையென்னும்படி முளைத்து அழிவில்லாத பேரின்பச்செல்வனாகிய ஸ்ரீகோதண்ட தீக்ஷாகுருவை இடிபோலமுழங்கித் துர்ப்பாஷணைகளால் தூஷணித்து அதட்டினது. மேருமலைச்சிகரம் துண்டிக்கப்பட்டு விழுந்தாற்போல, அதிவேகமாய்ச்சென்று விழுந்து தன்னுடைய வாயினும் – செவித்தொளையினும் – மூக்குத் துவாரத்தினும் கடலினது நீரையெல்லாம் அடக்கிக்கொண்டு ஆலகாலவிஷப்போலச் சுவாலையைவீசுகின்ற விழிகள் பிதுங்கித் தோன்றும்படிகிடந்த தலையும், வீராவேசத்தாலே மேகங் குமுறுவதுபோலக் கர்ச்சித்தது. அப்போ திராவணன் எப்படிப்பட்ட தேவர்களோடும் இதுவரையும் ஜெயமே பெற்றுவந்த நம்முடைய தலைகளிலொன்றை இந்த ஸ்ரீராமன் அறுத்துத் தள்ளினனல்லவாவென்று கோபவெறிகொண்டு, நெடுங்கணக்கினுள் சிறப்பாகச் சொல்லப்பட்ட உயிரெழுத்துகளில் செயற்கையா லல்லாமல் இயற்கையாகவே நாதமாத்திரையாய்நின்ற அகாரத்துக்குப் பொருளாயுள்ள ஸ்ரீராகவபிரானுடைய திருத்தோள்களில் பதினான்கு அம்புகளை இடியானது நம்மைப்போல வேறொரிடியு முண்டோவென்று சந்தேகிக்கும்படியாக ஆரவாரித்து எய்தான். நீசனாகிய இராவணனுக்குத் தலையறுந்தால் மறுபடியு மத்தலையை முளைப்பிக்கும் தவமும் உண்டாயிருப்பதைச் சக்கரதரனாகிய ஸ்ரீராமபிரானானவர் அறிந்து, வில்லைத்தாங்கியிருந்த அவனுடைய கைகளிலொன்றைப் பிறைமுக அம்பினால் அறுத்துத் தரையில்விழச்செய்தார்.

சுவாமியினுடைய அர்த்தசந்திர பாணம்பட்டு அறுந்துவிழுந்த கை வில்லைப்பற்றியபடியே கிடந்தது. அக்கையான துறுந்தவிடத்தில் மற்றொருகை முன்னேதானே யிருந்ததுபோல ஒருகை உடனே முளைத்தெழுந்ததை அறிந்தவர்களுமுண்டோ? ஒருவருமில்லை. அவ்வளவு விரைவிலேபிறந்தது. முன்பாரிசத்தில் முள்ளுகளைப்போல மயிர்கள் அடர்ந்து முளைத்திருப்பதும் – பின்னற்கொடியைப் பிடித்திருப்பதுபோல வில்லைப்பிடித்திருப்பதுமாகிய அவ்வறுந்தகையை மகாபாபிஷ்டனாகிய இராவணனெடுத்து, பொன்னாற்செய்த கடிவாளத்தைப்பிடித்துத் தேரைச்செலுத்திக்கொண்டிருக்கும் மாதலியினுடைய உயிரைமாய்க்கவேண்டுமென் றெண்ணிக்கொண்டெறிந்தான். எறிந்த அந்தக்கையானது வேகமாய்வந்து மார்பிற்பட்டமாத்திரத்தில் ஒருகாலத்திலும் சலியாத மாதலியானவன் மனநிலைகுலைந்து, வாயாற்குபுகுபென்று உதிரத்தைக் கக்கினான். தன்னுடைய பந்துக்களாகிய அரக்கர்களைப்போலவே பெற்றுக்கொண்ட தவத்தையுடையவனா யிருந்தபோதிலும் அவ்வரக்கர்களினும் விசேஷித்தவனென்று சொல்லும்படி காமதேனு

மிசைப்பப்பாடி ஸ்ரீகயிலாசபதியாகிய உருத்திரபகவானிடத்தில் அவர் கையிற்பிடித்திருந்த வாளைப் பெற்றுக்கொண்ட இராவணனானவன் தானெய்த கையானது பாசிற்பட்டு உதிரத்தைக் கக்கிக்கொண்டிருக்கின்ற மாதலியினுடைய நிலைமையைக்கண்டு, இவன் பிராணனைவாங்க இதுவே நல்ல சமயமென்றறிந்து தோமரமென்னும் ஆயுதத்தைச்சுழற்றி எறிந்தான்.

இப்படி மாதலியினுடைய உயிர்வாழ்க்கையானது இன்றோடுமுடிந்ததென்று தேவசமூகங்கள் சிதறியோடும்படி இராவணனெறிந்த தோமராயுதத்தின்மேல் இனகுலதிலகருகிய ஸ்ரீகாகுத்ஸ்தகுலநாயகர் பஞ்சமுகாஸ்திரத்தைப் பிரயோகித்தனர். அந்த அஸ்திரத்தால் தோமரமானது பொடிப்பொடியாயுதிர்ந்துபோயினது. அப்பால் சர்வஜ்ஞமூர்த்தியும் சர்வலோக நாயகனுமாகிய ஸ்ரீராமபிரானானவர் தனுர்வேதத்திற்சொல்லிய விதிப்பிரகாரம்சென்று, நிச்சயமாகச் சிறிதும் ஓய்வடையாமல் வியாபிக்கும்படி அபரிமிதமாக அம்புகளை எய்து தமது திருக்கரத்தின் சாதுரியத்தைக் காட்டத்தலைப்பட்டார்.

ஸ்ரீராமபிரான் இராவணனுடைய தலைகளைக்கண்டிக்க அவை மீண்டு மீண்டுமுளைத்தல்.

கவி.

நீர்த்தரங்கக டோறுநிலத்தொறும்
சேர்த்தமால்வரை தோறுந்திசைதொறும்
பார்த்தபார்த்த விடந்தொறும்பத்தலை
ஆர்த்துவீழ்ந்த தசனிமாரியிற்றென.

இந்தப்பிரகாரம் ஸ்ரீராமபாணங்கள் பாய்வதினால் சமுத்திரத்திலும், சமுத்திர அலைகளிலும், பூமியிலும், மலைகளிலும், நானாதிக்குகளிலும், மற்றும் கண்டகண்ட இடங்களிலும், இராவணனுடைய பலபலதலைகள் இடிகள்வீழுவதுபோல வீழ்த்தப்பட்டன. பர்வதங்களின்மேற்போய் விழுகின்ற தலைகள் அந்தப்பர்வதங்கள் பிளவுபட்டு சாயும்படிவிழும். அதுவிட்டு ஆகாயத்தின்மேற் பாய்கின்ற தலைகள் அங்குநின்ற தேவர்களைக்கலைத்தோடும்படிப் பாயும். கடலிற்போய்ச் சிதறுகின்ற தலைகள் அந்நீரில் சுறாமுதலிய மச்சங்கள் உலாவுவதற்கு நீரில்லாதபடி ஜலமெல்லாம் செவித்தொளையிலும், மூக்குத்தொளையிலும், வாயிலுமடங்கிப்போம்படிச் சிதறும்.

ஒருவன் நெடுநாளாகத்தேடிய புண்ணியங்களெல்லாம் பரமவைதிக சுத்த சாத்விகர்களிடத்தில் அபசாரப்பட்ட காரணத்தால் கட்டறவுதிர்ந்துபோனபின், ஜெயவீரபிரதாபங்களெல்லாம் நீங்கிப்போய் அபகீர்த்தி முதலியவைகள். அவனைச் சூழ்ந்துகொள்ளுமல்லவா? அதுபோலவே இந்த ராவணன் ஸ்ரீசர்வேசுரனுடைய தாசபூதர்களாகிய தேவர்கள் பக்கலிலும், பரமமுனிவர்கள் பக்கலிலும், சர்வலோக சரண்யாகிய பிராட்டியார் பக்கலிலும் அபசாரப்பட்ட காரணத்தால்: ஸ்ரீராமபாணமானது தனது தலைகளைத் துண்டிக்குந்தன்னாலே முன்பு இந்தப் பாபிஷ்டனுக்குப்பயந்து ஒடுங்கி வணங்கிக்

கொண்டிருந்த பிசாசங்களெல்லாம் உதிர்ந்து கிடக்கின்ற தலைகளைப்போய்க் கவ்வி எடுத்துக்கொண்டு அந்தந்தத்தலைகளிலுள்ள கண்களைத் தோண்டித்தோண்டித் தின்னத்தலைப்பட்டன. இப்படிச் சகலசேதனாசேதன ஸ்வரூபராகிய சுவாமியானவர் தலைகளை யறுத்தறுத்துத் தள்ளிக்கொண்டிருக்கையிலேயே தானே முளைத்துக்கொண்டேயிருக்கின்ற தலைகளையுடைய இராவணன் தனது இருபது தோள்களாலும் வாள் - வேல் - உலக்கை - வச்சிரம் - தண்டம் - கோடரிமுதலிய ஆயுதங்களை வாரிவாரி, ஸ்ரீராகவபிரானுடைய மார்பின்மேல் விட்டெறிந்தான்.

இப்படிப் பலவாயுதங்களை இராவணன்விட்டெறியும்போது சர்வஜ்ஞராகிய எங்கள் ஐயனானவர், இந்தக்கொடியோனை எப்படி வெல்லலாம்? அதற்கு நாம் செய்யவேண்டியது என்னவென்றாலோசித்து அந்த ராக்ஷசனுடைய உடலைப் பாணங்களால் சல்லடைக்கண்களாகத் தொளைத்து விடுவோமென்று மிகுந்த கோபங்கொண்டு, மேகத்தைப்பார்க்கிலும் அதிககருமைவாய்ந்த இராவணனுடைய மார்பிலும் - தோள்களிலும் - விஷத்தைக் காட்டிலும் கொடியகண்களிலும் - காதுகளிலும் - மற்ற அவயவங்களிலும் பல பாணங்கள் தைக்கும்படி எய்து, தம்முடைய பாணங்களாகிய பறவைகள் வசிப்பதற்கு இராவணனுடைய தேகமே பஞ்சரமென்று சொல்லும்படி பொத்திவிட்டார். ஸ்ரீபரந்தாமராகிய காகுஸ்தர் எய்த அம்புகள் பத்துவாய்கள்நிரம்பவுந் தைத்து, இருபதுகண்களும் மறையும்படி உருவி, மற்ற அவயவங்களிலெல்லாம் பொத்தி, உதிரம் தம்மிற்படாதபடி விரைவாக அப்புறங்கழன்று அண்டத்துக் கப்பாலுஞ்சென்று நிறைந்தது.

ஸ்ரீராமபாணங்கள் தைத்தமையால் இராவணன் மூர்ச்சையாதல்.

கவி.

மயிரின்கால்தொறும் வார்கணைமாரிபுக், குயிருந்திர வுருவினவோடலும்
செயிருஞ்சீற்றமு நிற்கத்திறதிரிச், சயர்வுதோன்றத் துணங்கியழுங்கினன்.

இவ்வண்ணம் இராமசுவாமியானவர் பிரயோகித்த அஸ்திரவருஷங்கள் மயிர்க்கால்கடோறும் நுழைந்து உயிரும் ஓயும்படி உருவிப்போனகாலத்தில் கோபமொன்று நிற்க மற்ற வீரப்பிரதாபங்களெல்லாம் வேறுபட்டு ஆயாசப்பெருக்கமுண்டாகி மிகவும் தேகநடுங்கி, தேவருலகத்தில் பவனிவரும்படியாகிய இராவணன் உதிரப்பிரவாகமொழுகும்படியாகத் தேரிலேதானே முடிசாய்ந்து கிடந்தான். அதைப்பார்த்த பிரமேந்திராதி தேவர்கள் யாவரும், தருமதேவதையும், சந்தோஷ ஆரவாரஞ்செய்துகொண்டு நடனஞ்செய்தார்கள். பாபகிருத்தியங்களெல்லாம் இனிதம்மை ஆதரிப்பாரில்லையே யென்று அதிதுக்கமடைந்து சோர்ந்து விழுந்தன.

இராவணன் இரதத்தில் மூர்ச்சித்து விழுந்ததைக்கண்ட சாரதி இலங்கைக்கேக இரதத்தைத்திருப்பிச் செல்லுதல்.

கவி.

ஆர்த்துக்கொண்டெழுந் தம்பர்களாடினார்
வேர்த்துத்தீவினை வெம்பிவிழுந்தது
போர்த்துப்பொய்த்தன வென்றுபொலன்கொடேர்
பேர்த்துச்சாரதி போயினன்பின்னுவான்.

அப்போதிராவண சாரதியானவன் நம்முடைய தலைவன் மூர்ச்சித்துக்கிடக்கிறானதலால் இனிரதத்தை யிங்கிருத்துவது தகுதியல்லவென்று நினைத்து, அந்தமெல்லெனத் திருப்பி நடத்திச்சென்றான். தேவர்கள்முதலிய சாதுக்களுடைய உஜ்ஜீவனார்த்தமாகத்திருவவதரித்த ஸ்ரீராமசுவாமியானவர் நம்முடைய சத்துருவாகிய இந்தப்பாவிகடன் கைகளில் ஆயுதங்களொன்றுமில்லாம லிருப்பதுமன்றி மெய்ம்மறந்து சோர்ந்து கிடக்கிறான். ஆதலால் இவன்மேல் ஒருபாணத்தையும் எய்யலாகாதென்று தருமத்தைச்சிந்தித்துச் சும்மாவிருக்கவும் இந்திரசாரதியாகிய மாதலியானவன் சுவாமியைநோக்கி, ஓ எங்கள் ஆண்டவனே! இந்தத்துஷ்டன் மூர்ச்சை தெளியுமேயானால் பின்னை ஒன்றுஞ்செய்யமுடியாது. ஆதலால் மூர்ச்சையாய்க்கிடக்கிற இந்தச்சமயத்திலேயே இவனுடைய பிராணனை வாங்கவேண்டுமென்று ஸ்ரீராமபிரானை உபசாரமாகத் தூண்டினான். அதுகேட்டருளிய தருமஸ்வரூபியாகிய ஸ்ரீராமநாதரானவர் அவனைக் கையமர்த்தி, ஓமாதலி! இவன் எல்லா ஆயுதங்களையும் கைசோரவிட்டு அறிவுமயங்கிக் கிடக்கின்றான். இப்போதுநாம் ஆயுதங்களை எடுத்தாலும் அதிற்கொள்ளமாட்டான், அப்படிநாம் பாணப்பிரயோகம்பண்ணி தநுர்வேத நீதி விரோதப்படி பிராணனை வாங்குவது நன்மையோ? இவனுடைய யுத்தமோ முடிவாகப்போகிறது. நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். அவன் மூர்ச்சைதெளிந்து எழுந்தபின்பு நான் எதிர்ப்பேன். இதுவே என்னுடைய கருத்தென்று அருளிச்செய்தார்.

இப்படி சுவாமியு மாதலியும் வார்த்தையாடிக்கொண்டிருக்கையில் மற்றுமிராட்சசர்கள் அநேகர்களாகி இராவணனுடைய தேரைத் தொடர்ந்து சென்றவர்கள். அக்காலத்தில் ஸ்ரீரகுநந்தனார்க்குக் கைகளைக்கூப்பித் தண்டன் சமர்ப்பிக்காத தேவர்களுமுண்டோ? யாவரும் தண்டன் சமர்ப்பித்தார்கள்.

இராவணன் மூர்ச்சைதெளிந்து இரதத்தையேன் திருப்பினையென்று சாரதியைக் கோபித்தல்.

கவி.

உறக்கநீங்கி யுணர்ச்சியுற்றென
மறக்கணன்றுஞ் சரியவனுந்திரை
சிறக்குந்தேரொடு கண்டிலன்சீறத்திப்
பிறக்கநோக்கினன் பின்னுறநோக்கினன்.

இச்சமயத்தில் நிர்த்தாக்ஷணியமும் வஞ்சகமுமுள்ள இராவணனானவன் நித்திரைதெளிந் துணர்வுவந்தவனைப்போல வெழுந்தபோது தனக்கெதிர்முகத்திலே இரதாருடராய் ஸ்ரீராமபிரானைக் காணாமல், அதிக கோபத்தோடு மற்றமூன்று பக்கமும் திரும்பிப்பார்த்தான். அப்படிப்பார்க்கையில் பின்பக்கத்திலே ஸ்ரீரகுநந்தனைக்கண்டு, உடனே தனது வலவனைப்பார்த்து, அடா சாரதி! சொல்பலவந்தர்களாகிய தேவர்கள்காணவும், கோதண்டத்தைக் கையில்தாங்கியபடியே யிருக்கின்ற இராமனுக்குச் சிரிப்புண்டாகவும், நீ தேரைத்திருப்பி ஓட்டிவந்து தப்புசெய்தாயே: என்ன நினைத்துக்கொண்டு இப்படிச் செய்துவிட்டாய்? அடா வஞ்சகா! நானுனக் கிரட்சகமாய்நின்று சாரதித்தொழில் முதலியவற்றைக் கற்பித்து, யாவரும் பெறக்கூடாத அகண்டஐஸ்வரியத்தில் நிலைநிறுத்தினேன். அதற்குப் பிரதியுபகாரமாக இப்போ இராவணன் ஸ்ரீராமனோடு போர்செய்ய அஞ்சினானென்று சொல்லும்படி பழிச்சொல்லை எனக்குத் தேடிவைத்தாயல்லவா? நீயும் உயிரோடு பிழைத்துப்போக இருக்கின்றாயோ? என்று சலித்துக்கோபித்துத் தன்கையில் ஒருவாளைப்பற்றிக் கடைக்கண்ணாற் பார்த்துச் சாரதிமேல் வீச உயர்த்தினான்.

இப்படி யவ்விராவணன் வாளேந்தியகையை உயர்த்தவும் சாரதியானவன் பொருக்கென எழுந்து அவனுடைய பாதங்களை முடிமேல்தரித்துக்கொண்டு, ஓ தேவருலககண்டகா! வடவாமுகாக்கினியைப் போன்ற உமது கோபத்தை ஆற்றக்கடவீர். அடியேன் சொல்லிக்கொள்ளும் விண்ணப்பம் ஒன்றுண்டு. அதனை நீர் தயவாய்க் கேட்டருள வேண்டும், என்று கெஞ்சிக்கெஞ்சி, ஓ இராக்ஷசகுலதிலகா! நீர் யுத்தத்தொழில் மறந்து சோர்ந்துபோய்விட்டீர். இன்னும் சிறிதுநேரமாத்திரம் அங்கேயே யிருந்துவிடுவீரேயானால் உம்முடைய உயிர் இந்தக்ஷணமே நீங்கிவிடுமென்று ஒருதுன்பம் என்னுடைய இதயத்தில் ஜனித்து, அத்துன்பத்தைப் போக்கிக் கொள்ளும்படி இரதத்தைத்திருப்பி நடத்திவந்தேனே யல்லாமல் வேறல்ல. இதுசத்தியமாகும். இதுநிற்க, பொதுவாகப் பார்க்குமிடத்தில் தன்னுடைய தலைவனுக்குச் சோர்வும் அல்லது பிராணாபாயமும் சத்துருவுக்குத்திடவிர்த்தியுங் கண்டால் உடனே சாரதியானவன் தனது தலைவனுடைய உடலின் சோர்வை நீக்குமுபாயத்தை ஆலோசித்துச் செய்யக் கடவனன்றோ? ஆகையால் இப்படிச்செய்தேன். நீரே நீர்க்காலோசனை செய்யக்கடவீர். நிரபராதியாகிய என்னை வாளாற்கொல்லுதல் தகுதியல்லவென்று வேண்டிக்கொள்ளுதலும் இராவணனானவன் சரிதானென்று தானும் ஆலோசித்துச் சாரதிமேல் இரங்கி, அடா சாரதி! இஃதிருக்கட்டும்; தேரை இராமன்மேல் தூண்டி நடத்தென்று உத்திரவு செய்தான். அப்படியே சாரதியும் இரதத்தைத்திருப்பிக்கொண்டுவந்து தாரகமந்திர வீர்யனாகிய ஸ்ரீராமச்சந்திர சுவாமிக்கெதிரே நிறுத்தினான்.

இராவணன் தனதிரதத்தைத் திருப்புவித்து ஸ்ரீராமபிரான்மேல் அஸ்திர சத்திரங்களைப் பிரயோகஞ்செய்ய அவைகளைச் சுவாமிகண்டித்தல்.

கவி.

கூற்றின்வெங்கணை கோடியின்கோடிகள்
ஆற்றினன்வலி மும்முறைதோற்றினன்
வேற்றோர்வாளைக் கன்னெனவெம்மையால்
ஆற்றினன்செருக் கண்டவாஞ்சினர்.

இப்படி அதிவீரபிரதாப இலங்கேசுரனானவன் அகில கல்மஷாந்தகார பாஸ்கரராயெழுந்தருளியிராநின்ற ஸ்ரீராகவபிரானை எதிர்த்து நின்று யமனுக்குச் சமானமாகிய கோடாநுகோடி அம்புகளையெய்து, இவன்பழையராவணனல்லன்: புதுராவணன்; என்று கண்டவர்களெல்லாம் சொல்லி அஞ்சும்படி முன்செய்த யுத்தத்தைப் பார்க்கிலும் மூன்றுபங்கதிகமான யுத்தத்தைச் செய்தான். அதுபார்த்தருளிய ஸ்ரீகோதண்டதீக்ஷாகுருவானவர் ஒளியுண்டாயிருந்தால் நெருப்புண்டென்பதுபோல இந்தக் கொடியோன்கையில் வில்லுண்டாயிருக்கிறவரையும் இவன் யுத்தத்தை ஒழியான். இவனொழியாமற் போர்செய்துகொண்டிருப்பானேயாகில் வெல்லுதலும் அரிதாகுமென்று திருவுளத்திற் கருதி ஸ்ரீமந்நாராயணாஸ்திரத்தை விரும்பி எடுத்துத் தொடுத்துப் பிரயோகித்து, பூமியைச் சுமக்கின்ற எட்டு யானைகளையும் ஜெயித்த இராவணன்பிடித்திருந்த யாவருக்குந் துன்பத்தைத் தருவதாகிய வில்லை இரண்டு துண்டுகளாகச் செய்துவிட்டார். முன்னே பிரம்மதேவனானவர் ஆண்டுகொண்டிருந்த அந்த வில்லானது சகஸ்திர திருநாமங்களிலங்கிய ஸ்ரீமந்நாராயணனுடைய அஸ்திரத்தால் துண்டுபட்டு விழுதலும் தேவர்களியாவரும் நாம்செய்த பலவாகிய தவத்தாற் பயனைப்பெற்றோமென்று சொல்லிக்கொண்டு உயர்ந்து உயர்ந்து குதித்தாடினார்கள். உடனே வேறொருவில்லை இராவணன் பிடித்தான். அதையுமெம்பெருமானவர் முறித்துவிட்டார்.

கவி.

மாறிமாறிவரிசிலை வாங்கினன், நீறினாறினொ டையிருநூறவை
வேறுவேறு திசையுறவெங்கணை நூறினானிராம னொருத்தினன்.

இந்தப்பிரகாரம் அந்தக் கொடியோன் எடுத்தெடுத்துப்பிடித்த பதினாயிரம் வில்லுகளையும் ஸ்ரீ ராமமூர்த்தியானவர் இடைவிடாமல் துண்டித்துத் தசதிசையினும் போகும்படிச் செய்தனர். இனி வில்லெடுப்பதிற் பயனில்லையென்று இராவணனானவன் ஸ்ரீரகுநாதருடைய திருமார்பில் வாசஞ்செய்கின்ற ஸ்ரீமஹாலட்சுமியும் இடம்விட்டுப்பெயரும்படி இருப்புலக்கைகளையும், தண்டாயுதங்களையும், வேல்களையும், கட்டிகளையும், வாள்களையும், நெருப்பினும் அதிதீக்ஷணியமாகிய தோமரங்களையுமெடுத்தெடுத்து, அவருடைய மார்பில் தாக்கும்படி விட்டெறிந்தான். அந்த ஆயுதங்களையெல்லாம் ஸ்ரீராமசுவாமியானவர் தமதம்புகளை எய்து அறுத்தறுத்துக்

கடலிலே அங்கங்கே தோன்றுகின்ற திடர்களைப்போல ஓடுகின்ற இரத்தப்பிரவாகத்திலே துண்டுபட்ட ஆயுதக்குவியல்கள் தோன்றும்படி குவித்தார். தமது திருவடிகளைச் சரணமடைந்தவர்களுடைய பாபங்களையெல்லாம் போக்குகின்ற கீர்த்திதாதசரதி ஸ்ரீகாகுஸ்தகுல திலகரானவர் நாமிப்போதெய்கின்ற பாணங்களைப்போன்ற பாணங்கள் இவன் பிராணனை வாங்கமாட்டா. கடல் மணலினும் அபரிமிதமாகிய குரூரபாணங்கள் இந்தக் கொடியோனுடைய கன்மமணிகளினுள் நுழைந்து ஒடிவன. முன்பட்ட காயப் புண்ணின்வழியே தத்துவதரிசிகளுடைய ஞானத்தைப் பார்க்கினும் அதிக கூர்மையுள்ள பல அம்புகள் உருவிச்சென்றன. இப்படிப் பாணங்கள் பாய்ந்தொளைத்தும் இவனுடைய தைரியபல வீரியங்களில் ஏதேனுமொன்று குறைந்ததுண்டோ? இந்த மஹாபாபிஷ்டனை உயிரோடு வைத்துக்கொண்டிருப்பதினால் என்னபயன்? நாம் இனித்தாமதஞ் செய்யாமல் பிரமாவினுடைய அஸ்திரத்தைப் பிரயோகித்துப் பிராணனை வாங்குவோமென்று தமக்குள்ளே தீர்மானித்து ஆதியிலே மூலதாமரையில் ஜனித்துச் சகல அண்டங்களையும் சிருஷ்டித்த தேவசிரேஷ்டராகிய பிரஹ்மாவினது அஸ்திரத்தை எடுத்தார்.

இந்திராதி சமஸ்த தேவர்களுக்குந் தாமளிசெய்த வரத்தைப் பாலனஞ்செய்யும்படி அவதரித்த ஸ்ரீராமசந்திரசுவாமியானவர் தாமெடுத்த அந்தப்பிரஹ்மாஸ்திரத்துக்கு அர்ச்சனைமுதலிய பூசைகளைச்செய்து, ஸ்ரீகோதண்டத்தின் நாணிலே தரித்து, மந்தரகிரிக்குச் சமானமாகிய வலதோளால் வாங்கி அப்பிரமாஸ்திரத்தைச் சந்தித்தனர்.

ஸ்ரீராமபிரான் பிரமாஸ்திரத்தைப் பிரயோகித்து இராவணனை வதஞ்செய்தல்.

கவி.

புரஞ்சுடப்பண்டமைத்ததுபொற்பினை, மாக்கொளைத்தது வாலியைமாய்த்தனை
தாஞ்சுடச்சுடர் செஞ்சினாக்கர்கோன், உரஞ்சுடச்சுடரோன்மகனுந்தினன்.

அவ்வஸ்திரம் எப்பேர்ப்பட்டதெனில் பூர்வகாலத்தில் சிவபெருமான் திரிபுரத்தைச் சுடவமைந்தது. அழகுபெற்று பருத்துவளர்ந்த ஏழுமராமரங்களைத் தன்றுந் துளைக்கப்பட்டது. வாலியென்னும் வானராதிபதியைக் கொன்றது. இவ்விதமாகிய வலிமையுடைய பிரமாஸ்திரத்தை மகாகொடிய மனதையுடைய இராவணனது மார்பிற் சுட்டுக்கொண்டழுந்தும்படியாகச் சூரியகுலத்தினரான இராமசந்திரமூர்த்தியானவர் பிரயோகித்தார்.

கவி.

மூக்கோடிவாணளும் முயன்றுடையபெருந்தவமு முதல்வன்முன்னாள்
என்கோடியாராலும் வெலப்படா யெனக்கொடுத்த வரமுமேனைத்
திக்கோடுமுலகனைத்துஞ் செருக்கடந்த புயவலியுந்தின்றுமார்பிற்
புக்கோடியுயிர்பருகிப் புறம்போயிற் றிராகவன்றன் புனிதவாளி.

இப்படி பிரமதேவருடைய மந்திரத்தை செபித்துப் பிரயோகித்த அஸ்திரமானது வாயுவால் அறியப்படாத வேகத்தையும் அக்கினியால் அறியப்படாத தீக்ஷணியத்தையுங் கொண்டு நான்குமுகங்களை யுடையதாகி, தன்னிடத்துண்டாகின்ற சுவாலையால் சக்கரவாளகிரிக்கு அப்புறத்திலுள்ள பெரும்புறக்கடலிலுள்ள நீர்முற்றுஞ் சுவறிப்போய் வெற்றவெளியாகவும் - உகாந்தகாலத்துச் சூரியனு மின்மினியென்று சொல்லும்படியாகத் தன்னிடத்தெழுகின்ற சுடர்களால் உலகத்திலுள்ள அந்தகாரமுழுமையு நிலைபெயர்ந்தோடவும் - அதிவேகமாய்ச்சென்று, சுதரிசனமென்பானுடைய பூர்ணமிசத்தையும் பெற்று, சுவர்க்கமத்திய பாதாளங்களும் அஷ்டதிக்குகளும் தமோற மஹாவீரப்பிரதாப இலங்கேஸ்வரனாகிய அஷ்டாத்துமாவினுடைய மார்பினைத்து, தான் இந்திரிய ஆசைகளையொழித்து மனத்தை ஒருவழிப்படுத்திப் பெரும்பிரயாசப்பட்டுச்செய்த அரியதவத்தையும் - சாக்ஷாத்து சாம்பசிவமூர்த்தியும் பிரமதேவனு மனப்பூர்வமாய்க் கருணைகூர்ந்து ஆதிநாளில் அருளிச்செய்த மூன்றுகோடி ஆயுள்நாளோடு தேவதானவ மனுஷர் முதலியோரால் ஜெயிக்கப்படமாட்டாயென்றுகொடுத்த வரத்தையும் - அஷ்டதிக்குப் பாலகர்களையும் உலோகேஸ்வரர்களையும் யுத்தத்தில் ஜெயம்பெற்றுவந்த பராக்கிரமத்தையும் கவளீகரித்துண்டுவிட்டு, மார்பை உருவி உயிரையுங் கொண்டு புறத்தே போய்விட்டது.

இராவணனிறக்கக்கண்ட தேவர்களுமுனிவர்களு ஸ்ரீராமபிரானைப் புஷ்பமாரிபொழிந்து ஆசீர்வதித்தல்.

கவி.

ஆர்க்கின்றவானவரு மந்தணருமுனிவர்களு மாரிகூர்த்
தூர்க்கின்றவலர்மாரி தொடரப்போய்ப்பாற்கடலிற் றுயிற்சாடித்
தேர்க்குன்றவிராவணன்றன் செழுங்குருதிப்பெருநீரலைத் திரைமேற்சென்று
கார்க்குன்றமனையான்றன் கடிக்கணைப்புட்டிலிற்புக்க தம்மா.

அப்போது சமஸ்ததேவர்களும் - வேதியர்களும் - முனிவர்களும் - குதூகலத்தோடு ஆசீர்வாதஞ்சொல்லி வாரிவாரி இறைக்கின்ற புஷ்பவருஷம் தன்மேற்படும்படியாக அந்தப் பிரமாஸ்திரமானது திருப்பாற்கடலிற்சென்று பரிசுத்த ஸ்நானஞ்செய்து திரும்பி, இராவணனுடைய மார்பினின்று சொரிகின்ற உதிரக்கடலின் அலைகளின்மேற்சென்று நீலரத்தின பர்வதம்போல விளங்குகின்ற தசரதாத்மஜனுடைய அம்பறாத்தூணியில்வந்து சேர்ந்தது. கறுத்தபெருமலைபோன்ற தோற்றமுள்ள இராவணேஸ்வரன்பிராணனிழக்கும் சமயத்தில் மாரிகாலத்துச் சூல்கொண்ட மேகம் குமுறுவதுபோல இருபதுதோள்களையும் கொட்டிப் பத்துவாய்களாலும் விரகர்ச்சனைசெய்து, அம்பைமாலைதரித்த பருவதாகாரமாகிய மார்பின்கண்ணும் ஆபரணக்கூட்டங்களும் அவற்றிலழுத்திய இரத்தினராசிகளும் சிதைந்து சிந்தவும் - இருபதுநேத்திரங்களினின்றும் புகையுமிழ்ந்து பொங்கவும் - மகோன்னதமான இரதத்திலிருந்து பத்துத்தலைகளும் கிழக்குப்புறத்து வீழ்ந்தான்.

அகாரயோகனுக்குமாகக்கற்பித்த அசாஸ்திரத்தின்வழியே சென்று பரமவைதிக நெறியைத் தவறிநடந்த இராவணனுக்கு அனைவன் ஸ்ரீராமபாணத்தாற் குருசேஷபாவமுள்ள சிங்கத்தினது கோபம்போன்ற கோபம் அடங்கவும் - மனோதைரியம் ஒடுங்கவும் - மாயாதந்திரங்கள் அழியவும் - தேவாசுரர்களாகிய சத்துருக்களாது வலிகெடும்படிப் போர்செய்த இருபதுதோள்களினுடைய தொழில்கள் நீங்கவும் - பரதாரங்களிடத்து வைத்த மோகம்கெடவும் - பராக்கிரமம் தேய்ந்துபோகவும் - உயிர் நீங்கினனுயினும், அந்தச் சத்துருவீரனுடைய பத்துமுகங்களும் மௌனசீலர்களாகிய ரிஷிக்கூட்டங்களையும் - தேவர்களையும் - மற்றவர்களையும் - தங்கள் நிலைகெட்டுத் தலைகுனிந்தோட முற்பயுத்தகாலங்களில் வென்றதைப் பார்க்கினு மூன்றுபங்கதிகமாகக் களிப்பும் வீரமுகிழ்ப்பு விளங்கிக்கொண்டிருந்தன. பின்பு சுவாமியானவர் - அப்பா மாதலி! ஆகாயமார்க்கத்திற் செலுத்துகின்ற இரதத்தைப்பூமியில் இறக்குவாயாகவென்று கட்டளையிட்டார். அம்மாத்திரத்தில் மாதலியும் ஸ்ரீராமசுவாமியினுடைய உத்தரவின்படி பூமிமேல் நடத்திவந்தான்.

ஸ்ரீராமர் தெய்வீகத்தேரை இந்திரபுரத்திற்கனுப்பி இராவணனது உயிர்நீங்கிய உடலிலுள்ளதழும்புகளைநோக்கிச் சிலவார்த்தைகூற அதற்குவிபீஷணர் பதில்கூறல்.

கவி.

தேரினைநீகொடுவிசும்பிற் செல்கென்னமாதலியைச் செலுத்திப்பின்னர்ப்
பாரிடைமீதிழிந்திளையோ னுடனுந்தம்பியொடும்படைத்தலைவர் பலருஞ்சுற்றப்
போரிடைவீழ்ந்தொருவருக்கும் புறங்கொடாப்பெருவீரன் பொருதுவீழ்ந்த
சீரினையேமனமுவப்ப வருமுந்நூற்றிருவாளன் றெரியக்கண்டான்.

உடனே எவர்களாவது கண்டால் விரும்பத்தக்க சர்வ லக்ஷணங்களும் அமைந்து அறங்களை வளர்க்கின்ற தாமரைமலர்போன்ற விசால நேத்திரங்களையுடைய ஸ்ரீரகுகுலவீரராகவர் திருத்தேரைவிட்டு இறங்கியருளி மாதலியைக்கடாக்ஷித்து, இரதத்தைச் சுவர்க்கலோகத்துக்கு இனியோட்டிக்கொண்டு போகக்கடவையென்று உத்தரவுசெய்துவிட்டு ஸ்ரீலக்ஷ்மணப்பெருமாளும் - சுக்கிரீவமகாராஜரும் - மற்றவானர சிரேஷ்டர்களும் - விபீஷணனும்வாழும் தம்மைச் சூழ்ந்துவரச்சென்று, ஆகாயத்தைமுட்ட விழுந்து கிடக்கின்ற தசமுகனுடைய உருவத்தை உற்றுப் பார்த்தருளினர். மகாதபங்களைச்செய்து ஒருவன்பெற்ற செல்வமானது தன்னைப் பெற்றுக்கொண்டவன் செய்யும் சத்கருமங்களுக்குத் துணையா யிருப்பதுமன்றி அவன்செய்யும் துஷ்கருமங்களுக்கும் துணையாயிருந்து, அவனுடைய பூர்வசத்கருமம் அற்றமாத்திரத்தில் உடனே அவனைவிட்டு நீங்கிவிடுகின்ற நிலையில்லாமையைப் பார்க்கிலும் வேறொரு நிலையில்லாமையும் உண்டோ? மேலும் - அந்தச்செல்வமானது நீர்மேற்கிழித்த சித்திரத்தைப்போலு நிலைமையுடைய தல்லவா?

பெருந்தவங்களைச் செய்து அகண்டைஸ்வரியத்தை அடைந்து ஒருவரையும் வணங்கரியாதஇராவணனுடைய பத்துத்தலைகளின்மேலும், சாக்ஷாத்து

பரமசிவனுனவர் பிரமதகணங்களோ டெழுந்தருளிய கயிலாசத்தை ஒரு பந்துபோலப் பேர்த்தெடுத்து இருபது தோள்களின்மேலும், தோள்களின் மேற்புறத்திலும்; சாகாமிருகங்களாகிய அநேகவானரங்கள் தாவித்தாவி யேறி மலைகளின்மேலேறி நின்றுலவுவதுபோலக் குதித்துக்குதித்து ஆடின. அப்போது புற்றுக்களிற் பலசர்ப்பங்கள் நுழைந்துசென்றன போலவும் — மேகராசியிற் பிறைச் சந்திரிகைகள் நுழைந்துசென்றன போலவும் — இராவணனுடைய முதுகில் திக்குயானைகளினுடைய தந்தங்கள் மார்பில்தைத்துருவிய தழும்புகளைத் தாமரைக்கண்ணனாகிய ஸ்ரீரகுநந்தனர் கண்டு, அந்தக் கொடியவன் பிராட்டியார் பக்கலில் அபசாரப்பட்டதனால் தமக்குண்டாகிய கோபமாறிப்போய் புன்னகைகொண்டு விபீஷணாழ்வான் முதலானவர்களைப் பார்த்து ஆ! ஆ! பார்த்தீர்களா? தன்னுடையபராக்கிரமத்தால் திரிலோகங்களையும் யதார்த்தமாகவே இந்தத் தசக்கிரீவன் அடைந்தவனானாலும் இன்று என்னுடைய பாணத்தால் இறந்தானென்று நான் என்தோள்களை நோக்கிக் களிக்கின்ற களிப்பானது இவன்முன்னே எந்த யுத்தத்திலேயோ எதிர்த்துப் பின்வாங்கி முதுகில்தைத்த சில அம்புகளின் வடுக்கள் காணப்படுதலால் அழிந்துபோனதுமல்லாமல்; முன்னொரு சுத்தவீரனுக்குத் தோற்றுப்போனஒருவனை இந்த ஸ்ரீராமன் கொலைசெய்தானென் றுலகத்தார் நிந்திக்கும்படியான அபக்கியாதியையும் தேடிக்கொண்டேன்.

இந்தராவணன் கார்த்தவீரியார்ச்சுனனால் முன்னொருகாலத்திற் கட்டுப்பட்டானென்று உலகத்தார் சொல்லிக்கொள்ளும் பிரபலமான ஒருவார்த்தையும் உண்டு. அந்த வார்த்தையை நினைத்துநினைத்து என்மனமோ மிகவும் நாணுகின்றது. இஃதிருக்கட்டும்: உயுத்தத்தில் இவன் முதுகுகாட்டி ஓடும்படிசெய்த சுத்தவீரனுடைய இரண்டுகைகளும் இருக்கையிலேயே நான் வில்லைப்பிடித்து அம்பையெய்து இவனைக் கொன்றேனென்பதும் ஒருவீரமோ? முன்சொன்னபடி நாணுகின்ற எனக்கு இதுமுதுகிற்பட்ட புண்ணல்லவோ? இறந்துபோனாலும் உலகத்தில் நிலைத்திருக்கும்படியான பெருங்கீர்த்தியோ இனி என்னைச் சேரமாட்டாது. போரி லெதிர்த்துநின்று புண்படச் சண்டைசெய்யத்தக்க சுத்தவீரனானவன் சத்துருக்களெல்லாம் கைகொட்டிநகைசெய்யும்படியாகப் பிராணன்மேல் அன்பைவைத்துப் பிறகிட்டோடினானென்பது போன்ற அபகீர்த்தியைத் தேடிக்கொண்டேன். முன்னே இவ்வீரர்களிடத்தில் நான்பெற்ற ஜெயமும் வியர்த்தமாய்ப் போயிற்றே: என்று ஸ்ரீரகுநந்தனிப்படி சொல்லினர்.

இப்படி எல்லாம்வல்லோராகிய ஸ்ரீகாகுஸ்தர் வீரர்களுக்கடுத்த விரசவார்த்தைகளை அருளிச் செய்தமாத்திரத்தில் ஸ்ரீவிபீஷணாழ்வானென்பவர் மனம்பொறாமல் சுவாமிக்குத் தண்டன்சமர்ப்பித் தெழுந்துநின்று, இரண்டுகண்களிலும் நீர்பெருகும்படி பெருமூச்சு விட்டுக்கொண்டு, ஓ சுத்தவீரர்களுக்குள் சுத்தவீரசிகாமணியே! தேவரீர் நீதியாகப்பேசவில்லையே: ஓ தைத்திய

ராக்ஷசகுல வைரியே! பூர்வத்திலே ஆயிரந்தோள்களையுடைய கார்த்தவீரியனும் — வாலியும் — இந்தத் தசமுகனை வெகு அருமையாகவென்றார்களென்பது தேவர்களுடைய சாபத்தினாலல்லாமல் வேறல்ல. இந்தத் துராத்துமாவானவன் பிரமேந்திராதி சமஸ்த தேவர்களும் தாயைவணங்குவதிலும் அதிகமாக வணங்கத்தக்க சர்வலோகநாயகியாகிய பிராட்டியார்பக்கலிற்பட்ட அபசாரமும், உம்முடைய தாசபூதர்கள் பக்கலிற்செய்த அபசாரம் காரணமாகத் தேவரீருக்குண்டாகிய சீற்றமும், இவனை வென்றவைகளல்லாமல் மற்ற எத்தேவர்களாலும் வெல்லவு முடியுமோ? இவன் முன்னே அனைத்திகமார்க்கானுசாரியாகி பூமிவிஸ்தீரணம் எந்தமட்டும் உண்டோ அந்தமட்டும் தனதுதேரைச்செலுத்திச் சென்று, தன்னை எதிர்க்கத்தக்க சத்துருக்களொருவரையுங் காணாதவனாய் திக்கின்முடிவில்மகம்மேருவைப்போல்நின்றயானைகளோடு முட்டினான். அப்போதந்தத் திக்கஜங்களினுடைய தந்தங்கள் இவனுடைய வச்சிரமலைபோன்ற மார்பில்தைத்து நிற்கும்படி நிமிறி முறித்துக்கொண்டு வந்துவிட்டான். அந்தத் தந்தங்கள் தன்மார்புக்கு அலங்காரமாகவும், தனது வீரப்பிரதாபத்துக்குக் குறியாகவும், நெடுநாள் அப்படியே வைத்துக்கொண்டிருந்தான்.

ஒருகாலத்தில் யமதர்மராஜனோ டெதிர்த்தபோது அவனெய்த வச்சிரபாணங்கள் இந்தத் தந்தங்களின்மேற் பட்டனவாயினும், இதோ நிற்கின்ற தேவரீருடைய தாசராகிய ஆஞ்சனேயர் உயுத்தகளத்திற் குத்தியகுத்தினாலும், அவைகள் முதுகுபரியந்தம் பாய்ந்தன. உடனே பாய்ந்ததந்தங்கள் இவருடைய குத்தின் அதிர்ச்சியினால் பலபலவென்று உதிர்ந்துவிட்டன. முதுகிலே தோன்றுகின்ற வடுக்கள் அவையேயன்றி வேறே ஒருபாணம்பட்ட வடுக்களல்ல. திருப்பாற்கடலிற் பிறந்த ஆலகாலவிஷமானது ஸ்ரீருத்திரபகவானை நாசப்படுத்தினபோதிலும், வாசுகிமுதலிய குரூரசர்ப்பங்கள் ஸ்ரீகருடபகவானை நெருங்கினபோதிலும், இந்தப் பிரமாண்டத்திலேயே அல்ல; மற்ற எந்த அண்டங்களிலாவது இவனுக்குச் சத்துருக்களுண்டாயிருந்து அவர்களுடைய பாணங்கள் அஞ்சாமல்வந்து இவனை என்னசெய்யமாட்டும். ஓ ஜீவகாருண்யமூர்த்தியே! இந்த முதுகுங்காயங்களுக்கு வேறுகாரணமும் உண்டோ? இல்லை: இஃதிருக்கட்டும். சமுத்திரத்தாற் சூழப்பட்ட பூகோள முழுமையும் தன்னுடைய கோரப்பல்லில் அடங்கும்படிகொண்ட ஆதிபுருஷவராகமாகிய பராபரவஸ்து முதலிட்ட தேவதேவர்கள்யாவரும், இந்தராவணனுண்டாகும் இடுக்கண்களை என்றைக்கு நாம் நீங்கப்போகிறோமென்று துன்பப்பட்டுக்கொண்டிருந்தார்கள். இப்போதுதேவரீருடையபாணப்பிரயோகத்தால் இந்தச் சாதுசஜ்ஜன கண்டகன் இறந்தானென்பதைத் தங்கள் கண்களாரக்காணும்படி, இதோ ஆகாயமார்க்கத்தில்வந்து மொய்த்து நின்றார்களென்று கூறி முடித்தனர்.

ஸ்ரீராமபிரான் விபீஷணனை நோக்கி இராவணாதியர்க்கு சாமக்கிரியை நடத்துமாறயோ வாக்கியாபித்தல்.

கலி.

அன்னதோவென்றுளீத மையமுநாணுநீக்கித்
தன்னதோளிணையபோக்கி வீடணற்கண்ணன்றான்,
என்னதோவிறந்தானார்மேல் வயிர்த்தலிவனுக்கீண்டு
சொன்னகோள்விதியினாலே கடன்செயத்தணிதியென்றான்.

இப்படி விபீஷணாழ்வான் சொல்லியவற்றையெல்லாம் திருச்செவிசார்த்திக் கேட்டருளிய ஸ்ரீராகவபிரான் இந்தவுலக்கள் யாவரும் தங்களின் வடிக்களா வென்று நாம்கொண்ட அவதாரத்துக்கேற்ற முன் அடைந்திருந்த சந்தேகமு நாணமு நீங்கினவராய்த் தம்முடைய திருத்தோளை நோக்கிக் களித்து, ஓ விபீஷணனே! உயிர்மாய்ந்தவர்கள்மேல் அவர்கள் முன்செய்த குற்றத்தைப் பாராட்டிச் சலஞ்சாதிக்கிறது தருமமல்ல, அது புத்திமான்களுடைய செய்கையுமல்ல. கொன்றாற்போன்ற குற்றஞ்செய்தவனாயிருப்பினும் உயிர்மாண்டவனதலால் இவன்செய்த தீமைகளை க்ஷமித்தவனாகி, உங்களுடைய குலாசாரத்துக்கொத்தபடி கருமகாண்டத்திற் சொல்லிய விதிகளை அநுசரித்துப் பிரேதபூசைஉத்தரகிரியைமுதலியவைகளைச் செய்யக்கடவாயென்று திருவுளமிரங்கித் தமது கருணையால் சொல்லிக்கொண்டிருந்தனர். அதுசமயத்தில் தம்மைத்தரிசித்து வணங்கும்படியாக எந்த வுலகங்களிலுமுள்ள சமஸ்த சாதுசஜ்ஜனங்களும் — பிரமனும் - இந்திரனும் - மற்றதேவர்களும் - வேதங்களால் தோத்திரஞ்செய்துகொண்டு வந்து நிறைந்து, முறைமுறையாக விழுந்து சேவித்துக்கொண்டிருந்தனர்கள். அவர்களோடு வார்த்தையாடும்படியாகச் சுவாமியானவர் தாம் அப்புறத்தே எழுந்தருளினர்.

இறந்துகிடக்கு மிராவணன்மேல் விபீஷணன்விழுந்து பிரலாபித்தல்.

கலி.

ஓவுநுமலகத்தெல்லா வுயிர்களுமெரியினெஞ்சின்
வேதமுமுனிவர்தாமுஞ் சிந்தையினிரக்கஞ்சேரத்,
தாவரும்பொறையினன்ற னாகிலினற்றலைக்கதின்ற
யாவருக்குயர்ந்த வஎத்தினன்பருகாயார.

அப்பால் ஸ்ரீசர்வலோக சரண்யராகிய ஸ்ரீராமநாதர் அருளிச்செய்த அருளப்பாட்டின்படி ஸ்ரீ விபீஷணாழ்வானனவர் தம்முடைய வைராக்கியத்தால் தரித்து வைத்திருந்த அன்பும் துன்பமு நீங்கும்படியாகவும், வானரசேனை முழுமையும் - உலகத்திலுள்ள மனுஷ்ய பசுபக்ஷிமுதலிய எல்லாவுயிர்வர்க்கங்களும் - அங்குவந்திருந்த எல்லாத்தேவர்களும் - எல்லாமுனிவர்களும் - தங்கள் தங்களுக்கு நேரிட்ட துன்பம்போலத் தம்மைக்கண்டு மனமிரங்கும்படியாகவும் தம்முடைய பெருவாயைத்திறந்து கதறி அழுது, விழுந்துகிடக்கிற ஒருமகா பர்வதத்தின்மேல் ஒருமலைசாய்ந்து விழுந்தாற்போலப் பிரதாப லங்கேசுரன்மேல் விழுந்துபுலம்பத் தொடங்கினர்.

கலி.

உன்னுதேயுயிருண்டதொருதந்த சலகியெனும் பெருதந்தன்னைக்
கண்ணாலேநோக்கவேபோக்கியதே யுயிரீயுங்க[illegible]ப்பட்டாயே
என்னுதேனென்னியலசா வின்றினித்தா னென்னுநீயோ வெண்ணலாற்றல்
அன்னுவோவன்னுவோ வசுரர்கடம்பிரளய[illegible]மரர்கூற்றே.

ஓராசையொருவன்மே லுயிராசைக்குலமுழுதுங் [illegible]ம லுடையயாதல்,
நீராசைபழியென்றே னென்னை[illegible]வித் தேறினையோ
போராசைப்பட்டெழுந்த கு[illegible]ம்பொன்றவுந்தான் பொங்கினின்ற
பேராசைபோந்ததோ போர்க்களசக்கிரியைப் புருவம்போங்கோய்.

அன்னெறியின்விழிவேத[illegible]யிக்கராணுலகுக்கோ ரன்னையென்ற
குன்றனையசெங்கோளாய் [illegible]னைதுமனத்துட் கொள்ளாதேயே
உன்றனதுகுலமடங்க வுருத்தமரி[illegible]முறவாகாதே
பொன்றினையோவிராவணன்றன் புயவலியின் றகிர்ந்துதான் போகின்றியோ.

மன்றன்மாமலராலும் வடிமழுவாட்படையாலும் வரங்கனிந்த
ஒன்றலாதனவுடைய முடியோடும் பொடியாகி யுதிர்ந்தபோன
அன்றுதானுணர்ந்திலையே யானுமவனுட்டை யனுகின்ற
இன்றுதானுணர்ந்தனையோ விராமனூர்யாவர்க்கு மிறைவனாதல்.

வீரநாடெற்றாயோ விரிஞ்சனூர்யாவர்க்கு மேலாமுன்றன்
பேராதெற்றாயோ பிறைநுதலிதென்றன் புரம்பெற்றாயோ
ஆரானுமுன்னுயிரை யந்தாதேகொண்டகன்றா ரதெலாநிற்க
மாரனூர்வலியாட்டந் தவிர்ந்தாயோ குளிர்ந்தாயோ மதியமென்பான்.

கொல்லாத மைத்துனனைக் கொன்றானென் றதுகுறித்துக் கொடுமைசூழ்ந்து
பல்லாலேயிதழ்மறைக்கும் கோடும்பாவி செடும்பாவப் பழிதீர்த்தானே
கல்லாருந்தியாரு ராகத்தார் அமர்த்தார் நம்பிநம்மோ
டெல்லாரும் பகைஞரே யார்முகத்தே விழிக்கின்றா யெளியையானாய்.

போர்மகளைக் கலைமகளைப் புகழ்மகளைத் தழுவியவர் பொருமைகூரச்
சீர்மகளைத் திருமகளைத் தேவர்க்குந் தம்மோனைத் தெய்வக்கற்பின்
பேர்மகளைத் தழுவுவா னுயிர்கொடுத்தாம் பழிகொண்ட பித்தாபின்னைப்
பார்மகளைத் தழுவினையோ திசையோனைப் பணைவிறுத்த பரிதிமார்பால்.

ஓ ஆடிலாசனையிலிருந்த என் அண்ணனே! ஓ அசுரர்கள் குலத்துக்குப் பிரளயமே! ஓ தேவர்கள் குலத்துக்கு யமனையொத்தவனே! விஷமென்பது தன்னை யுண்டாற்போலல் உயிரையுண்ண மாட்டாதன்றோ? சானகிப்பிராட்டியென்னும் பெரியவிஷமானது தன்னைக் கண்ணாலே பார்ப்பதினாலேயே உன்னுடைய உயிரைப் போக்கிவிட்டதே; மஹாபராக்கிரம சாலியாகிய நீயும் உயுத்தகளத்தில் விழுந்தாயே; எல்லாயோசனையிலுஞ் சிறந்தவனென்று என்னை நான்சொல்லிக் கொள்ளவில்லை. முன்னே யான் யோசித்துச் சொன்ன சில புத்திகளை இன்றைய தினமாவது யதார்த்தமென்று எண்ணுகின்றாயோ? ஸ்ரீபரமபதநாதனாகிய ஸ்ரீராகவபிரான் பேய்பிராணனே அவனென்று

ஆசைவைத்துள்ள கற்புடைய மங்கையர்க் கரசியாகிய மைதிலியின்மேல் நீ அநாசிருதமாகவைத்த ஆசையை நீக்கிவிடென்றும், இல்லாவிட்டால் நமக்குப் பழிவந்துநேரிடுமென்றும் சொன்ன என்னைக் கோபித்துக்கொண்டாயே; அந்தக்கோபம் இப்போது ஆறி நான் சொன்னதெல்லாம் உண்மைதானென்று தேறினாயோ?"

ஓ புருஷர்களை வெறுத்து பார்த்துநிற்கிறதுக்கள் ... செய்த சர்வலோக பயங்கரனிலனே ... அப்பேட்டைசொல்லுமடுத்த நம்முடைய குலமுழுமையு நாசமாகிய தீமைனைதானே உன்னுடைய பேராசைக்கிப்பது? அக்காலத்தில் அக்கினியிலிருந்து தோன்றிபோதகமடைந்த வேதவதியென்னும் பதிவிரதாசத்தினமானவளே இப்போது இச்சானகிப்பிராட்டியி னுருவமாக அவதரித்திருக்கின்றாளென்றும், இவள் சமஸ்தசராசரங்களையும் பெற்றெடுத்த சர்வ ஜகன்மாதாவென்றும் உனக்குச்சொன்னேன். அதை உண்மையிற் கொள்ளமற்போனாயே; அதனாலேதான் உன்குலமுழுமையும் ஸ்ரீராமலட்சுமணர்களை எதிர்த்துநின்று நாசமடைந்ததே; பின்னேயாவது என்சொல்லை நிசமென்றுநம்பிச் சரணாகதி செய்யாமலே விரோதித்துப் பிராணனைவிட்டாயே; இன்றையத்தினமாவது ஸ்ரீராமனுடைய புஜபலபராக்கிரமத்தை அறிந்து கொண்டாயோ?

ஓ இருபது குலாசலங்களையொத்த தோள்களையுடையவனே! மூலதாமரைமலரில்வந்த சதுர்முகனும் கூரிய மழுவாயுதத்தைக் கையிலேந்திய பஞ்சமுகனும் கொடுத்தருளிய வரங்களில் ஒன்றுக்காவது, எல்லாரும் ஸ்ரீராமபாணத்துக்கு முன்னே உன்பத்து முடிகளோடும் பொடியாய்ப் பயன்படாமற் போனவைகளல்லவா? அக்காலத்திலே உன்னிடத்தில் யான்வைத்த அன்பின்மிகுதியால் ஸ்ரீராமபிரானைப்பற்றிச் சொன்னவற்றில் ஒன்றும் உண்மையென்று அறிந்துகொள்ளாமற் போனாயே; ஸ்ரீராமபத்திரானவர் உலோகேஸ்வரர்களுக்கெல்லாம் ஈஸ்வரனென்பவர், அந்த அவாப்த சமஸ்தகாமனும் சகலசகத்காரணபூதனும் பொழுதருளிய ஸ்ரீசர்வேசனுடைய பராக்கிரமத்தை யடைந்து நின்ற இன்றைக்குத்தான் தெளிந்தாயோ? நீ முன்பிருந்து வந்ததும், சகல பிரமாதிதேவர்களுடைய பதவிகளுக்கு மேலானதும், இந்த அண்டங்கள் யாவற்றினும் மூன்றுபங்கதிகப் பெரிதுமாகிய வைகுண்டத்தை யடைந்தாயோ? அல்லது நீ உன்குலதெய்வமாக ஆகமவிதிப்படி ஆராதித்துவந்த ஸ்ரீசந்திரசேகரனாகிய பரமசிவனுடைய அழியாப்பதவியென்னும் கயிலாசபதவியை யடைந்தாயோ?

ஓ என் அண்ணனே! சிறிதும் பயப்படாமல் உனக்குச் சமீபத்தில் வந்து உன்னுயிரைக் கொண்டுபோனவர் யாரோ? இதெல்லா மிக்கட்டும் சர்வலோகேஸ்வரியாகிய சீதாபிராட்டியார் பக்கலில் அன்பினால் நீ விரகங்கொண்டதையறிந்து உன்னோடு போராடிக்கொண்டிருந்த மன்மதனுமவன்தான் செய்துகொண்டிருந்த போராட்டத்தை இனியாவது விட்டானோ?

அக்கினிச்சுவாலையைப்போலக்கிரணங்களை வீசிக்கொண்டிருந்த பூரணசந்திரனனையவன். இப்போது குளிர்கிரணமாகிக்கின்றானே? உதட்டை மறைக்கும்படியாக முன்னே நீண்டுதோன்றுகின்ற பற்களையுடைய சூர்ப்பநகையானவள் யாவராலும் கொல்லப்படாத பராக்கிரமசாலியாகிய மைத்துனனை இந்த ராவணனைவன் கொலைசெய்தா னல்லவாவென்று உள்ளத்தில் வைத்துக்கொண்டு அநேகமாயவஞ்சனைகளை ஆலோசித்திருந்தவள், இப்போதாவது தான் கொண்ட வயிரத்தை நீக்கினாளோ? ... ஜானகிப்பிராட்டியார்பக்கலில் அபசாரப்பட்ட காரணத்தால் சுவர்க்கவாசிகளாகிய தேவர்களும், நகரவாசிகளாகியயாவர்களும், நம்மோடு பகைகொண்டிருக்கின்றார்களே;

ஓ புருஷசிரேஷ்டனே! நீ சுவர்க்கத்தையாவது நரகத்தையாவது அடைந்தாயானால் அங்கேயாரோடு உறவாயிருந்து வாழ்நாளைக் கழிக்கப்போகிறாய்? ஐயோ! தனித்தவனாகிவிட்டாயே; விஜயலட்சுமியையும், சாஸ்திரங்களுக்கதிதேவதையாயின்ற சரஸ்வதியையும், கீர்த்தியென்கிற பெண்ணையும் தழுவிநின்று; அந்த மூன்றுஸ்திரீகளும் உன்னைவிட்டு நீங்கும்படியாகப் பொறுமையால் ஊழுக்கொள்ளவும் எல்லாவைபவங்களுக்கும் இறைவியும், சகல சம்பத்துகளுக்கும் தலைவியும், பிரமேந்திராதி சமஸ்ததேவர்களுக்குந் தாயும், தெய்வத்தன்மை பொருந்திய கற்புள்ள பெரியபிராட்டியாருமாகிய ஸ்ரீசீதாபிராட்டியை உன்னுடைய துர்ப்புத்தியால் தழுவுதற்காகப் பிராணனையே கொடுத்துப் பழியைப் பெற்றுக்கொண்டாயே; ஓ மூழுப்பித்தனே! உன்னென்னமெல்லாம் பழுதாகி இப்போது திக்குயானைகளுடைய தந்தங்களை முறித்தவுனது பிரகாசமாகிய மார்பினிலே பூமிதேவியைத் தழுவினாயோ என்றுசொல்லிச்சொல்லி அழுதார்.

இராவணன்மேல் விழுந்தழுகின்ற விபீஷணரை சாம்புவந்தர் தேற்றுதலும் மண்டோதரி தன்நாயகன் மரணத்தைக்கேட்டு வருந்தி யுத்தகளம் வருதல்.

கலி.

என்றேங்கியேற்றுவான் றனையெடுத்துச்சாம்பவனு மென்கின்வேந்தன்
குன்றேறுகுலேந்தோனாய் விதிநிலைமையறியாத கொள்கைத்தாகிச்
சென்றேறுந்துணர்வினையோ தேறுதேயழுந்துதியோ வென்னத்தேறி
நின்றனைப்பாந்தாக்க னிலைகேட்டாண்யயன்பயந்த மெல்லக்கட்பாவை.

இப்படியழுகின்ற விபீஷணரும்வானரக் காடிப்படைகளுக்கு அரசனாகிய சாம்பவானென் இரண்டுகைகளாலும் எடுத்து, ஓ மலைபோலுயர்ந்த பெருந்தோள்களை யுடையானே! விதியினது நிலைமையைச் சிறிதுமறியாமல் நொய்ந்து துக்கிக்கின்ற புத்தியும் உனக்குண்டோ? சகலும் துக்கமுறாமல் வந்துகொண்டிருப்பது நல்வினை தீவினைகளினது பயனென்று தெளியாமல் வீணே வருந்தப்படுகிறது நல்லதிலேவோ? என்று இன்னும் பலபலவிதமாகத் தேற்றிக்கொண்டிருந்தார். இங்கே இப்படியிருக்க — மயனுடைய குமாரத்தி

யாகிய மண்டோதரியானவள் தன்பர்த்தாவினுடைய மரணச்செய்தியைக் கேள்விப்பட்டு, அனந்தலக்ஷமிராக்ஷசஸ்திரீகள் தங்கள் தங்கள் கூந்தல்களை விரித்துக் கோவென்று கதறிக்கொண்டு தன்பின்னேவர நினைப்பென்பது மறப்பென்பதுமில்லாதவளாய் இறந்து கிடக்கின்ற இராவணனுக்குச் சமீபத்தில் வந்து அவன்மேல் விழுந்தாள்.

மண்டோதரி இராவணன்மேல்விழுந்து புலம்பித் தானுமுயிர்விடல்.

கவி.

அன்னேயோ வன்னேயோ வாகொடியேற்கடுத்தவா றரக்கர்வேந்தன்
பின்னேயோ விறப்பதுமுன் பிடித்திருந்த கருத்திதுவும் பெற்றிலேனோ
முன்னேயோ விழுந்தவுடன் முடித்தலையோ படித்தலைய முகங்காட்டாயோ
என்னேயோ வென்னேயோ விராவணனார் முடிந்தபரி சிதுவோ பாவம்.

தேனெருக்கு மலர்முடியான் வெற்பெடுத்த திரடோளின் மேலுங்கீழும்
எள்ளிருக்கு மிடனின்றி யுயிரிருக்கு மிடநாடி யிழைத்தவாறோ
கள்ளிருக்கு மலர்க்கூந்தற் சானகியைக் கஞ்சிறையில் வைத்தகாதல்
உள்ளிருக்கு மெனக்கருதி யுடல்புகுந்து தடவியதோ வொருவன்வாளி.

ஆரம்போர் பொருமார்பை யகன்முழைகளெனத்திறந்திவ் வுலகிற்கப்பால்
தூரம்போ யினவொருவன் சிலைதுறந்த சரங்களே போதிற்றோறும்
வீரம்போ யுரங்குறைந்து வரங்குறைந்து வீழ்ந்தானே வேறேகெட்டேன்
ஓரம்போ வுயிர்பருகிற் றிராவணனை மானுடனொ ருற்றமிதோ.

காந்தையருக் கணியான சானகியார் பேரழகு மவர்தங்கற்பும்
ஏந்துபுயத் திராவணனார் காதலுநஞ் சூர்ப்பநகை யிழந்தமூக்கும்
வேந்தர்பிரான் தயரதனார் பணியாலே வெங்கானம் விரதம்பூண்டு
போந்ததுவுங் கடைமுறையே புரந்தரனார் பெருந்தவமாய்ப் போயிற்றம்மா.

தேவர்க்குந் திசைக்கரிக்குஞ் சிவனார்க்கு மயனார்க்குஞ் செங்கண்மாற்கும்
ஏவர்க்கும் வலியானுக் கென்றுண்டா மிறுதியென் றேமாப்புற்றேன்
யாவர்க்கு நீயிழந்த வருந்தவத்தின் பெருங்கடற்கும் வரமென்றோதும்
காவற்கும் வலியாரோர் மானுடரா ரெனவெண்ணக் கருதினேனே.

அரைகடையிட் டமைவுற்ற கோடிமூன் றாயுவும்பே ரறிவுந்தேறும்
உரைகடையிட் டளப்பரிய பேராற்றலோ ராற்றற் குலப்போர்வில்லேத்
திரிகடையிட் டளப்பரிய வரமென்னும் பாற்கடலைச் சிறையென்னும்
பிரைகடையிட் டழிப்பதனை யறிந்தேனோ தவப்பயனின் பெருமைபார்ப்பேன்.

ஆரா குலவியற்கை யறிதற்கா ருலகேழு மெழுமங்கும்
வீரனுடனுறந்து விண்புக்கார் கண்புக்க வேழுவில்லான்
நாரணன் மலர்க்கணையா லுலோலார் தோளெலா நையவெய்யும்
மாறனார் தனியிலக்கை மனிசனா ரழித்தாரோ வலத்தினாலே.

ஆராவமுதா யலைகடலிற் கண்வளரும்
நாராயணனென் றிருப்பே ரிராமனெதி
தாரேது கொண்டன்று யுத்தமனார் தேவிதனைப்
பாராய்நீ நின்னுடைய மார்பகலம் பட்டவெல்லாம்.

ஓ என்தாயே! ஓ என்தாயே! மகாபாதகியாகிய எனக்கு இராக்ஷசகுல நாயகனார்க்குப் பின்னே இறக்கும்படி நேரிட்டதே: இதென்ன ஆச்சரியம்? நான்வேறொன்றை யடையாமற்போனாலும் என்குலநாயகருக்கு முன்னே இறக்கவேண்டுமென் றெண்ணியிருந்த எண்ணத்தையாவது பெறுகின்ற பாக்கியம் எனக்கில்லாமற் போய்விட்டதே; தீரவீரகெம்பீரருடைய உடல்முன்னே விழுந்திருக்கிறதே: சொர்ணமயமான முடிகளணிந்த தலைகளோ புழுதியி லுருண்டுகிடக்கின்றனவே: ஓ என்பிராணநாதா! சற்றே யுமது திருமுகங்களைக் காட்டீரோ? தம்முடையபேரைக் கேட்டமாத்திரத்தில் சகலவிரஜனங்களையும் அழச்செய்பவரென்னு மேதுவால் இராவணனென்னும் பெரும்பெயரைப்பெற்ற பாக்கியசாலியானவர் இறந்துபோனாரென்பது என்ன ஆச்சரியம்? ஆ! ஆ! என்ன ஆச்சரியம்? இஃதெவ்வளவு பரிதாபமானகாரியமா யிருக்கிறது?

அன்றியும் - தனக்குச் சமானமில்லாத ஸ்ரீராமனுடைய பாணமானது மார்பொன்றையே பிளந்துசெல்லாமல், வெள்ளெருக்க மலர்மாலையைத்தரித்த சாக்ஷாத் உருத்திரபகவானுடைய கயிலையை அநாயாசமாகப் பேர்த்த தோள்களுக்கு மேலுங்கீழுமாக எள் தங்குதற்கு இடமில்லாமற் சின்னபின்னமாகத் தொளைத்திருப்பதை யோசித்துப் பார்த்தால்; பிராணாதாரத்தைத் தேடித்தேடித்தான் இப்படிச்செய்த விதமோ? அல்லது தேவியாகிய சானகிப்பிராட்டியை அசோகவனத்திற் சிறைவைத்த ஆசை தங்கியிருக்கு மிடத்தைத் தடவிப்பார்த்த விதமோ? எனக்குயாதொன்றுந் தோன்றவில்லை. இதென்னமோ விபரீதமாய்க் காயம்பட்டிருக்கின்றது. ஒப்பற்ற ஸ்ரீராமனுடைய பாணங்கள் மலையிற்குகைகள்காணப் படுவதுபோல மார்பைப் பல தொளைகள்செய்து இவ்வுலகையுங்கடந்து அப்புறத்திலும் சென்றன. சகல விரஜனங்களையும் ஜெயம்பெற்ற பிரதாபலங்கேசுரர் போரிலே தோல்வியடைந்து, தம்முடைய வீரத்தையிழந்து, வலியுங்கெட்டு, பெற்றவரங்களெல்லாம் தொலைந்து இழந்தாரல்லவா? இதென்ன ஆச்சரியத்திலே ஆச்சரியமாயிருக்கிறது?

ஐயோ! ஒரு பாணத்தாலோ என்புருஷனுடைய உயிரைவாங்கியது? ஏகமனுஷியனுக்கு இப்படிப்பட்டபலமும் உண்டோ? இதென்ன அற்புதம்? தேவஸ்திரீஜனங்களுக்கெல்லாம் சிரசிலே யணிந்துகொள்ளத்தக்க ஆபரணம்போல விளங்குகின்ற சானகிப்பிராட்டியாருடைய கட்டழகும், அவருடையகற்பும், உயர்ந்த தோள்களையுடைய இராவணனார் அந்தப்பிராட்டியார் பக்கலில்வைத்த ஆசையும், இத்துன்பங்களுக்கெல்லாம் காரணமாகிய சூர்ப்பநகையானவள் மூக்கையிழந்ததுவும், ஸ்ரீராமபிரான் தசரதசக்கரவர்த்தியினுடைய ஆக்கினையால் தவவேஷம்பூண்டு காட்டிற் பிரவேசித்ததும், இவையெல்லாவற்றையும் [illegible]யாக ஆலோசித்துப் பார்த்தால் இந்திரன்செய்த மகாபாக்கியமாய் முடிந்திருக்கின்றன. எல்லாத் தேவர்களுக்கும், திக்குயானைகளுக்கும்,

உருத்திரனுக்கும், பிரமனுக்கும், விஷ்ணுவுக்கும், மற்றெவர்களுக்குமேலான பராக்கிரமசாலியாகிய இராவணனார்க்கு மரணமுமுண்டாகுமோ? ஒருகாலத்து முண்டாகாதென்றே கர்வங்கொண் டிருந்தேன். அந்தக்கர்வமிப்போது பங்கமாய்விட்டதே;

ஓ என்பிராணேசா! நீர் எல்லாரைப் பார்க்கிலும் அதிக பிரயாசைப் பட்டுச்செய்த அரிய தபமாகிய சமுத்திரத்தைக் காட்டிலும், அந்தத்தவங்களாற் பெற்றவரமென்னும் அரணைக்காட்டிலும், மிக்கவலிமையுடைய மனுஷியனொருவன் உண்டென்று நான் நினைத்ததுமுண்டோ? இல்லையே; ஓ இராக்ஷசகுல விராஜசிங்கமே! உம்முடைய ஆயுள்களோ மூன்றரைகோடியாகும். புத்திமான்களாலும் அளவிடுதற்கொண்ணாத உமது பராக்கிரமத்துக்கும் போர்ச் சாதுரியத்துக்கும் இல்லையென்று முடிவில்லை. எல்லையில்லாமல் நீர் பெற்றிருந்த வரங்களென்னும் பாற்சமுத்திரத்தை நம்முடையவிதியான ஜானகி தாபிராட்டியாகிய பிரையைக்குத்தி அழிப்பதனை நான் இதற்குமுன்னே அறிந்திருப்பேனேயானால் எவ்விதத்திலும் அச்சீதையை நீர் விட்டுவிடும்படி செய்யாமற்போவேனோ? செய்தேயிருப்பேன். நீர்பெற்றிருந்த வரங்களின்பெருமையையே கண்டு எக்களிப்புக்கொண் டிருந்தேன். ஐயோ! உலோகசுபாவத்தையார் அறியவல்லவர்கள்?

ஓ சங்கரா! கணுக்களடர்ந்த கரும்புவில்லை யேந்திமலர்க்கணைகளால் எங்கோமும் இருபதுதோள்களின் மேலும் எய்துகொண்டுவந்த மன்மதராஜனுடைய லக்ஷியமென்னு மிராவணரை ஸ்ரீராமரென்னு மனுஷராணவர்தம்முடைய பராக்கிரமத்தால் அழித்துவிட்டார். சதுர்த்தசபுவனங்களும். அஞ்சத்தக்க மகாசுத்தவீரராகிய அவ்விராவணனார் தேகத்தைத்துறந்து வீரசுவர்க்கமடைந்தார். ஐயோ! நான் தனியளானேனே; இனியென்னசெய்வேன்? ஓ என்பிராணபதமான நாயகமே! ஸ்ரீராமபிரானை எல்லாவிறைவர்களுக்கும் இருப்பிடமுண்டாக்கிய அமுதஞ்சனித்ததிருப்பாற்கடலில்திருக்கண்வளர்கின்ற ஸ்ரீசர்வேசுரனென்றே நினைத்திருப்பேன். நீரதை எவ்வளவும் ஆலோசியாமல் அந்த அப்பிராகிருதராகிய ஸ்ரீராகவபிரானுடைய தேவியாரை வஞ்சமாய் எடுத்துக்கொண்டுவந்து சிறைவைத்துவிட்டீர். இப்போது உம்முடைய விசாலமாகிய மார்புமுழுவதும் பட்டிருக்கிற புண்களின்துவாரங்களைப் பாரும் என்று கூக்குரலிட்டு அழுதனள். இப்படிப் புலம்பியழுத பதிவிரதா சிரோமணியாகிய மண்டோதரியானவள் எழுந்து, அந்தராவணனுடைய மார்பைத்தழுவிப் பெருமூச்செறிந்து, பிரியாமையென்னுந் துக்கத்தாலே உயிரைவிட்டனள்.

இராவணனோடு மரணஞ்செய்த மண்டோதரிக்கும் பந்துவர்க்கத்தினர்க்கும் விபீஷணர் சாமக்கிரியை நடத்தி மீண்டு ஸ்ரீராமரைச் சரணடைதல்.

கவி.

பின்னைவீடணன் பேரெழிற்றம்முனை, வன்னிகூவி வான்முறையான்மறை
சொன்னனீம விதிமுறையிற்செருத், தின்னனெஞ்சினெ டஞ்சலித்தேற்றினன்.